சிவலிங்கம்-சிவபூசைத்திருவுரு.
சிவலை-சிவப்புநிறமுள்ளது, செந்நிறமுள்ளோன்.
சிவலோகச்சேவகன்-காந்தம்.
சிவலோகம்-மோக்கம்.

சிவல்-கவுதாரி, பகன்றை.
*சிவவல்லபம்-எருக்கு, செவ்வந்திச் செடி, ஓர்வகை நாவல்.
சிவவல்லபன்-சிவபத்தன்.
சிவவல்லபை-பார்வதி.
*சிவவல்லி-ஓர்வகைக்கோவைச்செடி.
*சிவவாககம்-எருது.
சிவவிந்து } இரதம்.
சிவவீசம் }
சிவவேடம்-சைவவேடம்.
சிவனார்பாகல் }
சிவனார்வேம்பு } ஓர்செடி.
சிவன்வேம்பு }
சிவனி-கழுதை.
சிவனாள்மலை-அயச்சிலை.
சிவனோங்கிவன்னி-காந்தம்.
சிவன்-கடவுள், சங்கரன், வைடூரியம்
சிவன்றேகம்-காசிமீர்ப்படிகம்.
சிவா-நெல்லி, வெறுமை.
சிவாகமம்-பதிநூல்.
சிவாட்சம்-உருத்திராக்கம்.
சிவாதாரம்-மரக்கொம்பு.
*சிவாங்கி-துர்க்கை.
சிவாருகம்-ஆலமரம்.
சிவார்ச்சனை-சிவாற்சனை.
சிவாலயம்-சிவன்கோயில், செந்துளசி, மசானம்.
*சிவானு-நரி.
சிவாற்சனை-சிவபூசை.
சிவானுபவம்-சிவபோகம்,
சிவிகரம்-சாதிக்காய்.
சிவிகை-தண்டிகை, பாண்டில்பூண்டூர்தி.
சிவிங்கி-ஓர்பட்சி, ஓர்மிருகம், ஓர்மீன்
சிவிடு-சிறிசு, முந்நூற்றறுபதுநெல்லுக்கொண்டது.
சிவியார்-ஓர்சாதியார்.
சிவிரதம்-சிவிகை.
சிவிரம்-அரசிருக்கை, படை.
சிவிறி - நீர்வீசுந்துருத்தி, பெருந்துருத்தி..
சிவேதை-சீந்திற்கொடி, தெற்கு, பகன்றை.
சிவேரொனல்-சிவப்புநிறக்குறிப்பு.
சிவை-ஆணரி, உலை, உலைத்துருத்தி, ஓரளவு, துர்க்கை, பார்வதி, புத்தன்றாய், மூக்கு, வேர்.
சிவ்வல்-கடற்பாசி.

சிளுசிளுத்தல்
சிளுசிளுப்பு
சிளுசிளெனல் } ஒலிக்குறிப்பு, பதனழிவு.

சிளுபிளுத்தல்-ஒலிக்குறிப்பு, கொதுகொதுத்தல்.

சிள்வண்டு
சிள்வீடு
சிள்ளீடு } சில்வண்டு.

சிள்ளுப்பிள்ளு-சம்பலை.

சிறகடி-சிறகடித்தல்.

சிறகர்-சிறகு.

சிறகார்த்தல்-சிறகடித்தல்.

சிறகாற்றுதல்-சிறகுவிரித்துலர்த்தல், புள்ளெழச்சிறகுவிரித்தல்.

சிறவி-ஓர்மீன்.

சிறகு-இறகு, பக்கம்.

சிறகுகதவு - இருபுறத்துநிலையிலுமிடுங்கதவு.

சிறகுகுடில்-சிறகோலையால்வேய்ந்தசிற்றில்.

சிறகுகோதுதல்
சிறகுதெரித்தல்
சிறகுலர்த்தல்
சிறகுளர்தல் } சிறகையலகால்வகிர்தல், சிறகையுலர்த்தல்.

சிறகை-ஓர்புள்.

சிறகொதுக்குதல் - சிறகைச்சுருக்குதல்.

சிறக்கணித்தல்-குறைத்தல், சிறுமையாகவெண்ணுதல், சுருக்குதல்.

சிறக்கணிப்பு
சிறங்கணிப்பு } குறை.

சிறங்கித்தல்-கனிசக்குறைவுபண்ணல், கைநிறையவள்ளுதல்.

சிறங்கை-கைநிறைந்தவளவு.

சிறத்தல்-அருமை, சிறப்பாதல், சிறப்பு, சிறப்படல், மிகுதல், மேன்மைப்படல்.

சிறந்தோர்-அழகுள்ளோர், உறவோர், பெருமையிற்சிறந்தோர்.

சிறப்பகத்திணை - அகத்திணைவகையிலொன்று.

சிறப்பித்தல்-அலங்கரித்தல், கனப்படுத்தல், புகழ்தல்.

சிறப்பில்லாதாள்
சிறப்பில்லாள் } மூதேவி.

சிறப்பு-அழகு, உயர்ச்சி, ஒன்றற்கேயுரியது, மிகுதி, வரிசை, விசேடம், வேடிக்கை.

சிறப்புச் சூத்திரம்-ஒன்றிற்குரித்தாய்ச்சொல்லுஞ்சூத்திரம்.

சிறப்புப்பாயிரம் - நூற்பெயருங்காரணமும் ஆக்கியோன்பெயரும்அளவும்பயனு முரைப்பது.

சிறப்பும்மை-உயர்வுப்பொருடருமும்மை, (உம்) அரசனும்பொய் சொன்னான்.

சிறப்புவிதி-ஒன்றற்குரியமுறை.

சிறப்பை-மரமணி.

சிறாம்பி-அட்டாலை.

சிறாம்பு-சிராய், சிறாம்பெண்ணேவல்.

சிறாம்புதல்-தழும்புபடுத்தல்.

சிறாய்த்தல்-சிராய்த்தல்.

சிறாய்த்துக்குச்சி - ஓர்பூடு.

சிறார்-சிறுவர்.

சிறிசு
சிறிது } கொஞ்சம், சிறியது.

சிறியபிள்ளையர் கீழ்மக்கள்.

சிறியதகப்பன்
சிறியபிதா } தந்தை பின்னோன்

சிறியதாய்
சிறியமாதா } தாயின்றங்கை.

சிறியத்தினி-உத்தாமணி.

சிறியர்-அற்பர், கீழ்மக்கள், குறள், வடிவோர்.

சிறியாணங்கை-ஓர்செடி.

சிறியோர்-கீழ்மக்கள், குள்ளர்.

சிறிவில்-அகிலமரம்.

சிறீ-ஒரிராகம், திரு, தெய்வத்தன்மை, பெண்.

சிறீகண்டன்-சிவன்.

சிறீகரம்-இலட்சுமீகரம்.

சிறீகாந்தன்-விட்டுணு.

சிறீசயந்தி - விட்டுணுவின் திருநாளிலொன்று.

சிறீதரன்-சீதரன்.

சிறீநிவாசன்-திருமால்.

சிறீபதி-விட்டுணு.

சிறீமது-இலட்சுமீகரமான, தெய்வீகமான.

சிறீமான்-செல்வவான், திருமால்.

சிறீமுக-சிமுக.

சிறீராகம்-ஒரிராகம்.

சிறீலிங்கம்-பெண்குறி, பெண்பால்.

சிறீவச்சம்-திருமால்மார்பின்மறு.

சிறீவதி-பாக்கியவதி.

சிறுக-அற்பமாய்.

சிறுகடலாடி-நாய்குருவி.
சிறுகடுகு-ஓர்கடுகு.
சிறுகண்ணாகம்-ஓர்நாகம்.
சிறுகம்மான்பச்சரிசி-சிற்றிலைப்பாலாவி.
சிறுகல்-சிறுகுழல்
சிறுகல்லூரி-ஓர்மருந்து.
சிறுகளா-ஓர்மரம்.
சிறுகாஞ்சொறி } ஓர்கொடி.
சிறுகாஞ்சொன்றி } ஓர்கொடி.
சிறுகாடு-தூற்றுக்காடு.
சிறுகாப்பியம்-பெருங்காப்பியம்போன்றிருந்துஞ் சில குறைபாடுள்ள பொருட்டொடர்நிலைச்செய்யுள்.
சிறுகாரிடம்-சாதிக்காய்.
சிறுகாலை-பிராதக்காலம்.
சிறுகால்-காவட்டம்புல், தென்றல்.
சிறுகாற்று-மிருதுவாகவீசுங்காற்று.
சிறுகானுவாழை-ஓர்பூடு.
சிறுகிடைச்சி-ஓர்கிடைச்சி.
சிறுகிண்ணம்-சிறுவட்டில்.
சிறுகிழங்கு-ஓர்கிழங்கு.
சிறுகீரை-அறைக்கீரை, ஓர்கீரை.
சிறுகு-இடைஞ்சல்,சிறுகென்னேவல்
சிறுகுடி-குறிஞ்சிநிலத்தூர், சிற்றில்.
சிறுகுடில்-சிற்றில்.
சிறுகுதல்-குறைதல்.
சிறுகுரங்கு-ஓர்குரங்கு.
சிறுகுரு-உவர்மண்.
சிறுகுரும்பை-ஓர்நெல்.
சிறுகுமி-சிறுகோனிளமகலங்கொண்டது.
சிறுகுறடு-ஓர்குறடு.
சிறுகுறட்டை-ஓர்பூடு.
சிறுகுறிஞ்சா-ஓர்குறிஞ்சா.
சிறுகொடி-ஓர்கிழங்குக்கொடி.
சிறுகொட்டைக்கரந்தை- அட்டாதசமூலத்தொன்று.
சிறுகொம்மட்டி-ஓர்கொம்மட்டி.
சிறுகொன்றை-ஓர்கொன்றை.
சிறுகோல்-நாலுமுழங்கொண்டகோல்.
சிறுக்கன்-வாலிபன்.
சிறுக்கி-வாலிபஸ்த்ரி.
சிறுக்குதல்-கோபித்தல்,சிறிதாக்கல்.
சிறுசண்பகம்-ஓர்மரம்.
சிறுசின்னம்-ஓர்குழல்.
சிறுசின்னி-ஓர்செடி.
சிறுசெய் } பாத்தி.
சிறுச்செய் } பாத்தி.

சிறுசெருப்படி-ஓர்பூடு.
சிறுசொல்-பழிச்சொல்.
சிறுசோறு-பிள்ளைகள்விளையாட்டுக்குச்சமைக்குஞ்சோறு.
சிறுதாரை-நீர்வீசுங்குருத்தி.
சிறுதாளி-ஓர்செடி.
சிறுதானியம்-புன்றானியம்.
சிறுதிப்பிலி-ஓர்திப்பிலி.
சிறுதுடி-ஓர்பறை.
சிறுதும்பி-ஓர்பூடு.
சிறுதுருமம்-வெடியுப்பு.
சிறுதுளசி-ஓர்துளசி.
சிறுதூறு-தூற்றுக்காடு.
சிறுதென்றல்-இளஞ்சோழகம்.
சிறுதேக்கு-ஓர்மரம்.
சிறுதேங்காய்-சமுத்திராப்பழம்.
சிறுதேர்-பிள்ளைக்கவியிலோர் பகுதி, விளையாட்டுத்தேர்.
சிறுதேன்-கொசுகாந்தேன்.
சிறுத்தல்-சிறிதாதல், சிறுப்பனவாதல், சினத்தல்.
சிறுத்தத்தி-ஓர்தத்தி.
சிறுத்தை-சிறுபுலி.
சிறுத்தொண்டன் - அறுபத்துமூவரிலொருவன்.
சிறுநறளை-ஓர்பூடு.
சிறுநன்னாரி-ஓர்பூடு.
சிறுநாகம்-ஓர்மரம்.
சிறுநாகம்பூ-ஓர்சரக்கு.
சிறுநார்-கன்னார்.
சிறுநாவல்-ஓர்செடி.
சிறுநிம்பம்-மலைவேம்பு.
சிறுநீர்-மூத்திரம்.
சிறுநெரிஞ்சி-ஓர்பூடு.
சிறுபகன்றை-ஓர்பூடு.
சிறுபசி-இளம்பசி, காலப்பசி.
சிறுபஞ்சமூலம்-ஓர்நூல், கண்டங்கத்தரி, சிறுமல்லி, சிறுவழுதுணை, நெருஞ்சி, பெருமல்லி.
சிறுபதம்-சிறுவழி.
சிறுபதி-சிறுகிராமம்.
சிறுபயறு-ஓர்பயறு.
சிறுபயிர்-இளம்பயிர், புன்பயிர்.
சிறுபறை - ஓர்பறை, பிள்ளைக்கவியிலோர்பகுதி.
சிறுபாலடை-ஓர்பூடு.
சிறுபான்மை-சிறுவழக்கு.
சிறுபிராயம்-இளம்பிராயம்.

சிறுபிள்ளை-இளம்பிள்ளை.
சிறுபுள்ளடி-ஓர்பூடு.
சிறுபுறம்-பிடரி.
சிறுபூளை-ஓர்பூடு.
சிறுபெண்-இளம்பெண்.
சிறுபொழுது - பத்துநாழிகைகொண்டநேரம், அஃது காலை, உச்சி, மாலை, யாமம், அத்தசாமம், வைகறை.
சிறுபோகம்-புன்பயிர்ப்போகம்.
சிறுப்பம்-சிறுபிராயம்.
சிறுப்பம்-எளிமை, குறைவு.
சிறுப்பித்தல்-எளிசக் குறைவுபடுத்தல், சிறுகப்பண்ணுதல்.
சிறுமட்டம்-இளமட்டம்.
சிறுமணி-ஓர்நெல், சதங்கை.
சிறுமணிக்கொட்டுவான்-ஓர்கீச்சுப்புள்
சிறுமலை-குன்று.
சிறுமல்-சிர்மிட்டான்.
சிறுமல்லி-சிறுபஞ்சமூலத்தொன்று, தசமூலத்துமொன்று.
சிறுமாரோடம்-செங்கருங்காலி.
சிறுமி-புத்திரி, பெண்.
சிறுமியம்-சேறு.
சிறுமுட்டி-சுத்தியல்.
சிறுமுள்ளி-ஓர்முள்ளி.
சிறுமூலகம்-ஓர்கிழங்கு, திப்பிலி.
சிறுமூலம்-திப்பிலி.
சிறுமை-அற்பம், இடைஞ்சல், எளிமை, கீழ்மை, குறைவு, தரித்திரம், துன்பம், நோய்.
சிறுமைத்தனம் - இடைஞ்சல், எளிமை, தரித்திரம்.
சிறுமைப்படுதல்-இடைஞ்சற்படுதல், எளிமைப்படுதல், தரித்திரப்படுதல்
சிறுமையர்-கீழ்மக்கள்.
சிறுவயசு-அற்பம்.
சிறுவம் } இளம்பிராயம்.
சிறுவயது }
சிறுவயல்-பாத்தி.
சிறுவரை-அற்பம், காலயினாவு, சிறுபொழுது.
சிறுவர்-மக்கள்.
சிறுவல்-இளம்பிராயமானது, இளம்பிராயம்.
சிறுவழுதுணை-ஓர்செடி, அஃது தசமூலத்தொன்று, சிறுபஞ்சமூலத்துமொன்று.
சிறுவள்ளி-ஓர்பூடு.
சிறுவன்-மகன்.
சிறுவி-மகள்.
சிறுவிதி-தக்கன்.
சிறுவிதிமகஞ்சிதைத்தோன் - வீரபத்திரன்.
சிறுவிரல்-கனிட்டிகைவிரல்.
சிறுவிலை-குறுவிலை.
சிறுவீடு-சிற்றில்.
சிறுவுமரி-சிற்றுமரி.
சிறுவெள்ளரி-ஓர்வெள்ளரி.
சிறை-அடிமை, அழகுள்ளவள், இடம், இறகு, கட்டுப்பாடு, காவல், சிறைச்சாலை, பக்கம், மதில்.
சிறைக்கணித்தல் - கடைக்கண்ணாற் பார்த்தல், புறக்கணித்தல்.
சிறைக்களம் } சிறைச்சாலை.
சிறைக்கூடம் }
சிறைசெய்தல்-அடிமைப்படுத்தல், கட்டுப்படுத்தல்.
சிறைச்சாலை-மறியல்வீடு.
சிறைச்சோறு-காவலி லகப்பட்டவர்களுக் கன்னங்கொடுத்தல், அஃது அறம்முப்பத்திரண்டினொன்று.
சிறைநீக்குதல்-சிறைமீட்குதல்.
சிறைபிடித்தல்-அடிமையாகப் பிடித்தல்.
சிறைப்படுதல் - அடிமைப்படுதல், தடைப்படுதல்.
சிறைப்படுத்தல் - அடிமைப்படுத்தல், காவலுக்குட்படுத்தல், தடைப்படுத்தல்.
சிறைப்பாடு-அடிமைத்தனம், கட்டுப்பாடு, தடை.
சிறைமீட்குதல்-இட்டமாக்குதல்.
சிறைமீளுதல்-இட்டமாக்கல், இட்டமாதல்.
சிறையிருப்பு-அடிமைத்தனம்.
சிறையெடுத்தல் - சிறைமீட்டல், பெண்கொள்ளல்.
சிறைவிடுதல் } சிறையிருப்பைநீக்குதல்.
சிறைவிடுத்தல் }
சிறைவைத்தல் - அடிமைப்படுத்தல், காவலில்வைத்தல்.
சிற்குணம்-பரிசுத்தகுணம்.
சிற்சத்தி-பஞ்சசத்தியினொன்று, அஃது உயிர்க்கொளியாய்நிற்பது.
சிற்சபை-ஞானசபை.
சிற்சிலீர்ப்பான்-ஓர்வைகுரிநோய்.

சிற்சோமன்-சிர்பந்தபாஷாணம்.
சிற்பசாத்திரம் - கோயில் முதலியன கட்டுஞ்சாத்திரம். அஃது கலைஞானமறுபத்துநாலினொன்று.
சிற்பசாலை-சிற்பவேலையிடம்.
சிற்பத்தொழில்-இல்லமெடுத்தல்முதலிய கற்சிற்பவேலை.
சிற்பம்-அறுதொழிலினொன்று, அற்பம், நிசம், சிற்பநூல், நுண்மை.
சிற்பரக்கூர்மை-கந்தகவுப்பு.
சிற்பரவுப்பு-கெந்தகலவணம், சிந்துலவணம்.
சிற்பரன்-கடவுள்.
சிற்பரி-பொன்னிமிளை, வெண்காரம்.
சிற்பரை-சவுக்காரம், பராசத்தி.
சிற்பர்-சித்திரகாரர், சிற்பாசாரியர்.
சிற்பாசாரி-கற்சிற்பன்.
சிற்பியர்-கம்மாளர்.
சிற்றகத்தி-ஓர்மரம்.
சிற்றடி-சிறுகாற்சுவடு, சிறுகால்.
சிற்றடிப்பாடு-சிறுவழி.
சிற்றடியார்-குற்றேவல்செய்வோர்.
சிற்றண்டம் - இருவகை யண்டத்துளொன்று, அஃது உடம்பு.
சிற்றப்பன்-தந்தைக்கிளையோன்.
சிற்றமட்டி } ஓர்செடி.
சிற்றமுட்டி }
சிற்றம்பலம்-சிதம்பரம்.
சிற்றம்மான் பச்சரிசி - சிற்றிலைப்பாலாவி.
சிற்றரத்தை-ஓர்செடி, ஓர்மருந்து.
சிற்றருக்கன்-ஓரருக்கன்.
சிற்றவரை-ஓர்கொடி.
சிற்றறிவு-சொற்பவறிவு, புல்லறிவு.
சிற்றறுகு-ஓரறுகு.
*சிற்றன்னை-சிறியதாய்.
சிற்றாடை-சிறுபிள்ளையுடுப்பு.
சிற்றாத்தாள்-சிறியதாய்.
சிற்றாமணக்கு-ஓராமணக்கு.
சிற்றாமுட்டி-ஓர்செடி.
சிற்றாலவட்டம்-விசிறி.
சிற்றாள்-ஏவலாள்.
சிற்றி-சிறியதாய், பசளி.
சிற்றிதழ்-அகவிதழ்.
சிற்றிரு-இலுப்பை.
சிற்றிலா-சிற்றுணா.
சிற்றிலக்கம்-கீழ்வாயிலக்கம்.
சிற்றிலை-கடமரம், குன்றி, நெய்ச்சிட்டி.
சிற்றில்-குடிசை, சிலை, பிள்ளைக்கவியினோருறுப்பு, பிள்ளை விளையாட்டினொன்று, அஃது சிற்றில்செய்தலும் சிற்றில் புனைதலுமாம்.
சிற்றிலைப்பு-மெல்லிளைப்பு.
சிற்றிலஞ்சேர்தல் - நான்மார்க்கருடன்கூடுதல்.
சிற்றினம்-ஆகாதகூட்டம்.
சிற்றினிப்பு-சுள்ளிட்ட வினிப்பு.
சிற்றின்பம்-இலௌகீகவின்பம்.
சிற்றீரம்-அற்பவீரம்.
*சிற்றுணவு-பலகாரவகை.
சிற்றுணர்வு-சிற்றறிவு.
சிற்றுண்டி - அப்பவருக்கம், ஓர்பண்ணிகாரம், பலமூலசாகவுணா, பொரிக்கறி.
சிற்றுமரி-ஓர்பூடு.
சிற்றுமல்-கையுமல்.
சிற்றுமல்லிகை-ஓர்மல்லிகை.
சிற்றுயிர்-அற்பசீவபிராணி.
சிற்றுரு-குறள், சிறுத்தோணி-சின்னவுரு.
சிற்றுலாத்து-பதமையானநடை.
சிற்றுளி-சிறுவுளி.
சிற்றுள்ளான்-ஓர்உள்ளான்.
சிற்றூர்-குறிஞ்சிநிலத்தூர்.
சிற்றூறல் } சின்னநீரூற்று.
சிற்றூற்று }
சிற்றெண்-கீழெண்.
சிற்றெள்-ஓரெள்.
சிற்றெறும்பு-ஓரெறும்பு.
சிற்றேலம்-ஓரேலம்.
சிற்றொழுங்கை-கையொழுங்கை.
சினகரம்-கோவில்.
சினத்தல்-கோபித்தல்.
சினத்திலெழுந்தி - உயிர்முத்தியினொன்று.
சினந்தவிர்ந்தோன்-அருகன்.
சினப்பு-கோபம், பரு, விம்முதல்.
சினம்-கோபம்.
சினவரன்-அருகன், புத்தன்.
சினவர்-பகைவர்.
சினவுதல்-கோபித்தல், சினக்குறிப்பு, பொருதல்.
சினன்-அருகன், சருவஞ்ஞன், திருமால், புத்தன், விருத்தன்.
சிறா-வட்டத்திருப்பி.
சிறாடி-மூக்குறட்டை.

சிறுது-செத்தல்.
சிறுவில்-தும்பை.
சினிவாலி-அமவாசிக்குமுதனாளிரா.
சினேகசத்துரு-சினேகிதன்போல நடக்குஞ்சத்துரு.
சினேகம்-எண்ணெய், நட்பு, அஃது புண்ணியமொழிசொன்று.
சினேகன்-சினேகிதன், சினேகிதி.
சினேகிதம்-நட்பு.
சினேகிதர்-மித்தருக்கள்.
சினேகிதி-அன்புள்ளவள்.
சினேகித்தல்-நட்பாயிருத்தல்.
சினேகிப்பு-சினேகம்.
சினேசதாரு-சாதிக்காய்மரம்.
சினேசம்-சாதிக்காய்.
சினேந்திரன்-அருகன், புத்தன்.
சினை-உறுப்பு, கருப்பம், கொழுப்பு, சினையென்னேவல், பூவரும்பு, மரக்கொம்பு, முட்டை, மூங்கில்.
சினைகொள்ளுதல், சினைத்தல் } அரும்புதல், கருக்கொள்ளல், கொழுக்குதல், புளகப்பொடிப்புக்கொள்ளுதல்.
சினைபருவம், சினைப்பருவம் } கருக்கொள்ளும் பருவம்.
சினைப்படுதல்-கருக்கொள்ளுதல்.
சினைப்பு-கொழுப்பு, சினைத்தல், வெயர்க்குறி.
சினைப்பெயர் - உறுப்புக்காரணமாய் வரும்பெயர், (உம்) முடன்.
சினைவினை-உறுப்புப்பொருளது தொழில்.
சின்-அசைச்சொல், (உம்) கண்ணும் படுமோஎன்றிசின்யானே, ஞானம்.
சின்மதநூல்-சீவகசிந்தாமணி.
சின்மயம்-ஞானமயம்.
சின்மாத்திரம் - ஆன்மாவின் சுயதன்மை.
சின்முத்திரை-ஞானமுத்திரை.
சின்மூர்த்தி-கடவுள்.
சின்மை-சிறிசாந்தன்மை.
சின்னக்காசு - ஓர்காசு லெட்டிலொன்று.
சின்னச்சலவாதை-சிறுநீர் கழித்தல்.
சின்னஞ்சிறியது-மிகச்சிறியது.
சின்னட்டி-ஓர்பூடு, சின்னன்.
சின்னத்தனம்-எளியதன்மை.
சின்னபின்னம்-கண்டதுண்டம்.
சின்னப்படுதல்-துற்கீர்த்தியடைதல், பங்கப்படுதல்.
சின்னப்பன்-சிற்றப்பன்.
சின்னப்பூ-ஓர்பிரபந்தம், அஃது நேரிசைவெண்பாவாற்ற சாங்கம்வைத்து நூறு, தொண்ணூறு, எழுபது ஐம்பது,முப்பதுபாட்டுப்பாடுவது
சின்னமுத்து-ஓர்குருநோய்.
சின்னமேளம்-மத்தளம்.
சின்னம் - அடையாளம், ஈனம், ஓர் காசு, காளம், சங்கு, சிறுமை, தட்டு, துண்டு, பராகம், பெண்குறி,முறம், விசித்திரம்.
சின்னம்மை, சின்னவைசூரி } சின்னமுத்து.
சின்னன்-சிறியது.
சின்னன்பென்னன்-சிறிசும்பெரிசும்
சின்னாயி-சிறியதாய்.
சின்னூருகம்-சீந்தில்.
சின்னி-ஓர்செடி.
சின்னிவிரல்-சிறுவிரல்.
சின்னீர்-அற்பநீர், சிறுநீர்.
சின்னை-ஓர்மீன்.

சீ

சீ-அடக்கம், இகழ்ச்சிக்குறிப்பு, இலக்குமி, இலக்குமிகரம், காந்தி, சம்பத்து, சரச்சுவதி, சீதல், சீயென்னேவல், நித்திரை, பார்வதி, பெண், விடம்.
சீகண்டன்-சிவன்.
சீகம்-தமரத்தை.
சீகரம்-இலக்குமீகரம், கடற்றிரை, கரகம், கவரி,திவலை, புனற்றிரை, மழை, மழைத்துளி, மழைத்தூவல்.
சீகரி-நீர்த்திவலை.
சீகர்-திவலை, பஞ்சலோகம்.
சீகாரம்-ஓர்பண்.
சீகாழி-ஓர்தலம்.
சீகு-துடைப்பம்.
சீக்கரம்-சீக்கிரம்.
சீக்கல்-சிழ்க்கை.
சீக்காச்சா-நாய்ப்புடோல்.
சீக்காய்-சிழ்க்கை, பழாதகாய்.
சீக்காய்நிறம்-வெளிறினநிறம்.
சீக்கிரகதி-மிகுவிரைவு.
சீக்கிரகம்-வாயு, விரைதல்.

சீக்கிரசேதனம்-நாய்.
சீக்கிரஜா-சீக்கிரம்.
*சீக்கிரபத்திரம்-முருங்கைமரம்.
சீக்கிரம்-அம்பு, காரம், குரூரம், கோபம், விரைவு.
சீக்கிரான் / சீக்கிரி } உசிலமரம்.
சீக்கிரியம்-சீக்கிரம், பூனைச்சண்டை.
சீக்கிரியன்-சிவன், திருமால், விரைந்துசெல்வோன்.
சீக்கிரியான்-உசிலமரம்.
சீக்கு-செத்தை.
சீக்குரு-முருங்கை.
சீக்கூட்டுதல்-சிதல்கொள்ளுதல்.
சீசகம் / சீசபத்திரகம் / சீசம் } ஈயம்.
சீசா-ஓர்குப்பி.
சீசீ / சீச்சீ } இகழ்ச்சிக்குறிப்பு.
சீஷப்பிள்ளை-சீஷன்.
சீஷர் / சீடர் } மாணாக்கர்.
சீடு-நூற்சீடு.
சீடை-ஓர்பணிகாரம், சடைவு.
சீட்டி-எழுத்துப்புடைவை.
சீட்டு-பத்திரிகை.
சீட்டுத்தெரிப்பு-கையுறுதி.
சீட்டுப்போடுதல்-பிலிபோடுதல்.
சீட்டுவாங்குதல்-சாதலைக்காட்டுங்குறிப்புச்சொல், சீட்டுப்பெறுதல்.
சீணசந்திரன்-தேய்பிறை.
சீணம்-பதனழிவு.
சீணித்தல்-பதனழிதல்.
சீண்டல்-கறல்.
சீண்டறம்-ஊழல், தொந்தரை.
சீண்டிரம்-ஈனவார்த்தை.
சீண்டுதல்-சருவுதல், தொடுதல்.
*சீதகந்தம்-வெண்சந்தனம்.
சீதகம்-ஈயம், குளிர்ந்த காலம், நரை, தேள்.
*சீதகரன்-சந்திரன்.
சீதகன்-சந்திரன், சுக்கிரன், சோம்பன்.
சீதகாத்திரகம்-ஓர்சன்னி.
*சீதகிரணன்-சந்திரன்.
சீதகிருச்சரம்-மூன்றுநாளிர்பருகியிருக்குமோர்விரதம்.
*சீதகும்பம்-அலரி.
சீதக்கடுப்பு-வயிற்றுக்கடுப்பு.
சீதக்கட்டு-சீதப்பற்று.
*சீதசம்பகம்-கண்ணாடி.
சீதசுரம்-குளிர்காய்ச்சல்.
சீதபானு-சந்திரன்.
*சீதபீரு-மல்லிகைக்கொடி.
*சீதபுஷ்பகம்-எருக்கு.
சீதபேதி-ஓர்நோய்.
சீதப்பற்று-சீதப்பிடிப்பு.
சீதப்பிரபம்-கருப்பூரம்.
சீதமண்டலி-ஓர்பாம்பு.
*சீதமயூகம்-கர்ப்பூரம்.
*சீதமயூகன்-சந்திரன்.
சீதமரீசி-சந்திரன்.
சீதம்-ஆமம், குளிர்ச்சி, அது உயிர் வேதனையென்று, கொடுந்தமிழ் நாட்டிலென்று, சீதாங்கபாஷாணம், சேணித்தநு, சோம்பு, நீர், மாரிகாலம், மேகம்.
சீதரன்-அரி.
சீதவழும்பு-ஆமம்.
*சீதவற்கம்-அத்திமரம்.
சீதவாதக்கடுப்பு-சலக்கடுப்பு.
சீதவாதம்-குளிர்நோய், சலரோகம்.
சீதவாரம்-உத்தாமணி.
*சீதளகம்-வெள்ளாம்பல்.
சீதளகாலம்-மழைகாலம்.
*சீதளப்ரதம்-சந்தனம்.
சீதளம்-குளிர்ச்சி, கோடகசாலை, சந்தனம், தாமரை, துரிசு, பச்சைக் கருப்பூரம், முத்து.
சீதளாதேவி-ஓர்சத்தி.
சீதனை-ஓர்நாரத்தை, கொடிமாதளை.
சீதனம்-மகட்குக் கொடுக்கும் பொருள்.
சீதனவோலை-சீதனவுறுதி.
சீதன்-சந்திரன், மந்தபுத்தியுள்ளவன்.
சீதாங்கபாஷாணம்-ஓர்பாஷாணம்.
சீதாங்கம்-ஓர்சன்னி, ஓர்பாஷாணம்.
சீதாங்கனி / சீதாதேவி } இராமன்றேவி.
சீதாத்திரி-இமயமலை.
சீதாபதி-இராமன்.
சீதாரி-கேதருமரம்.
சீதாலபத்திரம் / சீதாளபத்திரம் / சீதாளை } தாளப்பத்தோலை.
சீதாளம்-சீதாளை.

சீதம்-குளிர், பரவை, முற்றத்துறத்தல்.
*சீதளக-ஓர்வகைப்பாலைமரம்.
*சீதபவை-குளிர்ச்சி, மோட்சம்.
சீது-ஈயம், கள், பாலைக்கள்மதம்.
*சீதாரத்தம்-மகிழமரம்.
சீதளாய்-ஓர்துளசி.
சீதயி-இலக்குமி.
சீதேவியார்செங்கழுநீர் - ஓர்பூடு.
சீதை-இராமன்தேவி, அவள் பஞ்சகன்னிகளி லொருத்தி, உழை, உழுபடைச்சால், பொலனுங்காளி, மது.
சீதோதகம்-குளிர்நீர்.
*சீதோத்தமம்-நீர்.
சீத்தலைச்சாத்தன்-சங்கப்புலவரிலொருவன்.
சீத்தல்-கீருதல், சீவுதல், செப்பம்பண்ணல், ஐதாக்கல், நீக்கல்.
சீத்தா-ஓர்மரம்.
சீத்தி-இளப்பம்.
சீத்தியம்-தானியம்.
சீத்திபொறுய்-ஓர் ஒறுன்.
*சீத்திரம்-குதம்.
சீத்துப்புத்தெனல் - கடிந்துகொள்ளுதல், முறுமுறுத்தல்.
சீத்துவம்-செம்மை, நிறம்.
சீத்தை-கீழ்மகள், கெம்பல், சீட்டிச்சீலை, பதனழிவு, பிழை, பூரான்பிழை.
சீத்தைக்கன்-பிழைசாதுக்கன்.
சீந்தல்-தளிமழை.
சீந்தில்-ஓர்கொடி.
சீந்துதல்-மூக்குச் சீறுதல், விரும்புதல்.
சீந்தை-சிந்தை.
சீபதி-அருகன், கடவுள், விட்டுணு.
சீபம்-சரகாண்டபாஷாணம்.
சீபாதம்-திருப்பாதம்.
சீப்பங்கோரை-ஓர்புல்.
சீப்பாய்தல்-சீதல்வடிதல்.
சீப்பிடுதல்-மயிர்சீவுதல்.
சீப்பு-எழும்புக்கோவை, கதவின்றாழ், மயிர்சீவுஞ் சீப்பு, வாழைக்குலைச்சீப்பு.
சீப்புச்சாட்டை-ஓர்விதமீன்.
சீப்புப்பணிகாரம்-அப்பவருக்கத்தொன்று.
சீமக்கவி-ராவிதன்.
சீமணல்-ராசமணல்.
சீமந்தம்-சிந்தூரச்சரக்கு.
சீமந்தபுத்திரன்-தலைமகன்.
சீமந்தம்-கருப்பந் தரித்த ஆறுமாதம் உச்சிவகிர்ந்துசெய்யுமோர்சடங்கு.
சீமந்தரேகை-வகிரேகை.
சீமந்தினி-ஓர்கற்புடையபெண்.
சீமாட்டி } செல்வி, தலைவி.
சீமாள் }
சீமாலிங்கம்-எல்லையடையாளம்
சீமாவிவாதம்-எல்லைவழக்கு.
சீமான்-அருகன், செல்வமுள்ளவன், தலைவன்.
சீமுக-ஓரசுரன்.
*சீமூதகூடம்-பர்வதம்.
சீமூதம்-இந்திரன், நீருண்டமேகம், பிடியன்யானை, மலை.
*சீமூதவாகனன்-இந்திரன், தர்மரத்நம் என்கிற ஸ்ம்ருதிசங்க்ரஹநூலாசிரியன்.
*சீமூதவாகி-புகை.
சீமூதன்-இந்திரன், உழவன், ஓரசுரன், சிவன், துன்புறுவோன், நகாசுரன்சாரதி.
சீமூதை-இரவு, கொடிமுந்திரிகை.
சீமை-அருட்டிப்பு, எல்லை, கரை, தேசம், தோளின்மேல், வயல்.
சீமைக்கரி-ஓர்கரி.
சீமைச்சுண்ணாம்பு-ஓர்சுண்ணாம்பு.
சீயக்காய் } சீயாக்காய்.
சீயங்காய் }
சீயம்-எருக்கம்பால், சிங்கம், சிங்கவிராசி, தென்றிசைப்பாலன்குறி.
சீயா-ஓர்மரம்.
சீயாக்காய்-ஓர்காய்.
சீயாள்-பாட்டி.
சீயான்-பாட்டன்.
சீயெனல்-இகழ்ச்சிக்குறிப்பு.
சீய்த்தல்-உராஞ்சுதல், சிருய்த்தல், சீவுதல், செருக்குதல்.
சீரக்கோரை-ஓர்கோரை.
சீரகச்சம்பா-ஓர்நெல்.
சீரகத்தாமர்-வணிகர்.
சீரகத்தாமன் } குபேரன்.
சீரகத்தவோன்- }
சீரகம்-ஓர்சரக்கு, ஓர்பயிர், பன்றி.
சீரங்கம்-ஓர்பட்டினம்.
சீரணம் - சமித்தல், சிவாகமமிருபத்தெட்டனுளொன்று, பதனழிவு.
சீரணவாடிகை-இடிந்தவீடு.

சீரணன்-விருத்தன்.
சீரணி-காடு, கூத்திகேளூர்பேதம், சீரணியென்னேவல்.
சீரணித்தல்-சமித்தல், பதனழிதல்.
சீரணை-பழக்கம்.
*சீரத்துவசன்-ஓர் சந்திரவமிசத்தரசன்.
சீரபாணி-பலபத்திரன்.
சீரமோடா-விழி.
சீரம்-இரேகை, எழுத்து, கலப்பை, காட்டெருமைப்பால், சீரை, சூரியன், மலைப்பாம்பு, மரவுரி, மாலை, முடி.
*சீரவட்டம்-சயம்.
சீரா-கவசம், பலாசு.
சீராட்டல்-கொண்டாடல், கோதுகலம்பண்ணல், சிறப்புப்பண்ணுதல்.
சீராட்டு-கொண்டாட்டம், கோதுகலம், சிறப்பு, சிறப்புச்செய்தல், சீராட்டென்னேவல்.
சீராபதிதநயை-இலக்குமி.
சீராளன்-சிறுத்தொண்டர் புத்திரன்
சீரி-பலதேவன், முக்காடு.
சீரிகை-ஓர்வண்டு.
சீரிடம்-தலை, வாகை.
சீரிணபன்னம்-வேம்பு.
சீரிணன்-கற்றோன்.
சீரித்தல்-பழகல்.
சீரிப்பு-பழக்கம்.
சீரியர்-அறிஞர், சிறந்தோர், புலவர்.
சீரிவிருக்கம்-புளியமரம்.
சீருகை-வண்டு.
சீருணம், சீருணி } செம்பு.
சீருத்திரம்-உபநிடதம் முப்பத்திரண்டினொன்று.
சீருள்-சயம், செம்பு, செல்வம், பஞ்சலோகம்.
சீரை-சீலை, மரத்தோல், மரவுரி,
சீர்-அழகு, இரைச்சல், ஒழுங்கு, கற்றண்டை, சித்திரம், சுபாவம், செல்வம், சொல், அஃது செய்யுளுறுப்பினுமொன்று, தண்டாயுதம், தாளவொத்து, துலாராசி, நடத்தரம், நன்மை, நிலைபரம், பாரம், புகழ், பொன், மூச்சை.
சீர்காரம்-எதிரொலி.
சீர்குலைதல்-ஒழுங்குகெடல், பதனழிதல்.
சீர்கேடி-மூதேவி.
சீர்கேடு-கேடானநிலைமை, ஒழுங்கில்லாமை.
சீர்க்காரம், சீர்க்கிருதம். } எதிரொலி.
சீர்க்கோள்-ஓர்கோள்.
சீர்-சிறப்பு, வாழ்வு.
சீர்செய்தல்-சீராக்கல்.
*சீர்ணபத்திரம்-வேம்பு.
*சீர்ணபர்ணம்-பேரீச்சமரம், வேப்பமரம்.
*சீர்ணபாதன்-யமன்.
*சீர்ணம்-சீரகம், பழுத்தது, பேதம், வயோதிகம்.
*சீர்ணவஸ்திரம்-பழந்துணி.
சீர்திருத்தல்-சீராக்கல்.
சீர்திருத்துதல்-சீராக்குதல்.
சீர்திருந்தல்-செப்பமாதல்.
சீர்தூக்கல், சீர்தூக்குதல். } ஆராய்தல், ஒத்துப்பார்த்தல்.
சீர்த்தல்-சிறப்புக்கொள்ளுதல்.
சீர்த்தி-மிகுபுகழ்.
சீர்த்துழாய்-ஓர்துளசி.
சீர்நிருவாகம்-இயல்பு, நிலைபரம்.
சீர்பண்ணுதல்-ஆயத்தப்படுத்தல், ஒழுங்குப்படுத்தல்.
சீர்பதி-கடவுள்.
சீர்பந்தபாஷாணம்-ஓர்பாஷாணம்.
சீர்பாதம்-திருப்பாதம்.
சீர்ப்படுதல்-ஒழுங்குப்படுதல், குணப்படுதல்.
சீர்ப்படுத்துதல்-குணப்படுத்துதல்.
சீர்ப்பாடு-சிறப்புறல்.
சீர்ப்பிழை-ஒழுங்குத்தப்பு.
சீர்மரம்-நெய்வார்கருவியினொன்று.
சீர்மை-எண்வகைசபூதியினொன்று, அஃது ஒப்பம், சங்கை, சிறப்பு, செம்மை,
சீர்வண்டு-நெய்வார்கருவியினொன்று.
சீலசம்பன்னன்-நற்குணன்.
சீலத்துவம்-குணம்.
சீலம்-அழகு, குணம், சரித்திரம், சேர்தல், சுபாவம், தருமம், நல்லறிவு, நல்லொழுக்கம்.
சீலம்பாய்-கிழியற்பாய்.
சீலவான், சீலன். } நற்குணசாலி.
சீலவிருத்தன் - நல்லொழுக்கிற்றிறம்பாதோன்.

சீலனம்-சாத்திராப்பியாசம்.
சீலா-இறைப்பட்டை, ஓர்மீன்.
சீலாப்பட்டை, } இறைகூடை.
சீலாப்புட்டை- }
சீலி-நற்குணமுடையாள்.
சீலிதன்-கலைகற்றோன்.
சீலை-வத்திரம்.
சீலைப்பேன்-சீலையிற்பற்றும்பேன்.
சீவகர்-புத்திரவத்தோர்.
சீவகன்-அரசன், குரவன், சீவன் முத்தன், தருமம்வளர்க்கியுள்ளோன், புத்திரவத்தோன், வேலைக்காரன்.
சீவகாருண்ணியன்-கிருபையுள்ளோன்.
சீவசாட்சி- அறிவுக்காதாரமாயிருப்பது.
சீவசாதனம்-தானியம்.
சீவசெந்து-உயிருள்ளவைகள்.
சீவதம்-அருமை, சன்மார்க்கம், சீவன், மயில், முகில்.
சீவதயை-ஜீவாநுக்கிரகம்.
சீவதருமம்-சீவபுண்ணியம்.
சீவதனம்-சீவனுள்ளதிரவியம்.
சீவதன்-சத்துரு, சன்மார்க்கன், நீண்ட ஆயுசுகாரன், வைத்தியன்.
சீவநாது-சீவவாயுசஞ்சரிக்குநாடி.
சீவநிலை-பிராணநிலை.
சீவதேகம்-ஆன்மாவிருக்கும்வடிவம்.
சீவத்தறுவாய்-மரணத்தறுவாய்.
சீவநாடி-பிராணவாயுவுலாவும்நரம்பு.
சீவநாயகன்-பிராணநாயகன்.
சீவநாள்-ஆயுள்.
*சீவந்தம்-ஔஷதம், பிராணன்.
சீவந்தி-சீந்திற்கொடி, பாலைமரம்.
சீவந்திகன்-பறவைவேட்டைக்காரன்
சீவந்தில்-சீந்தில்.
சீவபிராணி-உயிர்ப்பிராணி.
சீவபுண்ணியம்-உயிர்கட்குச்செய்யும் புண்ணியம்.
சீவபேதம்-உயிர்ப்பேதம்.
*சீவப்பிரியை-கடுக்காய்மரம்.
சீவமந்திரம்-உடல்.
*சீவமூதம்-மேகம்.
சீவரட்சை-ஈடேற்றம், சீவபரிபாலனம்.
சீவரம்-நிலவண்ணப்புடவை.
சீவரர்-புத்தர்.
சீவர்-சீவனுள்ளோர்.

சீவலர்-ஓர்நீர்ப்புழு.
*சீவலோதகி-ஊகயான்றகனா.
சீவல்-சீவப்பட்டது, சீவுதல், பெலமற்றது, மிருதுவானது.
சீவவிலயம்-மரணம்.
சீவனகம்-சோறு.
சீவனம்-அமுதம், உயிர்வாழ்தல், நைத்தல், நீர், பிழைப்பனவு, மூளை, வெண்ணெய்.
சீவனாகாதம்-நஞ்சு.
சீவனாந்தம்-மரணம்.
சீவனார்த்தம் - உயிர்வாழ்தற்குரியது, சீவனமுகாந்தரம்.
சீவனாவரசன்-வருணன்.
சீவனாவுபதம்-உயிர்தருமருந்து.
சீவனாளி - உயிருடையாள், உயிருள்ளோன்.
சீவனி-சஞ்சீவி, சீவநாடி, பாலைமரம்.
சீவனித்தல்-சீவனம்பண்ணுதல்.
சீவனியம்-நீர்.
சீவனோபாயம் - சீவனத்துக்கடுத்தவுபாயம், சீவனார்த்தம்.
*சீவனௌஷதம் - இறுதிக்காலத்திலும் உயிரை நிறுத்துமருந்து, சீவனோபாயம்.
சீவன்-உயிர், உயிர்தருமருந்து, சீந்தில், சீவியம், வியாழம், வைடூரியம்.
சீவன்கொடுத்தல் - உயிர்கொடுத்தல் திடப்படுத்தல்.
சீவன்முத்தன்-துறந்துஞான மடைந்தோன்.
சீவன்முத்தி-ஞானமடைந்து பிறப்பறுத்திருத்தல்.
சீவாதாரம்-உலகம்.
*சீவாது-உயிர்ப்பிக்குமருந்து.
சீவாத்துமா-சரீராவச்சின்னவான்மா
சீவாந்தகன்-கொலையாளி, வேட்டைக்காரன்.
சீவாந்தம்-சீவியமுடிவு.
சீவாவத்தை- ஆத்துமாவடங்குமவத்தை.
சீவி-உயிருடையாள், உயிருடையோன்.
சீவிகை-சீவனம்.
சீவிதகாலம்-சீவிக்குங்காலம்.
சீவிதசமுசயம்-மரணபயம்.
*சீவிதசாமி-கணவன்.
சீவிதஞ்ஞை-இரத்தாசயம்.

சீவிதேசன்-உயிர்தருமருந்து, கடவுள், கணவன், சந்திரன், சூரியன்.
சீவித்தல்-சீவியம்பண்ணுதல், மரித்தல், மோட்சஞ்சேருதல்.
சீவிப்பிரதல்-சாக்காட்டல்.
சீவிமுடித்தல்-கோதிக்கட்டல்.
சீவியகாலம் } ஆயுளுள்.
சீவியநாள் }
சீவியக்கம்-கல்லுப்பு.
சீவியம்-ஆயுள், காலட்சயம், சீவனம்.
சீவியம்பண்ணுதல் - சீவனம்பண்ணுதல்.
சீவியர்-சீவிப்போர்.
சீவியன் - சிவன், சீவிப்போன், திருமால்.
சீவினி-ஓர்மருந்து, செவ்வழிப்பண்.
சீவிசுரப்பிராந்தி-சீவனைச் சிவனெனக்காண்டல்.
சீவிசுரம்-ஆன்மா.
சீவுதல்-செதுக்குதல், மயிர்கோதுதல், மெல்லியதாயரிதல்.
சீவுளி-ஓர்கருவி.
சீவுளியாடுதல்-சீவுளிபோடுதல்.
சீவோபகாரம்-சீவதயை.
சீவோற்பத்தி-உயிர்த்தோற்றம், கருக்கொள்ளுங்காலம்.
சீழ் - ஒலிக்குறிப்பு, சீதல், சீழ்க்கை விடுதல்.
சீழ்க்கை - வாயாலூதுமோர்வகைச்சத்தம்.
சீழ்க்கைக்கருவி-சீழ்க்கைக்குழல்.
சீறடி-சிற்றடி.

சீறல் } அதட்டல், இரைதல், உரத்தகிசரித்தல், கோவித்தல், சினக்குறிப்பு, பெருங்கோபம், மூக்குச்சிறுதல், வேகம்.
சீறுதல் }

சீறுறெனல்-ஒலிக்குறிப்பு, சினக்குறிப்பு.
சீற்மாறு-கலகம், குழப்பம்.
சீறார்-வேடரூர்.
சீற்காரம்-சீர்காரம்.
சீற்றம்-கோபம், சினம்.
சீனக்கண்ணாடி-மூக்குக்கண்ணாடி.
சீனக்காக்காய்-ஓரினக்காகம்.
சீனக்காரம்-ஓர்மருந்து.
சீனக்கிழங்கு-ஓர்மருந்துக்கிழங்கு.
சீனக்குடை-கடுதாசிக்குடை.
சீனசம்-உமிக்கு.
சீனச்சட்டி-ஒருலோகம்.
சீனட்டங்குருவி-ஓர்குருவி.
சீனட்டி-ஓர்நெல்.
சீனபிட்டம்-செவ்வியம்.
சீனப்பாகு-ஓர்மருந்து.
சீனப்பூ-ஓர்புட்பம்.
சீனமல்லிகை-ஓர்பூச்செடி.
சீனமிளகு-ஓர்மிளகு.
சீனமுந்திரு-ஓர்செய்கைமுந்திரு.
சீனம்-ஓர்புடவை, தேயமைம்பத்தாறினொன்று, நால், பதினெண்பாடையினொன்று, மலைப்பாம்பு, மான்.
சீனவங்கம்-ஈயம்.
சீனவெடி-ஓர்வெடி.
சீனன் - சீனதேயத்தான், மூர்க்கன், விருத்தன்.
சீனி-ஓர்வகைச்சருக்கரை, சீனக்காரம், பித்திளைமணல், மரக்கூரம்.
சீனிக்கிழங்கு-ஓர்வகைக்கிழங்கு.
சீனிப்பாகு-அதிரசத்துதிர்பாகு.
சீனியதிரசம்-ஓர்பண்ணிகாரம்.
*சீலை-வன்னிமரம்.

சு

சு-அதட்டுமோசை, ஓரெழுத்து, நன்மை, சுகம் முதலியவற்றைக்காட்டுமோருபசருக்கம், வியப்புக்குறிப்பு
சுஃறெனல்-ஒலிக்குறிப்பு.
சுககீனம்-சௌக்கியவீனம்.
சுகசரீரம்-துன்பமற்றசரீரம்.
சுகசரீரி-சவுக்கியதேகி.
சுகசன்னி-ஓர்சன்னி, ஸ்திரீதோஷம்.
சுகசீவி-சுகவாழ்வுடையான், சுகவாழ்வுடையோன்.
சுகசெய்தி-நற்செய்தி.
சுகண்டி-ஓரிரத்தினம்.
சுகதபேதம்-பேதம் மூன்றினொன்று, அஃது மாத்துக்கில்காய் முதலிய வித்தியாசம்.
சுகதம்-சொந்தமானது.
சுகதுக்கம்-இன்பதுன்பம்.
சுகநயம்-சௌக்கியநன்மைகள்.
சுகந்தகம் - ஈரவெண்காயம், கந்தகத்தாள், தேன்தோடம்பழம்.
சுகந்தபரிமளம் - திருவாசனை, வாசனைப்பண்டம்.

சுகந்தம் - ஈரவெண்காயம், கந்தகம், கிழங்கு, சந்தனம், சீரகம், நறுமணம், நீலோற்பலம்.
சுகந்தவருக்கம் } வாசனைப்பண்டம்.
சுகந்தவற்கம் }
சுகந்திகம்-ஓர்செல், கந்தருபம், வெண்டாமரை.
*சுகபலர்-எருக்கஞ்செடி.
சுகபுச்சம்-கந்தரு.
சுகபேதி-ஓர்பேதி.
சுகபோகம்-சுகானுபவம்.
சுகபோசலம்-நல்லூண்.
சுகப்படுதல்-சுகமடைதல்.
சுகப்பிரியை-சம்புநாவல்.
சுகப்பிழை-சௌக்கியவீனம்.
சுகம்-பிராக்கதன், இன்பம், கிளி, சரீரம், மிக்கிரம், சுபம், தருமம், தலைப்பாகை, நன்மை, நீர், புடைவை, புளிகலாத்த நீர், முத்தி, மூலைக்கல்
சுகரம்-தருமம்.
சுகருமம்-நற்கருமம், நித்தியயோகந்தொன்று.
சுகவல்லபம்-மாதலை.
சுகவாகன்-மதன்.
சுகவாழ்வு-நல்வாழ்வு.
சுகவிருத்தி-சுகசெய்தி. சுகவாழ்வு.
சுகவிரோசனம்-சுகபேதி.
சுகவீனம்-துன்பம்.
சுகவேளை-சுகமானகாலம், நற்காலம்.
சுகன்-ஓர் கந்தருவன், சுகப்பிரமா, சுயற்கமூற்றோன்.
சுகன்மம்-சுகருமம்.
சுகன்றாதை-வியாசன்.
*சுகாங்கி-இரதிதேவி.
சுகாசகம் } வெள்ளரி.
சுகாசம் }
சுகாசனம்-சுகாதனம்.
சுகாசுகம்-சுகதுக்கம்.
சுகாதனம் - சுகமுந்திடனுமெவ்வாறிருக்கினெய்துமோ வவ்வாறிருத்தல், மாதலை.
சுகாதாரம்-சுவர்க்கம்.
சுகாநிசயம்-சுகசெய்தி.
சுகாதீதம்-மேற்பட்டசுகம்.
சுகாந்தம்-ஈரவெண்காயம்.
சுகானந்தம்-மிகுவின்பம், மோட்சம்.
சுகானுபவம்-நல்லனுபவம்.

சுகி-காசிபன் மனைவி, சுகபோகி, சுகியென்னேவல், சுபானுபவம், சௌக்கியம்.
சுகித்தல்-இன்பமனுபவித்தல், செல்வங்களையனுபவித்தல்.
சுகிப்பு-நல்லநுபவம்.
சுகியன் - சுகானுபோகி, போசனாதிசௌக்கியமுடையோன்.
சுகியாதி-சுர்கீர்த்தி.
சுகிர்-உட்டுளை, சுகிரென்னேவல், சுகிர்வு.
சுகிர்தகுணம்-நற்குணம்.
சுகிர்தகுறள்-ஓர் நூல்.
சுகிர்தநூல்-வேதநூல்.
சுகிர்தபுண்ணியம்-நற்புண்ணியம்.
சுகிர்தம்-அதிட்டம், அறம், சன்மார்க்கம், சுபி, தயவு, நன்மை, தெய்.
சுகிர்தலாபம்-திவேக சம்பாத்தியம்.
சுகிர்தல்-வகிர்தல்.
சுகிர்தவசனம்-சுத்தவசனம், மெய்வசனம்.
சுகு-ஓர்பாத்திரம்.
சுகுடம்-செம்பு.
சுகுணம்-நற்குணம்.
சுகுணன்-நற்குணமுடையோன்.
சுகுமாரம்-ஓர்கரும்பு, ஓர்தானியம், மிருது.
சுகுவநு-தி.
சுகோச்சம்-மகாசுகம்.
*சுகோதாம்-தாளிசபத்திரி.
சுகோற்சவன்-கணவன்.
சுக்கச்சிலை-வங்கக்கல்.
சுக்கம்-களவு, பொதுக்கு.
சுக்கம்வைத்தல்-களவா யபகரித்தல்.
சுக்கல்-அற்பம், துண்டு.
சுக்கானி-கப்பலோட்டி.
சுக்காரம்-கெற்சிதம்.
சுக்கானீறு-சுண்ணாம்புக்கன்னீறு.
சுக்கான்-கப்பலைநடத்துங்கருவி.
சுக்கான்கல்-சுண்ணாம்புக்கல்.
சுக்கான்கீரை-புளிக்கீரை.
சுக்கான்பருப்பதம்-வங்கக்கல்.
*சுக்கிலை-புளியாரை.
சுக்கிரசிடர்-அசுரர்.
சுக்கிரபகவான்-வெள்ளி.
சுக்கிரம்-துனிமாதம், கண்ணோய், கழுநீர், கள், நீர், புண்ணியம், பொன், வீந்து, வெண்ணிறம்.

சுக்கிரவாரம்-வெள்ளிக்கிழமை.
சுக்கிராசாரி-முத்து.
சுக்கிரன் - அசுரர்மந்திரி, கண்ணோயு
  ளொன்று, நீ.
*சுக்கிராங்கம்-மயில்.
சுக்கிராசாரியன்-சுக்கிரன்.
*சுக்கிரிகை-புளியாரை.
சுக்கிரீபன்-குரக்கிறை.
சுக்கிரீவேசன்-இராமன்.
*சுக்கிளை-புளியமரம்.
சுக்கில-ஓராண்டு.
சுக்கிலகலிதம்-இந்திரியக்கலிப்பு.
*சுக்கிலகுட்டம்-வெண்குட்டம்.
சுக்கிலத்தம்பம் - கலைஞானமறுபத்து
  நான்கினொன்று.
சுக்கிலத்துவம்-வெண்மை.
சுக்கிலபக்கம் } பூருவபக்கம்.
சுக்கிலபட்சம் }
சுக்கிலமண்டலம்-வெள்ளைவிழி.
சுக்கிலம்-இந்திரியம், ஓர்யோகம், க
  ண்ணோயினொன்று, புளி, வெண்
  ணெய், வெண்மை, வெள்ளி.
சுக்கிலாங்கம்-வெள்ளைத்தேகம்.
சுக்கிலாசயம்-இந்திரியகோசம்.
சுக்கிலாபாங்கம்-மயில்.
*சுக்கிலை-புளியமரம்.
சுக்கு-சுக்கான்கல், சுண்டி, துண்டு,
  வேர்க்கொம்பு, அஃது திரிகடுகத்
  தொன்று, பஞ்சமூலத்துமொன்று
சுக்குப்பொடி - வேர்க்கொம்புச்சூர
  ணம்.
சுக்கை-நட்சத்திரம், மாலை.
சுங்கம்-ஆயம், இறை, களவு,பொது
  க்கு.
சுங்கன்-ஓர்மீன், சுக்கிரன்.
சுங்கான்-புகைகுடிக்கிறகுழல்.
*சுங்கி-ஆலமரம், வன்னிமரம்.
சுங்கிதன்-ஈனன்.
சுங்கு-மடிப்பு.
சுசலம்-சுத்தசலம்.
சுசனம்-காற்று.
சுசாதி-சுயசாதி.
சுசாதிபேதம்-சுயசாதிக்குள்ளபே
  தம், அஃது மரத்துக்குமறுமரம்.
சுசி-ஆடிமாதம், இணக்கம், காமச்ச
  வலை, கோடைகாலம், சந்திரன், சி
  வன், சுக்கிரன், சுத்தம், சூரியன்,
  நிதார்த்தம், நெருப்பு, பிரமன்,மா
  ணுக்கன்றன்மை, முலை, வெண்கு
  டை, வெண்மை.
சுசிகரம்-சுத்தம், நேர்மை,மென்மை.
*சுசித்துருமம்-அரசமரம்.
சுசிக்தனம்-தியானம்.
சுசிமணி-இரத்தினம்.
சுசிமிதம்-புன்னகை.
சுசிரம்-அக்கினி, வைநுகுழல், துளை.
*சுசிரோசி-சந்திரன்.
சுசிலம்-காற்று, நற்குணம், நேர்மை.
சுசிலன்-நற்குணன்.
சுசுகம்-முலைக்கண்.
சுசுந்தரி-சோபி, நாவி, மூஞ்சூறு.
*சுசுமை-சுக்கிரன்மனைவி.
*சுசுகம்-முலைக்கண்.
சுசுக்குமை-நான்குவாக்கினொன்று.
சுசேலகம்-புடைவை.
*சுசை-சோகம்.
சுச்சு-சுண்டி.
*சுஞ்சுமாரம்-காலணி, மிடற்றெலும்
  பு, முதலை.
சுடகமாமிசம்-கருவாடு.
சுடகம்-காய்வு, சடை.
சுடரெண்ணெய் - சுட்டெண்ணெய்,
  பந்ததயிலம்.
சுடரோன்-சூரியன்.
சுடர்-அக்கினி, ஒளி, சந்திரன், சூரி
  யன், தீச்சிகை, விளக்கு.
சுடர்க்கொடி-கருப்பூரம், பெண்.
சுடர்ச்செலவு-சட்டுவெருக்கத்தொன்
  று, அஃது இராசியை யிரண்டாக
  ப்பகிர்தல்.
சுடர்தல்-ஒளிசெய்தல்.
சுடர்நிலை-தகழி, விளக்குத்தண்டு.
சுடர்மௌலியர்-வானோர்.
சுடர்விடுதல்-சுவாலித்தல்.
சுடர்விழியோன்-வீரபத்திரன்.
சுடர்விழுதல்-தீயிலிருந்துசுடரிழிதல்
  விளக்குமுதலியவற்றி லிருந்து தீச்
  சிகைவிடுதல்.
சுடர்வு-சுடர்தல்.
சுடலை-சுடுகாடு.
சுடலைக்காடு-சுடுகாடு.
சுடலைக்குருவி-ஓர்குருவி.
சுடலைஞானம்-மயானவைராக்கியம்.
சுடலைமாடன்-ஓர்தேவதை.
சுடலையாடி-சிவன்.
சுடலையினீறு-சவச்சாம்பல்.

சுடலையோன்-சிவன்.
சுடலைவயிரவன்-மயானவயிரவன்.
சுடரி-கவசம்.
சுடிகை-உச்சி, நெற்றிச்சுட்டி, மயிர் முடி, முடி.
சுதிரியம்-விரியம்.
சுடுகலம்-குயக்கலம், செங்கல்.
சுடுகாடு-ஈமம்.
சுடுகோல்-சூட்டுக்கோல்.
சுடுசுடுத்தல்-தீவிரித்தல்.
சுடுசுடுப்பு-தீவிரம்.
சுடுசுடெனல்-தீவிரித்தல், வெடுவெடுத்தல்.
சுடுசுண்ணம்-சுட்டசுண்ணம்.
சுடுதல்-உலோகங்களையொட்டுதல், சூடுகொளுதல், தகித்தல், நிந்தித்தல், விசனமடைதல், விசனமடைவித்தல், வேகவைத்தல்.
சுடுநிலம்-சுடுகாடு.
சுடுநீர்-வெந்நீர்.
சுடுமருந்து-வெடிமருந்து.
சுடுவல்-இரத்தம்.
சுடுவனம்-இரத்தம், சுடுகாடு.
சுடுவான் - படையிற்சமையல் பண்ணுமிடம்.
சுடுவு-சும்மாடு.
சுட்சுள்ளெனல்-முள்ளு, வாயுமுதலியகுற்றக்குறிப்பு.
சுட்டல்-காட்டுதல், குறித்தல்.
சுட்டாவிரல்-சுட்டுவிரல்.
சுட்டி } உச்சிவெள்ளை, நெற்றிச்சுட்டி.
சுட்டிகை }
சுட்டிக்காட்டுதல்-குறித்துக்காண்பித்தல்.
சுட்டித்தலை-குறும்புத்தனம், திரியாபுரம்.
சுட்டித்தலையன் } துட்டன், நெற்றிச்சுட்டியுள்ளது.
சுட்டியன் }
சுட்டு-எண்ணம், குறிப்பு, சுட்டென்னேவல்.
சுட்டுக்கோல்-உலையாணிக்கோல்.
சுட்டுச்சொல்-ஒன்றைக்குறித்துக்காட்டுமொழி.
சுட்டுதல்-உன்னுதல், குறித்தல்.
சுட்டுப்பொருள்-குறித்தபொருள்.
சுட்டுவிரல்-சுட்டாட்டிவிரல்.
சுட்டுவைத்தல்-இலக்குவைத்தல்.
சுட்டெழுத்து-அ, இ, உ, என்றவெழுத்துக்கள்.

சுணக்கம்-சோர்வு, தாமதம்.
சுணக்குதல்-தாமதப்படுத்தல், மெலியச்செய்தல்.
சுணங்கல்-சோர்தல், தாமதித்தல்.
சுணங்கன்-நாய்.
சுணங்கன் முத்திரை-நாயாகாரமானவோர்முத்திரை.
சுணங்கு-சுணங்கென்னேவல், தேமல்.
சுணை-சுனை.
சுணைக்கோரை-ஓர்புல்.
சுணைத்தல்-சுனைத்தல்.
*சுண்டகம்-மூஞ்சில்லில்.
சுண்டகன்-சாராயம்வடிப்போன்.
சுண்டக்கட்டுதல்-இறுகக்கட்டுதல்.
சுண்டக்காய்தல்-இறுகக்காய்தல்.
சுண்டக்காய்-சிறுகாய், சுண்டிக்காய்.
சுண்டப்பிடித்தல்-இறுகப்பிடித்தல்.
சுண்டம்-கள், யானைத்துதிக்கை.
சுண்டல்-இறுகல், எய்தல், சுண்டற்கறி, சுண்டுதல், தெறித்தல், வற்றுதல்.
சுண்டற்கறி-ஓர்கறி.
சுண்டன்-அறிவிலி, சதையகாள், மூஞ்சூறு.
சுண்டாங்கி-அற்பம்.
சுண்டாபானம்-சுராபானம்.
சுண்டாரன்-சாராயம்வடிப்போன்.
சுண்டாலம் } யானை, யானைத்துதிக்கை.
சுண்டாலி }
சுண்டி-கள், சுக்கு, சுண்டில்.
சுண்டிகை-உண்ணு.
*சுண்டிமூடிகை-முஞ்சூறு.
*சுண்டியம்-சுக்கு.
சுண்டில்-சுண்டிற்செடி.
சுண்டு-அடிப்பற்றியது, அற்பம், ஓர்சிறு அளவுபடி, சுண்டென்னேவல்.
சுண்டுகட்டை-நெய்வார்கருவியினொன்று.
சுண்டுவிரல்-சின்னவிரல்.
சுண்டுவில்-கல் முதலிய செலுத்தும்வில்.
சுண்டெலி-ஓரெலி.
சுண்டை - கிணறு, சுண்டைச்செடி, நீர்ச்சுண்டு.
சுண்ணக்கல்-சுக்கான்கல்.
சுண்ணப்பொடி - பாகம், வாசனைப்பொடி.
சுண்ணமிடித்தல்-ஓமக்கிரியையினொன்று.

சுண்ணம்-சுதயம், சுட்டசாந்து, சுண்ணப்பொடி, பராகம் புழுதி. [ல்.
சுண்ணாம்படித்தல்-சுண்ணாம்பு பூசுத
சுண்ணாம்பு - சிப்பி முதலியவற்றின் சுண்ணம்.
சுண்ணாம்புக்காறை-சுண்ணாம்புச்சார்ந்திடுதல்.
சுண்ணாம்புத்துடுப்பு-சுண்ணாம்புதோண்டி.
சுண்ணித்தல்-நீற்றுதல், பூசுதல்.
சுதந்தன்-கூத்தாடி.
சுதந்தி - வடமேற்றிசை யானைக்குப் பெண்யானை.
சுதந்திரம்-இட்டமானவாளுகை, உரிமை.
சுதந்திரர்-உரிமைக்காரர்.
சுதந்திராவாளி-உரித்தாளி.
சுதந்திரி-இட்டமாய் நடத்துவோன், உரிமைக்காரன், உரிமையுடையாள்
சுதந்திரித்தல்-இட்டமாய்நடத்தல், உரிமைபெற்றனுபவித்தல்.
சுதந்திரியம்-இட்டம்.
சுதம்-கேடு, மலர்ந்துவாரம், முறைமை
சுதரிசனம்-அழகு, கண்ணாடி, சக்கிரம், சம்புநாவல், தேவலோகம், மேருமலை, வலியான்.
சுதருமம்-நற்கிரியை.
சுதர்த்தனம்-குயில்.
சுதலம்-கீழேழுலகினொன்று.
சுதனம்-ஆயுதப்பொது.
சுதனுவன்-விச்சுவகன்மா, வில்லாச்சிரமி.
சுதன்-மகன்.
சுதன்மம் } இந்திரன் வசந்தமண்
சுதன்மை } டபம்.
சுதாகரன்-கருடன், சந்திரன்.
சுதாகிருது-கருடன்.
சுதாங்கரன்-சந்திரன்.
சுதாகுதி-சந்திரன், யாகம், வனசம்.
சுதாதாரன்-சந்திரன்.
சுதாத்துமசன்-பேரப்பிள்ளை.
சுதாநிதி-சந்திரன்.
சுதாபிரீதி-சந்திரன், யாகம்.
சுதாமனு-மலை, முகில்.
சுதி-அதிஞன், குதத்துவாரம், சுருதி, பூருவபக்கம்.
சுதிக்கியானம்-சுருதிவித்தை.
சுதினம்-நற்றினம்.
சுதுப்புநாக்காளா-ஓர்காளை.
சுதும்பு-ஓர்மீன்.
சுதை-அமிழ்து, உதைகாற்பசு, கங்கை, சுண்ணச்சாந்து, சுவைநீர்ப்பால், பூந்தேன், மகள், மின், வெண்மை.
சுதோற்பத்தி-பிள்ளைப்பேறு.
சுத்தகேவலம்-ஓரவத்தை.
சுத்தகௌடம்-பஞ்சகௌடத்தொன்று.
சுத்தக்கட்டி-கலப்பற்றபொற்கட்டி.
சுத்தசத்தியம்-மகாவுண்மை.
சுத்தசலம்-தெளிநீர்.
சுத்தசிவன்-குற்றமற்றபிராணி.
சுத்தசூனியம்-அறத்தீர்ந்தவெறுமை
சுத்தசைதன்னியம் - சுத்த சுருபஞானம்.
சுத்தசைவம்-ஓர்சைவம்.
சுத்தஞானம்-மயக்கந்தீர்ந்த ஞானம்.
சுத்தஞானி-பக்குவஞானி.
சுத்தநினம்-புண்ணியதினம், வருடத்தின்முதனாள்.
சுத்தநீர்க்கடல்-புறவாழிக்கடல்.
சுத்தபத்தி-மாசற்றபத்தி.
சுத்தபுடம்-சுந்தப்புடம்.
சுத்தபோசனம்-ஆரதபோசனம்.
சுத்தப்பிழை-முற்றும்பிழை.
சுத்தப்புடம்-எண்ணவிற் கனிந்தெடுத்தது.
சுத்தப்பொய்-முற்றும்பொய்.
*சுத்தமதி-நன்மதியுள்ளோன்.
சுத்தமனம்-வஞ்சகமற்றமனம்.
சுத்தமாயை-மகாமாயை.
சுத்தமார்க்கம்-சத்தியமார்க்கம், நன்னடை.
சுத்தம்-உண்மை, கலப்பற்றது, குற்றமற்றது, பவித்திரம், பொரிக்கறி.
சுத்தம்பண்ணுதல்-தூயதாக்கல்.
சுத்தவாசனை-நறுமணம்.
சுத்தவாளர்-தெய்வபத்தர்.
சுத்தவாளி-சுத்தன்.
சுத்தவித்தை-சிவதத்துவமைந்தினொன்று, அதஞானமேறிக் கிரியைகுறைந்தது.
சுத்தவீரன்-மிகுவீரன்.
சுத்தவுபவாசம்-பட்டினி.
சுத்தன்-அருகன், கடவுள், மெய்யன்
சுத்தாங்கம்-கலப்பற்றது, முற்றும்.

சுத்தாத்துமா-பரிசுத்தவான்.
சுத்தாந்தபாலகன் - அரண்மனைகாவலன்.
சுத்தாந்தம்-அரசன்றேவியில்லம்.
*சுத்தாங்கை-ராஜபத்தி.
சுத்தாவத்தை-பரிசுத்தவவத்தை.
சுத்தி-சங்கு, சுத்தியல், மெய்க்குத்தி முதலியபாத்திரம், பவித்திரம்.
சுத்திகரம்-சுத்திசெய்தல்.
சுத்திகரித்தல்-சுத்தமாக்குதல்.
சுத்திகரிப்பு-சுத்தம்பண்ணுதல்.
சுத்திகை-அகல், இப்பி.
சுத்திசெய்தல் } பவித்திரஞ்செய்
சுத்திபண்ணுதல் } தல்.
சுத்தியடைதல்-சுத்தியாதல்.
சுத்தியல்-சிறுசம்மட்டி.
சுத்தோதகம்-சுத்தசலம்.
*சுநச்சேபன்-ருசிகமுனிபுத்திரன்.
சுநயம் } நன்னடை.
சுநீதம் }
சுநாரம்-அடைக்கலான்குருவி, நாய்ப்பால், பாம்பின்முட்டை.
சுந்தரத்தாது-சுத்தபாஷாணம்.
சுந்தரமூர்த்தி-அறுபத்துமூவரிலொருவன்.
சுந்தரம்-அழகு.
சுந்தரன்-காமன், சுந்தரமூர்த்தி.
சுந்தரி-அழகுள்ளவள், இந்திராணி, துர்க்கை, பார்வதி, பெண், மூஞ்சூறு.
சுந்தரிகட்டு-இந்துப்பு.
சுநதன்-ஓரரக்கன்.
*சுந்தி-கோட்சொல்வோன்.
சுபகதி-சந்தோஷம், மோக்கம்.
சுபகரன்-நகையாளன்.
சுபகருமம் }
சுபகன்மம் } மங்கலகாரியம்.
சுபகாரியம் }
சுபகிரியை }
சுபகாலம்-நற்காலம்.
சுபகிருது-ஓராண்டு.
சுபக்கம்-பொருளிருக்கும்பக்கம்.
சுபக்கிரகம்-சுபக்கோள்.
*சுபங்கரன்-சுபமுண்டாக்குவோன்.
சுபங்கரி-பார்வதி.
சுபசூசனம்-நன்னிமித்தம்.
சுபசெய்தி-நற்செய்தி.
சுபசோபனம்-மங்கலம்.
சுபட்சம்-சுபக்கம்.

*சுபசம்-அரசமரம்.
சுபதினம்-நற்றினம்.
சுபத்தலம்-தேவாலயம்.
சுபத்திராசனம்-தொடைக்கும்முழங்காற்குநடுவே யிரண்டுள்ளங்காலையுஞ்செலுத்தியிருத்தல்.
சுபத்திரேசன்-அருச்சுனன்.
சுபத்திரை - அருச்சுனன் மனைவிகளிலொருத்தி.
சுபமங்களம்-வாழ்த்து.
சுபமிருத்து-நன்மரணம்.
சுபமுகூர்த்தம்-நன்முகூர்த்தம்.
சுபம்-காற்று, நன்மை, நித்தியயோகத்தொன்று, பரிசம், மங்களம், யுத்தம்.
சுபயோகம்-ஓர்யோகம்.
சுபர்ணகேது-சுபன்னகேது.
சுபர்ணன்-சுபன்னன்.
சுபவசனம்-மங்கலவசனம்.
சுபவாக்கு-வினவுதல்.
சுபவாசகம்-நல்வசனம்.
சுபவாதனை-ஆன்மா வானந்தத்தமுந்தல்.
சுபவாரம்-நற்கிரகவாரம்.
சுபன்னகேது-விட்டுணு.
சுபன்னன்-கருடன், சேவல்.
சுபாங்கி - அழகுள்ளவள்; இரதி, குபேரன்மனைவி.
சுபாசுபம் - இன்ப துன்பம், நன்மை தீமை.
சுபாதிசயம்-நற்செய்தி.
சுபாதிட்டானம்-சுவாதிட்டானம்.
சுபாபம்-சுபாவம்.
சுபாபாங்கை-அழகுடையாள்.
சுபாலிகை-அம்பு.
சுபாவக்குணம்-இயற்கைக்குணம்.
சுபாவமுத்தி-சுத்தமுத்தி.
சுபாவம்-இயல்பு, கபடமின்மை.
சுபாவவாதம்-ஓர்நூல்.
சுபாவி-நற்குணன், மெய்யன்.
சுபாவிகம்-சுபாவக்குணம்.
சுபானு-ஓர்வருடம்.
சுபிக்ஷம்-மிகுதி.
*சுபுகம்-மோவாய்க்கட்டை.
சுபுட்பம்-கராம்பு, பவளமரம்.
சுபுத்தி-நற்புத்தி.
சுபை-அரசாட்சி, தேவகூட்டம், நியாயஸ்தலம், மூங்கில்.

சுபயதார்-ஓரதிகாரி.
சுபோகம்-சுவாறுபோகம்.
சுபோகி-சுவாறுபோகி.
சுப்பி-விறகுகள்ளி.
சுப்பியம் - விளாம்பட்டை, வெள்ளிலோத்திரம்.
சுப்பிரசுதை-காட்டெருமைப்பால்.
சுப்பிரதந்தி - வடமேற்றிசையானையின் பெண்யானை.
சுப்பிரதிகம், சுப்பிரதீபம் } மிக்கவொளி, வடகீழ்த்திசையானை.
சுப்பிரதீபன்-கீர்த்திபெற்றோன்.
சுப்பிரபேதகம் - சிவாகமமிருபத்தெட்டினொன்று.
சுப்பிரமணி-வச்சிரம்.
சுப்பிரமணியன்-குமரன்.
சுப்பிரம்-ஒளி, சந்தனம், நித்தியயோகத்தொன்று, நீர்மிக்கவொளி, வெண்மை, வெள்ளி.
சுப்பிரயோகம்-பஞ்ச பாணாவத்தையினொன்று, அது சொல்லும்நினைவுமாயிருத்தல்.
சுப்பிரலாபம்-சாதுரியம்.
*சுப்பிராங்கி-இந்திரன்குதிரை.
*சுப்பிரி-பிரமன்.
சுப்பெனல்-ஒலிக்குறிப்பு, விரைவின்குறிப்பு.
சுமங்கலம்-நன்மங்கலம்.
சுமங்கலை-உமை, மங்கலியப்பெண்.
சுமங்கை-வரசுண்டி.
சுமடர்-அறிவிலார், கீழ்மக்கள்.
சுமடி-அறிவிலாள்.
சுமடு-அறிவின்மை, சும்மாடு.
சுமதி-நற்குண முடையாள், நற்குணன், நன்மதி.
சுமத்தல் - தாங்குதல், பாரமேற்றல்; பொறுத்தல்.
சுமத்திரை - பாண்டுவின்மனைவிகளுளொருத்தி.
சுமத்து-சுமத்துதல், சுமத்தென்னேவல்.
சுமத்துதல்-ஏற்றுதல்,
சுமப்பு-சுமைதி.
சுமம்-பூ.
சுமரணை-சுவரணை.
சுமருதல்-சுமக்குதல்.
சுமவாச்சுமை-சுமக்கொணாச் சுமை.
சுமனசம்-பூ.
சுமாரகம்-களைப்பு.
சுமாலி-ஓரிராக்கதன், கள்.
சுமாவம்-களைப்பு.
சுமுகம்-நன்முகம்.
சுமுகன்-நன்முகமுள்ளவன்.
சுமுத்திரை-சுமித்திரை, சரியளவு, தசரதன்மனைவிகளுளொருத்தி, நன்முத்திரை, நிதானம்.
சுமை-பாரம்.
சுமைகாரன்-சுமைசுமப்பவன்.
சுமைகூலி-சுமையெடுத்தகூலி.
சுமைதலை-பொறுப்பு.
சுமைதாங்கி-ஏதண்டை, பொறுப்பாளி.
சுமைதி-பாரம், பொறுப்பு.
சுமையடி, சுமையடை } சும்மாடு.
சுமையாள்-சுமைகாரன்.
சுமையிறக்கி-சுமைதாங்கி.
சும்பகம்-வாசிக்காந்தம், இத்தட்டிக்கல், முத்தஞ்செய்தல்.
*சும்பகன்-ஸ்திரீலோலன்.
*சும்பகாதினி, சும்பமர்த்தினி } துர்க்கை.
சும்பனம், சும்பிதம் } சூப்புதல், முத்தம்.
சும்பித்தல்-சும்பனஞ்செய்தல்.
சும்புள்-கடம்பு.
சும்மா-இலவசம், விருதா.
சும்மாடு-பட்டடை.
சும்மை-ஆவாரை, ஊர், ஒலி, சுமை, நகர், நாடு, நெற்போர்.
சுயகுணம்-சுபாவக்குணம்.
சுயகுரு-வமிசக்குரு.
சுயசாதி-கலப்பற்றசாதி.
சுயசோதி, சுயஞ்சோதி } இயற்கையொளி, கடவுள், கலப்பில்லாவொளி.
சுயபழக்கம்-இயல்பு.
சுயபாரபத்தியம்-சுதந்திரவதிகாரம்.
சுயபாஷை-சொந்தப்பாஷை.
சுயபுணர்ச்சி-தற்புணர்ச்சி.
சுயபுத்தி-சொந்தப்புத்தி.
சுயம்-இயல்பு, கலப்பற்றது, சொந்தம்.
சுயம்பாகம்-சமைத்தல்.
சுயம்பாகன், சுயம்பாகி } சமையற்காரன், சவுக்காரம்.
சுயம்பாடுதல்-சங்கீதம்பாடுதல்.

சுயபாரபத்தியம்-சுயபாரபத்தியம், தனியதிகாரம்.
சுயம்பிரகாசம்-இயற்கையொளி, கடவுள், கலப்பற்றவொளி.
சுயம்புலிங்கம்- தானேயானலிங்கம்.
சுயம்பு-கடவுள், சிவன், தானாகவாதல், பிரமன்.
சுயம்வரம்-சுவயம்வரம்.
சுயாதிபதி - சக்கிரவர்த்தி, தன்னரசகாரன்.
சுயாதிபத்தியம் - சக்கிரவர்த்தித்துவம், சுயவதிகாரம்.
சுயாதீனம்-சொந்தம், தன்னிட்டம்.
சுயாதீனன்-தன்னிட்டகாரன்.
சுயிரகம்-குசப்புல்.
சுயேச்சை - தன்னிச்சை, தன்னிட்டம்.
சுயோலி-கள்.
சுயோதனன்-துரியோதனன்.
*சுரகு-ஒர்வேடராசன்.
சுரகுரு-வியாழன்.
சுரக்கம்-பிறை, சாதிலிங்கம், திலகலைக்ஷாரம், தேன், தேடம்பழம், தோல்குமலுள்ளதுக்குருவாரம்.
சுரசத்துரு-அசுரர்.
சுரசந்தி-ஒரிசை.
சுரசம்-கற்கண்டுமுதலிய சுயசாரவஸ்து, சாறு, பிறுசிமுக்கு, சுகிர்தசாரம், துளசி, நறும்பிசின், பாதரசம்.
சுரகவி-இரவு.
சுரசன்னிதி-வானோர்கூட்டம்.
சுரசிதம்-இரட்சிப்பு.
சுரகுலை-ஒர்குலை.
சுரச்சதி-சுரத்தின்மூலம்.
சுரஞ்சனம்-கமுகு.
சுரடி-ஒர்பல்.
சுரணை-சுவரணை.
சுரததாலி-கும்பதாசி.
சுரதநீர்-காமநீர்.
சுரதநூல்-காமநூல்.
சுரதமங்கை-வேசி.
சுரதம்-அன்பு, பாதரசம், புணர்ச்சி, மருந்திழிசாரம்.
சுரதரு-தேவதரு.
சுரதலீலாவிநோதம் - புணர்ச்சிவிளையாட்டிற்பொழுதுபோக்கு.
சுரதலீலை-புணர்ச்சிவிளையாட்டு.
சுரதவித்தை-புணர்ச்சிவிற்பன்னம்.
சுரதனு-வானவில்.
சுரதாபநயிலம்-ஒர்மருந்தெண்ணெய்
சுரத்தல்-உண்டாதல், ஊறுதல், நிறைதல், பயத்தல்.
சுரநதி-கங்கை.
சுரபதம்-ஆகாயம், தேவலோகம்.
சுரபதி-சுரர்பதி.
சுரபி-கந்தகத்தூள், சாதிக்காய், சித்திரைமாதம், துளசி, பசு, பிரமி, பூமி, மது, மல்லிகை, வாசனை.
சுரபிபத்திரை-சம்புநாவல்.
சுரபிவாணன்-காமன்.
சுரபு-இலவம்பிசின்.
சுரபுன்னை-ஒர்மரம்.
சுரப்பு-இரத்தமுதலிய சுரந்ததினால் வருங்கனப்பு, சுரத்தல்.
சுரப்புவடிவு-முலைமேற்றிரள்.
சுரமண்டலம்-ஒர்வாத்தியம்.
சுரமதி-சிலம்பி.
சுரம்-அருநெறி, இசை, உட்டுளை, ஒருப்பு, கள், காடு, காய்ச்சல், கொம்பினுட்குருத்து, பாலைநிலம், வழி.
சுரம்பாடுதல் - சத்தசுரப்பரிட்சைபண்ணல்.
சுரம்போடுதல் - சுரஞ்சொல்லிப்பாடுதல்.
சுரரிடம்-தேவலோகம்.
சுரர்-வானோர்.
சுரர்பகைவர்-அசுரர்.
சுரர்பதி-இந்திரன், தேவலோகம்.
சுரலோகம்-தேவலோகம்.
சுரழ்-இலவம்பிசின்.
சுரளிகை-பாலைமரம்.
சுரன்-அறிஞன், சூரியன்.
சுராகரம்-தெங்கு.
சுராட்டு-இந்திரன், சிவன்.
சுராட்புருடன்-சிவன், விட்டுணு.
சுராபகை-கங்கை.
சுராபானம்-கள்முதலியனகுடித்தல்.
சுராபாணி-குடிகாரன்.
சுராரி-அசுரன், பைசாசம்.
சுரார்க்கம்-பொன்.
சுராலயம்-கள்விற்குமிடம், சுவர்க்கலோகம், மேரு.
சுராளம்-கெச்சைநடை.
சுரி-ஆணரி, சங்குச்சுரி, சுரியென்னேவல், சுழற்சி, சேறு, தமர், முறுக்கு.

சுரிகுழல்-அளகம், கவசம், பெண்.
சுரிகை-உடைவாள், கவசம்.
சுரிதம்-கலக்கப்பட்டது, வெட்டப்பட்டது.
சுரிதல் } சுருங்கல், சுழித்தல், சுழித்துள்ளேவாங்கல்,
சுரித்தல் } சேறுதல்.
சுரிபோடுதல்-தமரிடுதல்.
சுரிப்புறம்-சங்கு, நத்தை.
சுரிமண்-சேறு.
சுரிமுகம்-சங்கு, நத்தை.
சுரியல்-இளைஞர்மயிர், சுரிதல், சுழலல், நீர்ச்சுழி, பெண்மயிர், மயிர்.
சுரியாணி-புரியாணி.
சுரியூசி-தமருசி.
சுரீரிடுதல்-அச்சக்குறிப்பு, ஒலிக்குறிப்பு.
சுரீரெனல்-ஒலிக்குறிப்பு, விரைவுக்குறிப்பு.
சுருக்கங்கோரை-ஓர்கோரை.
சுருக்கம்-அடக்கமானசெய்கை, கட்டு, குறைவு, சுருங்கல்.
சுருக்கல்-சுருக்குதல்.
சுருக்கு-உருவுதடம், கட்டு, கண்ணி, சுருக்கம், சுருக்கென்னேவல், சுருங்கப்பிடித்துக்கட்டியது, நெய்த்துடுப்பு, மடிப்பு.
சுருக்குதல்-அடக்குதல், ஒடுக்குதல், கட்டுதல், சிறுகப்பண்ணல், சுருங்கச்செய்தல்.
சுருக்குப்பிடித்தல்- சுருக்குப்பிடித்துக்கட்டுதல்.
சுருக்குப்பை-சுருக்கிவிடும்பை.
சுருக்குப்போடுதல்-உருவுகயிறிடுதல்.
சுருக்குவைத்தல்-கண்ணிவைத்தல்.
சுருங்கப்பிடித்தல்-குறைத்தல்.
சுருங்கல்-குறைதல், சுருங்குதல், நுழைவாயில், மாலை,
சுருங்கு - சலதாரை, சுருங்கென்னேவல்.
சுருங்குதல்-அடக்கமாயிருத்தல், இறுகுதல், ஒடுங்குதல், குறைதல், கூம்புதல், கெடுதல்.
சுருங்கை-கோட்டையிற் கள்ளவழி நுழைவாயில், மதகு.
சுருசுருத்தல்-ஊடுருவுமொழிக்குறிப்பு, விரைவுக்குறிப்பு.
சுருசுருப்பு } சுருசுருத்தல்.
சுருசுரெனல் }
சுருட்டி-ஆலவட்டம், ஓரிராகம்.
சுருட்டிப்பிடித்தல்-குறைக்குதல்.
சுருட்டிவாங்குதல் - குறண்டவாங்குதல்.
சுருட்டு-சுருட்டென்னேவல், சுருள்.
சுருட்டுக்கொழுக்கட்டை - ஓர்கொழுக்கட்டை.
சுருட்டுதல்-சுருளச்செய்தல்.
சுருட்டுவாள்-சுருட்டும்வாள்.
சுருட்டை-ஓர்பாம்பு. [பு.
சுருட்டைவிரியன்-ஓர் விரியன் பாம்
சுருணி-யானைத்தோட்டி.
சுருணை-சுருண்டது, நூல்முதலியவற்றின்பந்து.
சுருதி-ஒலி, காது, சுதி, வேதம்.
சுருதிகூட்டுதல்-சுதியெடுத்தல்.
சுருதிவிலோசனம் - வேதமறியும்விவேகம்.
சுரும்பர்-வண்டு.
சுரும்பாவன்-மன்மதன்.
சுரும்பு-ஆண்வண்டு, வண்டு.
சுருவம் } நெய்த்துடுப்பு.
சுருவை }
சுருளுதல்-சுருளாதல், வளைதல்.
சுருளை-சுருள், நூற்சுருள்முதலியன.
சுருள்-ஐம்பாலிலொன்று, அஃது பின்னேசெருகல், சுருளென்னேவல், தாமரையுட்சுருள், நூற்சுருள் முதலியன, பெண்மயிர், வெற்றிலைச்சுருள்.
சுருள்வு-சுருட்சி.
சுருபம்-உருவம், நல்லுருவம்.
சுருபி-அழகுள்ளவள், அழகுள்ளவன், உருபி.
சுருபிணி-நல்லருபி.
சுரேசன்-இந்திரன், ஈசானன், குமரன்.
சுரேசுவரி-உமை, தேவகன்னிகை.
*சுரேச்சினை-தளபி.
*சுரேந்திரசித்து - இந்திரசித்து, கருடன்.
சுரேந்திரன்-இந்திரன். [டன்.
சுரை - அமுதம், அம்புத்தலை, உட்டுளை, களவு, கள், சுரைக்கொடி, குர்ணம், பசு, விலங்கின்முலை.
சுரைக்கந்தகம் } ஓர்வகைக்கந்தகம்.
சுரைக்காய்க்கந்தகம் }

சுரோணி-யோனி.
சுரோணிதம்-உதிரம், மகளிர்சூதகம்.
*சுரோதம்-கட்கடல்.
சுரோத்தமன்-சூரியன்.
*சுரோத்தரம்-சக்கரம்.
சுரோத்திரம்-காது, கேள்வி.
சுரோத்திரியம்-கற்றோர்க்கிடப்பட்ட காணிமுதலியன.
*சுலட்சணை-உமாதேவியின்சேடியரி லொருத்தி.
சுலபம்-அற்பம், இலேசு.
சுலயல் } சுழலல், சுழற்றுதல்.
சுலவுதல் }
சுலனன்-அக்கினி.
சுலாவல் } சுற்றிவருதல், சுற்று
சுலாவுதல் } தல்.
சுலாவுறட்டி-ஓர்பணிகாரம்.
சுலு-இலேசு.
சுலுகம்-கலகம், குறைவு, சிறங்கை, [சேறு.
*சுலுங்கை-முதலை.
சுலபம் } அற்பம்.
சுலுபம் }
சுலுப்பு-ஓர்மரக்கலம்.
சுலோகம்-புகழ், வசனம்.
சுலோகி-கள்.
சுலோசனம்-மான், மூக்குக்கண்ணாடி
*சுலோசனன்-துர்யோதனன்.
சுலோசனை-மூக்குக்கண்ணாடி.
சுலோபம்-அற்பம், எறும்பு.
சுல்-வெள்ளி.
சுல்லம்-கயிறு, தாமிரம்.
*சுல்லன் - பிணைக்கன்னன், பிணைக்க ன்னி.
சுல்லி-அடுப்பு, மடைப்பள்ளி.
சுல்லு-வெள்ளி.
சுல்வம்-சிறங்கை, சிறுமை, செம்பு.
சுவகதம்-சுகதம்.
சுவசந்தம்-சித்திராபூரணை.
சுவசனம்-சாதுரியம், நல்வசனம்.
சுவச்சம்-குற்றமற்றது, சொச்சம்.
*சுவச்சிரகம்-ஸ்ரீராமன்வில்.
சுவடி-எழுதியபுத்தகம்.
சுவடு-அடையாளம், கட்டு, குறிப்பு, சுளுகு, தழும்பு, பக்கரை.
சுவணகாரர்-தட்டார்.
சுவணதானம்-இரணியதானம்.
சுவணபுட்பம் - அருச்சனை செய்யும் பொன்.

சுவணபூமி-தேவலோகம்.
சுவணமயம்—பொன்மயம்.
சுவதந்தரம் }
சுவதந்திரம் } சுதந்திரம்.
சுவதந்திரியம் }
சுவத்தம்-சொஸ்தம்.
சுவத்தி } ஓரடையாளம், மங்கல
சுவஸ்தி } வடை.
சுவத்திகம் } ஓரடையாளம்.
சுவஸ்திகம் }
சுவத்திகாதனம்-தொடைக்கு முழங் காற்கு நடுவே யிரண்டுள்ளங்காலை யுஞ்செலுத்தியிருமாந்திருப்பது.
*சுவநம்-சண்பகம்.
சுவப்பிரம்-நரகம், பாதலம், வளை.
சுவயங்கிருதம்-தானேயானது.
சுவயததானம்-சொந்த இடம்.
சுவயம்-சயம்.
சுவயம்பு-சயம்பு.
சுவயம்புவன்-சுவாயம்பு.
சுவயம்வரம்-தன்னிட்டம், தானுகவ ரித்து மணமாலையிடல்.
சுவயம்வரை-மாலையிட்டு மணமுடித் தபெண்.
சுவரகழ்கருவி-கன்னக்கோல்.
சுவரணை-உணர்ச்சி.
சுவரொட்டி-அணைசுவர், ஓர்பூடு.
சுவர்க்கபதவி } தேவலோகம்.
சுவர்க்கபூமி }
சுவர்க்கம்-சொற்கலோகம், மூலை
சுவர்க்கருவிலி-ஓர்பாம்பு.
சுவர்க்கர்-வானோர்.
சுவர்க்கலோகம்-விண்ணுலகம்
சுவர்க்கவீடு-மோக்கம்.
சுவர்க்கோழி-ஓர்வண்டு.
*சுவர்ச்சலை - சத்தமாதரிலொருத்தி, சூரியன்மனைவி.
*சுவர்ணகதலி-ஓர்வகைவாழை.
*சுவர்ணபிந்து-விட்டுணு.
சுவர்ணம்-சொன்னம்.
*சுவர்ணவர்ணன்-விட்டுணு.
*சுவர்ணவர்ணை-மஞ்சள்.
சுவர்தாங்கி-அணைசுவர்.
சுவர்த்தலம்-சுவர்.
சுவர்ப்பாம்பு } சுவர்ப்புடையன்.
சுவர்வணியன் }
சுவர்வைத்தல்-சுவர்கட்டுதல்.
சுவலை-அரசமரம்,

சுவலோகம்-மேலேழுலகினென்று.
சுவல்-குதிரைமயிர், தோண்மேல், பிடர், முதுகு, மேடு.
சுவவு-சுவர்க்கம், பறவைமூக்கு, முழுங்குதல்.
சுவறல் } வறளுதல், காய்தல், வற்றல்.
சுவறுதல் }
சுவற்பம்-சொற்பம், நெற்றி.
சுவற்றல்-குடித்தல்.
சுவற்றுதல் - குடித்தல், சுவறப்பண்ணுதல்.
சுவனன்-சந்திரன், சூரியன், தீ.
சுவன்னகாரன்-பொற்கொல்லன்.
சுவன்னயூதி—செப்புமல்லிகை.
சுவா-நாய்.
சுவாகசம் } கிளி.
சுவாகதம் }
சுவாகா - அக்கினிதேவி, மந்திரமுடிவினென்று.
சுவாகாசகந்தி- இத்தி.
சுவாசகம்-கிளி, சவட்டுமண், பேராமுட்டி, விஷமுட்டி.
சுவாசகாசம்-ஓர்நோய்.
சுவாசக்குத்து-ஓர்நோய்.
சுவாசங்கட்டியேற்றல்- பிராணவாயுவைச் சுழிமுனைநாடிவழியாய்ச்செலுத்துதல்.
சுவாசமடக்குதல்-பிராணவாயுவைக் கும்பித்தல்.
சுவாசம்-உயிர்ப்பு, சவட்டுமண், நல்லிருப்பிடம்.
சுவாசம்வாங்குதல்-பிராணவாயுவைப்பூரித்தல்.
சுவாசம்விடுதல்- பிராணவாயுவை யிரேசித்தல்.
சுவாசிசி—பாதிரிமரம்.
சுவாதந்திரியம்-சுதந்திரம்.
சுவாதம்-ஓர்நோய், சுவாசம்.
சுவாதி-சோதிநாள்.
சுவாதிட்டானம் - ஆறுதாரத்தொன்று, அஃது குய்யத்தானம்
சுவாதீனம்-சுயாதீனம்.
சுவாது-தித்திப்பு.
சுவாத்தியம்-சுகம்.
சுவாத்தியாயம்- எடாசிரியனுகப்படித்தகல்வி.
சுவாந்தம்-மனது.
சுவாபம்-இயல்பு.
சுவாபாவிகம்-தானுயிருத்தல்.
சுவாமி-அரசன், அருகன், உவாத்தி, கடவுள், கந்தன், குரு, சிவன், பொன்.
சுவாமிநாதன்-கந்தன்.
சுவாமிமலை-ஓர்மலை.
சுவாயம்பு-ஓர்மனு.
சுவாயம்புகம்- சிவாகமமிருபத்தெட்டினென்று.
சுவாரசம்-வெள்ளிலோத்திரம்.
சுவாரி- கப்பலின்பின்னணியம், சிவிகைமுதலியயானம்.
சுவார்த்தம்-இயல்பாயுள்ளது, சுயதிரவியம்.
சுவார்த்தவனுமானம் - இயல்பனுமானம், சுயமதிப்பு.
சுவாவித்தல்-சொலித்தல், பற்றியெரிதல்.
சுவானம்-நாய்.
சுவானுபவம்-சுகவனுபவம், சுயவனுபோகம்.
சுவானுபூதி-தெய்வவருள், தெய்வவறிவு.
சுவானுபூதிகம்-சுயமுயற்சியாற் பெற்றுக்கொண்டவறிவு.
சுவி-இத்திமரம், துளசி.
சுவிகரித்தல்-அநுபவித்தல், தனதாக்கல், வழங்குதல்.
சுவிகாரம்-சுவிகரிப்பு.
சுவிகை-கச்சோலம், கள்.
சுவிக்கிரதம்-வீரம்.
சுவிசட்சணம்-பேரறிவு.
சுவிசாலம்-விசாலம்.
சுவிசேடகன் - சுவிசேஷம் போதிப்போன், நற்செய்திசொல்வோன்.
சுவிசேஷம்-நற்செய்தி.
*சுவிதல்லம்-அந்தப்புரம்.
*சுவிதன்-அரசன்.
சுவிகரச்சுதன்-சுவிகாரபுத்திரன்.
சுவிகரம் } சுவிகாரம்.
சுவிகாரம் }
*சுவீரியம்-இலந்தைக்கனி
*சுவேசம்-வெண்கரும்பு.
சுவேச்சை-தன்னிச்சை.
சுவேதகம்-சவரிலோத்திரம்.
சுவேதகாண்டம்-வஞ்சிக்கொடி.
சுவேதசம்-வேர்வையிற்பிறப்பன.
சுவேதசாரம்-நாணற்புல்.

சுவேதத்தீவு-ஓர்தீவு.
சுவேதமூலம்-சாரணை.
சுவேதம்-நாணல், மாவிலிங்கமரம், வற்றி, வியர்வை, வெண்மை, வெள்ளி.
சுவேதவராககற்பம் - விட்டுணுபன்றியாகவந்தகற்பம்.
சுவேதவராகமூர்த்தி-விட்டுணு.
சுவேதவனப்பெருமாள்-மெய்கண்டதேவர்.
சுவேதவனம்-திருவெண்காடு.
சுவேதவாகனன்-அருச்சுனன்.
சுவேதாசுவதரம்- உபநிடதம்முப்பத்திரண்டினொன்று.
சுவை-இரசம், இனிமை, ஓரலங்காரம், மெத்திலைபோகன், சுவையென்னேவல்.
சுவைத்தல்-உண்டல், உருசித்தல்.
சுழங்குதல்-சுழலுதல்.
சுழலமாடுதல்-சுற்றுதல்.
சுழலன்-எத்தன்.
சுழலாவிரை-ஓர் ஆவிரைச்செடி.
சுழலுதல்-கலங்குதல், சுற்றுதல்.
சுழலையாடுதல்-சோருதல்.
சுழல் - காற்றாடி, சுழலென்னேவல், சுழல்வு.
சுழல்காற்று-சூறைக்காற்று.
சுழல்நோய்-ஓர்நோய்.
சுழல்படை-வளைதடி.
சுழல்வண்டு-ஓர்வண்டு.
சுழல்வு-சுழற்சி.
சுழற்சி-கலக்கம், சுற்று.
சுழற்றல்-திருகிருப்பு, சுற்றியாட்டல்
சுழற்றி-கருவண்டு, சுழற்சி.
சுழற்று- சுழற்சி, சுழற்றென்னேவல்
சுழற்றுதல்-சுழலச்செய்தல், சுற்றுதல்.
சுழாரை-பொன்னுவிரை.
சுழி-இலக்கணைச்சுழி, உரோமச்சுழி, கபடம், சுழியென்னேவல், நீர்ச்சுழிமுதலியன, மூர்க்கம், விந்து.
சுழிகுளம் - சித்திரக்கவியினொன்று, அஃது நாலடியுஞ்சுற்றிவாசிக்கினுஞ் சரிவரத்தொடுக்குங்கவி.
சுழிகை-ஓர்தலம், கள், சுருள், சுழிதல்.
சுழிக்காற்று-சூறைக்காற்று.
சுழிக்குணம்-சுழித்தனம்.
சுழிக்குதல்-சுருட்டுதல், சுற்றிவாங்குதல், வட்டமிடுதல்.
சுழிதல்-கலங்கல், சுழித்தல்.
சுழித்தல்-எழுச்சி, சுழிக்குதல்.
சுழித்தனம்-கபடபுத்தி.
சுழித்துவாங்குதல் - உள்ளேயிழுத்தல்.
சுழிப்பு-சுழித்தல், தொட்டம்.
சுழிப்புத்தி-கபடத்தனம்.
சுழிமழை- திக்குத்திச்சாய்ப்பெய்யும் மழை.
சுழிமாந்தம்-ஓர்நோய்.
சுழிமின்னல்-பகிர்விடும்மின்.
சுழிமுனை-மூலாதாரத்திலிருந்து உச்சித்துவாரம்வரைக்குநிற்கும்நாடி.
சுழியச்சு-தட்டார்கருவியினொன்று.
சுழியப்பேசுதல்-குத்திரமாய்ப்பேசுதல்.
சுழியல்-ஆண்பெண்மயிர், சுருள்.
சுழியன்-வஞ்சகன்.
சுழியாணி
சுழியாணிக்கட்டை } கதவுநிற்குங் குழிக்குற்றி.
சுழியாணிக்கதவு - குழிக்குற்றியினிற்குங்கதவு.
சுழியோடுதல்-நீரிலுருவித்தாழ்தல்.
சுழுத்தி -மயக்கமானநித்திரை, மூன்றுமவத்தை, அஃது இதயத்தானம்
சுழுந்து-சுளுந்து.
சுழுமுனை-சுழிமுனை.
சுளகு-முறம், விசாகநாள்.
சுளகுப்பின்னல்-ஓர்வகைப்பின்னல்.
சுளாவுதல்-சுலாவுதல்.
சுளி-புளியாரை.
சுளிகை-முருங்கை.
சுளிக்கு-ஊன்றுகோல்.
சுளிதல்-கோபித்தல்.
சுளித்தல்-கோபித்தல், சினக்குறிப்பு
சுளிப்பு
சுளிவு } சினக்குறிப்பு, சினம்.
சுளுகன்-உபாயப்புத்திகாரன்.
சுளுகு-உபாயம்.
சுளுகோதகம்-சிறங்கைநீர்.
சுளுக்கு-உளுக்கு.
சுளுக்குதல்-உளுக்குதல்.
சுளுந்து-சுள்.
சுளுவு-சலக்கரணை, சுலபம்.
சுளை - பலாக்காய் முதலியவற்றின் சுளை.

சுள்-அற்பம், கருவாடு, சூள், மெல்லிது.
சுள்ளக்கம்-கோபம்.
சுள்ளக்கன்-கோபி.
சுள்ளம்-கோபம்.
சுள்ளலன்-நல்லாடி.
சுள்ளலி-உயரத்துக்குத்தக்க பருமையற்றது, பருமையற்றவள்.
சுள்ளல்-சுள்ளி, பருமையற்றது.
சுள்ளாக்காய்-மிளகுகாய்.
சுள்ளாணி-மெல்லியவாணி.
சுள்ளாப்பித்தல்-அடித்தல், உறைத்தல், எரிதல், குடிகொட்டல், வீசுதல், வேகங்கொள்ளல்.
சுள்ளாப்பு-உறைப்பு, சீக்கிரம், வெப்பம்.
சுள்ளி-அனிச்சமரம், ஆச்சாமரம், சிறுவிறகு, ஞாழல், மயிர்க்கொன்றை, மாமரம்.
சுள்ளிடுதல்-உறைத்தல், நோதல்.
சுள்ளிடுவான்-ஓர்பூச்சி, மிளகுகாய்.
சுள்ளு-கோபம், சுள், வெப்பம்.
சுள்ளுப்பூச்சி-சுள்ளிடுவான்.
சுள்ளொறும்பு-கொள்ளியெறும்பு.
சுள்ளை-மட்கலஞ்சுடுசூளை.
சுறடு-வரண்டது.
சுறட்டலன்-முரடன், வறண்டவன்.
சுறட்டன்-முரடன்.
சுறட்டு-துறட்டு.
சுறட்டுத்தனம்-முரட்டுத்தனம்.
சுறட்டுப்பண்ணுதல் - முரண்டுபண்ணுதல்.
சுறட்டுப்பிடி-முரட்டுப்பிடி. [ப்பிடி.
சுறட்டுவலி-முறண்டல்வலி, முரட்டு
சுறட்டை-பசையற்றுறண்டினது.
சுறணம்-கரணை.
சுறண்டி-ஓர்கரண்டி, கவர்பவன், தூண்டிவிடுபவன்.
சுறண்டிவிடுதல்-மூட்டிவிடுதல்.
சுறண்டு-கோள், சருவல், சுறண்டென்னேவல்.
சுறண்டுதல்-கவர்தல், சருவுதல், தூண்டிவிடுதல், புறண்டுதல்.
சுறவம் } சுறு.
சுறவு }
சுறு-மகரமீன், மகரராசி.
சுறுக்கவடி-ஓர்விளையாட்டு, மதியற்கூடம்.
சுறுக்களிறு-ஆண்சுறு.
சுறுளம்-கதி, கோபம்.
சுறுரெனல்-ஒலிக்குறிப்பு, விரைவுக்குறிப்பு.
சுறுக்கன்-சுறுக்குள்ளது, சுறுக்குள்ளவன்,
சுறுக்கு-கடு, கூர்மை.
சுறுக்கெனல்-விரைவின்குறிப்பு.
சுறுசுறுத்தல்-சுறுசுறுப்பு.
சுறுசுறுப்பு-விரைவு, வேகம்.
சுறுசுறெனல் - சினக்குறிப்பு, விரைவின்குறிப்பு.
சுறுதி-சுறுசுறுப்பு.
சுறை-கொந்தான்.
சுரோணிதம்-சுரோணிதம்.
சுரோணிதவழலை-இந்துப்பு.
சுற்பம்-செம்பு.
சுற்றத்தார்-இனத்தார், துணைவர், பரிசாரகாரர்.
சுற்றந்தழால்-இனந்தழுவியிருத்தல்.
சுற்றம்-அரசர்க்குத்துணையிலொன்று, உறவு.
சுற்றல்-சுற்றுதல்.
சுற்றளவு-புறஅளவு.
சுற்றிக்கொள்ளுதல்-கவர்தல், சிக்குப்படுதல், சூழ்ந்துகொள்ளுதல்.
சுற்று-உழற்சி, கயிறுமுதலியசுற்றுஞ்சுற்று, கவர்தல், சுருள், சுற்றளவு, சுற்றுப்புறம், சுற்றென்னேவல், மதில், மதிற்சுற்று, வட்டமாயோடல்.
சுற்றுக்கட்டு-எழுத்துக்கூட்டிக்கட்டியெழுதல், வீடுகளின்புறக்கட்டு.
சுற்றுக்கோயில் - சுற்றுத் தேவதைகோயில்.
சுற்றுச்சுழற்சி - சுற்றுத்திரிபு, மாறுபாடு.
சுற்றுதல்-கவர்தல், சுருட்டுதல், சூழுதல், நூன்முதலியசுற்றுதல்.
சுற்றுப்படாகை-அயற்கிராமம்.
சுற்றுப்பட்டு-சுற்றுப்புறம்.
சுற்றுப்பலி-திக்குப்பலி.
சுற்றுப்பிராகாரம-கோயின் முதலியவற்றின்வீதி.
சுற்றுப்புறம்-அயல்.
சுற்றுப்பூசை-திக்குப்பூசை.
சுற்றுமதில் } உப்பரிகை, அஃது இ
சுற்றுமதிள் } ராசசின்னத்தொன்று.

குற்றவழி-கோற்றபாலை.
குற்றவாளி-கல்வியுரி, சுவர்ப்புறத்து நிண்டவுத்திரம்.
தேர்ப்பார்-தேர்த்தட்டு.
தேர்முட்டி-தேர்விடுமிடம்.
தேர்மொட்டு-தேர்க்கூம்பு.
தேர்வடம்-தேரிழுக்குங்கயிறு.
தேர்வு-ஆராய்வு, தெளிவு.
தேலிக்கை-இலேசு.
தேவகம்-தேவிகம்.
தேவகம்மாளன்-தேவதச்சன்.
தேவகன்-கிருட்டிணன்பாட்ட
தேவகன்னி-தேவரம்பை.
தேவகா-தே...
*தே...டம்-தேவதாரி.
தேவகாதம்-மலைக்குகை.
தேவகாத்துமசை-கிருட்டிணன்றாய்.
தேவகாந்தாரி-ஓர்பண்.
தேவகாயனன்-கந்தருவன்.
தேவகானம்-தேவர்கட்குரியராகம்.
தேவகி-வசுதேவன்மனைவி.
தேவகிகுறு, தேவகிநந்தனன், தேவகிமைந்தன்-கிருட்டிணன்.
தேவகிருகம்-தேவாலயம்.
தேவகிரி-ஓர்மலை.
தேவகுமம்-காம்பு.
தேவகுண்டம்-தானுண்டானவூற்று
தேவகுரு-வியாழபகவான்.
தேவகுருவஞ்சம், தேவகுருவம்-போகபூமியாதிதென்று.
தேவகுலம்-கோவில்.
தேவகூத்தியர்-தேவரம்பையர்.
தேவகெந்தம்-குங்குலியம்.
தேவகோயில்-தேவாலயம்.
தேவக்கிரியை-ஓர்ராகம்.
தேவசபை-தேவகூட்டம்.
தேவசாட்சி-ஆணை,தெய்வமுன்னி
தேவசாயுச்சியம்-தேவனுடனொன்றுத்தல்.
தேவசிகிச்சகன்-தேவமருத்துவன்.
தேவசிகிருதம்-தெய்வத்திற்குச்சேர்ந்தது.
தேவசிருட்டை-மதுபானம்.
தேவசுருதன்-தேவன், நாரதன்.
*தேவசேகரம்-தவனம்.
தேவசேனாபதி-குமரன்.
தேவசேனை-இந்திரன்மகள், தேவகூட்டம்.
*தேவச்சந்தம் - நூறுசரமுள்ள முந்தாரம்.
*தேவடன்-சிற்பி.
தேவடியாள்-தேவதாசி, வேசி.
தேவதச்சன்-விச்சுவகன்மா.
தேவதத்தம்-அருச்சுனன்கைச்சங்கு
தேவதத்தன்-ஒட்டமுமிளைப்பும்வார்வும் வருவிக்கும்வாயு.
*தேவதத்தாக்கிரசன்-புத்தன்.
தேவதத்துவம்-தெய்வவல்லபம்.
தேவதரு-கற்பகம், மந்தாரம்.
தேவதாகாரம்-கோவில்.
தேவதாசி-தேவடியாள்.
தேவதாடம்-இராகு, தீ.
தேவதாதிபன்-இந்திரன்.
தேவதாயதனம்-கோவில்.
தேவதாயோக்கியம்-தெய்வீகம்.
தேவதாரம்-ஐந்தருவினொன்று, ஓர்...ரம், செம்புளிச்சை.
தேவதாரி-ஓர்மரம்.
தேவதாரு-செம்புளிச்சை, பஞ்சத...வினொன்று.
தேவதாருவனம்-ஓர்தபோவனம்.
தேவதாவியற்சனம் - விக்கிரகாரா...
தேவதாளி-ஓர்செடி.
தேவதானியம்-ஓர்தானியம்.
தேவதிபம்-கண்.
தேவதுந்துமி-தெய்வப்பறை.
தேவதூஷணம்-தெய்வநிந்தை.
தேவதூதர் - தெய்வதூதராகியனோர்.
தேவதூபம்-சாம்பிராணி.

தேவதேவன்-சிவன், பிரமன்.
தேவதை-தெய்வம், பேய்.
தேவத்துவம்-தேவதன்மை.
தேவநகர்-கோவில், தேவபட்டணம்.
*தேவநந்தி - இந்திரன் வாயில்காப்போன்.
தேவநிகாயம்-மோக்கம்.
தேவநிந்தகன்-தேவநிந்தனைகாரன்.
தேவநிதி - தெய்வத்தினுல்வருஞ்செட்சை.
தேவபதம்-ஆகாயம்.
தேவபதி-இந்திரன்.
தேவபத்தினி-தேவபாரி.
தேவபவனம் - அரசமரம், கோவில், மோக்கம்.
தேவபாஷை-தேவர்களின்பேச்சு,நாகரம்.
*தேவபூதி-கங்கை.
தேவபூமி-தேவலோகம்.
தேவபசு-காமதேனு.
தேவப்பிரதிமை-விக்கிரகம்.
தேவப்பிரமா-நாரதன்.
தேவப்பெண்-தேவஸ்த்ரீ.
தேவமஞ்சரம்-கிருட்டினளுபரணம்.
தேவமணி-அகன்மணி, கிருட்டினளுபரணம், சிவன்.
தேவமாசம் - கருப்பமுண்டான எட்டாம்மாதம்.
தேவமாதா } அதிதி.
தேவமாதிரு } அதிதி.
*தேவமாநகம்-கௌஸ்துபமணி.
தேவயாத்திரம்-திருவிழா.
தேவயானம் - தேவவாகனம், விமானம்.
தேவயானை-சுக்கிரன்மகள்.
தேவயோனி-தேவப்பிறப்பு.
தேவரங்கம்-பணிப்புடைவை.
தேவரதம்-தேவயானம்.
தேவரம்பை-தேவப்பெண்.
தேவரன்-கொழுந்தன்.
தேவ்ராசன்-இந்திரன்.
தேவராட்டி-சன்னதகாரி.
தேவராதன்-ஓரரசன்.
தேவராளன்-சன்னதகாரன்.
தேவர்-சுரர்.
தேவலகன்-பூசாரி.
தேவலதை-அடுக்குமல்லிகை.
தேவலன்-ஓர்முனி, கொழுந்தன், சன்மார்க்கன், பார்ப்பான்.
தேவலோகம் -சுவர்க்கம்.
தேவவணக்கம்-தேவவழிபாடு.
தேவவத்திரம்-அக்கினி.
தேவவருடம்-தேவாண்டு.
தேவவருணனை-தெய்வப்புகழ்ச்சி.
*தேவவல்லபம்-சுரபுன்னை.
*தேவவர்த்தகி-விசுவகர்மா.
தேவவாக்கியம்-தேவவசனம்.
தேவவிரதன் - தேவனைவழிபடுவோன், வீடுமன்.
தேவவிருட்சம்-ஓர்மரம்.
தேவவுணவு-அமுதம், அவிர்ப்பாகம்.
தேவவைத்தியம்-சிந்தூரவைத்தியம்.
தேவளம்-கோவில்.
தேவனம்-அழகு, ஒளி, சூதாடுகருவி, தாமரை, துக்கம், துதி, தோழி, நந்தனவனம், பொழுதுபோக்கு.
தேவன்-அரசன், அருகன், ஈட்டிக்காரன், கடவுள், கொழுந்தன், பரிசைக்காரன், மடையன்.
தேவாங்கு-ஓர்மிருகம்.
தேவாசனம்-தேவபத்திராசனம்.
தேவாசிவன்-கோவிற்பணிவிடை செய்யும் பிராமணன்.
தேவாசுவம்-இந்திரன்குதிரை.
தேவாண்டு-தேவராண்டு, அஃது முந்நூற்றறுபத்தைந்து வருஷங் கொண்டது.
தேவாதி-கடவுள்.
தேவாதீனம்-தெய்வத்திற்குரியது.
தேவாத்திரம்-தேவர்களாற்கொடுக்கப்பட்ட அம்பு.
*தேவாத்துமா-அரசமரம்.
தேவாபீட்டை-வெற்றிலை.
தேவாமுதம்-தேவர்கள்பருகுமமுதம்
தேவாயதனம்-கோவில்.
தேவாயுதம்-மழைவில்.
தேவாரம்-ஓர் திருப்பாடல்.
தேவாராதனை-தேவவழிபாடு.
தேவாலயம் - கோயில், தேவபதவி மேருகிரி.
தேவாவாசம்-அரசமரம், கோவில்.
தேவானுட்டிப்பு-தேவவணக்கம்.
தேவான்னம்-நைவேத்தியவமுது.
தேவி-அரசி, காளி, தலைவி, துர்க்கை, தேவப்பெண்,பதுமினிப்பெண்,பார்வதி, மனைவி.
*தேவிகை-ஊமத்தை, ஓர்நதி.

தேவிகோட்டம்-காளிகோவில்.
தேவிபட்டினம்-ஒரூர்.
தேவிமுத்திரை-கால்மிகைபடிகம்.
தேவிரு - கொழுந்தன, முந்தினகண
ருதேவிலன்-தார்மிகன். [வன்.
தேவிகம்-தெய்விகம்.
தேவெக்கியம்-மமம்.
தேவெயியம்-மிருகப்பதி.
தேவெர்தனம்-தெய்வேர்தனம்.
தேவெந்திரன்-தேவராசன்.
தேவை-அவசரம், ஒரூர், வேண்டுந்த
ன்மை.
தேவோக்கிதம்-வெளிப்படுத்தல்.
தேவோத்தியானம்-தேவகா.
தேளி-கேளித்தேங்காய், திரளிமீன்,
தேட்கெண்டை, தேள்.
தேள்-கனுடநாள, ஓர்செந்து, விருச்
சிகவிராசி.
தேறகம்-தேறை.
தேறலர்-பகைவர்.
தேறல்-கள், தங்கல், துணிதல், தே
றுதல், தேன், நிச்சயம.
தேறார்-அறிவிலோர், பகைவர்.
தேறு-சத்தம், தேறென்னேவல், தே
ற்றுமரம், நிச்சயம், மஞ்சள்முதலிய
வற்றின்றேறு.
தேறுகடை-நிர்மாணம்.
தேறுதல்-தேறுதல்.
தேறுதல் - அதிகப்படுதல், துணிதல்,
அன்பக்கிர்தல், தெளிதல், நம்புத
ல், விறைத்தல்.
தேறுநர்-சேர்ந்தோர், நம்பினோர்.
தேறை-ஓர்மீன்.
தேற்றம்-அதிகப்படல், கருமமுடிக்கு
ந்துணிவு, திடன், தெளிவு, நிச்சயம்.
தேற்றரவாளன் - திடப்படுத்துகிறவ
ன், திடனுடையோன்.
தேற்றரவு-திடப்படுத்துகை, தெளிவு.
தேற்றல் } அறிவித்தல், தீர்த்தல்,
தேற்றுதல் } தேறப்பண்ணுதல்.
தேற்று-ஓர்மரம்.
தேற்றார்-அறிவிலார், பகைவர்.
தேனம்-சமுத்திரம்.
தேனர்-அசுரர், திருடர்.
*தேனிகை-கொத்துமல்லி.
...ரியோன்-தேனீ.
...ட்டு } தேன்கூடு.
...ல் }
தேனீ-தேன்கூட்டுமீ.
தேனு-எருமை, களவு, குத்திர
வப்பசு, பசு.
தேனுகருதலன்-திருட்டினன்
தேனுகன்-ஓரசுரன்.
தேனுகா-தேனுகை, பாற்பசு, , குவ
யானை.
தேனுகாதத்தம்-பசுப்பால்.
தேனுகாரி-திருட்டினன்.
தேனுமுத்திரை-ஓர்முத்திரை.
தேன்-கள், பெண்வண்டு, மது, ...
டு, வாசனை.
தேன்கடல்-சத்தசமுத்திரத்தொரு...
தேன்கதலி-ஓர்வாழை.
தேன்குழல் ஓர்பணிகாரம்.
தேன்கூடு } தேன்வதை.
தேன்கூண்டு }
தேன்வதை-தேனுறை.
தேன்தோடை-ஓர்தோடை.

தை

தை-ஒரெழுத்து, ஓர்மாதம், தையெ
ன்னேவல், பூசநாள், மகரராசி.
தைசசம்-உலோகம், நெய், பலம்.
தைசசாவர்த்தினி-உலோகமுருக்குங்
குகை.
தைசதம் - மகரராசி, மூவாய்காரத்
தொன்று.
தைதம்-விரனுனி.
தைதல்-அலங்கரித்தல்.
தைதிலம்-காண்டாமிருகம், தைதலம்
தைதுலம் } கழுதைக்கரணம்.
தைதுலை }
*தைதேயர்-இராக்கதர்.
தைத்தல்-அடைத்தல், அறைதல், ...
ணைக்குப்பூட்டுதல், தையல்செய்த
ல், படுதல், பொருத்துதல்.
தைத்தியகுரு-சுக்கிரன்.
தைத்தியசூதவன்-வருணன்.
*தைத்தியநிசூதநன்-விட்டுணு.
தைத்தியபுரோகிதன் } சுக்கிரன்.
தைத்தியமந்திரி }
*தைத்தியமதநம்-காவேச்செடி.
தைத்தியமாதரு-திதி.
தைத்தியயுகம்-சதுர்யுகங்கொண்டகி
தைத்தியர்-அசுரர்.
தைத்தியாகோராத்திரம்-ஓர் வருட
அஃது அசுரர்க்கோரிராப்பகல்.

திருமால்.
'ச்சிவிக்குருவி.
ன்-இரண்டாம் வேதாவு

ம-இரண்டாம்வேதம், உப
பத்திரண்டினுென்று.
ளிமை, நினத்துவம்.
-லாடு, தையற்காரன்.
தயல்செய்தல், பொருத்து

ம் - தைமாதத்துப் பூசத்திரு

ர-சட்டை, தைத்தவுடுப்பு.
அழகு, தைப்பு, பெண்.
ம்-தைவறப்பு.
ம்-திடம், பலம்.
லட்சுமி - அட்டலட்சுமிகளி
ாருத்தி.
ரகிட்டம்-எண்ணெய்அடிமண்டி
ச்காப்பு-எண்ணெய்க்காப்பு.
ரக்காரன்-எண்ணெய்வாணியன்.
லசௌரிகை-வெளவால்.
ரலபர்ணிகம்-வெண்சந்தனம்.
சலபிபீலிகை-செவ்வெறும்பு.
லபீதம்-தயிலபீதம்.
மாட்டுதல் - எண்ணெயபிஷேச
ன்னல்.
லமாலி-திரி.
திடுதல் - எண்ணெய்பொருத்து

திறக்குதல்-எண்ணெய் வடித்த
ம்-தயிலம். [ல்.
ரம்புகை-தரிஞ்சில்.
கன் } வாணியன்.
கம்-எள்விளைநிலம்.
ருமம்-தகனப்பலி.
-தேவதை.
கோவிதன்-தைவ பண்டிதன்.
திபம்-கண்.
யம்-பாக்கியம்.
ல்-தடவல்.
லசகன்-சோதிடன்.
ணி-தேவவாக்கு.
ரி-சனி, நமன்.
தேவச்செயலாய்ச் சம்பவி

சுதவேளை.

தைவிகம்-தெய்வத்தன்மை, தெய்வ வழியாய்வருவது.
தைவேவத்தனம்-தேவேத்தனம்.
தைவேளை-ஓர்பூடு.
தைனம்-தினம்.
தைனியம்-சிறுமை, தாழ்மை, பொருளாசை.

தொ

தொகல்-கூடல், சுருங்கல்.
தொகாநிலை-வேற்றுமைமுதலிய விரிந்துநிற்பது.
தொகுதல்-கூடுதல், சுருங்குதல், நெருங்குதல்.
தொகுதி-அளவு, கூட்டம், பகுதி.
தொகுதிப்பெயர்-குழூஉக்குறிப்பெயர்
தொகுத்தல்-அளவுபடுத்தல், ஒழுங்காக்குதல், கூட்டல், சம்பாதித்தல், சுருக்குதல், தொக்குநிற்கச்செய்தல்
தொகுத்துக்காட்டல்-தொகையாகக் காண்பித்தல்.
தொகுத்துச்சுட்டல் - தந்திரயுத்தியினென்று, அஃது பலவுந்தொகுத்துச்சொல்லுதல்.
தொகுபுலப் பொருட்டற்குறிப்பு-ஓரலங்காரம், அஃது உபமேயவுபமானங்கட்குரிய தருமவிடயந் தொக்குநிற்பது.
தொகுப்பு-தொகுத்தல்.
தொகை-கணக்குவகைநான்கினென்று, கூட்டம், தொக்குநிற்றல், மொத்தம்.
தொகைகட்டுதல் } தொகுத்தல்,
தொகைக்கட்டுதல் } முடித்தல்.
தொகைக்காரன்-பணக்காரன்.
தொகைச்சூத்திரம்-பலதிறப்பொருள்களையும் வேறுவேருகத் தொகுத்துச்சொல்லுஞ்சூத்திரம்.
தொகைத்தல்-தொகைப்படுத்தல்.
தொகைநிலை-தொக்குநிற்குநிலை.
தொகைநிலைச்செய்யுள்-ஓர்பிரபந்தம், அஃது பொருளானேனும் அளவானேனுந் தொகுத்துக்கூறப்படுவது.
தொகைநிலையுருவகம்-மாட்டேற்றுச் சொற்றொகுத்துக் கூறப்படு முருவகம்.
தொகையூட்டுதல்-கணக்குச் சரிக்கட்டுதல்.

தொகைப்பொருள்-முதலிற் பலகாரணங்களான் விரித்துச் சொன்ன பொருள்களை முடிவிற் சுருக்கிச் சொல்லல்.
தொகைமோசம்-பிழை, மறதியினால் வந்தது.
தொகையாக்குதல்-தொகைப்படுத்தல்
தொகையிறக்குதல் - தொகையாக்குதல்.
தொகையுவமம்-உவமான வுபமேயங்களின் உவமவுருபும் பொருத்தன்மையுந் தொக்குநிற்கச் சொல்லப்படுமணி.
தொகைவிரி-தொகுத்தலும்விரித்தலுமாயிருப்பது.
தொக்கடம்-தொக்கடி.
தொக்கடவு-குறுக்குவழி.
தொக்கடி-குடலை.
தொக்கடை-தரித்திரம்.
தொக்கட்டி-தொக்கடி.
தொக்கம்-வழக்கு.
தொக்கார்-அடுத்தோர், தோழர்.
தொக்கு-உடல், தோல், அஃது பஞ்சவிந்திரியத்தொன்று.
தொக்குதொக்கெனல்-ஈரடுக்கொலிக்குறிப்பு.
தொக்குநிற்றல்-உருபுமுதலிய சுருங்கிநிற்றல்கள்
தொங்கணி - ஆபரணத்தின் கடைப்புணர்வு.
தொங்கல்-ஆண்மயிர், ஆபரணக்கடைப்பூட்டு, காதணி, குதித்தல், தங்கல், ஆக்கங்கள், தொங்குதல், பீலிக்குஞ்சம், பூமாலை, மயிர், மயிற்றோகை, மூர்தல், முலைமூடு முத்தரீயம், வெண்குடை.
தொங்கன்-கள்வன்.
தொங்கி-கன்னி.
தொங்கிசம்-அழிவு, நட்டம்.
தொங்கு - தொங்குதல், தொங்கென்னேவல்.
தொங்குங்கல்-ஆட்டுக்கல்.
தொங்குதல்-குதித்தல், தங்குதல், அங்குதல்.
தொங்குபறிவு, தொங்குபொறி, தொங்குபொரிவு } ஆதாரமின்மை, பட்டும் படாமலிருத்தல்.
தொங்குபுழுகன்-மகாவிசம்பன்.

தொசக்கட்டுதல்-துவச…ங்கட்டுதல்.
தொசத்தம்பம்-கொடித்…தம்பம்.
தொசம்-துவசம்.
தொசாரோகணம், தொசாரோணம் } கொ…டியேற்ற…
தொசாவந்தி-ஓரிராகம்.
தொடக்கம்-ஆதி, செல்வம், … அவ…ம், வருக்கம்.
தொடக்கு-துடக்கு.
தொடக்குதல்-துடக்குதல்.
தொடங்கல், தொடங்குதல் } முயலல்.
தொடங்கு-தொடங்கென்னே… …லங்கு.
தொடராமுறி-விடுதலைப்பத்தி…ர
தொடரி-ஓர்செடி.
தொடரெழுத்து-நிலைமொழியீ…ற் …ம் வருமொழிமுதலையுந் த… …குமெழுத்து.
தொடர்-கோவை, சங்கிலி, தொ… …றொன்னேவல், தொடர்பு, நா…ல், …ஞ்சிநூல், பழமை, பிசின், பூமு… வாசம், விலங்கு.
தொடர்ச்சி-உரிமை, ஒழுங்கு, தொ…ர்பு, பற்றுதல், பூத்திரன், முய…
தொடர்ச்சொல்-வாசகம். [வழக்கு…
தொடர்ச்சொற் புணர்த்தல்-த… …த்தியினென்று, அஃது ஒன்றந்… …ன்று சம்பந்தமுடைய சொற் சேர்த்துவைத்தல்.
தொடர்தல் - கட்டல், தேடல், … போதல், பின்றொடர்தல், மு… யாயிருத்தல், வழக்கிலேயன…
தொடர்நிலைச் செய்யுள் - பெ… …னேனுஞ் சொல்லானேனும் பொருளானேனுந் தொடர்… …கும்பாடல்.
தொடர்ந்தார்-மித்திரர்.
தொடர்ந்தேற்றி-தொடர்ச்சி.
தொடர்ந்தோர்-மித்திரர்.
தொடர்பின்மையணி - ஓரலங்… அஃது காரணமோரிடத்தி… காரிய மற்றோரிடத்துப் பி… …ச் சொல்லுதலும் ஒரிடத் து… தற்குரியதை மற்றோரிட த்து… …ய்தலும் ஒன்றைத்தொடங்கி… …குப் பகையாகிய மற்றொன்… செய்தலுமாம்.

டர்பு-உறவு, ஒழுங்கு, பிணைகம், சர்மானம், தொடர்ச்சி, பழமை, ர, பாட்டு, முறைமை.
டர்புயர்வுநவிற்சியணி-ஓரலங்காரம், அஃது சம்பந்தமில்லாதிருப்பச் சம்பந்தத்தைக் கற்பித்தலும் சம்பந்தமிருக்கச் சம்பந்தமில்லாமையைக் கற்பித்தலுமாம்.
தொடர்ப்பாடு-தொடர்ச்சி.
தொடர்முழு துயவமையணி-ஓரலங்காரம், அஃது முன்வாக்கியங்களுள்ளும் பின்வாக்கியங்களுள்ளுமொரு பொதுத் தருமத்தைச்சொல்லுதல்.
தொடர்மொழி-புணர்மொழி.
தொடர்வு-தொடர்பு.
தொடலி-தொடரி.
தொடலை-மகளிர்விளையாட்டு, மாலை, விளையாட்டு.
தொடல்-சாதல், தீண்டல், தோண்டல், பிடித்தல், புசித்தல்.
தொடி-ஒருபலம், கங்கணம், கைவளை.
தொடிசு-உடந்தை.
தொடு-அளுப்பு, தொடுவென்னேவல், தோண்டல், தோட்டம், பரிசம், வஞ்சம், வயல்.
தொடுகடி-மேற்கடி.
தொடுகயிறு-தொடுவான்.
தொடுக்கம்-பொன்.
தொடுசு-உடந்தை.
தொடுதல் - அணிதல், இணைத்திருத்தல், உண்ணல், எய்தல், தீண்டல், தொடங்கல், தோண்டல், பிடித்தல்.
தொடுதலை-உதவி.
தொடுதோல்-செருப்பு.
தொடுத்தல்-அணிதல், அறிமுகமாதல், உருவாக்கல், கட்டல், கோத்தல், செலுத்தல், சேர்த்தல், தொடங்கல், பற்றல், பாத்தொடுத்தல், பிணைத்தல், பொருத்தல், வில்வளைத்தல், வைத்தல்.
தொடுத்து-தொட்டு.
தொடுபதம்-சோறு.
தொடுப்பு - கட்டு, கலப்பை, கூட்டு, கோவை, கோள், சங்கிலி, சேர்க்கை, தந்திரம், துவக்கம், பழக்கம், மரக்கொம்பு, வழக்கு, வெறும்புறங்கூறல்.
தொடுப்புக்கூர்ந்தி-ஓர்பட்டா.
தொடுவழக்கு-கள்ளவழக்கு.
தொடுவாய்-ஆறுங்கடலுஞ் சந்திக்குமிடம்.
தொடுவான்-அடிவானம், தொடுக்குங்கயிறு.
தொடுவிலங்கு-இருவரைத் தொடுக்கும் விலங்கு.
தொடுவு-கொல்லை.
தொடுவை-கூட்டாளி, தொடுத்திருவை, புதயானையைப்பழக்கும் உள்ள, வைப்பாட்டி.
தொடை - அம்பு, உத்திரத்தாங்குங் கட்டை, செய்யுட்டொடை, அஃது பலவடிகளிலேனும் பல்சீர்களிலேனுமெழுத்துக்களொன்றி வருவதாகுடை, தொடர்ச்சி, நாரி, பூங்கொத்து, பூமாலை, மதில், மாலை, வீணைமுதலியவற்றினரம்பு.
தொடையல்-பூமாலை, மாலை.
தொடைவாழை-ஓர்செடி, ஓர்நோய்.
தொட்டப்பன்-தலைதொட்டபிதா.
தொட்டம்-துண்டுநிலம்.
தொட்டல்-தீண்டல், தோண்டல்.
தொட்டா-துவட்டா.
தொட்டாச்சி-தலைதொட்டமாதா.
தொட்டாட்டுமணியம் } குற்றேவல்
தொ[illegible]டுவேலை }
தொட்ட[illegible]ட்டாப்பு
தொட்டால்வாடி } ஓர்
தொட்டாற்சுருங்கி }
தொட்டாற்சிணுங்கி-சுண்டில்.
தொட்டி-காஞ்சொறி, தொண்டம், தொட்டில், வேலி.
தொட்டிச்சி-தொட்டியப்பெண்.
தொட்டிபாஷாணம்-ஓர்பாஷாணம்.
தொட்டியக்கரு-தொட்டியவித்தைக்குரிய நகமயிர்முதலியகரு.
தொட்டியம் - ஓர்தேசம், ஓர்பாஷை, ஓர்வித்தை.
தொட்டியர்-ஓர்சாதியார்.
தொல்டில்-தொட்டி.
தொட்டு-தொடங்கி, பற்றியெனச்சம்.
தொட்டுக்காட்டுதல்-சுட்டிக்காட்டுதல்.
தொண்டகம்-குறிஞ்சிப்பறை.
தொண்டமான்-ஓரரசன்.
தொண்டலம்-யானைத்துதிக்கை.

தொண்டன்-அடியான்.
தொண்டி-ஓர்பட்டினம், கள்.
தொண்டிச்சி-அடியாள்.
தொண்டு-அடிமை, ஒன்பது, ஓர்பூண்டு, தொழிலுள்ளான், பணி, பழமை.
தொண்டுசெய்தல்-பணிசெய்தல்.
தொண்டை - ஆதொண்டைச் செடி, கொவ்வைச்செடி, மிடறு, யானைத் துதிக்கை.
தொண்டைகம்முதல்-குரற்கம்முதல்.
தொண்டைக்கனப்பு-குரற்கனப்பு.
தொண்டைக்குழி-குரல்வளைக்குழி.
தொண்டை திறத்தல்-மிடற்றடைப்பு நீங்கல்.
தொண்டைநாடு - தொண்டைமண்டலம்.
தொண்டைப்புற்று-ஓர்நோய்.
தொண்டை யடைத்தல்-குரலடைத்தெ
தொண்டையடைப்பு-குரலடைப்பு.
தொக்க...வைத்தல்-சத்தமிட்டுக்கூ
தொக்கர்-
தொக்கு-உட
சவிந்திரியத் ...க்காரன்.
தொக்குதொக்... ரி, ஓர்மரம்.
...றிப்பு. ...மை, பூங்கொ
தொக்குமிற்றல்-உரு
...ரித்தல். ...முதன்...
தொ... முறையகெதிற்
...இரட்டித்தது, சலஞ்சாதித்தல், தொடர்பு, பழமை.
தொந்தயுத்தம்-தொடர்ந்தபோர்.
தொந்தரவு }
தொந்தனை } சோலி.
தொந்தறை }
தொந்தரோகம்-பழநோய்.
தொந்தவினை }
தொந்தார்த்தம் } பழவினை.
தொந்தி-தொந்தியென்னேவல், தொப்பை, வயிறு.
தொந்தித்தல்-இசைவுபிசகாதல், இரட்டித்தல், தொடர்தல்.
தொந்திப்பு - இரட்டிப்பு, தொடர்பு, பேதம்.
தொந்திவயிறு-தொப்பைவயிறு.
...ப்பாரம்-கொப்புளம், நெடுஞ்சப்பாத்து, பொட்டணம்.

தொப்பி - கள், குல்லா, தலையிட ...ப்பி, தாற்றுமடல், வாந்தி.
தொப்பிக்காரர்-தொப்பியிட்டுச் ...க்காரர்.
தொப்புத்தொப்பெனல்-ஒலிக்குறி
தொப்புள்-கொப்பூழ்.
தொப்பை-கொப்புளம், இன்மையிற்பருத்தது, தொந்தி.
தொம்பம்-கம்பக்கூத்திலொன்று.
தொம்பரம்-பந்தி, பேரில்லம்.
தொம்பர்-கழாய்க்கூத்தர்.
தொம்பரம்-பேரில்லம்.
தொம்பை }
தொம்பைக்கூடு } தானியங்களைச் சேமிக்குங்குதிர்.
தொம்மனை }
தொம்மை } மிகப்பருத்தது.
தொயில்-தொய்யில்.
தொய்தல்-இளைதல், இளைத்தல், தளர்தல்.
தொய்யகம்-தலைப்பாளை.
தொய்யல்-அகமகிழ்ச்சி, இளைத்தல், இன்பம், உழவு, சேறு, சோர்தல், துன்பம்.
தொய்யில்-உழுநிலம், ஓர்கிரை, சாந்தினாலுடலிலிடுங்கோலம்.
தொய்வு-இளைப்பு, ஈளை, சுவாசமுட்டு, தொய்தல்.
தொலி - உமி, தொலியென்னேவல், ...
தொலித்தல்-உமியுரித்தல், ...குத்துதல்.
தொலியல்-தொலிக்கப்பட்டது, தொலித்தல்.
தொலை-உவமை, தூலை, தொலையென்னேவல்.
தொலைதல்-கெடுதல், சாதல், நீங்குதல், முடிதல்.
தொலைத்தல் - அழித்தல், கொல்லல், சேதப்படுத்தல்.
தொலைவு-அழிவு, தோல்வி.
தொலைவெட்டு-வெகுதூரம்.
தொல்காப்பியக்குடி-ஓர்பட்டினம்.
தொல்காப்பியம்-ஓரிலக்கணநூல்.
தொல்காப்பியன்-ஓரிலக்கண நூலாசிரியன்.
தொல்லை-தொந்தரவு, பழமை.
தொல்வினை-பழவினை.
தொழல்-தொழுதல்.
தொழிலாளி-உத்தியோகத்தன், வேலைக்காரன்.

-தொழிலாளர்.
நியோகம், செயல், வி
றவிசேடம் - ஓரலங்கார
காரணமாகிய தொழில்
அதனாலாயகாரியம் வி
த்தல்.
ல்-காரியப்படுதல்.
வேலை.
ர்-தொழிலானுயபெயர்.
ம்-வியாபாரம்.
பதி, ஓர்நோய், அலங்கு
ழுமரம், தொழுவென்
சக்கூட்டம், பட்டி, மந்
அரவாட்டிப்பச்சை.
சாலக்காரர்.
-அந்தணர்.
ருணம்.
ப்.
வணங்கல்.
தொழுமரம்-உடு ... ி, பறவைக்
தொழும்பர்-அடிய
தொழும்பு-அடிமை,
தொழுவம்-பட்டி.
தொழுவர்-தொழிற்செய்வோர்,
தநிலமாக்கள்.
தொழுனை-ஓர்யாறு. [தல.
தொளதொளத்தல்-சோர்தல், தளர்
தொளதொளப்பு-சோர்வு, நெகிழ்வு.
தொளதொளெனல்-நடாட்டம், நெ
கிழ்தல்.
ரம்-தொள்ளாயிரம்.
சறு, தொளியென்னேவல்.
நதல்-நகைத்தக்கட்டல்.
ளுத்தல்-நகைதல்.
டுளை, துளை.
சேறு, தெப்பம்.
ளைத்தல், நெகிழ்வானது
-வடிந்தநாறு.
கிழ்ந்தசரீரமுள்ளது,

தொள்ளாடுதல்-த
*தொள்ளாமணி-ெ
மணி.
தொள்ளாயிரம்-ஒன்ப
தொள்ளி-குழைசேறு.
தொள்ளுதல்-துளைத்தல்
தொள்ளை-துளை, துளைய
ள், மரக்கலம்.
தொள்ளைக்காது-வடியற்கா.
தொறு, தொறுவு - அடிமை, கூட்ட
ழிற்பயில்வு, பசுக
ம், பொலிவு, மிகு.
தொறுத்தி-இடைச்சி.
தொறும்-தோறும்.
தொறுவர்-இடையர்.
தொறுவி-இடைச்சி.
தொறுவியர்-இடைச்சியர்.
தொற்று - ஏறுதல், ஒட்டு, தொற்றெ
ன்னேவல், பற்று, பொருந்து, மூ
லைக்கையோடணைத்தமரம்.
தொற்றுதல்-ஏறுதல், ஒட்டுதல், பற்
றுதல்.
தொற்றுத்தொடிசு-அற்பபிசகு.
தொற்றுவியாதி - ஒருவரிலிருந்துமற்
றொருவர்க்குவரும்வியாதி.
தொனி-ஒலி, தொனியென்னேவல்.

தொல.
தொன்ன.
தொன்றால்-
தொன்னை-இ
தபாத்திரம்.

தோ

*தோகம்-சிசு.
தோகசம்-பால்.
தோகதம்-வயா, விரு
தோகதவதி-கருப்பி
தோகம்-சிறு

ம்.
பவதி.
கு.
-பால்.
கு. பனங்கிழங்கில்வாற்
ன்மயிர், மயில், மயிற்
மன்முனை, வால், விருது
.
ம் - காதுக்குறும்பி, முகில்.
-அப்பாக்கு.
குமம்-காதிற்குறும்பி
கை-வில், முன்முனை, மேற்போ
[ர்வை.
தி-தோஷி.
ளை - அப்பவருக்கத்தி னென்று, அப்பவருக்கம்.
தோடகம்பிரக்கு } சொப்புளமான
தோடம்பிரக்கு } ரெக்கு.
தோஷகம்-பலக்கன்று.
தோடசம்-சொப்புளம், தாமரை.
தோடர்த்திரயம்-முப்பிணி, அவை வாத பித்த சேத்துமம்.
தோஷம் } இரவு, சத்தோஷம், பாவம்
தோடம் }
தோடயம-ஒர்கவி.
தோடி-ஒரிராகம்.
தோஷி-குற்றப்படுமாள்.

தோணிக்காரன்-சம்பா
தோணிதாங்குறால் - மர
தோணிசெலுத்தல்.
தோணித்துறை - எற்றித
முகம்.
தோணியோட்டு-தோ
தோண்டல்-தோண்டுத
தோண்டான்-கோளுய்.
தோண்டி-பானை.
தோண்டுதல்-அகழ்தல்.
தோண்மேல்-பிடரி.
தோதகத்தி-ஒர்மரம், ப
வன்.
தோதகமாடுதல்-மாறிய
த்தல்.
தோதகம்-தோசதம்
தோதகன்-வஞ்சகன்
தோதகி-வஞ்சகி.
தோதம்-பசுவின்
யாகுலம்.
தோதனம்-அ
தோத்திரம்.
தொட்ட
ட்டி.
தோத் டம் } இருகைமாறிச்
தோ புக்கரணம் } செவியைப்பிடிக்
இருகான்முடக்கி
விழுதல்.
தோப்பை-திண்மையின்றிப்பருத்தது
தோமம்-படை.
தோமரக்கிரகன்-தண்டபாணி.
தோமரதரன்-தண்டபாணி, தீ.
தோமரம்-இருப்புலக்கை, எறிப
கைவேல், டெருஞ்சவளம்
தோம்-குற்றம், பொல்லா.
தோயருசகம்-தவளை.
*தோயதம்-நெய், மேகம்.
*தோயதரம்-மேகம்.
தோயதி-கடல்.
*தோயதிப்பிரியம்-இல
*தோயநிதி-கடல்.
தோயப்பம்-தோசை
தோயமாபுரம்-

ள.
தான்று, அ
தான்று, த
கி, குழ்சுழியிரு
வெட்டியான்.
கு-ஒர்கிரக்கு.
ட } கைச்சிப்பு.
}
மை
டி பிறக்கை.
சேவநிதான், சேறு.
ள், மரக்கலம்.

396-402 விடுபட்டுள்ளன

த்திரநேமி-சந்திரன், துருவன்,
ட்டுறு.
த்திரபதவி-நட்சத்திரமண்டலம்
சத்திரபுருஷம்-ஓர்விரதம்.
த்திரமாலை-ஓர்கூத்து, ஓர்நூல்.
திரம் - பஞ்சாங்கவுறுப்பினொ
த்து, விண்மீன்.
வாணம்-ஓர்வாணம்.
த்திராகிருதி-வெண்சோளம்.
திரேசன் -சந்திரன்.
ந்திரன்- ஆவணிப்பூருவபக்கச்
த்திப்பிறை.
-ஆகடியம், கொரேம்.
-சரிமத்தி.
டை-ஓர்பண்.
அழிவு, கலைஞானமறுபத்து
தொன்று, கூத்து, கேடு, நி
ட்டம்.

பொ

நட்டோர்-உறவோர்.
நட்சாளன் - அரசர்க்குறுதிச் சுற்றத்
தொருவன், நண்பன்.
நட்பு-உறவு, சிநேகம், சுற்றம்.
நட்புக்கிரகம் - கிரகநிலையிற்றி னொ
ன்று.
நட்புத்தானம் - கிரகம்நட்புப்பெற்றி
ருக்குந்தானம்.
நட்புப்பண்ணுதல் } பட்சங்கா
நட்புவைத்தல் } ட்டல்.
நணந்தம்-சணல், புன்கு.
நணுகலர்-பகைவர்.
நணுகல்-கிட்டல்.
நணுகார்-பகைவர்.
நணுகுதல்-இணைதல், கிட்டல், சார்தல்
நண்டல்-பொங்கல்.
நண்டு-கற்கடகவிராசி, ஞெண்டு.
நண்டுக்கல்-ஓர்கல்.
நண்டுக்காற்கோரை-ஓர்கோரை.
நண்டுக்காற்புல்-ஓர்புல்.
நண்டுக்கொடுக்கி-நண்டின்முன்கால்.
நண்டுவாய்க்காலி-நட்டுவக்காலி.

*நதிவாரம்-தாரம்.
நதீனம்-கடல்.
நதுத்தல்-அவித்தல், கெடுத்தல், மலைத்தல்.
நத்தகம்-கந்தை.
நத்தபாகை-மையவரி.
நத்தபோசனம்-இராப்போசனம்.
நத்தமகன்-ஓர்வகைவேளாளன்.
நத்தமாடி-வேளாளர்.
நத்தமாலம்-புன்கமரம்.
நத்தமுகை-இரவு.
நத்தம்-இராத்திரி, இருள், கடிகாரஞ்சு, சங்கு, நடு, நத்தை, புன்கமரம், மூங்கு.
நத்தாசை-பேராசை.
நத்தார்வைத்தல்-தோணியை நங்கூரம்வைத்திருத்தல்.
நத்திமம்-நாணயம்போடப்பட்டது.
நத்து-ஓராபரணம், ஓர்பறவை, சங்கு, நத்தென்னேவல்.
நத்துதல்-விரும்பல்.
நத்துருவன்னைகாதம்-ஈயமணல்.
நத்தை-காநந

நந்தன்-ஓரரசன், இருட்டினவ
பர்தபாஷாணம், நந்தகோப
நந்தாத்துமசன்-இருட்டினவன்.
*நந்தாதனமனை-துர்க்கை.
*நந்தாப்பதம்-மோட்சம்.
நந்தாமணி-உத்தாமணி.
நந்தாவனம்-நந்தனவனட்
நந்தி-அட்டாதசவுபபுரா
று, இடபவிராசி, எருது, ஓர
ஓர்மயில், சிவன், சிறுபறை;
கான், நந்திதேவன், நாகம்,
நந்திகேசன்
நந்திகேசுரன்
நந்திகேச்சுரன் } இடபவிக் சிவனூர்தி; நந்திதேவ
நந்திகை - இந்திரனகர், நந்த
பாண்டம்.
நந்திதேவன்-சிவனது வா
காரன்.
நந்திப்பூ
நந்தி
*ந

நபி-பிர்க்கரிகி.
நபுஞ்சகம்-பேடு.
நபுஞ்சகலிங்கம்-அலிப்பால்.
நபுஞ்சகன்-பேடன்.
நபோககசம்-முகில்.
நபோகதி-அந்தரகதி.
நபோதுகம் } முகில்.
நபோதாமம்
நபோநதி-ஆகாயகங்கை.
நபோமணி-சூரியன்.
*நபோரஜம்-இருள்.
நபோரேணு-பரமாணு.
நபோலயம்-புகை.
நம-மந்திரமுடிவினொன்று,வணக்கம்
நமஸ்காரம்-நமற்காரம்.
நமசம்-இணக்கம்.
*நமசன்-அநுகூலன்.
*நமதம்-புகை.
*நமசிதன்-பூசிக்கத்தக்கவன்.
நமதன்-ஆண்டவன்.
நமருதல்-மறுதல்.
நமர்-சுற்றத்தார், நம்மவர்கள்.
நமள்-நம்மவள்.
நமற்கரித்தல்-வணங்குதல்.
நமற்காரம்-வணக்கம்.
நமன் - இயமன், சுற்றத்தான், நம்மவன்.
நமுசி-ஓரசுரன், மதன்.
நமுசிசூதனன்-இந்திரன்.
நமுடு-ஓர்நாரை, கிழுதடு.
நமுட்டுச்சிரங்கு-வேர்க்குரு.
*நமேரு - உருத்திராக்கம், புன்னைமரம்.
நமை - ஓர்மரம், சொறிவு, நமையென்னேவல்.
நமைச்சல்-தினவு.
நமைத்தல்-சொறிதல்.
நமைப்பு-சொறிவு.
*நமோகுரு-பிராமணன்.
நம்-சாரியை, நமது, (உம்) எல்லார் நம்மையும்.
நம்பகன்-சிர்பந்தபாஷாணம்.
நம்பல்-ஆசைப்பெருக்கம், நம்புதல்.
நம்பவன்-நம்மவன்.
நம்பன்-கடவுள், சிவன், நம்பிரான்.
நம்பாசு-அவநம்பிக்கை.
நம்பி-அகப்பொருளிலக்கணஞ்செய்தோன், அரசமாறைப்பார்ப்பானி ராக்கதமணஞ்செய்யப்பிறந்தகுட்டுேறலையருச்சிப்பான்,புருடரிற்சிறந்தோன், வேடுவராசன்.
நம்பிக்கை-நிசம், விசுவாசம்.
நம்பிக்கைகாரன்-நிசவான்.
நம்பிக்கைத்துரோகம்-இரண்டகம்.
நம்பிக்கைத்துரோகி-இரண்டகன்.
நம்பியான்-நம்பி.
நம்பு - நம்பென்னேவல், நாவல், விருப்பம்.
நம்புதல்-விசுவாசித்தல், விரும்பல்.
நம்பூரி-மலையாளப்பார்ப்பாரி லுயர்ந்தோர்.
நயகுணன்-நற்குணமுடையோன்.
நயக்கன்-நாய்.
நயச்சொல் - சிரித்துப்பேசல், முகமன்வார்த்தை.
நயத்தல்-அதிகப்படல், ஆசைப்பெருக்கம், சிறத்தல், சிநேகித்தல், நன்மைப்படல், பலன்படல், பின்செல்லுதல், மதித்தல், மலிவாதல், விரும்பல்.
*நயநத்திரயன்-சிவன்.
*நயகௌஷதம்-கண்மருந்து.
நயந்துகேட்டல்-இரந்துகேட்டல்.
நயந்துசொல்லுதல் -பலன்படப்பேசல், பாராட்டுதல்.
நயந்தோர்-சிநேகிதர்.
நயபோசனம்-நல்லாகாரங்[illegible]தல், அஃது புண்ணியமேழிலொன்று
நயப்பாடு-பலன், மேம்பாடு.
நயப்பித்தல்-கனப்படுத்தல், சந்தோஷப்படுத்தல்,சம்மதப்படுத்தல், சிறப்பித்தல், மலிவாக்கல்.
நயப்பு-அன்பு, ஆசை, இலாபம், சந்தோஷம்.
நயப்புணர்வு-கண்ணோட்டம்.
நயப்புரை-விருப்புமொழி.
நயம்-அதிகம், அரசாட்சி, இன்பம், உபசாரம், சரி, நடத்தல், நன்மை, நீதி,பலன், மலிவு, மேன்மை, வேதசாத்திரம்.
நயம்பயம்-நன்மைதின்மை.
நயம்பேசல் - இன்சொற்சையுண்டாதல்.
நயவர்-சிநேகிதர்.
*நயவார்த்தை-பணிவானசொல்.
நயவான்-ஆதாயக்காரன், நயப்புள்ளோன்,நல்லுபகாரி,[illegible]

*நயவிசாரதன் - நீதிசாத்திரமறிந்தவன்.
நயனகர்ப்பூரி-ஓர்கண்மருந்து.
நயனதிட்சை-ஞானதிட்சையினொன்று, அஃது விஞ்ஞானகலர்க்குரியது
நயனத்தோன்-புட்பராகம்.
நயனபாஷை-கண்பயில்.
நயனப்பத்து - ஓர்பிரபந்தம், அஃது கண்ணினைப்பத்துச்செய்யுளாற்கூறுவது.
நயனமோட்சம்-கண்டிறத்தல்.
நயனம்-கண்.
நயனரோகம்-நேத்திரரோகம்.
நயனவாரி-கண்ணீர்.
நயனவிதி-நேத்திரவைத்தியவாகடம்
நயனவுடதம்-கண்மருந்து.
நயனை-கண்மணி.
நயனோபாந்தம்-கடைக்கண்.
நயனோற்சவம்-அலங்காரப் பொருள், விளக்கு.
நயன்-இன்பம், நன்மை, பலன், மகிழ்ச்சி.
நயிட்டிகப்பிரமசாரி-பிரமசாரிமுறை தவறாதிருப்போன்.
நயிட்டிகம்-நியமநிட்டை.
நயிட்டிகர்-நிட்டைதவறாதோர்.
நயி[illegible]-நாயனீர், நாயன்.
நயி[illegible]யம்-வைராக்கியம்.
நயினார்-நாயனார்.
நரக[illegible]தி-நரகப்பிராப்தி.
நரகதேவதை-பிசாசம், மூதேவி.
நரகம்-பாதாளம்.
நரகர்-கீழுலகத்தவர்.
நரகலித்தல்-அருவருத்தல்.
*நரகலோகம்-கீழுலகம், அஃது பாவிகள் அடையுமுலகு.
நரகல்-அசுத்தம், மலம்.
நரகவட்டம்-நரகச்சுற்று.
நரகவாசி-நரகத்திலுள்ளவன்.
நரகவாதி-நரகத்திற்கேடானவன்.
நரகவாய்-குதம், நரகம்.
நரகன்-ஓரசுரன், நரகத்திலுள்ளோன்
நரகாசுரன்-ஓரசுரன்.
*நரகாசுரவைரி-கண்ணன்.
நரகாந்தகன்-விட்டுணு.
[illegible]ராமயம்-ஆத்துமா.
[illegible]ரகாரி-விட்டுணு.
[illegible]லி-மா[illegible]க்குவருமோர்நோய்.

நரகிலகன்-குருவந்திசெய்தோன்.
நரகு-நரகம்.
நரங்கடித்தல்-கெடுத்தல்.
நரங்குதல்-தேய்ந்துதேய்ந்துகெடுதல்
நரசிங்கமூர்த்தி-திருமால்.
நரசிங்கம்-திருமால்தசாவதாரத்தொன்று, அஃது இரணியனைக்கொல்லத் தூணிற்பிறந்தவவதாரம்.
நரசிவன்-மனிதர்.
நரதாரணன்-கடவுள்.
நரதுதி-மானிடரைப்புகழ்தல்.
நரதேவன்-அரசன்.
நரத்துவம்-மனிதத்தன்மை.
நரநாராயணன்-திருமால்பதினைந்தவதாரத்தொருவன்.
நரந்தம்-கஸ்தூரிமிருகம், காகம், நாரத்தை, வாசனை.
நரபதி-அரசன், விசயநகரத்திராசா.
நரபலி-மனுப்பலி.
நரபாலன்-அரசன்.
*நரபூமி-பாரதவர்ஷம்.
நரப்பிரதிட்டை-நரவுருத்தாபனம், மனிதர் தாபித்த விக்கிரகம்.
நரப்புக்கருவி-வீணை முதலிய வாத்தியம்.
நரப்புக்கருவியாளர் - யாழ் முதலிய வாசிப்போர்.
நரப்புக்கருவியைக் கொழூத்துமாக்கள்-நரப்புக்கருவியாளர்.
நரப்புச்சிலந்தி-ஓர்சிலந்தி.
நரப்புச்சுழுக்கு-நரப்புச்சுளுக்கு.
நரமேதம் - ஓர்யாகம், அஃது நரபலியிட்டுச்செய்வது.
நரம்பன்-ஓர்வகைப்புகையிலை, நரம்புபுடைத்த சரீரமுள்ளவன்.
நரம்பு-இலைமுதலியவற்றினரம்பு, தந்திரி, நாடி, நாணி, நார், வின்னாண்.
நரம்புபுடைத்தல்-நரம்பு புறப்பட்டிருத்தல்.
நரம்புவாங்கல் - நரம்பை யிழுத்துக்கொள்ளுதல், வெற்றிலைமுதலியவற்றினரம்பையெடுத்தல்.
நரம்புவிச்சு-நரம்புவலி.
நரர்-மனிதர்.
நரலல்-ஒலித்தல், பேசலாலெழுமொலி.
நரலுதல்-ஒலித்தல்.
நரலை-கடல்.
நரலோகம்-பூமி.

நரல்-சனக்கூட்டம், செத்தை.
நரல்வு-உள்ளோசை, ஓசை.
நரயரி-நரசிங்கம்.
நரலித்தல்-அலுத்தல், கரகலித்தல்.
நரவாகனம்-சிவிகை.
நரவாகனன்-குபேரன்.
நரற்றல்-ஒலித்தல்.
நரன்-அருச்சுனன், கடவுள், திருமால், மனிதன்.
நரா-தழும்புபட்டது, நருங்கப்பட்டது.
நராங்குதல்-நிராங்குதல்.
நராதாரை-பூமி.
நராதிபன்-அரசன்.
நராந்தகம்-மரணம்.
நராந்தகன்-இயமன், விட்டுணு.
நராந்தம்-காகம்.
நரபோகம்-நரானுபோகம்.
நராயணன்-நாராயணன்.
நராரி-விட்டுணு.
நராலி-நரகம்.
நராவதாரம்-மனுவவதாரம்.
நரி-ஓர்மிருகம்.
நரிக்கொன்றை-ஓர்மரம்.
நரிதல்-நெரிதல்.
நரித்தல்-நருக்குதல்.
நரிநிறம்-பலநிறக்கலப்பு, பலவெண்ணம், வெறுப்பு.
நரிப்பயறு-ஓர்புன்பயறு.
நரிப்பள்ளம் - ஆறுமுதலியவற்றிற்குள்ளிருக்குங்கிடங்கு.
நரிப்பாகல்-காட்டுப்பாகல்.
நரிப்பு-ஆச்சரியம், இகழ்வு, நருக்கம்.
நரிப்புத்தி-தந்திரப்புத்தி.
நரிப்புறம்-மிருகசீரிடம்.
நரிமருட்டி-கிலுகிலுப்பை.
நரிமுருக்கு-ஓர்முருக்கு.
நரிமெருட்டி-நரிமருட்டி.
நரியன்-குள்ளத்தனமுள்ளவன்.
நரியிலந்தை-ஓர்மரம்.
நரியுணி-நண்டு.
நரிவழை-நரிக்குழி.
நரிவாற்புல்-ஓர்புல்.
நரிவிளா-நிலவிளா.
நரிவெண்காயம்-ஓர்வெண்காயம்.
நரிவெருட்டுதல் - காரணமில்லாமல் வெருளல்.
நருக்கட்டியெனல்-ஒலிக்குறிப்பு, வினாவுக்குறிப்பு.

நருக்கல்-நொருக்கல்.
நருக்கற்குத்து-காரியம் வாய்க்காமற் பண்ணுதல், பழுவறைக்குத்து.
நருக்காணி-நருவாணி.
நருக்கு-நருக்குதல், நருக்கென்னேவல்
நருக்குதல்-நொருக்குதல்.
நருக்கெனல்-ஒலிக்குறிப்பு, வினாவுக்குறிப்பு.
நருங்குதல்-நொருங்குதல்.
நருநருத்தல் } நரடிக்கொலிக்குறிப்பு, சருச்சரைக்குறிப்பு
நருநெனல் }
நருமதை-சத்தநதிகளிலொன்று.
நருமுதல் } துண்டாக்கல், பல்லு நரும்புதல்.
நரும்புதல் }
நருவல்-நருங்கினது.
நருவஞெருவல்-இருநருவல்.
நருவாணி-சிற்றுருவாணது.
நருவியுப்பு-ஒருப்பு.
நரேசன் } அரசன்.
நரேசுவரன் }
நரேந்திரன் }
நரை - இடபவிராசி, கருமை கலந்த வெண்மை, சாமரை, சிவன், நரையென்னேவல், நாரை, மாயையாக்கை பதினெண்குற்றத் தொன்று, வெண்மை.
நரைக்கொள்ளு-ஓர்பூடு.
நரைச்சல்-நரை, வெளிறினபயிர்.
நரைத்தல்-பயிர்வெளிறல், மயிர்முதலிய வெளுத்தல்.
நரைமயிர்-வெளுத்தமயிர்.
நரையன் - ஓர்பருந்து, நரைநிறமுள்ளது.
நரையான்-காகம், மார்க்கண்டன், மீன்குத்திப்புள்.
*நர்க்குடகம்-நாசி.
*நர்த்தகம்-ஆண்யானை.
*நர்த்தகி-பெண்யானை.
*நர்த்தகப்பிரியம்-மயில்.
*நர்மடம்-சாதகப்புள், முலைக்கண்.
*நர்மடன்-சூரியன், விடன்.
*நர்மதை-ஓர்நதி.
*நலகிலம்-முழந்தாள்.
*நலகூபரன்-குபேரன் மகன்.
நலக்குதல்-அழுக்காக்குதல்.
நலங்கல்-அழுக்காதல், அழுக்கானது
நலங்கு-நலங்கென்னேவல், வைசூரிக்குப்புசுமோர்மருந்து.

நலங்குதல்-அழுக்காறல், வதங்குதல்.
நலச்சுடு-கடுப்புச்சுடு.
*நலதம்-வெள்வெட்டிவேர்.
*நலதம்பு-வேப்பமரம்.
*நலதை-சடாமாஞ்சி.
நலத்தல்-பிரதிதல், நயத்தல்.
நலந்தட்டுதல் / நலம்நசுக்குதல் / நலமடித்தல் / நலமெடுத்தல் } விதையை வாங்கல்.
நலப்பாடு-ஆதாயம், நன்மை.
நலப்பு-பிரீதி, நன்மை.
நலம்-அழகு, இன்பம், உபகாரம், கண்ணோட்டம், சுக்கு, நன்மை, விருப்பம்.
நலம்பொலம்-நன்மையுந்தின்மையும்.
நலவு-நலம்போடுதல், நன்மை.
நலன்-நலம்.
நலி-நலியென்னேவல், நோய்.
நலிதல்-ஒலிவிகற்பம், சுரிதல், தவறுதல், மெலிதல், வருந்தல்.
நலித்தல்-நலிவித்தல்.
*நலினம்-தாமரை, நீர், வெண்ணுணா.
*நலினிருகம்-தாமரைத்தண்டு.
நலிவு-அழிவு, மெலிவு, வருத்தம்.
நல்-ஏற்ற, நல்ல, மிகுதி.
நல்கல் / நல்குதல் } ஈதல், விரும்பல்.
நல்குரவு-தரித்திரம்.
நல்கூர்தல்-தரித்திரப்படல்.
நல்கூர்ந்தோன்-தரித்திரன்.
நல்லதம்பிரான்-நாகபாம்பு.
நல்லந்தனம்-சிநேகத்தன்மை, நற்குணத்தன்மை.
நல்லது-செம்மை, நன்மையானது.
நல்லதுபண்ணுதல்-இணக்குதல்.
நல்லபாம்பு-நாகபாம்பு.
நல்லப்பன்-தந்தையின்சகோதரன்.
நல்லமை-சிநேகம், நன்மை.
நல்லம்-கறுப்பு, மங்கல்.
நல்லம்மாள்-தாயின்சகோதரி.
நல்லம்மான்பச்சரிசி-ஓர்பூடு.
நல்லரிவஞ்சகம்-போகபூமி யாறினொன்று.
நல்லவர்-அறிஞர், உத்தமர், சிநேகிதர்.
நல்லவையோர்-பெருமையிற் சிறந்தோர்.
நல்லள்-நல்லவள்.
நல்லறம்-நல்வாழ்க்கை.
நல்லறிவு-ஓர்நூல், நற்போதனை, பேரறிவு.
நல்லன்-நல்லவன்.
நல்லாங்கு-நன்மை.
நல்லாச்சி-நல்லப்பன்றேவி, நல்லம்மாள்.
நல்லாப்பு-நன்மை.
நல்லார்-அறிஞர், உத்தமர், மாதர்.
நல்லாள்-நலமுடையாள், பெண்.
நல்லாறு-நல்வழி.
நல்லி-நல்லள்.
நல்லுறவு-இதமானவுறவு.
நல்லெண்ணெய்-திலநெய்.
நல்லோர்-அறிஞர், உத்தமர்.
நல்வழி-சன்மார்க்கம்.
நல்வார்த்தை-உத்தமமொழி, இஃது வாக்கினற்குணநான்கினொன்று.
நல்வாழ்வு-சுகவாழ்க்கை.
நல்வினை-புண்ணியம், இஃது இருவினையினொன்று.
நவகண்டம்-ஒன்பதுகண்டம், அஃது கீழ்விதேகம், மேல்விதேகம், வடவிதேகம், தென்விதேகம், வடவிரோபதம், தென்னிரோபதம், வடபரதம், தென்பரதம், மத்திமகண்டம்.
நவகாரிகை-புதுமணப்பெண்.
நவக்கிரகம்-நவக்கோள், அவை ஆதித்தன், இராகு, கேது, சந்திரன், சனி, சுக்கிரன், செவ்வாய், புதன், வியாழம்.
நவசாரத்தான்-பொன்மணல்.
நவசாரம்-நவச்சாரம்.
நவசி-ஓர்கழுகு, ஓர்தெங்கு.
நவசித்தர்-நவநாதசித்தர்.
நவசூதிகை-இளங்கன்றுப்பசு, இளம்பிள்ளைக்காரி.
நவச்சாரம்-ஓர்மருந்து.
நவச்சி-நவட்சாரம்.
நவச்சிராத்தம்-முதலாம் மூன்றும், ஐந்தாம் ஏழாம் ஒன்பதாம் பதினொராநாளிற்செய்யுஞ் சிராத்தம்.
நவதளம்-தாமரைத்தளிர்.
நவதம்-யானைமேற்றவிசு.
நவதாரணை-ஒன்பதுதாரணை, அவை சதுரங்கதாரணை, சத்ததாரணை, சித்திரதாரணை, நாமதாரணை, பேதா

ரணை, மந்திரதாரணை, மாயாதார ணை, வச்சிரதாரணை, வத்துத்தா ரணை.
நவதானியம்-ஒன்பதுதானியம், அவை உளுந்து, எள்ளு, கடலை, கொள்ளு, சாமை, தினை, துவரை, நெல்லு, பயறு.
நவதி-தொண்ணூறு.
நவதிகை-அரியக்கோல்.
நவதை-புதுமை.
நவத்துவாரம்-ஒன்பதுவாயில், அவை கண், காது, மூக்கு, வாய், குதம், குய்யம்.
நவநாகம்-ஒன்பதுநாகம், அவை அனந்தன், ஆதிசேடன், கார்க்கோடகன், குளிகன், சங்கபாலன், தக்கன், பதுமன், மகாபதுமன், வாசுகி.
நவநாயம்-புதுவழக்கம்.
நவநாதசித்தர்-ஒன்பதுசித்தர், அவர் அருதிநாதர், ஆதிநாதர், கடேந்திர நாதர், கோரக்கநாதர், சதோகநா தர், சத்தியநாதர், மச்சேந்திரநாதர், மதங்கநாதர், வகுளிநாதர்.
நவநிதி-கச்சபநிதி, கற்பநிதி, சங்கநிதி, நந்தநிதி, நீலநிதி, பதுமநிதி, மகா நிதி, மகாபதுமநிதி, முகுந்தநிதி இவையே குபேரன் நவநிதி.
நவநீதகம்-நெய்.
நவநீதசோரன்-விட்டுணு.
நவநீதபாகம்-செய்யுளின்மோர்சுவை.
நவநீதம்-புதுமை, வெண்ணெய்.
நவபல்லவம்-தளிர்.
*நவபவநம்-நூதநகிருகம்.
*நவபாஷணம்-புதுமையானசொல்.
நவபுண்ணியம்-ஒன்பது புண்ணியம், அவை அமுதமேந்தல், அருச்சித்தல், ஆசனத்திருத்தல், எதிர்கொளல், தாள்கழுவுதல், திபங்காட்டல், தூபங்கொடுத்தல், பணிதல், புகழ்தல்.
நவபேதம் - சிவபேதமொன்பது, அவை பிரமா, விட்டுணு, உருத்திரன், மகேசுரன், சதாசிவம், சிவம், சத்தி, நாதம், விந்து.
நவப்பிரேதம் - ஒன்பதுதிக்கிற்காவற் பூதங்கள்.
நவமணி - ஒன்பதிரத்தினம், அவை கோமேதகம், நீலம், பவளம், புருடராகம், மரகதம், மாணிக்கம், முத்து, வயிரம், வைடூரியம்.
நவமணிமாலை - ஓர்பிரபந்தம், அஃது வெண்பாமுதலாகப்பலவேறு பாட்டாவும் பலவினமுமாக வொன்பதுசெய்யு ளந்தாதித்துப்பாடுவது.
நவமி-ஒன்பதாந்திதி.
நவம்-ஒன்பது, கார்காலம், கேண்மை, சினேகம், புதுமை, பூமி.
*நவகம்-ஒன்பது.
நவயௌவனை-வாலைப்பெண்.

நவரசம் நவரதம்	ஒன்பதுசுவை அவை அற்புதம், இரௌத்திரம், கருணை, குற்சை, சாந்தம், சிங்காரம், பயம், பெருநகை, வீரியம்.

நவரத்தினம்-நவமணி.

நவராத்திரம் நவராத்திரி	கன்னிமாதத்தில்இலக்குமி சரச்சுவதிமுதலிய சத்திகளைப்பூசிக்குமொன்பதுதினம்.

நவரோசு-ஓர்இராகம்.
நவலோககுப்பி-சுதைமண்.
நவலோகம்-ஒன்பதுலோகம்.
நவலோகாங்கம்-காந்தம்.
*நவவதூ-புதுமணப்பெண்.
*நவவஸ்திரம்-புதுத்துணி.
நவவரிகை-புதுமணப்பெண்.
நவவாயில்-நவத்துவாரம்.
நவவியாகரணம்-கிரந்த இலக்கணமாகிய வொன்பதுவியாகரணம்.
நவவிலாசசபை-அதிஉதர், சத்துவகர், ஞானுதிக்கர், தூதர், நாதவிருத்தியர், பத்திச்சுவாலகர், பத்திராசனர், பலவத்தர், பிராதமிகரென்னுமொன்பதுவகைச் சுத்தான்மாக்களகூடிய தேவசபை.
நவாகம்-பிரதமை.
நவாம்சம்-இராசியை யொன்பதாய்ப்பகிருதல்.
நவாம்பரம்-கோடிப்புடைவை.
நவான்னம் - புதியதானியம், வெஞ்சோறு.
நவியம்-கோடாலி, புதுமை, மழு.
நவிரம்-ஆண்மயிர், உச்சி, தலை, புன்மை, மயில், மருதயாழ்த்திறம், மலை, வாள்.
நவிரொழுசங்கு-முட்சங்கு.

நவிர்-ஆண்மயிர், மயிர், மருதயாழ்த்திறம், வாள்.

நவிலல்
நவிலுதல் } கற்றல், சொல்லல்.

நவிழ்த்தல்-அவிழ்த்தல்.

நவிறல்
நவிற்றல் } சொல்லல்.

நவினம்-புதுமை.
நவுதல்-முற்றுப்போதல்.
நவுரி-எக்காளம்.
நவை-இகழ்ச்சி, குற்றம்.
*நவோடை-புதுமணப்பெண்.
*நவோத்திருதம்-வெண்ணெய்.
நவ்வல்-நாவல்.
நவ்வி-அத்தநாள், அழகு, இளமை, தோணி, மான்.
*நவ்வியம்-புதியது.
நவ்வு-ஆழி, தோணி, நன்மை.
நவ்வுவவு-இராவிதம், நயநட்டம்.
நழுக்கம்-மழுங்கல்.
நழுக்கு-நழுக்குதல், நழுக்கென்னேவல், மழுக்குதல்.
நழுக்குதல்-மழுக்குதல், வழுவவிடல்
நழுங்கல்-மழுங்கல், வழுவுதல்.
நழுவர்-நளயர்.
நழுவல்-வழுவுதல், விலகல்.
நழுவி-பிடிகொடாதவன்.
நழுவுதல்-நழுந்துதல், வழுவுதல்.
நள-ஓராண்டு.
நளகூபரன்-குபேரன்மகன்.
நளத்தி-நளப்பெண்.
நளம்-அகலம், ஓர்சாதி, சிற்பநூன்முப்பத்திரண்டிலொன்று, தாமரை.
நளவர்-ஓர்சாதியார்.
நளன்-ஓர்தேவதச்சன், நிடதநாட்டையாண்ட வோரரசன், இவன் அறுவகைச் சக்கிரவர்த்திகளிலும் முதலெழு வள்ளல்களிலு மொருவன்.
நளி-அகலம், குளிர்ச்சி, கூட்டம், தேள், நெருக்கம், பெருமை.
நளிர்-குளிர், நண்டு, பகை, பெருமை.
நளினச்சொல்-பரிகாசப்பேச்சு.
நளினம்-தாமரை, நீர், நிலம், பரிகாசம்.
நளினி-இலக்குமி, ஓர்பண், தாமரைவாவி.
நளினை-இலக்குமி.

நறுங்கு-அழுங்கு, ஓர்கிளிஞ்சில்.
நறுந்தை-ஓர்புல்.

நறுநொறுத்தல்
நறுநொறுப்பு } வழுவி நழுவிப் போதல்.
நறுநொறெனல்

நல்-உச்சிப்பொழுது, திருவோணம், நடு, நன்றென்னேவல், மருங்கு.
நல்லலர்-பகைவர்.
நல்லல்-நட்டல்.
நல்லார்-பகைவர்.
நல்லாறு-ஓர்சிவதலம்.
நல்லி-உறவு, கடையெழு வள்ளலி லொருவன், கற்கடகவிராசி, நண்டு.
நல்லிருள்-நடுரா.
நல்லு-நடு, மருங்கு.
நல்லுதல்-நட்புக்கொள்ளுதல்.
நல்லுநர்-சிநேகிதர்.
நறவம்-அனிச்சமரம், கள், குங்குமமரம், ஞாழல், தேன், வாசனை.
நறவு-கள், குங்குமமரம், தேன், நறுமை, நன்மை, வாசனை.
நறலி-ஓர்பூடு.
நறா-கள், தேன், வாசனை.
நறியது-நல்லது.
நறுக்கு-ஊதுகுழலின்நறுக்கு, ஓலையறுதி, துண்டு, நறுக்கென்னேவல்.
நறுக்குதல்-துண்டித்தல்.
நறுக்குத்திப்பிலி-ஓர்சரக்கு.
நறுக்குமூலம்-வெட்டிவேர்.
நறுங்கரந்தை-ஓர்கரந்தை.
நறுதடி-அடைசல்.

நறுநறுத்தல்
நறுநறெனல் } ஈரடுக்கொலிக்குறிப்பு, வாய்க்குக்கடினமாயிருத்தல்.

நறுநாற்றம்-சுகந்தம்.
நறுநுதல்-பெண்.
நறுநெய்-பசுநெய்.
நறுந்தாளி-ஓர்கொடி.
நறுமணம்-சுகந்தம்.
நறுமா-அலட்சியம், வெறுமை.
நறுமுதல்-நரும்புதல்.

நறுமுறுத்தல்
நறுமுறெனல் } முறுமுறுத்தல்.

நறுமை-நன்மை, வாசனை.
நறும்பிசின்-ஓர்பிசின், ஓர்மருந்து.
நறும்புகை-சுகந்தபுகை.
நறும்புதல்-நரும்புதல்.
நறுவியது-நல்லது, வாசனைப்பண்டம்.

நறுவிலி } ஓர்மரம்.
நறுவுளி }
நறை - கள், குற்றம், தேன், நறும்பு
கை, வாசனை.
நற்கதி-மோக்ஷம்.
நற்கந்தம்-சுகந்தம்.
நற்கருணை - தெய்விகவிருந்து, நற்பி
ருபை.
நற்கலிதம்-நற்சங்கலிதம்.
நற்கல்-ஆட்டுக்கல்.
நற்காலம்-சுககாலம், நற்செய்காலம்
நற்கீர்த்தி-நல்லபுகழ்.
நற்குலமேரு-செம்புமலை.
நற்குலம்-உயர்குலம்.
நற்குறி-நல்லடையாளம், நற்குணம்.
நற்கோள்-நற்கிரகம்.
நற்சகுனம்-நன்னிமித்தம்.
நற்சங்கலிதம் - ஒன்று தொடுத்துமு
றையே தானங்களேறிநிற்பது.
நற்சமயம்-நற்றருணம்.
நற்சரக்கு-உயர்ந்தசரக்கு, பழுதற்ற
சரக்கு.
நற்சா-சுகமரணம்.
நற்சாங்கம்-சாலம்பபாஷாணம், நல்
லடையாளம்.
நற்சாந்து-சுண்ணச்சாந்து.
நற்சாரி-நவசாரம்.
நற்சானை-ஓர்மீன்.
நற்சித்தன்-இராசவர்த்தனக்கல்.
நற்சிலை-கருங்கல்.
நற்சீரகம்-நற்சீரகம்.
நற்சீர்-நன்னிலை.
நற்செங்கல்-காவிக்கல்.
நற்செய்தி-சுகசெய்தி.
நற்பரகுன்றி-சிந்துலவணம்.
நற்பிரியம்-மிகுபட்சம்.
நற்புத்தி-நற்போதகம்.
நற்றமிழ்-இனியதமிழ், சுத்ததமிழ்.
நற்றாய்-பெற்றதாய்.
நற்றுளி-அத்திப்பிசின்.
நனந்தலை-உச்சி, நடு.
நனவு-அகலம், இடம், தெளிவு, பர
ப்பு, மயக்கநீங்கல்.
நனு-நனவு.
நனி-நெருக்கம், பெருமை, மிகுதி.
நனை-கள், தேன், நனையென்னேவல்,
பூமொட்டு.
நனைதல்-ஈரலித்தல்.
நனைத்தல்-ஈரமாக்கல்.
நனைவு-ஈரம், நனைதல்.
நல்கு-அழகு, நன்மை, மிகுதி.
நன்குணர்தல்-தெற்றறிதல்.
நன்கொடை-உபகாரக்கொடை.
நன்சொல்-இன்சொல், நற்புத்தி.
நன்பகல்-நண்பகல்.
நன்மனம்-மனப்பூரணம்.
நன்மார்க்கம்-சன்மார்க்கம்.
நன்முகம்-தாராளம்.
நன்மை-அதிட்டம், உதவி, உபகார
ம், சன்மார்க்கம், நன்கு, பிரயோ
சனம்.
நன்மைகடைப்பிடித்தல்-தயாவிருத்தி
யெட்டினொன்று, அஃது செய்ந்ந
ன்றிமறவாதிருத்தல்.
நன்மைப்பகுதி-நல்வினைப்பயன்.
நன்மைப்படுதல் - இருதுவாதல், பல
ன்படுதல்.
நன்மைப்பேறு-நன்மைப்பகுதி.
நன்றி-உபகாரகுணம், நன்மை.
நன்றிகேடு-செய்ந்நன்றியில்லாமை.
நன்றிகோறல் - செய்ந்நன்றி கெடுத்
தல். [தல்.
நன்றிமறத்தல் - செய்ந்நன்றி யயர்த்
நன்றியறிதல்-செய்ந்நன்றியறிதல்.
நன்றியீனம்-செய்ந்நன்றிகேடு.
நன்று - சுகம், நல்லது, நன்மை, பெ
நன்னடை-நல்லொழுக்கம். [ருமை.
நன்னயம்-உபகாரச்சொல், நினைவு.
நன்னயன்-எண்ணம்,நயப்பு,முகமன்
நன்னருக்கல்-அற்பரோ.
நன்னர்-நன்மை.
நன்னலம்-அழகு, நயப்பு, மேன்மை
நன்னாரி-ஓர்கொடி.
நன்னி-சிற்றுருவானது.
நன்னிலம்-நற்றரா.
நன்னிலை-உலகம், சுகம், தவம், நல்
லொழுக்கம்.
நன்னிறம்-வெண்மை.
நன்னுதல்-கறுக்குதல, பெண்.
நன்னூல்-ஓரிலக்கணநூல்.
நன்னெருக்கல்-நன்னருக்கல்.
நன்னெறி-நல்வழி.

நா

நா-அயலார், சுவாலை, திறப்பு, மணி
முதலியவற்றினுக்கு, நடு, நாக்கு.

*நாககங்கணன்-சிவன்.
*நாககர்ணம்-செவ்வாமணக்கு.
நாககன்னி-கன்னியிலோர்பேதம்.
நாககற்பம்-செவ்வியம்.
நாககன்னிகை-நாகலோகத்துப்பெண்
நாககெந்தி-சேர்வாளம், வஞ்சிக்கொ
நாகக்குவடு-செம்புமலை. [டி.
*நாகசம்-சிந்தூரம், வங்கம்.
நாகசம்பவம்-செவ்வியம்.
நாகசாரம்-ஒருநகுமுல்.
நாகசாபம்-நாகத்தைக் கொல்வதிற
ல் வருஞ்சாபம்.
நாகசிருவிகை-சிவந்தபாஷாணம்.
நாகசின்னம்-ஒருகருமுல்.
நாகசீவனம்-துத்தநாகம்.
நாககுரம்-ஒருகருமுல்.
நாககுவங்கை-நாகுலி.
நாகசேதகன்-இந்திரன்.
நாகச்சிலைக்கல்-சிலாநாகக்கல்.
நாகணம்-ஓர்மருந்து.
நாகணவாய்
நாகணவாய்ப்புள் } ஓர்பட்சி.
நாகதத்துவம் - திரிதத்துவங்களிலொ
ன்று.
நாகதந்தம்-முளையாணி.
நாகதந்தம்-பாம்பின்பல்,முளையாணி,
யானைத்தந்தம்.
*நாகதந்தி-ஓர்மரம், வேசை.
நாகதமனி-ஓர்மரம்.
நகதாளி-ஓர்மரம்.
நாகதீபம்-ஐந்தலைவிளக்கு.
நாகதேவன்-ஆதிசேடன்.
நாகதேவி-நாகப்பாம்பு.
*நாகநைவிகை-தசமிதிதி.
நாகத்திசை-வடமேற்கு.
நாகத்தின்பாம்பு-பூநாகம்.
நாகநாதன்
நாகநாயகன் } ஆதிசேடன், இந்திரன்.
*நாகநாயகபுரோகிதன்-பிருகற்பதி
நாகபடம்-ஓர்காதணி.
நாகபடலம்-கண்ணோயுளொன்று.
நாகபட்டினம்-ஒருர்.
நாகபத்தம்-நாகபெந்தம்.
நாகபந்து-அரசமரம்.
நாகபலன்-வீமன்.
நாகபாசம்-நாகரூபமானவோர்கயிறு,
வருணனாயுதம்.
நாகபாஷாணம்-ஓர்பாஷாணம்.

நாகபிரம்பு-ஓர்பிரம்பு.
நாகபெந்தம்-ஓர்மிறைக்கவி, அஃது
இரண்டுபாம்பு தம்முட்பிணைவது
போலவிரேகைகிறீ யொருநேரிசை
வெண்பாவும் ஓரின்னிசை வெண்
பாவுமெழுதியிரேகையிற் சந்திகளி
னின்றவெழுத்தமற்றையிடங்களி
லுமுறுப்பாக நிற்கப்பாடுவது.
நாகப்பச்சை-ஒரிரத்தினம்.
நாகப்பற்று-துத்தநாகப்பிடிப்பு.
நாகப்பிரதிட்டை-நாகவிக்கிரகப் பிர
திட்டை.
நாகப்பூச்சி-நாக்குளிப்பூச்சி.
நாகமணி-நாகரத்தினம்.
*நாகமல்லம்-ஐராவதம்.
நாகமல்லி
நாகமல்லிகை } அனிச்சமரம்.
*நாகமாதா-துளசி.
நாகமுத்து-பாம்பின்கல்.
நாகமோடி-ஓர்புடைவை.
நாகம்-ஆகாயம், ஒலி, ஓர்பாம்பு,சந்த
கம், கருங்குரங்கு, காரீயம், குரங்
கு,குழல்,துத்தநாகம், தேவலோ
கம், நற்புடைவை, பாம்பு, புன்னை
மரம், மலை, யானை.
நாகம்பூ-ஓர்மருந்து.
நாகரகம்-தேன்றோடை.
நாகரகன் - கள்வன், கைச்சித்திரவி
வேகி.
நாகரங்கம்-தேன்றோடை.
நாகரத்தினம்-நாகமணி.
நாகரம்-இளைப்பு, ஓர்பாஷை, ஓர்வ
ண்டு, சுக்கு, தேன்றோடை, விரு
ப்பு.
நாகரவண்டு ஓர்வண்டு.
நாகரன்-கணவனின்சகோதரன், சிற
ந்தோன், நகரத்தான்.
நாகராசன்-அனந்தன்.
நாகரி-குருக்கத்தி.
நாகரிமுனை-மதுரைக்குச்சேர்ந்தவோ
ரிடம்.
நாகரிகம்-கண்ணோட்டம், சாதுரியம்.
நாகரிகம்விடுத்தல்-நாகரிகம்பேசல்.
நாகரிகர்-காமுகர், நகரத்தார்.
நாகருகம்-தேன்றோடை.
நாகரோறு-செவ்வியம்.
நாகலை-ஓர்பூடு.
நாகர்-சர்ப்பசாதியார், தேவர்.

நாகலதை-அன்ருரி.
நாகலோகம் - கீழேழுலகி னொன்று, தேவலோகம்.
நாகவம்-பாம்புக்கரணம்.
நாகவராளி-ஓர்பண்.
நாகவல்லி-வெற்றிலைக்கொடி.
நாகவள்ளி - ஓர்கிழங்குக்கொடி, வெற்றிலைக்கொடி.
நாகவாடை-செம்புதல்.
நாகவாரிகம்-இராசயானை, கலுழன், மயில்.
நாகவாரிகன்-யானைப்பாகன்.
நாகவீதி-பால்விதிமண்டலம்.
நாகன் - தசவாயுவினொன்று, அஃது நீட்டவும் முடக்கவும் விளக்கவுஞ் செய்விப்பது.
நாகாசனன்-கருடன்.
நாகாதிபன் - அனந்தன், இந்திரன், இமயமலை, இராசயானை, ஐராவதம், மலையரசன், மேருகிரி.
நாகாத்திரம்-நாகபாணம்.
*நாகாந்தகன் - இந்திரன், கருடன், சிவன்.
நாகாபரணம்-நாகருபமானவோராபரணம்.
நாகாயுதம்-ஓர்படைக்கலம்.
*நாகாராதி } கருடன், தேவேந்திரன்.
*நாகாரி }
நாகாலயம்-தேவகோயில், பாதலம்.
நாகு - இளமரம், இளமை, எருமை சங்கு நத்தை பசு மனாயிவற்றின் கன்னிப்பெண், சங்கு, நத்தை, புற்று, பெண்மீன், மலை.
நாகுலி-கிரிபுரண்டான்பூடு.
நாகேசுரம்-ஓர்செடி.
நாகேந்திரன்-நாகாதிபன்.
நாகை - நாகபட்டினம், வெற்றிலைக்கொடி.
நாகோதரம்-மார்க்கவசம்.
நாக்கப்பாம்பு } நாங்கூழ்.
நாக்கப்பூச்சி }
நாக்கரளை-நாவில்வருமோர்நோய்.
நாக்கணிடுங்கூர்மை-செந்தலவணம்.
நாக்கியாக்கிரம்-ஓர்முட்செடி.
நாக்கிரந்தி-ஓர்நோய்.
நாக்கு - கதிர், திறப்புமுதலியவற்றினு, நா.
நாக்குத்தவறுதல்-சொற்றவறுதல்.
நாக்குப்புரட்டு-பொய்.
நாக்குப்புற்று-ஓர்நோய்.
நாக்குமீன்-ஓர்மீன்.
நாக்குவளைத்தல்-இகழ்தல்.
நாக்குவாங்கல்-நாக்கையிழுத்தல், விலங்கப்படுத்தல்.
நாக்குவிழுதல் - பேசநாவெழாதிருத்தல்.
நாக்குழிஞ்சான்-ஓர்செடி.
நாக்குளிப்பாம்பு } நாகப்பூச்சி.
நாக்குளிப்பூச்சி }
நாக்குறுதி-சொல்வன்மை.
நாக்கை-நாக்குளிப்பூச்சி.
நாங்கள்-நாம்.
நாங்குதல்-சோம்புதல்.
நாங்குழு } நாகப்பூச்சி.
நாங்கூழ் }
நாசகாரி-கேடுசெய்வோன்.
நாசகாலம்-அழிவுகாலம்.
நாசயிலி சிவன்.
நாசம் } அழிவு, மரணம், விதேதல்.
நாசனம் }
நாசயோகம்-மரணயோகம்.
நாசன்-அழிப்போன்; நமன்.
நாசாக்கிரம்-நாசிநுனி.
நாசாதக்கணம்-வலமூக்கு.
*நாசாபுடம்-மூக்குத்தொளை.
நாசாவாமம்-இடமூக்கு.
நாசி-மூக்கு, மேல்வாய்தற்படி.
நாசிகாக்கிரம்-மூக்குநுனி.
நாசிகாசூரணம்-மூக்குப்பொடி.
நாசிகாபீடம்-நாசிக்குள் வளருமோர்நோய்.
நாசிகாமலம்-மூக்குச்சளி.
*நாசிகேது-அக்கினி.
நாசிகை-கதவுநிலையின் மேற்சட்டம், மூக்கு.
நாசிதாரு-மேல்வாய்தற்படி.
நாசித்தல்-நசித்தல்.
நாசித்துவாரம்-மூக்குத்துளை.
நாசிப்பொடி-மூக்குத்தூள்.
நாசியம்-நாணயக்கயிறு.
நாசோற்பத்தி-அழிந்துபிறப்பது.
நாய்ச்சிமார்-சத்ததேவிகள்.
நாஞ்சிநாடு-மலையாளம்.
நாஞ்சில்-கலப்பை, மதிலுறுப்பு.
நாஞ்சிற்படையோன்-பலபத்திரன்.
நாடகக்கணிகை-நாடகசாலைப்பெண்.

நாடகசாலை-கூத்துப்பயிலிடம், நாடகக்கணிகை.
நாடகத்தமிழ்-நாடகவழக்குத் தமிழ், அஃது முத்தமிழிலொன்று.
நாடகத்தி-ஆடுமாலைப்பெண், கூத்தி, கூத்துக்கலையாடும்பெண்.
நாடகப்பெண்-நடனப்பெண்.
நாடகமடித்தல் - ஆடுமாலைத்தனம்பண்ணுதல்.
நாடகமாடுதல்-ஆடிமாலைத் தனம்பண்ணுதல், கூத்தாடுதல்.
நாடகம் - கலைஞானமறுபத்துநான்கி லொன்று, அஃது கூத்து, கூத்துப்பாட்டு, நடனவிதி.
நாடகர் } கூத்தர்.
நாடகீயர்
நாடகியர்
நாடடிப்படுத்தல்-தேசத்தைக்கெடுப்படுத்தல்.
நாடல்-கார்த்திகைநாள், சோழன்.
நாடன்பருத்தி-ஓர்செடி.
நாடா-ஒருகயிறு, நாணுரி.
நாடி-ஐம்மயிர், இருபத்துநாலுநிமிடங்கொண்டது, இலைநரம்பு, உட்டுளை, தாடி, தாது, தவாளிப்பு, நரம்பு, நாழிகை, பூவிற்றுள், மூக்கு, யாழினரம்பு.
நாடிகேளம்-நாரிகேளம்.
நாடிசுத்தி-யோகத்திற்குத்தாதுசுத்தி பண்ணல்.
நாடிதாரணை-தவதாரணையிலொன்று.
நாடிநரம்பு-நாடியோட்டநரம்பு.
நாடிபார்த்தல்-நாடிக்குறியறிதல்.
நாடிப்பயிற்சி } தாதறியுமறிவு.
நாடிப்பரிட்சை
நாடிமண்டலம்-ஆகாயசமரேகை.
நாடியொடுக்கம்-நாடித்தாக்கம்.
நாடியோடுதல்-நாடியியங்குதல்.
நாடிவிதி-நாடித்திட்டமறிவிக்குநூல்.
நாடிவிழுதல்-நாடியொடுங்கல்.
நாடு-இடம், உலகம், ஊர், நாடென்னேவல், பக்கம், பூமி.
நாடுதல்-தேடுதல், விரும்புதல்.
நாடுபடிதல்-நாட்டார்வசப்படுதல்.
நாடுபடுதிரவியம்-நாட்டிலுண்டாகுந்திரவியம், அஃது கரும்பு, சிறுபயறு, செந்நெல், செவ்விளநீர், வாழை.
நாடேவல்-நாடகக்கணிகைபுத்திரன்.
நாடோடி-நிலையற்றவன்.
நாடோடிச்சொல் } வழக்கச்சொல்.
நாடோடிப்பேச்சு
நாடோறும்-நாள்தோறும்.
நாடோன்-நாடகக்கணிகைபுத்திரன்.
நாட்கடத்துதல்-நாள்விடுதல்.
நாட்கணக்கு-அன்றாடகக்கணக்கு.
நாட்கால்-மங்கலப்பந்தருக்கு முதனட்டுங்கப்பு.
நாட்குறித்தல்-நன்முகூர்த்தநியமித்தல்.
நாட்கூலி-அற்றைக்கூலி.
நாட்கொள்ளுதல்-புதிதாய்த்தொடங்கல்.
நாட்செலவு-அன்றன்றுசெல்லுஞ்செலவு, நாட்செல்லுதல்.
நாட்டமைதி-நாட்டுச் சிறப்பிற்குடையன, அவை குறும்பின்மை, செங்கோல், செல்வம், செழிப்பு, நோயின்மை, விளைநிலம்.
நாட்டம்-ஓர்பண், கண், நோக்கம், வாள், விருப்பம்.
நாட்டல்-நாட்டுதல்.
நாட்டவத்தனம்-நாட்டுப்பாங்கு.
நாட்டவன்-நாட்டான்.
நாட்டாண்மை-ஊரதிகாரம்.
நாட்டார்-ஊரார்.
நாட்டியகாரன்-கூத்தன்.
*நாட்டியசாலை-நடனசாலை.
நாட்டியப்பிரியன்-சிவன்.
நாட்டியம்-குறிப்பு, கூத்து.
நாட்டு-நாட்டென்னேவல், தாபிப்பு.
நாட்டுக்குற்றம்-ஊருக்குத் தீதுசெய்வன, அவை கள்வர், கிள்ளை, தன்னரசு, தொட்டியர், நட்டம், பன்றி, பெருமழை, மிகுகாற்று, மிகுமழை, யானை, விட்டில், வேற்றரசு.
நாட்டுச்சார்பு-மருதநிலம், அஃது நாட்டைச்சார்ந்திருப்பது.
நாட்டுச்சிறப்பு-நாட்டுவளம்.
நாட்டுதல்-தாபித்தல், நடத்தல், நிறுத்தல்.
நாட்டுப்பெண்-மருமகள்.
நாட்டுப்போக்கு-நாட்டுக்கடுத்தவிதம்.
நாட்டுவழக்கம்-தேசநடை.
நாட்டுவளப்பம்-நாட்டின்சீர்.
நாட்டுவளம்-நாட்டுச்சிறப்பு.
நாட்டுவெள்ளரி-ஓர்வெள்ளரி.
நாட்டை-ஓர்பண்.

நாட்படுதல்-நாட்செல்லுதல்.
நாட்பட்டது-நாட்சென்றது.
நாட்பணிவிடை - அன்றாடகவேலை, நல்முகூர்த்தத்திற் செய்யும்வேலை.
நாட்பார்த்தல்-சுபதினம்பார்த்தல்.
நாட்பு-ஞாட்பு, வலி.
நாட்பூ-அன்றலர்ந்தபூ.
நாட்பொருத்தம்-சென்ம நட்சத்திரப் பொருத்தம், இஃது தசப்பொருத்தத்தொன்று.
நாணகம்-நாணயம்.
நாணக்கேடு-வெட்கமின்மை.
நாணப்படுதல்-அடங்குதல், மதித்தல், வெட்கித்தல்.
நாணம்-அச்சம், அடக்கம், மதிப்பு, வெட்கம், இஃது மகடூஉக்குணம் நான்கினொன்று.
நாணயகாரன்-நிதானி.
நாணயங்குத்துதல் - மிருகங்களுக்கு மூக்குத்துளைத்தல்.
நாணயங்குலைத்தல் } மானமழிதல்.
நாணயங்கெடுதல் }
நாணயசில்லம்-அவமானம்.
நாணயச்சரக்கு-விலைச்சாமான்.
நாணயஞ்செலுத்துதல்-உண்மைதவறாமனடத்தல், பேச்சையுண்மைப்படுத்தல்.
நாணயத்தப்பு-நாணயப்பிழை.
நாணயம்-உரோசம், கட்டுப்பாடு, காசுநாணயம், நிதானம், வழக்கம், வாக்குப்பிசகாமை.
நாணயவான்-உண்மை தவறாதவன், நிதானி.
நாணல்-ஓர்புல், நாணுதல்.
நாணுங்கள்ளி-ஓர்கள்ளி.
நாணி-வின்னாண்.
நாணித்தல்-நாணுதல்.
நாணுகம்-குதிரை.
நாணுதல்-அடங்குதல், மதித்தல், வெட்குதல்.
நாணுவத்தான் }
நாணுவம் } நாகணவாய்ப்புள்.
நாணுவான் }
நாணேறிடுதல் } வில்வளைத்தல்.
நாணேற்றுதல் }
நாணையம்-நாணயம்.
நாண் - கயிறு, நாணென்னேவல், வின்னாண், வெட்கம்.
நாண்மலர்-புதுமலர்.
நாண்மீன்-நட்சத்திரம்.
நாதகிருத்தியர்-கடவுளது கிருத்தியத்தையவரருளாற்புரிபவர்.
நாதத்துவம்-நாதம்.
நாதம்-அப்பிரகம், இந்திரியம், ஒலி, நாணயக்கயிறு, பாதிவட்டம்.
நாதரூபம்-சிவனுருவினொன்று.
நாதன்-அரசன், அருகன், எப்பொருட்குமிறைவன், கடவுள், கணவன், குரு, சிவன், தலைவன், மூத்தோன்.
நாதாக்கள்-சத்தவான்கள், பெரியோர்.
நாதாங்கி-பூட்டுக்களினொருறுப்பு.
நாதாந்தசோதி-கடவுள்.
நாதாந்தம் - ஞானநெறிகளினொன்று, பஞ்சகருத்தாவிலொருவன்.
நாதாந்தவிளக்கம்-ஓர்நூல்.
நாதாந்தன்-சிவன்.
நாதாந்தி-பொன்னிமிளை.
நாதி-ஓர்பெருங்காயம்.
நாதித்தல்-ஒலித்தல்.
நாதேயம்-இந்துப்பு, சீந்தில், நதியிற்பிறப்பன.
நாத்தழும்பல் } நாவப்பியாசப்பட்டிருத்தல்.
நாத்தழும்பேறுதல் }
நாத்தனார்-நாத்தூண்.
நாத்தாங்கிப்பேசுதல்-எண்ணிப் பேசுதல், நாவெறுத்துப்பேசல்.
நாத்தி-தாழ்வாரம், நாசம்.
நாத்திரம்-அதிசயம், புகழ்.
நாத்திரன்-சிவன்.
நாஸ்தி } நாத்தி.
நாஸ்திகம் }
நாஸ்திகமதம்-சூனியவாதம்.
நாஸ்திகன்-சூனியவாதி.
நாத்தூண்-மைத்துனி.
நாந்தகம்-வாள்.
நாந்தல்-ஈரம்.
நாந்தி-ஒருவனைப்புகழ்ந்துபாடியகவி.
*நாபிதன்-அம்பட்டன்.
*நாந்திகரன் } மங்கலப்பாடகன்.
*நாந்திவாதி }
நாந்துதல்-நனைதல்.
நாந்தோணி-ஓர்பூடு.
நாபம்-நாபி.
*நாபாகன்-அம்பரீஷன்.
நாபி-கஸ்தூரி, கொப்பூழ், வத்சநாபம்.
நாபிகமலம்-கொப்பூழ்.

நாபிக்கொடி-கொப்பூழ்க்கொடி.
நாபிசன் / நாபிசன்மன் } பிரமன்.
நாபித்தானம்-கொப்பூழ்.
நாபிநாடி-உந்திக்கொடி.
நாபிநாளம்-கொப்பூழ், உந்திக்கொடி.
நாபிலம்-கடிதடம், கொப்பூழ்க்குழி.
*நாபிலை-உத்தமஸ்திரீ.
நாப்பண்-இடை, தேர்நடு, நடு, யாழுறுப்பு.
நாப்பு-எத்து.
நாப்புற்று-நாவறளை.
நாப்பொடிதல்-நாவுலர்தல்.
நாமகரணம்-பெயரிடுதல்.
நாமகள்-சரச்சுவதி.
நாமக்கட்டி - விட்டுணு பத்திக்காரர் போடுமோர் சாம்புக்கட்டி.
நாமக்காரர்-விட்டுணுபத்திக்காரர்.
நாமக்குச்சலி-ஓர்வகைப்புடவை.
நாமசங்கிதை - சிற்பநான்முப்பத்திரண்டினொன்று.
*நாமசாஸ்திரம்-நிகண்டு.
நாமசேடம்-மரணம்.
நாமச்பி-கத்தை.
நாமஞ்சாத்துதல்-நாமந்தரித்தல்.
நாமடந்தை-சரச்சுவதி.
நாமதாரணை-நவதாரணையினொன்று, அவிதுபூரணமாய்க்கடவுளைத்தியானித்தற்குக்கற்பித்த நாமத்தியானத்தினாலக்கடவுளையெல்லைப்படுத்தல்.
நாமதாரி - நாமந்தரித்தோன், விட்டுணுபத்திக்காரன்.
நாமதேயம்-பெயர்.
நாமத்துத்தி-ஓர்பூடு.
நாமப்பொருத்தம் - பெயர்ப்பொருத்தம்.
நாமமாலை-ஓர்பிரபந்தம், அஃது அகவலடியுங் கலியடியும்வந்து மயங்கிய வஞ்சிப்பாவா லாண்மகனைப் புகழ்ந்துபாடுவது.
நாமமிடுதல்-நாமக்குறிநிட்டுதல், பெயர்கொடுத்தல்.
நாமம்- அதிசயம் இணக்கம் ஐயம் கோபம் நிச்சயம் நிந்தை நினைப்பு மாய்மால மிவைகளைக் காட்டுஞ் சொல், கீர்த்தி, நிறைகோலினடு, பெயர், அஃது எண்குற்றத்தொன்று, வைட்டிணவரின்நாமம்.
நாமராசி-இராசிப் பொருத்தம், பெயர்ப்பொருத்தம்.
நாமவர்த்தம்-பெருநெருஞ்சில்.
நாமவெருண்டம்-தும்பை.
நாமறல்-பேருமற்றுப்போதல், முற்றுமறல்
நாமாது-சரச்சுவதி.
நாமாபராதம்-நிந்தனை.
நாமிதம்-வளைவு.
நாமோச்சாரணம்-நாமவுச்சரிப்பு.
நாம்-அச்சம், பால்பகாவுயர்திணைத்தன்மைப்பன்மை.
நாம்பல்-இளைத்தல்.
நாம்பன்-இளவெருது.
நாம்பு-நாம்பெண்ணேவல், மெலிவு.
நாம்புதல்-மெலிதல்.
நாயககுசரம்-நாகசின்னம்.
நாயகத்தி-தலைவி, தேவி, மனைவி.
நாயகப்பானை-முதலிலேகட்டிப்பொங்கும்பானை.
நாயகமணி - மணிமாலைநடுவிலேகோத்திருக்கும்பெருமணி.
நாயகம்-ஆளுகை, தலைமை.
நாயகம்பண்ணுதல்-முதன்மை செலுத்தல்.
நாயகவளந்து-பொங்கல் செய்வோர் முதலிலேவைக்கும்பானை.
நாயகன்-அரசன், எசமான், எப்பொருட்குமிறைவன், சிவன், நடத்துவோன், புருடன்.
நாயகாதிபன்-அரசன்.
நாயகி - எசமாட்டி, பார்வதி, பெருமையிற்சிறந்தவள், மனைவி.
நாயகிமேனி-மரகதப்பச்சை.
நாயக்கன்-சேனைத்தலைவன், தெலுங்கருளோர்வகையார்.
நாயரஞ்சி-நாயுருவி.
நாயனார் / நாயன் } அரசன், எசமான், கடவுள், பெருமையிற் சிறந்தோன்.
நாயன்மார்-பெருமையிற் சிறந்தோர்.
நாயாட்டம்-உலைச்சல், பேயாட்டம்.
நாயில்-ஞாயில்.
நாயிறு-ஓர்கிழமை, சூரியன்.
நாயிறுதிரும்பி-பொழுதுவணங்கி.
நாயிறுவணங்கி-கொழிஞ்சி.
நாயுருவி-ஓர்பூடு.
நாயுரக்கம்-பொய்யுறக்கம்.

நாயோட்டம் - குதிரைநடையி லொன்று.
நாய்-ஞமலி, தென்மேற்றிசைப்பாலன்குறி.
நாய்கர்-செட்டிகள்.
நாய்குருவி-நாயுருவி.
நாய்க்கடுகு-ஓர்பூடு.
நாய்க்குட்டிச்செடி-ஓர்செடி.
நாய்க்கோலம்-இழிவானகோலம்.
நாய்ச்சி } எசமாட்டி.
நாய்ச்சியார் }
நாய்ச்சிரகம்-ஓர்சிரகம்.
நாய்த்தயிர்வேளை-ஓர்செடி.
நாய்த்திசை-தென்மேற்கு.
நாய்த்துளசி-கஞ்சாங்கோரை.
நாய்நாக்கி-ஓர்பூடு.
நாய்ப்பயறு-ஓர்பூடு.
நாய்ப்பாகல்-ஓர்பாகல்.
நாய்ப்புடோல்-ஓர்கொடி.
நாய்முருங்கை-ஓர்முருங்கைக்கல்.
நாய்முள்ளி-ஓர்முள்ளி.
நாய்விட்டைக்கல்-ஓர்வகைக்கல்.
நாய்வெள்ளை } நாய்த்தயிர்வேளை.
நாய்வேளை }
நாய்வேம்பு-ஓர்பூடு.
நாரகம்-நரகம்.
*நாரகன்-நரகன்.
*நாரகி-நரகவாசி.
நாரங்கம்-நாரத்தை.
நாரசிங்கம் - அட்டாதசவுபபுராணத்தொன்று, உபநிடதமுப்பத்திரண்டினொன்று, நரசிங்கம், அஃது திருமாலவதாரத்தொன்று.
நாரசிங்கன்-விட்டுணு.
நாரணி-துர்க்கை.
நாரதம் - பதினெண்புராணத்தொன்று, முகில்.
நாரதன்-ஓரிருடி.
நாரதீயம் - அட்டாதச வுபபுராணத்தொன்று.
*நாரதை-நதி.
நாரத்தை-ஓர்தோடை.
நாரம்-அன்பு, சனத்திரள், நாண், நாரத்தை, நீர், நீர்வாழ்புள், பசுங்கன்று, பாசி.
நாராசபாணம்-ஓரத்திரம்.
நாராசமுத்திரை-பூசாமுத்திரைவகையினொன்று.
நாராசம் - அம்பு, எழுத்தாணி, சலாகை, விட்டம்.
நாராயணகவுளம்-ஓர்பண்.
*நாராயணதைலம்-ஓர்தைலம்.
நாராயணப்பிரியன்-சிவன்.
*நாராயணமுநி-ஓர்முனிவன்.
*நாராயணன்-சிவன், விட்டுணு.
நாராயணம்-அரசமரம், உபநிடதமுப்பத்திரண்டினொன்று, மீன்.
நாராயணன்-சந்திரன், சிவன், பிரமன், வருணன், விட்டுணு.
*நாராயணாஸ்திரம்-ஓர்பாணம்.
நாராயணி-இலக்குமி, ஓரிராகம், கங்காதேவி, சத்தமாதர்களிலொருத்தி, துர்க்கை.
நாரி - இடை, ஓர்பண், கள், சேனை, தேன், நாணி, பன்னாடை, பார்வதி, பெண், வாசனை.
நாரிகேரம் } தென்னைமரம்.
நாரிகேளம் }
நாரியங்கம்-தேன்றோடை.
நாரிதூஷணம்-பதிவிரதா விரதத்திற்குற்றப்பானது, அஃது அன்னியக்கிரகசயனம், அன்னியக் கிரகபிரவேசம், அன்னியக்கிராசனம், கணவனைப்பிரிந்திருத்தல், துர்க்கூட்டம், மதுபானம்.
நாரை-ஓர்புள்.
நாரைக்கொம்பு-நீண்டகொம்பு.
நாரைப்பசு-ஓர்வகைப்பசு.
நார்-அன்பு, கயிறு, மட்டைமுதலியவற்றினார்.
நார்ச்சீலை-மரவுரி.
நாலடி-ஓர்நூல்.
*நாலம்-தாமரைப்பூ முதலியவற்றின்காம்பு.
*நாலை-நாளம்.
நாலல்-தாழ்தல், தூங்குதல், விழுதல்
நாலகாரியம்-பலவகைக்காரியம்.
நாலாஞ்சடங்கு } விவாகத்தினாலாநாட்பண்ணுமுழுக்குச்சடங்கு.
நாலாநீர்ச்சடங்கு }
நாலாமுறைக்காய்ச்சல்-நாலுநாளைக்கொருமுறை வருங்காய்ச்சல்.
நாலாம்வருணம்-சூத்திரசாதி.
நாலாம்வருணர்-சதுர்த்தர்.
நாலாவிதம்-பலவிதம்.
நாலி-முத்து.

*நாலிகம்-எருமை, காசம், தாமரை.
*நாலிகை - அடுப்புச்சந்து, தொளை, மூங்கில், குழை.
நாலுதல்-தூங்குதல்.
நாலுபாதச்சைவம்-ஓர்சைவம்.
நால்-நாலென்னேவல், நான்கு.
நால்வகைச்சாந்து-சாந்துவகைநான்கு அவை கலவை, பிதம், புகை, வட்டிகை.
நால்வகைத்தோற்றம்-நான்குவகைப் பிறப்பு,அவை நிலம்,பை,முட்டை, வியர்வை, இவைகளிற் சனிப்பு.
நால்வகைப்பொருள்-அறம், பொருள், இன்பம், வீடு.
நால்வாயன்-இந்திரன், விநாயகன்.
நால்வாய்-யானை.
நாவடக்கம்-நாவெழாமற்பண்ணல்.
நாவடைத்தல்-பேசக்கூடாதிருத்தல்.
நாவணம்-உண்ணு.
நாவரசன்-மெய்தொண்ட ரறுபத்துமூவரிலொருவன்.
நாவரட்சி-நீர்த்தாகம்.
நாவரணை-ஓர்நோய்.
நாவரளுதல்-நீர்விடாய்த்தல்.
நாவலந்தீவு-சத்ததீவிலொன்று.
நாவலர்-கற்றவர், புலவர்.
நாவலோ-வரப்பற்குறிப்பு.
நாவல்-இரக்கக்குறிப்பு,ஓர்மரம்,அஃது ஆயர்பத்திலொன்று.
நாவறளை-நாப்புற்று.
நாவாசுத்தி-நாவேறு, வாக்குச்சுத்தி.
நாவாய்-இரேவதிநாள், மரக்கலம்.
நாவாள்-சரச்சுவதி.
நாவி-ஓர்மருந்து,கஸ்தூரிமிருகம்,நாபி
*நாவிகன்-கப்பற்காரன்.
நாவிதி-இந்திரன்சபை.
நாவிச்சட்டம்-கஸ்தூரி.
நாவிதச்சி-அம்பட்டச்சி.
நாவிதர்-அம்பட்டர்.
நாவிதன்-இராச்செல்லான், கார்த்திகைநாள், பூரநாள்.
நாவித்தண்டை-ஓர்பூடு.
நாவிநெய்-மயிர்ச்சாந்து.
நாவிப்பிள்ளை-ஓர்மிருகம்.
நாவிப்புழுகு-மான்மதம்.
நாவிழுதல்-பேசநாவெழாதுபோதல்
நாவு-நா. [தல்.
நாவுதல் - நாக்குவளைத்தல், நோம்பு

நாவுழலை-நாக்குளறுதல், நாவேறு, விடாய்.
நாவுழலையாடுதல் நாக்குழறுதல்.
நாவூறு-நாத்தோஷம்.
நாவேறு-நாவூறு.
நாவை-கலப்பையிறு.
நாழி - உட்டுளைப்பொருள், கொத்து, நாழிகை, பூரட்டாதிநாள்.
நாழிகை-விநாடியறுபதுகொண்டது.
நாழிகைப்பறை-நாழிகையறிவிக்க வடிக்கும்பறை.
நாழிகைவட்டம் } காலவளவைக்காட்டுமோர் யந்திரம்,சூரியகடிகாரம்
நாழிகைவட்டில் }
நாழிகைவெண்பா-அரசற்கு நாழிகை தோறுஞ்சொல்லும் வெண்பா.
நாழியோடு-குழலோடு.
நாளகம்-இலாமிச்சு.
நாளம் - உட்டுளை, நாள், பூந்தண்டு, பொன்னரிதாரம், வட்டம்.
நாளறு } நாள்முற்றும், நாள் வட்டம்.
நாளாசறுதி }
நாளடகம்-நாடோறும்.
நாளி-கள், நாய்.
நாளிகம்-தாமரை, வள்ளைக்கொடி.
நாளிகேரபாகம் - செய்யுளினோர் சுவை, அஃது ஆழமானபொருளுள்ளது.
நாளிகேரம் } தென்னமரம்.
நாளிகேளம் }
நாளிலி-புளிமா.
நாளுக்குநாள் } எப்பொழுதும்.
நாளும }
நாளுலத்தல்-இறத்தல், நாட்கழிதல்.
நாளெடுத்தல் - நன்முகூர்த்தங் குறித்தல்.
நாளெல்லை-அத்தமனம்,மரணகாலம்
நாளை-மற்றைநாள்.
நாளைநின்று-நாளைவிட்டுமற்றைநாள்.
நாளோலை-சாதகம்,சீதனக்குறிப்பு.
நாள்-இராப்பகல்கொண்டபொழுது, காலம், நன்முகூர்த்தம்,பெருநாள், முகூர்த்தம்.
நாள்தோறும்-நாளுக்குநாள்.
நாள்வட்டம்-நாட்சுற்று.
நாள்விடுதல்-சிவியம்பண்ணுதல்.
நாள்வேலை-நாட்பணிவிடை.

நாறல்-நாறுதல், பதனழிதல், பதன
ழிந்தது.
நாறற்பாக்கு-ஓர்வகைப்பாக்கு.
நாறளு-சடைச்சிச்செடி.
நாறு-நாறென்னேவல், நாற்று.
நாறுகட்டி-பெருங்காயம்.
நாறுகரந்தை-ஓர்வகைப்பூடு.
நாறுதல்-உண்டாதல், தோற்றுதல்,
மணத்தல், முளைத்தல்.
நாற்கணம்-நான்கினம், அவை இடை
யினம், உயிர், மெல்லினம், வல்லி
னம். [ங்கு.
நாற்கதி-தேவர், நரகர், மனிதர், வில
நாற்கவி-நாலுவிதக்கவி, அவை ஆசு,
சித்திரம், மதுரம், வித்தாரம்.
நாற்காலி-ஓர்வகையாசனம், நாற்கா
ன்மிருகம்.
நாற்காற்சீவன் } நாற்காலுள்ள
நாற்கான்மிருகம் } மிருகம்.
நாற்குணம்-ஆடவர்க்குணம்நான்கு, அ
வை அறிவு, ஓர்ப்பு, கடைப்பிடி, நி
றைவு, மகடூஉக்குணம்நான்கு, அ
வைஅச்சம், நாணம், பயிற்பு, மடம்
நாற்கோணம்-நாலுமூலை.
நாற்சதுரம்-சதுரங்கம்.
நாற்சந்தி-நாற்றெருக்கூடுமிடம்.
நாற்சி-ஞாற்சி.
நாற்பது-ஓர்பிரபந்தம், அஃது இடம்,
காலம், பொருளென்பவற்று ளொ
ன்றனை நாற்பது வெண்பாவாற்கூ
றுவது, நான்குபத்து.
நாற்பயன்- நாற்பொருளினால் வரும்
பேறு.
நாற்பொருள்-அறம், பொருள், இன்
பம், வீடெனப்படுபொருள்.
நாற்பான்-நாற்பது.
நாற்பொன்-ஆடகம், கிளிச்சிறை, சா
தரூபம், சாம்பூநதம், எனு நால்வ
கைப்பொன்.
நாற்றங்கால்-நாற்றுப்போட் டிருக்கு
மிடம்.
நாற்றமடித்தல்-நாற்றம்வீசுதல்.
நாற்றமெடுத்தல்-துற்கந்தம்வீசுதல்.
நாற்றம்-கள், துற்கந்தம், தோன்றுத
ல், வசம்பு, வாசனை.
நாற்றம்வைத்தல்-நாற்றமெடுத்தல்.
நாற்றிசை-கிழக்கு, தெற்கு, மேற்கு,
வடக்கு எனுந்திக்கு.

நாற்று-முளைப்பயிர்.
நாற்றுப்பாவுதல் } தானியம்முதலி
நாற்றுப்போடுதல் } ய பதிப்போடுதல்
நானம்-கத்தூரி, கவரிமா, குளித்தல்,
முழுகல், வாசனை.
நானா-பல.
நானாப்பிரகாரம் } பலவிதம். [ச்சல்.
நானாவிதம் }
நானாளிமாறன் - நாலாமுறைக் காய்
நானிலம்-நால்வகைநிலம், அவைகுறி
ஞ்சி, நெய்தல், மருதல், முல்லை.
நானூறு-நான்குதரம்நூறு.
நான்-யான்.
நான்கனுருபு -நாலாம்வேற்றுமையுரு
பு, அவை கு முதலியன.
நான்காம்வேதம்-அதர்வணம்.
நான்கு-நாலு.
நான்மணிமாலை-ஓர்பிரபந்தம், அஃது
வெண்பாவுங்கலித்துறையும் விரு
த்தமும் அகவலுமாக அந்தாதித்
தொடையா னாற்பதுபாடுவது.
நான்மருப்பியானை-ஐராவதம்.
நான்மருப்பியானையூர்தி-இந்திரன்.
நான்மறை-நான்குவேதம், அவை இ
ருக்கு, தைத்திரியம், சாமம், அதர்
வணம், அன்றியும் உபவேதம், நா
லு, அவை ஆயுள்வேதம், அருத்த
வேதம், தனுர்வேதம், காந்தருவ
வேதம் என்னப்படும்.
நான்மறையோன்-பிரமன், முனிவன்
நான்முகப்புல்-ஓர்புல்.
நான்முகன்-அருகன், பிரமன்.
நான்முகன்கிழத்தி-சரச்சுவதி. [சிலை.
நான்முகன்றேவி-சரச்சுவதி, மனோ
நான்முகன்வாழ்நாள்-பிரமகற்பம்.

நி

நி-இன்மை, உறுதி, எதிர்மறை, ஐய
ம், சமீபம், நிச்சயம், நிலைபேறு, பூ
ரணம், மிகுதி, இவைகளைக்காட்டு
மோருபசருக்கம், ஒரெழுத்து.
நிக-கிர்.
*நிகசம்-போசனம்.
நிகசலாகம்-ஏகாந்ததலம்.
நிகசோத்தியம்-பரிசுத்தம்.
*நிகடம்-சமீபம்.
*நிகணம்-ஓமப்புகை.
நிகண்டவாதம்-ஓர்சமயம்.

நிகண்டவாதி - நிகண்டவாத சமயத்தான்.
நிகண்டு - சொற்பயன் விளக்குநூல், தொகுதி, நிச்சயம், வேதாங்கமா றிலொன்று.
நிகதர்-பேச்சு.
நிகப்பிரபை-இருள்.
நிகமம்-கடைவீதி, நிச்சயம், பட்டினம், வியாபாரம், வியாபாரிக்கூட்டம், வேதம்.
நிகமனம் - உறுதிப்படுத்தித் தீர்ப்புச் சொல்லுதல்.
நிகமாகமம்-வேதாகமங்கள்.
*நிகமாச்சுவன்-பியன்.
நிகம்-பிரகாசம்.
நிகர-உவமைச்சொல், ஒளி.
நிகரணம்-விழுங்குதல்.
நிகரம்-கூட்டம், கொடை, கரம், திரவியம், விழுங்குதல்.
நிகரித்தல்-ஒப்பித்தல்.
நிகருஷணம்-அயல், முற்றம்.
நிகருமம்-நிகன்மம்.
நிகருவம்-அடக்கம்.
நிகர்-உவமை,நிகரென்னேவல், போர்
நிகர்தல்-ஒப்பாயிருத்தல்.
நிகர்தி-இருப்புலக்கை.
நிகர்த்தல்-ஒப்பாதல், பொருதல்.
நிகர்பக்கம் - உவமைப்பொருளிருக்குமிடம்.
நிகர்ப்பு-ஒப்பு, போர்.
நிகர்வம்-தாழ்மை.
நிகர்வி-தாழ்மையுள்ளோன்.
நிகர்வு-ஒப்பு.
நிகலம்-தோண்மேல்.
நிகழ்காலம்-வத்தமானகாலம்.
நிகழ்காலவினையெச்சம்- அகரவிகுதி பெற்று இடைநிலையோடு கூடாததானே நிகழ்காலம் காட்டிநிற்குஞ்சொல்.
நிகழ்ச்சி-ஒளி, வத்தமானம்.
நிகழ்தல்-ஒளிசெய்தல்,செல்லல், நடத்தல்.
நிகழ்த்துதல்-சொல்லுதல், நடப்பித்தல்.
நிகழ்வு-சம்பவிப்பு.
நிகளம்-சங்கிலி, யானைச்சங்கிலி, விலங்கு.
நிகற்பம்-நூறிகோடி.

நிகன்மம்-கொலை.
நிகாசம்-ஒப்பு.
நிகாதம்-வஞ்சகம்.
நிகாதன்-வஞ்சகன்.
*நிகாநம்-நிக்கித்தல்.
நிகாயம்-இலக்கு, கூட்டம், மருதஞ் சார்ந்தவூர், வாசஸ்தலம்.
நிகாயன்-கடவுள்.
நிகாரணம்-கொலை.
நிகாரணன்-கொலைகாரன்.
நிகாரம்-அவசங்கை, உயர்த்துதல், தப்பிதம், ஆற்றுதல், பனி, விரோதம், விழுங்குதல்.
*நிகாலம்-கழுத்து.
நிகிதம்-படை.
நிகிருதி - தரித்திரம், நிந்தை, பொல்லாங்கு.
நிகிலம்-எல்லாம்.
நிகீனன்-கீழ்மகன்.
நிகு-அரியுங்கருவி.
நிகுஞ்சம்-குகை, சிற்றில், புதர்வீடு.
நிகுட்டம்-தொனி.
*நிகுஞ்சகம்-ஓரளவு, ஓர்மரம்.
நிகுஞ்சனம்-கொலை.
நிகும்பம்-நேர்வாளம்.
நிகும்பலை-நிகும்பிலை.
நிகும்பன்-கும்பகன்னன்மகன்.
நிகும்பிலை - இந்திரசித்து யாகம்பண்ணினவிடம்.
*நிகுரம்பம்-சமூகம்.
நிகூடம்-ஆழம், மறைவு.
*நிகேசரம்-ஓர்மரம்.
நிகேசயம்-குவித்தல்.
நிகேதகம் } வீடு.
நிகேதம் }
நிகேதனம் - தேவர்கோயில், மருதஞ் சார்ந்தவூர், வீடு.
நிஸக்காரம்-அசட்டை, அவமதிப்பு.
நிக்கிரகணம்-கீழ்ப்படுத்தல்.
நிக்கிரகத்தானம்-தற்கத்திலெதிரியைச்சயிக்குநிலை.
நிக்கிரகம்-எல்லை, கட்டுதல், குற்றப்படுத்தல், கொலை, தண்டம், நாசம், வெறுப்பு.
நிக்கிரகன்-கிருட்டிணன்.
நிக்கிரகித்தல்-தண்டித்தல், வாதியைச்சயித்தல்.

*நிக்வணம் } விலை முதலியவற்
நிக்குவாணம் } றின்றொனி.
நிசரம்-நிச்சயம்பல்லைல்.
நிசங்கம்-அம்புக்கட்டு, இணக்கம்.
நிசஸ்தர்-நிசவாள்கள்.
நிசத்தன்-நிசஸ்தன்.
நிசமம்-நியமம்.
நிசமனம்-கேள்வி, பார்வை.
நிசமித்தல்-நியமித்தல்.
நிசம்-சொந்தம், நித்யம், மெய்.
நிசயம்-கூட்டம், நிச்சயம்.
நிசரோதம்-தள்ளுதல்.
நிசவான்-மெய்யன்.
நிசவு-நெசவு.
நிசற்கம் - உருவம், சிருட்டி, நிலைபரம், மாற்றுதல், விடுதல்.
நிசற்கசம்-பிறவிச்சுபாவம்.
நிசா-இரவு.
நிசாகசம்-வெள்ளாம்பல்.
நிசாகரன்-சந்திரன், சேவல்.
நிசாகேது-சந்திரன். [பாம்பு.
நிசாசரம்-இரவினடமாடுவன, கூகை,
நிசாசரர்-அசுரர், இராக்கதர், கள்வர்.
நிசாசரி-இராட்சதத்தி, கூகை, வேசி
நிசாசலம்-பனி.
நிசாடம்-ஆந்தை.
நிசாநினம்-இடம், மெய்.
நிசாதன்-கீழ்மகன்.
நிசாதி-மாலைவெளிச்சம்.
நிசாந்தநாரி-இல்லாள்.
நிசாந்தம்-விடியற்காலம், வீடு.
நிசாபதி-கற்பூரம், சந்திரன்.
நிசாபுட்பம்-இரவலரும்பூ, உறைந்த பனி, செவ்வாம்பல், பனி.
நிசாமணி-சந்திரன், மின்மினி.
நிசாமனம்-கேள்வி, நிழல், பார்வை.
நிசாரணம்-இராப்போர், கொலை.
நிசாரணன்-கொலைசெய்வோன்.
நிசாரம்-சாரமற்றது.
நிசார்த்தம்-மெய்.
நிசார்த்துனன்-சந்திரன்.
நிசானம்-ஒருகட்பறை.
நிசி-இரா, இருள், பொன், மஞ்சள்.
நிசிசரர்-அசுரர், இராக்கதர்.
நிசிதம்-இகழ்ச்சி, இரும்பு, கூர்மை.
நிசிதர்-அசுரர், ஈனர்.
நிசீதம்-அர்த்தசாமம், அம்பர், இரவு, கூர்மை.

நிசீதினி } இரவு.
நிசீத்தியை }
நிசும்பம் } கொலை.
நிசும்பனம் }
*நிசுலம்-அலரி, கவசம், குப்பட்டி.
நிசுலகம்-மார்க்கவசம்.
நிசுவாசம் - சிவாகமமிருபத்தெட்டினொன்று.
நிசூதனம்-அழித்தல்.
நிசேதம் } நிடேதம்.
நிஷேதம் }
நிசோலகம்-மார்ச்சட்டை.
*நிசோலனம்-தரிசனம்.
நிச்சத்தியதை-பொய்.
நிச்சத்துவம்-தத்துவமின்மை.
நிச்சம்-நித்தம்.
நிச்சயதாம்பூலம் - பெண்ணைவிவாகம் பண்ணிக்கொடுப்பதற் குடம்படிக்கையாக மணவாளனுக்குக்கொடுக்கும்பாக்குவெற்றிலை.
நிச்சயப்படுத்தல்-உறுதிப்படுத்தல், நிசப்படுத்தல்.
நிச்சயம்-உறுதி, மெய்.
நிச்சயார்த்தம்-மெய்ப்பொருள்.
நிச்சயித்தல்-நியமித்தல்.
நிச்சயிப்பு-தீர்மானம், நிச்சயம்.
நிச்சலத்தியானம் - அசைவற்ற தியானம்.
நிச்சலம்-அசைவின்மை, உறுதி, நித்தம்
நிச்சலன்-அசைவற்றவன், கடவுள்.
நிச்சாரகம்-காற்று.
நிச்சாலங்கம்-மலை.
நிச்சிதம்-நிசம்.
நிச்சித்தம் - மனோலயம், விசாரமின்மை.
நிச்சித்தல்-நிச்சயித்தல்.
நிச்சிந்தன்-அருகன், எண்ணமற்றவன், கடவுள்.
நிச்சிந்தை-எண்ணமற்றிருத்தல்.
நிச்சியம்-உள்ளி.
நிச்சிரேணி-ஏணி.
நிச்சிரேயசம்-முற்றத்துறத்தல்.
நிச்சுவசனம்-பெருமூச்சுவிடுதல், மூர்க்கங்கொள்ளுதல்.
நிச்சுவாசம்-சுவாசவொடுக்கம்.
நிஷக்கல்லு-சிதாங்கபாஷாணம்.
நிடதம் } அட்டமலையினொன்று, தேயமைம்பத்தாறி னொன்று.
நிஷதம் }

நிடலம்-நெற்றி.
*நிடலாட்சன்-சிவன்.
*நிடாலம்-நெற்றி.
நிஷூதனம்-கொலை.
நிஷூதனன்-கொலைக்காரன்.
நிடேதம்-தடை, மறு, விலக்கு.
நிடேகித்தல் / நிஷேகித்தல் } மணவாளனும் மணவாளியும் முதன் முதற்கூடுதல்.
நிட்கபடபத்தி-மெய்ப்பத்தி.
நிட்கபடம் - சத்தியம், மனச்சுத்தம்.
நிட்கம்-பொன்மைப்பொருடருமோருப சருக்கம், ஓர்பறை.
நிட்கம்பம்-அசைவின்மை.
நிட்கிருடபத்திரிகை-உறுதி, கடத்தைக்காகிதம்.
நிட்கிருடம் / நிட்கிருடை } நிச்சயம்.
நிட்கலை-பிரசுமித்தடங்கினவள்.
நிட்களம் / நிஷ்களம் } உருவின்மை, கலப்பின்மை.
நிட்களங்கம்-சுத்தம்.
நிட்களர்-கடவுள், சுத்தமுடையோர்.
நிட்காபட்டியம்-கபடமின்மை.
நிட்காமியம்-விருப்பின்மை.
நிட்காரணம்-காரணமின்மை.
நிட்கிரமம்-கூத்திலோர்விகற்பம்.
நிட்சணம்-முத்தங்கொடுத்தல்.
நிட்சேபம்-அடைவு, கொடுத்தல், புதையல், விடுதல்.
நிட்டாபரன் / நிட்டாவரன் } நியமநிட்டைதவறாதோன்.
நிட்டானுபூதி-நிட்டையிலனுகூலப்படுந்திவ்வியானுபவம்.
நிட்டீவனம்-வாந்தி.
நிட்டூரம் / நிஷ்டூரம் } கொடுமை.
நிட்டூரி-கொடியவள்.
நிட்டை / நிஷ்டை } அழிவு, இக்கட்டு, உறுதி, சரித்திரமுடிவு, சாதகம், நம்பிக்கை, நன்னடை, நிலைபரம், முடிவு, வாழ்நாள்.
நிட்பத்தி-பிறப்பு, முடிவு.
நிட்பரிக்கிரகன்-முற்றத்துறந்தோன்.
நிட்பலம்-பலமின்மை.
நிட்பாவம்-விசைக்காற்று, சவைக்கோ
நிட்பானம்-குடித்தல். [ல்.

நிணச்செருக்கு-மூர்க்கம்.
நிணத்தல்-கொழுத்தல், நெய்த்தல்.
நிணப்பு-கொழுப்பு, நெய்ப்பு.
நிணம்-கொழுப்பு.
நிணறு-உறக்கம்.
நிண்டுதல்-நிமிண்டுதல்.
நிண்ணயபாதம்-தீர்ப்பு.
நிண்ணயம்-உறுதி, தருக்கமுடிவு, தீர்ப்பு, நிச்சயம், நியமம், முறை.
நிண்ணயம்பண்ணுதல்-சத்தியம் பண்ணல், நிச்சயப்படுத்தல், நியமம்பண்ணல்.
நிண்ணரம்-சூரியன்பரியிலொன்று.
நிண்ணித்தல்-நிசப்படுத்தல்.
நிதர்துரு-மனிதன்.
நிதம்-நன்கு, நித்தியம்.
நிதம்பசூலை-ஓர்சூலை.
நிதம்பம்-அல்குல், இடைக்குந்தொடைமூலத்துக்குநடு, கரை, கற்பரிபாஷாணம், தோள், மலைப்பக்கம்.
நிதரிசனம்-காட்சியளவை, அஃதாவது தோன்றி நிகழ்ச்சியானவையாவது நிமையாவதுவருவதாய்த்தெரிவித்தல், திருட்டாந்தம்.
நிதலம்-கீழேழுலகிலொன்று. [கை.
நிதரிசனம்-உதாரணம், கட்டளை, வ
நிதனம்-அழிவு, தரித்திரம், தோற்றப்படாமை, பிறந்தநாளுக்கேழாநாள், மரணம்.
நிதாகம்-முதிர்வேனிற்காலம், வெப்பம், வெயர்வு.
நிதாகரன்-சூரியன்.
*நிதாந்தம்-மேன்மை, விடியற்காலம்.
*நிதாந்தன்-மேன்மையுள்ளவன்.
நிதார்த்தம்-நிசார்த்தம்.
நிதானம்-ஆதிகாரணம், கடவுண்மணிக்கு நவமணிக்கும்பொது, சரி, சுத்தம், சுமுத்திரை, நிச்சயம், நேர்மை, பசுக்கட்டுங்கயிறு, படை, பொன், மதிப்பு, முடிவு, மெய், வைத்தியசாத்திரத்தொன்று.
நிதானவான்-நேராளி.
நிதானன்-கடவுள்.
நிதானி-நேராளி.
நிதானித்தல்-நிச்சயித்தல், மதித்தல்.
நிதானிப்பு-அருத்தாபத்தி, மதிப்பு.
நிதி-ஆபரணத்திற்றேங்கனி, கடவுண்மணிக்கு நவமணிக்கும்பொது,

சமுத்திரம், திரவியம், நிறைவு, பொக்கிஷம், பொன்.
நிதிக்கிழவன்
நிதிக்கோன் } குபேரன்.
நிதிசாத்திரம்-புதைய லெடுக்கும் சாத்திரம்.
நிதித்தியாசனம்-சிந்திப்பு.
நிதிநாதன்
நிதிபதி } குபேரன்.
நிதிப்பொதி-பிளிக்கட்டு.
நிதியம்-கடவுள்மணி, திரவியம், பஞ்சலோகப்பொது, மணிப்பொது.
நிதியோன்
நிதிசன் } குபேரன்.
நிதுவனம்-கலத்தல், சந்தோஷம், விளையாட்டு.
நிதேசம்-கட்டளை, சமீபம், வார்த்தை.
*நிதேசிகி-திக்கு.
நித்தம்
நித்தல் } அனவரதம்.
நித்தரங்கசமுத்திரம்-திரையில்லாக்கடல்.
நித்தன்-அருகன், ஆத்துமா, கடவுள், சிவன்.
நித்திகம்-ஓர்பூடு.
நித்தியகதி-காற்று.
நித்தியகருமம்-நியமநிட்டை.
நித்தியகலியாணம் - நித்திய சந்தோஷம்.
நித்தியகலியாணி-பார்வதி.
நித்தியகாலம்-அனவரதகாலம்.
*நித்தியசுந்தரி-பிரமன்பட்டணம்.
நித்தியகுதகி - அபரக்கிரியை செய்வோன்.
நித்தியசேவகம்-நித்தியசேவை.
நித்தியதத்துவம்
நித்தியத்துவம் } அழிவின்மை.
*நித்தியதாரம்-நாடோறும் பண்ணும் தானம்.
நித்தியபிரளயம் - இடைவிடாத மரணம்.
நித்தியபூசை-தினபூசை.
நித்தியப்படி - எப்பொழுது நடக்குங் கட்டளைப்படி.
நித்தியமுத்தி
நித்தியமோட்சம் } மீளாதகதி.
நித்தியம்-அழியாமை, எப்பொழுதும், சமுத்திரம், மோட்சம்.

நித்தியயோகம்-தினஅதிட்டம், தினயோகம், அவை அதிகண்டம், அரிடணம், ஆயுஷ்மான், ஐந்திரம், கண்டம், சாத்தியம், சித்தம், சித்தி, சிவம், சுகர்மம், சுபம், சுப்பிரம், சூலம், சோபனம், சௌபாக்கியம், திருதி, துருவம், பரிகம், பிரமம், பிரீதி, வச்சிரம், வரியான், விட்கம்பம், வியதிபாதம, வியாகாதம், விருத்தி, வைதிருதி
நித்தியயௌவனம்-என்றுமிளமை.
நித்தியயௌவனை-துரோபதி.
நித்தியவிதி-ஓமக்கிடங்கு, நித்தியகருமம், பலிசெலுத்துமிடம்.
நித்தியவிநோதம்-அருகன் முக்குடையிலொன்று.
நித்தியாநித்தியம்-அழியாமையும்அழிவும், அழிவில்லதும் அழிவுள்ளதும்
நித்தியானத்தியாயம்-அட்டமி, அமாவாசி, சதுர்த்தசி, பௌர்ணமியென்னுந்தினங்கள்.
நித்தியானந்தம்-மோட்சம்.
நித்தியானந்தன்-கடவுள்.
நித்தியானம்-பார்த்தல்.
நித்திராசஞ்சனனம் - குறட்டை, சேடம்.
நித்திராதேவி-நித்திரைக்குரிய தேவி.
*நித்திராணன்-நித்திரைகொண்டவன்
நித்திராளு-நித்திரையாயிருப்பவன்.
நித்திராவிருட்சம்-இருள்.
நித்திரித்தல்-நித்திரைகொள்ளல்.
நித்திரை-கண்படை, அஃது மாயையாக்கை பதினெண்குற்றத்தொன்று.
நித்திரைச்சோப்பம் - நித்திரைத்துக்கம்.
நித்திலம்-முத்து.
நித்துவானம்-தொனி.
*நிநதம்-தொனி.
நிநாதம்-ஒலி.
*நிந்தகன்-பழிசொல்வோன்.
நிந்தம்-சொந்தம்.
நிந்தனம்-நிந்தனை.
நிந்தனை-நிந்தை.
நிந்தாட்சனை-நிந்தனை.
நிந்தாத்துதி - நிந்தித்தல்போற்றுதித்தல்.
நிந்திதம்-இகழ்ச்சி, தடை, பரிகாசம்
*நிந்திதன்-பழிக்கப்பட்டவன்.
நிந்தித்தல்-இகழ்தல்.

நிந்திப்பு } இகழ்ச்சி, பரிகாசம்.
நிந்தை }
நிந்தா-சாப்பிள்ளைபெற்றவள்.
நிபச்சொல்-கோட்சொல்,புறங்கூற்று
*நிபடம்-படித்தல்.
நிபடிதம்-வாசித்தல்.
நிபதனம்-இறக்குதல், விழுதல்.
நிபத்தி-உண்மை, நிச்சயம்.
நிபத்தியை-போர்க்களம்.
நிபந்தம்-கடமை, சலமதிப்பு, யாப்பு, வியாத்தி.
நிபந்தனசாத்திரம்- பலநூல்களிலிருந் தெடுத்துச்சேர்த்துப்பண்ணியிருக் கிறசாத்திரம்.
நிபந்தனம்-கட்டுதல், கட்டுப்படுதல், காரணம், பலநூல்களிலிருந்தெடு த்துத்திரட்டின புத்தகம், வினையி ன்வலிக்கட்டு.
நிபந்தனை-உறுதி, ஏற்பாடு, கடமை, கட்டு, குணடு.
நிபம் உவமை, கடம்பு, கபடம், காரணம்,கோலம்,நீர்ச்சாடி,புறங்கூறல்
நிபாகம்-சமைத்தல்.
நிபாடம்-படித்தல்.
நிபாதம்-இறக்குதல், மரணம், வழு, விடுதல், விழுதல்.
நிபாதனம்-கொல்லல், தகர்த்தல்.
*நிபாபம்-நீர்ச்சால்.
நிபாலனம-பார்வை, வழு,விழுந்தல்.
நிபானம்-கிணறு,நீர்த்தொட்டி, பாற் சாடி.
நிபிடம } நெருக்கம்.
நிபிடனம் }
*நிபீசம்-நெருக்கம்.
நிபுணத்துவம்-விரகு, விவேகம்.
நிபுணர் - கலைவல்லோர், விரகுமிக் கோர்.
நிபுணன் - கல்வியிற்சிறந்தோன், புத ன், மிகவல்லோன்.
*நிபூதம்-அநிதம.
நிப்பரம்-நிவ்ரம், பாரமின்மை.
நிமந்தம்-நிபந்தம்.
நிமம்-பிடர்.
நிமயம்-ஒன்றற்கொன்றைமாற்றல்.
நிமலம்-அழுக்கின்மை.
நிமலன்-கடவுள், சுத்தன்.
நிமி-ஓரரசன்.

நிமிடம் } காலநுட்பம்,அஃதுகாட் டை யெட்டிக்கொண்டது.
நிமிஷம் }
நிமிடகரம்-நடினம், நெருக்கம்.
நிமிண்டி - ஓரெறும்பு, தோல்லுமற் கவர்வோன்.
நிமிண்டுதல்-சாதுரியமாகக் கவெடு த்தல், கன்றுதல்.
நிமித்தகம்-முத்தம்.
நிமித்தகாரணம் - கர்த்திருத்துவவேது வாயிருப்பது.
நிமித்தகாரர் - வருங்காரியஞ் சொல் வோர்.
நிமித்தகாரன்-நிமித்திகன்.
நிமித்தசூடாமணி-ஓர்நூல்.
நிமித்தகருமம்-நிமித்திகக்கிரியை.
நிமித்ததானம் - தென்புலத்தார்க்குச் செய்யுஞ்சடங்கிலொன்று.
நிமித்தத்துவம்-ஏது.
நிமித்தம்-அடையாளம்,காரணம், ப ல்லி முதலியவற்றின்குறி, பொரு ட்டு.
நிமித்தர்-நிமித்தகாரர்.
நிமித்திகப்புலவன் } அரசர்க்குறுதி ச் சுற்றத்தொரு வன், புரோகித ன், வள்ளுவன்.
நிமித்திகன் }
நிமித்தியம்-நிமித்தம்.
நிமிரல்-நிமிர்தல்.
நிமிர்ச்சி-இறுமாப்பு, உறுதி, செகந டையிலொன்று, திடன், நிமிர்வு, மேட்டிமை.
நிமிர்தல் - உயர்தல், ஓடல், சோறு, நெருங்கல்,மேட்டிமைகொள்ளல், வளர்தல், வளைவுமாறல்.
நிமிர்த்தல் } உயர்த்துதல், வளை வமாற்றல்.
நிமிர்த்துதல் }
நிமிர்ந்தகூறு-அஞ்சாதகுணம், நேர்ந் தபடிசெய்யுங்குணம்.
நிமிர்ந்தநடை-மேட்டிமையானநடை
நிமிர்ப்பு-நிமிர்ச்சி.
நிமிர்வு-நிமிர்தல்.
நிமிளை-கூட்டுக்கல்.
நிமிலனம்-சிமிட்டு, மரணம்.
நிமிலிகை-சிமிட்டு, மாயம்.
நிமேஷகம்-மின்மினி.
நிமேயம்-நிமயம்.
நிமை-இமை.
*நிம்பம்-வேப்பு.

நிம்பம்-வேம்பு.
*நிம்பை-இலக்குமி.
நிம்மர்தம்-ஐக்கவினம்.
நிம்மாந்தரம்-சடனம், மிருதி.
நியக்கரணம்-நிந்தைப்படுத்தல்.
நியக்கு-மான்.
நியக்குரோதம்-அகலம், ஆலமரம், ஒருபாகம்.
நியதம்-அடக்கம், உறுதி, நிசம், நிதம், மூதவுரை.
நியதி-ஊழ், செய்கடன், தத்துவம் முப்பத்தாறினொன்று, நியமநிட்டை, நியமிப்பு, முறைமை, விதி.
நியதித்தல்-நியாசம்பண்ணல்.
நியதேந்திரியன்-இந்திரியத்தை யடக்குபவன்.
நியத்துதல்-விடுதல்.
நியமச்சிலேடை - சிலேடித்தவற்றை வரையறைப்படுத்தி நிச்சயிக்குமுருவகம்.
நியமஸ்தர்-நியமக்காரர், நியமித்த உத்தியோகஸ்தர்.
*நியமநம்-வேம்பு.
நியமநிட்டை-சந்தியாவந்தனம்.
நியமம் - அட்டயோகத்தொன்று, அவை தத்துவஞானமோர்தல், தவம், தூய்மை, தெய்வம்வழிபடல், மனமுயந்திருத்தல், இடம், இணக்கம், கடைவழக்கம், கடைவீதி, தெரு, தேவர்கோயில், நிச்சயம், நிருமிப்பு, நெடுந்தெரு, நேர்த்தி, மருதஞ்சார்ந்தவூர், முறைமை.
நியமனம்-கட்டளை, முறை.
நியமிதம்-நிச்சயம்.
நியமித்தல்-சங்கற்பித்தல், நிரூபித்தல், நிலைப்படுத்தல், பிறப்பித்தல்.
நியமிப்பு-நியமித்தல்.
நியர்ப்புதம்-பதினாயிரங்கோடி.
நியாக்கியம்-பொரித்தரிசி.
நியாசம்-கிரியை, யோகஞ் செய்தல், விடுதல், வேம்பு, வைப்பு.
நியாதம்-தின்றல், நியாசம்.
நியாதனம்-விழுத்தல்.
நியாமகன்-சாரதி, படகோட்டி.
நியாமம்-தவமுதலியசாதகம்.
*நியாமன்-சிவன்.
நியாயயீனம் }
நியாயக்கேடு } நீதித்தப்பு.
நியாயக்காரன்-நீதிமான்.
நியாயசபை-நியாயத்தலம்.
நியாயசாத்திரம்-நீதிசாத்திரம்.
நியாயதுரந்தரன்-நியாயசாத்திரி, நியாயம்பேசுவோன்.
நியாயத்தப்பு-நியாயத்தவறு.
நியாயத்தலம்-நீதித்தலம்.
நியாயத்தவறு }
நியாயப்பிழை } நியாயயீனம்.
நியாயநூல்-நீதிசாத்திரம்.
நியாயநெட்டூரம்-அநியாயம்.
நியாயநெறியாளன்-நீதிமுறை யுள்ளவன்.
நியாயபரிசோதகன்-நியாயத்திலே வல்லவன்.
நியாயபோதினி - தர்க்கசாத்திரங்களினொன்று.
நியாயப்பிரமாணம்-நீதிச்சட்டம்.
நியாயப்பிரமாணி }
நியாயப்பிரமாணம் } நியாய நெறியாளன்.
நியாயம்-இடம், கட்டுப்பாடு, சரி, சன்மார்க்கம், தருக்கசாத்திரம், தருக்கம், நீதி, போக்கு, மூலம், வழக்கு
நியாயவாதி-நியாயதுரந்தரன்.
நியாயவான்-நியாயதுரந்தரன், நீதித்தலைவன், நீதியுள்ளவன்.
நியாயவிதாயகன் - நியாயம் விதிப்போன்.
நியாயாசனம்-நியாயசிங்காசனம், நியாயவானிருக்குமிடம்.
நியாயாசாரன்-சற்புருடன்.
நியாயாதிபதி-நீதியதிபதி.
நியுதம்-இலட்சம்.
நியுத்தம்-முட்டியுத்தம்.
நியுத்தன்-ஒன்றிற்கேற்பட்டவன்.
நியுப்பிசம்-தருப்பையினாற்செய்தகருவை, வளைவு, வியாதி.
நியோகப்பிரயோசனம்-நியமவேது.
நியோகம்-கட்டளை, தத்துவம், தொழில், நிச்சயம், நியமம், முயற்சி.
நியோகித்தல்-ஏவுதல்.
நியோக்கியம்-தகுதி.
நியோசனம்-இசைவு, கட்டளை.
நிரங்குசம்-கீழ்ப்படியாமை.
நிரங்குசன்-கட்டுப்பாடற்றவன்.
நிரசம்-சாரமின்மை, சுவையின்மை.
நிரசவஸ்து-சுவைப்பொருளல்லாதன

நிரசனம்-அழித்தல், எதிரிடை, தள்ளுதல், பட்டினி, வாந்தித்தல்.
நிரசாபதி } நிரசவஸ்துக் கதி
நிரசாதிபன் } பன்.
நிரஞ்சனம்-இருளின்மை, நிறைவு.
நிரஞ்சனன் - அருகன், கடவுள், வியாபி.
நிரஞ்சனி-பார்வதி.
*நிரஞ்சலை-பொராலை.
நிரட்சதேசம்-இராப்பகனாழிகை சரியாயிருக்குந்தேசம், உட்டணதேசம்.
நிரட்சம்-பூகோளசமரேகை.
நிரட்சரம்-அட்சரமின்மை.
நிரதி-சம்பந்தம்.
நிரதிகாரன்-பக்குவமற்றவன்.
நிரத்தகம்-பயனின்மை.
நிரத்தல்-கலத்தல், நிறைதல்.
நிரதிமாலி-சிவன்.
நிரத்தியயம்-குற்றமின்மை.
நிரந்தம்-இடங்கழிமை.
நிரந்தரம்-இடையின்மை, எப்பொழுதும், நெருக்கம், மந்தி, மறைவு, வெளி
நிரந்தரன்-கடவுள்.
*நிரந்தரப்பியாசம்-இடைவிடாப்பழக்கம்.
நிரந்தரி-பார்வதி.
நிரந்தரித்தல்-நிறைதல், பரம்பல்.
நிரபத்திரவம்-வெட்கமின்மை.
நிரபம்-நீரின்மை.
நிரபராதம்-குற்றமற்றிருத்தல்.
நிரபராதி-குற்றமற்றவன்.
நிரபாயம்-அழிவின்மை.
நிரபிமானம்-அடக்கம், அபிமானமின்மை.
நிரபேட்சம் } விருப்பின்மை.
நிரபேட்சை }
நிரப்பம்-பூரணம்.
நிரப்பு-குறைபாடு, தரித்திரம், நிரப்பென்னேவல், நிறைகுடத்தைச்சுழப்போடுசெல், நிறைத்தல், நிறைநாழி, நிறைவு, மிடிமை.
நிரப்புதல்-திருத்தியாக்கல், நிறைத்தல், பரப்புதல்.
நிரப்போர்-இரப்போர், வறியோர்.
நிரம்பரம்-வெளி.
நிரம்பரன்-அருகன், கடவுள், சிவன், வத்திரமில்லாதவன்.

நிரம்பல்-நிறைதல்.
நிரம்பாச்சொல்-மழலைச்சொல்.
நிரம்பாமென்சொல் } மழலை.
நிரம்பாமொழி }
நிரம்புதல்-இருதவாதல், நிறைதல்.
நிரயம்-நிரையம்.
*நிரர்க்கலம்-தடையற்றது.
*நிரர்த்தகம்-வீணானது.
நிரல்-ஒழுங்கு.
நிரவகாசியம்-வெளி.
நிரவம்-தொனியின்மை.
நிரவலடித்தல்-உழுதநிலத்தை நீர்வாரடித்தல்.
நிரவல்-உழுதநிலத்தை நீர்வாரடித்தல், நிரவுதல்.
நிரவயியம்-நித்தியம்.
நிரவுநிலம்-நீர்வாரடித்தநிலம்.
நிரவுதல் - சரிக்கட்டுதல், நிரப்புதல், நிரம்புதல்.
நிரளியசாளை-காலாற்கல்.
நிரனிறை - ஒழுங்காகநிறுத்தல், நிரனிறையணிப்பொருள், அவை வரிசையாகச்சொல்லப்பட்டபொருள்கட்குச்சம்பந்தமுள்ளவைகளையும் முறையேசொல்லுதல்.
நிரன்வயன்-இல்லொழுக்கந் துறந்தோன்.
நிரா-நரா.
நிராகம்-உருவின்மை.
நிராகரணம்-மறுத்தல்.
நிராகரன்-அருபி, கடவுள்.
நிராகரித்தல்-எதிரல், தவட, தவறல், தள்ளுதல், மறுத்தல்.
நிராகரிப்பு-மறுப்பு.
நிராகாரம்-அருபம், ஆகாயம், உபவாசம், நிந்தை, நிராகரிப்பு, மோக்கம்
நிராகாரன்-சிவன், திருமால்.
நிராகிருதம்-உருபமற்றது, தள்ளுண்டது.
நிராகிருதி-தவவொழுக்கந் தவறினோன், தள்ளுதல், வடிவின்மை, வேதமுற்றக்கல்லாதபார்ப்பான்.
நிராகுலம்-அமைதி, சந்தோஷம்.
நிராக்குதல்-தேய்தல்.
நிராசம் - எதிரிடை, நம்பிக்கையின்மை, விடுதல்.
நிராசனம்-ஆசனமின்மை, கொல்லுதல், தள்ளுதல், துப்புதல்.

நிராசாரம்-அநாசாரம்.
நிராசாரன்-ஆசாரமிலான்.
நிராசை-விருப்பின்மை.
*நிராதபம்-வெயிலின்றியிருக்கை.
நிரந்தமை-இரவு.
நிராதரம் } ஆசையின்மை, ஆதரவின்மை, ஆதாரமற்றது
நிராதாரம் }
நிராதாரன்-ஆதாரமற்றவன், கடவுள்
நிராதேசம்-இறுத்தல், தானமற்றது, நட்டம்.
நிராமயம்-நோயின்மை, பன்றி.
நிராமயன்-கடவுள், நோயில்லான்.
*நிராமாலு-விளாமரம்.
நிராயம்-வரவின்மை.
நிராயுதன் - அருகன், ஆயுதமில்லாதவன்.
நிராலம்பம்-ஆதாரம்வேண்டாதது.
நிராலம்பன்-கடவுள்.
நிரியாணசக்கிரம்-மரணசக்கிரம்.
நிரியாணதிசை-மரணதிசை.
நிரியாணம்-சாவு, பிறவிநீங்கல், யானைக்கடைக்கண்.
நிரீச்சுவரசாங்கி-கடவுளில்லையென்னுஞ்சமயி.
நிரீச்சுவரசாங்கியம் } சூனியவாதம்.
நிரீச்சுவரவாதம் }
நிரீட்சணசுத்தி-கண்ணூறுகழிப்பு.
நிரீட்சணம்-பார்வை, மதிப்பு.
நிரீட்சமாணம்-நம்பிக்கை, பார்த்தல்.
நிரீட்சிதம்-காணப்பட்டது.
நிருகேசரி-நரசிங்கம்.
நிருசத்தன்-இராட்சசன்.
நிருசிங்கம்-நரசிங்கம்.
நிருணயம்-நியமிப்பு.
நிருணித்தல்-நிண்ணயம்பண்ணுதல்.
நிருதர்-இராக்கதர்.
நிருதாட்சணியம் - கண்ணோட்டமின்மை.
நிருதி - இராக்கதத்தி, தென்மேற்றிசைப்பாலன், முதலெழுவள்ளலிலொருவன்.
நிருதிதிசை-தென்மேற்றிசை.
நிருதூளி-பராகம்.
நிருத்தமண்டபம்-நடனசாலை.
நிருத்தமாது-நாடகக்கணிகை.
நிருத்தம்-கூத்து, அஃது கலைஞானமறுபத்து நான்கினொன்று, பதம்பிரித்தல், வேதவியாத்தி, வேதாகமமாதினொன்று.

நிருத்தன்-கூத்தன், சிவன்.
நிருதாட்சிணியம்-அபட்சநோக்கு.
நிருத்தாதனம்-ஒருகாலூன்றிநிற்பது.
நிருத்தியலங்காரம் - பிறிதிலே நவிற்சியணி.
நிருநரன்-நரசிங்கம்.
நிருநாசம்-அழியாமை.
நிருநாசன்-அழிவில்லோன், கடவுள்.
நிருநாமன் - அருகன், கடவுள், நாமமிலி.
நிருபதி-அரசன், குபேரன்.
நிருபத்திரவம்-உபத்திரமின்மை.
நிருபம் - கட்டளை, காகிதம், நிர்வை, நியமம்.
*நிருபமம்-உவமையின்மை.
*நிருபமன்-ஒப்பில்லாதவன்.
நிருபவல்லவை-இராசாத்தி.
நிருபன்-அரசன்.
நிருபாதனம்-துணைக்காரணமின்மை
நிருபாதி-தடையின்மை.
நிருபாதிகம்-தடையற்றது.
நிருபாவர்த்தம்-ஒரிரத்தினம்.
நிருபித்தல்-நியமித்தல்.
நிருபூசல்-மும்மரிப்பு.
நிருமதம்-மதமில்லாயானை.
நிருமலம்-மாசின்மை.
நிருமலன்-அருகன், கடவுள்.
*நிருமலோபலம்-படிகக்கல்.
நிருமாலியம் - பூசித்துக்கழித்த பொருள்.
*நிருமாலியை-ஓர்நூல்.
நிருமாணம்-நிருமித்தல்.
நிருமிதம்-நியமிப்பு.
*நிருமிதி-நிருமாணம்.
நிருமித்தல்-நியமித்தல்.
*நிருமுத்தம்-தோலுரித்த பாம்பு.
நிருமூடம்-மிகவறிவின்மை.
நிருமூடன்-மிகவறிவில்லான்.
நிருமூலம்-கட்டழிதல்.
நிருவகம்-நிருவாகம்.
நிருவகித்தல்-ஒழுங்காகநடத்தல், தாங்குதல், நிலைப்படுத்தல்.
*நிருவபணம்-கொடுத்தல்.
நிருவராகம்-திருட்டினைனது வராகாவதாரம்.
நிருவாகங்கட்டுதல்-நிருவாகித்தல்.
நிருவாகம்-உண்மை, பேர், செவ்வை, நிலைமை, பராமரிப்பு, பொறுப்பு.

நிருவாகி-நிர்வாகி, முகாமைக்காரன்.
நிருவகித்தல் - சரிப்பட நடத்துதல், சேரச்செய்தல்.
நிருவாசம்-குடியிராமை.
நிருவாணதீட்சை-ஓர்தீட்சை.
நிருவாணம் - கலையின்மை, நன்மை, மோக்கம்.
நிருவாணி-அருகன், சிவன், நக்கன்.
நிருவிகற்பக்காட்சி-ஒருமையாயறிதல்
நிருவிகற்பசமாதி-ஓர்யோகநிலை.
நிருவிகற்பம்-ஒருமையுணர்ச்சி.
நிருவிகாரம்-விகாரமின்மை.
நிருவிகாரி-கடவுள், விகாரமற்றவன்.
நிருவிக்கினம்-இடையூறின்மை.
நிருவிசாரம்-கவலையின்மை.
நிருவிடம் } ஓர்மருந்து.
நிருவிஷம் }
நிருணம்-தூக்கம், நிச்சயம், வெளிப்படைவசனம்.
நிருடபசுபந்தம்-யாகமிருபத்தெட்டிலொன்று.
நிருபணம்-ஆராய்தல், நிசமம், பார்வை.
நிருபம்-இருபம்.
நிருபன்-கடவுள்.
நிருபிதம்-ஆராயப்பட்டது, காணப்பட்டது.
நிருபித்தல்-ஆராய்தல், நிரூபித்தல்.
நிரேச்சுரசாங்கியம் } நிரீச்சுரசாங்கியம்.
நிரேச்சுவரசாங்கியம் }
நிரை-ஒழுங்கு, ஓர்விளையாட்டு, நிரையசை, நிரையென்னேவல், பசுக்கூட்டம், பசுப்பொது, படைமுன்னணி, படைவகுப்பு.
நிரைகவர்தல்-சத்துருக்கள்காலிகளைக்கவர்தல், அஃது புறப்பொருட்டுறையிலொன்று.
நிரைச்சம்-அடைவு, ஓர்குரு, படைமுன்னணி, படைவகுப்பு.
நிரைதல் - ஒழுங்கு, நிரவுதல், நிரையாக்கல், வியாபாரப்பொருளைப் பலவிடத்தும் பரிமாறுதல்.
நிரைத்தல் - ஒழுங்காய்நிறுத்தல், வியாபாரப்பொருளை யிலாபத்துக்குப் பலவிடத்துங்கொடுத்தல்.
நிரைநிறை-நிரனிறை.
நிரைமீட்டல்-பசுகவர்கவர்ந்த காலிகளைத் திரும்பக்கவர்தல்.
நிரையசை - குறிலிணைந்துங் குறினெடிலிணைந்துங்குறிலிணை யொற்றடுத்தும் குறினெடி லொற்றடுத்தும் வருமசை.
நிரையம்-நரகம்.
நிரையாடல்-நிரைவிளையாடுதல்.
நிரையொன் றாசிரியத்தளை-நிரையசையிலேவந்துவரு மாசிரியத்தளை, அஃது இயற்சீர்களொன்றும் பலவுந் தம்முளொத்துநின்ற சீரினிற்றசை நிரையாய்நிற்கவருஞ் சீர்முதலசை நிரையா யொன்றிவரப்பெறுவது.
நிரைவிளையாடுதல்-ஓர்விளையாட்டு.
நிரோட்டம் } ஓர்கவி.
நிரோட்டி }
நிரோதம்-அழிவு, தடை, வெறுப்பு.
நிர்-உறுதிப்பொருளையு நீக்கப்பொருளையுந்தருமோருபசருக்கம், அஃது நிரு என்றும், நிர்என்றும் வழங்கு[ம், வெளி.
நிர்க்குண்டி-நிற்குண்டி..
நிர்ப்பந்தம்-நிற்பந்தம்.
*நிர்வஹணம்-நிர்ஷடை.
*நிர்வர்ணநம்-தரிசநம்.
*நிர்வாசகம்-கொல்லுதல்.
*நிர்வாதம்-காற்றின்மை, நிந்தை.
*நிர்வாபணம்-கொலை, தாநம் கொடுத்தல்.
*நிர்விவாரம்-யாவெக்காதினடி.
*நிர்வீரம்-வீரமின்மை.
நிலக்கணம் - மூன்றுநிரையசை யடுத்துவருஞ்சொல்.
நிலக்கறையான்-ஓர்கறையான்.
நிலக்கன்று-சிறுபயிர்.
நிலக்காளை-ஓர்மூட்செடி.
நிலக்காளான்-ஓர்காளான்.
நிலக்குமிழ்-ஓர்செடி.
நிலக்குறி-நிலச்சாத்திரத்தோர்பகுதி.
நிலக்கூந்தல்-ஓர்பூடு.
நிலக்கொதி-நிலப்புழுக்கம்.
நிலச்சார்பு } நிலச்சாடை.
நிலச்சார்வு }
நிலத்தரசுகாரன்-சுயாதிபதி, தேசத்தலைமையுடையோன்.
நிலத்துளசி-ஓர்துளசி.
நிலந்தட்டி-நிலமடிக்கும்பலகை.
நிலபாகல்-ஓர்பூடு.
நிலபாவாடை-நிலத்திலிடக்க விரிக்கும்புடைவை.

நிலப்பனை-ஓர்பூடு.
நிலப்பிளப்பு-கமர்.
நிலப்புழு-ஓர்புழு.
நிலப்பெயர்ச்சி } நிலவித்தியாசம்.
நிலப்பெயர்த்தி }
நிலப்பேதம் }
நிலப்பொட்டு-ஓர்வகைக்காளான்.
நிலமகள்-பூமிதேவி.
நிலமகன்-செவ்வாய்.
நிலமட்டம்-தரைமட்டம்.
நிலமண்-வீட்டின்சார்மண்.
நிலமண்டில வாசிரியப்பா-அகவற்பாவினொன்று, அஃது எல்லாவடியுமொபொத்த நாற்சீரடிகளாக வரு[வது.
நிலமதிப்பு-தரைமதிப்பு.
நிலமயக்கம்-தரைக்கலப்பு.
நிலமறிதல்-ஓர்வித்தை.
நிலமிதி-நாட்டுவசதி.
நிலமெடுத்தல்-மனைமுதலியவற்றிற்கு நிலங்குறித்தல்.
நிலமை-நிலவரதனம்.
நிலம்-இடம், தேசம், பூமி, அஃது பஞ்சபூதத்தொன்று.
நிலம்பி-கொசுகு.
நிலம்பிரண்டி-ஓர்பூடு.
நிலம்பிரண்டுதல்-நிலத்தைச் சுரண்டுதல்.
நிலயம்-இடம், இலக்கு, கூத்து, கோவில், குடல், நிலை, பூமி, மருதநிலம், வாசகம்.
நிலயனம்-நிலையம்.
நிலவரி-நிலவிறை.
நிலவல்-ஒளிசெய்தல்.
நிலவலையம்-பூமி.
நிலவறை-நிலக்குகை.
நிலவாகை-ஆவிரை, நிலபாகல்.
நிலவாசி-நிலப்போக்கு.
நிலவாடகை-நிலவாடை.
நிலவாரம்-தரைவாரம்.
நிலவாவிரை-நிலாவிரை.
நிலவிளா } ஓர்மரம்.
நிலவிளாத்தி }
நிலவிறிசு-ஓர்வாணம்.
நிலவிரியம்-பூநீறு.
நிலவு-ஒளி, சந்திரப்பிரபை, சந்திரன், நிலவென்னேவல்.
நிலவுதல்- ஒளிசெய்தல், கீர்த்திமுதலிய பரம்பல், விசாலித்தல்.
நிலவுநாழிகை-நிலவினடிகொண்டு பிரமாணிக்குநாழிகை.
நிலவுமரி-ஓர்பூடு.
நிலவூறல்-நிலவூறலி.
நிலவெடுப்பு-முதலாமுழவு.
நிலவெழுத்து - பழகுவதற்காக நிலத்திலெழுதுமெழுத்து.
நிலவெறித்தல்-நிலவொளிகாலல்.
நிலவேம்பு-சிரியாத்நுச்செடி.
நிலவேர்-பூநாகம்.
நிலன்-நிலம்.
நிலா-நிலவு.
நிலாக்காலம்-நிலாவெறிக்குங் காலம்.
நிலாக்காலுதல்-நிலவுவீசல்.
நிலாக்கிரணம்-சந்திரகிரணம்.
நிலாக்கொழுந்து-இளம்பிறை.
நிலாமணி-சந்திரகாந்தம்.
நிலாமண்டபம்-நிலாமுற்றம்.
நிலாமண்டலம்-சந்திரமண்டலம்.
நிலாமுகி } சகோரம்.
நிலாமுக்கி }
நிலாமுற்றம் - நிலாக்காலத் துலாவச்செய்யும் வீட்டின்வெளி.
நிலாவிரை-ஓராவிரை.
நிலாவுதல்-நிலவுதல்.
*நிலிஞ்சிகை-பசு.
*நிலிம்பன்-தேவன்.
நிலுவை-இறுத்துமிஞ்சினதொகை.
நிலை-ஆபரணத்திற்றொங்கணி, இடம், உலாசம், கதவுநிலை, குணம், சாலை, தொழில், நிச்சயம், நிலைக்கல், நிலைபரம், நிலைபேறு, நிலைப்பரப்பு, நிலையென்னேவல், நிற்குந்தானம், நேரம், பரப்பு, பூமி, பொழுது, மார்க்கம், முறைமை, யுத்தநிலை, அவைஆலீடம், பிரத்தியாலீடம், பைசாசம், மண்டிலம்.
நிலைகலங்குதல்-தடுமாறல்.
நிலைகுலைதல்-நிலைகெடுதல்.
நிலைகொள்ளுதல்-நிலைப்படுதல், நிலையூன்றுதல்.
நிலைகோலுதல்-அணிகோலுதல், இடந்தேடுதல்.
நிலைக்கடகம்-பெருங்கடகம்.
நிலைக்கண்ணாடி-ஓரிடத்தினிறுவியிருக்குங்கண்ணாடி.
நிலைக்கல்-ஆட்டுக்கல்.

நிலைக்களப்போலி - ஒரெழுத்துநின்றவிடத்தில் அதற்கீடாய்வருமிற்கு மெழுத்து.
நிலைக்களம்-நின்றவிடம். [டி.
நிலைக்குடி-வெகுநாளிருக்கும் பழையகு
நிலைக்குத்தறல் - அசையாதுநிற்றல், குடியேறுதல், பயிர்கள்நிலைத்துப் போதல்.
நிலைதடுமாறல்-நிலைகலங்குதல்.
நிலைதல்-சம்பவித்தல், நிலைப்படல்.
நிலைதவறுதல் } நிலைகெடுதல்.
நிலைதளம்புதல் }
நிலைத்தண்ணீர்-கட்டுத்தண்ணீர்.
நிலைநதல்-நிலைக்குத்துதல், நிலைபெறுதல், நின்றுபோதல்.
நிலைத்தேர் - அலங்காரத்துக்குச்செய்து ஓரிடத்தில் நிறுத்தப்பட்டிருக்குந்தேர்.
நிலைநிறுத்துதல்-ஏற்படுத்துதல், நிலைப்படுத்தல்.
நிலைநிற்றல்-நிலைபெறுதல், பிடித்தபிடிவிடாதுநிற்றல்.
நிலைபரம்-உறுதி, நிலைமை.
நிலைபிடித்தல்-வளம்பிடித்தல்.
நிலைபெறுதல்-உறுதியாய்த்தங்கல், திடங்கொள்ளுதல்.
நிலைபெறுத்தல் } காத்தல், நிலைநிறுத்துதல்.
நிலைபெறுத்துதல் }
நிலைபேறு-அசையாமை, உறுதி, ஆன், நிச்சயம், மானம், மோக்கம்.
நிலைபோடுதல்-அடிப்போடுதல்.
நிலைப்படுதல்-நிசப்படுதல், நிலைநிற்றல்.
நிலைப்படுத்துதல்-திரமடைவித்தல், நிர்மாணம்பண்ணுதல், நிசப்படுத்துதல், பிரியாத தங்கப்பண்ணுதல்.
நிலைப்பரப்பு-நிலையிலாச்சம்.
நிலைப்பு-திடங்கொள்ளுதல், தொடர்ந்தேற்றி, நிலை.
நிலைமன் - இடையிலே போடப்படாதியல்பாயுள்ளமண்.
நிலைமண்டிலவாசிரியப்பா-நிலைமண்டிலவாசிரியப்பா.
நிலைமண்டுதல்-பிரியாதிருத்தல்.
நிலைமாறுதல் - இடமாறுதல், தொழின் முதலிய மாறுதல், புணர்ச்சிவிகாரத்தொன்று, அஃது எழுத்து முதலிய மாறிநிற்றல், (உம்) (வைகாசி வைசாகி.)

நிலைமை-இயல்பு, உறுதி, நிலையாதனம், நிலை, மெய்.
நிலைமொழி-புணர்ச்சிக்கண் முதனிற்குமொழி.
நிலையகம்-இருப்பிடம், மனை.
நிலையங்கி - உடல்முற்றுமூடுகிற சட்டை.
நிலையம்-இருப்பிடம், இலக்கு, குறித்தவிடம், தேவர்கோயில், வீடு.
நிலையழிதல்-தோற்குதல், நிலைகெடுதல்
நிலையழிவு-தோல்வி, நிலைகேடு.
நிலையறிதல்-எண்ணமறிதல், நிலைபரமறிதல்.
நிலையாடி-செய்வார்கருவியுளொன்று
நிலையாநீர்-பெருகுநீர்.
நிலையாமை - அநித்தியம், உறுதியின்மை.
நிலையிடல்-நிலைப்படுதல்.
நிலையிலாச்சம்-வாகுவிளைப்பாடு.
நிலையின்மை-நிலையிலாமை.
நிலையுடைமை-உறுதி.
நிலையுமல்-பருமுமல்.
நிலையுரல்-பருவிரல்.
நிலையூன்றுதல்-பலப்படுதல், பிரியாதிருத்தல், வேரூன்றுதல்.
நிலைவரம்-நிலைபரம்.
நிலைவிளக்கு-சட்டவிளக்கு.
நில்லாமை-அநித்தியம், உறுதிப்படாமை, தவறுதல்.
நிவகம்-திரள்.
நிவசதம்-கிராமம்.
நிவசதி-வீடு.
நிவசனம்-புடவை, வீடு.
நிவத்தல்-உயர்தல், உயர்த்தல்.
நிவபனம்-அபரக்கிரியையி லொன்று.
நிவப்பு-உயர்ச்சி.
நிவரை-கன்னி.
நிவர்தல்-உயர்தல்.
நிவர்த்தனம்-இருநூறுமுழநீள மகலங்கொண்டது, கொடுத்தல், தாமதித்தல், திரும்புதல்.
நிவர்த்தித்தல்-விட்டுநீங்குதல்.
நிவறல் } கூடுதல், சுருங்குதல்,
நிவறுதல் } திரளுதல், ஒடுக்கம்.
நிவாசம்-இருப்பிடம்.
*நிவாசனம்-வீடு.
நிவாசித்தல்-வாசம்பண்ணல்.
நிவாதக்கவசர்-தோயமாபுரத்தசுரர்.

*நிவாததீபம் - காற்றில்லாவிடத்திட்ட விளக்கு.
*நிவாதம்-காற்றின்மை.
நிவாபம்-சிராத்தம்,பிதிர்தருப்பணம்.
நிவாரணம்-தடை, நீக்கல், பிராயச்சித்தம், விடுதல்.
நிவாரம்-தடை.
*நிவிராகன்-மிகுவிருப்புள்ளோன்.
நிவிர்த்ததாளம்-நவதாளத்தொன்று.
நிவிர்த்தம்-தடை, துறத்தல்.
நிவிர்த்தாத்துமன்-தவத்தி, விட்டுணு.
நிவிர்த்தி-துறவு, பிராயச்சித்தம்.
நிவேசம்-உடுப்பு, உட்புகுதல், ஒப்புவித்தல், கலியாணம், பாளயம், பெரியோருறைவிடம், வீடு.
நிவேசனம்-ஊர், பட்டினம், வாசல், வீடு.
நிவேதனம்-ஒப்புவித்தல், கொடுத்தல், தேவர்க்குச்சமர்ப்பிக்கு நைவேத்தியம், பேசுதல்.
நிவேதித்தல்-நைவேத்தியஞ்செய்தல்
நிவேத்தியம்-நைவேத்தியம.
நிழலி-காற்று.
நிழலிடுதல்-நிழல்செய்தல்.
நிழலுதல்-சாய்கைவிழுதல், நிழல்செய்தல்.
நிழலுலர்த்தல்-நிழலிற்காயவைத்தல்
நிழலொதுக்கு-நிழற்சாய்ப்பு.
நிழல்-ஒளி, கிருபை, குளிர், சாயை, செல்வம், தஞ்சம், அன்பம்,தோற்றம், நிழலென்னேவல், நீதி, மரக்கொம்பு.
நிழல்விழுதல்-நிழல்வீசுதல்.
நிழற்சரிவு-சாயந்தரம், நிழற்சாய்வு.
நிழற்சாய்ப்பு-நிழலொதுக்கு.
நிழற்செய்தல்-சாய்கைவிழுதல், நிழற்படுத்தல், மந்தாரம்போடுதல்.
நிழற்பாடு-ஒதுக்கு.
நிழற்பாவை - திரைப்புடைவைக்குள் விட்டாட்டும்பாவை.
நிழற்பிடித்தல்-நிழற்படுதல்.
நிழற்போடுதல்-நிழலிடுதல்.
நிழற்றல் } நிழல்செய்தல், நன்
நிழற்றுதல் } மையாயிருத்தல்.
நிழனுவல்-ஓர்பூடு.
நிறங்கொடுத்தல்-நன்னிறம் பெயர்தல், வன்னங்கொடுத்தல்.
நிறத்தல்-நிறங்கொள்ளுதல்.
நிறப்பு-நிறத்தல்.
நிறப்பெயர்ச்சி-நிறப்பேதிப்பு.
நிறம்-ஒளி, குணம், சரீரம், மார்பு, வன்னம்.
நிறம்பெயர்தல்-நன்னிறமாதல், நிறம்பேதித்தல்.
நிறம்பேதலித்தல்-நிறமாறுதல்.
நிறம்போடுதல்-நிறங்கொடுத்தல்.
நிருல்-நரா.
நிறுநிட்டம்-நேரேநிற்றல்.
நிறுத்தம்-சாயாமனிமிர்ந்து நிற்றல்.
நிறுத்தல்-கோடாமை, நிறுக்குதல், நிறுத்துதல்.
நிறுத்திப்பிடித்தல்-தூக்கிப்பிடித்தல், நிலைநிற்றல்.
நிறுத்துக்கட்டுதல்-அளவிடுதல்.
நிறுத்துதல்-ஆட்படுத்தல், காக்குதல், தரிப்பித்தல், நாட்டுதல், நியமித்தல்,நிலைப்படுத்தல்,நிற்கச்செய்தல், பின்போடுதல்,முடித்தல்,வைத்தல்
நிறுபூசல்-நிருபூசல்.
நிறுப்பான்-தராசு, துலாராசி, நிறுப்பவன்.
நிறுப்பு-நிறுத்தல்.
நிறுவல்-நிலைபெறுதல், நிறுத்துதல்.
நிறுவாகம்-நிருவாகம்.
நிறுவாணம்-நிருவாணம்.
நிறுவிஷம்-நிருவிஷம்.
நிறுவுதல்-நிறுத்தல்.
நிறை-அழிவின்மை, ஆடூஉக்குண நான்கினொன்று, இடை, உறுதிப்பாடு, கற்பு, தயிரியம், துலாராசி, நியாயம், நிறுத்தலளவு, நிறையென்னேவல், நிறைவு, நீர்ச்சால், நூறுபலம், மாட்சிமை, முறையினிலைமை, வரையறை.
நிறைகருப்பிணி - பூரணசெற்பஸ்திரீ.
நிறைகலை-பூரணசத்தி,பூரணசந்திரன்
நிறைகுடம்-அட்டமங்கலத்தொன்று, அஃது பூரணகும்பம்.
நிறைகோல்-தராசுக்கோல்.
நிறைசபை-பெரியசபை.
நிறைசன்னி-மூடுசன்னி.
நிறைசூல்-நிறைகருப்பம்.
நிறைசெல்வன்-குபேரன்.
நிறைச்சல்-நிறைவு.
நிறைதப்பு-நீதிவழு.
நிறைதருநாறு-சிற்றில்.

நிறைதல்-பூரணப்படுதல், பெருகுதல்
நிறைத்தல்-நிறையச்செய்தல்.
நிறைநாழிவைத்தல் - பிள்ளைப்பேற்றுச்சடங்கிலொன்று.
நிறைநிலவு-பூரணசந்திரன்.
நிறைந்திடல்-நிறைதல்.
நிறைபாரம்-கனத்தசுமை, மிகுதி.
நிறைபூரணம்-முழுத்திருத்தி.
நிறைப்பு-நிறைத்தல்.
நிறைமணி-ஏரபிடேகம்.
நிறைமொழி - உறுதிச்சொல், பெரியோர்வாக்கு, மந்திரம்.
நிறைமொழியாளர் - பெரியோர், முனிவர்.
நிறையழிதல்-கற்பழிதல், மனத்திடன்கலங்குதல்.
நிறையளவு-நிறுத்தறியுமளவு.
நிறையறிகருவி-தராசு.
நிறையுள்ளவன்-ஞானி.
நிறைவாகரம்-நிறைவு.
நிறைவாரம்-மிகுதி.
நிறைவு-பூரணம், மாட்சிமை.
நிறைவேறுதல்-செய்துமுடிதல், முற்றுதல்.
நிறைவேற்றம்-முடிப்பு.
நிற்கதண்டனம்-தயாவிருத்திபதினொன்றிலொன்று, அஃது தண்டத்தினீக்கல்.
நிற்கல்-நிற்குதல்.
நிற்காரம் } இகழ்ச்சி.
நிஸ்காரம் }
நிர்க்குணசைவம்-ஓர்சைவம்.
நிர்க்குணத்துவம்-தேவதன்மை.
நிர்க்குணம்-குணரகிதம்.
நிர்க்குணன்-கடவுள்.
நிர்க்குண்டி-நிர்க்குண்டி.
நிற்கை-நிற்குதல்.
நிற்சரம்-அமுதம், மலையருவி.
நிற்சனம்-தனிமையிடம்.
நிற்பன } அசரம், அஃது மாமுதலியன.
நிற்பனவு }
நிர்ப்பாக்கியம்-ஏதுமின்மை.
நிர்ப்பீசம்-ஏதுவில்லாதது.
நிற்பு-நிலை.
நிற்புதம்-ஓரெண்.
நிற்றல்-ஒழிதல், தரித்தல், நிலைநிற்குதல், நிற்குதல்.
நினைதல்-நினைக்குதல்.
நினைத்தகாரியம்-எண்ணிய பொருள், இஃது சோபியசோதனையிலொன்று.
நினைத்தல்-ஆலோசித்தல், எண்ணல், தியானித்தல், மனதிற்கொளல்.
நினைப்பணி-ஓரலங்காரம், அஃதொரு பொருளைக்கண்டு ஒப்புமையிலதன் மற்றொருபொருளை நினைத்தல் (உம்) கஞ்சமலர் கோதைமுகங்காட்டும்.
நினைப்பாளி-ஞாபகமுள்ளோன்.
நினைப்பு-நினைக்குதல், அஃது மானையயாக்கை பதினெண்குற்றத்தொன்று, நோக்கம்.
நினைப்பூட்டு-நினைப்புக்குறிப்பு, நினைப்பூட்டென்னேவல்.
நினைப்பூட்டுதல்-நினைப்பித்தல்.
நினையப்பிரகாரம்-நிங்கூறு.
நினைவு-எண்ணம், கருத்து, நினைப்பு, நினைப்புக்குறிப்பு, நோக்கம்.
நினைவுகூர்தல்-நினைத்தல்.
நினைவுகேடு-மறதி.
நினைவுத்தப்பு-எண்ணப்பிசகு.
நினைவுமோசம்-நினைவுப்பிசகு.
நினைவுவைத்தல்-கருத்துவைத்தல்.
நினைவோடுதல்-ஞாபகம்வருதல்.
நின்மலம்-அழுக்கின்மை.
நின்மலன்-கடவுள், சுத்தன்.
நின்மலாவத்தை-மேலாவத்தை.
நின்மாலியம்-நிருமாலியம்.
நின்மூடன்-நிருமூடன்.
நின்றநிலை-ஒருநிலை, பிடித்தபிடி.
நின்றவடி-நின்றவிடம், மிதித்தவடி.
நின்றவிடந்திஞ்சான்-குருவிச்சை.
நின்று-அசைச்சொல், (உம்) சொல்லிநின்றான்.
நின்றுசிணுங்கி-சிறியாணங்கை.
நின்றுபயனின்மை - நூற்குற்றம்பத்தினொன்று.
நின்றுபோதல்-அற்றுப்போதல், தரித்துப்போதல்.
நின்றும்-ஐந்தாம் வேற்றுமையினீக்கவுருபுகளிலொன்று, (உம்) ஊர்தியினின்றிழிந்தான்.

நீ

நீ-நியென்னேவல், முன்னிலையொருமைப்பெயர்.
நீகம்-தவளை, மேகம்.

நிகாசம்-ஒப்பு, நிசம்.
நிகாமன்-நீசன்.
நிகாரம்-சங்கையீனம், பனி.
நிகான்-நிகாமன்.
*நிகேதனம்-வீடு.
நீக்கப்பொருள்-ஐந்தாம் வேற்றுமைப் பொருள்களிலொன்று, அஃது நீக்குதற்குரியபொருள்.
நீக்கம்-நீக்கல், நீளம், பிரிவு.
நீக்கல்-அகற்றல், கன்னறை, கொல்லல், நீக்கம், நீட்டல், நீளல், மாறுபாடு, மாற்றல்.
நீக்கவுருபு-நீக்கப் பொருளைத்தருமுருபு, அஃது ஐந்தாமுருபு.
நீக்கு-நீக்கல், நீக்கென்னேவல், விலக்கு.
நீக்குதல் - அகற்றுதல், கழித்தல், குலைக்குதல், நீத்தல், பிரித்தல்.
நீக்குப்போக்கு - இடைவெளி, வழிவகை.
நீங்கல் - இட்டம், நீங்குதல், பிரிதல், புறம்பு, போகல், மாறுதல்.
நீங்கள்-முன்னிலைப்பன்மைப்பெயர்.
நீங்காதவாசையோன்-சங்கு.
நீங்காமை-பிரியாமை.
நீங்குதல் - நீந்துதல், விடுதலையாகுதல், விலகுதல்.
நீசகம்-நீர்.
நீசகன்-கீழ்மகன்.
*நீசகை-நீசப்பெண், யாறு.
நீசக்கிரகம்-இராகு, கேது, உச்சத்திற்கேழாமிடக்கிரகம்.
நீசசாதி-கீழ்சாதி.
நீசத்தானம்-உச்சத்திற்கேழாமிடம்.
*நீசநடை-தீயொழுக்கம்.
நீசபங்கராசயோகம்-ஓர்யோகம்.
நீசப்படுதல்-ஈனகுணமுடைத்தாதல்.
நீசம்-ஈனம், உச்சத்திற் கேழாமிடம்.
நீசர்-கீழ்மக்கள்.
*நீசவச்சிரம்-ஓர்மணி.
*நீசன்-ஈனன்.
நீசவாகனம்-கழுதை.
நீசாரம்-கம்பளிப்புடவை, திரைச்சீலை, திரைப்படல்.
நீசிகை-கற்பசு.
நீச்சல்-நீந்தல்.
நீச்சு-நீந்துதல்.
நீச்சுத்தண்ணீர்-எட்டாநீர்.

நீஞ்சுதல்-நீந்துதல்.
நீஞ்சும்பிராணி-நீர்வாழ்வன.
*நீடம்-இருப்பிடம், குருவிக்கூடு.
*நீடசம்-குருவி.
*நீடசேந்திரன்-கருடன்.
நீடல்-நீளல், நெடுத்தல்.
நீடாணம்-கரி.
நீடாலைக்கோடு-குடாலைக்கல்.
நீடிக்கை-நீடிப்பு.
நீடித்தல்-நெடுகுதல்.
நீடித்திருத்தல்-நெடுங்காலத்திற் கிருத்தல்.
நீடிப்பு-நீடித்தல்.
நீடுதல்-செழித்தல், தாண்டல், நிலைத்திருத்தல், நீளுதல், நெடுங்காலத்திற்கிருத்தல்.
நீடுநினைந்திரங்கல் - அகப்பொருட்டுறையிலொன்று, அஃது தலைவியை மிகநினைந்து தலைவனிரங்கல்.
நீடூழி }
நீடூழிகாலம் } ஊழிகாலம்.
*நீடோர்பவம்-பறவை.
நீட்சி-நீளம்.
நீட்சிமை-நெடுமை.
நீட்டம்-நீட்சி.
நீட்டலளவை-கோல்முதலியவற்றானளத்தல்.
நீட்டலளவையாகுபெயர்- நீட்டியளத்தற்குரியகருவியின்பெயர் அதனாளக்கப்படுவதற்கு வழங்குவது, (உம்) தடி.
நீட்டல்-ஈதல், நீட்டுதல்.
நீட்டல்மானம்-நீட்டலளவை.
நீட்டாணம்-நீடாணம்.
நீட்டாள்-நெடுத்தவன், வேலையாள்.
நீட்டித்தல்-தாமதித்தல், நெடுகுதல், நெடும்பொழுதுசெல்லல்.
நீட்டு-நீட்டென்னேவல், நீளம், நெடும்பொழுது.
நீட்டுதல்-ஈதல், நாட்போடுதல், நீளச்செய்தல்.
நீட்டுப்போக்கு-அகலநீளம், செல்வமுதலியவற்றின்விசாலம்.
நீட்டுமுடக்கு-கொடுக்கல்வாங்கல்.
நீட்பம்-நீளம்.
நீணெறி-நீண்டவழி.
நீண்டகரா-நெடுங்கரா. [சொம்பு.
நீண்டகையானை - காண்டா மிருகச்

நீண்டது-நெடியது.
நீண்டவன்-விட்டுணு.
நீண்டாயம்-நீளம்.
நீண்டோன்-விட்டுணு.
நீண்மயல்-பெருமயக்கம்.
நீதக்காரன்-நீதவான்.
நீதச்சிலைக்குதம்-நீலாஞ்சனம்.
நீதத்தலம்-நீதம்விசாரிக்குமிடம்.
நீதபரிமளம்-நீதாங்கபாலனம்.
நீதம்-தானியம், நீதி, பாக்கியம்.
நீதவான் - நீதமுள்ளவன், நீதித்தலைவன்.
நீதன்-நீதிமான்.
நீதி-நியாயம், முறைமை, மெய்.
*நீதிகேடு-அநியாயம்.
நீதிசாத்திரம் - கலைஞான மறுபத்து நான்கினொன்று, நியாயநூல்.
நீதிசாரம்-ஓர்நூல்.
நீதிஞ்சன்-நியாயசாத்திரி.
நீதித்தலம்-நீதத்தலம்.
*நீதித்தவறு-நீதிப்பிழை.
நீதித்தீர்ப்பு-நியாயத்தீர்வை.
நீதிநூலவன் } அருகன்.
நீதிநூலி }
நீதிநூல்-நீதிசாத்திரம்.
நீதிநெறி-ஓர்நூல், சன்மார்க்கமுறை, சன்மார்க்கம்.
நீதிபரன்-அரசன், கடவுள், நீதிமான்.
நீதிமான்-நீதியுள்ளவன்.
நீதியதிபதி } நியாயாதிபதி.
நீதியாதிபதி }
நீதியறிந்தோன்-மந்திரி.
நீதியொழுங்கு-நீதிமுறை.
நீதிவழு-நியாயத்தப்பு, அஃது தாமதகுணத்தொன்று.
நீதிவிளக்கம்-நியாயவிசாரணை.
நீதிவிளக்குதல்-நியாயம்விசாரித்தல், நியாயம்வெளித்தல்.
நீத்தம்-வெள்ளம்.
நீத்தல்-ஒழுகல், துறத்தல், நீக்கல்.
நீத்தவன்-அருகன்.
நீத்தார்-நீத்தோர்.
நீந்து-நீந்தல், நீந்துபுனல்.
நீத்தோர்-துறவோர்.
நீந்தல் } கடத்தல், நீரிலிஞ்சுதல்.
நீந்துதல் }
நீந்துபுனல்-எட்டாநீர்.
நீபம் - உத்திரட்டாதிநாள், கடம்பு, வெண்கடம்பு.

நீப்பு-துறவு, பிரிவு.
நீமம்-ஒளி.
நீம்பல்-செழிப்பு.
நீயிர்-நீவிர்.
நீரசம்-தாமரை, மாதுளை.
நீரடி-நீரெட்டி.
நீரடைத்தல்-சலமடைத்தல்.
நீரடைப்பு-ஓர்நோய்.
*நீரதம்-மேகம்.
நீரதி-கடல், சாறு.
நீரத்தி-ஓர்மரம்.
*நீரநிதி-கடல்.
நீரம்-நீர்.
நீரரண் - அகழ், அஃது நான்கரணி னொன்று.
நீரரமகளிர்-நீரில்வாழுந் தெய்வப்பெண்கள்.
நீரருகல்-நீர்ச்சிறுப்பு.
நீரலரி-ஓரலரி.
நீரழிவு-ஓர்நோய்.
நீராகாரம்-நீர்த்தன்மை, பானகம்.
நீராசனம் } ஆலாத்தி, கண்ணூறுகழிக்குமோர்வகையாலாத்தி.
நீராஞ்சனம் }
நீராடல் - நானம்பண்ணல், நீர்கிலுக்குந் தேங்காய்.
நீராடுதல்-நானம்பண்ணல், நீர்விளையாடல்.
நீராட்டு-நீர்விளையாட்டு, முழுகவார்த்தல்.
நீராட்டுதல்-முழுக்காட்டுதல்.
நீராமம்-ஓர்நோய்.
நீராமை-ஓர்பிலந்தி, ஓர்நோய்.
நீராம்பல்-ஆம்பல், ஓர்நோய்.
நீராரை-நீருளாரை.
நீராலி-நீர்த்துளி.
நீராவி-கேணி.
நீராழி-கடல்.
நீராழிமண்டபம்-வசந்தமண்டபம்.
நீராளம்-நீராகாரமானது.
நீரிலாநிலம்-பாலை.
நீரிழிவு-நீர்ப்பாடு.
நீரிறக்கம்-நீர்வற்றம்.
நீருடும்பு-ஒருடும்பு.
நீருதிபாசம்-கடற்பாசி.
நீருபம்-ஆகாயம், காற்று.
நீருமரி-ஓர்பூடு.
நீருளாரை-நீராரை.

நீருள்ளி-வெண்காயம்.
நீருற்று-நீருறுதல்.
நீரொழுந்தல்-நீர்பெருகுதல்.
நீரெழுப்பு-நீர்ப்பெருக்கு.
நீரொட்டி-ஓர்மரம்.
நீரெரிப்பு-நீர்க்கடுப்பு.
நீரொலி-ஓசொலி.
நீரேற்றம்-ஓர்நோய், நீர்ப்பெருக்கு.
நீரோசை-கொண்டாட்டம், சந்தோஷம்.
நீரோடி-இருசாணாயு மிளைக்குமரம், மதகு.
நீரோட்டம்-நீர்ப்பாய்ச்சல்.
நீரோருகம்-தாமரை.
நீரோற்காரி-ஆவர்த்தம்.
நீர்-கடல், குணம், சாறு, தன்மை, நீரென்னேவல், நீவிர், புனல், இஃது அட்டமூர்த்தத்தொன்று, பஞ்சபூதத்துமொன்று, பூராடநாள்.
நீர்க்கடம்பு-ஓர்மரம்.
நீர்க்கடன்-திலதற்பணம்.
நீர்க்கடுப்பு-சலக்கடுப்பு.
நீர்க்கட்டு-நீர்மறிப்பு.
நீர்க்கட்டுதல்-கொப்புளமுதலியநீர்ப்பிடித்தல்.
நீர்க்கணம்-அட்டகணத்தொன்று, அஃது ஒருநேரசையுமிரண்டுநிரையசையுமடுத்துவருவது.
நீர்க்கமலி-அல்லி.
நீர்க்கரை-தண்ணீர்த்துறை.
நீர்க்கழிவு-நீரழிவு.
நீர்க்காகம் }
நீர்க்காக்கை } ஓர்புள்.
நீர்க்காசம்-ஓர்நோய்.
நீர்க்கால்-நீர்வாய்க்கால்.
நீர்க்காவி - நாளுந்தோய்க்கும் புடைவையிற்பற்றுநிறம்.
நீர்க்கிராம்பு-ஓர்பூடு.
நீர்க்கிளா-ஓர்கிளா.
நீர்க்கீழ்-உதையத்திற்குநாலாமிராசி.
நீர்க்குடம்-பூரணகும்பம், இஃது அட்டமங்கலத்தொன்று, இராசசின்னத்துமொன்று.
நீர்க்குட்டம்-ஓர்நோய்.
நீர்க்குண்டி-வெண்ணொச்சி.
நீர்க்குதல்-நீராதல்.
நீர்க்குமிழி - நீரிலெழும்புங்குமிழ்ப்பு வடிவு.

நீர்க்குளிரி-கல்லாரச்செடி.
நீர்க்குறிஞ்சா-ஓர்செடி.
நீர்க்குன்று-நத்தை.
நீர்க்கொதி-நீரெரிவு.
நீர்க்கொழுந்து-நீர்த்தலை.
நீர்க்கொள்வான்-கொப்புளிப்பான்.
நீர்க்கொள்ளுதல் }
நீர்க்கோத்தல் } நீர்பிடித்தல்.
நீர்க்கோத்தை-ஓர்பாம்பு.
நீர்க்கோவை-நீர்ப்பிடிப்பு.
நீர்க்கோழி-நீர்வாழுங்கோழி.
நீர்ச்சங்கு-ஓர்பூடு.
நீர்ச்சலவை - புடைவையைத் தோய்த்தல்.
நீர்ச்சாலை-நீர்விட்டுத்தேட்டுஞ்சாலை.
நீர்ச்சால்-தண்ணீர்பூரிக்குஞ்சால்.
நீர்ச்சாவி-நீரால்வரும்பதர்.
நீர்ச்சிக்கு-நீரடைப்பு.
நீர்ச்சிரங்கு-நீர்ப்புழு.
நீர்ச்சிறுப்பு-சிறுநீர்.
நீர்ச்சின்னி-ஓர்பூடு.
நீர்ச்சிலை-குளிசிலை.
நீர்ச்சுண்டி-கொடிநெட்டிச்செடி.
நீர்ச்சுழல் }
நீர்ச்சுழி } நீரிலுண்டாஞ்சுரிப்பு.
நீர்ச்சுனை-நீர்த்தடாகம்.
நீர்ச்சூலை-அண்டவாயு.
நீர்ச்செம்பை-ஓர்செடி.
நீர்ச்சேம்பு-ஓர்பூடு.
நீர்ச்சோறு-பழஞ்சோறு.
நீர்தூவுந்துருத்தி-நீர்விடுசிவிறி.
நீர்த்தல்-நீராதல்.
நீர்த்தாரை-சலதாரை, நீரோட்டம்.
நீர்த்தானம்-நீர்க்கீழ்.
நீர்த்திவலை-நீர்த்துளி.
நீர்த்துளி-நீர்ச்சொட்டு.
நீர்த்துறை-நீர்க்கரை.
நீர்த்தூம்பு-மதகு.
நீர்த்தோஷம்-சலதோஷம்.
நீர்நாய்-நாய்மீன்.
நீர்நாள்-பூராடம்.
நீர்நிதி-கடல்.
நீர்நிலை-குளம், தண்ணீரின்மட்டு, மடு.
நீர்நெட்டி-ஓர்பூடு.
நீர்நொச்சி-ஓர்நொச்சி.
நீர்பெய்கலன்-கமண்டலம்.
நீர்ப்பகன்றை-ஓர்பூடு.
நீர்ப்பஞ்சு-கடற்காளான்.

நீர்ப்பழுவன்-ஓர்நோய்.
நீர்ப்பரிசை-ஊமை.
நீர்ப்பறவை - நீரில்வாழும்பட்சி, அவை மின்னாப்புள்முதலியன.
நீர்ப்பலகை-புல்லாமணக்கு.
நீர்ப்பாக்கு-வாற்பாக்கு.
நீர்ப்பாடு-நீரழிவு.
நீர்ப்பாட்டுச்சன்னி-ஓர்சன்னி.
நீர்ப்பாம்பு-நீர்க்கோதை.
நீர்ப்பாய்ச்சல-ஓர்நோய், நீரோட்டம்
நீர்ப்பிடி
நீர்ப்பிடிப்பு } நீர்கொண்டிருத்தல்.
நீர்ப்பிரமியம்-நீர்க்கடுப்பு.
நீர்ப்பிளவை-ஓர்பிளவை.
நீர்ப்பீனசம்-ஓர்பீனசம்.
நீர்ப்பு-நீர்த்தல்.
நீர்ப்புடையன்-ஓர்பாம்பு.
நீர்ப்பூ-நால்வகைப்பூவிலொன்று, அஃது சலத்திலுண்டாம்பூ.
நீர்ப்புலா
நீர்ப்புல் } நீர்ப்புல்லாய்.
நீர்ப்பெருக்கு-நீர்ப்பாய்ச்சல்.
நீர்மட்டம்-சமமட்டம், சமமட்டம்பார்க்குங்கருவி.
நீர்மறிப்பு-பிரவநீர்த்தடை.
நீர்மாங்காய்-மாங்காயடைகாய்.
நீர்மிட்டான்-நீர்விட்டான்.
நீர்முகம்-நீர்ப்பாய்ச்சல்முனை.
நீர்முள்ளி-ஓர்முள்ளி.
நீர்மேனெருப்பு-கல்லுருவி.
நீர்மை-ஒப்புரவு, குணம், நிலைபரம்.
நீர்மோர்-ஓர்பானம்.
நீர்வஞ்சி-ஓர்வகைப்பிரம்பு.
நீர்வண்டு-நீரில்வாழ்வண்டு.
நீர்வரத்து-நீர்ப்பெருக்கு.
நீர்வழுக்கை-ஓர்நீர்ப்பூடு.
நீர்வளம்-நீர்ச்சிறப்பு, நீர்வயத்தினால் வருஞ்செல்வம்.
நீர்வள்ளி - சாற்றுவாரி, வெற்றிலைக் கொடி.
நீர்வற்றம்-நீர்வற்று.
நீர்வற்றற்றேங்காய் - கொப்பரைத்தேங்காய்.
நீர்வற்றுதல் - ஈரம்வற்றுதல், நீர்சுவறுதல்.
நீர்வாத்து-ஓர்பறவை.
நீர்வாழ்சாதி-நெய்தனிலமாக்கள், மீன்முதலியன.

நீர்வாழ்வன-எழுவகைப்பிறப்பி லொன்று, அஃது மீன்முதலியநீந்தும் பிராணி.
நீர்விடுதல்-பதனழிந்துநீராதல்.
நீர்விட்டான்-சாற்றுவாரி.
நீர்விழுதல்-இரத்தினகாந்திதளம்பல்.
நீர்விளையாட்டு-சலக்கிரீடை.
நீர்வேட்கை-நீர்த்தாகம்.
நீர்வேட்டல்-நீர்தாகித்தல்.
நீலகண்டம்-மயில்.
நீலகண்டன்-ஓர்பூரம், கொடியவன், சிவன், துருசி, முருங்கை.
*நீலகண்டாட்சம்-உருத்திராக்கம்.
நீலகண்டி-பாம்பினச்சுப்பல்லிலொன்று, பொல்லாதவள்.
*நீலகந்தி-ஓர்வகைக்கெம்பு.
நீலகமலம்-நீலோற்பலம்.
நீலகம்-கருப்பு, துருசு.
நீலகாசம்-கண்ணோயுளொன்று.
நீலகிரி-அட்டமலையிலொன்று.
நீலக்கண்ணாடி-நீலநிறக்கண்ணாடி.
நீலக்கத்தரி-ஓர்வழுதுணை.
நீலக்கல்-நீலரத்தினம்.
நீலக்காக்கட்டான்-ஓர்பூடு.
நீலக்காரம்-துருசு.
நீலக்காலி-அவுரி, ஓர்நண்டு.
*நீலக்கிராந்தை-விஷ்ணுக்கிராந்தை.
*நீலக்கிரீவன்-சிவன்.
*நீலக்கிரௌஞ்சம்-கருங்கொக்கு.
நீலங்கட்டுதல்-நீலந்தீர்தல்.
*நீலசம்புடம்-ஓர்வகைநாவல்.
நீலச்சால்-நீலநிறச்சாய முறவைக்குஞ்சால்.
*நீலதரு-தெங்கு.
நீலநிதி-குபேரனவநிதிகளிலொன்று.
நீலந்தர்-இராகம்பாடுவோர்.
நீலந்தீர்தல
நீலந்தோய்தல் } நீல்நிறம் போடுதல்.
நீலபங்கம்-கருஞ்சேறு.
நீலபடிகம்-பளிங்கு.
நீலபதுமம்-நீலோற்பலம்.
*நீலபத்திரம்-கருங்குவளை.
நீலபம்-சந்திரன்-தேனீ, முகில்.
நீலபாஷாணம்-ஓர்பாஷாணம்.
நீலபுட்பம்
நீலபுட்பிகை } அவுரி, எட்டிமரம், விட்டுணுகாந்தி.
நீலப்பணி - புடவையிலிடுநீலச்சாயம்.

நீலமணி-கன்மணிப்கருமணி, நீலரத்தினம், மரகதமணி.
நீலமணிகாசம்-கண்ணோயு ளொன்று.
*நீலமண்டலம்-திந்திரிச்சமரம்.
நீலமருந்து-அவுரி.
நீலமாதவன்-திருமால்.
நீலமிலிகை-மின்மினி.
நீலமேகம்-கிருண்டமேகம்.
நீலமேனியன்-இராமன், அருகன், விட்டுணு.
நீலம்-இருள், ஓர்நிறம், கருங்குவளை, கறுப்பு, காற்று, துருசு, நஞ்சு, நவமணியிலொன்று, நீலக்கட்டி, பனை.
நீலம்பற்றவைத்தல்-சூதகட்டுதல்.
நீலம்பாரித்தல்- விஷமுதலியவற்றாற் சரீரம் நீலவன்னமாதல்.
நீலராசன்-ஓரரசன்.
நீலராசாவத்தம்-ஓரிரத்தினம்.
நீலருத்திரன்-ஒருருத்திரன்.
நீலலோகிதன்-சிவன், பன்னோருருத்திரரிலொருவன்.
நீலவசனம்-சனி.
நீலவண்ணன்-சனி, விட்டுணு.
நீலவண்ணான்-சாயக்காரன்.
*நீலவஸ்திரம்-நீலப்புடைவை.
*நீலவத்திரன்-பலராமன்.
நீலவருணம்-சந்தமுகிலினொன்று, அஃது நீப்பொழிவது, நீலநிறம், மேகம்.
நீலவழுதலை-ஓர்வழுதலை.
*நீலவாசன்-சனி.
நீலன்-ஓரரசன், குரூரன், சனி.
நீலாக்காலி-ஓர்நண்டு.
*நீலாங்கம்-மலைத்தேள்.
*நீலாங்கு-புழு.
நீலாஞ்சனம்-கல்லீயம், கறுப்புக்கல், [துருசு.
நீலாஞ்சனை-மின்னல்.
*நீலாட்சம்-அன்னப்புள்.
நீலாப்பிரகம்-கருமணல்.
நீலாப்பிரம்-கருமுகில்.
நீலாம்பரன்-பலபத்திரன்.
*நீலாம்புசம்-கருங்குவளை.
நீலாம்புரி-ஓர்பண்.
நீலி-அவுரி, கறுப்பு, காளி, குட்டை, துருசு, துர்க்கை, பாம்பினச்சுப்பல்லிலொன்று, பார்வதி, மேகவண்ணப்பூவுளமருதோன்றிமரம்.
நீலிகை-அவுரி, தழும்பு.
நீலினி-அவுரி.
நீலோற்பலம்-கருங்குவளை.
நீல்-காற்று, நீலம்.
நீவரகம-பஞ்சம்.
நீவாரம்-சேறு, நீர், வியாபாரம்.
நீவல்-நீவுதல்.
நீவாரம்-வலநெல்.
நீவான்-மீகாமன்.
நீவி-கொய்சகம், சீலை, முதற்பணம்.
நீவியம்-சீலை.
*நீவிரம்-வீட்டிறப்பு.
நீவிர் - நீங்கள், இஃது முன்னிலைப்பன்மைப்பெயர்களினொன்று.
நீவுதல்-தடவுதல், தட்டுதல், துடைத்தல், பூசுதல்.
நீழல்-ஒளி, நிழல், நோய்.
நீளங்கடை-காட்செல்லல்.
நீளப்பூச்சி-ஓர்பூச்சி.
நீளம்-தூரம், நெடுமை.
நீளல்-ஓடுதல், தூரம், நீளுதல்.
நீளி-நீளியென்னேவல், நெடுமை, நெடுவல்.
நீளிடை-சேய்மை.
நீளித்தல்-நாட்போதல், நீளுதல்.
நீளிப்பு-நீட்டிப்பு.
நீளியசாணை-கானற்கல்லு.
நீளியது-நெடியது.
நீளியன்-நெட்டையன்.
நீளுதல்-அறிகப்படுதல், ஓடுதல், நீளமாதல், நெடுகுதல்.
நீள்-உயரம், நீளம், நீளென்னேவல், பிரபை.
நீறடித்தல்-கயிற்றினாற்கோலமிடுதல்
நீறணிந்தோன்-சிவன்.
நீறிடுதல்-அழித்தல், உத்தூளனமாய்ப்பூசுதல், பொடிபடுத்தல்.
நீறு-சாம்பர், சுண்ணம், துகள், நீறென்னேவல், புழுதி, விபூதி.
நீறுதல்-நீறுதல்.
நீறுபடுதல்-அழிதல், நீறுதல்.
நீறுபூத்தல்-சாம்பற்பொடித்தல்.
நீற்றல்-எரியிட்டுநீறச்செய்தல்.
நீற்றுண்டை-முட்டை.
நீற்றுதல்-நீறுக்குதல்.
நீற்றுப்பூசணி-ஓர்கொடி.
நீற்றுப்பூசணிக்காய்த்தானம்-மிருத்துதானத்தொன்று.
நீற்றுப்பெட்டி-மாவவிக்கும்பெட்டி.

நு

நு-அயுதப்பொருது, ஐயம், சங்கை, விகுவெவன்பலவைகளைக் காட்டுமோருபசர்க்கம், தியானம், தோணி, நிந்தை, நேரம், புகழ்.

நுகம்-நுகத்தடி.

நுகம்பரட்டி-ஒழுங்கு தவறுகிறவன், கட்டுக்கடையாத எருது.

நுகர்ச்சி-அனுபவம், உணவு, உண்டல்

நுகர்தல்-அநுபவித்தல், புசித்தல், விழுங்கல்.

நுகர்வு-நுகர்ச்சி.

நுகைதல்-இளகுதல், தளர்தல்.

நுகைத்தல்-இளக்குதல், தளர்த்தல்.

நுகைப்பு-நுகைத்தல்.

நுகைவு-இளக்கம், தணிவு, தளர்வு.

நுங்காய்க்குலை-காய்விழுந்த பனங்குலை

நுக்கு-எட்டிமரம், நுக்கென்னேவல், நுங்கு.

நுங்கல்-பருகல், விழுங்கல்.

நுங்கு-நுங்கென்னேவல், பனையிளங்காய்.

நுங்குக்கண்-நுங்கிற்கண்.

நுங்குதல்-குடித்தல், விழுங்குதல்.

நுங்கை-உன்றங்கை, உன்முய்.

நுசுப்பு-இடை.

நுடக்கம்-தள்ளாட்டம், வளைவு.

நுடங்கல்-நுடங்குதல்.

நுடங்கு - நுடக்கம், நுடங்கென்னேவல்.

நுடங்குதல்-ஆடல், துவளல், முடங்கல்.

நுட்பம்-ஓரலங்காரம், அஃது குறிப்பாற்கருத்தறிவித்தல், நுண்மை.

நுட்பவுரை-நுண்ணிதாய் விளக்குமுரை.

நுணக்கம்-நுணங்கல்.

நுணங்கல்-துவளல், நுண்மை, முடங்கல்.

நுணங்கியோர்-அறிவுடையோர்.

நுணங்கு-தேமல், நுணங்கென்னேவல், நுண்மை.

நுணங்குதல்-நுண்மையாதல், வளைதல், வாடல்.

நுணலை-ஓர்மீன், தவளை.

நுணல்-தவளை, தவளையிலோர்பேதம்.

நுணவு-தணக்கமரம், நுணாமரம்.

நுணவை-தணக்கமரம்.

நுணா-ஓர்மரம்.

நுணுக்காய்க்கிரந்தி-ஓர்கிரந்தி.

நுணுவுதல்-தடவித்தெரிதல்.

நுணி-நுணியென்னேவல், நுதி.

நுணித்தல்-குணம், நுணுக்கல்.

நுணுகு-நுணுகென்னேவல், நுண்மை.

நுணுகுதல்-நுண்மையாதல்.

நுணுக்கம்-கூர்மை, நுண்மை.

நுணுக்கல் }
நுணுக்குதல் } நுண்மையாக்கல்.

நுணுக்கு-அற்பம், எழுத்துக்குறுக்கம், நுணுக்கென்னேவல்.

நுணுங்கல்-நுண்மை.

நுணுங்கு-நுணுங்கென்னேவல், நுண்மை.

நுண்-அணு, நுண்மை.

நுண்ணறிவு-நுண்ணியபுத்தி.

நுண்ணிச்சிறை - கொசுக்கட்டைக்குருவி.

நுண்ணிடை-சிற்றிடை, பெண்.

நுண்ணிமை-நுட்பம்.

நுண்ணியது-நுண்மையானது.

நுண்ணியர் - நுட்பமானவர், பெரியோர், மந்திரிகள்.

நுண்ணுணர்வு-கூரிய அறிவு.

நுண்பிண்டி }
நுண்பொடி } புழுதி.

நுண்பொருள்-நுட்பமான கருத்து, நுண்ணியபொருள்.

நுண்மணல்-மெல்லியமணல்.

நுண்மை-கூர்மை, நுட்பம்.

*நுதம்-தோத்திரம்.

நுதம்புதல்-நனைந்திளகுதல்.

நுதலணி-சுட்டி.

நுதலல் }
நுதலுதல் } கருதல், குறித்தல்.

நுதலிப்புகுதல்-முப்பத்திரண்டுத்தியினொன்று, அஃது சொல்வனென்று கூறிப்புகுதல்.

நுதல்-நுதலென்னேவல், நெற்றி, புருவம்.

*நுதற்கண்ணன்-சிவன்.

நுதற்சுடிகை-சுட்டி.

நுதி-புகழ், முனை, வணக்கம்.

நுதுத்தல்-அவித்தல்.

நுதுப்பு-தணிப்பு.

நுந்துதல்-தள்ளுதல், தூண்டுதல்.

நுந்தை-உங்கடந்தை.
நுபம்-எருக்கு.
நுமர்-உம்மவர்.
நுமள்-உம்மவள்.
நும் - விரவுத்திணை முன்னிலைப்பன்மை, சாரியை, (உம்) எல்லீர்நும்மையும்.
நும்பி-உம்பி.
நும்மோர்-உம்மவர்.
நுரு-மூளியில்முளைக்குமட்டம்.
நுரை-நீர்முதலியவற்றி னுரை, நுரையென்னேவல், வெண்ணெய்.
நுரைத்தல்-நுரைக்குதல்.
நுரைப்பீர்க்கு-ஓர்பீர்க்கு.
நுரையீரல்-ஈரலிலோர்வகை.
நுவணம் } கல்விநூல், தினைமா, நு
நுவணை } ண்மை, பஞ்சிநூல்.
நுவலல் } சொல்லுதல்.
நுவலுதல் }
நுவலாநுவற்சி-ஓரலங்காரம்.
நுவல்-சொல், நுவலென்னேவல்.
நுவல்கை-சொல்லுதல்.
நுவற்சி-சொல்லுகை.
நுழாய்ப்பாக்கு-நுங்குப்பாக்கு.
நுழுந்தி-நழுவி.
நுழுந்துதல்-திருடுதல், நகர்தல், நழுவுதல்.
நுழுவுதல்-நழுவுதல்.
நுழை-நுண்மை, நுழையென்னேவல், நுழைவாயில், பலகணி.
நுழைகடைவை-நுழைகண்டாயம்.
நுழைச்சல்-வழு, நுழைத்தல்.
நுழைதல் - சாடைசொல்லுதல், நுழைகுதல், மட்டுக்கட்டுதல்.
நுழைத்தல்-நுழைதல்,நுழைவித்தல்.
நுழைநரி-ஓர்நரி.
நுழைவாயில்-சிறுவாயில்.
நுளம்பு-கொசுகு, மின்மினி.
நுளும்புதல்-அசட்டைபண்ணுதல்.
நுளை-ஈனம், குருடு.
நுளைச்சி-நெய்தனிலப்பெண்.
நுளையர்-நெய்தனிலமாக்கள்.
நுள் } கிள்ளு, நுள்ளென்னேவ
நுள்ளு } ல்.
நுள்ளான்-ஓரெறும்பு.
நுள்ளுதல்-கிள்ளுதல்.
நுனி -நுண்மை, நுனியென்னேவல், முனை.
நுனித்தல்-உற்றுராய்தல், கூராக்கல்
நுனித்துநோக்கல்-கூர்மையாய்ப் பார்த்தல்.
நுனிப்பந்தி-கடைப்பந்தி.
நுனை-முனை.

நூ

நூ-ஆபரணம், ஓரெழுத்து, நூவென்னேவல்.
நூக்கம்-ஓர்மரம், நாக்கு.
நூக்கல்-செலுத்தல், தள்ளல், நெய்வார்கருவியிலொன்று.
நூக்கு-தள்ளு, நூக்கென்னேவல்.
நூக்குதல்-செலுத்துதல், தள்ளுதல்.
நூங்கு-நூங்கென்னேவல், பெருமை, மிகுதி.
நூங்குதல்-பெருமையா யிருத்தல், மிகுதியாயிருத்தல்.
நூதல்-அவிதல்.
நூதனகாரன்-நூதனச்செய்கையுள்ளவன்.
*நூதநசாலி-புதுநெல்.
நூதனத்துவம் } புதுமை.
நூதனம் }
*நூதநமணம்-புதுமனம்.
*நூதநவஸநம்-புதுவஸ்திரம்.
நூதனி-நூதனகாரன்.
நூத்தல்-கொதுத்தல்.
நூபம்-எருது.
நூபுரம்-காற்சிலம்பு, பாதகிங்கிணி.
நூப்பு-தணிப்பு.
நூலச்சு-கம்பியிழுக்குமச்சு.
நூலறிவு-கல்வியறிவு.
நூலாசிரியன்-நூலாக்கியோன்.
நூலியாப்பு-நூலினிடத்தி யாப்பமைக்கும்விதம், அஃது தொகுத்தல், தொகைவிரி, மொழிபெயர்ப்பு, விரித்தல்.
நூலில்லாமாலை-வைப்புக்கட்டு.
நூலிழந்தாள்-அமங்கலி.
நூலிழைத்தல்-நூனூற்குதல்.
நூலுண்டை-நூற்சுருள்.
நூலுத்தி-தந்திரவுத்தி.
நூலுரைப்போன்-உபாத்தி.
நூலுரையுணர்வோர்-ஓல்லுநர்.
நூலுதிஞ்சி-நெய்வார்கருவியி லொன்று.
நூலேணி-கயிற்றேணி.
நூலோடுதல் - தையலினூல்விட்டுப்பம்முதல்.

நூலோர்-அறிஞர், பார்ப்பார், மந்திரிகள்.
நூல்-ஆண்குறி, ஆலோசனை, எல்லை, எற்றுநூல், கல்விநூல், குறிகயப்பற்றியகாம்பு, நூலென்னேவல், பஞ்சிநூல், பூணூல்.
நூல்சேர்த்தல்-நூல்பரவிடுதல்.
நூல்போடுதல் - நேர்பிடிக்கக்கயிறடித்தல்.
நூல்யுத்தி-நூலுத்தி.
நூல்வலை-நூலினான்முடியும்வலை.
நூல்வல்லோர்-அறிஞர், மந்திரிகள்.
நூல்வழக்கு-செய்யுள்வழக்கு.
நூல்விடுதல்-சிலம்பி முதலியன நூலுண்டாக்கல்.
நூவு-எள்.
நூழிலாட்டு-கொலை,மெய்புதைபடைபறித்துமாற்றானைப்பிரித்தல்.
நூழிலாட்டுதல்-கொல்லுதல்.
நூழில்-குவித்தல், கொடிக்கொத்தான், கொலை, தன்மெய்புதைந்தபடையைப்பறித்துநிற்கை,படர்கொடி, யானை.
நூழை-துவாரம், நுண்மை.
நூறல்-அழித்தல்
நூறாயிரம்-இலட்சம்.
நூறு-ஒரெண், நூறென்னேவல்.
நூறுதல்-அழித்தல், நசுக்குதல்.
நூறை-மலங்குமீன்.
நூற்கயிறு-நூலினாற்றிரிக்குங்கயிறு.
நூற்கருத்து-நூற்பொருள்.
நூற்கழி-நூற்பந்து.
நூற்குச்சு-நூற்குச்சம். [று.
நூற்சரடு-நூலினாற்செய்யுமோர் கயி
நூற்சுருள் } நூற்பந்து.
நூற்சுருளை }
நூற்பகந்திரம்-நூலடியிற்கட்டு.
நூற்படுகு-நெசவுபா.
நூற்பயன் - நூலினதுபலன், அவை அறம், இன்பம், பொருள், வீடு.
நூற்பவுத்திரம்-நூற்பகந்திரம்.
நூற்பழக்கம்-கல்விப்பயிற்சி.
நூற்பா-சிலவகையெழுத்துக்களாகிய சொற்றொடராய்ப் பலவகைப்பொருள்களை விளக்கித் திட்பநுட்பமமைந்துவருவது.
நூற்புறனடை-நூலின்புறத்தினடைக்குங்காப்புமொழி.
நூற்பொருள் - நூலிற் சொல்லப்படுபொருள்.
நூற்றந்தாதி - ஓர்பிரபந்தம், அஃது வெண்பாநூறினாலேனும் கலித்துறை நூறினாலேனும் அந்தாதித்துப் பாடுவது.
நூற்றல்-நூற்குதல்.
நூற்றுறு-நூறுழி.
நூற்றுறை - நூற்கருத்து, நூற்பொருள்.
நூனம்-குறைவு, நிச்சயம்.
நூனுதிகம் } குறைவுநிறைவு.
நூனுதிக்கம் }
நூனுழி-நாடா.
நூன்முகம்-நூற்றுறை, பாயிரம்.

நெ

நெகல்-கனிதல், நெகிழ்தல்.
நெகிடி-நெருப்பு.
நெகிழ்ச்சி-இளக்கம்.
நெகிழ்தல் - அவிழ்தல், இரங்குதல், உருகுதல், குழைதல், நகைதல், பிரிதல், மலர்தல், விட்டுநீங்குதல்.
நெகிழ்த்தல் } அவிழ்த்தல், உருக்கல், நீக்கல், பிரித்தல்.
நெகிழ்த்துதல் }
நெகிழ்ப்பு-நெகிழ்த்தல்.
நெகிழ்வு-குறைவு,நகைவு,மலர்தல், விட்டுநீங்கல்.
நெகிளம்-நெருகிளம்.
நெகுதல்-உருகுதல், நகைதல்.
நெக்கல்-உக்கல், உருகுதல், கனிதல், கனிந்தது.
நெக்கு-நெக்குதல்,நெக்கென்னேவல்
நெக்குடைதல் - நெகிழ்ந்துருகுதல், நெகிழ்ந்துவிள்ளுதல்.
நெக்குதல்-உருகுதல்,கனிதல், நகைதல், விள்ளுதல்.
நெக்குருகுதல்-விண்டுருகுதல்.
நெக்குரோதம்-நியக்குரோதம்.
நெக்குவிடுதல்-நகைதல், விண்டுடைதல்.
நெசவு-நெய்குதல்.
நெசவுகாரர்-நெய்வார்.
நெச்சி-கடுக்காய்.
நெஞ்சகம்-நெஞ்சு.
நெஞ்சடைப்பு } ஓர்நோய்.
நெஞ்சடைவாதம் }
நெஞ்சம்-மனம், மார்பு.

நெஞ்சழிதல்-ஏங்கல், மதிமயங்கல்.
நெஞ்சறிதல்-மனமறிதல்.
நெஞ்சன்-ஓர்மி.
நெஞ்சாங்கட்டை / நெஞ்சாங்குற்றி } சவஞ் சுடுவதற்கு நெஞ்சில் வைக்கும் கட்டை.
நெஞ்சாங்குலை / நெஞ்சாங்கொழுந்து } ஈரற்குலை.
நெஞ்சிடி-நெஞ்சுபதறுதல்.
நெஞ்சிற்கல்-கவலை, துக்கம்.
நெஞ்சு-ஓர்மம், மனம், மார்பு.
நெஞ்சுக்கோழை-ஓர்நோய்.
நெஞ்சுத்தடிமல்-நெஞ்சிற் சளிப்பிடியுண்டாந்தடிமல்.
நெஞ்சுநோ-நெஞ்சினோ, மனவிதனம்
நெஞ்சுவிடுதூது-ஓர்நூல்.
நெஞ்சுன்றி-ஒருபக்கம்வளைந்து மறுபக்கம் மிதந்திருப்பது.
நெஞ்செரிச்சல்-பொருமை.
நெஞ்செறிதல் - எரிச்சற்படல், மனநோப்படல்.
நெஞ்செரித்தல் - உடற்பிசகால் வருமோர் நோய்.
நெஞ்செரிப்பு-நெஞ்செரித்தல், பொருமை.
நெடநெடெனல் - ஈரடுக்கொலிக்குறிப்பு.
நெடி-சிள்வண்டு, நெடியென்னேவல், மிளகாயின்காரம்.
நெடிசு-நெடிது.
நெடித்தல்-பொழுதுநீட்டித்தல்.
நெடியவட்டம்-மரவட்டணம்.
நெடியவன்-நெட்டையன், விட்டுணு.
நெடியன்-நெட்டையன்.
நெடியோன்-துளசி, விட்டுணு.
நெடிலடி-ஐஞ்சீரடுத்துநிற்பது.
நெடிலி-ஓர்புல்.
நெடில் - நீளம், நெட்டெழுத்து, மூங்கில்.
நெடிற்றொடர்-நெட்டெழுத்துத் தொடர்ந்து வருவது.
நெடுகலும்-நீளத்திலே.
நெடுகல்-நீளுதல், போதல்.
நெடுகுதல் - உயருதல், நீளித்தல், நீளுதல்.
நெடுங்கடல்-கரையடுத்தகடல்.
நெடுங்கணக்கு-அரிவரி.
நெடுங்கணைவாய்-ஓர்கணைவாய்.
நெடுங்கண்விழுதல்-பன்னமொருபக்கம்நெடுகிமறுபக்கந்தளர்ந்திருத்தல்
நெடுங்கதை-பழங்கதை.
நெடுங்கயிற்றில்விடுதல்-நாட்கடத்துதல்.
நெடுங்கரை-நீண்டகரை.
நெடுங்கழுத்தல்-ஒட்டகம்.
பண்ணவன்-அருகன், கடவுள், குரு, நிர்ணியன, தேவன், பாடகன், முனிவன்.
பண்ணிகாரம் - அப்பவருக்கம், பலபண்டம்.
பண்ணியங்கூலம்-பலபண்டம்.
*பண்ணியம்-விற்றற்குரியது.
பண்ணியசாலை-அப்பசாலை, வியாபாரயிடம்.
பண்ணியஸ்திரீ-வேசி.
பண்ணியபலத்துவம்- வியாபாரசித்தி
பண்ணியம்-பலகாரம், பலபண்டம்.
*பண்ணியவீதி-கடைத்தெரு.
பண்ணியாங்கனை-வேசி.
பண்ணியாபிவகம்-தடை.
பண்ணுதல்-செய்தல்.
பண்ணுவர் - குதிரைப்பாகர், யானைப்பாகர்.
பண்ணுறுத்தல்-சேர்ப்படுத்தல், வாகனங்களை ஆயத்தம்பண்ணல்.
பண்ணை-ஓர்விளை, சமுசாரம், கீர்த்தி, படகு, பனை, மகளிர்கூட்டம், மகளிர்விளையாட்டு, மருதநிலம், வயல், விலங்கின்படுக்கை, விலங்கின்மேற்சேணம்.
பண்ணைக்காரர்-பறையரிற்றலைவர், வயற்செய்கைக்காரர்.
பண்ணைக்காரியம்-கமக்காரியம், சமுசாரகாரியம்.
பண்ணையாள்-வயல்வேலைகாரன், வீட்டுவேலைகாரன்.
பண்ணைவீடு - தானியவீடு, மடைப்பள்ளி.
பண்ணைவைத்தல்-உணவுசமைத்தல், படகுவைத்தல்.
பண்படி-பண்புப்பகுதி.
பண்படுதல்-ஏவல்செய்தல், சீர்திருத்தல், சொற்படிசெய்தல்.
பண்படுத்தல்-சீர்ப்படுத்தல்.
பண்பாகுபெயர்-பண்பினுலாய ஆக்கப்பெயர், (உம்) வளை.
பண்பி-பண்பையுடையபொருள்.

பண்பு-குணம், தகுதி, விதம்.
பண்புச்சொல்-உரிச்சொல்.
பண்புத்தற்கிழமை - பண்பி னெற்றுமையுடைமை, (உம்) கதிர்மணி.
பண்புத்தொகை - குணத்தொடுகுணிக்குண்டாகியவொற்றுமைநயத்தை விளக்கும் ஆகியவென்னும் பண்புருபு தொக்குவருந்தொடர் (உம்) ஆதிபகவன்.
பண்புப்பெயர்-உரிப்பெயர்.
பண்புரிச்சொல்-பொருள்களா லறியப்படுங்குணம், (உம்) செம்மை.
பண்புணாப்பார்-அறிஞர்.
பதகம்-ஓர்பறவை.
பதகர்-சண்டாளர்.
பதகளித்தல்-பதறுதல்.
பதகளிப்பு-பதறுகை.
பதகன்-கீழ்மகன்.
பதக்கம்-மாதாவிலடம், மார்பணியி னென்று.
பதக்கிரமம்-காலடி.
பதக்கு-இரண்டுகுறுணிகொண்டது.
பதக்குப்பதக்கெனல்-அச்சக்குறிப்பு.
பதக்கெடுதல்-கதறியக்கெடல், பதனழிதல்.
பதங்கமம்-பறவைப்பொது, விட்டில்.
பதங்கம்-இரசம், சந்தனம், சாம்பிராணிமுதலியவற்றினெடுக்கும் பதங்கம், பறவைப்பொது, விட்டில்.
பதங்கன்-சூரியன்.
பதங்கு-குழி, பிளவு.
பதசம்-சந்திரன், பட்சி, மயிர்ப்புழு.
பதச்சேதம்பண்ணுதல்-பதமுடித்தல்.
பதஞ்சலி-சேடன்.
பதஞ்சலியம்-பதஞ்சலிசெய்தநூல்.
பதடி-பதர்.
பதணம்-மதிலுண்மேடை, மதில்.
பதத்திரம்-சிறகு.
பதத்திரி-பறவை.
பதவியாசம்-ஓர்பூடு, காலடி, நடை.
பதநீறம்-மாங்கிஷசிலை.
பதநீர்-கருப்பநீர்.
*பதந்தன்-பூஜிக்கதக்கவன்.
பதபஞ்சனம்-சொல்லிலக்கணம், சொற்பிரிவு, விளக்கப்பண்ணுதல்.
பதபடெனல்-சடுக் கொலிக்குறிப்பு.
பதபாதம்-காலடி. [தல்.
பதப்படுதல்- சேர்ப்படுதல், பக்குவமா

பதப்படுத்துதல்-சீர்ப்படுத்துதல், பக்குவப்படுத்துதல்.
பதப்பாடு-மகிழுவப்பு.
பதப்புணர்ச்சி-நிலைமொழியீறும் வருமொழி முதலும் இயல்பாயேனும் விகாரமாயேனும்புணர்தல்.
பதப்பேறு-பதமுத்தி.
பதப்பொருட்காட்சியணி-ஓரலங்காரம், அஃது உபமானமுபமேயங்களுளொன்றின் தருமத்தை ஒன்றிலாரோபித்தல்.
பதப்பொருள்-பதவுரை, அஃது உரையிலக்கணமைந்தினொன்று.
பதமம்-சந்திரன், பட்சி, விட்டில்.
பதமழிவு-பதனழிவு.
பதமுடித்தல் - பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, விகாரமென்றுமாறையுங்கொண்டுமொழிகளைப்பிரித்துக்காண்டல்.
பதமுத்தி-பதவிமுத்தி, பாதமுத்தி.
பதவியடைதல்-பாதமடைதல்.
பதமை-மிருது, மெத்தனவு.
பதம்-அடையாளம், அழகு, அறுகம்புல், ஆடை, இடம், இன்பம், ஈரம், உண்டல், எழுத்தாலாயபதம், ஒளி, ஓர்மொழியிற் பிரகிருதியாய் நிற்பது, கால், காவல், குழைவு, கூர்மை, கொக்கு, சிந்து, சொல், சோறு, தின்றல், தெரு, நாழிகை, பக்குவம், பதவி, பாவினொருறுப்பு, பூரட்டாதி, பொருள், பொழுது, முயற்சி, வரிசை, வழி, வேதம்.
பதம்பிரித்தல்-சொற்பிரிப்புச்செய்தல்.
பதரி-இலந்தை.
பதரிகாச்சிரமம்-ஓர்தபோவனம்.
பதர்-அறிவீனன், சப்பட்டை, பலனற்றது.
பதலம்-பதனம்.
பதலை-ஓர்கட்பறை, குண்டான், சிறுமலை, மத்தளம், மரக்கலம், மலை, வாயகன்றபறை.
பதல்-வதின்.
பதவி-இடம், உலகம், கதி, செல்வம், நிலை, நிலைபரம், வழி.
பதவிபருணம்-மெத்தெனவு.
பதவிபடைதல்-கதியடைதல்.
பதவியது - சாறுவானது, மிருதுவானது.
பதவியல்-பதப்புணர்ச்சியிலக்கணம்.
பதவியன்-சாதுவானவன்.
பதவு-புல்.
பதவுரை-சொற்றொறுமுரைக்கும்பொருள்.
பதவை-வழி.
பதறல் } தளம்புதல், நடுக்கல், பதறுதல் } விரைதல்.
பதனகேந்திரம்-உதயத்திலிருந்து நாலாம் ஏழாம் பத்தாமிடம்.
பதனம்-இறக்குதல், கனிதல், தாழ்தல், பாவம், பேணல், போதல், வீழுதல்.
பதனழிதல்-மெழ்த்தல்.
பதனழிவு-ஊழ்ப்பு.
பதனி-பதநீர்.
பதனிடுதல்-பதமையாக்கல்.
பதன்-பக்குவம், பதம்.
பதன்படுதல்-பக்குவமாதல், பதமையாதல், பாகமாதல்.
பதாகன்-பதாகையுடையோன்.
பதாகினி-படை.
பதாகை-அடையாளம், அபிநயம், கூத்தினோர்விகற்பம், விருதுக்கொடி.
பதாசனம்-பாதபடி.
பதாசி-பதாதி.
பதாதி-அமைதியின்மை, எதுமற்றவன், காலாள், சேனைத்தொகை பத்தினொன்று, அஃது ஓர்தேரும், ஓர் யானையும், மூன்றுபரியும், ஐந்துகாலாளுங்கொண்டது.
பதாரம்-காலிற்றுகள், தெப்பம்.
பதார்த்தசாரம் - வைத்தியசாத்திரத்தனொன்று, அஃது பதார்த்தங்களின் குணத்தைச்சொல்வது.
பதார்த்தம்-கதி, பதப்பொருள், பாக்கியம், பொருள், போசனவஸ்து.
பதார்த்த சிந்தாமணி - பதார்த்தசார நூல்.
பதி-அரசன், இடம், ஊர், எப்பொருட்குமிறைவன், ஒளி, கடவுள், குதிரை, குரு, கொழுநன், சிவன், தலைவன், பட்டினம், பதித்தல், பதியென்னேவல், பதிவு, மருதநிலத்தூர், மூத்தோன், வீடு, வேர்.
*பதிகசந்ததி-வழிச்செல்வோர் கூட்டம்.
பதிகம்-பத்துச்செய்யுளான் முற்றுப்பெறுமோர்பிரபந்தம், பாசி, பாயிரம்

பதிகன்-வழிச்செல்வோன்.
*பதிகி-வழிச்செல்வோன்.
பதிக்கினி-புருடனைக்கொல்லி.
பதிசத்திசாலம்-மிலைசத்திமாயை.
பதிசாத்திரம்-பதிநூல்.
பதிசேவை-புருடனுக்குக்கீழ்ப்படித
பதிஞானம்-தேவவறிவு, அறிவு. [ல்.
பதிதபாவனன்-பதிதர்களின்பாதித்தி
யத்தைப்பரிகரிக்கிறவன்.
பதிதம்-கூத்திலோர்விகற்பம், தவறு.
பதிதல்-அழுந்துதல், எழுத்துப்பதித
ல், ஒதுங்குதல், கீழ்ப்படிதல், தங்
குதல், தாழ்தல், பள்ளமாதல்.
பதிதன் - குலஞ்சமயமுதலிய வொ
ழுக்கத்திற்றவறினோன்.
பதித்தல்-அழுத்தல், எழுதல், சரித்த
ல், தாழ்த்தல்,பள்ளமாக்கல்,புதை
த்தல், வைத்தல்.
பதித்திரி-உலைத்துருத்தி.
பதிநிச்சயம்
பதிநிர்ணயம் } பதிநிச்சயம்.
பதிநிதானம்
பதிநியமம்
பதிநூல்-கடவுளதுதன்மையை விள
க்குநூல்.
பதிபடை-ஒளித்திருக்கும்படை.
பதிப்பிரக்ஞன்-வழியறிந்தவன்.
பதிப்பிராணை-பத்தினி.
பதிப்பு-பதித்தல்.
பதிம்பரா-சுயம்வரா.
பதியம் - பதிக்கப்பட்டநாற்று, பத்து
ச்செய்யுளான் முடியும்பிரபந்தம்,
பாசி, பாசிப்பூடு.
பதிரன்-செவிடன்.
பதில்-ஈடு.
பதிவத்தினி-மங்கலை.
பதிவாகன்-சுமைகாரன்.
பதிவிடை-ஒளித்திருக்குமிடம்.
பதிவிரதம்-கற்புத்தவறாமை.
பதிவிரதாதருமம்
பதிவிரதாபுண்ணியம் } கற்புநெறி.
பதிவிரதாவிரதம்
பதிவிரதாபத்தினி-பதிவிரதை.
பதிவிரதி
பதிவிரதை } கற்புடையாள்.
பதிவிருத்தல் - ஒளியில் மறைந்திருத்
தல்.
பதிவு-பதிதல்.

பதிவைத்தல்-நாற்றுப்பதித்தல், வேர்
வைத்தல்.
பதிற்றந்தாதி - ஓர்பிரபந்தம், அஃது
பத்துவெண்பாவும் பத்துக்கலித்து
றையுந்தோன்ற வந்தாதித்துப்பா
டுவது.
பதிற்றுப்பத்து-நூறு.
பதினாயிரம்-ஓரெண்.
பதினாலுலோகம்- கீழேழுலகுமேலே
ழுலகு, அவை அதலம், விதலம், சு
தலம், தராதலம், இரசாதலம், ம
காதலம், பாதலம், இவை ஏழுங்கீ
ழுலகு, பூலோகம், புவலோகம், சு
வலோகம், சனலோகம், தபோ
லோகம், மகலோகம், சத்தியலோ
கம் இவ்வேழுமேலுலகு.
பதினாறுகோணம்-எட்டுத்திசையுமதி
னுள்ளந்தராளமெட்டும்.
பதினெண்கணம் - பதினெண்கூட்ட
ம், அவர் அசுரர், அந்தரர், அமர
ர், ஆகாயவாசிகள், இயக்கர், உர
கர், கருடர், கந்தருவர், கிம்புரு
டர், கின்னரர், சித்தர், நிருதர், பூ
தர், பைசாசர், போகபூமியர், மு
னிவர், விஞ்சையர், வித்தியாதரர்.
பதினெண்குடிமை-ஒடாவி, கன்னார்,
குயவர், கொல்லர், கோவியர், சி
வியார், தச்சர், தட்டார், நாவிதர்,
பள்ளர், பாணர், மாலைக்காரர், மூ
வாணிபர், வண்ணார், வலையர், வெ
ட்டியான்.
பதினெண்ணுப்புராணம் -பதினெண்
புராணத்துமெடுத்து ஆக்கியோர்
பெயராய்வழங்குஞ் சார்புநூல்,அ
வை ஆங்கிரம், உசனம், கபிலம்,
காளி, சனற்குமாரம், சாம்பவம்,
சிவதன்மம், சௌரம், துருவாசம்,
நந்தி, நாரசிங்கம், நாரதீயம், பரா
சரம், பார்க்கவம், மாரீசம், மான
வம், வாசிட்டலைங்கம், வாருணம்.
பதினெண்பாடை- பதினெண்தேசத்
தார்க்குரியபாஷை,அவை அங்கம்,
அருணம், கலிங்கம், காம்போசம்,
கொங்கணம், கோசலம், கௌசிக
ம்,சாவகம்,சிங்களம்,சிந்து,சீனம்,
சோனகம், திராவிடம், துளுவம், ப
ப்பரம், மகதம், மராடம், வங்கம்

பதினெண்புராணம்-சிவபுராணம்பத்தும், விட்டுணுபுராணநான்கும், பிரமபுராணமிரண்டும், அக்கினிபுராணமொன்றும், சூரியபுராணமொன்றுமமாம், இவைமுறையே, இலிங்கம், காந்தம், கூர்மம், சைவம், பிரமாண்டம், பௌடிகம், மச்சியம், மார்க்கண்டேயம், வராகம், வாமனம், காருடம், நாரதீயம், பாகவதம், வைணவம், பதுமம், பிரமம், ஆக்கினேயம், பிரமகைவர்த்தம்.
பதுக்கம்-பதுங்குந்தன்மை.
பதுக்காய் - ஓர்குருவி, வளர்ச்சியற்றது.
பதுக்குதல்-மறைத்தல்.
பதுக்கை-சிறுதிட்டை, சிறுதூறு, பாறை.
பதுங்கலன்-பதுங்கி.
பதுங்கல் / பதுங்குதல் } ஒளித்தல்.
பதுங்கி-பின்நிற்பவன்.
*பதுமகருப்பன்-பிரமன், விட்டுணு.
*பதுமகேசரம்-புன்னைமரம்.
*பதுமசாரிணி-ஓர்தாமரை.
*பதுமதந்து-தாமரைநாளம்.
பதுமநாபன் / பதுமநாபி } விட்டுணு.
*பதுமநாளம்-தாமரைக்கொடி.
பதுமநிதி-தாமரையுருவாய்க் கிடக்கும்பொன், அஃது இந்திரனிருவகைகளிலொன்று, குபேரனவநிதிகளிலுமொன்று.
*பதுமபத்திரம்-தாமரையிலை.
பதுமபந்து-சூரியன், தேனீ.
*பதுமபர்ணம்-தாமரையிலை.
*பதுமபந்தம்-ஓரலங்காரம்.
*பதுமபாணி-சூரியன், பிரமன், புத்தன்.
பதுமம்-சயம், ஓர்குளிகை, கோடாகோடி, சோதிநாள், தாமரை, பதினெண்புராணத்தொன்று, முடியுறுப்பைந்திலொன்று, யானைத்துதிக்கைப்பொறி.
பதுமயோனி-பிரமன்.
பதுமராகம்-நவமணியிலொன்று.
பதுமரேகை-கைரேகையிலொன்று.
பதுமலாஞ்சனன்-அரசன், குபேரன், சூரியன், பிரமன்.
பதுமலாஞ்சனை-இலக்குமி, சரசுவதி
பதுமவிசம் / பதுமாக்கம் } தாமரைக்கொட்டை.
பதுமன்-அட்டநாகத்தொன்று, இராமன், ஓர்சக்கிரவர்த்தி, பிரமன்.
*பதுமாகரம்-தடாகம்.
பதுமாசனம் / பதுமாதனம் } அட்டாங்கயோகாசனத்தொன்று, அஃது, இருதொடைமேலும் இரண்டுள்ளங்காலையுமாறித் தோன்றவைத்திருத்தல்.
*பதுமாசனன்-பிரமன்.
பதுமாந்தரம்-தாமரையிதழ்.
*பதுமாலயை-இலக்குமி, சரச்சுவதி
*பதுமாவதி-ஓர்நதி, ஓர்முனிபத்தினி.
பதுமினி-சூத்திரேனர்விகற்பம், நால்வகைப்பெண்களிலொருத்தி.
*பதுமினிகாந்தன்-சூரியன்.
பதுமை-இலக்குமி, காளி, பதிமை.
பதுமைகதை - பதிமைகதை, பாவையின்கதை.
*பதுமோத்பவன்-பிரமன்.
பதைத்தல்-பதைப்பு.
பதைபதைத்தல் / பதைபதைப்பு } மிகப் பதைத்தல்.
பதைப்பு-இரக்கம், பதகளிப்பு, பதறுதல்.
பதோதகம்-பாதப்பிரட்சாளனநீர், வழிக்களாயிற்றண்ணீர்.
பத்தகாரன்-சமையற்காரன்.
பத்தகேசரி-கருப்பூரம்.
*பர்தங்கம்-செஞ்சந்தனம்.
பத்தசந்தம்-போசனப்பிரியம்.
பத்தசனம்-தொண்டர்.
பத்தசை-அமுதம்.
பத்தி-ஒழுங்கு, கிரியைகளைவிதிக்கிறநூல், சொற்பயன், வழி.
பத்தம்-உணு, உண்மை, கட்டு.
பத்தருபி-கருப்பூரம்.
பத்தர்-தட்டார், தேவதொண்டர், வத்தகர்.
பத்தல்-ஓர்பாத்திரம், நீரிறைக்கும்பத்தல், யாழினுறுப்பு.
பத்தனம்-பட்டணம்.
பத்தன்-அன்புடையோன்.
பத்தா-கணவன்.
பத்தாசு / பத்தாயம் } மஞ்சி.

பத்தி - அடைப்பு, அன்பு, ஒழுக்கம், ஒழுங்கு, தொண்டு, நம்பிக்கை, நிரை, பங்கு, பகுதி, முறைமை, வழிபாடு, வீட்டிறப்பு.
பத்திராஸ்டகர் - முதலைப்பக்குடியி லொருவர், அவர்தேசப்பெருமகமு டையோர்.
பத்திருலம்-ஓர்தேசம்.
பத்திலவாலகர்- கடவுளைப்பத்திய பத்தியிற்வலைவிப்போர்.
பத்திபங்காரம்-ஒத்துநீர்ப் பாய்ச்சல்.
பத்திபாய்தல்-பிரிவிப்பித்தல்.
பத்திமார்க்கம்-பத்திநடை.
பத்திமான்-பத்தியுடையோன்.
பத்திமை-அன்புடைமை, ஒழுக்கமு டைமை, தேவபத்தியுடைமை.
பத்தியம்-ஆரியம்,தெலுங்கு, இவற்றி ன்பிரபந்தம், இதம், கவி, தமிழ், போசனம், மருந்திற்கிசைந்த புசி ப்பு.
பத்திரகம்-இலை, இறகு, சந்தனம்பூ சுதல்.
பத்திரகாசலம் } புள் இறகடித்தெ
பத்திரகாசலி } ழுமொலி.
பத்திரகாளி-ஓர்தேவதை.
பத்திரகும்பம்-முடிசூட்டுதற்குச் சலம் பூரித்தகும்பம்.
*பத்திரகம்-செஞ்சந்தனம்.
*பத்திரகிரேட்டம்-வில்வம்.
*பத்திரசிரேயம்-சந்தனம்.
*பத்திரசரம்-கட்டாரி.
*பத்திரசூசி-முள்.
பத்திரதாரகம்-சட்டவாள்.
*பத்திரதாலி-சாதிமல்லிகை.
பத்திரநாடிகை-இலைநரம்பு.
*பத்திரபாசு-அரம்.
*பத்திரபலகம்-பலராமன்.
*பத்திரபர்ணி-புளினி.
பத்திரமதை-துரோபதி,உத்திரட்டாதி.
பத்திரம்-அதிட்டம்,அம்பிறகு,அம்பு, அழகு, இரும்பு, இலை, இறகு, உறு திப்பத்திரம், கருடன், குறிச்சி, குற் றுவாள்,சந்தோஷம், செல்வம்,திர ட்சி, திருமுகம், நன்மை, படை, ப த்திரகரணம், புத்தகத்திரெற் றை, புலிதழ், பேணம், பொன், ம லை, முடிபுறப்பு, வாகனம்.
பத்திரயௌவனம்-தளிர்.

பத்திரரதம்-பட்சி.
பத்திரரேணு-ஐராவதம்.
*பத்திரலதை-பெரியபட்டாக்கத்தி.
பத்திரவாகம்-அம்பு, பட்சி.
பத்திரவாகரணர்-விட்டிக்கரணம்.
பத்திரவாகன் - சீட்டோலைகொண்டு போவோன்.
*பத்திரவிரியகம்-சோணமுங்கில், பி ரப்பஞ்செடி.
பத்திரன்-சிவன், வீரபத்திரன்.
பத்திராகரணம்-சௌளஞ்செய்தல்.
*பத்திராக்கியம்-தாளிசபத்திரி.
*பத்திராங்கம் - வமத்தை, செஞ்சந் தனம்.
பத்திராசனம் - அட்டாங்க யோகத் தோராசனம், அது பீசத்தின்கீ ழ்ச்சிவனிபடக் கிருகாற்பாட்டை யும் வைத்தல் விருபக்கத்தையுமிரு கையாவிறுகப்பிடித் தசையாதிரு த்தல், இராசாசனம்.
பத்திராசனர்-வானோர் நவகணத்தொ ருவர், அவர் கடவுளாதனத்தைப்பு கழ்ந் தறைவோர்.
பத்திராசிரயம்-சந்தனம்.
பத்திராசுவம்-நவகண்டத்தொன்று.
பத்திராஞ்சனம்-மை.
பத்திராட்சம்-வீரபத்திரமணி.
பத்திராதனம்-பத்திராசனம்.
பத்திராத்தியம்-திப்பிலிமூலம்.
பத்திராத்துமசம்-வாள்.
பத்திரி-அம்பு, இலை, காளி, குதிரை, பறவை.
பத்திரிகை-இலை-ஒற்றை, ஓலையுறுதி, திருமுகம்.
பத்திரை-அவுரி, இரண்டாம் ஏழாம் பன்னிரண்டாந்திதி, கங்கை,காளி, கிரிபுரண்டன்பூடு,நற்பசு, மஞ்சள்
பத்திரைகேள்வன்-வீரபத்திரன்.
பத்திரோதகம்-இலையினீர்.
*பத்திரோர்ணம்-வெண்பட்டு.
பத்திரோல்லாசம்-இலைத்தளிர்.
பத்திவான்-பத்தன்.
பத்திவிசுவாசம் - உறுதியான நம்பி க்கை.
பத்திவைராக்கியம்- தெய்வபத்தியிற் பிடிவாதம்.
பத்தினி-இல்லாள், கற்புடையாள்:
பத்தினித்தனம்-கற்புநெறி.

பந்திளிப்பிள்ளை-குடிப்பிள்ளை.
பந்து-ஒரொன், பாதம்.
பந்துக்காலோன்-நண்டு.
பந்தை-வசிர்.
பஸ்பம்-பற்பம், பற்மம்.
பந்தகர்-கட்டு.
*பந்தல்-பெண்யானை.
பந்தடித்தல்-பந்தெறிதல்.
*பந்தந்திரம்-சதுரங்கம், வியபிசாரி
பந்தயிலம் - பந்தமெரித்திறக்கு மெ ண்ணெய்.
பந்தம் - அழகு, உள்ளடை, உறவு, க ட்டு, கயிறு, கைவிளக்கு, தளை, இ ஃது யாப்புறுப்பெட்டி னென்று, திரட்சி, பிக்கொளுத்தும்பந்து, பெ ருந்துருத்தி, மதில், மயிர்முடி, மு டிச்சு, முறை, விலங்கு.
பந்தயங்கட்டுதல்-ஒட்டம்வைத்தல்.
பந்தயச்சிட்டு-ஒட்டம்யார்க் குடைய தென வெழுதப்போடுஞ்சிட்டு.
பந்தயமொட்டுதல்-பந்தயம்பிடித்தல்
பந்தயம்-ஒட்டம்.
பந்தரம்-கரண்டகபாஷாணம்.
பந்தரி-பிடாலயவனம்.
பந்தர்-பட்டினம், பந்தல்.
பந்தல்-ஒடுஞ்சாலை, பந்தர்.
பந்தவரிசை-குதிரைப்பற் பாஷாணம்.
பந்தவிளக்கு-தீவத்தி, பந்தாய்த் திர ட்டிக்கொளுத்தும்விளக்கு.
பந்தற்பாடன்-முக்கடுபதிந்து தாழ்வார முயர்ந்தது.
பந்தனம்-கட்டல், கயிறு, காவல்செ ய்தல்.
பந்தனாலயம்-சிறைச்சாலை.
பந்தனை-கட்டு, பந்தித்தல், மகள்.
பந்தன்-சிர்பந்தபாஷாணம்.
பந்தி-ஒழுங்கு, ஓர்பண், கீர்த்தி, குதி ரையானைமுதலியவிற்குஞ்சாலை, கூ ட்டம், சபை, பந்தியென் னேவல்.
பந்தித்தல்-கட்டல்.
பந்தித்திரம்-நேயம்.
பந்திபோசனம்-பலரையுஞ் சேரவை த்துப்புசித்தல்.
பந்திப்பாய்-மிகவொடுக்கினிண்டபாய்
பந்திருபாவனன்-சன்கைமான்.
*பந்திலம்-அசைவு, சுபம்.
பந்திவஞ்சனை-பந்தி பரிமாறுதலில்வ ஞ்சித்தல்.

பந்து-உறவு, எறியும்பந்து, சகோதர ன், பினைதென், திரட்சி, திரிகை, மட்டத்துருத்தி.
பந்துக்கட்டு - பலரையு மொன்றாய்ச் சேர்த்துக்கொள்ளல், போலி, வெ ளியராது மறைத்தல்.
பந்துசனம்-வமிசம்.
பந்துத்துவம்-இனச்சேர்வு.
பந்துரம்-அழகு.
*பந்துரை-வேசி.
பந்துவராளி-ஓர்இராகம்.
*பந்தூரம்-தொளை.
பந்தையம்-பந்தயம்.
பபதி-சந்திரன்.
பபீதி-வசபாத்திரபானம்.
பப்பரப்புளி-பெருக்கமரம்.
பப்பரம் - தேயவமைப்பத்தாறி னொன் று, பதினெண்பாடையி னொன்று, பருப்பம்.
பப்பரர்-பப்பரதேசத்தார்.
பப்பரவன்-பருத்தது.
பப்பரவாகன்-அருச்சுனனுக்குச் சித் திராங்கதை விடத்திற் பிறந்தபிள் ளை.
பப்பளிச்சேலை - ஓர்வகை வன்னச் சேலை.
பப்பாதி-பாதிபாதி.
பப்பு-ஒப்பு, பரப்பு.
பப்புவர்-புகழ்வோர்.
பமரம்-பேரொலி.
பம்-கிரகம், விண்மீன்.
*பம்பம்-புகை.
பம்பரத்தி-ஆடுமாலை.
பம்பரமாட்டுதல்-அலைக்கழித்தல், பம் பரஞ்சுழற்றுதல்.
பம்பரம்-ஓர்விளையாட்டுக்கருவி.
*பம்பரை-ஓர்பலா.
பம்பல்-ஆரவாரம், பம்புதல், மிகுதி, வலி. [ழி.
பம்பளபளோ-இளமைக் குறிப்புமொ
பம்புதல்-ஆரவாரித்தல், எழுச்சி, நெ ருங்கல், பரவல், பொலிதல்.
பம்பை-ஓர்நதி, ஓர்வாச்சியம், சுருண் டமயிர், முல்லைநிலப்பறை.
பம்மல்-செம்முதல், பொருத்திக்கட்டு கை, மந்தாரம், மந்திப்பு, மூடுதல்.
பம்மாற்று-வெருட்டு, வெளிவேடம்.
பம்முதல்-பம்மல்.

பம்மை-சித்திரப்பாவை.
பயங்கரம்-அச்சம்.
பயசம்
பயசு } நீர், பால்.
பயாபம்-புளி.
பயணங்கட்டுதல்-பிரயாணத்துக் காரியத்தம்பண்ணல்.
பயணம்-பிரயாணம்.
*பயதம்-வன்னி.
பயத்தல்-கொடுத்தல், பிறப்பித்தல்.
பயந்தாள்-தாய்.
பயந்தான்
பயந்தோன் } பிதா.
பயபத்தி-ஒடுக்கவணக்கம்.
பயப்படல்-அஞ்சல்.
பயப்பாடு-அச்சம்.
பயப்பு - இருமை, தேமல், நிறம், பசப்பு.
பயம் - அச்சம், அஃது சுபாவகுணமொன்பதிலொன்று, குளம், சுதை, நீர், பயன், பால், பிரமை, மாலையாக்கைபதினெண்குற்றத்துமொன்று
பயம்பு-பள்ளம், யானைபடுகுழி.
பயல்-சரிபாதி, பள்ளம், பையல்.
பயனி-பசனி.
பயலை-பசலை.
பயறி-ஓர்குருநோய்.
பயறு-ஓர்தானியம், சித்திரைநாள்.
பயனிலசொல்லல் - பிரயோசனமில்லாதபேச்சுப்பேசல், இஃது வாக்கின்றீக்குணநான்கிலொன்று.
பயனிலாள்-வேசி.
பயனிலி-வீணன்.
பயனிலை-பயன்முடிவு.
பயனுரைத்தல்-உரைசொல்லல்.
பயனுவமம்-பிரயோசனத்தையே யுவமையாய்ச் சொல்லுவது, (உம்) மாரி வண்கை.
பயன்-அகலம், சொல்லுரை, நீர், புலன், பால்.
பயன்சொல்லுதல் - வியாக்திபண்ணல்.
பயன்படச்சொல்லல்-பிரயோசனந்தரச்சொல்லல், அஃது வாக்கினற்குணநான்கிலொன்று.
பயன்படுசொல்-பிரயோசனந்தருஞ்சொல்.
ப்பயன்படுதல்-பிரயோசனமாதல்.
பயன்முடிவு
பயன்முற்று } பொருளின்முடிவு.
பயாபகன்-அரசன்.
பயானகம்-அச்சம், இராகு, புலி.
பயிக்கம்-பிச்சை.
பயித்தியம்-பைத்தியம்.
பயிந்தரி-ஏகம்பபாஷாணம்.
பயிரங்கம்-அறிக்கைப்பத்திரம்.
பயிரி-ஓர்வீணை, ஓர்வகுரி.
பயிரேறுதல்-பயிர்ப்படல்.
பயிர்-இளம்பயிர், ஒலி, பயில், பறவைக்குரல், புல், விலங்கொலி.
பயிர்த்தல்-ஒலித்தல்.
பயிர்ப்பங்கு-செய்கைப்பங்கு.
பயிர்ப்பு - அசுத்தம், குற்சிதம், இது மகடூஉக்குணநான்கிலொன்று.
பயிலல்
பயிலுதல் } சொல்லுதல், பிடித்தல், பழகல்.
பயில்-சைகை, சொல், பயிலென்னேவல், பழக்கம், பாழி.
பயில்விடுதல்-பயில்காட்டுதல்.
பயில்வு-பயிற்சி.
பயிறல்-ஒலித்தல், கூடுதல், சொல்லுதல், பயிலுதல், பேசலாலெழுமொலி.
பயிற்சி-பழக்கம்.
பயிற்பேச்சு-ஜூகப்பேச்சு.
பயிற்றுதல்-படிப்பித்தல், பழக்குதல்.
பயினி-ஓர்மரம்.
பயின்-உட்படுகுருத்து, பிசின்.
பயோகடம்-தீவு.
பயோகனம்-ஆலாங்கட்டி.
பயோதசம்-சமுத்திரம், நீர்ப்பிரிவு, முகில்.
பயோததி-சமுத்திரம்.
பயோதம்-முகில்.
பயோதரப்பத்து-ஓர்பிரபந்தம், அஃது, முலையினைப்பத்துச் செய்யுளாற்கூறுவது.
பயோதரம்-கடல், கரும்பு, பால், முலை, மேகம்.
*பயோதி-கடல்.
*பயோதிகம்-கடனுரை.
பயோநிதி-சமுத்திரம்.
பயோவிரதம்-ஓர்மாதவரைபசுக்கோட்டத்துறைந்து பால்மாத்திர முண்டுசெய்யுமோர்விரதம்.
பய்யல்-பையன்.
பரகதி-முத்தி.

பரகளத்திரம்-பிறர்மனையாள்.
பரகளத்திராபிகமனம்-விபசாரம் பண்ணுதல்.
பரகாயப்பிரவேசம்-கூடுவிட்டுக்கூடு பாய்தல், அஃது கலைஞானமறுபத் துநான்கிலொன்று.
பரகாயம்-பிறசரீரம்.
பரகாரியம்-பிறகாரியம்.
பரகிதம்-நட்பமாகக் கணிக்கப்பட்டது, பிறர்க்கு நன்மையானது.
*பரகீயம்-பிறர்க்குரியது.
பரக்கம்-பரத்தல்.
பரசஞ்சகம்-ஆன்மா.
பரசதம்-பலநூறு.
பரசமயம்-பிறசமயம்.
பரசமயி-பிறசமயி.
பரசம்-ஓரிரத்தினம்.
பரசாதி-அன்னியசாதி.
பரசிராமன்-மழுவுடையிராமன், இவன் சமதக்கினியு மிரேணுகையுந் தந்தை தாயாகத் திருமாலவதரித்தது
பரசிவம் } கடவுள்.
பரசிவன் }
பரசு-கோடாலி, பரசென்னேவல், மழு.
பரசுகம்-மோட்சானுபவம்.
*பரசுதரன்-கணேசன், சிவன், பரசுராமன்.
பரசுதல்-துதித்தல்.
பரசுபாணி - சிவன், பரசிராமன், விநாயகன்.
பரசுவதம்-பரசு.
பரசுவம்-பிறர்பொருள்.
பரசுதனன்-சிவன், பரசிராமன்.
பரஞானம்-பதிஞானம்.
பரஞ்சம்-செக்கு, நுரை, வாளுதி.
பரஞ்சனன் } வருணன்.
பரஞ்சேயன் }
பரஞ்சுடர் } சுயம்பிரகாசக் கடவுள்.
பரஞ்சோதி }
*பரஞ்சை - காகள முதலியவற்றின் தொனி.
*பரடன்-கூலிக்காரன்.
பரடு-காடு.
பரணம்-கவசம், சம்பளம், தாங்குதல், பட்டுச்சீலை, பாரம்.
பரணி-அணிகலச்செப்பு, ஏரி, ஓர்நாள், ஓர்பாத்திரம், ஓர்பிரபந்தம், அஃது ஆயிரங்களிற்றைக்கொன்ற வீரனைத்தலைமகனாகக்கொண்டு கடவுள்வாழ்த்தும் கடைதிறப்பும் பாலைநிலமுங் காளிகோவிலும் பேய்களோடுகோளியுங் காளியோடுபேய்களுஞ் சொல்லத்தான் சொல்லக்கருதியதலைவன் கீர்த்திவிளங்கவும் அவன் வழியாகப் புறப்பொருடோன்றவெம்போர் வழங்க விரும்பனுமென்றிவையெல்லா மிருசீரடி முச்சீரடி யொழித்தொழிந்த மற்றை யடிகளானிரடிப் பஃறாழிசையாற்பாடுவது, மரகு.
*பரணியம்-கூலி, சம்பளம்.
பரண்-இதணம்.
பரண்டை—கணைக்கால்.
பரதகண்டம்-நவகண்டத்தொன்று.
பரதசாத்திரம்-நடனநூல்.
பரதநாட்டியசபை-கூத்துக்களரி.
பரதநூல்-பரதசாத்திரம்.
பரதந்திரம்-சுதந்திரமின்மை.
*பரதந்திரன்-சுதந்திரமற்றவன்.
பரதபித்தல்-பரிதபித்தல்.
பரதமோகன நாட்டியம்-பரதமுறைப்படியாடுங்கூத்து.
பரதமோகினி-நாடகி.
பரதம்-இலட்சங்கொடி கோடாகோடி, கூத்து, நவகண்டந்தொன்று, பரதநூல்.
பரதர்-நெய்தனிலமாக்கள், வைசியர்.
பரதவசந்தன்-ஓர்கூத்து.
பரதவருடம்-பரதகண்டம்.
பரதவித்தை-பரதசாத்திரம்.
பரதனம்-பிறர்பொருள்.
பரதன்-இராமன்றம்பி, ஓரரசன், ஒரிருஷி, நெய்வான், பரதசாத்திரஞ் செய்தோன்.
பரதன்மம்-பரோபகாரம்.
பரதாக்கிரசன்-இராமன்.
பரதாபம்-பரிதாபம்.
பரதாரகமனம்-பிறர்மனைகலத்தல்.
பரதாரம்-பிறர்மனை.
பரதாரோபசேவனம்-விபசாரம்.
பரதி-நாடகி.
பரதிரவியம்-பிறர்திரவியம்.
பரதிருஷ்டானயோகம் - பிறர்செய்த மையைமறந்து நன்மையை நினைத்தல், அஃது தயாவிருத்தி பதினொன்றிலொன்று.

*பரதுக்கம்-அயலார் துன்பம்.
பரதூஷணம்-பிறரைத்தூஷித்தல்.
பரதேசம்-பிறதேசம்.
பரதேசவாசி-பிறதேசத்தோன்.
பரதேசி - ஓர்சாதி, பிறதேசத்தான், யாசகி.
பரதேவதை-கடவுள்.
பரத்தர்-தூர்த்தர்.
பரஸ்தலம்-வேற்றிடம்.
பரத்தல்-பரம்புதல்.
பரத்தி - நெய்தனிலப்பெண், பரவப்பெண், பரத்தியென்னேவல்.
பரத்தியாலனம்-தேவதியானம்.
பரத்திரம்-மறுமை.
பரத்திரவியம்-பிறர்பொருள்.
பரத்திரீ } பரஸ்திரீ } வேசி, வேற்றுப்பெண்.
பரத்திரீகமனம் } பரஸ்திரீகமனம் } தூர்த்தவியபாரம்.
பரத்துவம்-கடவுட்டன்மை, யுத்தம், விர்வியாசம்.
பரத்துவாசன்-கரிக்குருவி, சத்தவிருடிகளிலொருவன், துரோணாசாரியன்.
பரத்தை-ஓர்செடி, வேசி.
பரத்தையருவி-பரத்தைவெட்டிமருவி.
பரத்தையிற்பிரிவு-தலைமகன்பரத்தையிடத்துப்பிரிதல்.
பரநாதம்-ஓர்மருந்து.
பரந்தவடிவு-தட்டைவடிவு.
பரந்தவட்டம் } பரந்தவட்டினை } சேமக்கலம்.
பரந்தவம்-சேர்மானம்.
பரந்தவர்-வசகர்.
பரந்தாமம்-வைகுந்தம்.
பரந்தாமன்-திருமால்.
பரபட்சம்-பிறர்க்கிலெசொல்லும் பகுதி.
பரபதம்-மேன்மை, மோட்சம்.
பரபத்தி-சிவபத்தி.
பரபத்தியம் - சமன்செய்தல், பணக்கொடுக்கல் வாங்கல் பண்ணுதல்.
பரபத்தியம்வாங்கல்-பணக்கடன்வாங்கல்.
பரபரத்தல்-தீவிரப்படல்.
பரபரப்பு-சீக்கிரக்குறிப்பு.
பரபரணம்-உரிமை, பரம்பரை.
பரபரெனல்-சீக்கிரக்குறிப்பு.
பரபாகம்-அதிட்டம், சேடம், பிறர்சமைத்தது, மேன்மை.
பரபிண்டம்-பிறர்கையுணவு.
*பரபிண்டாதன்-எப்பொழுதும் பிறரன்னம் புசிப்பவன்.
பரபிருதம்-காகம், குயில்.
பரபுட்டமகோற்சவம்-மாமரம்.
பரபுட்டம்-குயில்.
பரபுட்டை-வேசி.
பரபுருடன்-கள்ளப்புருடன், விட்டுணு
பரபூமி-பிறதேசம்.
பரபூருவை - முன்கலியாணமுடிந்தவள்.
பரபேதகம்-சத்துருவையழித்தல்.
பரபோகம்-பேரின்பம்.
பரப்பத்தியம்-விசாலம்.
பரஸ்பரம்-பரற்பரம்.
பரப்பல்-பரம்பச்செய்தல், பரவுதல்
பரப்பிரபௌத்திரன் - அப்பாட்டன்.
பரப்பிரமம்-கடவுள்.
பரப்பு-அகலம், ஓர்நிலவளவுப்பிரமாணம், சப்பிரமஞ்சம், படுக்கை, பரப்பென்னேவல், பரவைக்கடல், விசாலம், விதி.
பரப்புதல்-பரம்பச்செய்தல், பரவுதல்
பரமகதி-அடைக்கலம், மோட்சம்.
பரமகுருதன்-கடவுள்.
பரமகாரியம்-தேவகாரியம், மகாகாரியம்.
பரமக்கியானம்-பரமஞானம்.
பரமசண்டாளன்-மகாதுரோகி.
பரமசத்துரு-மகாசத்துரு.
பரமசந்தேகம்-மிகுசந்தேகம்.
பரமசமாதி-தியானம்.
பரமசித்தி-முத்தி.
பரமசுந்தரி-தருமதேவதை.
பரமண்டலம்-வானுலகம்.
பரமதம்-கடவுள், பிறசமயம்.
பரமநாழிகை-முற்றுமுள்ள நாழிகை
பரமபதம்-உலகம், மோட்சம், விட்டுணு.
பரமபாகவதசிகாமணி } பரமபாகவதன் } வைணவசந்நியாசி
பரமம்-பரப்பிரமம், மகாமேன்மை.
பரமரகசியம்-அந்தரங்கவுண்மை, ஓர்நூல்.
பரமலுத்தன்-மிகுலோபி.
பரமலோகம்-சிவலோகம், மோக்கம்
பரமவிந்து-வேதம் வாசிப்போர் வாயிலிருந்தெறிக்குநீர்.

பரமவிராசன்-வகாதிபதி.
பரமன்-கடவுள், சிரப்பந்தபாஷாணம்.
பரமாகாயம்-துவாதசாந்தம், வெறு வெளி.
பரமாங்கனை-சௌந்தரி.
பரமாங்கிசம்-உபடேதமுப்பத்திரண்டிலொன்று.
பரமாணு-அதிருக்கவணு, ஓர்காலநுட்பம்.
பரமாத்துமன்-கடவுள், சன்னியாசி, பெருமையிற்சிறந்தோன்.
பரமாத்துமா-சுத்தாத்துமா.
பரமாயு-பூரண ஆயு.
பரமார்த்தம்-உண்மை, ஞானார்த்தம், தேவவறிவு, மெய்மை.
பரமாற்புதம்-தேவாற்புதம்.
பரமானந்தம்-பேரின்பம்.
பரமானந்தன்-கடவுள்.
பரமானுபவம்-அசிபதசோதனை.
பரமான்மா-இதர பதார்த்தானவச்சின்னவான்மா.
பரமான்னம்-சருக்கரையமுது.
பரமுத்தாத்துமா - சாயுச்சியகதி யடைந்தோர், பக்குவர்.
பரமுத்தி-சாயுச்சியம், மோக்கம்.
பரமேசன்
பரமேசுரன்
பரமேசுவரன்
பரமேச்சுரன்
பரமேச்சுவரன்
} கடவுள், சிவன், விட்டுணு.
பரமேசுவரி
பரமேச்சுவரி
} பார்வதி.
பரமேட்டி-அருகன், கடவுள், சிவன், பிரமன், விட்டுணு.
பரமோட்சம்-பரமுத்தி.
பரம்-அத்திமரம், உடல், கடவுள், கவசம், குதிரைக்கல்லணை, கேடகம், செயல், தனிமை, பழமை, பாரம், மிகுதி, முற்றத்துறத்தல், முன்பு, மோக்கம்.
பரம்பரம்-சுதந்தரம், வமிச பாரம்பரை, வமிசம்.
பரம்படித்தல்-பலகையடித்தல்.
*பரம்பதம்-மோட்சம்.
பரம்பரன்-அப்பாட்டன், கடவுள்.
*பரம்பராகம்-யாகபசுக்கொலை.
பரம்பராதி-தொன்றுதொட்டுள்ளது, பரவணியானது.
பரம்பரா-சம்பிரதாயம், தொடர்பு, தொன்றுதொட்டது, பரவணி.
பரம்பர்-ஓர்சாதியார்.
பரம்பு-சமனிநிருத்தும்பலகை, பரம்பென்னேவல், வரம்பு, விசாலம்.
பரம்புதல்-பெருகுதல், விசாலித்தல்.
பரரூபம்-விகாரப்படுதல்.
பரர்-அன்னியர், பகைவர்.
பரலோககமனம்-மரணம்.
பரலோகக்கிரியை-அபரக்கிரியை.
பரலோகசாதனம்-மோக்கத்துக்குரியசாதிப்பு.
பரலோகசௌக்கியம்-மோட்சானந்தம்.
பரலோகம்-தேவலோகம், மோக்கம்
பரலோகவாசி-மோட்சத்தான்.
பரல்-பருக்கைக்கல், விதை.
பரவசஞ்சொல்லுதல்-பிரமாணத்தோடேயாக்குத்துத்தம்பண்ணுதல்.
பரவசம்-தன்வசமற்றிருத்தல், பிரமாணத்தோடுபண்ணும்வாக்கு.
பரவணி-தலைமுறை.
பரவணிகாரன்-தலைமுறைதலைமுறையயுரித்துக்காரன்.
பரவணிப்பட்டம் - தலைமுறைப்பட்டவரிசைப்பெயர்.
பரவர்-ஓர்சாதியார்.
பரவல்-சொல்லுதல், பரவுதல், புகழ்தல், வணங்கல்.
பரவான்மா-முற்றத்துறந்தவான்மா.
பரவிருதயம்-குயில்.
பரவிவேகம்-ஞானவறிவு.
பரவுதல்-சொல்லல், துதித்தல், பரப்பிச்செப்பம்பண்ணுதல், பரப்புதல், வணங்கல், விரிதல்.
பரவுபகாரம்-பரோபகாரம்.
பரவெளி-பராகாயம், மாயாசூனியம்.
பரவை-இலக்குமிகூத்து, கடல், நீர், பரப்புவழக்கு.
பரவைவழக்கு-செய்யுளல்லாவியல்.
பரற்பரம்-பதிலுபகாரம்.
பரற்பரவிரோதம் - ஒன்றுக்கொன்று விரோதம்.
பரன்-கடவுள்.
பராகண்டம்
பராகண்டிதம்
} பராமுகம்.
பராகதம்-சருவுதல்.
பராகத்தின்சேவுகன்-பன்றி.

பராகமண்-செம்மண்.
பராகம் - ஓர்மலை, ஓர்வாசனைத்தூள், இரேணம், கீர்த்தி, சந்தனம், தூளி, பூந்தாது, மற்றைநாள்.
பராகரணம்-இகழ்தல்.
பராகாயம்-பரவெளி.
பராக்கிரம்-தைரியம்.
பராக்காட்டுதல்-பராக்குக்காட்டுதல்
பராக்கிரமசாலி-பலவான், வீரன்.
பராக்கிரமம்-வலி, வீரம்.
பராக்கிரமன் } பலவான், வீரன்.
பராக்கிரமி }
பராக்கிரமித்தல்-வீரங்காட்டல்.
பராக்கு-ஓர்பிரபந்தம், பலதையும்பார்த்தல், பொழுதுகழித்தல், வேறுபுலனாயிருத்தல்.
பராங்கதன்-சிவன்.
பராங்கவம்-சமுத்திரம்.
பராசத்தி-பஞ்சசத்தியிலொன்று, அஃது பிராணன்முதலிய வாயுவாகநிற்பது.
பராசயம்-வெற்றி.
பராசரம் - அட்டாதச வுபபுராணத்தொன்று, தருமநூல் பதினெட்டினுமொன்று.
பராசரன்-வியாசன்றந்தை.
பராசரியம்-சிற்பநூல் முப்பத்திரண்டினொன்று.
பராசனம்-கொலை.
பராசனன்-கொலைசெய்வோன்.
*பராசிதம்-சிவன்கைவாள்.
பராசியம்-பலரறிந்தது.
பராசுதை-துக்கம், மரணம்.
பராஞ்சம்-ஆயுதவலகு, செக்கு.
பராடம்-வனச்சார்பினிலம்.
பராதாரம்-காகம்.
பராதி-பிராதி.
பராதீனம்-சுதந்திரமற்றது.
பராந்திரம்-பிறவழி.
பராபரக்கண்ணி-ஓர்பாடல்.
பராபரம்-கடவுள், சிவம், நன்மை, தீமை, கடுத்தரம், முன்பின்.
பராபரவஸ்து-கடவுள்.
பராபரன்-பரமேசுவரன்.
பராபரித்தல்-பராமரித்தல்.
பராபரிப்பு-பராமரிப்பு.
பராபரை-பார்ப்பதி.
பராபவ-ஓராண்டு.

*பராபூதன்-தோற்றவன்.
பராமரித்தல்-விசாரித்தல்.
பராமரிப்பு-விசாரிப்பு.
பராமாத்துமியம்-உபநிடத முப்பத்திரண்டினொன்று.
பராமுகம்-அசட்டை, பின்னோக்கிய [முகம்.
பராயணம்-இராசிமண்டலம், பற்று, விருப்பு, வேதத்தின்பகுதி.
பராயணர் - குறிக்கொள்வோர், வேதாத்தியயனர்.
பராயணி-கன்னன்.
*பராயத்தம்-பிறரதீனம்.
பராய்-பிராய்மரம்.
பராரி-மூன்றாம்வருடம்.
பராருகம்-கல்.
பராரை-உள்ளோசை, பருமாத்தடி.
பரார்த்ததேவப்பிரத்திதம் - பிறர்க்காகத்தேவாராதனைசெய்தல், இஃது தயாவிருத்திபதினான்கினொன்று.
பரார்த்தம் - ஆயிரங்கோடி, கோடாகோடி, பிரமசற்பத்தனை, பிறர்க்குபகாரமானது.
பரார்த்தவநுமானம் - பிறர்பொருட்டாமநுமானம்.
*பராவரம-கடல்.
*பராவித்தன்-குபேரன்.
பராவிருத்தமுகம் - வேண்டாததற்குமுகந்திருப்பல்.
பராவுதல்-பரவுதல்.
பராநுகூலம்-பிறர்க்கநுகூலம்.
பராநுகூலி-உபகாரி, விபசாரி.
பரான்னம்-பிறர்கொடுத்த போசனம்
பரி-அசுபதி, அடையாளம், அலங்காரம், அன்பு, உண்மை, உயர்ச்சி, உள்ளக்களிப்பு, கருமை, காழ்த்தல், குதிரை, சுமை, செல்வம், துக்கம், துன்பம், நெருக்கிடை, பங்கு, பரியென்னேவல், பருத்தி, பாதுகாத்தல், பெருமை, மிகுதி, முடிவு, வணக்கம், வருத்தம், வழி, விசாலம், விரிவு, விரைவு.
*பரிகட்டகம்-ஓர்வகைக்கோடரி.
பரிகதம்-அறிவு, ஆதாயம், தடை, மறதி, விசாரணை.
பரிகதை-தரித்திரம்.
பரிகம்-அகழ், அழித்தல், இருப்புத்தண்டு, கதவிற்றாள், கிழங்கு, நித்தியயோகத்தொன்று, நீர்ச்சாடி, மதி

வன்மேடை, மதில், வலிதடி, வெளிக்கதவு.
பரிகம்பம்-பயங்கரம்.
பரிகரணம் } பிடித்தல், விடுதல்
பரிகரமானம் }
பரிகாரம்-இடைக்கட்டு, நீர்ப்பு, துவக்கம், படுக்கை, பரிவாரம்.
பரிகரித்தல் - காத்தல், பத்தியம்பண்ணல், பிராயச்சித்தம்செய்தல், வைத்தியம்பண்ணுதல்.
பரிகரிப்பு-குணமாக்கல், வகைசெய்தல், விலக்கல்.
பரிகருத்தனம்-குன்றல்.
பரிகருமம்-அலங்கரிப்பு, சுத்தி.
பரிகலச்சேடம்-உச்சிட்டம், மகாத்துமாக்களின் விசேடம்.
பரிகலத்தார்-பரிவாரசனம்.
பரிகலம் - சேனை, பரிவாரப்பேய், பரிவாரம், மகாத்துமாக்களுண்ணும் பாத்திரம்.
பரிகாலிதம்-உருகுதல், பாய்தல்.
பரிகற்பனம்-உணவுமுதலிய தேடல்,
பரிகாசப்பட்டன்-பரிகாசக்காரன்.
பரிகாசப்போர்-பகிடிச்சண்டை.
பரிகாசம்-பகிடி-மிகுநகை.
பரிகாதம்-ஆயுதம், கொல்லுதல்.
*பரிகாதகம்-கதாயுதம், பெருந்தடி.
பரிகாரம்-அவசங்கை, சூழ்தல், பரிகரித்தல், பிராயச்சித்தம், பெண்மயிர், மிருதி, வைத்தியம்.
பரிகாரி-வைத்தியன்.
பரிகிருசம்-மெலிவு.
பரிகீர்த்தனம்-சொல்லுதல், புகழ்தல்.
பரிகை - அகழ், அன்பு, உருக்கம், மதிலுள்மேடை.
பரிக்காரம்-அலங்காரம்.
பரிக்காரர் - குதிரைக்காரர், யானைக்காரர்.
பரிக்கிரகம் - அழிவு, ஆணை, இணக்கம், ஏற்றுக்கொள்ளுதல், நிலைபேறு, பிற்படை, மனையாள், மூலம்.
பரிக்கிரகித்தல்-கைக்கொள்ளல்.
பரிக்கிரமம்-அலைந்துதிரிதல், சுற்றுதல், போதல்.
பரிக்கிரயம்-மீட்பு.
பரிக்கிராகம்-பலிபீடம்.
பரிக்கிரியை-வேலியடைத்தல்.
பரிக்கை-பரிட்சை.

பரிசக்குன்று-நாகபச்சை.
பரிசனித்தல்-மிருதுவாய் படுதல்
பரிசதன்மாத்திரை - பரிசவுணர்வின் மூலம்.
பரிசதீட்சை-ஓர்தீட்சை, அஃது பிளையாகலர்க்குப்பரிசத்தினால் மலமறுத்தல்.
பரிசத்தலன்-கூட்டாளி.
பரிசம் - கற்பாஷாணம், தொடல், தொடுதலையறியுமறிவு, இஃது பஞ்சபுலனிலொன்று, மணவாளன், பெண்ணின் பிதாமாதாவுக்குக்கொடுக்கும் வெகுமானம்.
பரிசயம்-ஐக்கம், பரிசனை.
பரிசரம்-அகலம், மரணம், முறை.
பரிசரன்-காவற்காரன், தோழன், படைத்தலைவன்.
பரிசருப்பம்-சூழ்தல்.
பரிசனம் - உறவு, ஏவல்செய்வோர், தொடுதல், பரிசிப்பு.
பரிசனவேதி - இழிந்த லோகங்களைப் பொன்னாக்குமருந்து.
பரிசனன்-காற்று.
பரிசனை-பழக்கம்.
பரிசன்னியம்-மேருகிரி.
பரிசாதனம் - செய்துமுடித்தல், நிர்மானம்.
பரிசாயம்-ஓமக்கிடங்கு, ஓமம்.
பரிசாரகம்-ஏவல்வேலை.
பரிசாரகன்-ஏவல்செய்வோன், கூடப்போகிறவன்.
பரிசாரம்-பரிவாரம், பெண்மயிர்.
*பரிசாரிகை-ஏவல்செய்பவள்.
பரிசித்தல் } தீண்டல், பழகுதல்.
பரிசிப்பு }
பரிசிரமம்-பிரயாசம், வருத்தம்.
பரிசிரயம்-கூட்டம்.
பரிசிலாளர்-இரப்போர்.
பரிசில்-ஈகை, வெகுமதி.
பரிசு-ஈகை, கவ்வை, பண்பு, பயணச்சன்ம், பரிது, விதம்.
பரிசுகேடு-சங்கையீனம்.
பரிசுத்தம்-முழுதுஞ்சுத்தம், முழுநம
பரிசுத்தவான் } சுத்தமுள்ளோன்.
பரிசுத்தன் }
பரிசுத்தாவி-சுத்தமான ஆவி.
பரிசுத்தி-பரிசுத்தம், முற்றாக.
பரிசுத்தை-சுத்தமுள்ளவள்.

பரிசேதம்-எல்லை, பிரிவு, மாற்று.
பரிசேதனம்-பிரிப்பு, பரிசேதம்.
பரிசை-கேடகம்.
பரிசைக்காரர்-ஓர்சாதியார், கேடகம் பிடிப்போர்.
பரிசோதனை-புடைசோதனை.
பரிசோதித்தல்-முற்றுஞ்சோதித்தல்.
பரிச்சயம்-பழக்கம்.
பரிச்சித்து-ஓரரசன்.
*பரிச்சேதம்-எல்லை, நாற்கூறுபாடு.
பரிச்சேதன் / பரிச்சேதனம் - இலக்கியச்செய்யுட் கூறுபாடு, இல்லைமை, நீக்கம், முற்றும்.
பரிஞ்ஞானம்-அறிவு,
பரிட்காரம் / பரிஷ்காரம் - அலங்காரம், சமைத்தல், சமயாசாரத்துட்படுத்தல், முடிவு.
பரிட்கிருதபூமி-பலியிடம்.
பரிட்சாவிற்பத்தி-அப்பியாசத்திறம்.
பரிட்சித்தல்-அப்பியாசித்தல், ஆராய்தல்.
பரிட்சை - ஆராய்வு, சோதனை, பழக்கம்.
பரிட்சைபண்ணுதல் / பரிட்சைபார்த்தல் - அப்பியாசம் பண்ணுதல், ஆராய்தல்.
பரிட்டிணகம்-பட்சிவட்டமிடுதல்.
பரிணதம்-கனிவு,முதற்பணம், விளைவு
பரிணமித்தல்-வேறுபடுதல்.
பரிணயம் - கடைப்பிராயம், கலியாணம், முதிர்வு.
பரிணாகம் - அகலம், வட்டத்தின் சுற்றளவு.
பரிணாக்கன்-கணவன்.
பரிணாமசிரம் - ஒன்று திரிந்துண்டாவதேகம், அஃது ஆலதேகம்போல்வது.
பரிணாமசூலம்-ஓர்நோய்.
பரிணாமம்-வேறுபாடு.
பரிணாமாலங்காரம்-திரிபணி.
*பரிணாயம்-சொக்கட்டான்காய்.
பரிணேத்திரு-கணவன்.
பரிதனம்-போசுக்குதல்.
பரிதபித்தல்-இரங்குதல், துக்கித்தல், வருந்தல்.
பரிதபிப்பு-இரக்கம், துக்கம்.
பரிதல்-அறுத்தல், அன்பு,அன்போடு பேசல், இரங்கல், ஒடிதல், ஒழுகல், தரித்தல், பங்கிடல், பரிந்துபேசுதல், வெட்டுதல்.
பரிதாபகரம்-ஓர்கரம்.
பரிதாபப்படுதல்-பரிதாபித்தல்.
பரிதாபம்-இரக்கம், ஓர்நரகம், துயரம், பயம், வருத்தம், வெப்பம்.
பரிதாபி-ஓராண்டு, அயருறுவோன்.
பரிதாயம்-சகலாளன், சந்து, நீர்க்குண்டு, பின்றெருவை.
பரிதானக்காரன் - கைக்கூலி வாங்குவோன்.
பரிதானம்-உடுப்பு,கைக்கூலி, பொருள்கொடுத்துப் பொருள்வாங்குதல்
பரிதி-ஒளி, சக்கராயுதம், சூரியன்தேர்ச்சில், பரிவேடம், பொன், வட்டத்தின்சுற்றளவு, வட்டம்.
பரிது-பரியது.
*பரிதுஷ்டம்-சந்தோஷம்.
பரிதேவனம்-அச்சம், புலம்பல்.
பரிதேவிதம்-புலம்பல்.
பரித்தல்-காத்தல், சுமத்தல்,தரித்தல் தாங்குதல், தாபரித்தல்.
பரித்தியாகம்-நட்டம்,முற்றும்விடுதல்
பரித்தியாகி-சன்னியாசி,துறந்தோன்
பரித்திராணம்-தற்காத்தல்.
பரிநாமம்-கீர்த்தி, செல்வம்.
பரிநியாசம்-முடிவுசெய்தல், வசனப்பொருள்.
பரிபக்குவம் - ஏற்றசமயம், ஏற்றபக்குவம்.
பரிபணம்-கைப்பணம்.
*பரிபதி-பகைவன்.
பரிபந்தகன்-எதிரி.
பரிபந்தி-எதிரி, கள்வன்.
பரிபவபதம்-நிந்தையானநிலைமை.
பரிபவம் - அவசங்கை, இகழத்தகு பொருள், இழிவு, எளிமை, தோல்வி, வியாகுலம்.
பரிபாகம்-அடுதல்,ஏற்றபக்குவம்,சமர்த்து, பலம், சமித்தல், முதிர்வு.
பரிபாகி-ஏற்றபக்குவன்.
பரிபாஷணம் - இணக்கம், சம்பாஷணை, நிந்தை, முறை.
பரிபாடி-ஒழுங்கு.
பரிபாஷை-குழூஉக்குறி.
பரிபாலகன்-காப்போன்.
பரிபாலம் / பரிபாலனம் - அருளுதல், ஆஞை,காவல்,சமாளித்தல், தற்காத்தல்.

பரிபாலனன்-காப்போன். [ன்.
பரிபாலன்-காப்போன், சமாளிப்போ
பரிபாலி-காப்போன், பரிபாலியென்னேவல்.
பரிபாலித்தல் - அருளுதல், காத்தல், செழித்தல்.
பரிபாவம்-நிந்தை.
பரிபிட்டகம்-ஈயம்.
பரிபிரோசனம்-கழிதல், விடுதல்.
பரிபுட்கலா-ஓர்வெள்ளரி.
*பரிபுதம்-வெறுப்பு.
பரிபுரம்-காற்சிலம்பு, பாதகிண்கிணி.
பரிபூசனம்-வணக்கம்.
பரிபூதம்-சுத்தப்பட்டது, தெரிவு.
பரிபூரணதை-திருத்தி.
பரிபூரணத்துவம்-திருத்தி, நிறைபூரணத்தன்மை.
பரிபூரணம் - திருத்தி, மிகுதி, முழுப்பூரணம்.
பரிபூரணன்-கடவுள், சிவன்.
பரிபூரணி-பார்ப்பதி.
பரிபூர்த்தி-நிறைவு, மிகுதி.
பரிபோகம்-பிறன்பொருட்போகம்.
பரிப்பிரமம்-சுழலல், தவறு, திரிதல்.
பரிப்பு-பரித்தல்.
பரிமண்டலம், பரிமண்டலிதம் } உண்டை.
பரிமந்தம்-அற்புதம், மந்தம்.
பரிமளகந்தி-வியாசன்றாய்.
பரிமளக்குழம்பு-கலவை.
பரிமளசுகந்தம்-நற்கந்தம்.
பரிமளச்சேறு-பரிமளக்குழம்பு.
பரிமளதயிலம, பரிமளதிரவியம், பரிமளத்தைலம், பரிமளவருக்கம் } கந்ததயிலம்.
பரிமளம்-சந்தோஷம், சம்போகம், மிகுமணம், இஃது அட்டபோகத்தொன்று.
பரிமளித்தல்-சந்தோஷித்தல், சமாளித்தல், மிகமணத்தல்.
பரிமளிப்பு-சந்தோஷம், வாசம்.
பரிமா-குதிரை.
பரிமாணசந்தேகம்-அளவையிற்காணுஞ்சந்தேகம்.
பரிமாணம்-அளவு.
பரிமார்ச்சனம்-சுத்திபண்ணுதல்.
பரிமாவடிப்போர்-குதிரைப்பாகர்.
பரிமாறுதல்-உட்கொள்ளுதல், ஊடாடுதல், கொடுத்துமாறுதல், திரிதல், நடமாடுதல், பங்கிடுதல்.
பரிமாற்றம்-ஊடாட்டம், நடத்தை.
பரிமிதம்-அளவுபட்டது, எல்லை.
பரிமிதாகாரம்-மட்டானபோசனம்.
பரிமித்தல்-அணிதல், அலங்கரித்தல்.
பரிமுகம்-அசுபதி, காலிற்றேல்.
பரிமேயம்-அளவுபட்டது.
பரிமோசனம்-மயக்கு.
பரியகம் - காற்சரி, கைச்சரி, பாதகிண்கிணி.
பரியங்கம்-கட்டில், மக்கட்படுக்கை.
பரியஸ்தம்-மேல்கீழாதல், தள்ளுதல், விழுதல்.
பரியஸ்திகை-படுக்கை.
பரியந்தம்-எல்லை, முடிவு.
பரியயணம்-சேணம்.
பரியயம்-அசட்டை, எதிரிடை, ஒழுங்கின்மை.
பரியவசானம்-முடிவு.
பரியவஸ்தானம், பரியவத்தை } எதிரிடை.
பரியவம்-பலர்செல்லுநெறி.
பரியன்னியம்-முகில், முழக்கம்.
பரியன்னியன்-இந்திரன்.
பரியாகாரம்-காகம், கொண்டுபோதல், சுமை, தானியக்குவியல், நுகம்.
பரியாசம்-பரிகாசம்.
பரியாத்தம்-கூட்டுந்தன்மை, சம்மதம், திருத்தி.
பரியாத்தி-காத்தல், சம்பாதித்தல், சம்மதம், தகுதி, திருத்தி, பகுத்தறிதல், விலக்குதல்.
பரியாயசந்தேகம்-அற்பசந்தேகம்.
பரியாயச்சொல்-ஒருபொருள்குறித்த மறுசொல்.
பரியாயநாமம்-ஒருபொருட்கினமாயிருப்பது.
பரியாயம்-ஒழுங்கு, ஒன்றற்குரியன, ஓரலங்காரம், சமயம், சுபாவம், செய்யப்படுபொருள், மாதிரி, முகவுரை, அஃது கருதியபொருளையதற்குரியவிதத்தாற் கூறாது மற்றொருவிதத்தாற் கூறுதல்.
பரியாயான்னம்-ஓர்வருணத்தான் மற்றோர் வருணத்தானுக்குக் கொடுக்குமன்னம்.

பரியாரம்-பரிகாரம்.
பரியாரி-பரிகாரி.
பரியாலோசனம்-ஆலோசித்தல், சூழ்வரப்பார்த்தல்.
பரியாளம்-பரிவாரம்.
பரியானம்-சேனம்.
பரியுதஞ்சனம்-கடன்.
பரியுதாசம்-வழுக்குத்திரம்.
பரியுதாசனம்-வணக்கம்.
பரிரட்சணம்-காத்தல்.
பரிரபமானம்-ஆலிங்கனம்.
*பரிவசதம்-கிராமம்.
பரிவட்டம்-சீலை, துண்டுச்சீலை, செய்வார்கருவியிதென்று.
பரிவதனம்-அழுதல், நிந்தித்தல்.
பரிவயம்-அரிசி, இளமை.
பரிவருக்கம் - பரிவாரம், பாக்கியம், பொருள்.
பரிவருத்தம்-உலகமுடிவு, கூர்மம், சதுர்யுகமுடிவு, சுற்றுதல், நான்முடி பின்விடுதல், பொருள்கொடுத்தப்பொருள்வாங்கல்.
பரிவருத்தனம், பரிவருத்தனை-அதிகப்படல், சுற்றுதல், மாற்றுதல்.
பரிவருத்திதம்-சக்கரமானது.
பரிவற்சரம்-வருடம்.
பரியத்சனம்-கொலை, விடுதல்.
பரிவாகம்-பெருக்கு, மதகு.
பரிவாதிதமுகம்-மதத்தாற்றலையை ஒருபுறஞ்சாய்த்துச் சிறிதாய்ச்சாற்றியாட்டல்.
பரிவாதிதம்-வெறுமை.
பரிவாசம்-தங்குதல்.
பரிவாதகன்-வழக்காளி.
பரியாதம்-குற்றச்சாட்டு, பழிச்சொல், வீணையியக்கும்வில்.
பரிவாபம்-சௌளம்பண்ணல், நீர்க்குண்டு, பரிவாரம்.
பரிவாபனம்-மயிர்களைதல்.
பரிவாரதேவதை-எவற்றேவர்.
பரிவாரம்-அணிசெய்வோர், உறைகுழ்வோர்-படை.
பரியத்தி, பரிவினன், பரிவித்தகன்-முன்னேன் மணமுடியாதிருக்க முடித்தபின்னேன்.
பரிவிரட்டம்-தவசு.
பரிவிருதிதம்-அதிகப்படல்.
பரிவிருங்கணம்-அதிகப்படுத்தல், சேர்க்கப்படுவன.
பரிவிருடன்-மேன்மையுடையோன்.
பரிவிருத்தம், பரிவிருத்தி-ஒருபொருள்கொடுத்தொருபொருள் வாங்குதல், சுற்றுதல், முடிவு, முழுவட்டம்.
பரிவிதம்-பிரமன்வில்.
பரிவு-அன்பு, இன்பம், சுகம், துன்பம், பக்குவம்.
பரிவேசம், பரிவேஷம், பரிவேடம்-சந்திர சூரியனைச்சூழத்தோன்றும்வட்டம், சுற்றளவு, சூழுதல்.
பரிவேடணம்-சூழுதல், விருந்திடல்.
பரிவேட்டணம்-சுற்றளவு, சூழுதல்.
பரிவேதனம்-ஆராய்வு, உபத்திரம், சம்பாத்தியம், விவாகம்.
பரிவேதிரு-பரிவித்தகன்.
பரிற்பவம்-அசைவு, கொடுங்கோன்மை, மூழ்குதல்.
பரிகம்-நித்தியயோகத்தொன்று.
பரிகாசம்-பரிகாசம்.
பரிக்ஷை-தான்விவகரிக்கும் பொருளிவிலக்கணமுண்டோ வில்லையோவெனப்பார்த்தல், அஃது போதப்பிரகாரம் மூன்றினொன்று.
பரிசாரம்-சுற்றுதல்.
பரிட்சணம்-சோதனை.
பரிட்சித்தல்-ஆராய்தல், பழகுதல்.
பரிட்சை-அப்பியாசம், ஆராய்வு, பழக்கம்.
பரிஷ்டி-ஆயத்தம், ஆராய்வு, ஊழியம்
பரிஜூயம்-குதிரையெடுத்தடைத்தல்.
*பரிதாவி-ஓராண்டு.
*பரிபாவம்-நிந்தை.
*பரிமலம்-நறுமணம்.
பரியமாணம்-வடிருவுதல்.
பரிரம்-பழம்.
பரிரம்பம்-தழுவல்.
பரிவத்தம்-கொடுத்துமாற்றல்.
*பரிவாகம்-பிரவாகம்.
பரிவாதம்-கடிந்துகொள்ளல், வீணைவாசிக்கும்வில்.
பரிவாரம்-பரிவாரம், வாளுறை.
பரு-உடல், கறு, குரு, சிலந்தி, பருமை, பருவென்னேவல், மலை, மோக்கம்.
பருகல், பருகுதல்-குடித்தல், அஃது நால்வகையுணவினொன்று, புசித்தல்.

பருக்கல்-பருக்கச்செய்தல்.
பருக்கன்-பரும்படியானது, மிருது வற்றது.
பருக்குதல்-பருகச்செய்தல்,பருத்தல்
பருக்லை-உண்டை, சோறு,பருக்கை க்கல், பளிங்கு.
பருக்கைக்கல்-தரிசு.
பருங்கடி-மேற்கடிகடித்தல்.
பருங்கை-தாராளமாகக் கொடுக்குங் லை.
பருஷம்
பருஷவருஷம் } கடுஞ்சொல்.
பருஷோத்தி
பருசோத்திகன்-கடுஞ்சொற்காரன்.
பருணயனம்-விவாகம்.
பருணிதர்-புலவர்.
பருதி-பரிதி.
பருத்தல்-பெருத்தல்.
பருத்தாரம்-குபினை.
பருத்தி-ஓர்செடி.
பருத்திபன்னுதல்-பஞ்சுநூற்றல்.
பருந்தலை - பெருமையிற்சிறந்தோர், மேட்டிமைகாரர்.
பருந்தின்விருந்து-நண்டு.
பருந்தின்வீழ்வு - சூத்திரமிலே நான்கி னென்று,அஃது ஓரிடத்துச்சூத்தி ரம் பின்னோரிடத்துச்சூத்திரத்தை அவாவிநிற்பது.
பருந்து-ஓர்பறவை.
பருந்தொட்டு-பருமிதழ்.
பருபருக்கை-இருவனொருவல்.
பருபாரித்தல்-பருத்தல்,
பருப்பதம்-மலை.
பருப்பதி-பார்வதி.
பருப்பம்-பருமை.
பருப்பித்தல்-பரிதாக்கல்.
பருப்பு-அதிகப்படல்,பயறு,பருப்பம், வித்தின்பருப்பு.
பருப்பொருள்-நுண்மையற்ற பொருள்.
பருப்போனை-பருப்புச்சாதம்.
பருமட்டம்
பருமட்டு } பரும்படி.
பருமம்-அங்கி, குதிரைக்கல்லணை, நிதம்பம், பருப்பம், மூவாறுகோவை மணி.
பருமல்-கப்பற்பாய்கட்டுமரம்.
பருமன்-பருத்தது, பருத்தவன்.
பருமிதம்-இறுமாப்பு, சிரமம்.
பருமித்தல்-இறுமாப்பாயிருத்தல்,சிரமஞ்செய்தல்.
பருமிப்பு-இறுமாப்பு, சிலம்பம்.
பருமுடி-பரும்புடைவை.
பருமை-பருப்பம்.
பரும்படி-பருமட்டு.
பரும்பனையன்-ஓர்நோய்.
பருயகம்-முழந்தாள்.
பருவகாலம்-உரியகாலம், பக்குவகாலம்.
பருவக்காய்-உரியகாலத்திற்காய்.
பருவசந்தி-உவாக்கட்கடையும் பிரதமைமுதலும் பொருந்துஞ்சமயம்.
பருவனிகை-ஓர்கண்ணோய்.
பருவதகாசம்-ஓர்காசம்.
பருவதம்-ஓர்மரம், ஓர்மீன், மலை.
பருவதவத்தனி-பார்வதி.
பருவதவாசினி-காயத்திரி, துற்கை.
பருவதாசயம்-முகில்.
பருவதாசிரயம்-சரபப்பட்சி.
பருவதாதாரை-பூமி.
பருவதாரி-இந்திரன்.
பருவதி-சந்திரன், பார்வதி.
பருவமாதல்-இருதுவாதல், பக்குவமாதல்.
பருவம்-அமாவாசி, இளமை,உயரம், ஏது, காலம், பகுதி, பக்குவம்,பருவகாலம், பிரமாணம், பூரணை, பெருநாள், பொழுது, முனி.
பருவயோனி-கரும்பு.
பருவரல்-அருவருப்பு, துன்பம்.
பருவரிணம்-திருவிழா.
பருவருதல்-அருவருத்தல், துன்பப்படல்.
பருவலயம்-குழியம்.
பருவல்-பருத்தது.
பருவெட்டு-பரும்படியாய்வெட்டின வெட்டு.
பருஉ-பருமை, பருத்தல்.
பரேஷ்டி-பரமேட்டி.
பரோதம்-பிசாசம்.
பரேதராசன்-நமன்.
பரோபம்-நீர்நிலை.
பரை-பார்வதி.
பரோட்சக்கியானம் - அதிரிசியமானவற்றையறிதல்.
பரோட்சபோகம் - பரத்திரவியானுபவம்.

பரோட்சம்-அதிரியமானவை, இறந்தகாலம்.
*பரோட்சன்-தவசி.
பரோட்சார்த்தம்-காணப்படாத பொருள்.
பரோறிதம்-அக்கறுத்தல்.
பரோபகாரம்-பிறர்க்குபகாரம்.
பரோபகாரன் } பிறர்க்குபகாரி.
பரோபகாரி }
பரோபசயம்-வாக்குவாதம்.
பரோபரீணம் - தோற்றரசமற்றது.
*பர்க்கம்-ஒளி, வீரியம்.
பர்க்கன்-பரமன்.
*பர்ணசாலை-இருடியர் ஆச்சிரமம், இலைகளால் வேய்ந்த குடில்.
*பர்ஜநகம்-மேகம்.
*பர்ணி-முருக்கமரம்.
பர்ப்படகம்-பற்படாகம்.
*பர்மம்-கொப்பூழ், பொன்.
*பர்யுகஞ்சகம் } கடன்.
*பர்யுதஞ்சகம் }
பல-அநேகம்.
பலகணி-சாளரவாயில்.
*பலகண்டன்-உப்பரவன், மண்வேலைசெய்வோன்.
பலகம்-அடுக்கு, கேடகம், நாற்காலி, பின்சந்து.
பலகலப்பை } பலவுங்கலந்தது, வாசனைப்பொடி.
பலகலவை }
பலகறை-கவடி.
பலகாரம்-அப்பவருக்கம், யானைமேற்றவிசு.
பலகினம்-பலக்கேடு.
பலகேசரம்-தெங்கு.
பலகை - கேடகம், தொட்டிபாஷாணம். [ன்று.
பலகைக்கயிறு-செய்வார்கருவியிலொ
பலகைக்கள்ளி-ஓர்கள்ளி.
பலகைப்பா-இரதத்தோருறுப்பு,பாவப்பட்ட பலகை.
பலகையடித்தல்-பரம்படித்தல்.
பலகையுரு-வளைசிறுப்பு.
பலக்கரம்-பித்தம்.
பலசந்தமாலை-ஓர்பிரபந்தம், அஃது பப்பத்துச்செய்யுள் ஒவ்வோர் சந்தமாக நூறுசெய்யுட்கூறுவது.
பலசம்-நகரவாயில், பழம், பனசம், யுத்தம், வயல்.

பலசம்பத்து } பலபொருள்.
பலசம்பாரம் }
பலசாக்கு-கடைச்சரக்கு, பலசாமா [ன்.
பலசாடவம்-மாதளை.
பலசாலி-பலமுள்ளோன்.
பலசிரேட்டம்-மாமரம்.
பலசூதனன்-இந்திரன்.
பலட்சயம்-பலவீனம்.
பலட்சாரம்-இரத்தம்.
*பலதம்-மரம். [சேர்த்திருப்பது.
பலதிரட்டு-பலபாடலிலு மெடுத்துச்
பலதுறை-பலவழி.
பலதேவன்-பலபத்திரன், வாயு.
பலத்தல்-பெலத்தல்.
*பலத்திரயம்-திரிபலை.
பலபடப்புனைவணி-ஓரலங்காரம், அஃது ஒருபொருளிற்பலரும்பலகுணங்களாற்பொருள்களை ஆரோபித்தலும் ஒருவரே யொருபொருளில் விடயபேதங்களாற் பலபொருள்களையாரோபித்தலுமாம், (உம்) ஆரணங்காணென்ப ரந்தணர்யோகியராகமத்தின் காரணங்காணென்பர் எனவும், வில்லிற்குவிசயன், கல்விக்குச்சேடன் எனவும் வரும்.
பலபடுதல்-இரட்டித்தல்,வேறுபடல்.
பலபட்டறை-பண்டகசாலை.
பலபண்டம்-பலகாரம், பலபொருள்.
பலபத்திரன்-பலதேவன்.
பலபகதர்-வலோத்காரம்.
பலபலெனல்-ஒலிக்குறிப்பு, ஒளிக்குறிப்பு, விடியற்குறிப்பு.
பலபாகம்-பிரயோசனப்பங்கு.
பலபாடு-பலதொந்தரை.
பலபூமி-நரகம், மோக்கம்.
*பலபூரம் } மாதளை.
*பலபூரகம் }
பலபெயர்த்திரிசொல்-செந்தமிழ்நிலத்துமொழிகளாய்க் கற்றோர்க்கு மாத்திரந்தம்பொருள்விளக்கியொருபொருளைக்குறித்த பலபெயராய் வரும்பெயர்ச்சொல்.
பலபை-சூரியன் மேடவரியினிற்கையிற்கடிகாரமத்தியில்விழுநிழல்.
பலபொருட்சொற்றொடராணி-ஓரலங்காரம், அஃது பலபொருள்களைத் தருதற்குரிய சொற்களைப் புணர்த்துக்கூறுதல்.

பலபொரு ளொருசொல்-பலவருத்த ங்கொள்ளுஞ்சொல்.
பலபொருள்குறித்த ஒரிடைத்திரிசொல்,செந்தமிழ்நிலத்துமொழிகளாய்ச்செய்யுட்கே யுரியனவாய்க் கற்றோர்க்குமாத்திரந் தம்பொருள்விளக்கிப்பலபொரு டருமொர்சொல்லாய்நிற்குமிடைச்சொல்.
பலபொருள் குறித்த ஒருவினைத்திரிசொல்-செந்தமிழ்நிலத்து மொழிகளாய்ச் செய்யுட்கே யுரியவாய்க்கற்றோர்க்குமாத்திரம் பொருள்விளக்கிப் பலபொருடருமொரு சொல்லாய்நிற்கும் வினைச்சொல்.
பலப்படுதல்-பலமடைதல், வளர்தல்.
பலப்பம்-மாக்கல்.
பலப்பல்-பலபல்.
*பலப்பிரியம்-செம்போத்து.
பலமுகம்-பலகாரியம், பலதிசை, பலவழி.
பலமுறை-நானாவிதம், பலதரம்.
பலமூலசாகாசனர்-முனிவர்.
பலம்-அம்பலகு, ஆதாயம், ஆயுததுனி, இலை, காய், கிழங்கு,கேடகம்,கொழு, சாதிக்காய்,சுரூபம்,செல்வாக்கு, தாது, தொகை,பிமிஷம்,நிறைகல்,நிறையளவிலொன்று, நெற்றிப்படை, பயன், பருப்பம்,பழம், பிரித்துக்கண்டபேறு, பெலன், பொன், மகளிர்சூதகம், மாதிரி,மாமிசம், வட்டத்தின்பரப்பு.
பலரறிசொல்-உயர்திணைப் பன்மைச்சொல்.
பலராமன்-பலபத்திரன்.
பலர்-அநேகர்.
பலர்க்கம்-கருப்பு.
பலர்பால்-ஆண்பன்மையையும்பெண்பன்மையையும், இருவர் பாற்கும்பொதுப்பன்மையையுங்காட்டிநிற்பது.
பலலப்பிரியம்-காகம்.
பலலம்-சேறு,பிண்ணாக்கு, மாமிசம்.
*பலலன்-இந்திரன்மகன்,பலராமன், பெருண்டியான்.
பலலாசயம்-கழுத்து.
பலவத்தர்-கடவுட்டிருவுளப்படி யெய்துங் கருமங்கட்குவருமிடையூறறையவரைக் காத்தருப்பவர்.
பலவத்தை-பலம்.
பலவந்தம்-பலபந்தம்.
பலவரி-ககரமுதனகரவீறாய ட்டெழுத்து.
பலவழித்தோன்றல்-ம
பலவறிசொல் - அஃறி சொல்.
பலவறுதி-பலவீனம்.
பலவானம்-மந்தாரச்செடி
பலவிதம்-நானாவிதம்.
*பலவிருட்சகம்-பலாமா
பலவினைதிரிசொல்-செ துமொழிகளாய்க் கற்று திரந்தம்பொருள்விளக்கி குறித்த பலசொல்லாய்வ வினைச்சொல்.
பலவின் கூட்டந்தந்நிறைமை - னெனுந்தமை,(உம்) படைய குதி.
பலவின்பால் - அஃறிணைப் பன்பால்.
பலவு-பலாமரம்.
பலற்காரம்-பலபந்தம்.
பலனம்-கனிகொடுத்தல்.
பலன்-இலாபம், காய், செவதருமமுத லியவற்றான்வரும்பேறு, பழம், பிரயோசனம், புண்ணியம்.
பலன்கொடுத்தல்-பிரயோசனமளித்தல், பேறுதல்.
பலா-ஓர்மரம்.
பலாகம்-கொக்கு.
பலாகாரம்-பழமுதலியபோசனம்.
பலாக்கினி-பித்தம்.
பலாங்கம்-ஒர்மீன்.
பலாசம்-இலை, ஓர்பிசாசம், பச்சைநிறம், பயிர்,ப்லாமரம்,புனமுருக்கு, மகதம், முருக்கு.
பலாசவம்-கிளி.
பலாசாக்கியம்-பெருங்காயம்.
பலாசி-மரப்பொது.
பலாசு-பலாசம்.
பலாட்டியம்-பலபந்தம்.
பலாண்டு-ஈரவெங்காயம்.
பலாதனம்-கிளி.
பலாதன்-ஒரரக்கன்.
*பலாநுஜன்-க்ருஷ்ணன். [ம்.
பலாந்தம்-ஒருகாற்காய்த்துப் படுமர
பலாபம்-யானைமத்தகம்.

க் } கவசட்டம், மிருப
ன் } லன்.
ரம்-போதல்.
பரோ } இந்திரன்.
பரோன்.
பரோ } விழுதற்குறிப்பு.
பரோ }
பரோம்-மாமரம்.
பரேக்கோல்.
*பல்-வலாற்காரம்.
பர், உடற்றிவை, கலிக்கை,
*பருக்ரமாம், காம்பல், சேட
று, தேவருணவு, கிறு, பலி
*த்ரம், பிச்சை, பூசை, வின்
றுணவு.
- கவர், நீர்க்குடம், பளிங்கு,
சைப்பாத்திரம், வாயில்.
கை-பின்றுக்கு.
காடுத்தல் } பலியிடுதல்.
செலுத்தல் }
ச்சக்கரவர்த்தி-மாபலி.
திதம்-கனியுள்ளது, சேறு, பலிப்ப
து, மயிர்கலா, வெம்மை.
பலிதானம்-பலிகொடுத்தல்.
பலிதை-நிழலி.
பலித்தம்-நிலாபம்.
பலித்தல்-செழித்துவளர்தல், கயப்ப
டல், வாய்த்தல்.
*பலிசுந்தரன்-வாலுசுரன்.
பலிபீடம்-பலிசெலுத்தும்பிடம்.
பலிபுட்டம்-காக்கை.
பலிபோடுதல்-பலிகொடுத்தல்.
பலிப்பு-பலித்தல்.
*பலிமந்திரம்-பாதாளம்.
*பலிமுகம்-குரங்கு.
பலியங்கம்-பரியங்கம்.
பலியம்-தளிர், பூ.
பலியயனம்-சேணம்
பலியிடுதல் } பலிசெலுத்துதல்.
பலியூட்டுதல் }
பலியெடுத்தல்-உயிரெடுக்குதல், பலி
யேற்றல்.
பலினம் } காய்த்திருக்தமரம், கோ
லினி } ங்கு, குழல். [பன்றி.
பலி-எருது, ஒட்டகம், கடா, கோவேழு,
பழுகல் } பெருகுதல்.
குதல் }

பலேந்திரன்-பலயான்.
பலே-பழம்.
பலோதயம்-சூரியம், சந்தோஷம்,
பலம், மோக்கம்.
பலோற்காரம்-வலோற்காரம்.
பலோற்பதி-மாமரம்.
பலோலி-பெண்குறி.
பல்-ஆயுதக்கரு, கருக்கு, நல்கூர்மைக்
கு, பல்லு.
பல்கனி-முழைவாயில்.
பல்கல்-பருகல், வெகுநாள்.
பல்காயனார்-ஓர்புலவன்.
பல்குதல்-பருகுதல்.
பல்பல-பலபல.
பல்லகம்-காடி.
பல்லக்கு-சிவிகை.
பல்லங்குழி-பல்லாங்குழி.
பல்லணம்-குதிரைக்கல்லணை.
பல்லபி-ஒதிரகம்.
பல்லம்-அம்பு, ஒரளவு, காடி, குதி
ரைக்கல்லணை, கோரிகை, சேமரம்.
பல்லரணை } ஓர்நோய்.
பல்லரணை }
பல்லவகன்-ஆர்த்தன்.
பல்லவத்திரு-அசோகமரம்.
பல்லவம்-இலை, கிளை, கொப்பு, கை
யணி, சாயம், தளிர், தேயமொம்ப
த்தாதிகொன்று, பதத்திலொருறுப்
பு, விசாலித்தல்.
பல்லவர்-கீழ்மக்கள், ஆர்த்தர்.
பல்லவாதம்-மான்.
பல்லவாதாரம்-கொப்பு.
பல்லவாத்திரன்-காமன்.
பல்லவி-பல்லவம்.
பல்லவை - இழிபானபொருள், சிறு
மை, பலபொருள்.
பல்லாக்கு-பல்லக்கு.
பல்லாங்குழி-பன்னாங்குழி.
பல்லாண்டு-வாழ்த்து.
பல்லாதகம் } சேமரம்.
பல்லாதகி }
பல்லாதம் }
பல்லார்-பலர்.
பல்லி-இடம், இடையரூர், கௌளி, நலங்
கெற்றூர், வோரும்பு.
பல்லிசை-செங்கோட்டை, பல்லி. புணர்த்
பல்லிச்சாத்திரம்-கௌளிநூல்.
பல்லிப்பூடு-ஓர்பூண்டு.

பல்லியம்-சங்கீதம்,வாச்சியப்பொது
பல்லியாசியம்-பல்லிச்சாத்திரம்.
பல்லு-தந்தம்.
*பல்லுகம்-கரடி.
பல்லுக்கடித்தல் - அதரத்தைக் கடித்தல்.
பல்லுக்காட்டுதல்-கெஞ்சுதல்.
பல்லுக்கிட்டுதல்-அலகுபூட்டுதல்.
பல்லுக்கெஞ்சுதல்-மன்றுடுதல்.
பல்லுக்கொறிக்குதல்-பல்லோடுபல்லரைத்தல்.
*பல்லுங்கம்-மூங்கில்.
பல்லுத்திட்டுதல்-பல்லுக் கொறிக்குதல், பல்லுமிறுக்குதல்.
பல்லுவிளக்குதல்-பல்லுமிறுக்குதல்.
பல்லுருசெங்கனி - குதிரைப்பப் பாஷாணம்.
*பல்லூகம்-கரடி, குரங்கு.
பல்லூழி-அனேகயுககாலம்.
பல்வலம-சிறுகுளம், வாவி.
பல்வலாவாசம்-ஆமை.
பவ-ஓராண்டு.
பவணந்தி-ஓர்நூலாசிரியன்.
பவனை-கழுகு.
பவநாசம்-ஓர்தீர்த்தம்.
பவநாசன்-கடவுள், சிவன்.
*பவநாசினி-சரயுநதி.
பவந்தி-கற்புடையாள்.
*பவபூதி-ஓர்வடமொழிப்புலவன், சிவன், ஐஶ்வர்யம்.
பவமானம் } தீ, வாயு.
பவமானன் }
பவம்-அழிவு, இருத்தல், உலகம், காற்று, சதுப்புநிலம், சம்பாத்தியம், சாவனி, சிங்கக்கரணம், சுத்தம்,நிலைபரம், பலன், பாவம், பிறப்பு, மேன்மை.
பவர்-கவர், நெருங்கல்.
பவர்க்கம்-நரகம்.
பவவீதி-முடிவு, முற்றத்துறத்தல்.
பவழம்-பவளம்.
பவளக்கொலி-ஓர்புள், ஓர்பூடு.
பவளக்குறிஞ்சி-ஓர்பூண்டு.
பவளச்சோளம்-ஓர்ச்சோளம்.
பவளநெடுங்குஞ்சியோன்-வயிரவன்
பவளப்புற்றுப்பாஷாணம்-ஓர்பாஷாணம்.
பவளப்பூண்டு-ஓர்பூண்டு.

பவளப்பூலா } ஓர்செடி.
பவளப்பூல் }
பவளமல்லிகை-ஓர்மல்லிகை.
பவளமஞ்சரிலை-ஓர்சாக்கு.
பவளம்-நவமணியிலொன்று.
பவளவங்காரவாச்சி-ஓர்பூண்டு.
*பவனகுமாரன்-அக்கினி.
பவனசுதன் } ஆஞ்சநேயன், வீமன்.
பவனநந்தனன் }
பவனம்-தாமரை, இராசி, ஒதுக்கல், காடு, காற்று, குயவன்சூளை, கொழித்தல், கோட்டை, சுத்தம், தூற்றுதல், தேவலோகம், நாகலோகம், பவனவாய், பாவனை, பூவலகு, பூமி, பொழுது, வீடு.
பவனவாசல் } அபானத்துவாரம்.
பவனவாய் }
பவனவாயு-அதோவாயு.
பவனாசநாசம்-கருடன், மயில்.
பவனாசம் } பாம்பு.
பவனாசனம் }
*பவனாசநாசன்-கருடன், மயில்.
பவனாத்மசன்-அக்கினி,அநுமான்.
பவனி-உலாப்போதல்.
பவனிக்காதல்-ஓர்பிரபந்தம், அஃது பவனிவந்ததலைமகன் மேற்கொண்ட காமத்தாலவன் சிறப்பைப் பிறரோடுரைத்து வருந்துவதாகக் கூறுவது.
பவனோதரம்-உள்வீடு.
பவன்-கடவுள்.
பவாகை-சுழல்காற்று.
*பவானிகுரு-இமயமலை.
பவாபாவம்-நாலகுணியம்.
பவாயனை-கங்கை.
பவானி-பார்வதி.
பவி-இடியேறு.
பவிகம்-மங்களம்.
பவிஞ்சு-பவுஞ்சு.
பவிடியம்-செல்மம், நிகழ்காலம்.
*பவிதவ்வியம் } சுபம், பாக்கியம்.
*பவிதவ்வியதை }
*பவிதம்-சுத்தம், மிளகு.
*பவித்திரகம்-அத்திமரம்,அரசமரம், தருப்பைப்புல், நெய், வலைக்கயிறு.
பவித்திரமுடிச்சு-ஓர்வகைமுடிச்சு.
பவித்திரமோதிரம்-... சாய்...

த்திரம் - காணிக்கைப் பாத்திரம், சம்பு, தண்ணீர், தருப்பை, தருப்பைப்புல்லாற்செய்த வோர்முடிச்சு, துடைத்தல், தூய்மை, தேன், நெய், பூணூல்.
பவித்திரவான்-தூயவன்.
பவித்திராரோபணம்-பூணூலணிதல்.
பவித்திரி-சுத்தம், தருப்பை.
பவித்திரிதம்-சுத்தம்.
பவித்திரீகரணம்-சுத்திசெய்தல்.
பவித்திரை-தூய்மையுள்ளவள்.
*பவிரன்-நூலாசிரியன்.
*பவுகம்-சுபம்.
பவுஞ்சு-படை.
பவுண்டிரகம்-ஓர்பலி.
பவுதிகம்-பௌதிகம்.
பவுத்திரர்-பௌத்திரர்.
பவுந்திரம்-பகந்திரம்.
பவுரணமி } பௌரமி.
பவுரமி }
பவுராணிகம்-பௌராணிகம்.
பவுரி-கூத்தின்விகற்பம்.
பவுரிசம்-போலியானநடை, வேஷம்.
பவுள்சு-ஆடம்பரம், ஐசுவரியம்.
*பவேலகம்-மோவாய்க்கட்டை,மீசைமயிர்.
பவோற்பவன் - பன்னொருருத்திரரிலொருவன்.
பவ்வம்-பௌவம்.
*பவ்வியம்-சத்தியம், சுபம், பயன்.
*பவ்வியை - யானைதிப்பிலி, உமாதேவி.
பழகல்-பழகுதல்.
பழகடி-பழக்கமுடையோன்.
பழகாதபழக்கம்-கெட்டபழக்கம்.
பழகுதல்-உண்டாயிதல், கற்குதல், பயிலல், வழங்குதல்.
பழக்கம்-அறிமுகம், பயிற்சி, பரிசனை
பழக்கம்பண்ணுதல்- அப்பியாசித்தல், அறிமுகப்படுத்தல், பாவித்தல்.
பழக்காய்-செங்காய்.
பழக்குதல் - அறிமுகப்படுத்தல், பயிற்றல்,பரிசினைப்படுத்தல், வழங்கல்
பழங்கஞ்சி-முதனாட்கஞ்சி.
பழங்கணக்காதல்-பழசுபடல்.
பழங்கண் - இளைப்பு, ஒலி, துன்பம், ... மெலிவு.

பழங்கதை-இழக்கதை, பூருவகதை.
பழங்கிடையன்-நெடுநாட்பட்டது.
பழசு-பழயது.
பழசுபடுதல்-பழயதாதல்.
பழஞ்சாரம்-பழங்காய்ச்சல்.
பழஞ்சொல்-பழமொழி.
பழந்தண்ணீர்-நீர்ச்சோறு.
பழந்தரை-பழநிலம்.
பழப்புளி-புளியம்பழக்களி.
பழமலை-திருமுதுகுன்றம்.
பழமனை-அழிந்தவீடு, முன்வீடிருந்த நிலம்.
பழமுண்ணிப்பாலை-ஓர்மரம்.
பழமை-பழைமை.
பழமொழி-ஓர்நீதிநூல், முதுசொல்.
*பழமொழித்திரட்டு-ஓர்நூல்.
பழம்-கனி, முதிர்ந்தது.
பழம்பகை-தொந்தப்பகை, நெடுநாட்பகை.
பழம்பஞ்சுரம்-ஓர்பண்.
பழம்பழுத்தல்-சொக்கட்டானிலோர் செய்கை.
பழம்பாசி-ஓர்பூடு.
பழம்பாடம்-படித்தபாடம்.
பழம்பொருள்-கடவுள், பழயபொருள், புதையல்.
பழயகாலம்-முற்காலம்.
பழயபடி-முந்தினபிரகாரம்.
பழயபாடல்-முன்னோர்பாடல்.
பழயமனிதர்-முன்னோர்.
பழவடியார்-வழித்தொண்டர்.
பழவினை-ஊழ்வினை.
*பழனமாக்கள்-மள்ளர்.
பழனம்-மருதநிலம், வயல்.
பழனி-திருவாவினன்குடி.
பழி-குற்றம், பழியென்னேவல், பொய், பொல்லாங்கு, வயிராக்கியம்.
பழிகட்டுதல்-பழிபிடித்தல், பழிமூட்டுதல், வசைகூறல்.
பழிகாரன் - பழிக்குடந்தைக்காரன், பழிவாக்குவோன்.
பழிகிடத்தல்-யாதொன்றுபெறுவதற்குப் பட்டினிகிடத்தல்.
பழிகூறல்-தூற்றல், அஃது மும்மொழியினொன்று.
பழிக்குச்செய்தல் - கடன்வழிக்குச் செய்தல்.
பழிக்குடி-எதிரிடைக்குடி, பழிக்கிடமாயிருக்குங்குடி.

பழிக்குவிடுதல் - தன்காரியமல்லவென்றுவிடுதல், மறுபெயரிலேபழிவரும்படிவிடுதல்.
பழிசுமத்தல்-பழிசுமத்துதல்,பழிவக்குப்பொறுத்தல்.
பழிசுமர்த்துதல் - பழியைச்சுமத்துதல், பிறர்மேற் பாரம்போடுதல்.
பழிசூழ்தல்-பழியடைதல், முற்பழிவந்துசேருதல்.
பழிசெய்தல்-தீங்குசெய்தல்.
பழிசொல்லுதல் - பொல்லாங்குசொல்லல்.
பழிச்சல்
பழிச்சுதல் } துதித்தல்.
பழிச்சொல்-பழிமொழி.
பழிதீர்தல் - குற்றநீங்கல், சமாதானமாதல், பொல்லாங்குதீர்தல்.
பழிதீர்த்தல்-குற்றநீக்கல், சமாதானப்படுத்தல், பொல்லாங்குநீக்குதல்
பழிதூறுதல்
பழிதூற்றுதல் } புறங்கூறல்.
பழிதேடுதல் - பழிகட்டுதல், பொல்லாங்குசெய்தல்.
பழித்தல்-நிந்தித்தல்.
பழிபடுதல்-குற்றப்படல், பழிக்குட்படுதல்.
பழிபிடித்தல்-விரோதங்கட்டல்.
பழிபோடுதல்-பழியிடுதல்.
பழிப்படுதல் - குற்றப்படல், பழியேறுதல்.
பழிப்பனவு-பழிப்பனகாரியம்.
பழிப்பு-நிந்தை, பழி.
பழிமீட்குதல் - பழிதீர்த்தல், பழிவாங்குதல்.
பழிமுடிதல்-பழிமூட்டுதல்.
பழிமுடித்தல்-பழிசாதித்தல், விரோதங்கட்டல்.
பழிமூட்டுதல்-கோள்மூட்டுதல்.
பழிமூளுதல்-பொல்லாங்குண்டுபடல்
பழிமொழி-புறங்கூறல்.
பழியிடுதல்-பழியேற்றுதல்.
பழியெடுத்தல்-பழிதேடுதல்.
பழியேறுதல்-பழிபிடித்தல்.
பழியேற்குதல்-பழிக்குடன்படல்.
பழிவருதல்
பழிசுமத்தல் } பழிசுமருதல்.
பழிவாங்கல் - தீமைக்குத்தீமைசெய்தல்.
பழிவேலை - வேண்டா வெறுப்பானவேலை.
பழிவைத்தல் - பழிப்படுத்திச்சொல்லல்.
பழு-பழுவென்னேவல், விலா.
பழுக்கச்சுடுதல் - பொன்னனலியைப்பழுப்பாக்கல்.
பழுக்கப்போடுதல்-காய் பழமாகும்படி அடங்கிற்போடுதல்.
பழுக்காய்-ஓர்நிறம்,தேங்காய்,பாக்கு
பழுதாதல்-பழுதுபடல்.
பழுது-குற்றம்,பொய், பொல்லாங்கு
பழுதுபடல்-சீர்கெடல்.
பழுதுபார்த்தல்-திருத்துதல்.
பழுதை-கயிறு, வைக்கோற்புரி.
பழுத்தபழம்-தேர்ந்தகள்வன், பூரணபலம், முதிர்ந்தவன், விருத்தன்.
பழுத்தல்-கனிதல், பழமாதல், பழுத்தஇலை, பழுப்புநிறங் கொள்ளல், முதிர்தல்.
பழுபாகல்-ஓர்பாகல்.
பழுப்படைதல் - இடைப்பழுப்பேறல்.
பழுப்பு - அரிதாரம், ஓர்நிறம், சென்பு, பழுத்தலாயிருப்பது.
பழுப்பேறுதல்-பழுப்படைசுதல்.
பழுமரம்-ஆலமரம், பழுத்தமரம்.
பழுவம்-காடு.
பழுவறை-பழு.
பழைசு
பழைது } பழையது.
பழைமை-தொன்மை.
பழைமைபாராட்டல் - பழயவுரிமைகளையெடுத்துப்பேசல்.
பழையர்-கள்விற்போர்,தொல்லோர்.
பளகம்-பவளம்.
பளபளத்தல்-ஒளிகொள்ளுதல்.
பளபளப்பு - அலங்காரம், ஒளிக்குறிப்பு.
பளபளா-இன்மைக்குறிப்பு, வியப்புக்குறிப்பு.
பளபளெனல்-ஒளிக்குறிப்பு.
பளிக்கறை-பளிங்குமண்டபம்.
பளிங்கு-கண்ணாடி,சுக்கிரன்,படிகம்.
பளிச்சட்டியெனல்-பளிச்செனல்.
பளிச்சிடுதல்-ஒளிமின்னுதல்.
பளிச்சுப்பளிச்செனல்-ஒளிக்குறிப்பு.
பளிச்செனல்-ஒளிக்குறிப்பு.
பளிஞ்சி-கப்பலினுஞ்சாண்கயிறு.

பளிதம்-மேகம், கருப்பூரம்.
பளீரிடல்-பளிச்சிடுதல்.
பளிரெனல்-ஒளிக்குறிப்பு.
பளீர்பளீரெனல்-ஒளிக்குறிப்பு.
பளுவு-பாரம்.
பளை-வலி.
பள்-ஓர்சாதி, ஓர்பிரபந்தம்.
பள்ளக்கை-பதிதநிலைச்சார்பு.
பள்ளச்சி-பட்பெண்.
பள்ளச்சேரி-பள்ளக்குடிச்சேரி.
பள்ளத்தாக்கு - மலைகளுட்பட்டுக் குடாயிருக்குநிலம்.
பள்ளத்தி-பட்பெண்.
பள்ளம்-ஆழம், தாழ்ந்தநிலம்.
பள்ளயம்-தேவதைகட்குச் செய்யும் குவித்தி.
பள்ளர்-உழவர், ஓர்சாதியார்.
பள்ளி-அறச்சாலை, இடம், ஊர், ஓர் சாதி, கல்லூரி, சிற்றூர், தேவர் கோவில், நித்திரை, பட்பெண், மக்கட்படுக்கை, மருதநிலத்தூர், முனிவர்வாசம்.
பள்ளிக்கணக்கர்-கற்பிப்போர்.
பள்ளிகொண்டபெருமாள்-விட்டுணு.
பள்ளிகொள்ளுதல்-நித்திரைசெய்தல்
பள்ளிக்குவைத்தல்-பிள்ளைகளைக்கற்கவைத்தல்.
பள்ளிக்கூடம்-கல்விபயிலிடம்.
பள்ளிசெய்தல்-பள்ளிவளர்தல்.
பள்ளிப்பழக்கம்-கல்லூரிப்பயிற்சி.
பள்ளியடைத்தல்-சாலையுண்டாக்கல்
பள்ளியறை-சயனவறை.
பள்ளிவிற்பிள்ளை-கற்போன்.
பள்ளியெழுச்சி-ஓர்பிரபந்தம், நித்திரைவிழித்தெழுதல்.
பள்ளியெழுப்புதல்-நித்திரை விழிக்கச்செய்தல்.
பள்ளிவளர்தல்-நித்திரைசெய்தல்.
பள்ளுவிலி-ஓர்சாதி.
பள்ளு-பள். [ளாடு.
பள்ளை-ஆடு, வயிறுபருத்தது, வெள்
பள்ளையம்-தாம்பாளம், படைக்கப்பட்டபலி.
பள்ளையன்-படர்ந்தவன்.
பறக்கடித்தல்-அகற்றல், துரத்துதல்.
பறக்குதல்-பறத்தல்.
பறங்கி-ஓர்வியாதி, பறங்கிப்படைக்காரன்.
பறங்கிக்காய்-பூசணிக்காய்.
பறங்கிக்காரன்-ஓர்பாஷைக்காரன்.
பறங்கிக்கொடி-பூசணிக்கொடி.
பறங்கிக்கிழங்கு-சீனக்கிழங்கு.
பறங்கிக்கூர்மை-காசிசாரம்.
பறங்கிச்சாம்பிராணி-ஓர்மருந்து.
பறங்கிச்சிவலிங்கம்-மாக்கல்லிலிங்கம்.
பறங்கித்தாழை-அன்னதாழை.
பறங்கிப்பட்டை-சீனக்கிழங்கு.
பறங்கிப்பாஷாணம்-ஓர்பாஷாணம்.
பறங்கிப்பாலை-ஓர்பாலை.
பறங்கிப்புண்-ஓர்தொற்றுவியாதி.
வச்சிரி-இந்திரன்.

வச்சிரிகரணம்-இடை, பிங்கலை, சுழிமுனை.

வச்சையம்-கலைமான்.

வஞ்சகச்சொல்-மடிப்பானபேச்சு.

வஞ்சகமுடி-ஆமை.

வஞ்சகம்-அளுப்பு, இராசதகுணத்தொன்று, குத்திரம், நரி, மடிப்பு, மறைவு.

வஞ்சகவொழிப்பு - பெயர் முதலிய சொற்களால் வருணியத்தினது தருமத்தைமறுத்தல், (உம்) இம்மடந்தைகட்கடைநோக்கென்னும் பெயரினைக்கொண்டும் மதவேள்வாளியடும்.

வஞ்சகன் - தூர்த்தன், நரி, வஞ்சிப்போன்.

வஞ்சநம்-கபடம்.

*வஞ்சநடை-கபடநடை.

வஞ்சப்புகழ்ச்சியணி - ஓரலங்காரம், அது, ஒருகாரணத்தானிகழ்ந்தசத்து

வமாகிய குணத்தை மற்றொருகார
ணங்கூறிமறைத்தல்.
வஞ்சந்தீர்தல்-பழிவாங்கல்.
வஞ்சப்பழிப்பணி-ஓரலங்காரம், அது
நிந்தையானிந்தை தோன்றச்சொ
ல்லல்.
வஞ்சப்புகழ்ச்சியணி- ஓரலங்காரம்,
அது பழிப்பினும்புகழ்ச்சியும் புக
ழ்ச்சியாற் பழிப்பும்புகழ்ச்சியாற்
புகழ்ச்சியுந் தோன்றச்சொல்லல்.
வஞ்சப்பெண் - காளியேவல் செய்
வாள்.
*வஞ்சமனம்-கபடமனம்.
வஞ்சம்-கபடம், கொடுமை, சிறுமை,
பொய், வடிப்பு, மாயம், வாள்.
வஞ்சவம்-பாம்பு.
வஞ்சனம்-ஓர்மீன், வஞ்சகன்.
வஞ்சனி-இடாகினி, காளியேவல்செ
ய்வாள், பெண்.
வஞ்சனை-ஆணை, தெய்வப்பெண், பொ
ய், மாயம், வஞ்சம்.
வஞ்சனைபண்ணுதல்-வஞ்சித்தல்.
வஞ்சி-ஓர்கொடி, ஓர்பா, கருவூர், கொ
டி, தருமதேவதை, பகைவர்மேற்
செலவு, பகைவர்மேற்செல்வார்க்கு
மாலை, பெண், வஞ்சியென்னேவல்.
வஞ்சிச்சீர்-வஞ்சியுரிச்சீர்.
*வஞ்சிதன்-வஞ்சிக்கப்பட்டவன்.
வஞ்சித்தல்-வஞ்சனைசெய்தல்.
வஞ்சித்தளை-கனி நிழலென்னும்வாய்
பாடுகளின்பின் நேரசையேனு நி
ரையசையேனும் வருவது.
வஞ்சித்தாழிசை- நிரையசையோடே
னு நேரசையோடேனும் புணர்ந்து
இருசீரடி நான்குகொண் டொரு
பொருள்மேல் மூன்றடுக்கி வருவ
து.
வஞ்சித்துறை - இருசீரடிநான்குகொ
ண்டுவருவது.
வஞ்சிப்பா-ஐந்துபாவினொன்று, அது
பெரும்பான்மைவஞ்சித்தளையுஞ்சி
றுபான்மை பிறதளையுந் தழுவி இ
ருசீரடியானேனுமுச்சீரடியானே
னு மூன்றுமுதலிய பலஅடிகளைக்
கொண்டுதனிச்சொற்பெற்று அக
வற்சுரிதகத்தால் முடிவது.
வஞ்சியர்-பெண்கள்.
வஞ்சியர்-தரிசனம், கண்ணாடி.

வஞ்சியுரிச்சீர்-நேரசையுநிரையசையு
ந்தம்முள்விரவிமூன்றசைத்தாய நிரைய
சைமுடிவுபெற்றுநிற்பது, (உம்) தே
மாங்கனி, புளிமாங்கனி, கருவிள
ங்கனி, கூவிளங்கனி.
வஞ்சிவிருத்தம்-முச்சீரடிநான்குகொ
ண்டுவருவது.
வஞ்சிவேந்தன்-சேரன்.
வஞ்சினம்-சபதம்.
வஞ்சுளம்-அசோகமரம்.
வஞ்சுளன்-கரிக்குருவி.
வஞ்சூரன்-ஓர்மீன்.
வடகம் - உல்லாசம், ஓர்பணிகாரம்,
தோல், போர்வை, மேலங்கி, வற்
றல்.
வடகயிலாயம்-உத்தரகயிலாயம்.
வடகலை-கிரந்தநூல்.
வடகாற்று-வாடை.
வடகிரி-மாமேரு.
வடகீழ்த்திசை-ஈசானம்.
வடகீழ்த்திசைப்பாலன் -ஈசானன்.
வடகீழ்த்திசைப்பாலன்குறி-காகம்.
வடகீழ்த்திசையானை-சுப்பிரதீபம்.
வடகோடு - வக்கிரசந்திரனின்வடநு
வடக்கயிறு-பருங்கயிறு. [தி
வடக்கு-வடதிசை.
வடசொல் } கிரந்தமொழி.
வடதமிழ் }
வடதிசைப்பாலன்-குபேரன்.
வடதிசைப்பாலன்குறி-யானை.
வடதிசையானை-சாருவபூமம்.
வடதேசம்- பாண்டிமண்டலத்திற்கு
வடபாற்பூமி.
வடந்தை-வடகாற்று.
*வடபத்ரசாயி-விஷ்ணு.
வடபத்திரம்-ஆலிலை.
வடபரதம்-பரதகண்டத்திஞோர்பிரிவு
வடபாரிசம்-வடக்குப்பக்கம்.
வடபாலிரோவதம்-நவகண்டத்தொன்
வடபால்-வடக்குப்புறம். [று.
வடபால்விதேகம்-வடவிதேகம்.
வடபுறம்-வடபக்கம்.
வடபூமி-வடதேசம்.
வடமரம்-ஆலமரம்.
வடமர்-பிராமணரிலோர்பேதம்.
வடமலை-மகாமேரு.
வடமலைவாணன்-ஓர்நெல்.
வடமீன்-அருந்ததி.

வடமுகம்-வடபாரிசம்.
*வடமூலகன்-சிவன்.
வடமேற்கு-வாயுமூலை.
வடமேற்றிசைப்பாலன்-வாயு.
வடமேற்றிசைப்பாலன்குறி-கருவை.
வடமேற்றிசையானை-புட்பதந்தம்.
வடமொழி-ஆரியமொழி.
வடம்-ஆலமரம்,வரை,ஓர்பண்ணிகாரம், கயிறு, தாலி, பூவரும்பு, மணிவடம், வட்டம்.
வடம்-தலைப்பிலை, பாய்.
வடலி-இளம்பனை.
வடவனல் } வடவாமுகம்.
வடவாக்கனல் }
*வடவாசி-இயக்கன், ஆலடியில்வசிப்போன்.
வடவாசுதர்-தேவமருத்துவர்.
வடவாமுகம் } வடவாக்கினி.
வடவாமுகாக்கினி }
வடவிந்தகம்-நவகண்டத்தொன்று.
வடவிருக்கம்-ஆலமரம்.
வடவேங்கடம்-திருப்பதி.
வடவை-அச்சுவினி,அடிமைப்பெண், வடவாக்கினி, எருமை, பெண்குதிரை, பெண்யானை.
வடாகரம்-கயிறு.
வடாது-வடக்கு.
*வடாரகை-கயிறு.
வடி-கயிறு, கள், குதைக்கயிறு, கூர்மை, நாய், வடியென்னேவல்.
வடிகட்டுதல்-வடித்தெடுத்தல்.
வடிகயிறு-குதிரைவாய்க்கயிறு.
வடிகாது-தாழ்காது.
*வடிக்கண்-வடுவகிர்போலுங்கண்.
வடிக்கதிர் } நூல்முறுக்குமோர்
வடிக்கருவி } கருவி.
வடிக்குதல்-ஊக்கமறுத்தல்,வடியச்செய்தல்.
வடிசம்-தூண்டில்.
வடிசல்-வடிதல்.
வடிசாந்து-நற்சாந்து.
வடிதங்கம்-சுத்ததங்கம்.
வடிதமிழ்-தெளிதமிழ்.
வடிதயிர்-நீர்வடிந்ததயிர்.
வடிதல்-நீர்முதலிய பாய்தல், நீளம், நீளுதல், வற்றுதல்.
வடித்தல்-கூராக்குதல், தெளித்தெடுத்தல், வசமாக்குதல்.

வடிப்பம்-அழகு, செப்பம், திறம்.
வடிப்பு-சலாகை,தெளித்தெடுத்தல், வடித்தல்.
வடிம்பு-அடி, விளிம்பு.
வடிம்புகழ்-எதிர்ச்சட்டம்,குறுக்குவிட்டம்.
வடியல்-ஒன்றிலிருந்துநீங்கியசிர், வடிதல்.
வடியென்னெய்-கசிகு வடித்தெடுக்குமென்னெய்.
வடிவம்-உடல், உருவு.
வடிவவுவமம்-உருவத்தையேயுவமிப்பது, (உம்) சிவன்வடிவே குருவடிவு.
வடிவு-அல்குல், அழகு, உருவு.
வடிவெழுத்து-வரியுங்கோடும்புள்ளியுமாகக்கட்புலனுக்கு விடயமாயெழுதுமெழுத்து.
வடு-இளங்காய், குற்றம்,செம்பு, தழும்பு, பிரமசாரி, மருதயாழ்த்திறம், வகை, வடுவென்னேவல், வண்டு, வாலிபன், வாள்.
வடுகச்சி-வடுகப்பெண்.
வடுகன்-பிரமசாரி, மூடன், வயிரவன், வாலிபன்.
வடுகன்றாய்-காடுகாள்.
*வடுசி-தார்க்கை.
வடுகு-உபநயனம், இந்தளராகம், ஓர்சாதி,ஓர்தேயம், ஓர்பாஷை,மருதயாழ்த்திறம்.
வடுச்சொல்லல்-வகைசொல்லல்.
வடுத்தல்-இளங்காயரும்பல்.
வடுப்படுதல்-ஊறுபடுதல், குற்றமடைதல், வகைபூணல்.
வடுப்படுத்துதல்-குற்றப் படுத்துதல், மறுப்படுத்துதல்.
வடுவரி-வண்டு.
வடோரணம்-பூணூலணிதல்.
வடை-உழுந்துவடை.
வடையற்றது-வீணானது.
வட்கல்-கெடுதல், வெட்கம்.
வட்கார்-பகைவர்.
வட்டகை-சிறுகிண்ணம்.
வட்டக்கிலுகிலுப்பை - ஓர்கிலுகிலுப்பை.
வட்டக்குடில்-பெருக்குடில்.
வட்டக்கைச்சில்-தேங்காயடிச்சில்.
வட்டச்சிட்டு-கழிவுசிட்டு.

வட்டணம்-நெடும்பரிசை, பரிசை.
வட்டணித்தல்-வட்டிப்பாய் வருதல்.
வட்டனை-தாளம், வட்டம்.
வட்டனையுறுத்தல்-தாளம்போடல்.
வட்டத் தலைப்பா - தலைப்பாக் கட்டி னொன்று.
வட்டத்தாமரை-ஓர்தாமரை.
வட்டத்திரி-தவசுயிற்கு நெருப்புவை க்குந்திரி.
வட்டத்திருப்பி-மலைதாங்கி.
வட்டத்துத்தி-ஓர்செடி.
வட்டத்தொப்பி-சோனகத்தொப்பி.
வட்டமிடுதல்-சுற்றுதல்.
வட்டம்-குளம், கேடகம், கைம்மணி, கொள்கலம், சக்கிரம், சிலை, தாழ்வு, திரிகை, நாணயமாற்றுதலின் கழி வு, நீர்ச்சால், பரிவேடம், பீடம், வ ட்டவடிவு, வளைதடி, வாருவலயம்.
வட்டம்பண்ணுதல்-தேவதுதியை நா ள்வட்டத்திற்படித்தல்.
வட்டரவு-விருத்தம்.
வட்டவடிவு-வட்டாகாரம்.
வட்டறவு-முற்றாகஅறவுபண்ணுதல்.
வட்டா-ஓர்பாத்திரம், தட்டம், தாம் பாளம்.
வட்டாகிருதி-வட்டவடிவு.
வட்டாடல்-சூதாடல்.
வட்டாப்பத்து-கூந்தற்பூகத் தோலை யாற்செய்யு மோர்விசிறி.
வட்டாரம்-சுற்றுப்புறம்.
வட்டி-பலகறை, முதற்பொருட்குவ ருமூதியம், வட்டியென்னேவல்.
வட்டிகை-கூடை, கைமணி, சித்திர ம், நால்வகைச் சாந்தினொன்று, வ ட்டம்.
வட்டிக்குவட்டி-வட்டிப்பணத்துக்கு மேல்வட்டி.
வட்டித்தல் - ஆணையிடல், ஊணிடுத ல், தாளம்போடல், வட்டமாதல்.
வட்டிப்பு-வட்டம்.
வட்டில்-ஒருண்கலம், கூடை, சூதா டுகருவி, புட்டில், வழி.
வட்டு-ஓர்செடி, ஓர்விளையாட்டு, சூ தாடுகருவி, திரட்சி, மரவட்டு.
வட்டுக்குத்தி-மரவட்டு.
வட்டுச்செடி-வட்டு.
வட்டுடை-ஒருடைவிசேடம், சிலை.
வட்டுவம்-ஓர்வகைப்பை.
வட்டுறுப்பு-திருத்தம்.
வட்டை-ஓரதம், வழி.
வட்புலி-வங்கம்.
வணக்கம்-கீழ்ப்படிதல், சங்கித்தல், தொழுதல், இது மங்களாசரணை மூன்றினொன்று.
வணக்கல்-வளைத்தல்.
வணங்கல்-தொழுதல், வளைதல்.
வணங்காமுடியன், வணங்காமுடியினன், வணங்காமுடியோன் — துரியோதன ன், மற்றொரு வனை வணங் காதவன்.
*வணசி-ஓர்கரணம்.
*வணம்-உத்யானம், ஓசை, பலகறை, வாம்.
வணர்-வளைவு.
வணிகபதம்-வியாபாரம்.
வணிகம்-செட்டு.
வணிகன்-செட்டி, துலாராசி, வியா பாரி.
வணிசம்-எருது, எருத்துக்கரணம்.
*வணிசன்-ஓர்கரணம், வாணிகன்.
வணிச்சியம்-வாணிச்சியம்.
வணிதம்-செப்பம்.
வண்-தெளிவு, மிகுதி.
வண்களமர்-சூத்திரர், வேளாளர்.
வண்சிறை-மதில்.
வண்டத்தனம்-குறும்புத்தனம்.
*வண்டம்-குந்தாயுதம்.
வண்டரம்-நாய், நாய்வால், மார்பு, முகில்.
வண்டரன்-அண்ணகன், உலோபி.
வண்டர்-கடிகைமாக்கள், கவிகற்றோ ர், மங்கலப்பாடகர், மிண்டர்.
வண்டலம்-சேறு.
வண்டல்-அடையுங்கஞ்சல், நீர்ச்சுழி, பருபருக்கை, பொருக்கு, மகளிர்வி ளையாட்டு.
வண்டன்-குள்ளன், திண்ணியன், து ட்டன், விருத்தசேதனம் பண்ணப் பட்டவன்.
*வண்டாலம்-சூரயுத்தம், குந்தாலி.
வண்டானம்-நாரை.
வண்டி-பண்டி, வயிறு.
வண்டிக்கால்-வண்டிவிற்சில்லு.
வண்டியகவாய்-வண்டிற்றோடு.
வண்டில்-பண்டி.
வண்டிற்கால்-வண்டிற்சில்.

வண்டிற்சத்தம்-வண்டிற்கூலி.
வண்டு-அம்பு, குற்றம், கைவளை, சங்கு, பூரநாள்.
வண்டுருத்தி-ஓர்குருவி.
வண்டுகொல்லி-ஓர்செடி.
வண்டுறாமலர்மரம் - சண்பகமரம், வேங்கைமரம்.
வண்டுறை-எழுத்திலாவோசை.
வண்டோதரி - பஞ்சகன்னிகளிலொருத்தி, அவள் இராவணன் பெண்.
வண்ணம்-சந்தனம், முற்றியல், வாசனை.
வண்ணகவொத்தாழிசைக்கலிப்பா, கலிப்பாவினோர்பேதம், அஃது ஒருதரவு, மூன்றுதாழிசை, அராகம் அம்போதரங்கம், தனிச்சொல், சுரிதகம் என்றுமிவ்வாறுறுப்பினையுங் கொண்டுவருவது.
வண்ணக்கூடிலக-வமக்கூடு.
வண்ணக்கிரமம்-எழுத்தொழுங்கு, சாதியொழுங்கு.
வண்ணக்குழிப்பு } ஒரோசை.
வண்ணக்குனிப்பு }
வண்ணத்தன் - திருமுகங்கொண்டு போவோன்.
வண்ணத்தரு-ஓர்பாடல்.
வண்ணமகள்-கோலஞ்செய்வாள்.
வண்ணமாதிரு-இலேவினி, தூதி.
வண்ணமாதிருவை-சரச்சுவதி.
வண்ணமாலை-அரிவரி.
வண்ணம்-அழகு, இராகம், ஒப்பனை, குணம், சந்தம், சாந்துப்பொது, செயல், தன்மை, நிறம், வடிவு, விதம்.
வண்ணாத்தி-பூகிஅ, வண்ணாரப்பெண்.
வண்ணாத்திப்பூச்சி-ஓர்பூச்சி.
வண்ணாப்பண்டி-வண்ணார் புடைவையேற்றும் வண்டில்.
வண்ணான்-ஏகாலியன.
வண்ணிகன்-எழுத்துக்காரன்.
வண்மை-அழகு, ஈகை, குணம், புகழ், மெய்மை, வளமை.
*வதகம்-மரணம், வியாதி.
வதகன்-கொலைகாரன்.
வதக்கம்-வாட்டம்.
வதக்கல் } வதைத்தல், வாட்டல்.
வதக்குதல் }
வதங்கல் } வாடுதல்.
வதங்குதல் }

*வதண்டன்-ஓர்முநி.
வததண்டம்-கொலைக்கேற்ற தண்டம்.
வதஸ்தானம்-கொலைக்களம்.
*வதத்திரம்-அம்பு.
*வதநியன்-வளையாதுகொடுப்போன்
*வதந்தி-கதை.
வதம்-கொலை.
வதரம்-இலந்தை, இலந்தைக்கனி.
வதயாரி-நிஞ்சரிபு.
வதவல்-வாடினது.
வதறுதல்-மறலைபொழிதல்.
வதனம்-முகம், முக்கோணத்தின்மேற்கோணம்.
வதனாசவம்-உமிழ்நீர்.
வதனாரவிந்தம்-பெண்முகம்.
வதனேந்து-முகம்.
வதன்-கொலைசெய்வோன்.
*வதாங்ககம்-சிறைவீடு.
*வதாருகன்-வதைத்தற்குரியவன்.
வதாங்கம்-நஞ்சு.
*வதாலகம் } ஓர்மீன்.
*வதாலம் }
*வதாவதன்-ராஜஸபை முதலானவிடங்களில் நிர்ப்பயங்கையாகப்பேசுவோன்.
வதானியன் - குபேரன், வலாயாது கொடுப்போன.
வதி-சேறு, வதியென்னேவல், வழி.
வதிட்கடித்தல்-வக்கணைக்கரித்தல்.
வதிட்சேடம்-பிரதிபத்திரம்.
வதிட்டன்-பருத்தது, பருத்தவன், வசிட்டன்.
வதிதல்-தங்கல்.
வதிரன்-செவிடன்.
வதிரிகாச்சிரமம்-ஓர்தபோதலம்.
வதில் } பதில்.
வதிள் }
வதின்மொழி-பிரதிவாக்கு.
*வதி-கொலைகாரன்.
வது-மகன்மனைவி, மனைவி.
வதுகை-மனைவி.
வதுவர்-குதிரைப்பாகர், யானைப்பாகர்
வதுவை-கலியாணம், வறுவந்தம், வாசனை.
வதூ-புதுமணப்பெண், பெண், மனைவி
*வதூடி-மருமகள்.
வதை-உபத்திரம், கொலை, தேவதை, வதையென்னேவல்.

வதைசெய்தல் } கொல்லல்.
வதைத்தல் }

வதோபாயம்-கொலைக்கேதுவான உபாயம்.

வத்தகமை } வருத்திப்பு,வியாபாரம்.
வத்தகம் }

வத்தகன்-செட்டி, வியாபாரி.

வத்தகாலம்-நிகழ்காலம்.

வத்தகோபன் - கோபத்தை யடக்கினோன்.

வத்தமானம்-கருமம், சங்கதி, நிகழ்காலம், நிகழ்ச்சி.

வத்தர்-வத்திரு.

வத்தல்-சிறுவள்ளம், செத்தல்.

வத்தனை-பெருக்கம், வமிசம்.

வத்தாக்கு } ஓர்கொடி.
வத்தாலை }

வத்தாவி-ஓர்தேயம்.

வத்தி-இரத்தினத்தின் கீழ்ப்பதிக்குந் தகடு, சீலைத்தொங்கல், திரிச்சீலை, திரிவாய்ப்பெட்டி, பரிமளதிரவியங்களைச்கூட்டி யனாத்துச்செய்த வத்தி, வத்தியென்னேவல், வரி, விளக்கு, விளக்குத்தகழி.

வத்தித்தல்-பெருகல்.

வத்தியதானம் } கொலைக்களம்.
வத்தியபூமி }

*வத்தியபாலன்-சிறைச்சாலைக்காவற்காரன்.

வத்தியம்-மரணம்.

*வத்தியன்-வதைக்கப்படுதற்குரியவன்.

வத்திரசோதினி-எலுமிச்சை.

வத்திரதண்டன்-விநாயகன்.

வத்திரபட்டம்-நெற்றிப்பட்டம்.

வத்திரபுத்திரிகை-சித்திரப்பாவை.

வத்திரபேதகன்-தையற்காரன்.

வத்திரம் } சீலை,போர்க்கருவி,முகம்.
வஸ்திரம் }

வத்திராஞ்சலம்-புடைவையருகு.

வத்திராட்சம்-பத்திராட்சம்.

வத்திரானசந்தானம்-பஞ்சமுகங் கூடல்.

*வத்திரி-தோல் ார்.

வத்திரு-பேசுவோன், வாக்கி.

வத்து } பொருள்.
வஸ்து }

வத்துதாரணை – சவதாரணையினொன்று, அது விடயப்படா தசைவற்றி ருக்கு மனம் புத்தியைச் சித்தத்தி ற்சேர்க்கச் சித்தந் தன்னிடத்தமைந்தபுத்தியை மனதிற்சேர்க்கச் சித்தமும் மனமும் புத்தியை அகங்காரத்திற்சேர்க்க அகங்காரம் புத்தி சித்தம் மூன்றும் மனதிற்சேர அம் மனதாற் பிரமதரிசனம்பிறத்தல்.

வஸ்துநிச்சயம் } பிரபஞ்ச காரணமமைய கடவுளுண்டென்றும் அவன் யாவனென்றுங்கண்டறிதல்.
வஸ்துநிர்ணயம் }
வஸ்துநிதானம் }

வத்துபரிச்சேதம்-ஒருபொருளிஃதாகும் ஒருபொருளிஃதன்றென்பது.

வத்துவித்தியாபதி-சிற்பநூன்முப்பத்திரண்டினொன்று.

*வத்தூரம்-பொன்னூங்கன்னி.

வத்தேங்கி-கதவுநிலைக்குமேல் வைக்குஞ்சுவர்தாங்கி.

வத்தை-ஒருமரத்தோணி, சோற்றி.

வத்தைவெட்டு-சோற்றிவெட்டு.

*வநசந்தநம்-அகில், தேவதாரம்.

*வநசந்த்ரிகை-மல்லிகை.

*வநசம்பகம்-காட்டுச்சண்பகம்.

*வநச்சாகம்-காட்டாடு.

*வநஜீரம்-காட்டுச்சீரகம்.

*வநஜை-இலக்குமி.

*வநதேநு-காட்டுப்பசு.

வந்தனமாலை - வாயிலிற்கட்டுந்தோரணம்.

வந்தனம்-அட்டாங்கமாகப் பணிதல், பணிதல், முகம், வீநயம்.

வந்தனித்தல்-வந்தித்தல்.

வந்தனை-ஆராதனை, வணங்கல்.

வந்தி-எணி, மலடி, வந்தியென்னேவல், வருத்தம், வாராவந்தி.

வந்திகட்டுதல்-கட்டாயம்பண்ணுதல்.

வந்திகள்-கவிஞர், புகழ்வோர், மங்கலப்பாடகர்.

வந்தித்தல்-புகழ்தல், வணங்கல்.

வந்தித்துநிற்போர் - புகழ்ந்து பாடுவோர்.

வந்திபாடம்-புகழ்ந்துபாடியபாட்டு.

வந்திபோடுதல்-கட்டாயமாய்ப்பொறுப்பித்தல்.

வந்தியர்-புகழ்வோர், மங்கலப்பாடகர், மலடிகள்.

வந்திபிடித்தல்-கட்டாயத்திற்பிடித்தல்.

வந்திலை-மலடி.
வந்திவாக்குதல் - கட்டாயமாய்வாங்குதல்.
வந்து-காற்று.
வந்தை-பெருமை, மலடி.
*வந்தனம்-கல்யாணம்.
*வந்தனன்-புரிந்தற்குரியவன்.
வபனம்-சக்கிலம், மழித்தல், விதைத் தானியம்.
வபிலன்-பிதா.
வபு-உடல்.
வபை-வயிற்றிருபிக்குள்வெண்கிகில் போன்றபுளையாயியகிளம்.
*வப்பிரம்-சயம்.
வப்பு-இடைவேற்று.
*வப்ரி-புற்று.
வமனம்-சத்திபண்ணல்.
*வமரி-தட்டை; பருத்தி.
*வமம்-வமசம்.
*வமி-அக்கினி, தூர்த்தன், வாந்தி.
வமிசபாரம்பரை-வமிசக்கிரமம்.
வமிசம்-சந்ததி, சுற்றம்.
வம்படித்தல்-சரசம்பண்ணல், தீங்கு செய்தல், தீருபேசுதல், நிக்திர்தல்.
வம்பம்-சாலங்கபாஷாணம்.
வம்பலர்-அயலோர், புதியோர்.
வம்பல்-நிசை.
வம்பளத்தல்-பொருந்தாதபேச்சுப்பேசுதல், வீண்காரியம்பேசுதல்.
வம்பன்-சோரபுத்திரன், துட்டன்.
வம்பி-கருவண்டு, சோரபுத்திரி, துட்டை.
வம்பு-அசப்பியம், சண்டை, தீச்சொல், நிலையின்மை, புதுமை, மிடா, முலைக்கச்சு, வாசனை.
வம்புக்காய்-பருவந்தப்பிக்காய்க்குங்காய்.
வம்புத்தனம்-சேரின்மை, மடிப்பு.
வம்புப்பாளை-பருவந்தப்பிவரும்பாளை
வம்புப்பிறப்பு - சோரஸ்திரியிடத்திற் பிறத்தல்.
வம்புப்பேச்சு-துஷ்டவார்த்தை.
வயக்கம்-பிரபை.
வயக்குதல்-வசக்குதல்.
வயக்கல்-ஒளிசெய்தல், நடத்தல்.
வயசு-வயது, வாலிபம்.
வயசுப்பிள்ளை-வாலிபப்பிள்ளை, வாலிபன்.

வயணம்-வகை.
வயது-ஆயுசு, யௌவனம்.
வயதுவம்-முதிர்வயது.
வயத்தன்-அடிமை.
வயந்தம்-வசந்தம்.
வயப்படுதல்-வசப்படுதல்.
*வயப்படை-வெற்றிப்படை.
*வயக்கொடி-வெற்றிக்கொடி.
வயப்புலி } சிங்கம்.
வயப்போத்து }
வயமா-குதிரை, சிங்கம், புலி, யானை.
வயம்-ஆடு, இரும்பு, குதிரை, நீர், பறவை, வசம், வலி.
வயல்-கழனி, மருதநிலம், வெளி.
வயல்செட்டி-ஓர்செட்டி.
வயல்மாதளை-ஓர்மாதளை.
வயல்மெருகு-ஓர்மெருகு.
வயவரி-புலி.
வயவர்-படைவீரர்.
வயவன்-கரிக்குருவி, காதலன், தலைவன், திண்ணியன், வலியன், வீரன்.
*வயவீரர்-வெற்றிவீரர்.
வயவு-ஆசை.
வயவை-வழி.
வயனை-பசளை.
வயற்கல்-வெள்ளைச்சுக்கான்கல்.
வயற்கொடுக்கு-ஓர்கொடுக்கு.
வயற்கோவியவ-ஓர்பாம்பு.
வயற்சார்பு-மருதநிலம்.
வயற்சுள்ளி-பொரிப்பூண்டு.
வயற்செம்பை-ஓர்செம்பை.
வயற்றுத்தி-ஓர்துத்தி.
வயனம்-வயணம்.
வயன்கட்டு-வசன்கட்டு.
வயா-ஆசை, கருப்பநோ, கருவருந்தம், நடுக்கம்.
வயாப்பண்டம்-கருப்பவதி விரும்பிய பொருள்.
வயாவு-ஆசை, கருப்பம், வருத்தம்.
வயாவுயிர்த்தல்-கருவீனல், வருத்தந்தீர்தல்.
வயானம்-பறவை.
வயாளன்-வலியன்.
வயிக்கிராந்தம்-குமுதபாஷாணம்.
வயிடூரியம்-வைடூரியம்.
வயித்தியம்-வைத்தியம்.
வயிரங்கி-அவக்கிற்றிரிவாய் துளைக்குமோர்கருவி.

வயிரஞ்சாதித்தல் - பகைசாதித்தல்.
வயிரத்தலம்-வன்குணம்.
வயிரப்படை-வச்சிராயுதம்.
வயிரப்பொடி-வயிரமணி.
வயிரமணி-ஓர்வகைப்பொன்மணி, வச்சிரம்.
வயிரமுத்து-வயிரித்தமுத்து.
வயிரம்-கூர்மை, சலஞ்சாதித்தல், சினம், தண்டாயுதம், திருவோணம், புனுகைக்கட்டுவேது, மரவயிரம், வச்சிரமணி, வச்சிராயுதம், வாளியின்தகடு.
வயிரவகுருசந்தானம்-வைரவமார்க்கக்குருபரம்பரை.
வயிரவசாந்தி-வயிரவருக்குச் செய்யுஞ்சாந்தி.
வயிரவம்-வைரவம்.
வயிரவன்-ஓர்கடவுள்.
வயிரவாள்-குலிசம்.
வயிரவி-பைரவி.
வயிரவூசி-முத்துத்துளைக்குமூசி.
வயிராகம்-வயிராக்கியம்.
வயிராக்கியம்-வைராக்கியம்.
வயிராவி-ஓர்வகைவிரதி, வயிரமனமுடையோன்.
வயிரி-வன்னெஞ்சுடையவன்.
வயிரித்தல்-வயிரமாதல், வலுத்தல்.
வயிரிப்பு-வயிரம், வலுப்பு.
வயிரியம்-மயிர்ச்சிலை.
வயிரியர்-கூத்தர், பாணர்.
வயிர்-ஊதுகொம்பு.
வயிறு-உதரம்.
வயிறுகழிதல்-பேதியாதல்.
வயிறுகாந்துதல்-பசித்தல்.
வயிறுதாரி-வயிற்றுமாரி.
வயிறுபேதித்தல்-வயிறுகழிதல்.
வயிறுப்புதல்-வயிறூதுதல்.
வயிறு வளர்த்தல்-வயிற்றூண்மாத்திரம்பெற்றுப் பிழைத்திருத்தல்.
வயிறுவாய்த்தல்-கருப்பமாதல்.
வயிறுவிடுதல்-வயிறுகழிதல்.
வயிற்றுக்கடுப்பு-ஓர்நோய்.
வயிற்றுக்கழிச்சல்-வயிற்றுப்போக்கு.
வயிற்றுக்கனப்பு-கொழுப்பினால்வயிறூதல், தொந்திப்பு, புசிப்பினால்வயிறுவிம்முதல்.
வயிற்றுக்காய்ச்சல்-பசி.
வயிற்றுக்கிருமி-வயிற்றுட்புழு.
வயிற்றுக்குத்து-வயிற்றிலுண்டாக் குத்து.
வயிற்றுக்கொதி-பசி.
வயிற்றுச்சூப்பு - வயிற்றுக்கனப்பு
வயிற்றுப்பறதி-சீவனந்தேடித்திரிதல்
வயிற்றுப்பறப்பு-சீவனந்தேடி முயலச்சல்.
வயிற்றுப்பாடு-உட்புறம்.
வயிற்றுப்பிழைப்பு-உணவு தேடுதல், சீவியம்.
வயிற்றுப் புகைச்சல்-வயிற்றுட்புகைதல்.
வயிற்றுப்பொருமல்-வயிறூதல்.
வயிற்றுப்போக்கு-உவாந்திப்பிராந்தி
வயிற்றுமாரி-பெருணன்.
வயிற்றுளைவு-ஓர்நோய்.
வயிற்றெரிச்சல்-பொறாமை.
வயிற்றெரிவு-ஓர்நோய்.
வயிற்றையொறுத்தல்-உண்ணாது குறைத்தல்.
வயிற்றை வலித்தல்-குடர்வலிகொள்ளல்.
வயினம்-பறவை.
வயின்-இடம், ஏழனுருபு,(உம்) அவர்வயிற்செல்வாய், வயிறு, விடு.
*வயுநம்-ஞானம், தேவாலயம்.
வயோதிகம்-விருத்தாப்பியம்.
*வயோவங்கம்-ஈயம்.
வரகவி-தேவவருட்பெற்றுப்பாடும் புலவன்.
வரகு-ஓர்தானியம்.
வரகுதிரி-வருரியிலோர்வகை.
வரக்காட்டல் } வரவிடுதல்.
வரக்காட்டுதல் }
வரக்கிருது-இந்திரன்.
வரங்கொடுத்தல்-வரமருள்தல்.
வரச்சந்தனம்-ஓர்சந்தனம்.
*வரடம்-அன்னம், ஓர்புழு, மாட்டீ, முல்லை.
*வரடி-அன்னப்பேடை.
வரட்சி-வரள்வு.
வரட்சுண்டி-ஓர்செடி.
வரணசி-வாரணசி.
வரணம்-ஒட்டகம், சூழ்தல், நியமித்தல், பால், மதில், மறைத்தல்.
வரண்டகம்-உண்டை, சுவர், முகப்பரு, யானைமேற்றவிசு.
வரண்டம்-சாலை,துண்டிற்கயிறு, புற்குவியல், முகப்பரு.

*வரண்டாலு-ஆமணக்கு.
வரண்மாடு-கடாரிமாடு.
வரதகரம்-அநுக்கிரகக்குறிப்பாக இதயத்துக்குச் சமீபமாய்க் கையுறவித்தல்.
வரதரு-அமுகு.
வரதன்-அரன், அரி, அருகன், உபகாரி, வரமருளத்தக்கோன்.
*வரதானம் - விரும்பின வரங்களைக் கொடுத்தல்.
*வரதாரு-தேக்குமரம்.
வரதை-கன்னி.
வரத்து-வருகை, வருமானம்.
வரநதி-கங்கை.
வரந்தருவான்-வில்லிபுத்தூரன்.
வரபலம்-தென்னமரம்.
வரப்பார்த்தல்-வரவுகாத்தல்.
வரப்பிரசாதம்-தேவவருட்கொடை.
வரப்பிரதானம்-நன்கொடை.
வரப்பிரதை-அகத்தியன்மனையாள்.
வரப்பு-எல்லை, வரம்பு.
வரப்புள்-வயல்.
வரம்-அடைக்கலாங்குருவி, ஆசீர்வாதம், எறும்பு, கையிட்டுக்கொள்ளல், குழல், தேவயீகை, நவநிதியிலொன்று, மஞ்சள், மேன்மை, விருப்பம்.
வரம்பழிதல்-ஒழுங்குகெடுதல்.
வரம்பிறத்தல்-ஒழுங்குதப்புதல்.
வரம்பு-அணை, எல்லை, ஒழுங்கு, வழி.
வரம்புகட்டுதல்-அணைகட்டுதல், எல்லைகட்டுதல், முடித்தல்.
வரம்புபண்ணல்-சரிப்படுத்தல்.
*வரயிதன்-கணவன், தந்தை.
வரயோகம்-சுபயோகத்தொன்று.
*வரருசி-ஓர்வடமொழிப்புலவன்.
வரர்-மேலோர், வானோர்.
வரலாறு-ஒழுங்கு, மூலம்.
வரலாற்றுவஞ்சி-ஓர்பிரபந்தம், அது குலமுறையிற்பிறப்புமுதலியமேம்பாட்டின் பலசிறப்பையுஞ் சேர்த்தியையும் வஞ்சிப்பாவாற் கூறுவது.
வரல்-வருதல்.
வரல்வாறு-வரலாறு.
வரவண்ணினி-இலக்குமி, ஓர்நிறம், கவுரி, கற்புடையாள், சரச்சுவதி, பெண், மஞ்சள்.
வரவர-மேலும்மேலும், வழிபாடு.
வரவாச்சுருட்டி-ஓர்தேவதாசி.
வரவிடுதல்-அனுப்புதல்.
வரவிருத்தன்-சிவன்.
வரவு-வருகை.
வரவுகாத்தல்-வருதலைக்காத்திருத்தல்
வரவை-விளையுட்பாத்தி.
வரளானா-ஓர்செடி.
வரள்தல்-காய்தல்.
வரன்-கணவன், சந்நியாசிகளிலோர்பேதம், சிவன், மருமகன்.
வரன்முறை-ஊழ், வரலாறு.
வரன்றல்-கொழித்தல்.
வராகபுடம்-ஐம்பதெருவைத் தெரிக்கும்புடம்.
வராகம்-திருமாலவதாரத் தொன்று, பதினெண்புராணத்தொன்று, பன்றி, போர், மலை.
வராகனிடை - ஒன்பது பணவிடை கொண்டநிறை.
வராகன்-ஓர்நாணயம், திருமால்.
வராகரதலம்-காலுங்கையுமூன்றிக்கவிழ்ந்துநிற்பது.
வராகி-ஓர்சத்தி, சத்தமாதர்களிலொருத்தி.
வராகிப்புகை-ஓர்மருத்துப்புகை.
வராகிமாலை-ஓர்பிரபந்தம்.
வராகிவேல்-பன்றிமுள்.
*வராங்ககம்-லவங்கப்பட்டை.
*வராங்கி-மஞ்சள்.
வராங்கம்-உடல், தலை, யானை.
*வராங்கனை-உருவிற்சிறந்தவள், கூந்தற்பனை.
*வராங்கன்-திருமால்.
வராசனம்-சீனமுட்செவ்வந்தி, பாத்திரம்.
வராசனன்- வாயில்காப்போன், வேசிக்கள்வன்.
*வராசி-பரும்புடைவை.
வராடகம் - ஓர்தேயம், கயிறு, தாமரைக்காய், பலகறை.
வராடம்-பலகறை, விராடம்.
வராடி-பலகறை, முறுக்குநாற்சீலை.
வராட்டி-வரட்டி.
வராணசி-காசி.
*வராணன்-இந்திரன்.
வராத்தம்-கட்டளை, வரிவாங்குதல்.
வராரோகன்-யானைப்பாகன்.
*வராலகம்-லவங்கம்.
வராலி-ஓர்செடி.

வராலிகை-தற்கை.
வரால்-ஓர்மீன்.
வராளம்-பாம்பு.
வராளி-ஓரிராகம், சந்திரன்.
வரி-அம்பிலி, இசைப்பாட்டு, எழுத்து, கடல், குடியிறை, தேமல், நிறை, நீளம், நெல், வடிவு, வண்டு, வரியென்னேவல், வழி, விரலிறை.
வரிக்கடை-வண்டு.
வரிக்காரன்-வரிப்பணந்தண்டுவோன்
வரிக்குதிரை-கல்லணையில்லா தேறுகுதிரை.
வரிக்கோரை-ஓர்புல்.
வரிசந்தி-நாற்றெருக்கூடுமிடம்.
வரிசி-தூண்டில்.
வரிசை-ஒழுங்கு, சங்கை, முறைமை
வரிசைக்கிரமம்-நல்லொழுங்கு, வமிசவரிசை.
வரிசைக்குப்பச்சை-நாகபச்சை.
வரிசைபாராட்டல் - சங்கைகொண்டாடல்.
வரிசைபார்த்தல்-சங்கைபார்த்தல்.
வரிச்சல்-சலாகை.
வரிச்சுருள்-செவ்வட்டை.
*வரிஷம்-வருஷம்.
வரிட்டன்-சன்னியாசிகளி லோர்பேதம்.
வரிதல்-எழுதல், கட்டல், சித்திரமெழுதல்.
வரித்தல்-கட்டல், நியமித்தல், பூசுதல்
வரித்துவைத்தல்-நியமித்திருத்தல்.
வரிப்பணம்-விதமாயிறுக்கும்இறை.
வரிப்புலி-ஓர்புலி.
வரிப்புறம்-அணில்.
வரிபாத்துக்கிழங்கு-ஓர்கிழங்கு.
வரியான்-சன்னியாசிகளிலோர் பேதம், நித்தியயோகத்தொன்று.
வரியொட்டி-ஓர்மீன்.
வரியோரா-ஓர்மீன்.
வரிவடிவெழுத்து-அறிகுறியாய்த் தீட்டப்படுமெழுத்து.
*வரீ-சூரியன்மனைவி.
*வரியான் - ஓர்யோகம், சிறுபெண், யோக்யன்.
வருகம்-இலை, பரிவாரம், மயிர்ச்சேருகை.
வருகாலம்-எதிர்காலம்.
வருகை-வரவு.
வருக்ககனம்-கனவருக்கம்.
வருக்கக்கோவை-ஓர்பிரபந்தம், அஃது அகரமுதல வெழுவருக்கம் ஒவ்வோர்காரிகையின் மொழிமுதற்கண்முறையே வரத்தொடுப்பது.
வருக்கமாலை-ஓர்பிரபந்தம், அதுமொழிக்கு முதலாம்வருக்கவெழுத்திற்கொவ்வோர்செய்யுட் கூறுவது.
வருக்கமூலம்-வருக்கத் தொகையினின் றதன்மூலமறிதல்.
வருக்கம்-அத்தியாயம், இனம், ஒழுங்கு, குலம், கூட்டம், சதுரம், சமமாகிய விரொண்ணின் பெருக்கம், வகுப்பு.
வருக்கலாடசங்கலிதம்-ஓர்சங்கலிதம்
வருக்கவெதுகை-சேர்வையினவெழுத்துக்களானுகு மெதுகைத் தொடை.
வருக்கவெழுத்து - சேர்வையின வெழுத்து.
வருக்கு-கஞ்சி.
வருக்கை-பலா.
வருக்கைப்பலா-ஓரினப்பலா.
வருச்சித்தல்-நீக்கல்.
வருடதேவதை-அவ்வவ் வருஷத்திற்குரியதெய்வம்.
வருடபலன்-வருஷத்திற்குக் கண்டபலன். [ம்
வருடப்பிறப்பு-புதுவருஷத் தோற்ற
வருடம் } ஆண்டு, கண்டம், மழை.
வருஷம் }
வருடல்-தடவல்.
வருடவான்-அண்ணகன்.
*வருடன்-மிலேச்சன்.
வருடாகாலம்-மழைகாலம்.
வருடாங்கம்-மாதம்.
வருடாந்தரம் } வருடமுடிவு.
வருடாந்திரம் }
வருடாயுதம்-பதினாயிரம்.
வருடுதல்-வருடல்.
வருடை - எண்காற்புள், குறும்பாடு, மேடவிராசி, வரையாடு.
வருட்டம்-வேம்பு.
வருட்டல் } வற்புறுத்தல்.
வருட்டுதல் }
வருணசிலைவந்தோன்-வயிரம்.
*வருணசுதா-யமன்மனைவி.
வருணதருமம்-அவ்வவ்வருணத்தார்க்குரியகிருத்தியம், அஃது அர்த்தண

ர்க்கு ஓதல், ஈதல், அவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல், சத்திரியர்க்கு, வேட்பித்தல், ஈதல், வைசியர்க்கு, கொள்ளல், விற்றல், கோக்காத்தல், கிருஷி பண்ணல், வேட்டல், சூத்திரர்க்கு, சயங்கிருஷிபால்வர்த்த பயனிதல், கிருஷிபண்ணல், கோக்காத்தல்.

வருணம்-எழுத்து, கீர்த்தி, குலம், நிறம், நீர், பிரகாசம், பொன், பொன்னுரை, மஞ்சள், மாதிரி, யானை, வாசனை, விதம், வேதம்.

வருணவித்து-முத்துச்சிப்பி.

வருணவில்-வானவில்.

வருணநாள்-சதயநாள்.

வருணனை-தோத்திரம், வன்னிப்பு.

வருணன்-சமுத்திரம், துவாதசாதித்தரிலொருவன், மேற்றிசைப்பாலன்.

வருணாசாரம்-சாதியொழுக்கம்.

வருணாஸ்திரம்-வருணபாணம்.

*வருணாத்மஜன்-இந்திரசாரதி.

*வருணாத்மஜை-கள்.

*வருணானி-வருணன்மனைவி.

வருணித்தல்-வன்னித்தல்.

வருதல்-நடத்தல், வருகை.

வருத்தகம்-வத்தகம்.

வருத்தகன்-வத்தகன்.

வருத்தப்படுதல்-துன்பப்படுதல்.

வருத்தப்படுத்தல்-துன்பப்படுத்தல்.

வருத்தம்-உள்ளக்களிப்பு, துன்பம்.

வருத்தல்-துன்புறுத்தல்.

வருத்தனம்-உண்டை, சம்பளம், சேவனம், தொழில், பெருகுதல், வத்திப்ப, வழி.

வருத்தனி-நீர்க்குடம், விளக்குமாறு

வருத்தனை-பெருகுதல்.

வருத்தி-இராதினங்களின் கீழ்ப்படிக்குந்தடு, வருத்தியென்னேவல்.

வருத்தித்தல்-வளர்தல்.

வருத்திப்பு-வத்திப்பு.

வருத்துதல்-வருத்தல், வருவித்தல்.

வருத்துலம்-வட்டவடிவு.

வருந்தல் } துன்புறல்.
வருந்துதல் }

வருபிறப்பு-மறுபிறப்பு.

வருபுனல்-யாறு, வேற்றுநீர்.

வருமதி } வரவு.
வருமானம் }

வருமொழி-நிலைமொழிக்குப்பின்மொழி.

வருவாய் - வரலாறு, வரவுகட் கானவேறு.

வருவித்தல் - வேண்டியதொன்றைப்பொருந்தவிரித்துக்கொள்ளல்.

வருதம்-இருப்பிடம், கவசம், சேனைப்பாதுகாக்கும் புலித்தோன்முதலிய தோல்.

வருதினி-ஓர்தெய்வப்பெண், படை.

வரேசுவரன்-சிவன்.

*வரேண்யம்-குங்குமம்.

வரேந்திரன்-அரசன், இந்திரன், வரத்தின்மிக்கோன்.

வரை-அளவு, கரை, சிறுவரம்பு, மலை, மூங்கில், வரையென்னேவல், வரைவு, விரலிறை.

வரைசம்பு - கம்மாளர்கருவியிலொன்று

வரைக்குடிலம்-வங்கக்கல்.

வரைசிறகரிந்தோன்-இந்திரன்.

வரைதல்-எழுதல், கொள்ளல், சித்திரமெழுதல், சுற்றிவரைதல், நீக்கல், மாற்றல், விவாகஞ்செய்தல்.

வரைபகவெறிந்தோன்-குமரன்.

வரைப்பு-எல்லை, மதில்.

வரையரமகளிர்-மலையில்வாழுந் தெய்வப்பெண்கள்.

வரையறவு-வரையறை.

வரையறுத்தல்-எல்லைப்படுத்தல், மதித்தல், வரைத்தல்.

வரையறை-அளவு, எல்லை, நிர்க்கம்.

வரையாடு-குறும்பாடு.

வரையுறுத்தல் - எல்லைப்படுத்தல், வரைத்தல்.

வரைவிடைவைத்துப் பொருள்வயிற்பிரிதல்-அகப்பொருட் டுறையிலொன்று.

வரைவின்மாது-வேசி.

வரைவு-அளவு, எல்லை, பிரிவு, மணம், மாறுபாடு, வரைதல், வரையப்பட்டது.

வரைவுமலிதல்விரி - காதலன்முலைவிலைவிடுத்தமைபாங்கிகாதலிக்குணர்த்தன்முதலாகத்தலைவியணங்கைப்பாரவனிலைகண்டோன்மகிழ்தலீறுமிபவெழும்.

வரைவுமலிவு-வரைவிற்குரிய கிளவித்தொகை, அது வரைவுமுயல்வுண

ர்த்தன்முதலாகப்பராவல்கண்டுவெ
த்தவிருமியநான்கும்.
வர்க்கம் } வற்கம்.
வர்க்கு }
*வர்ஜநம்-தன்பம், மரணம்,விடுதல்.
*வர்ஜநீயம்-விலக்கத்தக்கது.
*வர்ணம்-குங்குமம்.
*வர்ணகம் - சந்தநம், திலகமரம், ம
ண்டலம்.
*வர்ணகாரகன்-சித்திரக்காரன்.
*வர்ணதம்-ஓர்வகைச்சந்தநம்.
வர்ணப்ரசாதநம்-அகில்.
*வர்ணரூபிணி-சரசுவதி.
*வர்ணவதி-மஞ்சள்.
*வர்ணகவி-குபேரன்மகன்.
*வர்ணகாரிகை-நிலத்திலிடுங் கோல
*வர்ணி-பொன். [ம்.
*வர்த்தநம்-ஜீவனோபாயம்.
*வர்த்தருகன்-த்வார பாலகன்.
வலக்காரம்-பொய்.
வலங்கமர்-ஓர்சாதியார்.
வலங்காரம்-மேளத்தின் பசையிட்ட
புறம்.
வலங்குலம்-ஓர்குலம்.
வலங்கை-வலக்கை, வலப்புறம்.
வலங்கையார்-ஓர்சாதியார்.
வலங்கையான்-வலங்கமத்தான்.
வலங்கொள்ளல்-வலம்வருதல், வெ
ற்றியடைதல்.
வலசல்-அக்நியகிரகபிரவேசம்.
வலசாரி-வலமாய்சுற்றிப்போதல்.
வலசு } கூட்டம்.
வலசை }
வலசைவாங்குதல்- கூட்டத்தோடே
யெடுபட்டுப்போதல்.
வலசோர்-ஓர்பட்டினம்.
வலஞ்சுழி-வலஞ்சுற்றுஞ்சுழி.
வலட்டி-வலித்தது.
வலது-செயல்,வலபக்கம், வல்லமை.
வலத்தல் - சொல்லல், நினைத்தல், வ
ளைத்தல்.
வலத்திடல்-சொல்லல்.
வலநாடு-ஓரூர்.
வலந்தம்-வசனம், வளைவு.
வலந்திரி-ஓர்கொடி, வலத்துக்குச்சு
ற்றுங்கொடி.
வலப்பாரிசம்-வலப்புறம்.
வலமன்-வலப்பக்கம்.
வலம்-இடம், ஏழனுருபு, (உம்) சுக
வலத்தியாழ், கனம், மேல், வலப்
பக்கம், வலி, வெற்றி.
வலம்பம்-திறநிட்டவரி.
வலம்புரி-நந்தியாவட்டம், வலப்புரி,
வலம்புரிச்சங்கு.
வலயம்-எல்லை, கடல், குளம், கைக்க
டகம், சுற்று, வட்டம், வட்டவடி
வு. [வெற்றியாளன்.
வலவன் - சமர்த்தன், தேர்ப்பாகன்,
வலவை-இடாகினி, காளி,காளியேவ
ல்செய்வாள், வல்லவள், வல்லோ
ன், விநாயகன்றேவி.
வலவோட்டு- சூரியன்முதலியசத்தச்
கிரகங்களின்சுற்று.
வலன்-ஓரசுரன், வலப்பக்கம், வலி,
வல்லவன், வெற்றி,
வலாகம்-கொக்கு, நீர்.
வலாகை-கொக்கு.
வலாசகம்-குயில், தவளை.
வலாட்டிகன் } தத்துவசாலி.
வலாட்டியன் }
வலாரி-இந்திரன்.
வலாத்காரம்-வலோற்காரம்.
வலி-இரேகை, ஓரலங்காரம், அது
தொகைச்சொற்றொடர்புண்டாகத்
தொடுப்பது, ஓர்நோய், குரங்கு, ப
ற்றிரும்பு, வரி, வலியென்னேவல்,
வல்லமை.
வலிக்கட்டு-வீணையினோருறுப்பு.
வலிக்கெனை-தெளிவாய்.
வலிசங்கம்-குரங்குக்கூட்டம்.
வலிசம்-தூண்டில்.
வலிச்சலன்-அறமெலிந்தவன், பிடித்
ததுவிடாதோன்.
வலிச்சல்-காய்ந்தது, வரிச்சு.
வலிச்சற்கொடி-ஓர்கொடி.
வலிதம்-அசைவு, சூழ்வு.
வலிதல்-தங்கல், துணிதல், வலிந்து
கோடல், வலோற்காரஞ்செய்தல்
வலிது-வலியது.
வலித்தல்-இழுத்தல், உடன்படல், ஏ
ங்கல், கடினமாய்வாங்கல், காய்த
ல், தோணிதூண்டல், நினைத்தல்,
மரக்கலப்பா யுயர்த்தல், மெல்லெ
ழுத்தைவல்லெழுத்தாக்கல், வயிற்
றுள்முறுக்குதல், வலிவலித்தல்,வ
ளைத்தல், வன்மையயுச்சரித்த

வலிந்துகொடல்-அருமையிற்கொடுத்துக்கொள்ளல்.
*வலிபம் - கீழேழுலகத்தொன்று, அது மஹாதலம்.
வலிபதம்-அற்பகடுமை.
வலிப்பு-இழுப்பு, வலி.
வலிமாந்தம்-மாந்தமெட்டினொன்று.
வலிமுகம்-குரங்கு.
வலிமை-வலோற்காரம், வன்மை.
வலிமைசெய்தல்-பலபந்தம்பண்ணல்
வலிமைபாராட்டல் - சமர்த்துக்கொண்டாடுதல்.
வலிய-தானாக.
வலியறிதல்-பிராணியறிதல்.
வலியன் - கரிக்குருவி, வலிபதமானது, வலியுடையோன், வல்லவன்.
வலியான்-ஓர்பருந்து, கரிக்குருவி, வலியுடையோன்.
வலியுறுத்தல்-உறுதிப்படுத்தல், பலப்பித்தல்.
*வலீகம்-தாழை.
*வலீநம்-தேன்.
வலீமுகம்-குரங்கு.
வலு-எட்டு, ஓர்பலசமருந்து, கனம், கொசுகு, பலம், பற்று.
வலுசருது-வலோற்காரம்.
வலுத்தல்-திரப்படுத்தல், பலத்தல்.
வலுப்பு-திரம், பலப்பு.
வலுவந்தம்-வலோற்காரம்.
வலுவந்தரம்-வலிமை.
வலூகம்-தாமரைக்கிழங்கு.
வலை-மீன்முதலியபடுக்குங்கருவி.
வலைக்குறுக்கு-வலையைத் தாழச்செய்யுமுண்டை.
வலைச்சி-நெய்தனிலப்பெண்.
வலைஞர்-நெய்தனிலமாக்கள்.
வலைநடுத்தல்-மீன்படாமற்றடுத்தல்.
வலைப்படல்-சிறைப்படல், மயக்கிலகப்படல், வினையிலகப்படல்.
வலைப்பாடு-மீன்பிடி.
வலையச்சேரி-நெய்தனிலம்.
வலையர்-நெய்தனிலமாக்கள்.
வலையன்-ஓர்சாதியான், ஓர்சாமை, பரதவன்.
*வலைவீசுதல்-வலையெறிதல்.
வல் - கச்சு, சீக்கிரம், சூதாடுகருவி, மேடு, வலி.
வல்கி-வீணை.
வல்கிதம் - குதிரையிருகாலாக்கியோடி வருநடை.
வல்சி-உண்டல், சோறு.
வல்லகி-வீணை.
வல்லடி-வலுபந்தம், வல்லபம்.
வல்லடிக்காரன் - வலுவந்தஞ்செய்வோன்.
வல்லடிவழக்கு-வலுபந்தநியாயம்.
வல்லணங்கு-காளி.
வல்லதம்-கொலை, முடுதல்.
வல்லபசத்தி-மிகுவலி.
வல்லபம்-கதியுள்ளகுதிரை, பிரியம், வல்லமை.
வல்லபன்-இடையரிற்றலைவன், குதிரைமேல்விசாரிப்புக்காரன், நாயகன், பிரியமுள்ளோன், மேல்விசாரணைக்காரன், வல்லோன்.
வல்லபி - மனைவி, வல்லபமுள்ளாள், வல்லபமுள்ளோன்.
வல்லபை-பிரியநாயகி, வலவை.
வல்லமை-வல்லபம்.
வல்லரி-கொடி, தளிர், பசுங்காய், பூங்கொத்து.
வல்லவன்-இடையன், பருப்புக்கறிசமைப்போன், புருடன், வல்லான், வீமன்.
வல்லவாட்டு-உத்தரீயம், மேற்போர்
வல்லவி-வல்லபி. [வை
வல்லவை-வல்லபை.
வல்லாததுக்கம் - ஞாயமில்லாதுண்டாகிய துக்கம்.
வல்லாரல்-ஓர்பூடு.
வல்லாரை-ஓர்பூடு, கேட்டைநாள்.
வல்லார்-சமர்த்தர், மாட்டாதவர்.
வல்லார்கொள்ளை - பலாற்கவரப்படுதல்.
வல்லாளகண்டன்-மிகவல்லோன்.
வல்லாளன்-திண்ணியன், வல்லான்.
வல்லான்-வல்லவன்.
வல்லி-அளவு, ஆய்ப்பாடி, உபநிடதமுப்பத்திரண்டினொன்று, கலியாணம், கால்விலங்கு, நிகளம், படர்கொடி, பிரிதல், பூமி, பெண், வள்ளிக்கொடி.
வல்லிகம்-கொடி, மிளகு.
வல்லிகை-காதணி, யாழ்.
வல்லிசம்-மிளகு. [டி.
வல்லிசாதகம்-கற்பகத்திற் படர்கொ

*வல்லிருமினை-புளியவசலே.
வல்லிசை-உச்சவிசை, பாம்பு.
வல்லியம் - இடையருர், கொல்லிமலை, புலி.
வல்லினம்-வலிதாயுச்சரிக்கு மெழுத்தின்பகுதி.
*வல்லிஜம்-மிளகுக்கொடி.
வல்லிட்டுக்குற்றி - பனைமுதலிய பிளக்குங்குற்றி.
வல்லுயிர்-அரிதாய்ப் பிழைத்திருக்குமுயிர்.
வல்லூரம்-காடு, காட்டுப்பன்றியிறைச்சி, தனிமை, புற்றரை, பூங்கொத்து, மணல், வயல், வனுந்தரம்.
வல்லுவம்-அடைப்பை, கைப்பை.
வல்லுளி-பன்றி.
வல்லுனர்-வல்லோர்.
வல்லூகம்-ஆண்குரங்கு, கரடி, முசு.
வல்லூரம்-பாழ்நிலம், வன்னூரம், வனுந்தரம்.
வல்லூறு-ஓர்பருந்து, இது பஞ்சபட்சியினுமொன்று.
வல்லெழுத்து-வன்மையா யுச்சரிக்குமெழுத்துக்கள்.
வல்லெனல்-அநுகரணவோசை.
வல்லை-ஓர்நோய், கடுப்பு, காலவினைவு, கோட்டை, பெருங்காடு, மேடு, வட்டம், வருத்தம், வலிமை.
வல்லையம்-எதி யீட்டி.
வல்லொட்டு-அருமையான இருப்பு, அரும்பூட்டு.
*வல்லொற்று-வல்லினமெய்.
வல்லோரொழிப்பு-அபநுதி யுருபகத்தொன்று, அது பிறரய்யமுற்று வினவிய தமசொல்லினுண்மைப்பொருளை வல்லோரச்சொல்லுக்கு மற்றொருதாற்பரியத்தைக் கற்பித்து மறுத்தல்.
வல்லோன்-வலிமையுடையோன்.
வல்வருத்தம்-கடுவருத்தம்.
வல்வாயசரணன்-ஓர்பாம்பு.
வல்விடம்-கடுநஞ்சு.
வல்விலங்கு-யானை.
வல்வினை-வலியவினை.
வவி-வேதமுத்தினா தரியாதவன்.
வவ்வலொட்டி-ஓர்முட்செடி.
வவ்வல்-வாருதல்.
வவ்வாலொட்டி-ஓர்முட்செடி.
வவ்வால்-வௌவால்.
வவ்வால்மீன்-ஓர்மீன்.
வவ்வால்விளக்கு-ஓர்விளக்கு.
வவ்வாற்குறடு-செருப்பிறுருறுப்பு.
வவ்வாற்பந்தம்-வவ்வால்விளக்கு.
வவ்வாறுற்றி-ஆதாரமற்றது.
*வவ்வுதல்-க்ரஹித்தல்.
வழக்கச்சொல்-இயற்சொல்.
வழக்கம்-நடைபடி, வழங்குதல்.
வழக்கறிதல்-நடையறிதல்.
வழக்காடுதல்-வழக்குச்செய்தல்.
வழக்காளி-தொடர்ச்சிக்காரன்.
*வழக்கிடுதல்-வழக்காடுதல்.
வழக்கு - அறப்பான்மூன்றனுளொன்று, அது பொருள்காரணமான வியாச்சியம், நியாயம்பேசுதல், வழக்கம்.
வழக்குக்கேட்டல் - நியாயம்விசாரித்தல்.
வழக்குச்செய்தல்-வழக்குப்பேசுதல்.
வழக்குத்தொடுத்தல்-வழக் குண்டாக்கல்.
வழக்குப்பேசல்-நியாய முத்தரித்தல்.
*வழக்குவெல்லல் - வழக்குக் கெலித்தல்.
வழக்கோரம்-ஒருபக்கஞ்சாய்ப்பான நியாயம்.
வழங்கல்-ஆட்சிபண்ணுதல், இயங்குதல், ஈதல், உலாவல், சொல்லல், நடத்தல், மழைபொழிதல்.
*வழங்காநடை-புதுநடை.
*வழங்காமொழி - சொல்லத் தகாத சொல்.
வழங்காவழி-புதுக்கட்டு.
வழங்குதல்-வழங்கல்.
வழட்டுதல்-வழுந்துதல்.
வழப்பம்-வழக்கம்.
வழலிக்கை-சோர்பு.
வழலுதல்-வழுந்தல்.
வழலை - ஓர்பாம்பு, ஓர்மருந்து, கோழை, சவுக்காரம்.
வழலையுப்பு-சவுக்காரவுப்பு.
வழாநிலை-திணைபாலிடங் காலமுதலிய வழுவாதுவழங்குவது.
வழாறு-நிறைபுனல்.
வழி-இடம், ஏழனுருபு, (உம்) நிழல்வழியசைந்தனன், காரணம், திரட்சி, நடவை, பழமை, பின், மகன்,

மார்பு, முறைமை, வழியென்னேவல்.
வழிகட்டுதல் - எத்தனம்பண்ணுதல், வகைபண்ணுதல், வழிமறித்தல.
வழிகாட்டி-முன்மாதிரிவைப்போன், வழிநடத்துவோன்.
வழிகாணுதல்-சேர்வருதல், வயணம்பிடித்தல்.
வழிகரை-வழியருகு.
வழிக்குதல்-நடைத்தெடுத்தல்.
வழிக்கொள்ளுதல்-பயணப்படுதல்.
வழிச்சாரி-தீர்வைகொடாத சரக்குகளைக் கொண்டுபோகிறவர்களைக் கண்டுபிடிப்பதற்கான கள்ளப் பாதை, கடையுள்ளவழி.
வழிச்செலவு-பயணச்செலவு, பயணம்.
வழிச்செல்வோன்-பதிகன்.
வழிதல் மிகுந்துவடிதல்.
வழிதுறை-பயணப்போக்கு.
வழித்தடை-சகுனப்பிழை.
வழித்தல்-வழிக்குதல்.
வழித்துணை-பாரம்பரியமான துணை, வழிநடையிற்றுணை.
வழித்தெய்வம்-குலதெய்வம்.
வழித்தொண்டு - தலைமுறைப்பட்ட தொண்டு.
வழித்தோன்றல்-மகன்.
வழிநடத்தல்-நடப்பித்தல்.
வழிநடை-பிரயாணம்.
வழிநாள்-பின்னைநாள்.
வழிநாற்பது-ஓர்செய்யுள்.
வழிநூல்-முதனூல்வழியே விகற்பித்துரைத்தநூல்.
வழிபடல் / வழிபடுதல் } கீழ்ப்படுதல், வணங்கல்.
வழிபடுத்தல்-சேர்ப்படுத்தல், பயணப்படுத்தல்.
வழிபண்ணுதல்-வகைபண்ணுதல்.
வழிபயத்தல்-மருப்பறுத்தல்.
வழிபறித்தல்-அதர்பறித்தல்.
வழிபாடு-அப்பியாசம், ஆராதனை, தாழ்மை, வணக்கம், வழிபடல்.
வழிபாடுமறுத்தல் - அகப்பொருட்டுறையினொன்று.
வழிபார்த்தல்-வகைபார்த்தல், வரவுபார்த்தல்.
வழிப்படுதல்-சேர்ப்படுதல், வழிநடக்கத்துவக்கல்.

வழிப்படுத்தல் / வழிப்படுத்துதல் } உட்படுத்துதல், ஒழுங்காக்கல், சரிவழியினடத்தல்.
வழிப்பதி-ஆறலை.
வழிப்பயணம் / வழிப்பிரயாணம் } வழிநடை.
வழிப்பிரிவு-தெருச்சந்தி.
வழிப்போக்கர்-பயணக்காரர்.
வழிப்போதல்-பின்செல்லல், வேறொருவர்காரியத்திற்குட்படல்.
வழிமுறை-தலைமுறை, வழிமுதல்.
வழிமோனை-மோனைகளிலொன்று.
வழியடைத்தல்-புறம்புறத்தல்.
வழியல்-வழித்தெடுக்கப்பட்டது, வழியிற்றங்குகிறவன்.
வழியுரைப்போர்-தூதர்.
வழிவகை-இடம்பாடு, வகை.
*வழிவழியாய்-வம்சபாரம்பரியமாய்
வழிவிடுதல்-பயணமனுப்புதல், வழிவெட்டிவிடுதல்.
வழிவைத்தல் — போகத்தொடங்கல், முன்தொடங்கல்.
வழு-இன்மை, ஈனம், கேடு, தப்பு, வழுவென்னேவல்.
வழுகுதல்-வழுவுதல்.
வழுக்கட்டை - சிறுவன், மூடத்தன்மை.
வழுக்கல்-அடித்தல், இழுக்கல், மோதல்.
வழுக்காய்-இளங்காய்.
வழுக்கு - நிணம், மறதி, வழுக்கென்னேவல்.
வழுக்குதல்-வழுக்கல்.
வழுக்குநிலம்-வழுக்கற்றரை.
வழுக்குப்பாசி-ஓர்நீர்ப்பூடு.
வழுக்கெண்ணெய் - ஓர்வகையெண்ணெய்.
வழுக்கை-தேங்காய்வழுக்கல், வழுக்காய்.
வழுக்கைத்தலை-மொட்டந்தலை.
வழுக்கைப்பலா-ஓர்பலா.
வழுதலை-கத்தரி, புனத்திடுபொய்க்கழு.
வழுதி-பாண்டியன்.
வழுதை-பொய், வைக்கோல்.
வழுதுணை-கத்தரி.
வழுத்தல் / வழுத்துதல் } சொல்லல், துதித்தல்.
வழுநிலை - திணைபாலிடங்காலமுதலியவழுவிவழங்குவது.

வழும்பு-கிணம், விலங்கின்குட்டிகள் பிறக்கும்போதிருக்கும்வழுவல்.
வழுவமைதி-திணைபாலிடம்முதலிய மாறுபட்டுவரினு மமைத்துக்கொள்ளத்தக்கது.
*வழுவமைப்பு-வழுவமைதி.
வழுவல்-இளநீர்வழுவல், சாய்தல், தப்புதல், வழும்பு.
வழுவவிடுதல்-தப்பவிடுதல்.
வழுவல்சுறா-ஓர்மீன்.
வழுவாடி-காரியத்தினழுவுகிறவன்.
வழுவு-குற்றம், தவறு.
வழுவுடைக்காமம் - அரிச்சை, பிறர்பொருள்விரும்பல்.
வழுவுதல்-தவறுதல்.
வழுவை-யானை.
வழூஉச்சொல்-பிழைமொழி.
வழூஉச்சொற்புணர்த்தல் – குற்றமானசொற்களைச்சேர்த்தல், அதுசெய்யுட்குற்றம்பத்தினொன்று.
வழை-சுரபுன்னை.
வளங்கட்டுதல்-வழிபண்ணுதல்.
வளந்து-பெரியமிடா.
வளப்படுதல்-சீர்ப்படுதல், நேராதல்.
வளப்பம்-செழிப்பு, நன்மை, மாட்சிமை, வளமை.
வளப்பாடு-வளமை.
வளமடல்-ஓர்பிரபந்தம், அஃதறம் முதலியமுப்பொருளின்பயனை யிகழ்ந்து காமவின்பத்தினையேபயனெனக்கொண்டு பாட்டுடைத் தலைமகனியற்பேர்க்குத்தக்கதையெதுகையாகத் தனிச்சொல்லின்றி யின்னிசைக்கலிவெண்பாவாற் றலைமகனிரந்து குறைபெறுதமடலேறுவதாயீரடியெதுகைவரப்பாடுவது.
வளமை-உபகாரம், கொழுப்பு, செல்வப்பொலிவு, நன்மை, மாட்சிமை.
வளமையர்-பூவைசியர்.
வளம்-அழகு, செல்வம், செவ்வை, பக்கம், பதவி, பலபண்டம், மாட்சிமை, வலி, வாழு.
வளயம்-வளையம்.
வளருதல் } வளர்ச்சி } வளர்தல்.
வளர்தல்-உயர்தல், கதித்தல்.
வளர்த்தல்-உண்டாக்கல், வளரச்செய்தல்.
வளர்த்தாள்-செவிலித்தாய்.
வளர்த்தி-வளர்ச்சி.
வளர்த்துதல்-கிடத்துதல், சயனிப்பித்தல், பருப்பித்தல்.
வளர்பிறை-பூருவபக்கச்சந்திரன்.
வளர்ப்பு-வளர்க்குந்தன்மை.
வளர்ப்புணி } வளர்ப்புப்பிள்ளை } வளர்த்தபிள்ளை.
வளர்மயிர்-மயிர்க்குறற்சி.
வளவளத்தல்-பயனின்றிப்பிதற்றல்.
வளவளப்பு-பயனில்சொல்.
வளவன்-சோழன்.
வளவி-விட்டிறப்பு.
வளவு-கொல்லை, வளைவு.
வளன்-வளம்.
வளாகம்-இடம், ஓர்நகரம், சூழ்ந்திடல், நிலைப்புனம், வளைந்தவிடம்.
வளார்-இளங்கொம்பு.
வளாவல் } வளாவுதல் } கலத்தல், வளைதல், வளைவு.
வளி-காற்று, சுழற்காற்று.
வளு-இளமை, இளைது.
வளுந்தல்-தோல்வவ்வப்படல்.
வளுவல்-இளமை, வழுக்கத்தக்கது.
வளுவளுத்தல்-நொளுநொளுத்தல்.
வளுவனெனல்-வளுவளுப்புக்குறிப்பு.
வளை-உத்திரம், கங்கணம், சளங்கம், சக்கிரம், சங்கு, முழைவளை, புற்று, வளையென்னேவல்.
வளைக்குதல் } வளைதல் } கட்டல், கோணச்செய்தல், குழுதல், தடுத்தல், நளினஞ்செய்தல், வாருதல்.
வளைச்சல்-சூழ்வு.
வளைதடி-பாராவலயம்.
வளைதல-கட்டல், சுற்றுதல், சூழ்தல், தடுத்தல், வாருதல்.
வளைபோழ்நர்-சங்கறுப்போர்.
வளைப்பு-உழவுசால், மதில், வளைத்தல்.
வளைமணி-அக்குமணி, சங்குமணி.
வளையகம்-சங்கு.
வளையமிடுதல்-குழியமாடுதல், சூழ்தல்
வளையம்-குளம், சிராங்கபாஷாணம், தாமரையுட்சுருள், வட்டம்.
வளையலுப்பு-ஓருப்பு.
வளையல்-கைவளை, வளைவுள்ளது.
வளையல்மண்-வளையலுண்டாக்குமொரு மண்.

வளையாபதி-ஓரிலக்கியநூல்.
வளைவில்-கைவளை.
வளைவாணி-தூண்டல்.
வளைவு-பணிதாயு, வட்டம், வளைக்கம், வணங்கல், வளைந்தது.
வள்-ஒலிக்குறிப்பு, காது, கூர்மை, நெருக்கம், வலி, வளம, வார், வாளுறை, வாள்.
வள்வள்ளெனல்-நாடிக் கொலிக்குறிப்பு.
வள்ளம்-ஓர்வகைச் சிறுதோணி, நாழிகைவட்டில், மரக்கால், வட்டில்.
வள்ளல்-வரையாது கொடுப்போன், வலியன், வள்ளிக்கிளை.
வள்ளன்மை-வள்ளற்றன்மை.
வள்ளி-ஆபரணம், ஓர்கூத்து, ஓர்கொடி, கைவளை, படர்கொடி, பிரப்பங்கேடகம்.
வள்ளிசு-சேர்த்தி.
வள்ளித்தண்டு-பிரம்பின்வட்டம்.
வள்ளிமணவாளன் } முருகன்.
வள்ளிமணாளன் }
வள்ளியம்-ஊதுகுழல், மரக்கலம், மிளகு, மெழுகு.
வள்ளியோர்-வரையாதகொடுப்போர்
வள்ளுவசாத்திரம்-ஓர்சோசியம்.
வள்ளுவர்குறள்-ஓர்நூல்.
வள்ளுவன்-ஓர்சாதியான், புரோகிதன், வருங்காரியஞ்சொல்வோன.
வள்ளூறு-வல்லிறு.
வள்ளூரம் } ஆட்டிறைச்சி, ஆவினிறைச்சி, குட்டிறைச்சி, புலால்.
வள்ளுரம் }
வள்ளை-உலக்கைப்பாட்டு, ஓர்கொடி.
வறடு-வரடு.
வறட்காமாலை-வரட்சி, வறள்வு.
வறட்சுண்டி-ஓர்செடி.
வறட்டல்-காயச்செய்தல், வறுத்தல்.
வறட்டி-வரட்டி.
வறட்புல்-ஓர்புல்.
வறத்தல்-காய்தல், சுருங்கல்.
வறப்பு-குறைவு, வற்று.
வறலானை-வரளானை.
வறவு-கஞ்சி.
வறவோட்டி-ஓர்பூடு.
வறளானை-வரளானை.
வறள்முள்ளி-வரள்முள்ளி.
வறளி-வரளி.

வறளுதல் } வரள்தல்.
வறள்தல் }
வறள்வு-வரள்வு.
வறிஞர்-தரித்திரர்.
வறிது-அறியாமை, குறைவு, சிறுமை, பயனின்மை, வீண்.
வறிதுநகைதோற்றல்-அகப்பொருட்டுறையிலொன்று.
வறிமை-வறுமை.
வறியர் } தரித்திரர்.
வறியோர் }
வறியோன்-தரித்திரன்.
வறுகுதல்-பிருண்டுதல்.
வறுக்கற்றுப்போதல்-நிரவறுமைப்பட்டுப்போதல்.
வறுங்காலம்-வறப்புக்காலம்.
வறுங்கோடை-மழையில்லாத கோடை.
வறுதல்-தீயாலுலர்தல்.
வறுத்தல்-வறட்டல்.
வறுத்துறுப்புச்செய்தல்-முற்றுவிக்கல்
வறுநகை-புன்னகை.
வறுநிலம்-பாழ்நிலம்.
வறுமம்-வன்மம்.
வறுமை-தரித்திரம், வெறுமை.
வறுமொழி-வீண்சொல்.
*வறும்புனங்கண்டுமறுகல்-அகப்பொருட்டுறையிலொன்று.
வறும்புனம்-பாலைநிலம், விளைவுகொய்புனம்.
வறுவிலி-அகதி.
வறை } துவட்டற்கறி, பிண்ணாக்கு.
வறையல் }
வற்கசங்கலிதம் - வருக்கசங்கலிதம்.
வற்கடம்-பஞ்சகாலம், வறப்புக்காலம்
வற்கடை-குறைவு.
வற்கமூலம்-வருக்கத்தொகையின் மூலம்.
வற்கம்-கஞ்சி, குதிரைவாய்வார், சமமாகிய வீரெண்ணின்பெருக்கம், மரவுரிமரப்பட்டை.
வற்காடம்-நகக்குறி, மத்தியானக்கிரணம்.
வற்கரி-கரகம், குதிரைக்கயிறு.
வற்கலம்-மரவுரி, மரப்பட்டை.
வற்கலை-மரவுரிச்சீலை.
வற்காலி-வெள்ளாடு.
வற்கித்தல்-ஓர்தொகையை யத்தொகையாற்பெருக்கல்.

வற்கு-அழகு, ஆடு, கஞ்சி.
வற்குலிகம்-வலியான்குருவி.
வற்சகம்-பசுக்கன்று, பிள்ளை.
வற்சதந்திரி-கன்றுகட்டுங்கயிறு.
வற்சதரம்-இளங்கன்று.
வற்சநாபம் } ஓர்மருந்து.
வற்சநாபி }
வற்சநீயம்-தள்ளத்தக்கது,நோற்றது
வற்சம் - எருமை பசுவிவற்றின் கன்று, ஓர்தேயம், குதிரை வாய்வார், [மார்பு.
வற்சரம்-வருடம்.
வற்சலம்-இளங்கன்றுப்பசு, தயை.
வற்சிதம்-தள்ளுகை.
வற்சித்தல்-தள்ளுதல், விலகுதல்.
வற்சிப்பு-தள்ளுகை.
வற்சியம்-விடப்பட்டது.
வற்சை-குழந்தை, மலட்டுப்பசு.
வற்தனை-பார்ப்பாருக்குங் கிராமத்தூழியகாரருக்குங்கொடுக்குங்கூலி.
வற்பம்-அருமை, ஒறுப்பு, பஞ்சம்.
வற்பு-உறுதி, வலி, வற்பம்.
வற்புறுத்தல்-உறுதிப்படுத்தல்.
வற்றம்-வற்று.
வற்றல்-அடைகாய், உலர்தல், காய்ந்தது, வடிதல்.
வற்றற்கூடு-கலம்வற்றச்சுடுஞ்சூடு.
வற்றுலை-ஓர்கிழங்குக்கொடி.
வற்று-நீர்ச்சுருக்கம்.
வற்றுக்கடை-குறைவு.
வற்றுதல்-காய்தல், வடிதல்.
வனகசம்-வனசரம்.
*வனகதலி-காட்டுவாழை.
*வனகந்தம்-காட்டுக்கருணை.
*வனகவம்-காட்டுப்பசு.
வனகுத்தன்-ஒற்றன்.
வனகோசரம்-காடு.
வனகோசரன்-வனவாசி, வேட்டைக்காரன்.
*வனகௌ-காட்டுப்பசு.
*வனசங்கடம்-கடலை.
வனசஞ்சரிப்பு } வனவாசம்.
வனசஞ்சாரம் }
வனசஞ்சாரி-வனவாசி.
வனசமூகம்-பூஞ்சோலை.
வனசம்-தாமரை.
வனசரம்-பெருங்காடு, மூவினயானையினொன்று, அது வனத்திற் பிறந்த யானை.
வனசரர் } வனவாசிகள், வேடர்.
வனசரிதர் }
வனசரோசினி-காட்டுப்பருத்தி.
*வனசிருங்காடம்-யானைநெருஞ்சில்.
வனசீவி-வனவாசி.
வனசுரம்-அருங்காடு.
*வனசூகரி-காட்டுப்பன்றியின்பெண்
வனசெந்து-காட்டுமிருகம்.
வனசோபனம்-தாமரை.
வனச்சார்பு-முல்லைநிலம்.
வனச்சுவை-நரி, நாவி, புலி.
வனதம்-முகில்.
வனதீபம்-சண்பகம்.
வனதேவதை-வனத்திற்றெய்வம்.
வனநரம்-குரங்கு.
வனபதி-பூவாது காய்க்குமரம்,மரம்.
*வனபந்தம்-தடாகம்.
*வனபலம்-யானைத்திப்பிலி.
வனபாதவம்-காட்டுமரம்.
*வனபிப்பலி-காட்டுத்திப்பிலி.
வனபூமி-காட்டுத்தேயம்.
வனப்பதியம்-பூவாமற்காய்க்குமரம்.
வனப்பிரியம்-குயில்.
வனப்பு-அழகு.
வனமல்லி-காட்டுமல்லிகை.
வனமாலி-திருமால்.
*வனமாலினி-துவாரகை, வராகி.
*வனமாலை-திருமால்மாலை.
வனமூதம்-முகில்.
*வனமோசை-காட்டுவாழை.
வனம்-அழகு, ஊர்சூழ்ந்தசோலை,காடு, குடியிருப்பு, சுடுகாடு, துளசி, நீர், புற்று, மலையருவி, மிகுதி, வழி, வீடு.
வனரம்-குரங்கு.
வனராசன்-சிங்கம்.
*வனலக்ஷ்மீ-வாழை.
வனவாசம்-வனவிருப்பு.
வனவாசனம்-நாவி.
வனவாசி-வனசஞ்சாரி.
வனவாந்தரம்-வனாந்தரம்.
*வனவிரீகி-மலைநெல்.
*வனவிலாசினி-ஓர்செடி.
வனாகம்பம்-மரவசைவு.
வனாகு-முயல்.
*வனாசம்-காட்டாடு.
வனாந்தம்-காட்டோரம்.
வனாந்தரம்-நின்மானுஷியமான காடு.

*வனுமலகம்-காட்டுநெல்லி.
*வனுப்பு-நர்த்தயம்.
*வனுர்ச்சகன்-பூசிப்போன்.
வனிகை-கா.
வனிதம்-இரப்பு.
வனிதை-பெண், மனையாள்.
*வனி-காடு.
வனிகன் } யாசகன்.
வனியகன் }
*வனிரம்-காட்டுத்திப்பிலி. [ன்.
*வனேசரன்-காட்டில் சஞ்சரிப்போ
வனைதல்-அலங்கரித்தல், செய்தல்.
வனோற்சவம்-காண்டாமிருகம்.
வன்கட்பேதையர் - பாலிலிப்பெண்கள்.
வன்கணம் - வலியுடையவருக்கம், வல்லெழுத்துவருக்கம்.
வன்கல்-வயிரம்.
வன்கண்ணர்-வைராக்கியர்.
வன்காய்-கடுங்காய்.
வன்காரம்-வலோற்காரம்.
வன்கிடை-அருங்கிடை.
வன்கிறம்-அருமுருமை.
வன்குணம்-வைரத்தனம்.
வன்கை-வைராக்கியம்.
வன்கைவாரம்-அரும்பழி.
வன்கொலை-அருங்கொலை.
வன்சர-அருஞ்சர.
வன்சிரம்-ஓர்மீன்.
வன்சுரம்-பாலைவனம்.
வன்சொல்-கடுஞ்சொல்.
வன்பகை-கடும்பகை.
வன்பால்-குறிஞ்சிநிலம், பாலைநிலம், [மேடு.
வன்பு-வன்மை.
வன்பொறை-பெரும்பாரம்.
வன்மத்தானம் - உயிர்நிலை, கொய்யவிடம்.
வன்மம்-வைராக்கியம்.
வன்மரம்-அகக்காழுள்ளமரம்.
வன்மி-பகைஞன்.
வன்மிகம்-ஓதம், வன்மீகம்.
வன்மித்தல்-வைரங்கொள்ளுதல்.
வன்மிகம்-புற்று.
வன்மீடு-வான்மீடு.
வன்மீன்-முதலை.
வன்மை-கடினம், இஃது எண்வகைப்படுமென்று, கருத்து, டைலம், வலி, வல்லாத்காரம்.
வன்மொழி - உறுதிப்பேச்சு, கடுஞ்சொல்.
வன்றொடர்-வல்லெழுத்துத்தொடர்ந்துவருவது.
வன்னக்கல்-மந்தாரச்சிலை.
வன்னம்-எழுத்து, சித்திரிப்பு, நிறம்.
வன்னி - ஓமரம், கிளி, செங்கொட்டை, தீ, பிரமசாரி.
வன்னிகருப்பம்-இலிங்கம், மூங்கில்.
வன்னிகருப்பன்-குமரன்.
வன்னித்தல்-உவமித்தல்சிறப்பித்தல்
வன்னித்தி-நவசாரம்.
வன்னிபொக்கிஷம் } நெய்.
வன்னிபோக்கியம் }
வன்னிமாரகம்-நீர்.
வன்னிமித்திரன்-காற்று.
வன்னிமை-ஓர்சாதி, வன்னியருக்குரியமேன்மை.
வன்னியம்-வன்னிக்கப்படுவது.
வன்னியர்-ஓர்சாதியார்.
வன்னியன்-வன்னியவேளாளன்.
வன்னியின்செற்பம் - இலிங்கபாஷாணம்.
வன்னிலம்-உரநிலம்.
வன்னிலோகம்-செம்பு.
வன்னிவன்னம் - செந்தாமரை, செவ்வாம்பல்.
வன்னிவிசம்-பொன்.
வன்னெஞ்சன்-வயிரநெஞ்சன்.
வன்னெஞ்சு-வயிரநெஞ்சு.
வன்னெல்-வயதுள்ளநெல்.

வா

வா-ஓரெழுத்து, வாவென்னேவல்.
வாகன்-காக்காரன், குதிரைக்காரன்
வாகசம் - நீர்ப்பாய்ச்சல், பெரும்பா
வாகசி-குத்திரப்பேச்சு. [ம்பு.
வாகடம்-வைத்தியசாத்திரம்.
வாகம்-இடபம, எருமைக்கடா, ஓரளவு, காற்று, குதிரை, பலவின்றுவ பாஷாணம், புயம், வாகனம்.
வாகரம் - கோணுய், சாணைக்கல், தடை, நிச்சயம், வடவாமுகம்.
வாகரன்-பண்டிதன், வீரன்.
வாகனப்புடைவை - புடைவைக்கட்டைத்தாங்குஞ்சிலை.
வாகனம்-ஏறிநடத்தப்படுபவை, சிலை, பரி, முயற்சி.

வாகன்-அழகன், காவாள்.

*வாகாசனி-புத்தன்.

*வாகிடி-நீர்ப்பன்றி.

வாகித்தம்-யானைக்கதுப்பு.

வாகியம்-வாகனம்.

வாகிருவன்-அறிஞன், சாதுரியன்.

வாகினி-படை, படையிலோர் தொகை, அது கணைமூன்று கொண்டது.

வாகினிபதி } சமுத்திரம், சேனாபதி
வாகினிபதி }

வாகீகம்-பண்டி, பெரும்பறை.

வாகீசன் - ஆக்கியான், திருநாவரசன், பிரமன்.

வாகீசுவரன்-வாகீசன்.

வாகீசுவரி-சரச்சுவதி.

*வாகீசை-சரச்சுவதி.

வாகு-அழகு, ஒழுங்கு, தோள், பக்கம், முக்கோணத்தொருபக்கம்.

வாகுசம்-எள், கிளி.

வாகுசன்-அரசன்.

வாகுதம்-ஓர்பட்சி.

வாகுத்திரேணம்-தோட்கவசம்.

வாகுபுரி-பூணூல்.

வாகுமாலை-பக்தற்சோடிப்பிலொன்று

வாகுமூலம்-கைக்குழி, தோண்மூலம்

வாகுயுத்தம்-மல்லுயுத்தம்.

வாகுரம-வலை.

வாகுரிகன்-வேட்டைக்காரன்.

வாகுரை-கண்ணி, பொறி.

*வாகுலம்-மகிழங்கனி.

வாகுலிகன்-அடைப்பைக்காரன்.

வாகுலேயன்-முருகன்.

வாகுலை-கார்த்திகைப்பெண்.

வாகுவலயம்-தோளணி.

வாகுவீரியம்-புயபராக்கிரமம்.

வாகெடுத்தல்-உச்சிவகிருதல்.

வாகேசுவரி-வாக்கு, வாணி.

வாகை-அறத்தின்றுறை, ஈகை, உண்மை, ஒழுக்கம், ஓர்மரம், அது தசமூலதொன்று, குணம், தவம், நலன், மாட்சிமை, மிகுதி, முயற்சி, வாகைமாலை, வெற்றி.

வாகைமாலை-ஓர்பிரபந்தம், அது மாற்ருரைவென்று வாகைமாலைசூடுவதை ஆசிரியப்பாவாற்கூறுவது, வெற்றிமாலை.

வாக்கன்-மாறுகண்ணன்.

வாக்காடல்-வாதுபண்ணல்.

வாக்காட்டல்-வைத்தல்.

வாக்காள்-சரச்சுவதி.

வாக்கி-அறம்பொருளின்பம் வீடென்னும் நாற்பொருட் பயன்களைக் கேட்கவேட்கை விரித்துக் கூறுவோன், மாறுகண்ணி.

வாக்கிடுதல்-வாக்குக்கொடுத்தல்.

வாக்கியகண்டனம-பொய்யென்றுரைபித்தல்.

வாக்கியதம்-மௌனம்.

வாக்கியப்பிரயோகம்-பேசுதல்.

வாக்கியப்பொருட்காட்சியணி-ஓரலங்காரம், அஃது இரண்டுவாக்கியார்த்தங்கட்கைக்கியத்தை யாரோபித்தல்.

வாக்கியம்-உரையிலக்கணமைந்தினொன்று, அது வினைமுதற் செயப்படுபொருள் பயனிலையோடு முடிந்தசொல், முறை, வசனம், வாசகம், வெளி, வைணவாகமத்தொன்று.

வாக்கியாதன்-மௌனி.

வாக்கின்செல்வி-சரச்சுவதி.

வாக்கீசன்-திருநாவுக்கரசன்.

வாக்கீரன்-மைத்துனன்.

வாக்கு-சொல், திரும்பினபார்வை, நேரிலக்கற்றவளைவு, முப்பொறியினொன்று, மெய்ம்மை, வாக்கென்னேவல், வாய், அது ஐம்பொறியினொன்று.

வாக்குக்கண்-மாறுகண்.

வாக்குக்குற்றம்-சொற்குற்றம்.

வாக்குக்கொடுத்தல்-நிசஞ்சொல்லல்.

வாக்குசாபல்லியம் - பேச்சிலினைத்துப்போதல்.

வாக்குச்சகாயம்-சொற்றுணை.

வாக்குச்சித்தி-சொற்படியனுகூலமாதல்.

வாக்குச்சொல்லுதல்-நிசஞ்சொல்லுதல்.

வாக்குதண்டம்-கடிந்துபேசுதல்.

வாக்குதத்தை - மணமுடிக்கவாக்குக்கொடுத்தத்தரி.

வாக்குதல்-வார்த்தல்.

வாக்குதேவதை-வியாழம்.

வாக்குதேவி-சரச்சுவதி.

வாக்குதோஷம்-நிந்தனை, பேச்சுக்குற்றம, வழுஉச்சொல்.

வாக்குருத்தம்-வாக்குக் கொடுத்தல்.
வாக்குத்தம்பம்-பேச்சைத்தடைபண்ணல், அது கலைஞானமறுபத்துநாலிலொன்று.
வாக்குத்தானம்-சென்மத்திற்கிரண்டாமிடம்.
வாக்குத்திட்சை-தீட்சைபேதத்தொன்று, அஃது உபதேசம்.
வாக்குத்துஷ்டம்-வாக்குதோஷம்.
வாக்குநாணயம்-பேச்சுறுதி.
வாக்குபதி-வியாழம்.
வாக்குப்பண்ணுதல்-நிசஞ்சொல்லுதல்.
வாக்குமாறுதல்-புத்திமழுங்கல்,பேச்சுதவறல்.
வாக்குமூலம்-சொற்கருத்து, வார்த்தைமுகாந்தரம்.
வாக்குரோசம்-பேச்சுக்குறாணல்.
வாக்குவசீகரம்-செல்வாக்கு.
வாக்குவந்தனம்-அவையடக்கம்.
வாக்குவல்லபம்-பேச்சுவல்லபம்.
வாக்குவாதம்-தர்க்கம்.
வாக்குவி-சரச்சுவதி.
வாக்குவித்தல்-வார்ப்பித்தல்.
வாக்குவியாபாரம்-பேச்சுவிதம், வழக்கமானபேச்சு.
வாக்குவிலாசம்-வாசாலகம்.
வாக்கெடுத்தல்-உச்சிவகிருதல்.
*வாக்பதி-ப்ருஹஸ்பதி.
வாங்கம்-கடல்.
வாங்கல்-அடித்தல், அழைத்தல்,இழுத்தல்,ஏற்றுக்கொள்ளல்,நீளம்,பெற்றுக்கொள்ளல், போதல், வளைத்தல், வலிவு.
வாங்கா-ஒருதுகுழல்.
வாங்காவில்-எதிரித்தனம்.
வாங்கு-ஓராசனம், திசை,வாங்கென்னேவல்.
வாங்குதல்-வாங்கல்.
வாசகத்திட்சை-வாக்குத்திட்சை.
வாசகபதம்-வழக்கச்சொல், வெளிப்படைமொழி.
வாசகப்பா-வாசாப்புப்பாட்டு.
வாசகப்புணர்ச்சி-வாசகப்பொருத்த
வாசகம்-வசனம், வார்த்தை.
வாசகன்-தூதன்.
வாசகிருகம்-உள்வீடு.
வாசங்கட்டுதல்-மணமூட்டுதல்.
வாசசல்லியம்-கஸ்தூரிஎலும்பு.
வாசசாம்பதி-வியாழம்.
வாசஞ்செய்தல்-இருத்தல், மணமூட்டுதல்.
வாசதம்-கழுதை.
வாசதேயி-இரவு.
வாசத்தலம்
வாசஸ்தலம் } இருப்பிடம்.
வாசந்தம்-ஒட்டகம், குயில், தென்காற்று, மிருகத்தினிளங்கன்று.
வாசந்தி-ஆடாதோடை, குருக்கத்தி, திப்பிலி.
வாசபதி-வியாழம்.
வாசபேயம்
வாசபோசினி } ஓர்வேள்வி.
*வாஜபோஜி-வாஜபேயயாகம்.
*வாஜஸநேயம்-ஜநமேஜயன் செய்த வேதாந்தக்ராந்தம்.
வாசம்-அம்பு, அரிசி, இருப்பிடம், இறகு,உணவு,ஊர், சரச்சுவதி, சீலை, நாள், நீர், நெய், பூமணம், பேச்சு, மந்திரம்,மருதநிலத்தூர்,யோசனை, வாக்கியம், வாசனை, வேகம்.
வாசம்பண்ணுதல்-இருத்தல்.
வாசரம்-ஓர்நரகம், நாள்.
*வாசம்யமன்-முநி, மௌநவிரதி.
வாசவத்திரன்-திருமால்.
வாசவன்-இந்திரன்.
வாசற்படி-வாயிற்படி.
வாசனம்-அறிவு, குரல், புடைவை, வாசனை, வாசித்தல்.
வாசனி-மேற்கட்டி.
வாசனை-அறிவினம், அறிவு, நம்பிக்கை, மணம்.
வாசனைத்திரவியம்-வாசனைப்பண்டம்
வாசனைப்பண்டம்-கந்தவருக்கம்.
வாசனைப்பொடி-கந்தபொடி.
*வாசா-சரச்சுவதி.
வாசாகாரம்-அந்தப்புரம்.
வாசாடம்-வாசாலம்.
*வாசாடன்-வாயாடி.
வாசாப்பு-ஓர்கூத்து.
வாசாலகம்-வாக்குவல்லபம்.
வாசாலகன்-வாய்வல்லபன்.
வாசாலம்-வாக்குவல்லபம், வாக்குவிற்பன்னம்.
வாசாலன்-மிகப்பேசுவோன்.
வாசாலி-வாக்குவல்லவி.

வாசி-அச்சுவினிநாள், அதிகம், அம்பு, இசைக்குழல், இசைப்பாட்டு, இருப்பிடம், குதிரை, சுவாசம், திட்டம், நியாயம், பறவை, பாணம், வட்டிக்குமேலதிகமாய்க் கழித்தெடுக்குங்கழிவுபணம், வாசியென்னேவல்.
வாசிகத்தம்-ஓர்பூடு.
வாசிகபத்திரம்-திருமுகம்.
வாசிகம்-செய்தி.
வாசிகரணம்-அன்புடைக்காமம்.
வாசிகன்-தூதன்.
வாசிகை-கோத்தமாலை, தொடுத்தமாலை, மாலை.
வாசிக்கல்-காக்கைக்கல்.
வாசிக்காரகம்-திருமுகம்.
வாசிக்காரகன்-தூதன்.
வாசிசாலை-குதிரைப்பந்தி.
வாசிட்டம்-அட்டாதசதருமநூலினொன்று, அட்டாதசோபபுராணத்தொன்று, இரத்தம்.
வாசிதம்-அறிவு, ஒலி, குடியேற்றுதல், புட்குரல், மிருகக்குரல்.
வாசித்தல்-படித்தல், மணத்தல், வீணைமுதலியவாசித்தல்.
வாசிரம்-நாற்றெருக்கூடுமிடம், பகல், வீடு.
வாசிராயநீயம் - உடநிடதமுப்பத்திரண்டினொன்று.
வாசினி-வெண்குதிரை.
வாசினை-வாசித்தல்.
*வாஜிபட்சம்-கடலை.
*வாஜிபேயம்-ஓர்யாகம்.
*வாஜிபோஜனம்-பயறு.
வாசு-கடவுள், திருமால்.
வாசுகி } அட்டநாகத்தொன்று.
வாசுகேயன் }
வாசுதேவன்-கண்ணன்.
வாசுபத்திரன்-கிருட்டிணன்.
வாசுரை-இரவு, பூமி, பெண், பெண்யானை.
வாசை-ஆடாதோடை.
வாசோயுகம்-ஒருசோடுபுடைவை.
வாச்சி- வாய்ச்சி.
வாச்சியம்-குற்றம், சொல்லப்படத்தக்கது, நிந்தை, பறைமுதலியன, வெளிப்படை.
வாச்சியாயன்-களாநூற்செய்தமுனி
வாஞ்சனம்-வாஞ்சை.
வாஞ்சனீயம்-விரும்பத்தக்கது.
வாஞ்சாபோகம்-இச்சித்தபோகம்.
வாஞ்சிதம்-விரும்பியது.
வாஞ்சித்தல்-ஆசைப்படுதல்.
வாஞ்சினம்-விரும்பியது.
வாஞ்சினி-காமி.
வாஞ்சை-ஆசை.
வாடகை-கொல்லை, தெரு, மட்சுவர், வாகனசாலை, வீட்டுக்கூலி.
வாடபேயம்-எருது.
வாடம்-சுவர், மதில், மிகுதி.
வாடல்-சாதல், மெலிதல், வதங்கல்.
வாடாமல்லிகை-ஓர்பூச்செடி.
வாடாமாலை-பொன்னரிமாலை.
வாடி } ஓர்பூடு, கொல்லை, தங்குமிடம், பூந்தோட்டம், மதில், முற்றம், வீடு.
வாடிகை }
வாடிக்கை-வழக்கம்.
*வாடுகி-ஓர்வகைவெள்ளரி.
வாடுதல்-வாடல்.
வாடை-இடைச்சேரி, இடையர்வீதி, காற்று, குடிக்கூலி, தெரு, நிரை, மணம், வடகாற்று, வடக்கு, வரிசை, வீட்டுக்கூலி, வேடர்வீதி.
வாடைக்கச்சான்-வடமேல்காற்று.
*வாடைக்காற்று-வடகாற்று.
வாடைக்கொண்டல்-வடகீழ்காற்று.
வாட்கோரை-ஓர்புல்.
வாட்சூலை-ஓர்நோய்.
வாட்டம் - குறைவு, சோர்வு, தெரு, தோட்டம், வதக்கம், வழி, வாடல்.
வாட்டரவு-சோப்பம், வதக்கம்.
வாட்டல்-மெலிவித்தல்.
வாட்டாலை } மெலிந்தவன்.
வாட்டாளை }
வாட்டாழை-ஓர்தாழை.
வாட்டி-முறை, வசட்டி.
வாட்டியபுட்பம்-சந்தனம், மஞ்சள்.
வாட்டியம்-தோட்டம், வீடு.
வாட்டு-நன்மை, நீதி, வாட்டென்னேவல்.
வாட்டுதல்-வாடப்பண்ணுதல்.
வாட்படையாள்-துர்க்கை.
*வாட்யாயநி-அதிபலை.
வாணகந்தி-அரசமரம், ஓர்கந்தகம்.
வாணகம்-அக்கினி, அம்பு, தனிமை, பசுமடி, வேய்க்குழல்.
வாணகன்-திருமால்.

வாணக்கட்டுதல்-வாணமடித்தல்.
வாணதண்டம்-புடைவைநெய் சூத்திரம்.
வாணமோட்சணம்-அம்பெய்தல்.
வாணம்-தீ, பாணம், மத்தாப்பு முதலியன.
வாணவாரம்-மார்க்கவசம்.
வாணன்-ஓரசுரன், கார்த்திகைநாள்.
வாணன்கோவை-ஓர்பாடல்.
வாளுக்கம்பு-சிலம்பக்கோல்.
வாளாசனம்-வில்.
வாணாசிரயம்-அம்பு.
வாளுத்தண்டம்-வாளுக்கம்பு.
வாளுரி-திருமால்.
வாணி-ஓர்கூத்து, சரச்சுவதி, சொல், சொல்லல், மகேருவிலே.
வாணிகம்-வியாபாரம்.
வாணிகன்-செட்டி, துலாராசி.
வாணிகேள்வன்-பிரமன்.
*வாணிஜம் } வடவைத்தீ.
*வாணிஜிகம் }
*வாணிஜன் } வ்யாபாரி.
*வாணிஜிகன் }
வாணிச்சி-செட்டிப்பெண்.
வாணிச்சிரேமணி-மாணிக்கம்.
வாணிச்சியம்-வாணிகம்.
வாணிரம்-கள்.
வாணிசி-கூத்தி, மதர்த்தவள்.
*வாணிகி-நாதி, நர்த்தகி.
வாணிபம்-செட்டு, அது வைசிய ரது தொழிலென்று.
வாணிபர்-எண்ணெய் விற்போர், ஓர் சாதியார், செட்டிகள், வியாபாரிகள்
வாணியன்-வாணிபன்.
வாணிவிச்சி-வாணிச்சி.
வாணினி-கூத்தி, மூர்க்கமுள்ளவள், விவேகமுள்ளவள்.
வாணிசன்-பிரமன்.
வாணுதல்-பெண்.
வாதகரப்பன்-ஓர்நோய்.
வாதகாசம்-ஓர்காசம்.
வாதகாமி-பட்சி.
வாதகாலம்-முன்னேரம்.
வாதகி-சந்திசாரம்.
வாதகிராணி-ஓர்கிராணி.
வாதகுண்டலிகை-நீரடைப்பு.
வாதகும்பம்-யானைக்கதுப்பு.
வாதகுல்மம்-பெருங்காற்று.
வாதகுன்மம்-ஓர்நோய்.
வாதகேது-தூளி.
வாதகேலி-சரசப்பேச்சு, நகக்குறி.
வாதக்கடல்-நவசாரம்.
*வாதகங்கி-ஓர்மரம்.
வாதசகம் } அக்கினி.
வாதசகன் }
வாதசாதனம் - தருக்கத்தி னுடன்படுதல்.
வாதசாரதி-அக்கினி.
வாதசிரோமணி-நவசாரம்.
வாதசிபிடம்-அடிவயிறு.
வாதசுரம்-வாதத்தைப்பற்றியெழுந்த காய்ச்சல்.
வாதசூலை-ஓர்சூலை.
வாதசோணிதம்-வாதநீர்.
வாதத்தூலம்-காற்றிற்பறக்கும் பஞ்சு.
வாதத்தூளம்-நொய்யது.
வாதத்தனிக்கல்- இராசவத்தனக்கல்.
வாதத்துவசம்-மேகம்.
வாதநாடி-வாதத்திற்குரியநாம்பு.
வாதநிகண்டு-இரசவாதநிகண்டு.
வாதபித்தசூலை-ஓர்நோய்.
வாதபித்தம்-இரத்தத்திற் கலந்த பித்தம்.
வாதபுத்திரன்-அநுமன், வீமன்.
வாதபுல்லம்-காற்றுக்கொண்டது.
வாதபூமி-வாதங்கொண்டதேயம்.
வாதபோதம்-பலாசு.
வாதப்பிரமரி-சுழல்காற்று.
வாதப்பிரமி-மான்.
வாதமடக்கி-தழுதாழை.
வாதமண்டலி-சுழல்காற்று.
வாதமானம்-வருத்தல்.
வாதமிருகம்-கலைமான்.
வாதம்-இரும்புமுதலிய லோகங்களைப் பொன்னாக்கும்வித்தை, காற்று, இஃது உயிர்வேதனையி னொன்று, சம்பாஷணை, தருக்கமுடிவு, தருக்கம், முப்பிணியிலொன்று, முறைப்பாடு.
வாதத்தம்-தருக்கம்.
*வாதரக்தம்-ஓர்நோய்.
வாதரங்கம்-அரசு.
வாதராதம்-சித்தாந்தம், முகில்.
வாதரம்-வாதலம்.
வாதராசன்-நவசாரம்.
வாதராட்சதன்-ஓர்மருந்து.

வாதராயணம்-அம்பெய்தல், மலைமுடி, மிருகதி, வாள்.
*வாதராயணன்-வியாசன்.
வாதராயன்-வாயுபகவான்.
வாதருடம்-காற்று, கைக்கூலி, வானவில்.
வாதரோகம்-வாதநோய்.
*வாதரோகி-வாயுரோகி.
வாதலமண்டலி-சுழல்காற்று.
வாதலம்-அதிமதுரம், காற்று, விரைவு
*வாதலிங்கி-வாதரோகி.
வாதவைரி-ஆமணக்கு.
வாதனம்-ஒலி, சிலை, வருத்தம்.
வாதனை-வருத்தம்.
வாதாகதம்-காற்றடியுண்டது.
வாதாடகம் } சூரியன் குதிரையி னொன்று.
வாதாடம் }
வாதாடல்-வழக்காடல்.
வாதாட்டம்-தருக்கம்.
வாதாட்டுதல்-தருக்கத்திற் குட்படுத்தல், தொந்தரைப்படுத்தல்.
*வாதாபி-ஓர் அசுரன்.
*வாதாபிசூதநன்-அகத்தியன்.
வாதாமோதம்-மான்மதம்.
வாதாயம்-இலை.
வாதாயனம்-பலகணி, மண்டபம்.
வாதாயு-மான்.
வாதாரி-ஆமணக்கு.
வாதாலம்-ஓர்மீன.
வாதாலி-சுழல்காற்று.
வாதாவி-ஓரசுரன்.
வாதானுலோமனம்-காற்றடக்கல்.
வாதானுவாதம்-வினாவிடை.
வாதான்னியம்-வள்ளற்றன்மை.
வாதி-காரணமுமேற்கோளுமெடுத்துக்காட்டிப் பிறன்கோள் மறுத்துத் தன்மதநிறுத்திப் பாடுவோன், காற்று, தருக்கி, முறைப்பாடுகாரன், வாதஞ் செய்வோன், வாதியென்னேவல்.
வாதிகம்-ஓர்நோய், சேம்பு.
வாதிக்குதல்-வருத்தப்படுத்துதல்.
வாதிங்கணம்-சேம்பு.
வாதிசன்-கல்விமான்.
வாதித்தல்-வருத்தப்படுத்துதல்.
வாதித்திரம்-ஓர்வாச்சியக்கருவி.
வாதிராசன்-நவசாரம்.
வாதிரு-காற்று.

வாது-சண்டை, சபதம், தருக்கம்.
வாதுகூறல்-சபதஞ்சொல்லுதல்.
வாதுவை-மனைவி.
வாதுக்கியம்-கலியாணம்.
வாதுமை-ஓர்மரம்.
வாதுலம்-சுழல்காற்று.
*வாதுலன்-உன்மத்தன்.
வாதுலி-வெளவால்.
வாதுவர்-குதிரைப்பாகர், யானைப்பாகர்.
வாதுளம் - சிவாகம மிருபத்தெட்டினொன்று.
வாதூலம்-சுழல்காற்று.
*வாதூலன்-உன்மத்தன்.
வாதை-துன்பம், நோய், வருத்தம்.
வாதோரணமஞ்சரி-ஓர்பிரபந்தம், அது மதகளிற்றை வசப்படுத்தினோரதும் எதிர்பொரு கரியைச் சயித்தோரதுங் கரிதழுவினோரதும் வென்றியை வஞ்சிப்பாவாற் கூறுவது.
பொதுநீங்குவமை-உவமையைக்கூறி மறுத்துப் பொருடன்னையே யுவமையாய்க்கூறுவது (உம்)திங்களில் வதனஞ்சிறப்புடைத்ததனுலது வே யதற்குநிகர்.
பொதுவகத்திணை- தனக்குறுப்பெனப்பலவற்றை யடக்கிக்கொள்ளல்.
பொதுவடி-இயற்சீருரிச்சீர் பொதுச்சீரொன்றும் மூன்றுறும்வருமடி.
பொதுவனுமானம் - ஓரளவை, அது சாதனசாத்தியங் களினொற்றுமையுணராதுபொதுவாயனுமானித்தல்.
பொய்க்கீர்-கானல்.
பொரிவு-சிலிர்ப்பு.
பொருட்குறைவிசேடம் - பொருட்குறைவினல் விசேடித்துக் காட்டுவது,(உம்) இருநாழிநெற்கொண்டுயிரனைத்தூட்டும்.
பொருட்பின்வருநிலை-மொழிந்தபொருளேபொருளாயினுஞ் சொல்வேருய்வருவது.
பொருளகத்திணை-தனக் குறுப்பெனப்பலவற்றையடக்கிக்கொள்வது.
பொருளந்தாதி-ஈற்றுப்பொருளை முதற்பொருளடியாகப்பாடல்.
பொருளவனுதி - பொருளா னுயர்பு தோன்றக் கூறுமலங்காரம்.
பொருள்விலக்கு - ஓரலங்காரம், அது குறித்தபொருளை மறுத்துக்கூறுவது.

போ

போகவதி-பாதாளநதி.
போக்கியல்-சுரிதகம்.
போசனகுறடா-மிளகாய்.
போட்டரி-இரட்சகன்.

ம

மகரன்-ஆகாயத்தைத் தோற்றுவித்த பூதம், முக்குணமூலம்.
மகோதயம்-முத்தி.
மஞ்சல் மைத்துனன்.
மடக்கியல்-சுரிதகம்.
மடலூர்ச்சி-மடலூர்தல்.
மட்டித்தல்-முறித்தல்.
மணிகடம்-உத்தாமணி.
மணிக்காம்பு-தக்காளி.
மண்டலவந்தாதி-ஈற்றடியிறுதியும்முதலடிமுதலுமொன்ருகவருவது.
மண்வெட்டி-குயவன்.
மத்திமசரீரம்-அயிராவதம், காமதேனுமுதலியன.

மந்தி-அடுமின்றுப்பாலை.
மயிர்மாட்டி-ஓராபரணம்.
மருட்செந்தொடை-இனவெழுத்துப்
பெற்றுமோனைமுதலாயதொடை
யுந் தொடையிற்பமும் போலா
மைவேறுபட்டுவருவது.
மருதத்திணை-மருதத்திற்குரியன.
மருதப்புறம்-குற்றிலைசக்குறுங்கலி.
மலைதல்-செய்யுள்வழுவினொன்று, அ
ஃது ஒன்றற்குரியதை மற்றொன்ற
ற்குரியதாகப்பாடுவது.
மலைப்பிஞ்சு-கல்.
மறுபொருளுவமை - முன் வைத்த
பொருட்கு நிகராயதோர் பொரு
ள்பின்னரும்வைப்பது (உம்) மக்
களிலனைக் கொப்பிலை, ஞாயிறுக்
கொப்பில்லைச்சுடர்கள்.
மறை-சல்லுச்சரி.
மணங்கல்-ஒடுங்கல்.
மனதுருகல் } மனங்கசிதல்.
மனமுருகல் }
மனிதன்-மானிடன். [னம்.
மனைமாட்சி - இல்வாழ்க்கையி லட்ச
மனைமாட்சிக்குரிய - நிமித்தம்போற்
றன்முதலாக வச்சமுற்றிரங்கலிறு
கச்சொல்லப்பட்டவைந்தம்.
மனையவறம்-ஈதல், ஏற்றல், காத்த
ல், ஒழுக்கம், புணர்தல், துய்த்தல்.
மனோ்பம்-மனதிறக்கப்படாதது.
மனோபாஷிதம் - தன்னொடு தான்பே
சல்.
மனோராச்சியம்-மனநினைவினாற்றான்
மகிமையடைந் தநுபவிப்பதாகச்
சிந்தித்துமகிழ்தல்.
மன்விருத்தம்-ஆசிரியவிருத்தம்.

மா

மாசகதம் } கூழ்.
மாச்சாதம் }
மாணி-குறள்.
மாதம்-மதம்.
மாத்திரைச்சுருக்கம்-ஒருபொருள்பய
க்குநிற்பதோர்சொல்லொருமாத்தி
ரைகுறையவேறோர்பொருள் பயக்
கப்பாடுவது (உம்) எரிசரி.
மாத்திரைவருத்தனம்-ஒருபொருள்ப
யப்ப தோர்மொழி யொருமாத்தி
ரைகூடப்பிறிதோர்பொருள் பயப்
பது (உம்) ஒதிஒதி.
மாமிசதாரி-ஊன்றின்போன்.
மாரமனம்-சருமம்.
மாலாதீபகம்-தீபகச் சொன்மாலையா
ய்வருவது (உம்) மனைக்குவிளக்கு
மடவாள் மடவாடனக்குத் தகை
சால்புதல்வர்.
மாலியம்-மானம்.
மாலையுவமை - ஓரலங்காரம், அஃது
ஒருபொருட்கு வரும் பலவுவமை
யைமாலையாகத்தொடுத்துக்கடைக்
கட்பொருளைக் கூட்டியுரைப்பது.
மாறுபடுபொருள்-ஓரலங்காரம், அது
கருதியபொருளை மறைத்ததனைப்ப
ழித்தற்குமற்றொன்றைப்புகழ்வது
மானனம்-சங்கை.
மாணிதம்-மானம்.

மி

மிதம்-மிருதம்.
மிருதச்சேதம்-இறத்தல்.
மிருத்தியம்-மண்.
மிருந்துநிலை-மிருத்துக்கிரகநிலை.
மிளப்பு-இலவங்கம்.

மீ

மீசுரம்-அதிகம்.
மீட்சியின்விரி-தலைவிசேணகன்றமை
செவிலித்தாய்க் குணர்த்தன் முத
லாகநற்றாய்கேட்டவனுளங்கொள
வேலனைவிலுதலீறுயவையாம்.

மு

முகவங்கு - முகத்திற்படருங்கருந்தே
முச்சட்டை-அழகு. [மல்.
முதனிலைத்தீபகம் - செய்யுளலங்கார
த்தினொன்று, அது தீபகச்சொல்
முதலிற்பது.
முதன்மடக்கு - அஃது அடிகளுளொ
ன்றேனும் பலவேனுமடிமுதலில்ம
டங்கிவருவது.
முதிர்வேனிலுரிமை - கோடைக்காற்
றுவீசலுங் கானறேன்றலுங் கா
டைவலியான்வானம்பாடி காகங்
கவுதாரி யிவை மகிழ்தலும் மல்லி
கைபுளி பாதிரியிவை மலர்தலும்
பாலை காஞ்சிரம்நாவல் இலுப்பை
யிவை காய்த்தலுமாம்.

முத்தம் - நவமணிக்குற்றத்தொன்று, அது குல்லிநிறம், விடப்படுவது.
முத்தலை யிருதலைமேவல் - அறுதலைக் கழுமுள்.
முமூட்சுத்துவம்-பரவிராகம்.
முயற்சிவிலக்கு-முயற்பிதோன்றக்கூறிவிலக்குமலங்காரம்.
முரணந்தாதி-ஈற்றுப்பொருட்குமாறுகிய பொருளை முற்கண் வரப்பாடல்.
முரணிற்றோன்றல்விலக்கு-ஓரலங்காரம், இஃதுஇன்னபொருட்கின்னின்னவை விரோதமாயிருந்தாலுமின்னதினு லவிரோதமெனக்கூறல்.
முல்லைத்திணை-முல்லைக்குரியன.
முல்லைப்புறம்-இல்லாண்முல்லை, பாசறைமுல்லை.
முழுவதுஞ்சேறல்விலக்கு- ஓரலங்காரம், அஃது ஒருபொருட்கோர்காரியத்தைக் காட்டித்திரும்பஎல்லாவற்றின்மேலுஞ் செல்லுவதாகக் கூறியதற்குமாத்திரமன்றெனல்.
முளைப்பாலிகை-அங்குரார்ப்பணம்.
முற்றவுணர்வை - கடவுளெண்குணத்தொன்று.
முற்று - எல்லாச்சீர்க்கண்ணுமோனை முதலாயினவருவது.
முற்றுமுடுகுவெண்பா-நான்கடியு முடுக்காய்வருவது.
முற்றுருவகம்-அவயவ அவயவிகளைஎற்றஇடத்தோடும் பிறவற்றோடும்முற்றஉருபகஞ்செய்வது(உம்) உளத்தடத்துவிழிவண்டு மொழித்தேனு முளமலரொன்று மலர்ந்தது.
முன்பனியுரிமை-கொண்டல் வீசலுஞ்சிதகன், கூகை, ஆந்தையினவமகிழ்தலும்மாவுஞ்சிவந்தியுமலர்தலும்இலந்தை பழுத்தலும் செந்நெல்விளைதலும் கரும்புமுதிர்தலுமாகும்.
முன்முச்சியம்-அவிழ்த்தல்.
முன்முடுகுவெண்பா- முன்னிரண்டடிமுடுக்காய்வருதல்.
முன்னிலைமொழி-அறத்தொடுநிலை.

மூ

மூங்கி-சிறுபயறு.
மூங்கிற்போத்து-மூங்கின்முளை.
மூடவிருத்தி-தாமதவிருத்தி.
மூடி-கொத்தமல்லிப்பூடு.
மூலகருமம்-சடகருமம்.
மூலம்-பாதம்.

மெ

மெய்வகை-உறமிகழ்வைக்கூறுவது.
மெய்வாழ்த்து-உறுப்புகளைமுறையேகூறுவது.
மெல்லினவெதுகை - எல்லாச்சீர்க்கண்ணும் மெல்லின வெழுத்துக்களெதுகையாய் வருவது.

மே

மேடாயனம்-உத்தராயணமூலம்.
மேட்டிராந்தம்-மேல்.
மேற்கதுவாய்மோனை-முதலயற்சீர்க்கணின்றி யேனைச்சீர்க்கண்ணுமோனைவருவது.
மேனை-இமவான் சுதைமகள்.

மை

மைநா-சொல்லுமிபுள்.

மொ

மொக்கட்டைமுறித்தல்- முகமுரித்தல்.
மொக்கவீனம்-சங்கையீனம்.
மொழிந்ததுமொழிதல்-செய்யுள்வழுவினொன்று.

மோ

மோகவுவமை-பொருண்மேலெழுந்த வேட்கையான்வந்த மயக்கந்தோன்றவுவமைப்பது (உம்) கயல்போலுமென்றுநின் கண்பழிப்பல்கண்ணின் - செயல்போற்பிறழுந்திறத்தாற்-கயல்புகழ்வன்.
மோதனம்-உவகை.

ய

யதாகத்தவ்வியம்-சருவகத்தவியம்.
யதாகற்பம்-கற்பனைப்படி.
யதாகாரம்-உண்டியொறுப்பு.
யதாகாலம்-காலத்துக்கேற்க.
யதாஸ்திசம்-அடியாருய்.
யதாஸ்து-முற்றுமப்படியாக.
யதாபூருவம்-தொன்றுதொட்டது.
யதெந்து-என்ன, யார்.

யத்தினம்-எத்தனம்.

யூ

யூபத்தம்பம்-வேள்வித்தூண்.
யூபம்-வெற்றித்தம்பம்.

வ

வசனுபாசம்-ஓளவைப் பிரமாணம்.
வடிவுப்பண்புத்தொகை-உருவுப்பண்பைக்காட்டி நிற்குந் தொகை நிலை (உம்) வட்டக்கல்.
வண்ணப்பண்புத்தொகை-நிறத்தைக் காட்டி நிற்கும் பண்புத் தொகை, (உம்) செந்தாமரை.
வரப்புக்கடா-கண்டு.
வரம்பிலாற்றலுடைமை - கடவுளெண்குணத்தொன்று.
வரம்பிலின்புடைமை-கடவுளெண்குணத்தொன்று.
வரித்தல்-மொய்த்தல்.
வரியரிசி-சீரகம்.
வரிவடிதம்-குருவைக்காத்தல்.
வருக்கமோனை-அடிகடோறும்வருக்கவெழுத்துக்க ளவ்வவ்வருக்கமாய் வருவது.
வலி-தொகைச்சொற்றொடர்புண்டாகத்தொடுப்பது.
வலிங்கம்-பலபத்தம்.
வல்லினமோனை-எல்லாவடிகளின்முதற்கண்ணும் வல்லின வெழுத்துக் கள்வருவது.
வல்லினவெதுகை-எல்லா வடிகளின் முதற்சீர்க்கண்ணும் வல்லினவெழுததுக்களெதுகையாய்வருவது.
வழிமுரண் - ஒவ்வோரடிக்கண்ணுஞ் சீர்களொன்றற்கொன்று மறுதலைப்பட்டுவருவது.
வழியெதுகை - ஒவ்வோரடிக்கண்ணும்முறையே சீர்களொன்றற்கொன்று எதுகையாய்வருவது.
வன்சொல்லிலக்கு-ஓரலங்காரம், அது வன்சொற்சொல்லியிலக்குவது
வன்னிப்பு-வருணனை.

வா

வாகியப்பிரவேசம்-வெளியேபோதல்
வாகியம்-வெளி.
வாகினிநிவேசம்-பாசறை.
வாசஸ்தானம்-வாசஸ்தலம்.
வாசிதை-பெண், பெண்யானை.
வாயுத்தானி-காற்றுவிசுந்திசையைக் காட்டுமோர்கருவி.
வாயுறைவாழ்த்துமருட்பா-உறுவதாய்மெய்ப்பொருள்கூறுவது.
வாய்பூசுதல்-வாய்கழுவுதல்.
வாரம்-சரிதகம்.
வாரவாணி-விறலி.
வார்கடை-வார்ந்தமிஞ்சினது.
வார்வாரணம்-மார்க்கவசம்.
வாலாசம்-குதிரையின்வாய்வார்.
வாழைக்காய்-அரையாப்புக்கட்டி.
வாழ்த்து-அஃது ஒருவர்க்கு நன்மை வருவதாகவெனக்கூறுவது.
வாழ்த்துவிலக்கு-ஓரலங்காரம், அது வாழ்த்திமறுப்பது.
வாற்கிண்ணம்-அகப்பை.

வி

விகாரம்-விளையாட்டு.
விகாரவுவமை-உவமையை விகாரப்படுத்தியுவமிப்பது. (உம்) முத்துக் கூர்த்தன்னமுறுவல்.
விகிருதி-கல்லிற்பிறந்தபொருள்.
விகிர்தம்-அங்கபங்கம்.
விகீரியம்-இறைத்தல்.
விகுதி-பிரகிருதிமாயை.
விக்கியானம்-விபரீதார்த்தம்.
விக்கிரகம்-விகுதி.
விக்கிரபனம்-அறிக்கை.
விசர்க்கம்-நிறுத்தி யுச்சரிப்பதற்கிடுமடையாளம்.
விசர்ப்பனம்-பரம்புதல்.
விசனுமனம்-யாகதோத்திரம்.
விசாயம்-தூங்கல்.
விசாரவகம்-கீர்த்தி.
விசையதண்டம்-சதுரங்க தானையை மோதிவென்றவீரன்கதைத்தண்டு.
விசையனம்-ஆராய்வு.
விஞ்ஞாதம்-அறிவு.
விடயம்-இருத்தல்.
விடாதவாக்கச்சொல்-தன் செம்பொருளை விடாதுநின்றும் பிறபொருளையுந் தழுவிநிற்கு மாக்கச்சொல். (உம்) பூனை பால்குடியாது.
விட்சேபம்-அனுப்பல், உமிழ்தல், பதனம்.

விட்டவாக்கச்சொல்-சொற்பொருளை விட்டு வேறொன்றிற்கு வழங்குஞ் சொல். (உம்) அவ்வூர்வந்தது.
விததம்-பொய்.
விதம்-அறியப்படுதல், துளை.
விதரி-அறியப்படுதல்.
விதரிதம்-உருக்கப்பட்டவை.
விதாயம்-போடல்.
விதாரம்-பிளத்தல்.
விதானம்-ஒழுங்கு, விருதி.
விதிச்சூத்திரம்-முன்னில்லதனை விதித்தல்.
விதிதம்-சம்மதித்தல்.
விதுகம்-விலகல்.
விதுதம்-தள்ளப்பட்டது.
விதுவனம் }
விதூனனம் } உதறுதல்.
வித்தம்-அறிவு.
வித்தாரம்-மிகுதி.
வித்தியதம்-வேதிகை.
வித்தியம்-அறிவு.
வித்தியாதத்துவம்-தொண்ணூற்றாறு தத்துவங்களுள் இருபத்துநாலுதத்துவங்கொண்டது.
வித்தியாதுரம்-கல்வியாசை.
வினயனம்-கட்டளை, நன்னடை, மரியாதை, வணக்கம்.
விநாசகர்-அழிப்போர்.
விநிகமம்-நியாயத்தால்வந்த தீர்ப்பு.
விநீதம்-கற்பு.
விநீதை-கற்புடையாள்.
விபதம்-கைக்காணிக்கை.
விபரீதவிலக்கு-ஓரலங்காரம், அதுகாரணத்திற்கியையாது விபரீதமாய்க் காரியங்கூறி விலக்கிக்காட்டல்.
விபரீதவுவமை-தொன்றுதொட்டு வழங்கு முவமையைப் பொருளாக்கியும்பொருளையுவமையாக்கியுமுரைப்பது. (உம்) கண்போற் பிறழுங்கயல்.
விபவனம்-கீழ்ப்படிவு.
விபன்னம்-குற்றம், மெலிவு.
விபாகம்-சேரணித்தல்.
விபாச்சியத்தவம்-பகுக்கத்தக்கது.
விபாச்சியம்-பகுதி, பகுப்பு.
விபாவனம்-தரிசனம்,பாவிக்கப்பட்டது.
விபாவியம்-சிந்தித்தல்.
விப்பிரகாராசியம்-ஆகாயவுருவங் காணல்.
விப்பிரபம்-ஒளியின்மை.
விப்பிரலம்பம்-தலைவன்றலைவிபிரிதல்
விப்பிலம்-தேசோபத்திரவம்.
விமர்த்தனம்-அடக்குதல், அமர்த்துதல், வாசனை.
வியஞ்சனம்-கறி.
வியதம் }
வியதை } வேதனை.
வியத்தம்-அத்தாட்சி, தரிசிக்கத்தக்கது, தெளிவு.
வியப்பு-வியப்பைக்கூறு மலங்காரம்.
வியமம்-வியாமம்.
வியம்-செலவு.
வியனிலைமருட்பா-கைக்கிளை வெண்பாமுதலாசிரியமீறாக வருமிடத்தாசிரியவடியிரண்டேயாயவற்றுளீற்றயலடியொவ்வாதுவருவது.
வியாகிருதம்-பிரிக்கப்பட்டது.
வியாதம்-உபத்திரவம்.
வியாத்தம்-கலந்திருப்பது.
வியாமம்-அங்கசேட்டையின்மை.
விரதயம்-ஒளி.
விரியுருவகம் - மாட்டேற்றுச்சொல் விரிந்துநிற்ப வுருவகிப்பது. (உம்) கொங்கைமுகையாகமென் மருங்குல்கொம்பாக-அங்கைமலரா வடிதளிராத்திங்கள்-அளிநின்ற மூரலணங்காமெனக்கு- வெளிநின்றவேனிற்றிரு.
விருத்தாதீபகம்-ஓரலங்காரம், அது வரிவண்டு நாணு மதுமல ரம்பாகப்-பொருவெஞ்சிலைக்குப் பொலிவும்-பிரிவின்-விளர்க்குநிறமுடையார் தம்மேன் மெலிவும்-வளர்க்கு மலையா நிலம். எனவரும்.
விருத்தம்-சூதுதாயத்தொன்று.
விருத்திரூபம்-வட்டவடிவு.
விருந்துவனப்பு - இப்பொழுதுள்ளாரைப்பாடுவது.
விருபகரூபகம்-ஓரலங்காரம், அஃது ஒருபொருட்குக் கூடாததன்மைபலவுங்காட்டி யுருவகஞ்செய்வது. (உம்) தண்மதிக்குத்தோலாது தாழ்தடத்துவைகாதுமலரும் அரிவைவதனம்புயம்.
விரோதவுவமை-ஓரலங்காரம், அஃது உபமானோபமேயங்க டம்முளொன்றற்கொன்று பகையளவெனக்கூறுவது.(உம்) செம்மைமலா

மலருந்திங்களு நம்முகமும்-தம்முட்பகைவிளக்குந் தன்மையவே.

விரோதனம்-பகை.

விலக்குருவகம்-ஓரலங்காரம், அஃது உருவகிக்கிற பொருளினியல்பை விலக்கி உருவகிப்பது, (உம்) மலையிற்பயிலாமடமஞ்ஞை.

விலக்குவமை-ஓரலங்காரம், அது முன்னியபித்த வுவமையின் குறைகளை யெடுத்துக்காட்டி யுவமைப்பொருட்கு ஒப்பல்லவென்பது படப்புணர்ப்பது.

விலம்பம்-கொடுத்தல்.

விவசுதன்-சூரியன்.

விவர்த்தரூபம்-மாயாரூபம்.

விளவுதல்-அளவளாவுதல்.

விருசம்-காணாதிருத்தல்.

வீ

வீரம்-ஓரலங்காரம், அது வீரந்தோன்றக்கூறுவது.

வெ

வெருளிவிலக்கு-ஓரலங்காரம், அது வெருளிதோன்றக்கூறிவிலக்குவது

வெடிகுண்டு-ஓர்விதவெடி.

வெண்கூவெண்பா-இனவெழுத்து மிக்கிசைப்பது.

வெண்செந்துறை-இரண்டடிகள் தம்முளளவொத்து விழுமியபொருளு மொழுகியவோசையுமாய்வருவது

வெண்டளை-இது வெண்சீர் வெண்டளை இயற்சீர்வெண்டளையென விருவகைப்படும்.

வெள்ளாளன்-சிலேப்பேன்.

வெள்ளிக்காசு-ஓர்மீன்.

வெள்ளைக்கொம்பு-நரைமயிர்.

வே

வேடிதம்-துளை.

வேஷ்டனம் } காப்புக்கட்டல், சுற்றல்.
வேட்டனம் }

வேதநாகம்-அநுபவித்தல்.

வேய்த்தல்-எய்த்தல்.

வேலிமூங்கில்-ஓர்பூடு.

வேற்றுப்பொருள்வைப்பு-அது முன்னொரு பொருட்டிறந்தொடங்கிப் பின்னதனை முடித்தற்கு வலிதுடைப்பிறிதொருபொருளை யுலகறிபெற்றியான் வைத்து மொழிவது, இது முழுவதுஞ்சேறல், ஒருவழிச்சேறல், முரணிற்றோன்றல், சிலேடையின்முடித்தல், கூடாவியற்கை, கூடுமியற்கை, இருமையியற்கை, விபரீதம் என எண்வகைப்படும்.

வேற்றுமைப்பொருள்விலக்கு-ஓரலங்காரம், அஃது ஒப்புடையவாயிருக்கு மிருபொருளை யொருங்குவைத்துக்காட்டி யொன்றைவிலக்கிவேற்றுமைப்படுத்திச்சொல்லுதல்

வேற்றுமையுருவகம் - ஓரலங்காரம், அது குணப்பொருளையு முக்கியப்பொருளையு மொருபண்புடைத்தெனக்காட்டி முக்கியப்பொருட்கோர் வேற்றுமை யுடைத்தெனக் கூறுவது.

அநுபந்த அகராதி முற்றிற்று.

இரண்டாவது

பொருளகராதி.

அருளகத்தனைத்துமே யாளுநாதனை...... ....*
மருளகத்தகற்றிட வணங்கிநாற்படி....................*
தெருளகத்தொருபொருட் செப்பும்பற்பெயர்ப்........*
பொருளகராதியாம் புகலுவாமரோ....................*

அ

அகத்தி-அச்சம், கரீரம், முனி.

அகத்தியன்-கும்பயோனி, குறுமுனி, முத்தமிழுரியோன்.

அகப்பை-கோரிகை, மூழி.

அகலம்-அகலுள், அகறல், ஆய்வு, ஆன்றல், இடம், இடம்பாடு, கன்னவறை, சேண், சதம், நளம், நளி, நனவு, நியக்குரோதம், படர்தல், பாழி, மார்பு, விபுலம், வியல், விரிவு.

அகல்-இடிஞ்சில், சராவம், சுத்திகை, தகழி, பாண்டில்.

அகழி-அகழ், உடு, ஓடை, கயம், கிடங்கு, கேணி, பரிகம், பரிகை, பாம்புரி.

அகற்றல்-உச்சாடனம், ஒருவுதல், துறத்தல், நீக்கல்.

அகில் - அகரு, காகதுண்டம், சாராதுண்டம், பூழில்.

அக்குமணி-சங்குமணி, மனவு, வலைமணி.

அசுத்தம்-அசுசி, அருவருப்பு, குற்சிதம், சூதகம், தூயதன்மை, பயிர்ப்பு, வாலாமை.

அசுரர்-அவுணர், தகுவர், தநுசர், தானவர், திதிமைந்தர், தைத்தியர், நிசாசரர், நிசிசரர், வானோர்மாற்றலர்.

அசைச்சொல்-அத்த, அந்தில், அம்ம, அரோ, அன்று, ஆங்கு, ஆம், ஆல், இகும், இட்டு, இருந்து, இன்று, ஒரும், கா, குரை, சின், தம், தாம், தான், தில், நின்று, பிற, பிறக்கு, போம், போலும், மன், மன்னே, மா, மாது, மாதோ, யா, இவற்றுள், மாவென்று மசைச்சொல், வியங்கோளோடும்வரும், அன்றியும் முன்னிலை யசைச்சொன் முதலிய தத்தம்வரியிற்காண்க.

அசைதல்-அலங்கல், ஊசல், ஒசிதல், சாய்தல், ததும்பல், தயங்கல், தளம்பல், தள்ளாடல், துயல்வரல், துவளல்.

அசைத்தல்-ஆட்டல், இரட்டல், ஒசித்தல், துவட்டல்.

அசையாநிலை-அசலம், சலியாமை, சாசுவதம், துருவம், துவம்.

அசைவு-உலோலம், கம்பம், கம்பிதம், சஞ்சலம், சலம், சலனம், தரளம், துலிதம்.

அசோகமரம்-காகோளி, செயலை, செந்து, பிண்டி.

அச்சக்குறிப்பு-அருக்கல், உலமரல், நடல், குலைதல், குலையல், குளிர், கூசல், ஞெரேலெனல், ஞொள்கல், நிட்கல், துட்கல், துணுக்கெனல், துண்ணெனல், தேய்கல்,வெட்கல், வெய்துறல்.

அச்சமின்மை-அபயம்.

அச்சமுள்ளோன்-கிதன், காதரன், பிதன், பீதன், பிரு, பிருகன், பீலுகன்.

அச்சம்-அடுப்பு, அணங்கு, அற்றம், உட்கு, உரும், உருவு, உறகண், கடி, கம்பலை, கலக்கம், கவலை, கொன், கோரம், சூரம், சூர், தரம், தாம், பயம், பனி, பனிப்பு, பீதி, பீர், புலம்பு, பைரவம், போம், விறப்பு, வெடி, வெருவந்தம், வெருவு, வெறி, வெறுப்பு.

அச்சுவினிநாள்-இரலை, எறு, ஐப்பசி, சென்னி, பரி, புரவி, மருத்துவநாள், முதனாள், யாழ், வாசி.

அஞ்சல்-உட்கல், கலங்கல், பயப்படல், மருளல், வெருவுதல்.

அஞ்சனக்கோல்-கோல்.

அஞ்ஞானம்-அவித்தை,மிச்சை.

அடக்கம்-அடங்கல், ஒடுக்கம், ஒருங்கல், குந்தி, சங்கோசம், கொதில்,

அடிச்சேரி-அடிக்குடில். [முணங்கு.

அடித்தல்-அலைத்தல், அதுக்கல், அறைதல், எறிதல், எற்றல், குத்தல், கொட்டல்,புடைத்தல், மொத்தல், மோதல், வழுக்கல்.

அடிமை-ஆள், இனைகர், சேடர், தாசர், தொண்டு, தொத்து, தொழும்பர், தொழும்பு, தொறுவு, பிருத்தியர், இவற்றுட் சிறந்தபெயர், சேடர், சேடியர்.

அடுக்குதல்-எற்றல். [ர், சேடியர்.

அடுப்பு-உத்தானம்,காமரம்,குமுதம், சுபாலிகை, சுல்லி, சோபாலிகை, மணவை.

அடை-அப்பம்.

அடைக்கலம்-அபயம், இல்லடை,கையடை, சரணம், சரண், மறை.

அடைக்கலம்புகுதல்-சரணம், சரண்புகல், மறைபுகல்.

அடையாளம்-அங்கம், அச்சு, அறிகுறி, ஆலை, ஆவணம், இலக்கணம், இலாஞ்சனம்,இலிங்கம், களங்கம், குறி, கேது, சாதனம், சின்னம், துவசம், நிமித்தம், பதம், பாளி, பொறி, முத்திரை, வியஞ்சனம்.

அட்டை-உரு, சலுகம்.

அணிதல்-ஆர்த்தல், சூடல், புனைதல், பூணல்,மலைதல்,மிலைதல், வேய்தல்

அணில்-இலுதை,வரிப்புறம்,வெளில், இதன்பிள்ளை,குட்டி,பறழ்,பிள்ளை

அண்ணன்-தமையன், முன்னை, முன்னோன், முன்.

அதட்டல்-அதிர்த்தல், உரப்பல், சீறல், தெழித்தல்.

அதிசயச்சொல் - அக்கோ, அச்சோ, அத்தோ, அந்தோ, அன்னோ, ஆஅ, எற்றே, என்னோ, ஐயோ, ஒஒ.

அதிசயம்-அதிரேகம், அற்புதம், இறும்பூது, சித்திரம், விசித்திரம், விபரீதம், விம்மிதம், வியப்பு.

அதிமதுரம்-அதிங்கம்.

அத்தநாள்-அங்கிநாள், ஐமீன், ஐவிரல், களிறு, கன்னி, காமரம், கைமீன், கைனி, கௌத்துவம்,நவ்வி.

அத்திமரம்-அதவு, உதும்பரம், கோளி.

அந்திப்பொழுது-சந்தி, சாயங்காலம், சாயம், சாய்பொழுது, மாலை.

அப்பவர்க்கங்கள்-அஃகுல்வி, அடை, அண்டகை,அபூபம், இலட்டுகம், கஞ்சம், கொலை, தோசை, பூரிகம், பொள்ளல், போளி, மண்டிகை, மோதகம்.

அப்புதல்-கொட்டல், சதுர்த்தல், சாத்தல்.

அமாவாசை-இருந்திரவிகூடல், குகு.
அமிழ்து-அமரி, சுதை, மருந்து.
அமைத்தல்-கெழுமல், சமைத்தல், புல்லுதல், பொருத்தல்.
அமையுமென்றல்-அலம்.
அம்பலம்-சபை, பொதி, பொதுவில், மன்றம்.
அம்பிறகு-ார்க்கில், உடு.
அம்பு-அத்திரம், ஆசுகம், ஆவரி, கணம், கங்கபத்திரம், கணை, கதிரம், காண்டம், கோ, கோல், சரம், சாயகம், சிலீமுகம், தொடை, தோணி, பகழி, பத்திரம், பத்திரி, பல்லம், பாணம், பிரதரம், புங்கம், புதை, மார்க்கணம், வண்டு, வாளி, விசிகம், வேத்திரம், இவற்றுண் மொட்டம்பு, உதணம், முன்விடு மம்பின்பெயர், அத்திரம்.
அம்புக்கட்டு-புதை.
அம்புக்குதை-குலை, பகழி, புங்கம்.
அம்புக்குப்பி-புழுதை.
அம்புக்கூடு - ஆவநாழிகை, ஆவம், தூணி.
அம்புத்தலை-உடு, சுனை.
அம்புத்திரள்கட்டுங் கயிறு - பற்றுக்கை.
அம்மானை-அம்மனை.
அம்மி-அரைசிலை.
அயலோர்-ஏதிலர், நொதுமலர், வம்பலர்.
அயல்-ஏதில், ஒன்றுவிட்டயல், உபாந்தியம்.
அயோத்தி-கோசலம், சாகேதம்.
அரக்கு-அரத்தம், தமரம், துப்பு.
அரசமரம்-அச்சுவத்தம், கணவம், குஞ்சராசனம், சுவலை, திருமரம், பணை, பிப்பலம், போதி.
அரிசி-அரி, தண்டுலம், பரிவயம்.
அரிதாரம்-பழுப்பு.
அரிவாள்-குயம், கூனிக்குயம், கொடுவாள்.
அருகன்-அசோகன், அண்ணல், அதிசயன், அந்தணன், அமைவன், அரியணைச் செல்வன், அருட்கொடி வேந்தன், அறவோன், அறிவன், ஆசான், ஆதன், ஆத்தன், உரவன், உறுவன், கந்தன், கமலவூர்தி, கருத்தா, கலைநாதன், காதிவென்றோன், காமற்காய்ந்தோன், குற்றங்களில்லோன், கொல்லா வேதன், சதுர்முகன், சமி, சம்பு, சாதரூபி, சாது, சாந்தன், சித்தன், சிவகதியிறைவன், சினவரன், சினன், சினேந்திரன், சீமான், சேய்யோன், செல்வன், சைனன், தத்துவன், தருமராசன், திகம்பரன், திருமறுமார்பன், தீர்த்தன், நக்கன், நான்முகன், நிச்சிந்தன், நிராயுதன், நிர்நாமி, நீத்தவன், பண்ணவன், பரமேட்டி, பிதா, புண்ணியன், புத்தன், புலவன், புனிதன், பூமிசை நடந்தோன், பொன்னெயிற்கோன், போதன், மாமுனி, மால், முக்குடைச்செல்வன், முந்தன், முனிந்தோன், முனைவன், யோகி, வரதன், வாமன், விதாதா, விநாயகன், விராகன், விறலோன், வீரன்.
அருச்சுனன் - அனுமக்கொடியோன், ஆண்டொழின்மைந்தன், காண்டிவன், கிரீடி, கிருட்டிணன், கேசவற்குறுழன், சவ்வியசாசி, சுரேந்திரன்மைந்தன், சுவேதவாகனன், தனஞ்சயன், பற்குனன், பார்த்தன், மாதவிகொழுநன், விசயன், விபற்சு,
அருந்ததி-சாலி, வடமீன்.
அரும்பண்டம்-தாரம்.
அரும்பொருள்-ஞாபகம், பிசி.
அருவருப்பு-குற்சிதம், பயிர்ப்பு.
அருவல்-பருவரல்.
அரைஞாண்-அரைநூல், இரதம், இரதனம்.
அரைப்பட்டிகை-அத்து, கலை, மருவு.
அலங்கரித்தல் - அணிதல், ஒப்பனை, கைசெய்தல், கைத்தல், புனைதல், பூசுதல், பொற்புறுத்தல், மண்ணல், வனைதல், வேய்தல்.
அலங்காரம்-அணி, ஒப்பனை, கட்டழகு, காமர், கை, சிங்காரம், துப்புரவு, பொற்பு.
அலரி-அயமாரம், கணவீரம், கரவீரம், கவிரம்.
அலி-பேடி, பேடு.
அலையல்-அலைதல், அழுங்கல், அஞ்சி, சோம்பு, ஞெகிழ்தல், ஞொள்கல், தளும்பல்.

அல்குல்-அகல், கடிதடம், நிதம்பம், வடிவு.
அவசரம்-உசிதசமயம்.
அவந்திநகர்-உஞ்சை.
அவரை-சிக்கடி, சிம்பை, முதிரை.
அவிட்டநாள்-ஆவணி, காகப்புள், பறவை, புள், வசுநாள்.
அவித்தல்-நறுத்தல், நமிழ்த்தல், நுழாத்தல், கொதுத்தல்.
அவுரி-நீலி.
அவ்விடம்-அங்கு, அங்ஙில், அம்பர், அவண், ஆங்கு, ஆண்டு.
அழகு-அணங்கு, அணி, அந்தம், அபிராமம், அமலம், அம், அம்மை, அலரி, ஆரியம், இராமம், இல்லிதம், இலாவண்ணியம், எழில், ஏர், ஐ, ஒண்மை, ஒப்பு, கவின், கலை, காந்தி, காமர், காரிகை, குழகு, கொம்மை, கோலம், சந்தம், சவி, சாயல், சித்திரம், சீர், சுந்தரம், செவ்வி, செழுமை, சேடு, சொக்கு, சோபம், சௌமியம், தகை, தகைமை, தளிமம், தென், தேசிகம், தையல், தோட்டி, தோல், நலம், நவ்வி, நன்கு, நோக்கம், நோக்கு, பதம், பத்திரம், பந்தம், பந்துரம், பாங்கு, பூ, பை, பொற்பு, பொன், மஞ்சு, மஞ்சுளம், மணி, மதன், மயம், மனோகரம், மனோக்கியம், மாண்பு, மாதர், மாமை, மாழை, முருகு, யாணர், யௌவனம், வகுப்பு, வடிவு, வண்மை, வளம், வனப்பு, வாகு, வாமம், விடங்கம், அன்றியும் பொருளின்பெயர், அலங்காரம், கட்டழகு, காமர், சித்திரம், விசித்திரம்.
அழிஞ்சில்-அங்கோலம், செம்மரம், சேமரம்.
அழித்தல்-அரக்குதல், அரைத்தல், கீழ்தல், சட்டிதல், சிதைத்தல், சிரத்தல், தேய்த்தல், நூறல், விரகு.
அழிவின்மை-கன்னி, குமரி, கோனை, நிறை.
அழிவு-பிலம், சிதலம், சீரணம்.
அழுக்காறு-ஔவியம், கோட்டம், மனக்கோட்டம், மனத்தழுக்கம்.
அழுக்கின்மை-அமலம், நிருமலம், விமலம்.
அழுக்கு-மலம், மாசு.
அழுதல்-அரற்றல், அழுங்கல், இரங்கல், உரோதனம், ஏங்கல், கசிதல், கலங்கல், கலுழ்ச்சி, கலுழ்தல், பொருமல், விம்மல்.
அழுந்தல்-அமுங்கல், அரங்கல், ஒருமுங்கல்.
அழைத்தல்-அகவல், ஆகருடணை, இருத்தல், உளைத்தல், கரைதல், குயிறல், கூவல், கேதல், மாவெனல், வாங்கல், வாவெனல், விளித்தல்.
அளத்தல்-கச்சம், கடன்.
அளபெடை-புலுதம்.
அளவின்மை-அநந்தம், அபரிமிதம், அபாரம், அமானம், அமிதம், எல்லையின்மை.
அளவு-அந்தரம், அவதி, அளவை, காறு, தனை, தாறு, துணை, பிரமாணம், மடங்கு, மட்டு, மாத்திரை, மானம், மிதம், வரை, வரையறை, வல்லி.
அறச்சாலை-அறப்புறம், சாலை, பள்ளி.
அறம்-சுகிர்தம், தருமம், நல்வினை, புண்ணியம், விறு.
அறிவிலான்-அஞர், அஞ்ஞன், ஆதன், இழுதை, ஏழை, குதலை, சிதடன், பேதை, மடன், மண்ணை, முழுமகன், மூடன்.
அறிவின்மை-அசேதனம், அறியாமை, எய்யாமை, சிதடு, பேதைமை, மடமை, மடம், மருட்சி, மாழை, வெண்மை, வெளிறு, வெறிது.
அறிவு-உணர்வு, உண்மை, உரன், உறழ்வு, ஒண்மை, ஓதி, காட்சி, சேதனம், சைதன்னியம், ஞாபகம், ஞானம், துப்பு, தெருட்சி, தெளிவு, புத்தி, புந்தி, புலன், பொறி, போதம், மதி, மேதை, அன்றியும் போறிவு, முகரிமை, முதுக்குறைவு.
அறிவுடையோர்-அறிஞர், ஆய்ந்தோர், ஆரியர், ஆன்றவர், உயர்ந்தோர், உரவோர், உரியோர், உலகம், எழுத்தாளர், கணக்காயர், கலைவல்லோர், கவிஞர், குசலர், கூவலர், சான்றோர், சீரியர், தகுதியோர், நல்லோர், நிபுணர், நூலுணர்ப்போர், நூலோர், மிகவல்லோர், மிக்கோர், மேதாவியர், மேலோர், விபுதர்.
அறுகு-இளம்புல், சட்டம், தூர்வை, பதம்.

அறுகுவெள்ளிகிகலந்தரூ-அச்சுதம்
அறுதல்-அகைத்தல், அரிதல், ஈர்தல், கடிதல், கத்தரித்தல், கொய்தல், சூலல், சேதித்தல், தடிதல், துணித்தல், துண்டித்தல், பகல், பரிதல், விகிவாய்ச்செய்தல்.
அற்பத்தின்பெயர் - சிறுமையைக்காண்க.
அலைந்தன்-சேடன்.
அனிச்சமரம்-அருப்பலம், சுள்ளி, நறவம்.
அனுடநாள்-தாளி, தேள், பனே, புல், பெண்ணே, போந்தை, மித்திரநாள்.
அனுபவித்தல-தினேத்தல், நுகர்தல்.
அனுபோகம்-துப்பு, துவ்வு, நுகர்ச்சி, போகம்.
அன்பு-அளி, ஆணம், ஆர்வம், இட்டம், ஈரம், காமம், நாரம், நார், நேயம், பரிதல், பரிவு, பற்று, பாசம், புரிவு, வாரம், அன்றியும் விடாததொடர்ந்தவன்பு, உழுவல்.
அன்றில்-கிரவுஞ்சம், தரிஞசகம், இதனுண், அகன்றில், இதன்குஞ்சு, பிள்ளே.
அன்னம்-அஞ்சம், உன்னம், எகினம், ஒதிமம், மராளம், வக்கிராங்கம், விகங்கம், இதனுண், சேவல், இனிதாகப்பாடுமன்னம், காதம்பம்.

ஆ

ஆகாயம்-அண்டம், அநந்தம், அந்தரம், அம்பரம், ஆசினி, இடம், உம்பர், உலகம், ககனம், கம், காயம், குடிலம், தலே, சேண், நபம், நாகம், புட்கரம், மங்குல், மாகம், மாதிரம், மீ, மேல், வானம், வான், விசும்பு, விண், விண்டலம், வியோமம், வெளி, வேணி.
ஆக்கம்-நந்தல்.
ஆங்காரம்-அகங்காரம், செருக்கு, தருக்கு.
ஆசிரியப்பா-அகவல்.
ஆசிரியவிருத்தம்-மனவிருத்தம்.
ஆசை - அணங்கு, அருத்தி, அவா, ஆதரம், ஆர்வம், ஆவல், இச்சை, இராகம், எட்டை, காதல், காமம், காமர், நசை, நச்சு, நம்பு, நயப்பு, நாம்பு, பற்று, பிணே, புரி, பெட்பு, மாதர், மோகம், வயாவு, வாஞ்சை, விருப்பு, விரும்பு, விருப்பம், விழைவு, விளரி, விஃவு, வெப்பம், வெம்மை, வேட்கை, வேட்பு.
ஆசைப்பெருக்கம் - அவா, இரதி, இவறல், சவர்தல், காதலித்தல், சார்வு, தாழ்தல், நச்சுதல், நம்பல், நயத்தல், நல்கல், பற்றல், பெட்டல், பேணல், மேவல், விரும்பல், விழைதல், வீழ்தல், வெஃகல், வேட்டல், வேண்டல்.
ஆச்சாமரம்-ஆ, சாலம், சுள்ளி, மராமரம், யாலம்.
ஆடல் - அகவல், அசைதல், ஆலல், குனித்தல், தாண்டல், தூங்கல், நடித்தல், நுடங்கல், பெயர்தல், மாறல், இவற்றுள் வாயார்த்தாடலின் பெயர், ஆவலங்கொட்டல்.
ஆடாதோடை-வாசை.
ஆடிமாதம்-ஆசாடம், சுசி.
ஆடு - அசம், அயம், அருணம், உடு, ஒருவு, துள்ளல், புருவை, வெறி, வெள்ளாடுமுதலியவகைக, தத்தம்வரியிற்காண்க.
ஆட்டுக்குட்டி-குட்டன், சோரன், பறழ், மணங்கு, மறி.
ஆணி-கீலம்.
ஆணே - சத்தியம், சபதம், சூள், தெரிசொல், தேவசாட்சி, பிரமாணம், விரதம், அன்றியு மிடும்பாடையின்பெயர், சபதம், வஞ்சம், வஞ்சனே.
ஆணேயிடல் - தகைதல், தடுத்தல், தட்டல், வடித்தல், வாரித்தல்.
ஆண்குறி-இலிங்கம், கோசம்.
ஆண்மகன் - ஆடு, காளே, குமரன், புமான், புருடன், மகன், மாந்தர், மாண்பர், மைந்தர், அன்றியும், ஆண்மகனுக்குச் சிறந்தபெயர், நம்பி.
ஆதி - அடி, ஆரம்பம், எழுவாய், தலே, தாழ், தொடக்கம், பிராசயம், பூருவம், முதல், முன்னர், மூலம்,
ஆதொண்டை-தொண்டை. [மோனே.
ஆத்தி-ஆரம், ஆர், சலலகி, தாதகி.
ஆந்தை-இருடி, கின்னரம், கூன், பிங்கலே.

ஆபரணக் கடைப்புணர்வு-கயில், மடை.

ஆபரணத்தின்றூக்கணி-தூக்கம், தொங்கல், நிலை, மதலிகை.

ஆபரணமுதலியவைக்கும் விடு-பண்டசாலை.

ஆபரணம் - அணி, அணிகலன், ஆரம், இழை, கலம், கலன், கலை, பணி, பூடணம், பூண், மஞ்சு, மதாணி, வள்ளி, இவற்றுட் பேராபரணத்தின்பெயர், ஆரம், மதாணி, பூணைக்கட்டுமாபரணத்தின்பெயர், ஐம்புரி, தாலி, வயிரம், மணிவடத்தின்பெயர், ஆரம், காழ், சரம், தாமம், மணிக்கோவையின்பெயர், காழ், சவி, அன்றியுங் காதணி முதலியவகை, தத்தம்வரியிற்காண்க.

ஆபரணம் வைக்குஞ் செப்பு- கடிப்பம், கண்டிகை, கரண்டம், கோடிகம், சமானன், பரணி, பிடிகை.

ஆமணக்கு-ஏரண்டம், சித்திரம்.

ஆமை-அண்டசம், அம்பணம், அழுங்கு, உறுப்படக்கி, ஒடுங்கி, கச்சபம், கமடம், கவ்வி, கூர்மம், இதன்பெண், ஓடிலி, துளி.

ஆம்பற்பொது-அல்லி, சயம், நெய்தல், இவற்றுட் செவ்வாம்பல், அரக்காம்பல், செங்குமுதம் செவ்வல்லி, சேதாம்பல், வெள்ளாம்பலின்பெயர், கயிரவம், குமுதம்.

ஆயம்-உல்கு, சாரிகை, சுங்கம்.

ஆயிலியநாள் - அரவுநாள், ஆயில், கௌவை, பாம்பு.

ஆயுதப்பொது - அசி, அரி, அலகு, இரும்பு, எஃகு, ஏதி, கருவி, கழுமுள், காண்டம், காத்திரா, கூர்த்தகை, சுதனம், சேனை, தானை, துப்பு, படைக்கலம், வேல், இவற்றுட் கைவிடுமாயுதப்பொதுப்பெயர், அத்திரம், தூரிபம், கைவிடாவாயுதப்பொதுப்பெயர், சத்திரம்.

ஆயுதவுறை - உறை, கருவிப்புட்டில், தடா, படையுறை.

ஆய்தவெழுத்து-தனிநிலை, முப்புள்ளி

ஆராதனை-அருச்சனை, அர்ச்சனை, பத்தி, பலி, பூசனை, பூசை, வந்தனை, வழிபாடு, வேள்வி.

ஆராய்தல் - ஆய்தல், ஆலோசனை, ஓர்தல், சூழல், சூழ்ச்சி, தூக்கு, தெரிதல், தெளிதல், தேர்தல்.

ஆரன்மீன்-ஆரால்.

ஆலமரம் - ஆலம், ஆல், கான்மரம், கோளி, தொன்மரம், நியக்குரோதம், பழுமரம், பாலி, பூதவம், வடம், இதன்விழுது, வீழ்.

ஆலவட்டம்-உக்கர், காலசம், தாலவிருந்தம், பீலி.

ஆலாங்கட்டி - ஆலி, கரகம், கனோபலம்.

ஆலை-இயந்திரம்.

ஆலோசனை-சூழல், சூழ்ச்சி, தெரிதல், தெளிதல், மந்திரம், விசாரம்.

ஆவணிமாதம்-சிராவணம், நபம்.

ஆழம்-அழுந்து, கம்பீரம், கயம், குட்டம், குண்டு.

ஆறு - உந்தி, ஒலியல், ஓணம், குடிஞை, சிந்து, தடினி, தரங்கிணி, திலா, நிபயதி, நிர்த்திகை, துறை, தளி, நதி, புனல், யாறு, வருபுனல், வேணி, இவற்றுண் மேற்கோடுமாறு, நதம், கிழக்கோடுமாறு, நதி, நிறையாறு, பேராறு, வழாறு, வாரி, புறப்புனல்வரவு, சலியல், நிந்துபுனல், அகாதம், நீத்து.

ஆற்றிடைக்குறை - அரங்கம், இலங்கை, துருத்தி.

ஆனிமாதம்-சுக்கிரம், சேட்டம்.

இ

இகழத்தகுபொருள்-இழிதகவு, இழிவு, தன்மை, பரிபவம்.

இகழ்ச்சி-இகழ்வு, இழிவு, உவர்ப்பு, ஒல்லாமை, நகவு, நகை, நிந்தை.

இகழ்ச்சிக்குறிப்பு-இளி, எல், என், ஏ, சீச்சீ, சையெனல்.

இகழ்ச்சிச்சொல் - அங்கதம், இழிசொல், வசைச்சொல்.

இகழ்தல்-இகழ், எள்கல், எள்ளல், நகுதல்.

இசங்குச்செடி - குண்டலி, முத்தாபலம்.

இசை - கந்தருவம், காந்தாரம், தென், நரம்பு, இவற்றுண் மந்தவிசையின்பெயர், காகுளி, மந்தாரம், சமனிசையின்பெயர், தத்தம், மது

ரம், மத்திமம், உச்சவிசையின்பெயர், தாரம், வல்லிசை.

இசைக்குழல்-ஆம்பல், வங்கியம், வாரி, இவற்றன் மூக்கால்வாசிக்குங் குழல், முரளி.

இசைப்பாட்டு-இசை, இராகம், கந்தருவம், காந்தாரம், காமரம், கானம், கீதம், குழல், கேயம், கோளை, பண், பாட்டு, பாணி, பாண், மணவிழி, வரி, இவற்றுள், வாச்சியத்தோடு பாடுமிசைப்பாட்டு சங்கீதம், பாண்.

இசைப்பு - அத்து, இசை, இயை, உத்தானம், சந்தி, புணர்ச்சி.

இஞ்சி-அல்லம், ஆத்திரதம், மருப்பு, வேர்க்கொம்பு.

இடதுபக்கம்-அபசவ்வியம், இடம், வாமம்.

இடபவிராசி-இடபம், இருல், எருது, ஏறு, குண்டை, சே, நந்தி, நாகு, பசு, பாண்டில், பாறல், புல்லம், பூணி, பெற்றம், மூரி, விடை.

இடம்-அகம், அயல், அரங்கு, இடை, இல், உழி, உறை, உளி, உள, கடை, கண், களம், கால், கீழ், சார், தலம், தலை, தாமம், தானம், திணை, தேம், தேயம், நிலம், பக்கம், பட்டி, பதி, பாங்கர், பாடு, பால், பின், புடை, புலம், புறம், மாடு, முகம், முதல், முன், மேல், வயின், வலம், வழி, வளாகம், வாய், வைப்பு.

இடாகினி-மாயவள், வஞ்சனி, வலவை.

இடி-அசனி, அனலேறு, இகளி, உரும், ஏறு, ஒலி, செல், மடங்கல், வானேறு, விண்ணேறு, வெடி.

இடை-உக்கம், நடு, நுசுப்பு, நுண்ணிடை, மத்திமம், மத்தியம், மருங்கு.

இடைப்பக்கம்-ஒக்கல்.

இடையரூர்-ஆய்ப்பாடி, ஆவிரம், இடைச்சேரி, உவளகம், பல்லி, வல்லியம், வாடை.

இடையர் - முல்லைநிலமாக்களைக் காண்க.

இடையர்வீதி-சிரேணி, சேடி, சேரி, பாடம், பாடி, வாடை, வேணி.

இண்டு - இண்டை, ஈகை, ஈங்கை, ஈண்டு, புலிதொடக்கி.

இத்திமரம்-இரத்தி, இரத்தரி, இறலி.

இந்திரகோபம்-ஈயல், கோபம், மூதா

இந்திராணி - அயிராணி, இந்திரன்மனைவி, சசி, சுந்தரி, புலோமசை.

இந்திராணிகூத்து-கடையம்.

இந்திரியம்-கந்தம், கரணம், பொறி.

இந்துப்பு-சயிந்தவம்.

இப்பொழுது-இன்று, இன்னே.

இமயமலை-இமயம், இமாசலம், பனிமலை, பார்வதிபிறந்தமலை.

இரக்கச்சொல்-அக்கோ, அச்சோ, அத்தோ, அந்தோ, அய்யோ, அன்னோ, ஆ அ, எற்றே, என்னே, ஓஓ.

இரங்குதல்-இளைதல், இனைதல், குனிதல், நைதல், பரிதல்.

இரதம்-சபலம், சூதம், பாதரசம், பாரதம், பேறு.

இரத்தம்-அரத்தம், ஆர்க்கம், உதிரம், எருவை, கறை, கீலாலம், குருதி, சுடுவல், செந்நீர், செம்பால், செம்புனல், சோணிதம், சோரி, தோரை, தோன்றி, நெய், நெய்த்தோர், புண்ணீர், புலாவீர்.

இரத்தல்-இரவு, ஏற்பு, ஏற்றல். குறைகோள், யாசித்தல், வேண்டல்.

இரப்போர் - இரவலர், இரவோர், நீணர், நிரப்போர், பரிசிலாளர், மார்க்கணர், யாசகர், வறிஞர்.

இரப்போர்கலன்-கடிஞை, கப்பரை, பாத்திரம், மண்டை.

இராகு - கரும்பாம்பு, தமம், மதிப்பகை, மதியுணி.

இராக்கதர்-ஆக்கர், இடும்பர், சாலகடங்கர், நிருதர், பிசிதாசனர், யாது, யாதுதானவர், வானோர் மாற்றலர்.

இராசதேவிமனை-அந்தப்புரம், கந்தவாரம்.

இராசமனை-அரமனை, குலம், கோயில், சாலை, நகரம், பவனம், மந்திரம், மாலை, மாளிகை.

இராசா-அண்ணல், அதிபதி, அதிபன், அயன்முளேள்வந்தோன், அரசன், ஆண்டகை, இறை, இறைவன், இனன், ஏந்தல், ஒங்கல், காரணன், காவலன், குரிசில், கோ, கொற்றவன், கோமான், கோன், சக்கிரி, தராபதி, தலைவன், தோன்றல், நர

பதி, நிருபன், பதி, பார்த்திவன், புரவலன், பூபதி, பூபாலன், பெருந்தகை, பெருமகன், பெருமான், பொருநன், மாண்டலிகன், மன், மன்னவன், மன்னன், மீளி, முதல்வன், வாகுசன், வேந்தன், இவர்தன் மற்றொருவரைப் பணியா தலகாள்வோர்பெயர், சக்கரவர்த்தி, சார்வபௌமன், மண்டலேசுவரன், குறுநிலமன்னர்பெயர், அரட்டர், குறும்பர், புரோசர், வேளிர், சாருநவர்பெயர், சருக்குவேந்தர், வேள்புலவரசர்.

இராசிகளின்பொது - இல், ஓரை, பவனம்.

இராத்திரி-அல், அல்கல், அல்லி, இரசனி, இரவு, இரா, எல்லி, எமம், கங்குல், நிராந்தகம், நத்தம், நிசா, நிசி, மாலை, யாமம், யாமினி, விபாவரி.

இருப்புமுள்-தாறு.

இருப்புலக்கை-முசலம்.

இருமல்-ஐ.

இரும்பு-அயி, அயம், அயில், கருங்கொல், கருந்தாது, கரும்பொன்.

இருவாட்சி-அனங்கம், கருமுகை, மயிலை.

இருள் - அந்தகாரம், அந்தரம், அல், கங்குல், கச்சளம், கருவரி, கருள், கார், சருவரி, தமம், திமிரம், துணங்கறல், துவாந்தம், நத்தம், நிசி, நீலம், மங்குல்.

இரேவதிநாள்-இரவிநாள், கடைநாள், கலம், குலம், சூலம், தொழு, தோணி, நாவாய், பஃறி, புருடநாள், பெருநாள்.

இலக்கியப்பொருட் டொடர்நிலைச்செய்யுட்கூறுபாடு-அத்தியாயம், இலம்பகம், காண்டம், சருக்கம், படலம், பரிச்சேதம், இவற்றுள்வேதநூல்விரிக்கும் இலக்கியத்திற்கும், முனிவருரைத்த இலக்கியத்திற்குங் கூறுபாடு, அகத்தியம், தொடுத்தபொருண் முடிக்குங்கூறுபாடு, இலம்பகம், சருக்கம்.

இலக்குமி-அரிப்பிரியை, இக்கம், இந்திரா, இளையாள், கமலை, கோகனகை, சீதேவி, செய்யாள், செல்வி, திரு, திருமகள், நளினி, பதுமை, பார்க்கவி, பாற்கடற்பிறந்தாள், பின்னை, பொருட்செல்வி, பொதி, பொன், மா, முண்டகாசனை, விமலை.

இலக்குமிக்கூத்து-பாவை.

இலந்தை-இரத்தி, குலவலி, குல்லரி, கோலி, கோற்கொடி, பதரி.

இலந்தைக்கனி-குலம், கொன்னடை, கோலம்.

இலவமரம்-சான்மலி, பூரணி, பொங்கர்.

இலவம்பஞ்சு-பூளை.

இலாபம்-அதிகம், ஆக்கம், ஆயம், ஊதியம், சபலம், நந்தல், நயன், பசை, பயம், பயன், பலன், பலித்தல், பேறு, பொலிசை, அன்றியுந்தொழிலிலாபம், உருத்திதம், விருத்தி.

இலுப்பை-இருப்பை, குலிகம், மதூகம்

இலை-அடை, சதம், சதனம், தகடு, தண்ணடை, தமாலம், தலம், தழை, தளம், பத்திரம், பத்திரி, பலாசம், பலாசு, பன்னம், பாசடை, பாசிலை, முறி, அன்றியும், ஏடு, பனைக்கும்பூவிதழுக்குமுரித்து, ஓலை, பனை, தெங்கு, தாழைக்குமுரித்து, மடல், ஈந்தில், கமுகு, தாழை, தெங்கு, பனை, வாழைக்குமுரித்து, அன்றியும், தோடு, தாழை, தெங்கு, பனை, பூவிதழ்க்குமுரித்து.

இலைக்கறி-அடகு.

இவ்விடம்-இங்கு, இம்பர், இவண், ஈங்கு, ஈண்டு.

இழிவு-அவமானம், இழிதகவு, இளிவு, பரிபவம்.

இளமரம்-கன்று, குழவி, பிள்ளை, போதகம், போத்து.

இளமை-இளை, எழில், கயம், கன்னி, குருகு, குருளை, குழவி, குழவு, கொம்மை, கோமளம், சேடு, சேய், தருணம், நவ்வி, நாகு, புருவை, போதகம், மஞ்சு, மண்ணை, மழவு, முருகு, விளரி, விளர், வெண்மை.

இளவேனில்-மது, மாதவம், வசந்தம்.

இளைஞர்-ஆடவர், இளவல், உவா, காளை, குமரன், சேய், மழவு, முருகன், யுவா.

இளைத்தல்-எய்த்தல், கிரிசம், சிக்கல், சிங்கல், ஞொள்கல், தகைதல், தே

ம்பல், தேய்தல், காம்பல், பழங்க
ண், மெலிதல்.

இறகு-இறை,குரல்,கூரல்,கூழை,சத
ம், சதனம், சிறகு, சிறை, செட்
டை, தூவி, தோகை, பக்கம், பத்
திரம், பறை, பிச்சம், பிஞ்சம்,
வாசம்.

இறக்குதல்-அவரோகணம், அவாவுத
ல், இழிதல்.

இருல்-இறவு.

இறகுடை - அம்பி, இடார், இறை
வை,காராம்பி, கிழார்,பிழார், புட்
டில்,பூட்டை, அன்றியு நீரிறைக்கு
மரப்பத்தல், இறைவை.

இறைச்சி-தன்று,மேதை,வள்ளூரம்,
இவற்றுளாவினிறைச்சி, வள்ளூர
ம்,குட்டிறைச்சி,சூபியம், படித்தி
ரம்.

இனிமை-அமிழ்து, ஆறு, இமிழ், இர
தம், இழுமெனல், சாரம், சுவை,
சேறு, தமிழ், தீ, தீம்.

இனியென்பது-ஞாங்கர், புரம், மற்
று, முன், மேல்.

இன்பம்-ஏமம், கடி, களிப்பு, சுகம்,
சேமம், தொய்யல், நகை, நயம், ந
யன், நலன், நன்னிலை, பரிவு, மகி
ழ்ச்சி, அன்றியும்பேரின்பம்,ஆனந்
தம்.

ஈ

ஈகை - அளி, இடுகை, உதவி, உதா
ரம், உபகாரம், கடப்பாடு, கவி
கை, கொடை, தத்தம், தானம், தி
யாகம், பிரதம், புரவு, வண்மை,
வாகை, விதரணம், வேளாண்மை,
வேள்வி,அன்றியும் வரையாக்கொ
டையின்பெயர், கொடைமடம்.

ஈகையாளன் - உபகாரி, கொடையா
ளன், தனதன், தாதா, தியாகி,புர
வலன், வதானியன், வேளாளன்,
வேள்வியாளன், அன்றியும் வரை
யாது கொடுப்போன்பெயர், ஔ
தாரியன், வள்ளல்,வள்ளியோன்.

ஈட்டி-இட்டி, கழுக்கடை, கழுமுள்,
சலாகை, சவளம்.

ஈதல்-அருளல், அளித்தல், இகுத்தல்,
இசைத்தல், இடுதல், உதவல்,கொ
டுத்தல், தருதல், நல்கல், நீட்டல்,
நேர்தல், பகுத்தல், பலித்தல், பு
ரத்தல்,பொழிதல்,வழங்கல், விசல்

ஈயம்-சிருள், தகரம், வங்கம்.

ஈரல்-சுருள், குண்டி.

ஈர்வாள்-அரி, இரம்பம், கரபத்திரம்,
வேதினம்.

ஈழதேசம்-சிங்களம்.

ஈனம்-அடம், இகழ்ச்சி, இதரம்,இழி
வு, இழுக்கு, கீழ், கீழ்மை, குறை
வு, தாழ்வு,நிரப்பு, புன்மை, பொல்
லாங்கு, மறவி.

உ

உக்காரி-அலிகுல்லி.

உகிலமரம்-சிக்கிரி, துரிஞ்சில்.

உச்சாகம்-உள்ளத்தின் மிகுதியைக்
காண்க.

உச்சி-குடுமி, சிக்கம், சுடிகை, சூழி,
நவிரம், நனந்தலை.

உச்சிக்கொண்டை-சூழி, முச்சி.

உடல்-அங்கம், அவயவி, ஆகம், ஆதா
ரம், உடம்பு, உயிர்நிலை, உரு,உரு
ப்பு, கடம், களேபரம், காத்திரம்,
காயம், குரம்பை,சடம், சட்டகம்,
சரீரம், தனு, தாபரம்,துவக்கு,தே
கம், தேயம், படிவம், பிண்டம், பு
கல், புணர்வு, புதை,புரம், புற்கல
ம், பூட்சி, பூதியம், மூர்த்தம், மெ
ய்,யாக்கை,விக்கிரகம், வியம்,அவ்
வுருவத்தின்பெயர், சட்டகம், படி
வம், மேனி, வடிவம்.

உடற்குறை-கவந்தம், மட்டை,முண்
டம், யூபம்.

உடற்றழும்பு-அக்கிதம், சேக்கை, வ
சி, வடு.

உடன்படல்-இசைதல், ஒட்டல், நே
ர்தல், வலித்தல்.

உடன்பிறந்தாள்-சகோதரி, பகினி.

உடுத்தல்-இறுக்கல், ஒற்றல், சுற்றல்.

உடும்பு-அண்டசம், தடி, கோதா, மு
சலி, முசலிகை.

உட்டணம்-அழல், அனலம், உருப்ப
ம், உருமம், கருமம், கோரம், தக
ம், தாபம், வெப்பம், வெம்மை.

உட்டுளை - அரி, குழல், சுகிர், சுரை,
தசிரம், தூம்பு, நாடி, நாழி, நாள
ம், புரை, புழை, வேறு, வேய்.

உணவு-அசனம், ஆகாரம், இரை, உணா, உண்டி, ஊட்டி, ஓதனம், துப்பு,பதம், போசனம், வல்சி, அன்றியும்பேருணவின்பெயர், பிரப்பு, சிற்றுணவின்பெயர், அப்பவர்க்கத்தைக்காண்க.

உண்கலம்-கலம், தட்டம், தளிகை, தாலம், பாசனம், பாத்திரம்.

உண்டல்-புசித்தலைக்காண்க.

உண்டாக்கல்-காண்டல், சிருட்டித்தல், சிருட்டித்தல், தோற்றுவித்தல், நியமித்தல், நிருமித்தல், படைத்தல், பயத்தல், பாரித்தல்,விதித்தல்.

உண்டாதல்-அஞ்சிதம், சாத்தல், நந்தல், படல், பூத்தல், வினைதல்.

உண்ணுறை-அவ்வயம்.

உதடு-இதழ், துடி, பாலிகை, முத்தம், அன்றியுமேலுதடு, ஓட்டம், இழுதடு, அதரம்.

உதாசனம்-இழியாசம்,இலக்கியங்கொட்டல், பிசிதம்.

உத்தரியம்-உத்தராசங்கம் - ஏகாசம், அன்றியு மேற்போர்வை, மீக்கோள்.

உத்திரட்டாதிநாள்-அறிவனாள், நீபம், பிற்கொழுங்கோல், மன்னன், முரசு.

உத்திரநாள்-கடையெழுஞ்சனி, கதிர்நாள், செங்கதிர்நாள், செங்கதிர்பிறந்தநாள், பங்குனி, பாற்குனி, மானேறு.

உத்திராடநாள்-ஆடி, ஆவி, கடைக்குளம், விசுவநாள்.

உபகரணம் - ஆயுதம், ஏது, கரணம், துணைக்காரணம், துப்பு.

உபகாரம் - நலம், நன்மை, வேளாண்மை.

உபசாரம்-சன்மானம்,நயம்,முகமன்

உபாத்தியாயன்-அய்யன், ஆசான்,ஆசாரியன், ஆசிரியன், தீர்த்தன்,தேசிகன், பணிக்கன்.

உபாயம்-யோகம்.

உப்பமைப்போர் - அளவர், உவணர், கழியர். [யர்.

உப்பமைப்போர்பெண்கள் - அளத்தி

உப்பளம் - அளக்கர், அளம், இருணம், உவர்க்களம், உவர்த்தரை, உவளகம், கழி.

உயர்ச்சி-உயப்பு, உச்சம், உத்தரம், உத்துங்கம், உந்தி, உந்துதல், உம்பர், உரை, உவணம், உவப்பு. உறை, உன்னதம், ஊக்கம்,எழுமை, ஏந்தல், ஒக்கம், ஒழுகல், ஒழுக்கம், ஓங்கல்,சிகரம், சேண், துங்கம், நிமிர்தல், நிவப்பு, நிவர்தல், நீள், பிறங்கல், புங்கம், புரை, பொங்கல், மிசை, மீ, மேக்கு, மேடு, மோடு, யோகம், வார்தல்.

உயிர்-அறு, ஆதன், ஆவி, ஆன்மா, இயமானன், உறவி, கூத்தன், சிவன், செந்து, சேதனன், பசு, பிராணன், புற்கலன், பூதம்.

உயிர்ப்பு-ஆவி, கொறுக்கை, சுவாசம், தும்மல், மூச்சு.

உயிர்வாழ்தல்-உய்தல், உய்தி, சீவனம், வாழ்தல். [ட்டை.

உரல் - உலூகலம், எருந்து, கறை, தி

உராய்தல்-உரிஞ்சல், உரோசல்.

உரித்து - சூட்டி, ஆவணம், காணி, கெழுதகைமை, தகவு, தகுதி, தாயம், பாங்கு, பால்.

உரிமை-ஆட்சி, இதம், உரித்து, ஒற்றுமை, காணி, கிழமை, குறிக்கோள், கெழுதகைமை, தகவு, தகுதி, பாங்கு, பால்.

உரிமையின்மை-அதிகம்.

உரியோர்-கிழவர்.

உருக்கு-எஃகு.

உரை - அத்தம், அருத்தம், சொற்பயன், பதம், பாழி, அதுநால்வகையாம். அகலவுரை, கருத்துரை, பதவுரை, பொழிப்புரை.

உரைகல்-கட்டளை, கட்டளைக்கல்.

உரைதல்-உராஞ்சல், உராய்தல், உராய்போதல், உரிஞ்சல், உரைசல், உரோசல், தேய்தல்.

உரைத்தல்-தேய்த்தல்.

உரையுரைத்தல்-பயனுரைத்தல், மெய்யுரைத்தல், பிரித்துரைத்தல், அன்றியும் பதவுரை யுரைத்தலின்பெயர், கண்ணழித்தல், பொழிப்புத்திரட்டல், பொழிப்புரைத்தல்.

உரோகணிநாள்-அயநாள், உருளி, உருள், உரோணி, ஊற்றால், சகடம், சகடு, சதி, தேர், பண்டி, பார், விமானம், வையம்.

உலகின்பொது-நலம், நாடு, புலனம், பொழில்.
உலக்கை-உரோங்கல், தடி, முசலம்
உலக்கைப்பாட்டு-வள்ளை.
உலாப்போதல்-சாரி, பவனி.
உலாவல்-அசைதல், இயங்கல், திரிதல், வழங்கல்.
உலைமூக்கு-குருகு, கொலை.
உலையாணிக்கோல்-சுட்டுக்கோல்.
உலோபன்-கிருபணன், பிசுனன்.
உல்லாசம்-அந்தவாளம், விகாசம், மீக்கோள், மேற்போர்வை, வடகம்.
உவகை-ஓகை, பிரியம், பிரீதி, மாராயம், மூத்தம், மோதம்.
உவமை - இகல், இணை, ஈடு, உவமம், உறழ்வு, எதிர், ஒப்பு, கட்டளை, இடை, சங்காசம், சத்திரிசம், சமம், சமானம், சன்னிபம், சாயல், துணை, துல்லியம், நிகர், நிகாசம், நிபம், நேர், புரை, பொருவு, பொருவுதல்,போல்,மலை, மானம்,மான்.
உவமையின்மை-அசமானம், அதுலம், தனிமை.
உவமையுருபு - அற்று, அனைய, அன்ன, ஆங்கு, இகல், இயைய, இன்ன, உறழ, என்ன, எய்ப்ப, ஒப்ப, கடுப்ப, கதழ்வு, சேழ், சன்னிபம், சேத்த, நூக்கு, நிகர, நேர, புரைய, பொருவ, போல, மான.
உவர்த்தரை-இருணம், கழிநிலம்.
உவர்த்தல்-இலவணம், உப்பு, பௌவம்.
உவர்நீர்-உரவுநீர், உறை.
உவ்விடம்-உம்பர், உவணை.
உழுந்து-மாடம்.
உழுபடைச்சால்-சிகை.
உளி-இடங்கம், கணிச்சி.
உழு-உசு.
உள்-அகடு, அகணி, அகம்.
உள்ளங்கை-அகங்கை, அங்கை, குடங்கை.
உள்ளமிகுதி-ஆட்சி, ஆண்மை, ஆள்வினை, உத்தியோகம, உரம், உரன், உற்சாகம், ஊக்கம், சால்பு, சான்றாண்மை, தாளாண்மை,யோகம்.
உள்ளான்-உள்ளல்.

உறவு - இருளை, இனம், உறவி, ஒக்கல், கடும்பு, சுயினை, கிளை,குடும்பம், கூளி, கேண்மை, கேள், சுற்றம், தொடர்பு, நட்பு, நண்பு, நள்ளி, பந்தம், பரிசனம், பாசனம்.
உறவோர்-அடைந்தோர், இருளை, இனத்தார், உரியோர், உற்றார், கிளைஞர், சார்ந்தோர், செறிந்தோர், சுற்றத்தார், சூழ்ந்தோர், தக்கார், தமர், நட்டோர், நள்ளியர், பரிசனம் பற்றினர், மேலினர், அன்றியுந்தந்தைவழிச்சுற்றம், தாயம், இவ்வழி யுறவோர், ஞாதிகள், தாயத்தார், தாயாதிகள்,குடியிலிறந்தோர்பெயர், தென்புலத்தார், பிதுர்க்கள்.
உறி-சிக்கம், சிதர், சிமிலி, தூக்கு.
உறுதிச்சொல்-இடி, இடித்தல், சழறல், நெருங்கல்.
உறுதிப்படுத்தல்-தெருட்டல், வருட்டல், வற்புறுத்தல்.
உறுப்பு-அங்கம், அவயவம், காத்திரம், கிணை.
உறைகாரர்-காரோடர், மூச்சியர்.
உறையூர்-கோழி.

ஊ

ஊக்கம்-உள்ளமிகுதியைக்காண்க.
ஊசி-சூசி.
ஊசித்துளை-பாசம்.
ஊஞ்சல்-ஊசல்.
ஊதுகொம்பு-ஆம்பல், இரலை, கொம்பு, கோடு, வயிர்.
ஊமத்தை-உன்மத்தம், மத்தம்.
ஊமை - ஊமன், குணி, மூகன், மூகை, மூங்கை.
ஊர் - அகலுள், அருப்பம், இருக்கை, உறையுள், எயில், ஒக்கம், காடு, காண்டகம், குடம், குடி, குடிக்காடு, குப்பம், சும்மை, சேரி, நத்தம், நிவேசனம், பக்கணம், பட்டணம்,பதி, பாக்கம், பாடி, பாழி, புரி, பூக்கம், பூண்டி, பூரியம், பேடு, முட்டம், மேடு, வாசம், வாழ்க்கை,வேலி, வைப்பு, அன்றியும் சிற்றூரின் பெயர், நொச்சி, பட்டி, பட்டு, பள்ளி, இராசதானியின் பெயர், நகரம், புரம், புரி, நூறுகுடியூரின்பெய

ர், கிராமம், ஐந்நூறுகுடியூரின்பெயர், பெருங்கிராமம், ஐந்நூறுகிராமங்கட்குத் தலைக்கிராமத்தின்பெயர், மடப்பம், மலைகள்செறிந்தவூரின்பெயர், கேடகம், மலையும்யாறுஞ்சூழ்ந்தவூரின்பெயர், கர்வடம், மலைமேலேற்றியவூரின்பெயர், சம்வாகம், பகைமேற்சென்றோருறைவிடத்தின்பெயர், பாசறை, பாடிவீடு, முனைப்பதி, அன்றியும் பகைவரூர், பாழி, அன்றியுங் குறிஞ்சிமுதலைந்திணையூரின்பெயர், தத்தம்வரியிற் காண்க.

ஊர்க்குருவி - கடலகம், கலிக்கம், கல்லி, குலிங்கம், சகடம், சடகம், புலிங்கம்.

ஊற்று-உறவி, ஊறல்.

ஊற்றுநீர்-ஊறுநீர்.

ஊன்-ஊத்தை, ஊழ்த்தல், தசை, தடி, ஊவு, பிசிதம், புண், புரணி புலவு, புலால், புளிதம், வள்ளூரம், விடக்கு.

ஊன்விற்போர்-குனர்.

ஊன்றுகோல்-ஊற்றுக்கோல், தண்டம்.

எ

எச்சில்-உச்சிட்டம், எச்சம், சேடம், மிச்சில்.

எட்டிமரம்-காளம், காஞ்சிரம், கோடரம், மருகம், முட்டி.

எண்காற்புள்-சம்பரம், சரபம், சிம்புள், துரோணம், பெரும்பறை, வருடை, வாருண்டகம்.

எண்கூட்டிப்பெருக்கல் - உறழல், அன்றியும், ஒற்றைப்படவெண்ணல், ஒன்றித்தல், இரட்டைப்படவெண்ணல், இரட்டித்தல்.

எண்ணிக்கை-அலகு, எண், கணக்கு, கணிதம், கரணம்.

எண்ணிக்கையின்மை-அகணிதம், இலக்கின்மை, கணக்கின்மை.

எண்வகுப்பு-ஒன்றுமுதல் முப்பத்தாறுதானம் வருமாறு, அஃது,
க, ஒன்று, ஏகம், இரண்டு, உபயம், துவந்துவம், துவி, மிதுனம், யுகம், யுகளம், யுகளி, மூன்று, திரி, நான்கு, சதுர், ஐந்து, பஞ்சம், ஆறு, சடு, ஏழு, சத்தம், எட்டு, அட்டம், ஒன்பது, ஒன்பான், தொண்டு, நவம். உ, தசம், பத்து, ங, சதம், நூறு, ச, சகத்திரம், ஆயிரம், ரு, ஆயுதம், பதினாயிரம், சு, நியுதம், இலட்சம், நூறாயிரம், எ, பிரயுதம், பத்திலட்சம், அ, கோடி, நூறிலட்சம், கூ, தசகோடி, பத்துக்கோடி, க0, சதகோடி, நூறுகோடி, கக, அர்ப்புதம், ஆயிரங்கோடி, கஉ, நியர்ப்புதம், பதினாயிரங்கோடி, கங, கர்வம், இலட்சங்கோடி, கச, மகாகர்வம், பத்திலட்சங்கோடி, கரு பதுமம், கோடாகோடி, கசு, மகாபதுமம், பத்துக் கோடாகோடி, கஎ, சங்கம், நூறு கோடாகோடி, கஅ, மகா சங்கம், ஆயிரங் கோடா கோடி, ககூ, கோணி, பதினாயிரங் கோடாகோடி, உ0, மகாகோணி, இலட்சங் கோடாகோடி, உக, கிதி, பத்திலட்சங் கோடாகோடி, உஉ, மகாகிதி, கோடி கோடாகோடி, உங, சோபம், பத்துக்கோடி,கோடாகோடி, உச, மகாசோபம், நூறுகோடி, கோடாகோடி, உரு, பரார்த்தம் ஆயிரங்கோடி கோடாகோடி, உசு சாகரம், பதினாயிரங் கோடி கோடாகோடி, உஎ, பரதம், இலட்சங்கோடி கோடா கோடி, உஅ, அசிந்தியம், பத்திலட்சங் கோடி கோடா கோடி, உகூ, அத்தியந்தம், கோடிகோடி கோடாகோடி, ங0, அனந்தம், பத்துக்கோடி கோடி கோடாகோடி, ஙக, பூரி, நூறு கோடிகோடி கோடாகோடி, ஙஉ, மகாபூரி, ஆயிரங் கோடி கோடி கோடாகோடி, ஙங, அப்பிரமேயம், பதினாயிரங் கோடிகோடி கோடாகோடி, ஙச, அதுலம், இலட்சங் கோடிகோடி, கோடாகோடி, ஙரு, அகம்மியம், பத்திலட்சங் கோடிகோடி கோடாகோடி, ஙசு அவ்வியத்தம், கோடி கோடி கோடி கோடாகோடி.

எதிர்த்தல் - எதிருன்றல், எதிர்தல், ஏற்றல், கிடைத்தல், கிட்டல், த

லைப்படல், தாக்கல், நேர்தல், மலை தல், முடுகல், முட்டுதல்.
எதிர்மொழி-உத்தரம், விடை.
எப்பொருட்கு மிறையோன் - அதிப ன், அரசன், ஆதி, ஆதிபன், ஈசன், காந்தன், கொழுநன, கோன், செ ம்மல், நாதன், நாயகன், பதி, பிரா ன், மன்னன்.
எப்போழ்தும் - உவிர்தம், அனவர தம், அனுரதம், என்றும், சததம், சதா, சந்ததம், சர்வதா, நித்தம், நிர ந்தரம்.
எருக்கு - அருக்கம், அருச்சுனம், அ ர்க்கம்.
எருது - இடபம், இருல், ஏறு, குண் டை, கூளி, கொட்டியம், கோ, சே, நந்தி, நூபம், பகடு, பசு, பா ண்டில், பாறல், புல்லம், பூணி, பெ ற்றம், போத்து, மூரி, விடபம், வி டை, அன்றியும், பொதியெருதின் பெயர், தூரியம், தூர்வகம், பகடு, பாறல், பொல்யெருது, கூளி.
எருத்தின்திமில்-அக்கு, இமில், முரி ப்பு.
எருமை-கவரி, காரா, காரான், சயிபி பம், தேனு, மயிடம், மூரி, மேதி, வடவை, இதன்பெண், ஆ, நாகு, இதன்பிள்ளை, கன்று, குழவி, இத ன்மடி, செருத்தல், இதன்மலடு, மைமை.
எருமைக்கடா - உம்பல், ஏறு, ஒருத் தல், பகடு, போத்து.
எலி-ஆகு, களிமம், சிகரி.
எலுமிச்சை-அருணம், இலிகுசம், ச தாபலம், சம்பீரம், முருக்கு.
எலும்பு-அக்கு, அங்கம், அத்தி, என் பு, களேபரம், அன்றியும் தசைகழி ந்த முதுகெலும்பின்பெயர், கங்கா ளம், நெட்டை, முழுவெலும்பு.
எல்லாம்-அகண்டம், அகிலம், அடங் கல், அடையல், அடைவு, அனைத் தும், எவையும், ஒருங்கு, சகலம், ச மத்தம், சமம், சர்வம், நிகிலம், பூ ரணம், முடியல், முழுதும், முற்ற, முற்றும், யாவும்.
எல்லை-அவதி, அளவை, ஏணி, கரை, காடு, கொத்தம், பரியந்தம், வரப்பு, வரம்பு, வரைவு.
எவ்விடம்-எங்கு, எம்பர், எவண், யா ங்கு, யாண்டு, யாண்டை.
எழுச்சி-அசைத்தல், இவர்தல், உம்ப ல், உருமல், எர்பு, ஒழுங்கல், ஓங் கல், சனுறல், கதித்தல், கலித்தல், நேர்பு, பம்பல், பாச்சல், பொலித ல், மறல்.
எழுதல் - கிறுக்கல், கீறல், தீட்டல், தெரித்தல், பொறித்தல், வரிதல், வ ரைதல்.
எழுதுகோல்-கோல், துகிலிகை, தூரி யம்.
எழுதுவோன்-இலேககன்.
எழுத்தாணி-ஆணி, இலேகினி, ஊசி ஒலைதீட்டும்படை, கண்டம்.
எழுத்து-அக்கரம், அட்சரம், இரே கை, இலேகை, பொறி, வரி.
எழுப்பல்-எடுப்பல், எற்றல், கிளப்பல்.
எளிமை-எண், எண்மை, தஞ்சம்.
எள்-எண், திலம், நூவு, வெள்ளெள் ளின்பெயர், குமிகை, இளங்காயின் பெயர், கவ்வை.
எறிதல்-இடுதல், எற்றல், ஒச்சல், செ லவிடல், விடுதல், விலகல், வீசுதல்.
எறியாயுதம்-எஃகம், தோமரம், பிண் டிபாலம், பீலித்தண்டு.
எறும்பு - உறவி, பிபீலிகை, பிலஞ்சு லோபம், இதன்பேதம், சுகை.

ஏ

ஏணி-இறைவை, கடலவ, சேணி, அன் றியுங்கண்ணேணி, மால்பு.
ஏலம்-ஆஞ்சி, இலாஞ்சி, துடி.
ஏவல்-ஆணை, பணி, பரிசாரம், வியங் கோள்.
ஏவல்செய்வோர்-உழையோர், கிங்கர ர், சிலதர், சிலதியர், சேடர், சேடி யர், பரிசனம், பரிசாரகர்.
ஏவுவான்-வியவன்.
ஏறுதல்-ஆரோகணம், இவர்தல், உந் துதல், ஊக்கல், எக்கல், எஃகல், மீ க்கோள்.
ஏற்றமரம்-பூட்டை.

ஐ

ஐப்பசிமாதம்-ஆசுவினம், ஆச்விசம்.
ஐம்பொறிநுகர்ச்சி-துப்புரவு, துவ்வு.

ஐயனார்-அரிகரபுத்திரன், அறத்தைக் காப்போன், ஆரியன், ஐயன், கருங்கடல்வண்ணன், காரி, கோழிக்கொடியோன், சாதவாகனன், சாத்தன், செண்டாயுதன், புட்கலைமணாளன், புறத்தவன், பூரணைக் கேள்வன், யோகி, வெள்ளையானையூர்தி.

ஐவகைலோகத்தின்பொது - பொன், இவற்றின்கட்டி, தகலம், மாழை, வங்காரம்.

ஒ

ஒடிதல் – இடிதல், இறுதல, ஒசிதல், நெரிமிர்தல், பரிதல், முரிதல், முறிதல்.

ஒடுங்கல்-கூம்பல், சாம்பல்.

ஒட்டகம் - அத்திரி, இரவணம், ஒட்டை, கனகதம், தாசேரகம், நெடுங்கழுத்தன், இதன்பெண், பிடி, பெட்டை, இதன்குட்டி, கன்று, குழவி.

ஒதுக்கிடம்-குச்சில்.

ஒதுங்கல்-ஒசிங்கல்.

ஒலி-அதிர்தல், அமலை, அரவம், ஆகுலம, ஆம்பி, ஆரவாரம், ஆர்ப்பு, ஆர்வம், இசை, இடி, இமிழ், இயம், இரக்கம, இரட்டு, இரை, உரை, ஓசை, ஓதை, ஓலை, கம்பலை, கலி, கவ்வை, கனன், குரல், குரை, குளிறு, கோடணை, சிலை, சும்மை, சுருதி, துமிர், துவை, தெளிர், துழனி, தொனி, நாதம், நிநாதம், பாணி, பிளிறு, புலம்பு, முழக்கம, வகுளி, வருளி, அன்றியும், பறவையாலெழுமொலியின்பெயர், கலகலம், துழனி, பயிர், விலங்கினாலெழுமொலியின் பெயர், கோலாகலம், அசையுஞ்சிலையாறு மிலையாலெழுமொலியின் பெயர், மருமராஞ்சம, அசையுமாபரணத்தாலெழுமொலியின்பெயர், சிஞ்சிதம், அன்றியும்பேரொலியைக் காண்க.

ஒலிக்குறிப்பு-அனுகரணவோசை, அவையாவன, அம்மெனல், இம்மெனல், இழுமெனல், ஒய்யெனல், ஒல்லெனல், கல்லெனல், கொம்மெனல், கொல்லெனல், கோவெனல், சடேலெனல், ஞொள்ளெனல், தடுமெனல், நெரேலெனல், பொம்மெனல், பொள்ளெனல், மூசெனல், வல்லெனல், வடேலெனல், அன்றியுமிரட்டைச்சொலியின் பெயர், உபயவோசை, அக்குறிப்புச்சொல்லாவன-கடகடெனல், கலகலெனல், களகளெனல், குளுகுளெனல், சடசடெனல், சரசரெனல், சலசலெனல், சளசளெனல், திடுதிடெனல், நெடநெடெனல், நெறநெறெனல், பகபகெனல், படபடெனல், பதபதெனல், மடமடெனல், மளமளெனல், முசமுசெனல், முடமுடெனல்.

ஒலித்தலிருட் பேசலாலெழுமொலி-இரத்துதல், உழைத்தல், கரைத்தல், கல்லல், கவலல், குமுறல், குருமித்தல், குளிறல், சிரத்துதல், தெளிர்தல், நரலல், நெளிர்தல், பயிர்த்தல், பயிறல், பிதற்றல், பிளிறல், மருளல், மிழற்றல், முக்கல், முரலல்.

ஒலித்தல்-அரற்றல், அரிம்பல், அலறல், அழுங்கல், ஆர்த்தல், ஆலல், இசைத்தல், இடித்தல், இயிர்தல், இமிழ்த்தல், இயம்பல், இரங்கல், இரட்டல், இரைத்தல், இனைத்தல், உரற்றல், உரைத்தல், உலம்பல், உழம்பல், உளைத்தல், ஏங்கல், கதித்தல், கரைதல், கலித்தல், கறங்கல், கனைத்தல், குமுறல், குரைத்தல், குளிறல், சலித்தல், சிலைத்தல், சிம்பல், சிரத்துதல், சிலம்பல், சிலும்பல், சிலைத்தல், ஞெள்ளல், தழங்கல், துவைத்தல், தெவிட்டல், தெழித்தல், தொனித்தல், நரலல், நரற்றல், பயிறல், பிளிறல், பிறங்கல், புலம்பல், முரலல், முரற்றல், முழங்கல், விம்மல்.

ஒழிதல்-ஒய்தல், ஒவல்.

ஒழுக்கமின்மை-கையறல், கையறை.

ஒழுக்கம்-ஆசாரம், இயல்பு, கை, கையாறு, சரிதை, சரித்திரம், சாரித்திரம், செயல், செய்கை, செய்தி, திணை, நசை, நடை, நன்னிலை, பத்தி, முறை, வாகை, அன்றியுநல்லொழுக்கம், சீலம், ஞானம், விருத்தி, ஒழியாவொழுக்கத்தின்பெயர், கைதூவாமை, கையொழியாமை.

ஒழுங்கு-அணி, ஆவலி, ஆளி, இராசி, ஒளி, கோவை சிரேணி, தாமம், தாரை, நிரல், நிரை, பந்தி, மாலை, வீழ்.
ஒளி-அரி, ஆதபம், இலக்கம், எல், கடி, கதிர், கரம், காந்தி, காவல், கிரணம், கேழ், சவி, சுடர், செடி, சோதி, தாமம், துளி, துளக்கம், தேசிகம், தேசு, நகை, நிலவு, நிழல், நிறம், நிமம், மின், வாமம், வாள், விரியல், வில், வெயில், மிகுமொழி, சுப்பிரம்.
ஒளிசெய்தல் - அலங்கல், அவிர்தல், இமைத்தல், இலகுதல், இலங்குதல், ஒடித்தல், ஒளிர்தல், சுடர்தல், தயங்கல், திகழ்தல், துலங்கல், துளங்கல், நகுதல், நிகழ்தல், நிலவல், பிறழ்தல், மிளிர்தல், மின்னல், வயங்கல், விரிதல், விளங்கல்.
ஒளித்தல்-கரத்தல், கரப்பு, கரவு, குவிதல், மறைதல்.
ஒளிமழுங்கல் - அழுங்கல், புல்லெனல், மட்கல், மழுங்கல்.
ஒற்றுமை-ஒருவந்தம், ஒருமை, குறிக்கோள், தோட்டிமை.
ஒற்றெழுத்து-உடம்பு, உடல், புள்ளி, மெய், வியஞ்சனம், விராமம்.

ஓ

ஓடம்-அம்பி, பகடு, பஃறி.
ஓடல்-இரிதல், நிமிர்தல், நீளல், நெரிதரல், பாறல், அன்றியுநேரோடல், ஆதி, தாரை, வீதி, வட்டமாயோடலின்பெயர், சாரிகை, சுற்றல், மாதி, வாளி.
ஓடைமரம்-உலவை-
ஓட்டல்-செலுத்தலின் பெயரைக்காண்க.
ஓணான்-அண்டசம், ஓதி, ஓந்தி, ஓமான், சரடம், சாயானதம், தண்டு, முசலி:
ஓத்துரைப்போர்-கணக்காயர்.
ஓமகுண்டம்-தடம், நித்தியவிதி, வேதி, வேள்வி, வேள்விக்குண்டம்.
ஓமமண்டபம்-சமித்தம்.
ஓமவிறகு-சமிதை, முளரி.
உயிர்வரித்தொகுதிமுற்றிற்று.

க

கக்கரி-வாலுங்கி.
கங்கணம்-தொடி.
கங்கை-சாளவி, சுரநதி, திரிபதகை, பாகீரதி, மந்தாகினி, வாநதி.
கசப்பு-கடு, கைக்கை, கைத்தல்.
கைப்பு-திக்தம்.
கச்சு-பட்டிகை, வம்பு, வார், விசிகை
கஞ்சா-கஞ்சம், குல்லை.
கஞ்சி-காடி, குழம்பு, பாகு, பாத்து, மோழைவர்க்கு.
கடகம் - கங்கணம், கண்டிகை, கைவளை.
கடத்தல்-அகறல், இகத்தல், உகளுதல், கழிதல், குதித்தல், குப்புறல், தாண்டல், தாவுதல், நீடுதல், நீந்தல், வாவுதல்.
கடமையின்குட்டி-கன்று, குழவி.
கடம்பு-அரசதம், இந்தளம், கதம்பம், நிபம், விசாலம், அன்றியுநிலக்கடம்பு, கோகனம், வெண்கடம்பு, மரா, மராமரம்.
கடலை-சூரம், மஞ்சூரம்.
கடல்-அத்தி, அப்பு, அம்பரம், அம்புராசி, அம்போதி, அரி, அருணவம், அலை, அளக்கர், ஆர்கலி, ஊழி, உததி, உந்தி, உப்பு, உவரி, உவர், ஓதம், கலி, கார்கோள், குரவை, சக்கரம், சமுத்திரம், சலதி, சலநிதி, சலராசி, சாகரம், சிந்து, தெண்டிரை, நதிபதி, நரலை, நீராழி, நேமி, பயோததி, பரப்பு, பரவை, பாராவாரம், புணரி, பெருநீர், பௌவம், மகராலயம், மகோததி, முந்நீர், வாரம், வாரணம், வாரி, வாரிதி, வாருணம், வீரை, வெள்ளம், வேலாவலயம், வேலை.
கடவுமரம்-கடவை, கவரிறுக்கு, நட்வை, மடவை.
கடவுள்-அகண்டாகண்டன், அகநிலை, அகாரி, அசலன், அச்சயன், அச்சுதன், அடிகள், அதிகுணன், அதுலன், அத்தன், அநாதி, அபயன், அமலன், அருட்குடையோன், அருளாழிவேந்தன், அரூபி, அறக்கொடியோன், அறவாழிமன்னன், அ

அருவன், அனகன், அனந்தஞானி, அனந்தலோசனன், அனந்தன், அநாதி, ஆதி, ஆதிபுங்கவன், இறையோன், ஈசன், ஈச்சுரன், ஈறிலி, உள்வழிகடந்தோன், உள்ளத்துறைவோன், எண்குணன், ஏகதேவன், ஏகன், ஐ, ஐம்புலத்தடங்கான், கருணாலயன், கருத்தா, குணநிதி, குணபத்திரன், சகநாதன், சகலவியாபி, சச்சிதானந்தன், சதானந்தன், சயம்பு, சருவேச்சுரன், சாமி, சிபதி, சோதி, தற்பரன், தனிக்கோலான், தாபரன், தேவன், தேவாதி, நாயகன், நிதானன், நித்தன், நிமலன், நிரஞ்சனன், நிரந்தரன், நிரம்பரன், நிராமயன், நிருநாமன், நிருமலன், நிருபன், நிதிபரன், பகவன், பகாப்பொருள், பரஞ்சோதி, பரதுக்கதுக்கன், பரப்பிரமம், பரமம், பரமேச்சுரன், பரம், பராபரம், பிதா, பிரமம், பிரான், பிறப்பிறப்பில்லான், புங்கவன், பூரணன், மயேச்சுரன், மாசேனன், முக்குற்றங்கடிந்தோன், முதலோன், முத்தொழிற்பகவன், முழுதொருங்குணர்ந்தோன், முன்னூற்கேள்வன், முன்னோன், மூவுலகாதாரன், மூவுலகாளி, மூவுலகேந்தி, விதித்தான், விமலன், வினைவிநாசன், வேதன், வேதா, வேதாந்தன், வேதார்த்தன்.

கடற்கரை-பாராவாரம், வேலை.

கடற்றிரை-அலை, அறல், ஓதம், சீகரம், தரங்கம், புனரி, அன்றியும்பெருந்திரையின்பெயர், உல்லோலம், கல்லோலம்.

கடன்-இருணம், இறை.

கடாரமெல்லூர்-சாழகம்.

கடுகு-ஐயவி, கடிப்பகை, வெண்கடுகு, சித்தார்த்தம்.

கடுக்காய்மரம்-அரிதகி, கடு, பத்தியம்.

கடை-அந்தம், இறுதி, ஈறு, எல்லை, முடிதல், முடிவு, முற்றும், வாயில்.

கடைக்கண்பார்வை-அபாங்கம், சிறக்கணிப்பு.

கடைக்கொள்ளி - இராதம், உற்கை, ஞெகிழி, முளரி.

கடைதல்-கயர்தல், குடைதல், ஞெலிதல், திருவல், மதனம், மதித்தல்.

கடைவீதி-அங்காடி, ஆபணம், ஆவணம், ஆவணியம், கூலம், நியமம், பீடிகை, விபணி.

கட்டல்-அசைத்தல், ஆர்த்தல், இசைத்தல், இமிழ்த்தல், சிமிழ்த்தல், சுருக்கல், ஆவக்கல், தொடர்தல், தொடுத்தல், பிணித்தல், பிணைத்தல், யாத்தல், யாப்புறல், வலித்தல், விசித்தல், வீக்குதல்.

கட்டில்-அங்கம், அரி, பரியங்கம், பாண்டியல், பாரி, மஞ்சம், மஞ்சு.

கட்டிளமையோன் - காளை, குமரன், சேடன், மடவன், முருகன்.

கட்டு-ஆர்ப்பு, பந்தம், பிணி, புரி, யாக்கை.

கட்டுத்தறி - ஆளானம், கந்து, தறி, வெளில், அன்றியுங்குறுந்தறி, போதிகை.

கணக்கர்-காவிதியர்.

கணைக்கால்-சங்கம், சங்கு.

கண்-அக்கம், அக்கி, அம்பகம், உலோசனம், குவளை, கோ, சக்கு, தாரை, திட்டி, திருக்கு, திருட்டி, நயனம், நாட்டம், நேத்திரம், நோக்கம், நோக்கு, பார்வை, விலோசனம், விழி.

கண்குத்திப்பாம்பு, மாலுதானம், உதாசனன்.

கண்டசருக்கரை - அயிரம், கண்டம், பாளிதம், புல்லகண்டம்.

கண்ணாடி-ஆத்தம், ஆடி, ஆதரிசனம், உருவங்காட்டி, ஒளிவட்டம், கஞ்சனம், கஞ்சனை, சுதரிசனம், தருப்பணம், படிமக்கலம், பளிங்கு, புளகம், முகுரம்.

கண்ணிமை-இதழ், இமை, ஏடு, நிமை, விளிம்பு.

கண்ணிலிடுமை-அஞ்சனம், கச்சளம்

கண்ணோட்டம்-எணிலைமையுடைமை, கண்மை, கேண்மை, நயப்புணர்வு, நலம், நாகரிகம்.

கண்மணி-தாரை.

கண்வரி-அரி, அலரி.

கதவு-கபாடம், அகாம், கதவம், கவாடம், காப்பு, தோட்டி, புதவு, வாரி.

கதிர்-அலகு, ஈனல், எனல், குரல்.

கதிர்த்தொகுதி-கற்றை.
கதுப்பு-அறு, கபோலம், கவுள், கன்னம், கொடிறு.
கதை-காரணச்சொல்.
கத்தரிச்செடி-பிரகதி, வங்கம், வழுதலை, வழுதுணை.
கத்தரித்தல்-கொய்தல்.
கத்தூரி-மான்மதம்.
கத்தூரிமிருகம் - இரம்பம், காசறை, துருக்கம், நாரசம், நாவி, நான்மா, நானம், மறுவல், மறுவி, மான்மதம், மிருகமதம்.
கந்திருவர் - காந்தருவர், கின்னரர், தந்திரர், யாழ்வல்லோர், வீணைவல்லோர்.
கபிலநிறம்-குரால், புகர், புற்கு.
கமண்டலம்-கரகம், சரண்டம், காண்டம், குண்டிகை.
கமர்-கது, நிலப்பிளப்பு, விடப்பு, விடம்பு, விடர், விடவு, விளவு.
கமுகு-கந்தி, பூகம், பூக்கம், இதளேலை, கூந்தல், மடல்.
கம்பளி-கம்பலம், கம்பளம், சிம்புளி.
கம்மாளர்-அக்கசாலையர், அறிவர், அற்புதர், ஒவர், கன்னாளர், கன்வினைஞர், கம்மியர், கொல்லர், சிற்பியர், தபதியர், துவட்டர், புலவர், புனைவர், யவனர், வித்தகர், வித்தியர், வினைஞர்.
கயிலை-கயிலாசம், விசயார்த்தம், வெண்மலை, வெள்ளிமலை, வேதண்டம்
கயிறு-அக்கம், இரச்சு, கச்சை, கடம், தாமம், தாம்பு, நாண், நாரம், வார், பழுதை, பாசம், புரி, வடம்.
கரகம்-கற்கரி, கன்னல், சிரகம், சிகரம், வற்கரி.
கரடி - உளியம், எண்கு, எறு, குடாவடி, பல்லம், வல்லூகம், மிளிறு, இதனுண், ஒருத்தல்.
கரடு-மிசைத்திரள், காலடி, பரடு.
கரி-இருந்தை, கந்தள்.
கரிக்குருவி-கஞ்சரீடம், கஞ்சனம், கயவாய், காரி, கிகிணி, பாரத்துவாசம், பிள்ளை, வஞ்சுளன், வயவன், வயான், வலியான்.
கருக்குவாளிமரம்-கத்திகை, முத்தகம்
கருங்காலிமரம்-கதிரம்.

கருடன்-இமையில், உவணன், ககபதி, கலுழன், தார்க்கியன், நாகாசனன், பன்னகவயிரி, புதுறுக்கிளையோன், புள்ளரசு, மாலூர்தி, வயினதேயன்.
கருணைக்கிழங்கு-கந்தம், சூரணம்.
கருதல்-என்னுதல், கன்னுதல், காணல், குறித்தல், சுட்டல், சூழல், நுதலுதல், புகறல், பேணல்.
கருத்து-இங்கிதம், உளம், உள்ளம், உன்னம், ஊகம், எண்ணம், குறிப்பு, சிந்தனை, சிந்தை, சேத்து, தியானம், நன்னயம், நாட்டியம், நினைவு, படர், மதம், முன்னம்.
கருப்பம்-கரு, சினை, சூல், பீள், வயாவு.
கரும்பு-இக்கு, கழை, கன்னல், வேளம்.
கருவழலை-இராசமாநாகம்.
கருவூர்-வஞ்சி.
கரைப்பொது - அணை, ஆழி, கூலம், கோடு, தடம், தீரம், பாரம், வரை, வாரம், விளிம்பு, அன்றியும், செய்கரை, அணை, குரம்பு, குலை, சேது.
கர்க்கடகவிராசி-அலவன், கள்வன், குளிர், சேக்கை, ஞெண்டு, நண்டு, நள்ளி, மதி.
கர்ப்பூரம்-கருப்பூரம், கனசாரம், சசி, பளிதம், பாளிதம்.
கலக்கம்-கதனம், கவனம், துரிதம், துருக்கம், பிரமம், மதன், வெறி.
கலங்கல்-கதுவுதல், கலுழல்.
கலங்கனீர்-ஆவிலம், கலுடம், கலுழி, விலக்கல்.
கலசப்பானை-கஞ்சனை.
கலத்தல்-அளாவல், கலவல், கலாவல், சார்தல், சிவணல், துழாவல், தோய்தல், படிதல் புணர்தல், பொருந்தல், வளாவல், விளாவல்,
கலப்பு-கலம்பகம், கலவை, களவம், சங்கிரணம், விரவு.
கலப்பை-அலம், இறை, இலாங்கலி, உழுபடை, கலனை, ஞாஞ்சில், தொடுப்பு, நாஞ்சில், படை, புடைவாள்
கலித்துறை-காரிகை, திலகம், இதற்கிராகம், பயிரவி.
கலிப்பா-முரட்கை.
கலியாணத்தின்பெயர்- விவாகத்தைக்காண்க.
கலைவல்லோர்-கலிஞர்.

கல்-கிராவம், கிராவணம், சிலே, சையயம், அன்றியும், இரண்டகல், உலம், குண்டு, பெருங்கல்லின்பெயர், கெளிதம், சிறுகல்லின்பெயர், உபலம், கற்பதித்தவிடத்தின்பெயர், குட்டிமம், சலதாரைமுதலியவற்றை யடைக்குங்கல்லின்பெயர், துறுகல், பொறை.

கல்வி-உறுதி, ஊதியம், ஒதி, காரணம், கலே, கேள்வி, சால்பு, தேர்ச்சி, விஞ்சை, வித்தை.

கல்விபயிலுமிடம்-கல்லூரி, கல்விபுரி, கழகம்.

கவசம்-அக்தளம், அபரம், அரணம், அரணி, ஆக, கசை, கச்சை, கண்டம், கந்தளம், கருவி, கடாரி, சாலி, சாலிகை, சுடாரி, சுரிகை, தடை, தம்பம், பாணம், பரம், பருமம், பாசம், பாரம், மெய்யுறை, மேழகம், வாரணம், அன்றியுங்கைக் கவசத்தின்பெயர், கைப்புடை, கோதை.

கவண்-முடிசில், கவணை, குணில், குளிர், தட்டை, தழல்.

கவரிமா-அன்னம், எகினம், ஒதிமம், நாவம், படகம், பட்டம், மானமா, இதனாண், எஅ, ஒருத்தல், இதன்பெண், பிடி, பிணா, இதன்குட்டி, கன்று.

கவுதாரி-இதல், கோரசம், சிரவம், சிவல், புறான்.

கழலைக்கட்டி-அரலை.

கழற்கொடி-கற்குரம், கழங்கு, கழல், முழல்.

கழி-உப்பளம், காயல், கானல், முரம்பு.

கழிமுகம்-அதோமுகம், அருவி, கயவாய், கயவு, கூடல், புகார்.

கழிவுநாள்-வைகல், காலி.

கழுகு-உவணம், எருவை, சகுந்தம், பவலை, புண்டரம், புண்டரீகம்.

கழுதை-அத்திரி, இராடம், கத்தை, கரம், கரோடிகை, கர்த்தபம், கார்த்தபம், களைவாய், கோகு, வாலேபம், வேசரி, இதன்பெண், பெட்டை.

கழுத்து-கண்டம், கந்தரம், களம், களரி, கிரீவம், கில்லம், மிடறு, கழுத்தடியின்பெயர், கந்து.

கழுமரம்-கழுமுள்.

கழுவுதல்-பண்ணல்.

களைக்கூத்தாடிகள்-கழாயர், சோரம்பர், வேழம்பர்.

களர்-களம், களரி, காரி, முதுநிலம்.

களவு-கடுதல், கயவு, கரப்பு, காவடம், கரவு, கள், கள்ளம், கள்ளல், சோரம், சோர்வு, தேயம், படிறு, பட்டிமை.

களர்ச்செடி-கள், களவு.

களித்தல்-உவத்தல், செருக்குதல், மகிழ்தல், மதர்த்தல்.

களிப்பு-அபிமானம், ஆமோதம், உவகை, உவப்பு, ஏமம், கடி, களி, செருக்கு, தருக்கு, நகை, நயன், பாடவம், பெருமிதம், மகிழ்ச்சி, மதம், மதர், மதர்ப்பு, மதர்வு, மத்தம், மலர்ச்சி, யௌவனம், அன்றியுமிகுகளிப்பின்பெயர், இறுமாப்பு, எக்களிப்பு, எக்கழுத்தம், ஏமாப்பு, செம்மாப்பு, பூரிப்பு.

கள்-அம்மியம், அரி, அரிட்டம், அருணி, அருப்பம், அளி, அறியழி, ஆசவம், ஆதாவம், ஆம்பல், ஆம்பிலம், ஆலி, ஆலை, இக்கு, இரேயம், ஈழம், எலி, கஞ்சா, கல்லியம், கவ்வை, களி, காலி, குடு, குந்தி, கொங்கு, சாதி, சாயவம், சாலி, சாறு, சிக்கர், சுண்டி, சுமாலி, சுவா, சுலோபி, சுவிகை, சுழிலை, சேறு, சொல், சொல்விளம்பி, சோபம், ஞாளி, தணியல், தம்பி, தேம், தேறல், தேன், தொண்டி, தொப்பி, நறவு, நனை, நாற்றம், படு, பாடலி, பாணி, பாலி, பானம், பிரசம், பிழி, பேதை, மகரந்தம், மட்டு, மது, மதுகரம், மதுனா, மதுவம், மருட்டம், மறவி, மாதவம், மாரி, மாலி, முண்டகம், முருகு, மேதை, மௌலி, யானம், வடி, வாணிதம், வாருணி, விகுணி; விசளி, வெறி, வேரி.

கள்விற்போர் - சவுண்டியர், துவசர், படுவர், பழையர், பிழியர், இவ்வகைப்பெண், சாலினி.

கள்ளி-வச்சிரம்.

கறிகள்-நீடாணம், அன்றியும் தாளித்தகறியின்பெயர், குய் அவட்டற்கறியின்பெயர், வறை, பொரிக்கறியின்பெயர், கருனை, புளிக்கறியின்பெயர், துவை, புளிங்கறி.

கறுப்பு-அஞ்சனம், இருள், கருமை, கருள், களங்கம், களம், களி, கறை, காரி, கார், காழகம், காளம், காலிமம், சாமம், நல்லம், நிலம், நீலி, பரி, மா, மாசு, மாயம், மால், மை
கறையான்-சிதல், செல்.
கற்பகத்தருவிற் படர்கொடி - காமவல்லி.
கற்பு-முல்லை.
கற்புடையாள்-சதி.
கற்றோன்-படிப்போன், மாணுக்கன், வித்தியார்த்தி.
கற்றாழை-கன்னி, குமரி.
கற்றோர்-நாவலர்.
கன்னன்-அங்கர்கோமான், அதிரீத்திரன், கச்சைக்கொடியினன், கருணன், கவசகுண்டலன், கனகக்கொடியோன், கானீனன், குந்திமுதற் புதல்வன், சவுரியன், பாராயணி, பாண்டவர் முன் பிறந்தோன், மிகு கொடையாளன்.
கன்னார்-கஞ்சகாரர், கன்னுவர்.
கன்னி-குமரி.
கன்னியிற்பெற்றபிள்ளை-கானீனன்.
கன்னிராசி - பெண்பொதுப் பெயரெல்லாஞ்சொல்லும்.

கா

காக்கணஞ்செடி-உயவை, கருவிளை, கன்னி, கிகிணி, கிருட்டிணி.
காக்கை-அரிட்டம், உரண்டம், கரடம், கரவாகம், கரும்பிள்ளை, காகம், காரி, கோண்டம், கொடி, துரோணம், நரந்தம், நராந்தம், பரபிருதம், பலிபுட்டம், புட்டம், வாயசம், அன்றியும், அண்டங் காக்காயின் பெயர், காலோலம்.
காசி-வாரணாசி.
காசிபப்பிரமா - சுராசுரர்க்குப் பொதுத்தந்தை, இவன்மனைவிகள், அதிதியுந் திதியும், அதிதிமைந்தர், சுரரெல்லாரும், திதிமைந்தர், அசுரரெல்லாரும்.
காஞ்சிபுரம்-கச்சி.
காஞ்சொறிச்செடி-கண்டூதி.
காடி-கிலாலம்.
காடு - அடவி, அத்தம், ஆரணியம், கனம், கடம், கடறு, கட்சி, கட்டம், கண்டம், கவனம், கவை, களரி, கான்டகம், கான்டம், காந்தாரம், கானகம், கானம், கானல், கான், குறும்பொறை, சம்பிரம், பிரணி, சுரம், தாவம், தில்லம், பழுவம், பாணி, புறவம், பொச்சை, முளரி, வனம், விடர், விபினம், வியல், அன்றியுங் குறுங்காட்டின் பெயர், இறும்பு, பெருங்காட்டின் பெயர், வல்லை, முதுகாட்டின் பெயர், முதையல்.
காடுகொள்-கொற்றி, சூரி, சூலி, மாரி, முதணங்கு, மோடி, வடுகன்றாய், வடுகி.
காடை-இதல், கபிஞ்சலம், குறும்பூழ்
காட்டல்-சுட்டல், தோற்றுவித்தல்.
காட்டா-ஆமா, கவையம், இதனுங், போத்து, இதன்பிள்ளை, கன்று.
காணல்-கண்ணுறல், காண்டல், தரிசித்தல், தெரிதல், நோக்கல், பார்த்தல்.
காதணிவகுப்பு-கடிப்பம், கடிப்பிணை, கம்பி, கன்னப்பூ, கன்னுவதங்கம், குணுக்கு, குண்டலம், குழை, கொட்டை, செவிமலர், தடாகம், தூக்கம், தொங்கல், தோடு, மஞ்சிகை, வல்லிகை, வேடம்.
காதம்-காவதம்.
காது-அள், கன்னம், கேள்வி, சிரவணம், சிரவம், சுருதி, சுரோத்திரம், செவி, வள்.
காத்தல்-அளித்தல், தாங்கல், திதி, நிலைபெறுத்தல், நோக்கல், புரத்தல.
காத்தளித்தோன் - பாலனன், புரவலன்
காந்தம்-சலாகை, சம்பகம்.
காந்தள் - கோடை, தோன்றி, அன்றியும் வெண்காந்தளின்பெயர், காந்தகம், கோடல், கோடை, செங்காந்தளின்பெயர், இலாங்கலி, தோன்றி, பற்றை.
காமத்தின்பெயர்-ஆசைப் பெருக்கத்தைக்காண்க.
காமநூல்-சுரதநூல்.
காமநோய் - காமக்கவலை, மதனம், மோகம், விகாரம், விரகம், அன்றியும் ஒருதலைக் காமத்தின்பெயர், கைக்கிளை, இருவரிலொருவர்க்குப் பொருந்தாக்காமம், பெருந்திணை.

காயா-அஞ்சனி, அல்லி, காசை, புன்
காலி, பூவை, வச்சி.
காய்-நியதி, பலன் அன்றியும், இள
ங்காயின்பெயர், பிஞ்சு, வடு.
காய்தல்-உலரல், முதிர்ந்திடல், முனி
த்தல், வெறுத்தல்.
காரணச்சொல்-கரணம்.
காரணம் - ஏது, நிறம், நிபம், நிமித்
தம், பொருட்டு, மூலம், வழி, வா
யில், அன்றியும், ஆதிகாரணம், நி
தானம்.
காராமணி-இதை, கூலர், முதிரை.
காரியம்-சகம்.
காரொலி-இரும்பன், கருப்பை.
கார்காலம்-கார், சரற்காலம், கவம்,
மாரிக்காலம்.
கார்த்தல்-உறைத்தல், கடு, கடுகம், க
ரில், காயம், காரம், காழ்த்தல்.
கார்த்திகைநாள்-அங்கி, அழகு, அள
க்கர், அறுமீன், அறுவாய், ஆறல்,
இறால், எரிநாள், தழல், நாடன், நா
விதன், வானவன்.
கார்த்திகைமாதம்-விருச்சம், பாகுல
ம், ஓர்மாதம்.
காலணிப்பொது - பாதசாலம், இவற்
றின் பேதப்பெயர், காற்சரி, கி
ண்கிணி, சதங்கை, சிலம்பு, பாட
கம், இவற்றைத் தத்தம் வரிசிற்கா
ண்க, அன்றியும், ஆடவர்கோடை
வீரத்தனிவது, கழல்.
காலநுட்பம்-கலை, துடி, விகலை.
காலநெடுமை-சிரம்.
காலவிரைவு-இலேசம், இறை, ஒல்லை,
கணம், தெவ்வரா, மாத்திரை, வல்லை
காலன் - கூற்று, தண்டன், பாசரன்,
மறலி, மறல்.
காலாள்-பதாதி.
கால்-அங்கிரி, அடி, கழல், சரணம்,
தாள், பதம், பாதம்.
காவடி-கா, தோட்சுமை.
காவலர்-கஞ்சுகி, மெய்காப்பாளர்.
காவல் - அரண், ஏமம், ஓம்படை, க
டி, கட்டு, கரவம், கரவு, கழுது,
காப்பு, சிறை, செயல், சேமம்,
சேவல், தட்டி, திராணம், பாது,
வேலி.
காவற்காடு - அரணம், அரண், இளை,
கவயம்.

காவிக்கல்-காவிகம், நாரு, நற்செங்கல்.
காவேரி-காவிரி, பொன்னி.
காவேரிப்பூம்பட்டனம்-புகார்.
காளம்-அமயியம், ககளம், காளகம்,
பின்னம், சாணை.
காளான்-ஆம்பி.
காளி-அய்யை, அலகைக்கொடியாள்,
ஆரணி, எண்டோளி, கங்காளி, க
வுரி, குண்டலி, குமரி, சண்டிகை,
சாமுண்டி, சூரி, சூலி, தாருகவிநா
சி, தாருகற் செற்றாள், நீலி, பது
மை, பகதிரி, பயிரவி, மதுபதி, மா
தங்கி, மாதரி, மாயை, மாயையுற்
றாள், மாலினி, முக்கண்ணி, யாம
ளை, யாளிமூர்த்தி, யோகினி, வல்ல
ணங்கு, வீரி, வேதாளி.
காளிக்கொடி-அலகைக்கொடி.
காளியேவல்செய்மகளிர் - இடாகினி,
மாயவள், வஞ்சனி, வலவை.
காளிவாகனம்-ஓரி.
காற்சரி-பரியகம்.
காற்றுடி-சதலி, கறங்கு, சுழல்.
காற்று-அம்போதி, அரி, அநிலம், ஆ
சுகம், உயிர், உயிர்ப்பு, உலவை,
ஊதல், ஊதை, ஒலி, கந்தவகன்,
கந்தவாகன், கம், காலகம், காலி
லி, கால், கோதை, சதாகதி, சமீ
ரணன், சமீரன், சலனம், சுசனம்,
நிழலி, நிலம், நில், பவமானன், ப
வனம், பிரபஞ்சனன், மருத்து, மா
ருதம், மால், வங்கூழ், வளி, வாத
ம், வாயு, விண்டு, வேற்றலம், அன்
றியுங் கார்ப்பருவத்தின்காற்று. வா
டை, கூதிர்ப்பருவத்தின்காற்று, கூ
திர், கூதை, முன்பனிப்பருவத்தின்
காற்று, கொண்டல், பின்பனிப் ப
ருவத்தின்காற்று, தென்றல், முதிர்
வேனிற் பருவத்தின் காற்று. கோ
டை, அன்றியுங் கீழ்காற்று, கொ
ண்டல். மேல்காற்று, கோடை. தெ
ன்காற்று, தென்கால், தென்றல்,
வசந்தம். வடகாற்று, வடந்தை,
வாடை.
கானல்-பேய்த்தேர், மரீசிகை, வெண்
டேர், வேனில்.
காறுங்கோழி-புழ்.

கி

கிடைத்தல்-சிக்கல், பயத்தல், பெறல், வாய்த்தல்.
கிட்டல் - அணைவல், அணுகல், அண்டல், அருகுறல், உறல், குறுகல், சிவணல், சேரல், துன்னல், நணுகல், நண்ணல், நேர்தல், மருவுதல்.
கிணறு-அசும்பு, உறவி, குழி, கூபம், கூவல். துரவின்பெயர், கேணி, பூவல்.
கிண்கிணி-நூபுரம்,பரிபுரம்,பரியகம்.
கிண்கிணிமாலை-தார்.
கிண்டல்-கிளர்தல், கிளைத்தல், தோண்டல்.
கிரணம்-கதிர்,கற்றை, காந்தி,பிரபை.
கிராமணி - கிராமமுற்றோன், கிராமியன்.
கிருபை-அபயம், அருள், இரக்கம், ஈரம்,கருணை, காருண்ணியம், தகவு, தயாளம், தயை, நிழல்.
கிருபையுடையோன்-காருணிகன், காருணியன், கிருபாளு,தயாளன்.
கிலுகிலுப்பைச்செடி-பகன்றை.
கிழக்கு-இந்திரி, ஐந்திரம், கிழ், கீழ்த்திசை, குணக்கு, பிராசி, பூருவம்.
கிழங்கு-கந்தம், சகுனம், பலம், மூலகம், மூலம்.
கிழமை-வாரம்.
கிழவி-மூத்தோள், விருத்தை.
கிழித்தல்-அவிர்தல், கீண்டல், கீழ்தல், கீளல், கீறல், பீறல்.
கிளப்புதல்-திமைத்தல்.
கிளி-அரி, அவந்திகை, ஏசி, கிள்ளை,கிரம், சாரு, சுகம், சுவாகதம், தத்தை, வன்னி, அன்றியுங் கருங்கிளியின்பெயர், கிள்ளை, கீரம்.
கிளிஞ்சில்-எருந்து, ஏரல்.

கீ

கீரி-காத்திரி, தீர்வை, நகுலம், இதன்பிள்ளை, குட்டி, பறழ், பிள்ளை.
கீழறுத்தல்-அறைபோதல்.
கீழறை-பிலம்.
கீழ்-கயம், கிழக்கு.
கீழ்மக்கள்-அசடர், அந்தர், அற்பர், இதரர், இயவர், கண்டகர்,கயவர், கலர், கல்லார், கனிட்டர், கையர், சிதையர், சிறியர், சிறுமையர், சிந்தையர், சுமடர், தீக்குணர்,தீம்பர், தீயோர், தோரர், நீசர், நெறியிலார், பதகர், புல்லர், புன்மையர்,புரியர், பேதையர், பொறியிலார், மறையிலார், முசுடர், முருண்டர்,முறையிலார், மூடர், மூர்க்கர்.
கீற்று-கீழி.

கு

குக்குலியம்-குக்குலு, குங்குலு.
குங்குமமரம் - கொங்காரம், ஞாழல், துருக்கம், நறவம், மரவம், மாலம்.
குடங்கை-அங்கை.
குடம்-இடக்கர், இடங்கர், இரும்பை, இறங்கர், கடம், கலசம், குடங்கர், குடந்தம், குணம், கும்பம்,தசும்பு, தாழி.
குடி-திணை.
குடித்தல்-பருகல், பானம், மாந்தல்.
குடியிறை-இறப்பு, கடன், கரம், கறை, வரி, அன்றியும் பகைவரிடு மிறையின்பெயர், கப்பம், குறை, திறை, பாகுடம்.
குடுமி-சிகை, சிக்கம், சிமி, சிமிலி, முடி.
குடுவை-குண்டம்.
குடை-ஆதபத்திரம், கவிகை, கவிப்பு, சத்தி, சத்திரம், தொங்கல்,பிச்சம், அன்றியும், செங்குடை, சிந்தூரம். வெண்குடை, சுசி.
குடைக்காம்பு-தண்டம்.
குடைதல்-ஒலிதல்.
குடைவேல்-உடை.
குட்டுதல்-தகர்த்தல், புடைத்தல்.
குணம்-இயல், இயல்பு, உரிமை, உழுவல், ஊழ், கிழமை, கொள்கை, கோள், சால்பு, சீலம், தகவு, தகுதி, தகை, தகைமை, தன்மை, திறன், நிலை, நிறம், நீர், நீர்மை, நுணித்தல், படி, பண்பு, பரிசு, பாடு, பால், பான்மை, பிரகிருதி, பெற்றி, மரபு, மாலை, முறை, வண்ணம், விதி, இவற்றுட் டீயகுணத்தின்பெயர், கராளம், கராளி.
குண்டலம் - காதணி, குழை, மஞ்சிகை.

குதித்தல்-உகளல், உழக்கல், குப்புறல், கடித்தல், துள்ளல், பாய்தல், மிதித்தல்.

குதிரை-அசுவம், அச்சுவம், அத்திரி, அயம், அரி, இவுளி, உத்தரி, உன்னி, கந்தருவம், கந்தருவம், கந்துகம், கற்கி, கனவட்டம், கிள்ளை, குந்தம், குரகதம், குரம், கொக்கு, கொய்யுளை, கோடகம், கோடரம், கோடை, கோணம், கோரம், சடிலம், சயிந்தவம், துரகதம், துரகம், துரங்கம், பரி, தேனு, நாமுகம், பத்திரி, பரி, பாடலம், பாய்மா, புரவி, மண்டிலம், மா, வயம், வாசி, இத ஆண், குண்டு, சேவல், மா. இதன்பெண், கோடிகை, பெட்டை, வடவை. இதன்பிள்ளை. கன்று, குட்டி, மறி. அன்றியும், பெருங்குதிரை, தேசி.

குதிரைக்கடிவாளம் - கலினம், கலியம், கறுள், குசை, மூட்டு, இதன்பூண், விருளை.

குதிரைக்கயிறு-குசை, வடிகயிறு, வற்கம், வாய்வட்டம்.

குதிரைக்கல்லணை-படை, பண், பரம், பருமம், பல்லணம், பாரம், மாக்கருவி.

குதிரைக்கழுத்திலணியுமயிர்-உளை.

குதிரைக்குளம்பு-குரச்சை, குரம்.

குதிரைச்சம்மட்டி-கோல், மத்திகை.

குதிரைநடை-கதி, கவனம், தாவு, இவை ஐவகைப்படும்; மெல்லிய நடை, தவுரிதகம். விரைவுநடை, ஆக்கிராந்திதம். இருகாற்றாக்கி யாடிவருநடை; வல்கிதம். சுற்றியோடல், இரேசிதம். முழுவோட்டம், புலிதம்.

குதிரைப்பந்தி-சாலை, பனை, மந்திரம்.

குதிரைப்பாகர்- பன்னுவர், பரிமாவடிப்போர், மாவலர், மறவர், வாதுவர்.

குதிரைமயிர்-குசை, கூந்தல், கேசம், சவல்.

குதிரைமார்க்கம்-மாதிகம்.

குதிரையங்வடி-கச்சம், படி.

குதிரைமினரப்பு-ஞாளி.

குதிரைவாய்நுரை-விலாழி.

குதிரைவையாளிவீதி-செண்டு, செண்டுவெளி, திருமுற்றம், புரவிவட்டம்.

குமிர்-புகல்.

குதிர்த்தல்-எதிரல், எற்றல், பற்றல், புடைத்தல், அன்றியும் நெல்முதலியனகுத்தல், அவைத்தல்.

குந்திநிற்றல்-குஞ்சித்தல்.

குபேரனகர்-அளகை.

குபேரன்-ஆலவீழுழன், அளகையாளி, இயக்கர்கோமான், இயக்கன், இருநிதிக்கிழவன், கின்னரர் பிரான், தனதன், தனபதி, நரர்பிரான், நரவாகனன், நிதிக்கிழவன், நிதியோன், நிறைசெல்வன், பிங்கலன், புட்பகவிமானன், புருடவாகனன், மந்திரி, மாகதன், வடதிசைத்தலைவன், வைச்சிரவணன். கக

குபேரன்மகன்-நளகூபரன்.

குபேரன்வாகனம்-நரவாகனம், புட்பகவிமானம்.

குமிழமரம்-கடம்பல், கூம்பல்.

குமிழி-கொப்புளம், நுரை, புற்புதம், பௌவம், மொக்குள். [சாடி.

கும்பராசி-கரீரம், குடங்கர், குடம்,

கும்பிடுதல் - அஞ்சலி, கைகூப்பல், தொழுதல்.

கும்மியாடல்-துணங்கைகொட்டல்.

குயவன்-கும்பகாரன், குலாலன், சக்கிரி, மட்பகைவன், மண்ணரியான், மண்ணுடையான், வேட்கோவன்.

குயில் - அன்னியபுட்டம், களகண்டம், காளகண்டம், கோகிலம், கோரவை, பரபிருதம், பரபுட்டம், பிகம்.

குரங்கு-அரி, கச்சகம், கடுவன், கபி, கவி, கள்வன், கானவன், கீசகம், கோகுலம், கோடரம், சிகை, சொக்கு, தோரணம், நாகம், நிரந்தரம், பிலவங்கம், மந்தி, மர்க்கடம், வலீமுகம், வானரம், அன்றியும், கருங்குரங்கு, காருகம், நாகம், யூகம். ஆண்குரங்கு, கடுவன். பெண்குரங்கு, மந்தி, யூகம்.

குரங்குமுதற்கோட்டின் வாழ்விலங்கின்பிள்ளை-குட்டி, குழவி, பறழ், பார்ப்பு, பிள்ளை, மகவு.

குரு-அடிகள், அத்தன், ஆசாரி, ஆசான், ஆத்தன், ஆரியன், இறைவ

ன், ஈசன், ஐ, ஐயன், கடவுள், குரவன், கோமான், சாமி, தலைவன், நிர்த்தன், தேசிகன், பகவன், பட்டாரகன், பண்ணவன், பதி, புங்கவன், பெருமான்.

குருகு-சாரசம், நாரை, நாரை, புட்கரம்.

குருகுலவேந்தர்-கௌரவர், பாரதர், பௌரவர்.

குருக்கத்தி - அதிசம், குருந்து, நாகரி, மாதவி, வாசந்தி.

குருடன்-அதரிசனன், அந்தகன், பேதடன்.

குருத்து-முருந்து.

குருந்து-ருந்தம்.

குலங்கலந்தோர்- உயர்குலத்தந்தைக்கு மிழிகுலத்தாய்க்கும் பிறந்தோர்—அநுலோமர்; இழிகுலத்தந்தைக்கு முயர்குலத்தாய்க்கும் பிறந்தோர்—பிரதிலோமர்; அநுலோமத்தந்தைக்கும் பிரதிலோமத் தாய்க்கும் பிறந்தோர்—அந்தராளர்; பிரதிலோமத்தந்தைக்கும் அநுலோமத்தாய்க்கும் பிறந்தோர்—விராத்தியர்; அன்றியுஞ் சாதிதருமம்விட்டவருக்கும் விராத்திய ரென்று பெயர்.

குலமுளோன்-குலீனன், குலம், இனம், உம்பல், ஒழுக்கம், குடி, திணை, வருணம், விழுப்பம்.

குவளைப்போது-உற்பலம், குவலயம், அன்றியும், செங்குவளையின்பெயர், அரத்தம், அரத்தோற்பலம், எருமணம், கல்லாரம், செங்கழுநீர். கருங்குவளையின்பெயர். இந்திவரம், காவி, நீலம், நீலோற்பலம், பானல்.

குவிதல்-இராசி, குப்பை, குவவு, குவால், குவிவு, குவை, கூம்பல், சாம்புதல், துற்றல், நாழில்.

குழந்தை-இளவல், குட்டன், குழவி, சிசு, சேய், பிள்ளை, மகவு, மழவு.

குழம்பு-ஆணம், பாகு.

குழைதல்-அணைதல், ஈடு, ஒல்கல், சுணைதல், நெகிழ்தல்.

குழைத்தல்-இருத்தல்.

குளநெல்-நிர்வாரம்.

குளவி-வேட்டுவன்.

குளித்தல்-ஆடல், குடைதல், தோய்தல், நானம், படிதல், மஞ்சனம், முழுகல்.

குளிர்ச்சி-அளி, ஈரம், சாந்தம், சீதம், சீதளம், தண், தண்ணளம், தண்மை, நளி, நளிர், நிழல், பனி, மழை.

குள்ளன்-குஞ்சன், குறளன், சிந்து, வாமனன்.

குறவரின்பெயர்- குறிஞ்சிநிலமக்களைக்காண்க.

குறியின்பெயர் - அடையாளத்தைக்காண்க.

குறிக்கொள்வோர்-பராயணர்.

குறிஞ்சித்தலைவன்-கானகநாடன், சிலம்பன், நண்பன், பொருநன், பொருப்பன், மலையன், வெற்பன்.

குறிஞ்சிநிலத்தூர் - குறிஞ்சி, குறும்பொறை, சிறுகுடி, சிற்றூர், சீறூர்

குறிஞ்சிநிலப்பறை-துடி, தொண்டகம், முருகியம்.

குறிஞ்சிநிலப்பெண்கள் - குறத்தியர், கொடிச்சியர்.

குறிஞ்சிநிலமக்கள்-இறவுளர், கானவர், கிராதர், குறவர், குன்றவர், புனவர், மள்ளர்.

குறிஞ்சிநிலம் - புறம்பணை, புறவணி, புறவம், மலைச்சார்பு, வன்பால்.

குறித்தல்-எண்ணல், கண்ணல், கருதல், காணல், சுட்டல், நுதலல், புகறல், பேணல்.

குறிப்பு - இங்கிதம், எண்ணம், கருத்து, சிந்தை, சூழல், நாட்டியம்.

குறுமை-குறள், வாமநம்.

குறும்பாடு - சரபம், வருடை, வரையாடு.

குறைதல்-அஃகல், அருகல், அல்கல், எஞ்சல், குலைதல், குன்றல், சிகல், சிங்கல், சிறக்கணித்தல், சிறுகல், சுருங்கல், தவறல், தேய்தல்.

குறைபாடு-ஈனம், ஊனம், எச்சம், கயம், கீனம், தேய்வு, நிரப்பு, விகலம்.

குற்றம்-அரி, அரிப்பு, அரில், ஆசு, இழிவு, ஏசு, ஏதம், கசடு, கடவை, கரில், கழிப்பு, களங்கம், களை, கறை, காசு, குறை, கொழிப்பு, கோது, சழக்கு, செயிர், தட்டு, தப்பு, தவறு, தீங்கு, தீது, துகள், தோ

ம், கலை, கறை, பழி, பழுது, பிழை, புகர், புரை, பொக்கு, மறு, மாசு, மானம், மிறை, மை, வசை, வடு, வஞ்சம், விடல், விபூதி.
குன்றிக்கொடி-குஞ்சம்.

கூ

கூகை - கோமன், கவுசிகம், நிசாசரி, பெரும்புள்.
கூடல்-குவிதல், சங்கு, பயினி, புல்லல், பொருந்தல், மணத்தல்.
கூடிநிற்றல்-இசை, இசைப்பு, உடங்கு, ஒருங்கு.
கூடு-கூண்டு, பஞ்சரம்.
கூடை-இறைவை, புட்டில், வட்டிகை
கூட்டம்-அவை, ஆசிடை, இராசி, இனம், ஈட்டம், ஈண்டல், ஐமை, கணம், கருவி, களரி, குப்பை, குலம், குவவு, குவால், குவிதல், குழாம், குழு, குழுமல், கூளி, கொட்டம், கோட்டி, சங்கம், சஞ்சயம், சமாசம், சமவாயம், சமூகம், சமுதாயம், சயம், சரி, சவை, சாலம், ஞாட்பு, திரள், தாறு, தொகுதி, தொகுத்தல், தொகை, தொழுதி, தொறு, தோடு, நளி, நிகரம், நிகாயம், நிவகம், பிருந்தம், மூகை, மௌனம், மொய், யோகம்.
கூதாளிச்செடி-கூதாளம், துடி.
கூத்தர்பெயர்-நாடகரைக்காண்க.
கூத்தநூல்-பரதம்.
கூத்தின்விகற்பம்-அலைப்பு, இலயம், உள்ளாளம், கடகம், கரணம், குளிப்பு, கூடை, கொந்தளம், சிக்களம், தேசிகம், பவுரி, பிரமரி, மலைப்பு, மல், வீரட்டானம்.
கூத்து-இலயம், கண்ணுள், குரவை, தாண்டவம், துணங்கை, தூக்கு, நடம், நடனம், நடை, நட்டம், நாடகம், நாட்டியம், நிருத்தம், படிகம், பாணி, பரதம், புரியம், மண்டிலம், வாணி, அன்றியும், தேவர்க்காய்க்கூத்து - அணங்கு, ஆஞ்சி, கழங்கு, வெறியாடல், வேலனாடல்.
கூந்தற்பனை - கூந்தற்கமுகு, தாலம், பூகம்.
கூப்பிடல்-அலறல், அழைத்தல், கதறல், கத்துதல்.
கூர்மை - அயில், அரி, அளம், அள், ஆர், உசி, எஃகு, கடி, தாரை, நிசிதம், நுனுக்கம், பூ, வசி, வயிரம், வள், வை.
கூர்மையின்மை-மந்தம்.
கூறியதுகூறல்-புனருக்தி.
கூறுபாடு-நிறம், வகை.
கூனன்-கூன், கோணல்.

கெ

கெடுதல்-அவிதல், அழுங்கல், இரிதல், இறுதல், உடைதல், ஒருங்கல், கந்தல், குறைதல், சிகல், சிதைதல், சிந்தல், தபுதல், தொலைவல், நக்தல், படல், பொடிதல, மங்கல், மடிதல், முரிதல், வட்கல், விளிதல், விதல்.
கெண்டிகை-கரகம், கெண்டி, கோடிகம்.
கெண்டைமீன்-கயல், சபரம், சேல்.
கெந்தபொடி-சுண்ணம்.
கெளிற்றுமீன்-கெளிறு.

கே

கேகயப்புள்-அசுணமா, கிஞ்சுகம்.
கேடகம்-கடகம், கிடுகு, தட்டு, பரிசை, பலகை, மறை, வட்டணம், வட்டம், வேதிகை, அன்றியுந்தோலாற்செய்தது, தோல், தோற்பரம். பிரம்பினாற்செய்தது, தண்டை, வள்ளி. நெடும்பரிசையின்பெயர், நெடியவட்டம், மாவட்டம்.
கேடு-அரிட்டம், அழிவு, ஆனி, இழிவு, இழுக்கு, இறல், ஏதம், கயம், சிதைவு, சுதம், சேதம், தா, துரிதம், நட்டம், பாடு, மடி, மிகை, வழுவு.
கேட்டைநாள்-இந்திரநாள், எரி, செந்தழல், சேட்டை, வல்லாரை, வேதி.
கேது-கதிர்ப்பகை, சிகி, செம்பாம்பு, மதிப்பகை, மதியுணி.
கேளாமை-வாளா, வெளா.

கை

கை-அத்தம், கரம், கைத்தலம், சயம், தோள், பாணி.
கைகோத்தாடல்-குரவை.
கைக்கவசம்-ஆசு, கைக்கட்டி, கைப்புடை.

கைத்தாளம் - கஞ்சம், கிட்டி, கிணி, பாண்டில்.

கைம்பெண் - அமங்கலி, கலன்கழிமடந்தை, கைமை, கைவலி, திருவிலி, விதவை.

கைம்பெண்பிள்ளை-கோளகன்.

கைம்மணி - எல்லரி, படலிகை, பாந்தவட்டம், வட்டம்.

கையாந்தகரை-அருபதம், கோகணம்.

கைவளை - கன்று, குருகு, சங்கு, சரி, சூடகம், தொடி, வண்டு, வள்ளி, அன்றியும், பிள்ளைக்கைவளையின் பெயர், பிடிகம்.

கொ

கொக்கு - குரண்டம், பகம், பலாகம், புதர், மஞ்சுகம்.

கொசுகு - அசவல், அஞலம், அஞல், உலங்கு, கொதகு, சகல், தம்மு, துள்ளல், நிலம்பி, நுளம்பு, நொள்ளல், மசகம், முஞல், வறு.

கொடாமை-காத்தல், கரவு, நிறுத்தல், மறுத்தல், மாற்றல்.

கொடி - கதலி, கதலிகை, கத்திகை, கேதனம், கேது, சத்தி, சருத்தி, துகில், துவசம், தோகை, படம், பதாகை, விலோதனம், சிறுகொடியின்பெயர், கத்திகை, வீதியிற்கட்டிய கொடியின்பெயர், விடங்கம்.

கொடிக்கொத்தான்-நூழில்.

கொடியிறுட்படர்கொடி - இலந்தை, நூழில், வல்லி, வள்ளி.

கொடுங்கை-மதலை, விடங்கம்.

கொடுமை - அகோரம், உக்கிரம், உறைப்பு, உற்பாதம், கடினம், கடுமை, கரில், கலாம், குரூரம், கூரம், கோடணை, கோரம், சடம், சண்டம், தூமகேது, பூதி, வக்கிரம், வஞ்சம், விபூதி.

கொடுமையுள்ளோன் —வெய்யோன்.

கொடுவாள்-அரிவாள், குயம், புள்ளம்

கொட்டாவிவிடுதல் - ஆவலித்தல், ஆவித்தல்.

கொண்டாடல்-குலாவல், பாராட்டல், மெச்சல்.

கொத்தமல்லி-உருளரிசி.

கொத்தான்செடி-நந்தை.

கொத்து-குச்சம், குரம்பு, குலை, சாறு, தாறு, படு, குலையுள்ளன, ஈந்து, கமுகு, காந்தள், தெங்கு, பனை, வாழைமுதலாயின, தாறுள்ளன, ஈந்து, கமுகு, வாழை-

கொப்பரி - கடாரம், கொப்பரை, தசும்பு.

கொப்பளித்தல் - இமிழ்த்தல், உமிழ்தல், ஒக்குதல், கூலல், தெவிட்டல், பிலிற்றல், பிளிர்த்தல், பில்கல்.

கொப்பிகொட்டல் - கை குவித்தாடல், கைகூப்பல், கைகொட்டி, கொம்மை.

கொப்புளம் - கொப்புள், கொம்மை, மொக்குள்.

கொப்பூழ் - ஆகு, இதலை, இலஞ்சி, உந்தி, நாபி, போகில்.

கொய்சகம்-நீவி.

கொலை - அணங்கு, ஊறு, ஊறுகோள், காதம், காதை, சோள், நிகாரணம், நிசாரணம், நிடுதனம், நூழில், பாசனம், பிஞ்சம், மறம், மாரணம், வதை, விசரம்; விசசனம், விஞசம்.

கொலைசெய்வோன் - காதகன், காதன், சாருகன், நிகாரணன், நிசாரணன், நிடுதனன், பாசனன், பிஞ்சகன், வதன், விஞசன்.

கொல்லல்-அடுதல், இகுத்தல், எருக்கல், எற்றுதல், ஒளித்தல், களைதல், காதுதல், கோறல், சட்டித்தல், சவட்டல், செகுத்தல், செவிட்டல், செறித்தல், செறுத்தல், தெறுதல், தொலைத்தல், நீக்கல், படுத்தல், மாய்த்தல், முருக்கல், வதைத்தல், வீட்டுதல்.

கொல்லன்-கருமான், மறுவன்.

கொல்லை - ஆவலம், துடவை, தொடுவு, தோட்டம், படப்பை, பாவகம், அன்றியும் பழங்கொல்லையின் பெயர், முதைப்புனம், புதுக்கொல்லையின்பெயர், விதைப்புனம், காடுவெட்டிச்சுட்ட கொல்லையின் பெயர், முதை.

கொழிஞ்சி-கோளி.

கொழித்தல் - தெளித்தல், தெள்ளுதல், வரன்றல்.

கொளல்-கவர்தல், வவ்வல், வலித்த ல், வாருதல்.
கொள்-காரணம், குலத்தம், முதினை.
கொள்ளல் - ஏற்றல், கொளல், கோடல், வரைதல், வாங்கல்.
கொள்ளிக்கட்டை-ஞெகிழி.
கொள்ளி-கொள்ளி, குறை.
கொள்ளையிடல் - கவரல், வவ்வல், வாரல்.
கொறுக்கை - எருவை, கொறுக்கச்சி, சாம், சரவணம், வேழம்.
கொன்றைமரம் – ஏர்க்குவதம், இதழி, கடுக்கை, தாமம், மதலை.

கோ

கோங்குமரம் - கன்னிகாரம், குராமல், அருமோற்பலம்,பலினி,பிணர்.
கோடாலி-குடாரம், கோடரி, தாத்திரம், நவியம்.
கோடை-வேனில்.
கோட்டான் - உலூகம், குடிஞை, குரால், பொய்கை.
கோட்டை-அரணம், அரண், அரலை, அருப்பம், ஆவரணம், கவை, வல்லை, அன்றியுமிலமேற்கோட்டையின்பெயர், அமுவம், துருக்கம், தர்க்கம், அது நால்வகைப்படும், கடலரண், காட்டரண், மதிலரண், மலையரண்.
கோட்டையிற் கள்ளவழி - கற்படை, சுருங்கை.
கோணப்-தோண்டான்.
கோதாவரி-விருத்தகங்கை, அதன்பிரிவு, கௌதமநதி.
கோதம்பை-கோதி.
கோத்திரம்-உம்பல், குடி, சந்ததி, சந்தானம்.
கோபத்தின்பெயர்-சினத்தைக் காண்க.
கோபுரம்-சிகரி.
கோபுரவாயில்-அரிகூடம், ஆத்தானம், கோட்டி, கோபுரம்.
கோபுரவாயிற் கதவுவிட்டுப் புகும்வழி-புதவு, பூழை.
கோபுரவாயிற்றிண்ணை-அளிந்தம்.
கோரை - எருவை, பஞ்சாய், அன்றியுந்திரன்கோரை, சாய், வாட்கோரை, செருந்தி, கோரங்கிழங்கு, கனம், முத்தக்காசு.

கோலஞ்செய்வோள்-வண்ணமகள்.
கோல்-காண்டம்.
கோவிலின்பெயர்-தேவர் கோவிலைக் காண்க.
கோவேறுகழுதை-வேசரி.
கோவைக்கொடி-கொவ்வை, தொண்டை, விம்பம்.
கோழி - ஆண்டலை, காலாயுதம், குக்குடம், குருகு, வாரணம், இதனுள், சேவல்.
கோளமு-ஐ, கபம், காசம், காசு.
கோளன்-பிசுனன்.

ச

சகாயம்-இணை, உதவி, உபகாரம், துணை, துப்பு.
சக்கரவாகப்புள் - கோகம், சகோரம், சக்கரம், நேமிப்புள், பெருங்குருகு.
சக்கராயுதம்-அரி, ஆழி, எஃகம், ஒளிவட்டம், சுதரிசனம், திகிரி, நேமி, பருதி, வட்டம், வளை.
சக்கிலியர்-சருமர், செம்மார், தன்னர், தோற்றுன்னர், பொல்லர்.
சங்கறுப்போர்-வளைபோழ்நர்.
சங்காத்தி - அருகன், ஆத்தன், சமதன்,அன்றியுஞ்சிநேகிதனைக்காண்க.
சங்கிலி - அந்தூகம், இட்கணி, சிருங்கலம், தவக்ரு, தொடர், அன்றியும் பாதசங்கிலி, தளை.
சங்கு - இடம்புரி, இப்பி, ஊரி, கம்பு, கம்புள், கூவல், கோடு, சுத்தி, சுரிமுகம், தரா, நத்தம், நத்து, நந்து, நாகு, பணிலம், புரி, மனவு, வண்டு, வளை, வளையகம், வாரணம், வெள்ளை, இதனுண், ஏறு.
சங்குமணி-அக்கு.
சடை - கிடை, குடிலம், கோடீரம், சடிலம், பின்னல், வேணி.
சடைமுனிவர்-தாபதர்.
சட்டப்பலகை-கிடுகு.
சட்டி-குண்டை, விசளை.
சட்டுவம்-திலகம், தவ்வி, தருவி.
சட்டை - அங்கி, கஞ்சுகம், கஞ்சுகி, கஞ்சுளி, காஞ்சுகம், காஞ்சுகி, குப்பாயம், தைப்பை, மெய்ப்பை, வாணம், வாரணம்.

சண்டாளர்-அகலர், இழிஞர், கவுண்டர், கயிஞர், கணகநர், குறுங்கர், கொலைஞர், புலைஞர், மாதங்கர், வய்கர்.

சதங்கை-காலணி, கிண்கிணி, சிறுமணி

சதுரக்கள்ளி-கண்டீரவம், வச்சிரம், வச்சிராங்கம்.

சதையநாள் - குன்று, சண்டன், செக்கு, போர், வருணனாள்.

சத்திக்கொடி-தாடிமஞ்சம்.

சத்திபண்ணல்-உக்காரம், உமிழ்தல், ஓங்கல், கக்கல்.

சத்திரம்-மடம்.

சந்தனம் - அனுக்கம், ஆரம், ஈகம், கோரவாரம், சத்தம், சந்திரதிலகம், சந்து, சாந்தம், படீரம், மலயசம், மலையாரம்.

சந்திரனாள்-கலை, திதி, விளக்கம், அன்றியுஞ் சந்திரனொருகலைதெரியு மிரா, சினிவாலி, கலைதெரியாவிரா, குகு, முன்பக்கத்தின்பெயர், சுக்கிலம், பூருவம், பின்பக்கத்தின்பெயர், அபரம், கிருட்டிணம், அன்றியுஞ்சந்திரனாட்கூறுபாடு, கலை, மூன்றுநாள்வட்டம், பக்கம், முதற்பக்கம், நந்தை, இரண்டாம்பக்கம், பத்திரை, மூன்றாம்பக்கம், சயை, நான்காம்பக்கம், இருத்தை, ஐந்தாம்பக்கம், பூரணை.

சந்திரனொளி-சந்திரிகை.

சந்திரன்-அமுதகதிரோன், அம்புலி, அரி, அரிச்சிகன், அலவன், அல்லோன், ஆலோன், இந்து, இமகரன், இராக்கதிர், இனன், உடுபதி, உடுவின்வேந்தன், கலாநிதி, கலையினன், களங்கன், குபேரன், குமுதநண்பன், குரங்கி, சசி, சீதன், சுதாகரன், சோமன், தண்சுடர், தண்ணவன், தாராபதி, தானவன், திங்கள், தெவ்வு, நிசாகரன், நிசாபதி, நிலவு, பசுங்கதிர்த்தே, மதி, மதியம், மானேந்தி, முயலின்கூடுவிது, வீபத்து, வெண்கதிரோன், வேந்தன், அன்றியுமிளஞ்சந்திரன்பெயர், குழவி, பிறை.

சந்து-கத்து, கந்து, கொளுத்து, பொருத்து, மூட்டு.

சந்தேகத்தின்சொல்-எவன், என், கொல், யா, யாது, யாதோ.

சந்தேகம் - அயிர்ப்பு, அனுமானம், ஐயம், கடுத்தல், சகடு, சங்கை, செத்து.

சமண்முனிவர்-சாரணர், சமணதவத்தோர்பெயர், ஆசீவகர்.

சமணர்-அருகர், சாவகர், சைனர்.

சமயம்-அமைதி, அவகாசம், அற்றம், ஓரை, காண்டம், தருணம்.

சம்பங்கோழி-கம்புள்.

சம்மட்டி-கூடம்.

சம்மதித்தல் -அமைதல், அனுமதி, இணங்கல், உடன்படல், நேர்தல், அன்றியும், உடன்படலைக்காண்க.

சரச்சுவதி-அயன்மனைவி, இசைமடந்தை, உலகமாதா, கலைமகள், காயத்திரி, சாவித்திரி, ஞானமூர்த்தி, தண்டாச்சிறப்பினள், தூயாள், நாமகள், நான்முகன்கிழத்தி, பனுவலாட்டி, பாமகள், பாமுதல்வி, பாரதி, பிராமி, பூரவாகினி, வாக்காள், வாணி, வெண்டாமரையாள், வெண்சலசமுற்றாள், வெள்ளைநிறத்தாள், வெள்ளைமெய்யாள்.

சரமணிக்கோவை-கலாபம், தோரை.

சரி-கைவளை, காற்சரிக்குங்கைச்சரிக்கும்பெயர், பரியாசம்.

சரித்திரம்-கையாறு, சரிதம், சரிதை, சாரித்திரம், சீலம்.

சருக்கரை-அக்காரம், அயிர், அழகு, கட்டி, கன்னல், குடம், குளம், சயம், பஞ்சதாரை, பாகு, விசயம்.

சர்ச்சரைவடிவு-பிணர்.

சலகுத்திரம்-அம்பி, காம்பி, காரம்பி, கிழார், பூட்டை.

சலஞ்சாதித்தல்-கறுவு, சாதனை, செறம்பு, செற்றம், தொரந்தம், வயிரம், வேரம்.

சலதாரை-அங்கணம், சுருங்கு, தூம்பு, புழல்.

சலாகை-சாரவம், நாராசம்.

சவை-அவை, கோட்டி, சங்கம், சமூகம், சாலம், அன்றியும், தருமசவை, ஆத்தானம்.

சனி - அந்தணன், அந்தன், கதிர்மகன், கரியவன், காரி, கீழ்மகன், சந்தில், சவுரி, சாவகன், தமனியன்,

• நீலன், கோய்முகன், பங்கு, மந்த ன், முடவன், முதுமகன், மேற் கோள்.

சா

சாட்சி-கரி.
சாணைக்கல்-நிலாவட்டம்.
சாதகப்புள்-சாரங்கம்.
சாதகமெழுதல்-சனனமெழுதல்.
சாதல்-அருகல், அலன்றல், இல்லென் றல், இறத்தல், உலத்தல், ஒழிதல், ஒய்தல், கழிதல், தபுதல், தவறல், துஞ்சல், நுவன்றல், பொன்றல், மடிதல், மாய்தல், மாளல், முஞ்ச ல், முடிதல், முசல், விடல், விளிதல், விடல், வீதல்.
சாதியின்பெயர்-குலத்லதக்காண்க.
சாதிலிங்கம்-இங்குலிகம், குலிகம்.
சாந்து-கலம்பகம், கலவைச்சேறு, க ளபம், காலேகவண்ணம், பிதம், வ ண்ணம், விரை, நால்வகைச்சாந்தி ன்பெயர், காலேகம், பிதம், புலி, வட்டிகை, பலவற்றுற்கூட்டியகுழ ம்பின்பெயர், கலம்பகம், கலவை, களபம், செச்சை, தேய்வை, சாந் திரு வுடலிலிடுங்கோலத்தின்பெ யர், தொய்யில், நுதலிலிடுங்குறியி ன்பெயர், திலகம், திலதம், புண்ட ரம்.
சாமம்-யாமம்.
சாமரம்-அகு, கவரம், கவரி, சவரம், சவரி, சேரம், கவரி, வெண்மயிர்.
சாம்பல்-அடலை, பலி, பூதி, வெண்பலி.
சாயை-இயல், சாயல், நிழல்.
சாய்தல்-இடைதல், இரிதல், உடைத ல், கெடுதல், சரிதல், கெரிதல், ம ழுவுதல்.
சாய்ந்தோர்மேர்படாமை-தழிஞ்சி.
சாரைப்பாம்பு - இராசிலம், இலஞ்சி, தண்டம்.
சார்தல்-அணுவுதல், அண்ணுதல், சா ர்ச்சி, தொடல், தோய்வு, நணுகு தல், பிடித்தல், புணர்தல், புல்லல்.
சாவு-அந்தம், அவிமாலினம், இலய ம், இறப்பு, இறுதி, உலப்பு, சமா தி, காசம், நிதனம், நெடுந்துயில், ப ஞ்சதம், பஞ்சதை, மரணம், மாய் வு, யோகம், விளிவு, வீ, வீவு.
சாறடை-திரிபுரி.

சி

சிங்கம்-அரி, அறுகு, ஆளி, கண்டீர வம், காளி, கேசரி, கொடும்புலி, கோளரி, சீயம், தெரிமா, நகாயுத ம், பஞ்சானனம், மடங்கல், மாபு லி, மிருகராசன், முடங்குளை, வட் புலி, வயப்புலி, வயப்போத்து, வ யமா, இதன்பெண், பெட்டை, இத ன்குட்டி, போதகம்.
சிங்கவிராசி-அரிமா, ஆளி, ஐயானன ம், புலி, சிங்கத்தின் புலியிவற்றின் பெயரெல்லாம்பெறும்.
சிங்காசனம்-அரியணை, பத்திராசனம்
சிச்சிலிக்குருவி-கவுதம், சிரல், சித்திரி, பொன்வாய்ப்புள்.
சித்திரகாரர்-ஓவியர், சித்திரர், சிற்ப ர், மோகர், யவனர்.
சித்திரகாரர்விதி-ஆவேசனம்.
சித்திரகூடம்-அம்பலம், தெற்றி.
சித்திரப்படம்-கிழி.
சித்திரமெழுதல்-இரேகை, தீட்டல், பொறித்தல், வரித்தல், வரைதல்.
சித்திரம் - ஓவியம், துகிலிகை, வட் டிகை.
சித்திரைநாள் - அறுவை, ஆடை, கூ லவை, செவ்வி, தச்சன், துவட்டா நாள், நாசு, நடுநாள், நெய், பயறு, மீன்.
சித்திரைமாதம்-சைத்திரம், மது.
சிந்தல்-உகுத்தல், உளர்தல், சிதர்தல், தவர்தல், தூவல்.
சிந்தூரம்-சேலேகம்.
சிரமஞ்செய்தல்-உழக்குதல், பருமித் தல்.
சிரிப்பு - ஆசம், ஆர்ப்பு, இளி, நகை, முறுவல், மூரல், அன்றியும், அவ மதிச்சிரிப்பு, அசி, ஆசியம், இளி.
சிலந்திப்பூச்சி-உலூதை, சிலம்பி.
சிலம்பக்கூடம்-அரங்கம்.
சிலம்பிற்பெய்தபருக்கைக்கல்-அரி, சி ரம்பம், சிலம்பம்.
சிலம்பு-அரவம், அரி, ஞெகிழி, தளை, நூபுரம், பரிபுரம்.
சிவசமையத்தோர் - காளாமுகர், சை வர், பாசுபதர், மாவிரதியர்.

சிவப்பு - அத்து, அரக்கு, அரத்தம், இங்குலிகம், இராகம், உலோகிதம், கிஞ்சுகம், குருதி, குலிகம், சிந்துாரம், சிந்தூரம், செக்கர், செம்மை, செய், சே, சேதகம், சேது, சேத்தல், சேத்து, சேந்து, சேப்பு, சோணம், சோணிதம், துப்பு, துவர், படீரம், பாடலம், பூவல், அன்றியு மிகுசிவப்பு, அருணம், கறுப்புகலந்தசிவப்பு, ஆமலம், தாமிரம், பொன்மைகலந்தசிவப்பு, பிங்கம், பிசங்கம்.

சிவல்-பகன்றை.

சிவனாயுதங்கள்-சூலம், பாசம், பினாகமென்னும்வில்.

சிவனூர்தியுங்கொடியும்-விடபம்.

சிவனைம்முகம்-அகோரம், ஈசானம், சத்தியோசாதம், தற்புருடம், வாமம்

சிவன் - அந்தகாரி, அந்திவண்ணன், அரவணிந்தோன், அரன், அழலாடி, அழலேந்தி, ஆலமர்கடவுள், ஈசானன், ஈச்சுரன, ஈமத்தாடி, உமாபதி, உருத்திரன், எண்டோளன், ஏறூர்ந்தோன், ஐமுகன், கங்காதரன், கங்காளன், கங்கைவேணியன், கண்ணுதல், கபாலி, கயிலையாளி, கரியன், கறைமிடற்றோன், காமநாசன், காமாரி, காலகாலன், கிரிசன், கிரீசன், குன்றவில்லி, கூற்றுதைத்தோன், கொன்றைசூடி, சங்கரன், சசிதரன், சடைமுடியோன், சதாசிவன், சந்திரசேகரன், சம்பு, சுடலையாடி, சூலபாணியன், சூலி, தந்தியுரியோன், தாணு, திரிபுராந்தகன், திரியம்பகன், நக்கன், நந்தி, நந்திகேச்சுரன், நம்பன், நீலகண்டன், நீறணிந்தோன், பசுபதி, பரசுபாணி, பவன், பாண்டரங்கன், பார்வதிகொழுநன், பிஞ்சகன், பித்தன், பிறப்பிலி, பிறைசூடி, பினாகபாணி, புரமூன்றெரித்தோன், புலித்தோலுடையோன், பூதநாதன், பெருமான், பேயுடனாடி, மங்கைபாகன், மழுவாளி, மாலயற்கரியோன், மானிடமேந்தி, முக்கண்ணன், மூர்த்தி, யானையுரித்தோன், யோகி, வரன், வாமதேவன், விடையோன்.

சிவன்கூத்து-காபாலம், கொடுகொட்டி, பாண்டரங்கம்.

சிவன்புதல்வர்-குமரன், விநாயகன், அன்றியும், சிவனிந்திரியத்தாற் திருமால்கையிற் பிறந்த பிள்ளை ஐயனார்.

சிவன்மனைவிகள்-கங்கை, பார்வதி.

சிவேதை-பகன்றை.

சிள்வண்டு-சிதடி, சிமிலி, சில்லி, சில்லிகை, சில்லை, சிள்வீடு, நெடி.

சிறுகீரை - சாகம், சாகினி, சில்லி, மேகநாதம்.

சிறுசவளம்-குந்தம்.

சிறுசின்னம்-தாளம், பீலி.

சிறுசெண்பகம்-கருமுகை, சாதி, பித்திகை, மாலதி.

சிறுதூறு-அரில், அறல், இறும்பு, பதுக்கை, பொற்றை.

சிறுபூளை-உழிஞை.

சிறுமை-அணு, அற்பம், ஆசு, இறை, கன்று, கிஞ்சம், கிலம், கை, சிறுவரை, சின்னம், தனு, தன்னம், தினை, தோகம், பையுள், முளரி, வஞ்சம், வறிது.

சிறை-காவல், சிக்கம்.

சிறைப்படல் - தளைப்படல், வலைப்படல்.

சிற்பாசாரியர் - மண்ணீட்டாளர், முறைதெரிந்தோர்.

சிற்றில்-குடங்கர், குடிசை, குடில், குரம்பை, கூரை.

சிற்றுண்டி-அஃகுல்லி, அப்பம், இடி, பிட்டு.

சினக்குறிப்பு-கனறல், கறுப்பு, கன்றல், காந்தல், குறுகுறுப்பு, கொதித்தல், சிவப்பு, சுளித்தல், சுளிவு, புகைதல், புழுங்கல், பைத்தல், வெதிர்ப்பு, வெய்துறல்.

சினம்-உடற்றல், உடன்றல், உருத்தல், உறுக்கல், கடிதல், கடுத்தல், கதம், கலாம், கறுவம், காத்திரம், காய்தல், குரோதம், கோபம், சினவுதல், சீற்றம், சுளித்தல், சுளிவு, செயிர், செற்றம், தனி, தெழித்தல், செழுந்தல், மறம், முனிதல், முனிவு, முனைவு, விடைதல், வியர்ப்பு, வெகுளி, வெறுத்தல், வேகம், அன்றியும் பெருங்கோபத்தின்

பெயர், உறல், உருத்தல், உருத்திரம், கரிதல், கனிதல், குருத்தல், கொந்துதல், கோம்பல், சிறல், தீவிரம், விடைத்தல், வெம்பல், தணியாக் கோபத்தின்பெயர், சுறவு, சலம்.

சிநேகம்-இருவி, கருவி, களன், கேண்மை, கேள், சேயம், தொடர்பு, நட்பு, நவம், பக்கம், மித்திரம்.

சிநேகிதர் - ஆர்வலர், ஆவலர், இல்லுநர், எட்டினர், ஒட்டுநர், ஒல்லுநர், ஒன்றுநர், காதலர், காதலித்தோர், சேர்ந்தோர், துன்னுநர், தொடர்நரோர், நசைநர், நயக்தார், நயவர், நல்லவர், நள்ளுநர், நேர்ந்தார், பலைந்தார், புரிந்தோர், புல்லுநர், பெட்டார், மித்திரர், மேவினர், விழைந்தோர், வேட்டோர்.

சீ

சீக்கிரத்தின் குறிப்பு-ஐயெனல், கதுமெனல், குத்திரம், கோரம், கண்டம், ஞெரேலெனல், ஞெள்ளல், தொய்தெனல், பொருக்கெனல், பொள்ளெனல், வெய்தெனல்.

சீக்கிரமுடையோன்-கவனன், வேகி.

சீக்கிரம்-ஆசு, ஈண்டு, ஒல்லை, கடி, கடுசல், கடுப்பு, கதழ்வு, கவனம், சடுதி, சபதி, சவம், துனைவு, துரிதம், துருசு, துவல், நொறில், பரி, முடுகல, வல், வல்லை, விசை, விதப்பு, விரைவு, வெம்மை, வெறி, வேகம்.

சீதை-சானகி, செய்யாள், மைதிலி, வைதேகி.

சீந்திற்கொடி-அமுதவல்லி, சீவந்தி.

சீப்பு-கங்கம், சிக்கம், மயிர்வாரி.

சீலை-அம்பரம், அறுவை, ஆசாரம், ஆசிடை, ஆடை, ஆவரணம், இடைதல், இலக்காரம், உடுக்கை, உடை, உடைம், ஒலியல், கஞ்சிகை, கண்டை, கத்தியம், கந்தை, கப்படம், கலிங்கம், கலை, காடகம், காண்டம், காழகம், கூறை, கோசிகம், கோடி, கோடிகம், சப்படம், சம்பரம், சாடி, சிற்றில், சீரை, குடி, சேலை, தானை, துகில், துசு, தூட்டி, தூரியம், தோக்கை, நீவி, நிவியம், பஞ்சு, படாம், பட்டம், பட்டி, பட்டிகை, பரிவட்டம், பிடியல், புங்கம், புடவை, புட்டம், புனைமடி, மாதகம், மேகலை, வட்டம், வட்டுடை, வத்திரம், வாசம், வாதனம், அன்றியும் பட்டுச்சீலையின் பெயர், கவுசிகம், காம்பு, கோசிகம், தேவாங்கம், நேத்திரம், பணி, பரணம், பாவிதம், நற்சீலையின்பெயர், நாகம், பாரி, மரவுரியின்பெயர், ஆசிவி, இறைஞ்சி, சீரம், சீரை, வற்கலை, மயிர்ப்படாத்தின் பெயர், மயிரகம், வயிரியம், சீலைத்துணியின் பெயர், சிதர், சிதலை, சிலா, பட்டிகை, பறிவை, சித்திரப் படாத்தின் பெயர், புத்தகம்.

சு

சுக்கிரன்-அசுரர் மந்திரி, அநாவிலன், ஆசான், உசனன், ஒள்ளியோன், கவி, காப்பியன், சல்லியன், சிதன், சிதகன், சுங்கன், தயித்தியமந்திரி, நற்கோள், பளிக்கு, பார்க்கவன், பிரசுரன், பிருகு, புகர், புயல், மழைக்கோள், வெள்ளி.

சுக்கு-சுண்டி, நாகரம்.

சுடுகாடு-அறக்காடு, இடுகாடு, இறந்தோர்சேரிடம், ஈமம், காடு, காளவனம், சுடலை, சுடுநிலம், படுகாடு, பிணக்காடு, பிதிர்வனம், புறங்காடு, மயானம், வனம்.

சுட்டசாந்து- களபம், சுடுசுண்ணம், சுதை, மண்.

சுட்டி-சுட்டிகை, திலகம், திலதம்.

சுட்டுச்சொல்-அது, அவன், அவை, அவ், இது, இவன், இவை, இவ், உது, உவன், உவை, உவ்.

சுட்டெழுத்து-அ, இ, உ.

சுண்டில்-சுச்சு.

சுத்தஞ்செய்தல்-உவளித்தல், துப்புரவாக்கல்.

சுத்தம், உபலாளனம், சவுசம், சுசி, துப்பு, தூ, தூய்து, தூய்மை, பவித்திரம், பாவனம், புனிதம், பூதம், மேத்தியம், வால்.

சுமத்தல்-தரித்தல், தாங்கல், தூரியம், தூர்வகம், பரித்தல், பொறுத்தல்.

சுமை-பரி, பாரம்.

சும்மாடு-கடும்பு, சிம்புரி, சுடுவு, சுமடு, சுமையடை.

சுரபுன்னை-வழை.
சுரை-அலாபு, தும்பி.
சுவர்-குட்டியம், பித்திகை.
சுவாலை-இந்தனம், மேலம்.
சுவை-இரதம், சுதை.
சுழலல்-அலமரல், உழலல், உழிதால், கறங்கல், கொட்பு, சுலவுதல், சூர்த்தல், சொரிதரல், திரிதால், தெருமரல், பிரமணம், பிரமரி, மறுகல்.
சுழல்காற்று-சாரிகை, சூறுவளி, சூறை, வளி.
சுளகு-சூர்ப்பம். [மகரம்.
சுறு-ஏறு, கலை, களிறு, சுறவு, தகர்,

சூ

சூடு-சந்தாபம், தாபிதம், தூபிதம்.
சூதகப்பொது-ஆசுசம், புனிறு, அன்றியு மகளிர்சூதகம்-இருது, தொடக்கு, பூப்பு, வாலாமை.
சூதாடுகருவி-ஆயம், கவறு, கழங்கம், சாரி, சாரிகை, தாசு, தாயம், வட்டு, வல்.
சூதாடுதற்குவகுத்தவறை-அரங்கு.
சூத்திரர்-அயன்பதத்துதித்தோர், இசையுந்தொழிலர், உழவர், களமர், காராளர், சதுர்த்தர், பின்னவர், மண்மக்கள், வினைஞர், வெண்களமர்
சூரியகிரணம்-கதிர், கரம், தீவிரம்.
சூரியசந்திரரைச் சூழத்தோன்றும்வட்டம், ஊர்கோள், பரிவேடம், பரிதி, வட்டம்.
சூரியமண்டலம்-விசயம்.
சூரியன்-அண்டயோனி, அரி, அரியமா, அருக்கன், அருணன், அலரி, அழலவன், அனலி, ஆதவன், ஆதித்தன், ஆயிரஞ்சோதி, இரவி, இருள்வலி, இனன், உதயன், எல், எல்லை, என்று, என்றூழ், எழ்பரியோன், ஒளி, ஒளியோன், கதிரவன், கனலி, கிரணமாலி, சண்டன், சவிதா, சான்றோன், சித்திரபானு, சுடரோன், சூரன், செங்கதிரோன், சோதி, ஞாயிறு, தபனன், தரணி, திவாகரன், தினகரன், தினமணி, நபோமணி, பகலோன், பகல், பங்கயன், பதங்கன், பரிதி, பர்க்கன், பனிப்பகை, பானு, மார்த்தாண்டன், மித்திரன், விகர்த்தனன், விண்மணி, விரிச்சிகன், விரோசனன், வெஞ்சுடர், வெயில், வெய்யோன்.
சூரியன்வாகனம்-ஒற்றையாழித்தேர், பொற்றேர்.
சூரியன்றேர்ப்பாகன்-அருணன், அனூரு, கருடன்மூத்தோன், காலிலி, சூதகுதன்.
சூலம்-கழு, கழுமுள், காளம், குலிர், சத்தி, முச்சுடுமி, முத்தலை, மூவிலை.
சூழ்ந்திடல்-கோலல், சுற்றுதல், சூழ்தல், சூழபோதல், வலத்தல், வளாகம், வளைத்தல்.
சூளை-சுள்ளை.

செ

செக்கான்-சக்கிரி, கந்தி.
செக்கு-கானம், பூட்டை.
செங்கருங்காலி-சிறுமாரோடம்
செங்கல்-இட்டிகை.
செங்கழுநீர்—குவளையைக்காண்க
செஞ்சந்தனம்-அட்டி, அறுகம், சல்லியம், பிசனம், மதுரம்.
செட்டிகள்-அயனூருவில்வந்தோர், இப்பர், எட்டியர், சிலேபியர், தனவைசியர், துணிகர், தேசிகர், தோன்றிகர், நாய்கர், பரதர், வணிகர், வாணிபர்.
செண்பகம்-சண்பகம்.
செத்தை-காடு, சிக்கு, சோதினி, துரால், தூர்வை, நரல், மயல்.
செந்நாய்-அண்டிகம், கொக்கு, கோகம், மூடுவல், விருகம்.
செப்பஞ்செய்தல்-சித்தல், தூய்தாக்கல்.
செம்பஞ்சு-அரத்தம், அலத்தகம், அலத்தம்.
செம்பரத்தை-மந்தாரம்.
செம்பு-உதம்பரம், எருவை, சேருணம், சேருள், சுற்பம், தாம்பிரம், வடு
செம்போத்து-குக்கில்.
செம்மறிக்கடா-அரி, எழகம், கம்பளம், தகர், திண்ணகம், மேழகம்.
செம்மறியாடு-கொறி, துருவை, மை
செம்முள்ளி-குறிஞ்சி.
செய்கண்டி-பாரந்தவட்டிகை.
செயலின்மை-கையறல்.
செய்கடன்-நியதி, நியமம்.

செய்தல்-அமைத்தல், அயர்தல், ஆடல், ஆற்றல், இழைத்தல், குயிறல், குயிற்றல், சமைத்தல், செயவைப ணல், புரிதல், மாடல், வனைதல், அன்றியு மிக்கசெயல், ஊராண் மை, அரியசெயல், பேராண்மை, நெறிதிறப்பயில்வு, நொறு.
செருந்திமரம்-செங்கோடு, பஞ்சரம்.
செருப்பு-சமல், தொடுதோல், பாத காப்பு.
செலுத்தல்-அசைத்தல், இயக்குதல், உகைத்தல், உய்த்தல், ஊர்தல், எவல், ஓச்சல், ஓட்டல், கடத்தல், தூண்டல், நடாதல், முடுக்கல்.
செல்வம்-ஆக்கம், இடம், உத்தி, சீர், திரு, தனம், நிழல், பூதி, பெருக்கம், பொறி, போகம, மா, மாடு, வாழ்க்கை, விபவம், விபூதி, விருத்தி, வெறுக்கை.
செவிடர்-வதிரர்.
செவிலித்தாய்-கைத்தாய், கோடாய், தாதி, வளர்த்தாள்.
செவ்வாய் - அங்காரகன், அரத்தன், அழலோன், அழல், அறிவன், ஆரல், உதிரன், குசன், குருதி, செந்நிறவண்ணன், சேய், நிலமகன், பௌமன், மங்கலன், வக்கிரன்.
செவ்வை - அத்து, இருசு, செப்பம், செம்மை, செவ்வன், செவ்வு, நெறி, நேர். [தல்
செழித்தல் - அழித்தல், பாதிடு, பெய்

சே

சேங்கொட்டைமரம் - எரிமுகி, பல்லாதகி, விரசகி.
சேமக்கலம்-எதிமணி.
சேம்பு-சகுடம், சாகினி.
சேரன்-உதியன், குடகன், குடக்கோன், குட்டுவன், கேரளன், கொங்கன், கொல்லிவெற்பன், கோதை, சேரலன், பனந்தாரான், பூழியன், பொருநைத்துறைவன், பொறையன், போந்தின்றாரோன், மலையமான், மலையன், வஞ்சிவேந்தன், வானவரம்பன், வானவன், வில்லவன்.
சேரன்குதிரை-பாடலம். அவன்கொடி, விற்கொடி. அவன்மாலை, பனைமாலை.

சேறு - அங்கணம், அசறு, அளக்கர், அளறு, அள்ளல், கலவை, கழனி, காலாம், கும்பி, குழம்பு, குழை, கூழை, கொள்ளம், சகதி, சிறுமியம், செதும்பு, செய்யல், சேதகம், தொய்யல், தொளி, தொள்ளம், தொள்ளி, தோணி, பங்கம், பூழி, வதி, அன்றியும்பெருஞ்சேறு, நொதி. சேற்றிலெழுங் குமிழி, பூழி, பொகுட்டு.

சொ

சொரிதல் - உமிழ்தல், எக்கர், சோனை, பனித்தல், பொழிதல்.
சொலித்திடல்-இடத்தல்.
சொல் - அசைப்பு, அறை, இசை, இசைப்பு, இயம், உத்தி, உரை, கதை, கரை, காதை, கிளவி, கிர், குயில், கூற்று, செப்பு, தோல், தோற்றம், நுவல், நுவற்சி, நொடி, பகர்ச்சி, பணி, பதம், பயில், பறை, பனுவல், பாணி, புகறல், பேச்சு, மறை, மாற்றம், மொழி, வாக்கு, வாணி, வாய்மை, விளம்பு, விளு, அன்றியும் பயனில்சொல்லின் பெயர், அசர்த்தம். பலாதிசொல்லின் பெயர், பெருஞ்சொல். மறைத்த சொல்லின்பெயர், இடக்கரடக்கல், எக்கர், கூசனம். நிரம்பாமெல்லியசொல்லின்பெயர். உல்லாபம், குதலை, கொஞ்சல், மழலை, மிழலை, மிழற்றல். தேவர்மொழியின் பெயர், சங்கதம், சாருக்கிரகம். இழிசனர் மொழியின்பெயர், அவப்பிரஞ்சம். எல்லாநாட்டின்மொழியின்பெயர், பாத்தம். இவைமூவகைப்படும், வடசொற்றிரிந்தமொழி, தற்பவம். வடமொழிக்கும் பிறபாடைக்கும்பொதுவை, தற்சமம். அவ்வவநாட்டிற்குரிய சொல், திசைச்சொல், தேசியம்.
சொல்லுதல் - அதிர்த்தல், அறைதல், ஆடல், இசைத்தல், இயம்பல், இறுத்தல், உரைத்தல், ஓதுதல், [கதைத்தல், கத்துதல், கரைதல், கிளத்தல், குயிலல், குயிறல், கூவல், கூறல், சாற்றல், செப்பல், சொற்றல், தெரித்தல், நவிலல், நவிறல், நு

வலல், கொடித்தல், பகர்தல், பணித்தல், பயிலல், பயிறல், பரவல், பறைதல், பன்னல், பிதற்றல், பிறழ்தல், புகலல், புகறல், பேசல், மிழற்றுதல், மொழிதல், வகுத்தல், வலத்திடல், வழங்கல், விளத்தல், விரித்தல், விளம்பல்; அன்றியும் விடாதுபேசலின்பெயர்-சந்தநதல், பிதற்றல்; சிரித்துப் பேசலின்பெயர்-அசதி; நகைச்சொல்லின்பெயர்-நயச்சொல், நளினச்சொல்; கூறியது கூறலின்பெயர்-புனருக்தி; பரிந்துபேசலின்பெயர் - கொண்டாடல், மெச்சல்.

சோ

சோதிடநூல்-எண், கணிதம்.

சோதிநாள்-அனிலநாள், காற்று, தீபம், துவனி, துளக்கம், மரக்கால், விளக்கு, வீழ்க்கை, வெறுநுகம்.

சோம்பல்-அசைதல், அலசல், அமைதல், அழுங்கல், அஞ்சி, ஆலசியம், சம்படம், சோகம், சோபம், சோம்பு, ஞொள்கல், தளர்ச்சி, துஞ்சல், தூங்கல், மடி, மந்தம், மாழ்தல், மூரி

சோர்வு-கயக்கு.

சோலை-அடவி, அரி, ஆராமம், உத்தியானம், உய்யானவனம், கா, கானம், கோடரம், தண்டலை, துடவை, நந்தனவனம், பூந்தோட்டம், பொழில், மரச்செறிவு, அன்றியுமூர்செறிந்த சோலையின்பெயர், பாணி, வனம்; கடற்கரைச்சோலையின்பெயர், கானல்.

சோழன்-அபயன், ஆரக்கண்ணியன், எழுநன், கிள்ளி, கோழிவேந்தன், சூரியன், செம்பியன், சென்னி, நேரியன், நேரிவெற்பன், புலிக்கொடியோன், புனனாடன், பொன்னித்துறைவன், மால், வளவன்.

சோழன்.குதிரை - கோரம்; கொடி, புலிக்கொடி; மாலை, ஆத்திமாலை.

சோளம்-இறுங்கு, சொன்னல்.

சோறு-அசனம், அடிசில், அமலை, அமுது, அயினி, அவி, அழுப்பு, அன்னம், உணா, உண்டி, ஊண், ஓதனம், கவளம், கூழ், சதி, சரு, சாதம், சொன்றி, துப்பு, தொடுபதம், தாரி, நிமிர்தல், பதம், பலி, பாத்து, பாளிதம், பிசி, பிண்டம், புகர்வு, புழுக்கல், புளகம், புன்கம், பொம்மல், பொருகு, போசனம், போனகம், மடை, மிசை, மிதவை, மூரல், வல்சி, அன்றியுங்கட்டுச்சோறு, ஆற்றுணா, தோட்கோப்பு, பாதேயம், பொதிசோறு.

சோனகர்-உவச்சர், யவனர்.

ஞா

ஞாழல்-பலினி.

ஞானம்-ஆற்றல், உரம், ஒதி, சிதம், போதம், விச்சம், வித்தை.

த

தகழி-இடிஞ்சில், பாண்டில்.

தங்கல்-அசைதல், அல்கல், ஆர்தல், இயங்கல், இருத்தல், இறுத்தல், இறை, தரித்தல், தாழ்தல், தெவுட்டல், தேறல், வதிதல், வலிதல், வைகல்.

தச்சர்-சித்திரர், சூத்திரர், தபதியர், மரவினையாளர், யாணர்.

தடவல்-உளர்தல், தைவரல், நீவல், வருடல், இவற்றுட்காலைத்தடவலின்பெயர், தைவரல்.

தடாகம்-அயம், அலந்தை, ஆவி, இலஞ்சி, உவளகம், ஏரி, எல்வை, ஓடை, கயம், கிடங்கு, குட்டம், குண்டம், குழி, குளம், கேணி, கோட்டம், சரசு, சலதரம், சுனை, சூழி, தடம், தாங்கல், நளினி, நீர்நிலை, பங்கம், படு, படுகர், பட்டம், பண்ணை, பயம், பல்வலம், பொய்கை, மடு, வட்டம், வாவி.

தடி-எறுழ், கதை, தண்டு, அன்றியுங் குறுந்தடியின்பெயர், குணில்.

தடுத்தல்-ஆணை, தகைதல், தட்டல், வாரணம், வாரணை, வாரணையம், வாரித்தல்.

தட்டார்-அக்கசாலையர், செங்கொல்லர், சொன்னகாரர், பொன்செய்கொல்லர், பொன்வினைமாக்கள்.

தணக்குமரம்-நுணவை.

தண்டாயுதம் - எறுழ், கதை, சிர், முனை, வயிரம்.

தண்டை-காற்றண்டை, சிர்.

தந்திரியர்-அமாத்தியர், எருதியர், விதியர்.

தந்தை-அத்தன், அப்பன், அம்மான், அய்யன், என்முன், குரவன், சனகன், தகப்பன், தாதா, தாதை, பிதா.

தமிழ்-திராமிடம், திராவிடம், திராயிடம், த்ராவிடம்.

தமிழ்கூத்தர்-வாயிலோர்.

தமையன்-அண்ணல், அண்ணன், சேட்டன், தலைவன், முன்றோன்றல், முன்னவன், மூத்தோன், வரன்.

தம்பட்டம்-ஆனகம், திண்டி, படகம், பணவம்.

தம்பலப்பூச்சி-இந்திரகோபம், ஈயல், கோபம், மூதா.

தம்பலம்-தம்பல்.

தம்பி-அவரசன், அநுசன், இளவல், இளையோன், உவா, கனிட்டன், பின்னை, பின்றோன்றல், பின்னவன், பின்றோன்.

தயிர்-ததி, பெருகு, முசரு.

தயிர்கடைதறி-வெளில்.

தயிர்கடைதாழி-குடாறு, மந்தனி.

தரா-மதுகம்.

தரித்திரம்-அல்கல், இரப்பு, இலம்பாடு, இல்லாமை, இன்மை, உறுகண், ஒற்கம், குறைவாழ்க்கை, குறை, சிறுமை, நல்குரவு, நிரப்பு, மறல், மிசை, மிச்சை, மிடி, வறுமை.

தரித்திரன்-அற்றுன், அகலன், ஆற்றுன், இலம்பாட்டோன், இல்லோன், உறுகணாளன், ஏழை, கிஞ்சன், தீனன், நயருறுவோன், நல்கூர்ந்தோன், பேதை, மிடியன், வறியோன்.

தருக்கம்-நியாயம், யூகம், வாதம்.

தருப்பை-குசம், குசை, கூர்ச்சம், பவித்திரி.

தருமம்-அறம், சீலம், சுகிர்தம், புண்ணியம்.

தருமராசன்-அறத்தின்மைந்தன், உதிட்டிரன், குந்திபுதல்வன், குவளைத்தாரான், பாண்டுமைந்தன், பொறையன், முரசக்கொடியோன், மெய்விரதன்.

தலை-உச்சி, உத்தமாங்கம், உவ்வி, கம், சிகரம், சிரம், சென்னி, நவிரம், மத்தகம், முடி, முண்டம், மூர்த்தம், மூர்த்தினி, தலையோட்டின்பெயர், ஓடு, கபாலம், வெண்டலை; தலையோட்டுப்பொருத்து, கரோடி; தலையிற்றரிப்பதின்பொது, சேகரம் தலைச்சாத்து.

தலைக்காவல்-இளை, உக்கிரம்.

தலைக்கோலம்-பங்குசம், பிஞ்ஞகம்.

தலைச்சீரா-சீசகம், சித்தகம், சிரகம், தலைத்திராணம்.

தலைப்பாளை-தொய்யகம்.

தலையணை-உபதானம்.

தலைவனைப்பிழைத்தின்ற சோரபுத்திரன்-குண்டகன்.

தலைவன் - அன்பன், ஆர்வலன், உரியோன், கணவன், கண்டன், காதலன், காந்தன், காவலன், கேள்வன், கொண்கன், கொழுநன், தலைமகன், தவன், துணைவன், நண்பன், நாயகன், பதி, பத்தா, பிரியன், புருடன், மணமகன், மணவாளன், வல்லவன், வேட்டோன்.

தலைவி - அடிகள், அத்தை, அரசி, ஆசாள், ஆட்டி, இறைமையாட்டி, இறைவி, ஐயை, கிழத்தி, கோமாட்டி, கோமாள், சாமி, செல்வி, பெருமாட்டி, முதல்வி.

தவத்தோர்பீடம்-விட்டரம்.

தவப்பெண் - அம்மை, அவ்வை, ஐயை, கந்தி, கவுந்தி, கன்னி, பைமை.

தவம்-உவவு, தவசு, நன்னிலை, நோற்றிடல், நோன்பு, நோன்மை, படிவம், மாதவம், வாதை, விரதம்.

தவளை-அண்டசம், அரி, காஞாரம், தேரை, நீகம், நுணலை, போகம், மண்டுகம், மரை.

தவிடு-முட்டை.

தழும்பு-அங்கிதம், கசடு, கச்சை, காய்ப்பு, சுவடு, வசி, வடு; வடுப்படலின்பெயர், சதுவாய்.

தழுவுதல் - ஆலிங்கனம், முயக்கல், விள்ளல்.

தளர்தல்-இழுக்கல், ஒல்கல்.

தளர்வு - கிட்டளம், உடைப்பு, எளிமை, எட்டை.

தளிர்-அலங்கல், உலவை, உல்லரி, கிசம், கிசலம், கிசலயம், கிளை, குழை, தழை, பல்லவம், மஞ்சரி, முறி, வல்லரி.

தள்ளல்-ஊன்றல், நூக்கல், நோன்றல், தறித்தல், ஏற்றல், கண்டித்தல், காறுதல், தடிதல், துண்டித்தல், பகுத்திடல், பரிதல், வெட்டல்.

தனித்திருக்குமிடம்-ஏகாந்தம், ஒருவந்தம், வெளியிடம்.

தனிமை - அந்தரம், ஏகம், ஒருமை, கேவலம், புலம்பு, விறு.

தனுவிராசி-காண்டீபம், கோடுமரம், சாபம், சிலை, துரோணம்.

தன்மேம்பாடு தானிகழ்த்தல் - நெடுமொழி கூறல்.

தா

தாடி-கட்டம், கீழ்வாய், மோவாய்.

தாண்டல்-அகறல், இகுத்தல், கடத்தல், தத்துதல், தரணம், தாவுதல், நீடுதல், பாய்தல், பாவுதல்.

தாமதம் - பாணி, விளம்பம், விளம்பனம்.

தாமரை - அம்புயம், அம்போருகம், அரவிந்தம், ஆய்மலர், இண்டை, கஞ்சம், கமலம், குசேசயம், சதபத்திரி, சரோசம், சரோருகம், சலசம், சாரசம், தூது, திருமலர், திருமாலுந்தி, தோடகம், நளினம், நீரோருகம், பங்கயம், பதுமம், பற்பம், புட்கரம், முண்டகம், முளரி, வனசம், வாரிசம், அன்றியுஞ் செந்தாமரையின் பெயர், கோகனகம்; வெண்டாமரையின்பெயர். புண்டரிகம்.

தாமரைக்காய்-வராடகம்.

தாமரைக்கொட்டை-கன்னிகை, பொகுட்டு.

தாமரைப்பூ-இராசீவம், இறும்பு.

தாமரையுட்சுருள்-பீசம், வலயம்.

தாம்பு-கன்னி, தாமணி.

தாய்-அம்மனை, அம்மை, அவ்வை, அன்னை, ஆயி, ஆய், ஈன்றாள், சநி, தம்மனை, தல்லி, தௌவை, பயந்தாள், மாதா, மொய்த்தாய்.

தாழி-அகளி, சாடி, தளம், பதலை.

தாழை-கண்டல், கேதகை, கைதை, மடி, முகரி, முசலி, முடங்கல், முண்டகம்.

தாழ்தல்-இறைஞ்சல், குரங்கல்.

தாழ்த்தல்-ஆழ்த்தல், இகுத்தல், நாலல்.

தாழ்வு-அகப்பு, அதம், இழிபு, குன்று, சாய்வு, தஞ்சம், தன்னைமை, தூங்கல், வட்டம்.

தாளம்-கஞ்சம், கஞ்சனம், கிட்டி.

தாளம்போடல்-ஒத்தறுத்தல், தட்டல், வட்டித்தல்.

தாளவொத்து-சதி, சீர்.

தாளிக்கொடி-மஞ்சிகம், மஞ்சிகை.

தார்-கடிகை, சிப்பு, தாழ்ப்பாள்.

தான்றிமரம்-கலித்துருமம்.

தி

திசை - அம்பரம், அரிதம், ஆசை, உலகு, கருபம், காட்டை, கோ, திகை, திக்கு, மாதிரம், வம்பல், விசும்பு.

திட்டை-திடர், பதுக்கை, பாறை, முரம்பு, அன்றியுமணற்றிட்டையின் பெயர், புளினம்.

திண்ணியன் - அவணன், சமர்த்தன், திறலோன், பண்ணவன், பொருநன், மள்ளன், மிண்டன், மீளி, வண்டன், வயவன், வல்லான், வல்லுநன், வியவன், விறலோன், வீரன்

திண்ணை-குறடு, திட்டை, மண்ணீடு, வேதி, வேதிகை.

தித்திப்பு-அமுதம், இழுது, இழுமு, இனிமை, கனி, சுவாது, சேறு, தீயம், தேக்கு, தேம், மதுகம், மதுரம்

திப்பிலி - ஆர்கதி, கலினி, காமன், சிறுமூலம், பிப்பிலி, மாகதி.

திமிர்தல்-துவர்தல், துறும்பல்.

தியானம்-யோகம்.

திரட்சி-அவயல், இராசி, இனம், உண்டை, கணம், கனை, காண்டம், குடந்தம், குப்பை, குவடு, குவிதல், குவை, குழியம், கொம்மை, சேடு, சேர்வு, சோகம், தரளம், துறுமல், தொகுதி, தொழுதி, பந்தம், பிண்டம், பிழம்பு, புஞ்சம், பூகம், மாழை, முடலை, முண்டம், முத்தை, வட்டு, வழி.

திரிகை-தட்டு, பந்து, வட்டம்.

திருடர்-கரவடர், கரவர், கள்வர், கையர், சோரர், தேனர், பட்டிகள், பித்தர், புரையோர்.

திருடல்-கரத்தல், கவர்தல், வவ்வல்.

திருவாதிரைநாள்-ஆதிரை, ஈசனாள், செங்கை, மூதிரை, யாழ்.
திருவிழா-உற்சவம், சாறு, சேறு, தீர்த்தம், துணங்கறல், முருகு.
திருவோணநாள்-உலக்கை, ஓணம், பிரவணம், சோவிளை, நன்று, மாயோனாள், முக்கோல், வயிரம்.
திரை-அலை, அறல், அலறு, கல்லோலம், சீகரம், தரங்கம், வாரம்.
திரைச்சீலை-அவிடி, எழினி, வமம், கஞ்சிகை, கஞ்சுகி, கண்டம், கவழிகை, கழனி, காண்டம், கையடம், படகம், படாம், பாரகம்.
திறக்குதல்-அங்காந்திடல்.
திவவு-கண்டுதி, செறி.
தினை-ஏனல்; அன்றியுங்கருந்தினை, இறடி, கங்கு, செந்தினையின்பெயர், கம்பு, கவலை, பைந்தினையின்பெயர், ஏனல்.
தினைத்தாள்-அருவி, இருவி.
தினைப்புனம்-ஏனல், வளாகம்.
தினைமா-இடி, துவணம், துவலை, பிண்டி.

தீ

தீ-அக்கினி, அங்காரகன், அங்கி, அயவாகனன், அரி, அழல், அனல், ஆரல், உதகவன், உதாசனன், எரி, எழுநா, ஒளி, கருநெறி, கனலி, கனல், காலவம், காற்றின்சகாயன், சாதவேதா, சிகி, சித்திரபானு, சுசி, சுடர், சூரன், செஞ்சுடர், சேர்ந்தார்க்கொல்லி, தெறுழி, தகனன், தபனன், தழல், தனஞ்சயன், தூமகேது, தென்கிழ்த்திசையோன், தேயு, நெருப்பு, பாவகன், மூளரி, வசு, வன்னி; அன்றியும், ஊழித்தீயின்பெயர், உத்தரம், உற்கம், கடையனல், தீத்திரள், மடங்கல், வடவாமுகம், வடவை.
தீக்கடைகோல்-அரணி, ஞெலிகோல்.
தீத்திரள்-அனற்றிரள், உற்கம்.
தீப்பொறி-கங்கம், ஞெகிழி, புலிங்கம்; காட்டுத்தீயின்பெயர், தாவம்.
தீமை-அந்தராங்கம், அந்தராயம், அலாபம், இன்னல், இன்னா, ஊறு, கோள், தீ, தீங்கு, தீது, தட்டு, மாயம், முட்டுப்பாடு, வலாபம், விக்கினம்.
தீர்தல்-நிவாரணம், நீங்கல், மோக்கம், மோசனம், விடுதல், விமோசனம்.
தீர்த்தம்-காண்டம், புட்கரம்.

து

துடிப்பு-சலிதம், முழை, மூழி.
துடைத்தல்-இருத்தல், துவட்டல், நீவல்.
துடைப்பம்-வாருகோல், விளக்குமாறு.
துணிவு-தெளிவு, தேறல், தேற்றம்; அன்றியுங் கருமமுடியுந்தனையும்விடாத்துணிவின்பெயர்-ஒப்பு, கடைப்பிடி, குறிக்கோள், தேற்றம்.
துண்டம-கடிகை, கண்டம், துணி.
துதித்தல்-ஏத்தல், துதி, தோத்திரம், நுதி, பாசுதல், பரவல், பழிச்சல், புகழ்தல், போற்றல், மிக்கூறல், மெச்சல், வழுத்தல், வாழ்த்தல், வியத்தல்.
துமலை-துரோணம்.
துரியோதனன்-அரவக்கொடியோன், காந்தாரிமைந்தன், குருடன்மைந்தன், சுயோதனன், திருதராட்டிரன்மைந்தன், நந்தியாவட்டத்தாமன், மன்னர்மன்னன், வணங்காமுடியினன்.
துரியோதனன்குலத்தோர்-குருகுலத்தார், கௌரவர், பாரதர், பாரதர், பௌரவர்.
துருத்தி-தோல்; அன்றியும், உலைத்துருத்தி-அத்திரி, உதி, சிவை, பத்திரி; பெருந்துருத்தியின்பெயர்-சிவிறி, பந்தம்; மட்டத்துருத்தியின் பெயர்-பக்கு; நீர்வீசுந்துருத்தியின்பெயர்-சிவிறி, சிறுதாரை.
துரோணாசாரியன்-கும்பசம்பவன், பாரத்துவாசி, மெய்ந்நூலன், வின்னூலாளன், வேதக்கொடியோன்.
துர்க்கை-அந்தரி, அமரி, அம்பணத்தி, அரியேறி, ஆளியூர்தி, எண்டோளி, ஐயை, கலையானத்தி, கலையூர்தி, கன்னி, காத்தியாயினி, கார்த்திகை, குமரி, கொற்றவை, கொற்றி, கௌரி, சக்கரபாணி, சக்கராயுதத்தி, சண்டிகை, சமரி, சயமகள், சுந்தரி,

குலி, தேவி, நாரணி, நாராயணி, நீலி, பகவதி, பாலைக்கிழத்தி, மயிட ற்செற்றுள், மலைமகள், மேதிச் சென்னி மிதித்தாள், வாள்கைக் கொண்டாள், விசயை, விந்தை, வி மலை, விரச்செல்வி, விரி.

தூர்கைக்கூத்தினபெயர்- மரக்கால்.

துலாராசி-கட்டளை, கோல், சீர், தரா சு, துலை, தூக்கு, நிறை, வாணிகன்

துவரை-ஆடகம், ஆடகி, முதிரை.

துவர்ப்பு-கசாயம், துவரம்.

துவளல் - அசைதல், உவளல், ஒல்க ல், திவளல், நுடங்கல், துணங்கல்

துளசி-குல்லை, துழாய், வனம், துளவ ம், துளவு, பிருந்தை.

துளைத்தல்-குயிறல், துருவல், தெளி தல், தொள்ளல்.

துளையுடைப்பொருள்-குயில், குழல், குழை, கோகுலம், தண்டு, தொள் ளை, புழல், புழை.

துறவு-சார்பறுத்தல், துறத்தல், நிவிர் த்தி, நீத்தல், நீப்பு, விரத்தி.

துன்பம்-அஞர், அரந்தை, அரித்தை, அலக்கண், அலந்தலை, அலந்தை, அல்லகண்டம், அல்லல், இடர், இ டுக்கண், இடும்பை, இட்டளம், இ ரக்கம், இன்னல், இன்னா, உறுக ண், உறுவல், எவ்வம், ஏதம், கம்ப லை, கலக்கம், கவலை, கவ்வை, கி லேசம், கேதம், கைதவம், கையா று, கோட்டாலை, சிந்தை, சிலுகு, சிறுகு, சிறுமை, சூர், செல்லல், தாபம், துக்கம், துயர், துரால், து ரிசு, துரிதம், துனி, தொய்யல், ந டலை, நொ, நோய், படர், பரிவு, ப ழங்கண், பனி, பாசறை, பிணி, பீ டை, பீழை, புன்கண், பைதல், பையுள், மம்மர், மிகை, யாதனை, வாதை, விழுமம், வீறா, வெய்து றல், வெறுப்பு, வேதனை.

தூ

தூக்கங்கள்-அறை, உத்தி, சல்லி, து ணி, தூக்கு, தொங்கல், மதலிகை.

தூக்கணங்குருவி - சிதகன், சிந்தன், தூக்கு, தூதுணம்.

தூண்-எழு, கந்து, கம்பம், கால், தம் பம், தாணு, தூணம், நிலைபேறு, ம தலை.

தூண்டில்-கோல், படிசம், வெளிசம்

தூதர்-ஒத்தபண்புரைப்போர், வழியு ரைப்போர், வித்தகர், வினையுரைப் போர்.

தூபக்கால்-இந்தளம், தடவு, தூபமு ட்டி.

தூரம்-சேண், சேய், சேய்மை, நீளம்; அன்றியுங் கூப்பிடுதூரத்தின்பெய ர்-எல்லை, குரோசம்; பறவையளவு தூரத்தின்பெயர்-கிரவுஞ்சம்.

முட்டை - அண்டம், அரிட்டம், கரு, குடம்பை, கோசம், சினை.

முட்பன்றி - எய், சமர், சல்லபம், சல்லியம், முண்மா, இதன்முள்ளின்பெயர், சலம், சலலம், சல்லி.

முதலை - அண்டசம், இடங்கர், சிஞ்சுமாரம், முசலி, வன்மீன், இதனாண், கரா, கராம்.

முதல்-அடி, ஆதி, தலை, தாள், முன்னர்.

முதுகு-அபரம், சுவல், துன்று, புறம், வெரிந், வெந்.

முத்திலா-பொறி, அன்றியு மடையாளத்தைக்காண்க.

முத்து - ஆரம், தரளம், திரட்சி, நாவி, நித்திலம், மணி, முத்தம், முத்தாபலம், மௌத்திகம்.

முத்துப்பிறக்குமிடம்- இப்பி, உடும்பு, கடன்மீன், கதலி, கமலம், கமுகு, கரும்பு, கொக்கு, சங்கு,

*செந்நெல், திங்கள், நந்து, நாகர், பசுவின்பல், பன்றிமருப்பு, மடந்தையர்கந்தரம், முதலை, மூங்கில், மேகம், யானைமருப்பு.

முந்திரிக்கொடி-கோத்திரிகை, மதுரசம், மதுரம்.

முயல்-சசம், இதன்பிள்ளை, குட்டி, குருளை, பறழ், பிள்ளை.

முயற்சி-ஆள்வினை, இயற்றி, உற்சாகம், உஞற்று, உத்தியோகம், உழப்பு, உள்ளம், தாளாண்மை, தாள்.

முருகனாயுதம்-வேல்.

முருகன்-அரன்மகன், அறுமீன்காதலன், அறுமுகன், ஆசான், ஆண்டலைக்கொடியோன், கங்கைமைந்தன், கடம்பன், கந்தன், கலையுணர்புலவன், காங்கேயன், கார்த்திகேயன், குகன், குமரன், குறிஞ்சி வேந்தன், குவடெறிந்தோன், கௌரிநந்தனன், சண்முகன், சரவணபவன், சிலம்பன், சுப்பிரமணியன், சுரேசன், சூர்ப்பகைவன், செட்டி, செவ்வேள், சேந்தன், சேய், சேவற்கொடியோன், தாருகற்செற்றோன், தாருகாரி, தெய்வயானைகாந்தன், தேவசேனாபதி, பாவகி, மஞ்ஞையூர்தி, மாயோன் மருகன், முருகு, வரைபகவெறிந்தோன், வள்ளிமணாளன், வாகுலேயன், விசாகன், வேலன், வேலிறைவன், வேள்.

முருகன்கூத்து-குடை, கொடுகொட்டி, துடி.

முருகன்கொடி-சேவற்கொடி.

முருகன்வாகனம்-மயில், யாடு, யானை.

முருக்கு - கவிர், கிஞ்சுகம், பலாசு, இவற்றுட் புனமுருக்கின்பெயர், பலாசு.

முருங்கை-சிக்குரு, அன்றியும்புனமுருங்கையின்பெயர், புன்கு.

முலை-அம்மம், உரோருகம், குயம், குருக்கண், கொங்கை, கொம்மை, சேக்கை, சொற்கம், தனம், நகிலம், பயோதரம், பறம்பு

முலைக்கண்-சிலீமுகம், சூசுகம்.

முலைப்பால்-பீர்.

முல்லை-ஊதிகை; கற்பு, தளவம், தளவு, வைதிகை, மாலதி.

முல்லைநிலத்தலைவன்-அண்ணல், கானகநாடன், குறும்பொறைநாடன், தோன்றல்.

முல்லைநிலத்தாறு-கருழி, கான்யாறு.

முல்லைநிலத்திராகம்-சாதாரி.

முல்லைநிலத்தூர் - ஆய்ப்பாடி, ஆவிரம், இடைச்சேரி, உவளகம், பாடி, வல்லி, வல்லியம்.

முல்லைநிலப்பறை - ஏறங்கோட்பறை, பம்பை.

முல்லைநிலமக்கள்-அண்டர், அமுதர், ஆயர், ஆன்வல்லோர், இடையர், இப்பர், கானவர், குடவர், கோபாலர், கோவைசியர், கோவர், கோவர்த்தனர், கோவலர், கோவிந்தர், தொறுவர், பொதுவர், முல்லையர், அந்நிலப்பெண்கள், ஆய்ச்சியர், இடைச்சியர், குடத்தியர், தொறுவியர், பொதுவியர்.

முழங்கை-கூபரம், கூற்பரம்.

முழந்தாள்-சாநு, முழந்து.

முளை-அங்குரம், கால், தரி.

முளைத்தல் - உருத்தல், கெழுமுதல், தோற்றல், நாறுதல், பொடித்தல்.

முள் - கடு, கண்டகம், அன்றியு முட்செடிப் பொதுப்பெயர், முண்டகம், முளரி.

முள்ளி-கண்டலம், முண்டகம்.

முறம் - சின்னம், சுளகு, சூர்ப்பம், தட்டு, முற்றில்.

முறித்தல்-அகைத்தல், இறுத்தல், ஒசித்தல், ஒடித்தல், கோடல், முரித்தல்.

முறுக்கல்-திருகல்.

முறைமை - ஊழ், ஒப்புரவு, ஒழுக்கம், கடன், சுதம், செய்கடன், நிவதி, நியமம், நிலை, பத்தி, பாரம்பரியம், மரபு, வழி.

முற்றம்-அங்கணம், முன்றில்.

முனிவரிருக்கும்பீடம்-பிடிகை, விட்டரம்.

முனிவரிருக்கும்வாசம்-கரண்டைகுகை, தாபதம், பள்ளி, பாழி, மடம்.

முனிவர்-அடிகள், அந்தணர், அய்யர், அருந்தவர், அறவோர், அறிஞர், இருடிகள், இலிங்கிகள், உய்ந்தோர், உறுவர், ஐம்புலன் வென்றோர், கடவுளர், கடிந்தோர், சார்பில்லோர், சௌமியர், தபோதனர், தவத்தர், தவர், தாபதர், துறந்தோர், துறவோர், நீத்தோர், படிவர், ப

ன்னவர், பலமூலசாகாசனர், பற்றற்றூர், பெரியோர், மாதவர், முனிவர், மெய்யர், மோனர், மௌனியர், யதிகள், யோகர், யோகியர்.

முனை-நுதி, நுனை.

முன்-புறம், முன்பு.

முன்பிறந்தாள்-அக்காள், அக்கை, அன்னை, செவிலி, சேட்டை, தத்தை, தௌவை, முன்னை, மூத்தாள்.

முன்றானை-தோகை, கச்சம், கஞ்சகம், சாரவாரம், விருந்தலைப்பு.

முன்னிலையசைச்சொல்-அத்தை, இ, இக, இத்தை, மதி, மாள, மியா, மோ, யாழ, வாழிய.

முன்னைநாள்-நெருநல், நென்னல்.

மூ

மூக்கு-ஆக்கிராணம், கோணம், துண்டம், நாசி, நாசிகை, நாடி.

மூக்குக்கண்ணாடி-உபநயனம், சுலோசனம்.

மூங்கில்-அமை, அம்பு, அரி, ஆம்பல், கிளை, கீசகம், சந்தி, சபம், சானகி, தட்டை, தண்டு, திகிரி, தூளை, தூம்பு, நெட்டில், நேமி, பணை, பாசு, பாண்டில், பாகிரி, புனை, முடங்கல், மூங்கூழ், மூனை, வளா, வினைடல், விண்டு, வெதிர், வேணு, வேய், வேரல், வேல், வேழம், இதனரிசி, தோனா.

மூஞ்சூறு - சுசுந்தரி, சுண்டன், சுவவு, சூறன்.

மூடுதல்-கவித்தல், பொதிதல், போர்த்தல், மூய்தல், மொய்த்தல், வேய்தல்.

மூட்டல்-பொருத்தல், மாட்டல்.

மூதுணர்ந்தோர்-முதுவர்.

மூதேவி-இந்திராக்கு மூத்தாள், ஏகவேணி, கலதி, கழுதைவாகனி, காக்கைக்கொடியாள், கெடலணங்கு, கேட்டை, சிறப்பிலாதாள், சீர்கேடி, சேட்டை, தௌவை, முகடி.

மூத்தோன்-அடிகள், அத்தன், அய்யன், ஆசான், ஆரியன், இறை-ஈசன், உரவோன், குரவன், கோமான்-சாமி, சேட்டன், நாதன்-பதி, பெருமான், முதியோன்.

மூப்பு-கிழமை, முதுமை, மூற்றல், விருத்தம்.

மூல்நாள்-அசுரநாள், அன்றில்-ஆனி, குருகு, கொக்கு, சிலை, தேட்கடை, வில்.

மெ

மெத்தை-அணை, அமளி, காருளி, தவிசு, தளிமம், தற்பம்.

மெய்-ஆணை, உண்மை, கச்சம், சத்தியம், சாதம், தத்தியம், திடம், திண்மை, நிசாதனம், நிச்சயம், நிலைமை, நீதி, பசுமை, பட்டாங்கு, பொருள், வண்மை, வாய், வாய்மை, விதி, வேளாண்மை.

மெய்காப்பாளர் - கஞ்சுகி, காவலர், வாயிலாளர், வாயிலோர்.

மெலிவு-அற்றம், சிக்கம், தேம்பல், பழங்கண், புன்கண், வாடல்.

மெல்லல்-கவட்டல்.

மெழுகு-வள்ளியம்.

மே

மேகம்-அப்பிரம், அம், அம்புதம். இளை, ஊரி, எழிலி, கதம்பம், கந்தரம், கருவி, கனம், கார், கார்முகம், காளம், குயின், கொண்டல், கொண்மூ, சலதரம், சீதம், சீமூதம், செல், தாராதரம், நீகம், பயோதரம், புயல், மங்குல், மஞ்சு, மழை, மாசு, மாரி, மால், முகில், முதிரம், மை, வான், விசும்பு, விண், விண்டு, விளைவு.

மேடவிராசி-ஆடு, உதள், கொறி, தகர், மறி, மை, யாடு, வருடை.

மேடு-உயர்நிலம், ஓங்கல், கரு, குப்பை, குவால், குவை, சுவல், திடர், திட்டு, திட்டை, படர், மிசை, வல்லை, வன்பால், அன்றியும் பரன்மேடு, மூரம்பு.

மேல்-இந்தனம், உபரி, உம்பர், ஞாங்கர், மிசை, மீ, முன், மேக்கு, மேற்கு, வலம்.

மேற்கட்டி-சம்பலம், படங்கு, வானி, விதானம்.

மேற்கு-குடக்கு, பச்சிமம், பிரத்தியக்கு, மேக்கு, மேல், வாருணம்.

மேன்மை-ஏற்றம், கயம், கயவு, கியா

தநம்,சாயல்,சாலூரம்,ஞெள்ளல், மேதகம், மேதை,மேற்கோள்,இவற்றுண் மேன்பாடுடைத்தல், நெடுமொழிகூறல்.

மொ

மொட்டை-தட்டை, முண்டம்,முண்டிதம்.
மொட்டையாக்கல்-மழித்தல்.
மொய்த்தல்-முடுகல்,முசல்,முஞ்சல், மூழ்த்தல்.

மோ

மோக்கம்-அபவருக்கம், அமுதம், கேடிலாவகை, கேவலம், கைவல்லியம், சித்தி, சிவம், நிருவாணம், நிலைபேறு, பஞ்சமகதி, பரகதி, மீளாக்கதி, முத்தி, வீடு.
மோதிரம்-ஆழி, இலச்சினை, வீகம்.
மோர்-அரிட்டம், அருப்பம், அளை,காலேயம்,தக்கிரம்,மச்சிகை,மதிகம், முசர்.

மௌ

மௌனம் - கௌர, மதனம், மூகம், மோனம், வாளா.

யா

யாகத்தம்பம்-யூபம்.
யாகம்-இட்டி, எச்சம், ஓமம், கிருது, சத்திரம், சித்து,மகம்,யசனம்,யூபம், வேள்வி.
யாளி-அரகு, பூட்கை; இதனாண், தகர்; இதன்பிள்ளை-குருளை, குழவி.
யானை-அத்தி, அறுகு,ஆம்பல், இபம், இம்மடி,உம்பல்,உவா,எறும்பி,ஒருத்தல்,ஓங்கல்,கடிவை,கயம்,கரி,கரிணி,கரேணு, களபம், களிறு, கள்வன்,கறையடி,குஞ்சரம்,கும்பி,கைப்புலி,கைம்மலை, கைம்மா, கோட்டுமா,சிந்துரம்,சுண்டாலி, குவை,தந்தாவளம், தந்தி, தமம், திண்டி, தும்பி, தூங்கல், தெள்ளி, தோல், நாகம், நால்வாய், நாழில், பகடு, புகர்முகம், புழைக்கை, பூட்கை, பெருமா, பொங்கடி, போதகம், மதயம், மதமொய், மதாவளம், மந்தமா, மருண்மா, மறமலி, மாதங்கம், மாசிரம், மொய், வயமா,வல்விலங்கு, வழுவை, வாரணம்,வேதண்டம், வேழம்; இதனாண்-உம்பல், ஒருத்தல், களிறு, தகர், பகடு, மா; இதன்பெண்,அத்தினி, கரிணி, பிடி, வடவை;இதன்கன்று, கயந்தலை, கயமுனி, களபம், குழவி, துடியடி, போதகம், முனி; அன்றியு மலையிற்பிறந்தயானை-கிரிசரம்; ஆற்றச்சார்பிற் பிறந்தயானை - நதிசரம், வனத்திற்பிறந்தயானை - வனசரம்.
யானைக்கச்சை-கண்டம்.
யானைக்கடைக்கல்-நிரியாணம்.
யானைக்கட்டுந்தறி - ஆளானம், வெளில்.
யானைக்கதுப்பு-கடம், கரடம், கவுள், கொடிறு.
யானைக்கயிறு-கச்சம், கச்சை, கவடு, தூசு, புரசை, புரோசை.
யானைக்கூட்டத்துத் தலையானை- யூதநாதன், யூதபம்.
யானைக்கூட்டம்-கடகம்,கடம்,யூதம்.
யானைக்கொம்பு-எயிறு, கோடு, தந்தம்; இவற்றினடி-கரீரம்; இவற்றினடு-பிருதுமானம்.
யானைசெல்வழி-தண்டம்.
யானைச்சங்கிலி-அந்துகம்,சிருங்கலம், நிகளம்.
யானைச்செவி-கன்னம், தாலம்.
யானைதிரியுங்காடு-கரிக்காடு.
யானைதுயிலிடம்-சேவகம்.
யானைத்தோட்டி-அங்குசம், குடாரி, கோணம், இதன்பிடர், இயாதம்.
யானைநிற்குங்கூடம் - ஆலயம், ஒளி, வாரி.
யானைநுதற்பட்டம்-ஓடை.
யானைநோய்-பாகலம்.
யானைப்படுகுழி-பயம்பு.
யானைப்பாகர் - ஆதோரணர், பண்ணுவர், வதுவர், வாதுவர்.
யானைமணி-கண்டை.
யானைமதம் - கடம், கடாம், தானம், மதமொழிந்தயானை, நிருமதம்.
யானைமத்தகம்-கும்பம்.
யானைமீன்-திமிலம், பனைமீன், பெருமீன்.

யானைமுகபடாம் - ஒழி, படம், மந்தனம்.
யானைமுருகு-மஞ்சு.
யானைமுன்கால்-காத்திரம், பின்காலின்பெயர்-அபரம்.
யானைமேற்றவிசு - இலகடம், பலகாரம்.
யானையுண்ணுமுணவு-அங்கதம்.
யானைத்துதிக்கை-கை, சுண்டம், தண்டம், தொண்டலம், தொண்டை; இதனுனியின் பெயர்-ஆழி, புட்கரம்; இது விடுநீரின்பெயர் - கரசீகரம், விலாழி.
யானையைப்பாகரதட்டுமோசை-அப்புது, ஆது, ஐ.
யானையைவிழுங்குமீன் - திமிங்கிலம், திமிதிமி, அம்மீனைவிழுங்குமீன், திமிங்கிலகிலம்.
யானைவால்-தாலவட்டம், வாலதி, இதனுனி, வேசகம்.

யு

யுகமுடிவு-ஊழி, மடங்கல்.

யோ

யோகம்-கூடல்.
யோகினி-சன்மினி, சூர்மகள்.

வ

வசமாக்கல்-வசித்துவம், வடித்தல்.
வசம்-வசீகரணம், வசிகரம்.
வசவி-அசதி, குட்டினி, குண்டனி, குறளி, கூனி, துட்டை, தொழுத்தை, படுவி.
வசனம்-ஆமரி, பாசுரம், வலந்தம், வாக்கு, வாசகம், வார்த்தை.
வச்சிராயுதம் - அசனி, குலிசம், சதகோடி, சதமுனை, சம்பம், வயிரம்.
வஞ்சகம்-அகாதம், கஞ்சம், கபடம், கலி, கிருத்திமம், குடிலம், குத்திரம், குய்யம், பட்டிமை, புள்ளுவம், மாயம், வஞ்சனை.
வஞ்சனையாளன்-அகாதன், ஆர்த்தன், நிகாதன்.
வடக்கு-உதக்கு, உத்தரம்.
வடமொழி-ஆரியம்-பிராகிருதம்.
வடமொழிக்கும் பிறபாடைக்கு மொத்தமொழி-தற்சமம்.
வடமொழியிற் றிரிந்தமொழி - தற்பவம்.
வடிவு-ஆகாரம், உரு, உருவம், சட்டகம், சந்தம், செவ்வம், படி, படிவம், மேனி, வண்ணம்.
வட்டம்-ஆழி, கடகம், கணம், குண்டலம், கொம்மை, கோளகை, சக்கரம், சில்லி, தட்டு, திகிரி, நேமி, படலிகை, பருதி, பாண்டில், பாலிகை, மண்டலம், மல்லை, வட்டணை, வலயம், வல்லை, வளையம், விம்பம், விருத்தம், இவற்றுட்டிரண்டவட்டம், குழியம்.
வட்டில்-கரகம், கோரம், சகடம், சாகை, சிகரம், வள்ளம்; அன்றியுஞ் சிறுவட்டிலின்பெயர்-கிண்ணம், கிராணம்.
வணங்குதல்-அஞ்சலி, இறைஞ்சல், காணல், காண்டல், குரங்கல், கைகூப்பல், சலாம், தாழ்தல், தெண்டனிடல், தொழுதல், பணிதல், பரவல், பார்த்தல், போற்றல், வந்தனை, வந்தித்தல், வழிபடல்.
வண்டி-ஊர்தி, ஒழுகை, சகடம், சகடு-சகடை-சாகாடு, சாடு, பண்டி, வையம்; அன்றியும்பாண்டில்பூண்டவூர்தி, சகடம், சிவிகை, வையம். [கந்து.
வண்டியுள்ளிரும்பு-அச்சாணி, இருசு,
வண்டு-அராபதம், அரி, அளி, அறுபதம், ஈ, கரும்புள், கழுது, கள்ளுண், காமன், கீடம், கேம், கேசரம், கேசவம், சஞ்சரிகம், சஞ்சாளிகம், சாரங்கம், சிலீமுகம், சுரும்பு, சூதம், ஞிமிறு, தும்பி, தேன், பிரசம், பிரமரம், பிருங்கம், புண்டரீகம், புள், மதுகரம், மதுபம், மந்தி, மா, மிஞிறு, மொய், வடு, வரி, வரிக்கடை, இவற்றுளாண்வண்டு, சுரும்பு, தும்பி, மதுகரம்; பெண்வண்டு, தேன்.
வண்ணார்-ஈரங்கொல்லியர், ஏகாலியர், காழியர், தூசர்.
வயல்-அகணி, ஆலவாலம், கம்பலை, கழனி, கைதை, கோட்டம், செய், செறு, தடி, பணை, பண்ணை, பழனம், பானல், புலம், விளைபுலம்; அன்றியுஞ் சிறுவயல், குண்டில், பாத்தி; செந்நெல் விளையுநிலம், சாலேயம்.

வயிடூரியம்-வாலவாயம்.
வயித்தியர்-ஆமாத்தியர், ஆயுள்வேதி யர், அரியர், பண்டிதர், பிடகர், ம ருத்துவர்.
வயிரத்தின்பெயர்-மாவயிரத்தைக்கா ண்க.
வயிரமணி-வச்சிரம்.
வயிரவன்-அபதோத்தாரணன், அரி வைதகயன், கருங்குறிவாயாளி,கா ளி, குறிவாயாளி, குமரன், க்ஷேத்தி ரபாலன், சேதன், ஞானிமூர்த்தி, த ண்டாயுதன், பச்சைச் சடையன், பவழநெடுங் குஞ்சியோன், பிள் ளை, மூவிலைவெம்படையோன்,மூ த்தபிள்ளைக்குரியோன், மூத்தவிலவே லோன், முத்தன், மூர்த்திகள், வ டுகன், வித்தகன்.
வயிறு-அகடு, உதரம், குக்ஷி, குழி, சடரம், துந்தம், பண்டி, மடி, மே டு, மோடு, வயின்.
வரகு-கோத்திரவம்.
வரகுவைக்கோல்-கருவை.
வரம்பின்பக்கம்-கங்கு.
வரம்பு-அணை, கங்கு, குரம்பு, கூலம், கோடு, தடம், பரம்பு, பாரம், வ ரை, வாரம்.
வரிசை-பதம்.
வருங்காரியஞ்சொல்வோர்-கருமத்த லைவர், சாக்கையர்,நிமித்தர்,புரோ கிதர், வள்ளுவர்.
வருடம்-ஆண்டு, ஆயனம், சமை, தெ ய்வம், யாண்டு, வற்சரம், இதன் பாதி, அயனம்.
வருணன்-புனல்வேந்தன்,புனற்காச ன், மேற்றிசைப்பாலன்.
வருத்தஞ் செய்வோன்-அருந்துதன்.
வருத்தந்தீர்த்தல்-அயர்வுயிர்த்தல்.
வருத்தம்-அணக்கு, அயர்வு,அரசம், அவலம், ஆகுலம், ஆய்வு, உயவு, உலைப்பு, ஏவு, கசிவு, கவற்சி, சொ ல், தாவு, நொசி, நோய், பரி, மி டை, மீறை, வயாவு, வேதனை.
வருந்துதல் - அசைத்தல், அழுக்கல், அலமரல், அலைதல், அவலித்தல், அவிதல், அழுங்கல், ஆகுலித்தல், உயங்குதல், உலைதல், ஒறுத்தல், ஒவல், கவலல், துவைத்தல், பருவ ரல், பனித்தல், மிறைத்தல்; அன் றியும் வருத்தமாற்றுதா நிறம்வே றுதல், பசத்தல், பசலை.
வரையாடு-சரபம், வருடை.
வரையாது கொடுப்போர் - வள்ளி யோர்.
வலதுபக்கம் - சவ்வியம், தக்கணம், வலம்.
வலம்புரிச்சங்காயிரஞ்சூழ்ந்தது - பா ஞ்சசன்னியம்.
வலம்புரிச்சங்கு-கொக்கரை, சங்கா யிரஞ்சூழ்ந்தசங்கு, சலஞ்சலம், ப ணிலம்.
வலி-அடல், அரி, ஆண்மை, ஆற்றல், இசல், ஈடு, உம்பல், உரம், உரப் பு, உறுதி, ஊக்கம், எழில், ஏறும், ஏன், கருமை, கலி, கூளி, கொம் மை, கொற்றம், கோள், சத்தி, ச த்துவம், ஞாட்பு, தரம், தற்செல் வம், தாவு, தாளம், திண்ணம், தி ண்மை, திறம், திறல், தீரம், துப் பு, தேற்றம், நாட்பு, நோன்மை, பம்பல், பராக்கிரமம், பாழி, பீடு, மஞ்சு, மதம், மதன், மதுகை,மல், மல்லல், மள்ளல், மறம், மாவுரம், மானம், மிடல், மீளி, முரணை,மூடு கல், முரண், முன்பு, மூரி, மெய்ந லம், மைந்து, மொய்ம்பு, வயம், வலம், வள், வன்மை, வாய்மை,வி றல், வீரம்.
வலிதருதல்-ஆற்றுவித்தல், வலியுறுத் தல்.
வலியழித்தல்-ஆற்றறுத்தல்.
வலியன்-கஞ்சரீடம், கஞ்சனம், கிகி ணி, பாரத்துவாசம், வயவன்.
வலை-கண்ணி, கொக்கரை, சாலம்.
வல்லான்-சமர்த்தன், வலவை, வல் லவன், வல்லாளன், வல்லுநன்.
வழி-அடைவு, அதர், அயனம், ஆறு, இடவை, இயவு, இய்வை, உத்த ரம், ஒழுக்கம், கால், கிறி, சரி, செப்பம், செலவு, தடம், தாரி, தா ரை, துறை, தெரு, நடவை, நடை, நெறி, படர், பட்டம்,பதம், பதவி, பதவை, பரி, பாதை, போக்கு, மா ர்க்கம், வகிர், வருத்தம், வட்டை, வகி, வயவை, வரி, வனம், வாரி, விதி; அன்றியு மரும்வழியின்பெய ர், அத்தம், கடம், கடறு, சுரம்,

தாம்பு; கவர்வழியின்பெயர், கல்லே, கவை; சிறுவழியின்பெயர், விடங்கர்; நீள்வழியின்பெயர், அளக்கர்; இறங்கியேறும் வழியின்பெயர், படுகர்; புதுவரம்பு வழியின்பெயர், மரிசி; பழயவரம்பு வழியின்பெயர், மஞ்சில்; இடுக்குவழியின்பெயர், இட்டிகை.

வழிச்செல்வோர்-பதிகர்.

வழிப்படுத்தல்-ஆற்றுப்படை.

வழிப்பறித்தல்-அதர்கொளல், ஆறலைத்தல்.

வழுக்குநிலம்-இழுக்கல்.

வளமை-செழுமை, கொழுமை, மதன், மல், மல்லல்,யாணர்,வண்மை, வளப்பம், வளம்.

வளர்தல்-உருத்திதம், திமிர்தல், திமிறல், நிமிர்தல், வளர்ச்சி, விருத்தி.

வளை-சுவப்பிரம், பிலம்.

வளைதடி-எழு, கணையம், சுழல்படை, பரிகம், பாரவளையம், வட்டம்.

வளைத்தல் - குனித்தல், கோலல், சூழ்போதல், திருகல், தொடுத்தல், முற்றுதல், வணக்கல், வரையறுத்தல், வலத்தல், வளாவல்,வாங்கல்.

வளைவு-ஆவல், குடிலம், குலாவல், கூன், கோடல், கோட்டம், கோணல், கோண், தடவு, தட்டு, முற்றல், வக்கிரம், வசிவு, வணங்கல், வணர், வலந்தம், வளாவல், வாங்கல்.

வள்ளை-ஞானிகம், நாளிகம்.

வறட்சுண்டி-சமங்கை.

வறத்தல்-முதிர்ந்திடல், முளித்தல்.

வறுமை-அல்கல், இலம்பாடு, இன்மை, ஒற்கம், வீதல்.

வற்புறுத்தல்-தெருட்டல், வருட்டல்.

வனமல்லிகை-மௌவல்.

வன்னிமரம்-கலிசம், குலிசம், சமி, தமனி.

வா

வாகனம்-எருது, கரி, சிவிகை, தேர், பரி,வண்டில்; இவைமுதலியவற்றிற்குப் பொதுப்பெயர், ஊர்தி, வாகனம், வையம்.

வாகைமரம் - சிரீடம், பாண்டில், பீரம்.

வாசனை-ஆவி, கடி, கந்தம், கானம், கான், கொங்கு, சுரபி, தகரம், தேம், தேன், நரந்தம், நறவம், நறவு, நறை, நாரி, நாற்றம், நானம், பச்சை, மணம், மரு, மன்றம், மன்றல், முருகு, மோதம், வசந்தம், வதுவை, வம்பு, வாசம், விரை, வெறி; அன்றியு மிகுவாசனையின்பெயர்-ஆமோதம், சுகந்தம், பரிமளம்; தீயவாசனையின் பெயர்-துர்க்கந்தம், பூதி, முடை.

வாசனைக் குறிப்புச் சொல் - கம்மெனல்.

வாசனைப் பொடி - கதம்பம், கந்தபொடி.

வாசனைவிடுதல் - கந்தித்தல், கமழ்தல், நறவுதல், நாறல், மணத்தல்.

வாசித்தல்-ஓதல், படித்தல், பாடல்; வேதமோதலின் பெயர்-அத்தியயனம்.

வாச்சியப்பொது-அரியம், இயம், கருவி, காண்டம், கோடணை, சகடை, சகண்டை, தகுணிதம், தக்கை, தடாரி, தூரியம், பறை, பீலி, மண்கணை, மேளம், இவற்றுட்பல வாச்சியக்கூட்டம், மேளம்.

வாச்சியமடிக்குங் குறுந்தடி-குணில்.

வாச்சியம் வாசித்தல்-இயம்பல்,கொளுத்துதல், துவைத்தல், முழக்கல்.

வாச்சியவகுப்பு-இடக்கை, உடுக்கை, உறுமி, தம்பட்டம், பம்பை, பேரிகை, மத்தளம், முரசு, முருடு,முழவு; இவற்றி னிடக்கையின் பெயர்-திரிகை, யாமம்; உடுக்கையின் பெயர்-இடைசுருங்குபறை, துடி; உறுமியின்பெயர்-தண்ணுமை; தம்பட்டத்தின்பெயர்-ஆனகம், திண்டி, திண்டிமம், படகம், பணவம்; பம்பையின்பெயர்-சல்லரி, தக்கை, தடாரி, திமிலை, மல்லரி; பேரிகையின்பெயர்-தடாரி, தண்ணுமை, பதலை; முரசின்பெயர்-அழுவம், தூரியம், பணை, பெருங்கோடணை, முரசம், முழவம்; முழவின்பெயர் - குடமுழா, குளிர், முழவம்,முழா; அன்றியு மொருகட்பறையின் பெயர் - உடுக்கை, தண்ணுமை, நிசானம், மொந்தை; வாயகன்ற ப

றையின் பெயர் - பதலை; சிறுபறையின் பெயர் - ஆகுளி; உவகைப் பறையின் பெயர் - துரியம்; சப்பறையின் பெயர் - செய்தற்பறை; அன்றியுங் குறிஞ்சிமுதலைந் திணைக்குரிய பறை தத்தம் வரியிற் காண்க.

வாடல்-அழுங்கல், உணங்கல், குழைதல், சாம்பல், சுலோதல், சோரல், தேம்பல், நைதல், புலர்தல், வெம்பல.

வாட்கோரை-செருந்தி.

வாயில்-அருநெறி, கடை, துவாரம், தூம்பு, தோட்டி, வாய், வாரி; அன்றிய நுழைவாயிலின்பெயர் - சுருங்கை, நுழை.

வாயில்காப்போர்-வாயிலாளர், வாயிலோர்.

வாயினுட்கீழ்வாய் - அணல்; மேல் வாயின்பெயர்-அணம், அணரி, அண்ணம்.

வாய்க்கால்-கால்.

வாரம்-கிழமை, வாசரம்.

வாருகோல் - அலகு, சோதினி, துடைப்பம், மாறு.

வாருதல்-கவர்தல், கொழித்தல், கொள்ளல், தெள்ளுதல், வரன்றல், வழித்தல், வார்தல், வௌவல்.

வார்-கச்சம், வயிர், வள்.

வாலின்கீழிடம்-வெருகம்.

வால்-இலாங்கூலம், உலோமம், கூலம், தோகை, புச்சம், வாலகம், வாலதி, வேசகம்.

வாழை-அம்பணம், அரம்பை, ஓசை, கதலி, கவர், சேகிலி, திரணபதி.

வாழ்த்து-ஆசி, ஆசிடை, கைவாரம், சோபனம், பல்லாண்டு.

வாழ்நாள்-ஆயுகம், ஆயுள், உவறை.

வாளின்முட்டி-பாலிகை.

வாளுறை-வள்.

வாள்-அசி, உவணி, ஏதி, கடுத்தலை, கட்கம், கண்டகம், கண்டம், கரவாளம், கரவாள், சாயகம், துவத்தி, நவிரம், நாட்டம், நாந்தகம், புட்கரம், மட்டாயுதம், வசி, வஞ்சம், வள், வேறு; அன்றியும் வளைந்த வாளின்பெயர்-கோணம்; சிறுவாளின்பெயர்-கண்டம், குறும்பிடி, சுரிகை, பத்திரம்.

வானம்பாடி-கம்புள், கலிங்கம், காருணி, சாதகப்புள், தற்பாடி, மேகப்புள்.

வானவில்-இந்திரதநு.

வான்மீகி - பிராசேதசன், யாமளூருநாயன்.

வான்மீன்-உடு, உற்கை, ஒளி, சிதம், சுக்கை, சோதி, தாரகை, தாரா, தாரை, பம், மீன்; அன்றியும் அசுவினிமுதலிருபத்தேழுக்கு நாளென்று பெயர்.

வி

விசாகநாள்-அனிலநாள், காற்றமுர்துநாள், சுளகு, சேட்டை, முறம், முற்றில், வைகாசி.

விசிறி - கால்செய்வட்டம், சாந்தாற்றி, சிற்றாலவட்டம், சிவிறி, தாலவிருந்தம், பீலி, விசனம், வீசனம்.

விசுவாமித்திரன்-காதிமைந்தன், கௌசிகன்.

விடம்-ஆலம், ஆலாலம், கடு, கரம், கரளம், காரி, காளகூடம், காளம், நஞ்சு

விடியல்-உதயம், காலை, புலரி, வைகல், வைகறை.

விடுதல்-உகுத்தல், செலவிடல், தும்மல், துவைத்தல், நியதுதல், பெய்தல், மாறல், விடை, வியோகம்.

விடுத்தல்-உயிர்த்தல், ஒக்குதல், நிர்தல், நிவாரணம், நீக்கல், மோக்கம், மோசனம், வாரணம், விடை, வீடு.

விட்டிற்பறவை-சலபம், பதங்கம்.

விட்டுணு - அச்சுதன், அரவணைச்செல்வன், அரி, அரிந்தமன், அறிதுயிலமர்ந்தோன், அனந்தசயனன், உந்திபூத்தோன், உவணகேதனன், கடல்வண்ணன், கமலக்கண்ணன், கரியன், கருடகேதனன், கேசவன், கொண்டல்வண்ணன், சக்கரபாணி, சக்கராயுதன், சக்கிரி, சங்கமேந்தி, சநார்த்தனன், சம்பு, சலசலோசனன், சாரங்கபாணி, சீதரன், சௌரி, திருநாதன், துழாய்மௌலி, நாரணன், நாராயணன், நெடியோன், பச்சை, பஞ்சாயுதன், பதுமநாபன், பிரமன்றாதை, பிறப்பிலி, பின்னைகேள்வன், பீதாம்பரன், பூமிகொழுநன், பெம்மான்,

பெருமான், மாதவன், மாயன், மால், முகுந்தன், முண்டகாசனைக்கேள்வன், யலவன், வனமாலி, வாசுதேவன், விண்டு, வேலையிற்றுயின்றோன், வைகுந்தநாதன்; அன்றியுமுதலவதாரத்திலெடுத்தபெயர்-மச்சன்; இரண்டாமவதாரத்திலெடுத்தபெயர்-கூர்மன்; மூன்றாமவதாரத்திலெடுத்தபெயர்-வராகன்; நான்காமவதாரத்திலெடுத்தபெயர்-நாரசிங்கன்; ஐந்தாமவதாரத்திலெடுத்தபெயர்-வாமனன், இந்திராவரசன், உலகளந்தோன், திரிவிக்கிரமன்; ஆறாமவதாரத்திலெடுத்தபெயர்-பரசிராமன்; ஏழாமவதாரத்திலெடுத்தபெயர்-இராகவன், இராமன், காகுத்தன்; எட்டாமவதாரத்திலெடுத்தபெயர்-பலபத்திரராமன், குண்டலன், பலவும்; ஒன்பதாமவதாரத்திலெடுத்தபெயர்-அலகைமுலையுண்டோன், உலகுண்டோன், கண்ணன், கிருட்டிணன், கோவிந்தன், தாமோதரன், தேவகிமைந்தன், நந்தநந்தனன், பஞ்சவர்தூதன், புத்தன், மதுசூதனன், முராரி.

விட்டுணுகூத்து-அல்லியம், குடம், மரக்கால், மல்.

விட்டுணுகொடியும் வாகனமும்-கருடன், பஞ்சாயுதம், சக்கரம், சங்கு, தண்டு, தனு, வாள்; இவற்றுட்டனுவின்பெயர்-சாரங்கம்.

விட்டுணுசமயத்தார் - பாகவதர், வைணவர்.

விட்டுணுபதம்-வைகுண்டம், வைகுந்தம்.

விட்டுணுபத்தவதாரம்-மச்சம், கூர்மம், வராகம், நாரசிங்கம், வாமனன், பரசிராமன், இராமன், பலபத்திரராமன், கண்ணன், கற்கி.

விட்டுணுமனைவிகள்-இலக்குமி, பூமிதேவி;. புதல்வர்பெயர்-பிரமன், மன்மதன்; அன்றியு மிராமாவதாரத்தி லிவனுக்கு மனைவி-சீதை; புதல்வர்-குசன், இலவன்; அன்றியுமிவன் மோகினிபாகிக் கையிலேந்திய சிவன் இந்திரியத்தாற்பிறந்த பிள்ளை-ஐயனார்.

விண்வீழ்கொள்ளி-உற்கை.

விதை-காழ், பரல், பீசம், வித்து, விரை.

வித்தியாதரருலகு-சேடி, சேணியர்.

வித்தியாதரர்-கேசரர், விஞ்சையர்.

விநாயகன்-அங்குசபாசமேந்தி, அம்பிகைதநயன், அரிமருகன், ஆகுவாகனன், இறைமகன், ஈசன்மைந்தன், ஏகதந்தன், ஏரம்பன், ஐங்கரன், ஒற்றைக்கொம்பன், கங்கைபெற்றோன், கணபதி, கயமுகன், கரிமுகன், கவுரிசேயன், காமன்மைத்துனன், நால்வாயன், பாசாங்குசன், முக்கண்ணன், முன்னோன், மூத்தோன், விக்கினேச்சுரன்.

விநாயகன்வாகனம்-பெருச்சாளி.

விபூதி-ஏமம், ஓமப்பொடி, காப்பு, திருநீறு, பூதி, விசிதம்.

வியாசன்-கிருட்டிணன், துவைபாயனன், பராசரன்மைந்தன், புலத்தியன்.

வியாழம்-அந்தணன், அமைச்சன், அரசன், ஆசான், ஆண்டளப்பான், குரு, சிகண்டிசன், சீவன், சுரகுரு, தாராபதி, தெய்வமந்திரி, நற்கோள், பிரகற்பதி, பீதகன், பொன், மறையோன், வேதன், வேந்தன்.

விரலிறை-தோரை, பிறங்கு, பொறி, வரி, வரை.

விரல்-அங்குலி, இவற்றுட் பெருவிரல், அங்குட்டம்; கடைவிரல், கனிட்டம்.

விரிவு-அகலம், இடம்பாடு, விசாலம், விபுலம், வியன்.

விருச்சிகவிராசி-தெறுக்கால், தேள், பறப்பன்.

விருந்து-மகமுறை.

விலங்கினுட் கொம்பிலாவிலங்கு - குமரம்.

விலங்கினு ளிலைநகர்விலங்குணவு-குளகு.

விலங்கின்கூட்டம்-கணம், குலம், சாலம், யூகம், வியூகம், விருந்தம்.

விலங்கின்கொம்பு-உலவை, கோடு, சிருங்கம், மருப்பு, விடாணம்.

விலங்கின்படுக்கை-சேக்கை, பட்டம், பள்ளை, பண்ணை, பாழி, போத்து.

விலங்கின்பொது-குரங்கம், மா, மான், மிருகம்; இவற்றினுண் பொது

ப்பெயர்-ஆண்; பெண்பொதுப்பெ
யர்-பிணவல், பிறு, பெண்.
விலங்கின்வகுப்பு-அணில், ஆடு, குறு
ம்பாடு, செம்மறியாடு, வெள்ளா
டு, எருது, எருமை, எலி, காரெலி,
ஒட்டகம், கத்தூரிப்பிள்ளை, கரடி,
கவரிமா, கழுதை, கோவேறுகழு
தை, காட்டா, கிரி, குதிரை, குர
ங்கு, சிங்கம், நரி, நாய், செந்நாய்,
நீர்நாய், நாவிப்பிள்ளை, பசு,பன்றி,
முட்பன்றி, புலி, புல்வாய், பூனை,
பெருச்சாளி, மரை, மான், முசு,
முயல், மூஞ்சூறு, யாளி, யானையு
ம்பிறவும், இவை தத்தம் வரியிற்
காண்க.
வில்-கார்முகம், கொக்கரை, கொடுமெ
ரம், கோதண்டம், சராசனம், சா
பம், சானகம், சிந்துவாரம், சிலை,
தடி, தவர், தனு, துரோணம், மு
னி, வேணு; அன்றியுஞ் சிவன்வில்-
பினாகம்; திருமால்வில்-சாரங்கம்;
அருச்சுனன்வில்-காண்டீபம்.
வில்லின்குதை-குலை, தாறு.
வில்வமரம்-கூவிளம், கூவிரம், கூவி
ளை,மாலூரம்,மாவிளம்,வில்லுவம்.
விவாகமில்லான்-பிரமசாரி.
விவாகம்-உபயமம், கடி, கலியாணம்,
கைப்பற்றல், திவலஞ்செய்தல், ப
ரிணயம், மங்கலம், மணம், மன்ற
ல், வதுவை, விதியுளி,வேட்டல்.
விழல்-விரணம்.
விழுங்கல்-நுகர்தல், நுங்கல், மொண்
டல்.
விழுதல்-சோர்தல், தாலல், வீழ்தல்.
விளக்கு-இராவணம், ஒளி, சுடர்,தீப
ம், தீபிகை.
விளக்குத்தண்டு-கம்பம், கௌசிகம்,
சுடர்நிலை, தனி, தீபமத்திகை, மல்
லிகை.
விளாமரம்-கபித்தம், விளவு, வெள்
ளில்.
விளையாட்டு-ஆடல், இலீலை, உண்டா
ட்டு, உப்பு, ஓரை, கிரீடை, கெட
வரல், கேலம், கேளி,தருணம்,தொ
டலை, பண்ணை, விலாசனை, இவற்
றுண்மகளிர்விளையாட்டு, உண்டா
ட்டு, உப்பு, ஓரை, கெடவரல்,தொ
டலை, பண்ணை,பொய்தல்,வண்டல்.

விளைவு-போகம், வளாவல்.
விறகு-இத்தனம், ஈமம்,கட்டை,காட்
டம், முருடு, முளரி; அன்றியுமோ
மவிறகின்பெயர்-சமிதை, முளரி.
விற்றல்-கூறல், நொடை, பகர்தல்,மா
றல், விலை.
வினைநகர்-கோலம்..
வினவலுக்கெதிர்மொழி-விடை.
வினவலும் விடையுங்கூடல் - சல்லா
பம்.
வினவல்-கடாவல், வினவல்.
வினவெழுத்து-ஆ, எ, ஏ, ஓ, யா.

வீ

வீடு-அகம், அகாரம், இடம்,இடவகை,
இல், இல்லம், உறையுள், கிரகம்,
குலம், கேகம், சதனம், சரணம்,
சேர்பு, தாமம், நகர், நியாயம், நி
கேதனம், நிசாந்தம், நிவேசனம்,
பதி, பவனம், பாத்தி, புக்கில், மந்
திரம், மனை, மாடம், மாளிகை, வ
சதி, வயின், இவற்றுட் பார்ப்பார்
வீடு-அகாரம்.
வீட்டிறப்பு-இறவு, இறை, வளவி;தா
ழ்வாரத்தின்பெயர்-ஆரோகணம்,
சோபானம்.
வீட்டின்மேலுலாவும் வெளி-அரமிய
ம், நிலாமுற்றம்.
வீட்டுத்திரம்-ஞாலம்; அன்றியுஞ் சுவர்
ப்புறத்துநீண்டவுத்திரத்தின்பெய
ர், சுற்றுவாரி, தாழ், துடை,முகடு,
விடங்கம்.
வீட்டுமாசாரியன் - கங்கைமைந்தன்,
காங்கேயன்,சந்தனுமுன்மகன்,தா
லகேதனன், தெய்வவிரதன், பிரம
சாரி, வன்னி, வீரன்.
வீணைக்கருவி-கலம், கின்னரம், கோ
டவதி,கோட்டம்,தண்டு,மாடகம்,
வல்லகி, விபஞ்சிகம்; அன்றியு நி
றைநரம்புள்ளது, பண்; குறை நர
ம்புள்ளது, திறம்; ஏழுநரம்புள்ள
து, இன்னிசை.
வீணைமுறுக்காணி-குப்பி, மாடகம்.
வீணையினரம்பு-குரல்,கோல், தந்திரி,
நாடி; இவை யெழுவகைப்படும் -
குரல், துத்தம், கைக்கிளை, உழை,
இளி, விளரி, தாரம்.
வீணைவலிக்கட்டு-திவவு.

வினைவாய்த்தல்-கொளுத்துதல், நடவல், மீட்டுதல்.
விபு-செப்பம், நெருள்ளல்.
விமன்-இடும்பிகொழுநன், கதாயுதன், பீசாரி, குந்திபுதல்வன், பகாசுரவயிரி, பாண்டுபுத்திரன், மடங்கற்கொடியோன், மாருதி, வாயுமைந்தன், விருகோதரன்.
வீரபத்திரன்-அழற்கண்வந்தோன், உக்கிரன், உமைமகன், ஐங்கரற்பின்னோன், குரோதன், சிங்கத்தோலுடையோன், சிம்புளானோன், சிறுவிதிமகஞ் சிதைத்தோன், சுடர்விழியோன், செக்கர்வா னிறத்தோன், தக்கன்மகஞ்சிதைத்தோன், பத்திரைகேள்வன், யானைமுகவற்பின்னோன், வெஞ்சிலைச்செல்வன்.
வீரம்-சாகசம், சூரம், சேவகம், சௌரியம், பராக்கிரமம், புறம், மறம், விறல், விரியம்.
வீரரின்பெயர்-படைவீரரைக்காண்க.
வீழ்த்தல்-இகுத்தல், விழுத்தல்.

வெ

வெட்கம்-இருளி, இலச்சை, உட்கல், உட்கு, சமழ்த்தல், சமழ்ப்பு, நாணம், நாண்; மறுத்தல், மானம், வட்கல், வெள்கல்.
வெட்சி-குல்லை, சிந்தூரம், செச்சை, சேதாரம்.
வெட்டல்-இறுத்தல், எருக்குதல், எறிதல், எற்றல்-கடிதல், கண்டித்தல், காய்தல், சேதித்தல், தடிதல், தண்டித்தல், தறித்தல், துணித்தல், துண்டித்தல், துமித்தல், பகுத்திடல், பரிதல்.
வெட்டிவேர்-இருவேலி, பீதகம், மூலகந்தம், வேரி.
வெட்பாலைமரம்-கிரிமல்லிகை - குடசம்.
வெண்கலம்-உறை, கஞ்சம், தாரம்.
வெண்காயம்-காயம்; அன்றியும், வெள்வெண்காயம், அரிட்டம், இலசுனம்; ஈரவெண்காயத்தின் பெயர், சுகாந்தம், பலாண்டு.
வெண்ணொச்சி-சிந்துவாரம், நீர்க்குண்டி.
வெண்பா-முதற்பா, வெள்ளை, இதற்பிராகம், சங்கராபரணம்.
வெண்மை - அரிணம், அருச்சுனம், அவதாதம், கம், கவுரம், குருகு, குருத்து, சிதம், சுக்கிலம், சுபி, சுதை, சுப்பிரம், சுவேதம், தவளம், நரை, பாண்டரம், பாண்டு, பாண்டுரம், பால், வால், விசதம், விளர், வெளிறு, வெள்ளி, வெள்ளை, அன்றியுங் கொஞ்சவெண்மையின் பெயர், தூசரம்.
வெயில்-ஆதபம், ஊழ், எல், என்றூழ், ஒளி, கோடை.
வெளி-செண்டு, மன்றம், மன்று, வயல், வெடி, வெள்ளிடை.
வெளிப்படல்-மன்றுபடுதல்.
வெள்ளம்-ஓதம், நீத்தம், பிரளயம், பெருக்கு, வாரி; இதனோட்டம், கோலம்.
வெள்ளரி-உருவாரம்.
வெள்ளாடு-காராடு, கொச்சை, பள்ளை, வற்காலி, வெள்ளை; இதன்குட்டி, வெள்ளை.
வெள்ளாட்டுக்கடா-உதள், சகலகம், சாகம், செச்சை, மோத்தை.
வெள்ளி - இரசிதம், ஈனம், களதவுதம், தாரம், துருவண்ணம், வங்கம், வெண்டாது, வெண்பொன்.
வெறியாட்டாளன்-முருகன், வேலன்.
வெறுப்பு-அயர்வு, அரதி, அவாவின்மை, உவட்டல், உவர்த்தல், உவர்ப்பு, ஒல்லாமை, காய்ப்பு, கைத்து, தவ்வாமை, பிறழ்தல், பொருந்தாமை, மா, முனிவு, வீறு, வேண்டாமை.
வெற்றி-அடல், ஆடு, ஆணை, குடுமி, கொற்றம், சயம், படினம், புகல், முல்லை, வலன், வாகை, விசயம், விதர்ப்பு, விறப்பு, விறல், வெற்றம், வென்றி.
வெற்றிமாலை-வாகை.
வெற்றிலை-தாம்பூலம், திரையல், தும்பை, மெல்லிலை.
வெற்றிலைக்கொடி-இலைக்கொடி, தாம்பூலவல்லி, தாம்பூலி, நாகவல்லி.
வெற்றிலை மூக்கரி கத்தி - குளிரி, குளிர்.

வே

வேகமுள்ளோன்-கவனன்.
வேங்கைமரம்-கணி, திமிசு, திமில், பிரசாரம்.
வேசி-கணிகை, குலா, பயனிலாள், பரத்தை, பொதுமகள், பொருட்பெண்டு, வரைவின்மாது, விலைமகள், வேசை.
வேடர்-ஆகியர், கானவர், கிராதர், குறவர், குன்றவர், கூளியர், கொலைஞர், சவரர், சிலவர், சில்லர், தியர், பாவமூர்த்திகள், புல்லர், புளிஞர், பொறையிலார், மறவர், மாகுலவர், முருடர், வனசரர், வியாதர்.
வேடர்வீடு-பக்கணம், வசடை.
வேட்டை-ஆகேடகம், பாபத்தி.
வேண்டல்-இரத்தி, நேர்தல்.
வேதநூலுரைப்போன் - அத்தியாபகன்.
வேதநூற்பொருள் - அருத்தபாகை, ஞானபாகை, கருமபாகை, இதனுட்பம், உபநிடதம்.
வேதமார்க்கம்-வைதிகம், அம்மார்க்கத்திலடப்போர், வைதிகர்.
வேதம்-அத்தியாயம், அந்தணர்வாக்கு, ஆதிநூல், ஆரணம், எழுதாக்கிளவி, ஒத்து, சாகை, சுருதி, நிகமம், மறை, முன்னூல்; இவை நான்காம், இவற்றுண்முதல்வேதம், இருக்கு, பவுடிகம்; இரண்டாம்வேதம்-தைத்திரியம், யசுசு; மூன்றும் வேதம்-கீதவேதம், கௌசிகம், சாமம்; நாலாம்வேதம்-அதர்வணம்.
வேதனைசெய்வோன்-அருந்துதன்.
வேம்பு-நிம்பம், பிசிதம், பிசுமந்தம், மாலுகம்.
வேர்-சடை, சிவை, தூர், மூலம்.
வேர்வை-கசிவு, சுவேதம், வியர்த்தல்.
வேலமரம்-உடை, குடை.
வேலி-இவரி, காவல்.
வேல் - அயில், அரணம், உடம்பிடி, எஃகம், குந்தம், சத்தி, ஞாங்கர், விட்டேறு; அன்றியுங் கைவேலின் பெயர்-கப்பணம், சத்திரம், தோமரம்.
வேவு-ஒற்று, வே.
வேவுகாரர்-ஒற்றர், சாரணர், வேவர், வேய்கள்.
வேள்வியின் பெயர் - யாகத்தைக்காண்க.
வேறுபடுத்தல்-விகற்பித்தல்.
வேற்றுமை-அந்தரம், திரிபு, பங்கம், பின்னம், பேதம், மாற்றம், விகடம், விகற்பம், விகாரம், விதிர்தம், விபரீதம், விருபம், விரோதம், விள்ளல், விற்று, வேறுபாடு.

வை

வைகாசிமாதம்-மாதவம், வைகாசம், வைசாகம்.
வைகையாறு-வேகவதி.
வைக்கோல்-பலாலம், வழுது, வை.
வைசியர்-அயனூருவில் வந்தோர், இப்பர், இளங்கோக்கள், எட்டியர், சிலேபியர், செட்டியர், தருமகிழவர், தாளாளர், தானிகர், தேசிகர், தோன்றிகர், நாய்கர், பரதர், மன்வர்பின்னர், முத்தொழிலோர், வணிகர், வாணிகர், இவர்மூவகையர், கோவைசியர், தனவைசியர், பூவைசியர், அயர், இடையர், செட்டிகள், ஏருழவர், இவனாத்தத்தம் வரியிற்காண்க.
வைடூரியம்-வாலவாயசம்.
வைத்தியர்-ஆமாத்தியர், ஆயுள்வேதியர், ஆரியர், பண்டிதர், பிடகர், மருத்துவர்.
வௌவால் - அஞ்சலிகை, ஆவாலம், துரிஞ்சில், வாவல்.

இரண்டாவது - பொருளகராதி முற்றிற்று.

மூன்றாவது

தொகையகராதி.

அருட்டொகை வகைவகுத் துலகனைத்து ... ... *
மங்கையி லேந்திய தயையிற்காத்... ... ...*
திருட்டொகை துடைத்தெழும் பரிதியைப்போ ... *
லெங்கணும் விளக்கிய வோரொன்பான்... ... ...*
மருட்டொகை விலகெனப் பணிந்தேத்தி ... ... *
வழக்கொடுபுலமையோர் மொன்றுரைத்த ... ...*
பொருட்டொகை வகைப்பட விரித்துணர்த்திப் ... *
புகலுதுந் தொகையக ராதியென்றே ... ...*

அங்கயோகம்

அ

அகிற்கூட்டு-ரு, சந்தனம், கர்ப்பூரம், எரிகாசு, தேன், ஏலம்.

அக்கினி-ரு, இராகம், கோபம், காமம், சடம், தீபனம்.

அங்கம்-ச, தேர், கரி, பரி, காலாள், இவை சதுரங்கமெனப்படும்.

அங்கம்-ரு, திதி, வாரம், நட்சத்திரம், யோகம், கரணம்,இவைபஞ்சாங்கமெனப்படும்.

அங்கம்-ய, மலை, யாறு, நாடு, ஊர், மாலை,பரி,கரி, முரசு,கொடி, செங்கோல், இவையரசர்க்குரியதசாங்கம்.

அங்கயோகம் - அ, இயமம், நியமம், ஆதனம்,பிராணயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி; இவற்றுள்-இயமம், கொல்லாமை, மெய்ம்மைகூறல்,கள்ளாமை,பிறர்பொருளிச்சியாமை, இந்திரியமடக்கல்,-நியமம், தவம், தூய்மை, தத்துவ நூலோர்தல், மனமுவந்திருத்தல், தெய்வம் வழிபடல்,-ஆதனம், சுவத்திகம், கோமுகம், பதுமம், வீரம், சேகரி, பத்திரம், முத்தம், மயூரம், சுகம்; அவையாவன-சுவத்திகம், தொடைக்கு முழங்காற்குநடுவே யிரண்டுள்ளங்காலையுஞ் செலுத்தி யிருமாந்திருத்தல்,-கோமுகம், சகனப்பக்கத்தி லிருகாற்பரட்டையு மாறவைத்தவ்விருகாற் பெருவிரலைக்கைப்பிடித்திருத்தல்,-பதுமம், இருதொடைமேலு மிரண்டுள்ளங் காலையு மாறித் தோன்றவைத்தல்,- வீரம், வலத்தொடையிலிடக்காற் பரட்டைச்சேர்த்தி யிருமாப்புற்றிருத்தல்,-கேசரி, பீசத்தின்கீழ்ச் சீவனியிடத்துப் பரட்டைவைத்திட முழங்கையை முழந்தாளில்வைத் தங்குலிவிரித்து நாசியைப் பார்த்திருத்தல்,-பத்திரம், பீசத்தின்கீழ்ச் சீவனியிடத்திருகாற்பரட்டையும்வைத் தவ்விருபதத்தையு மிருகையாலிறுகப்பிடித் தசையாதிருத்தல்,-முத்தம், இடக்காற்பரட்டாற் சீவனியையமுத்தி வலக்காற்பரடப் பரட்டின்கீழுந்திருத்தல்,-மயூரம், முழங்கையிரண்டு முந்திப்புறத்தி லழுந்தப்புவியிற் கையூன்றிக் காலீட்டித் தலைநிமிர்ந்திருத்தல்,-சுகம், சுகமுந்திட

மு மெய்வாறிருக்கி னெய்துமோ
அவ்வா றிருத்தல்,-பிராணாயாமம்,
பிராணவாயுவை இரேசகபூரககும
பகஞ் செய்தல்,-பிரத்தியாகாரம்,
உபாதியைநீக்கி யுள்ளொடுக்கல்,-தா
ரணை, கண்டம், இதயம், நெற்றி, க
பாலம், நாபி, இவற்றி லொன்றிற்
சந்ததம் பிசகாதவைத்தல்,-தியான
ம், ஐம்புலனடக்கி யோகஞ்சேர்த
ல்,-சமாதி, இந்திரியமுதலிய தத
துவசேட்டைகட் கேதுவா யாக்
கையுளின்றவற்றோடு கூடினு மவ
ற்றிற் பற்றின்றியிருக்கு மான்மா
வாகிய தன்னைத் தான்காண்டல்.

அச்சுவினிதேவர்-௨.

அரசச்சின்னம்-௨௧, முடி, குடை,
கவரி, தோட்டி, முரசு, சக்கரம், யா
னை, கொடி, மதில், தோரணம், நிர்க்
குடம், பூமாலை, சங்கு, கடல், மகரம்,
ஆமை, இணைக்கயல், சிங்கம், தீபம்,
இடபம், ஆசனம்.

அரசர்-௩, சேரன், சோழன், பாண்
டியன்.

அரசர்க்குழு-௫, மந்திரியர், புரோ
கிதர், சேனாபதியர், தூதர், சாரணர்.

அரசர்க்குத்துணைவர்-௮, மந்திரியர்,
கருமாதிகாரர், சுற்றம், கடைகாப்
பாளர், நகரமாக்கள், படைத்தலை
வர், இவுளிமறவர், யானைவீரர்.

அரசர்க்குறுதிச்சுற்றம்-௫, நட்பாள
ர், அந்தணாளர், மடைத்தொழிலர்,
மருத்துவக்கலைஞர், நிமித்திகப்புல
வர்.

அரசியல்-௬, படை, குடி, கூழ், அ
மைச்சு, நட்பு, அரண்.

அரசியல்-௬, அறநிலையறம், மறநிலை
யறம், அறநிலைப்பொருள், மறநிலை
ப்பொருள், அறநிலையின்பம், மறநி
லையின்பம்; அவையாவன-தத்தம்
வருணத்திற பிறழாது நிலைபெறப்
பாதுகாத்த லறநிலையறம்,-நிலைமீ
ட்டுப் பகைவென்று செஞ்சோற்
றுக் கடன்கழியாதாரைத் தண்டி
த்துக் குறைவறச்செய்தல் மறநி
லையறம்,-நெறிவழிநின்று தத்தநி
லையினான் முயன்றுபெறுபொருள
றநிலைப்பொருள்,-பகைஞர்பொரு
ளுந் திறைப்பொருளுஞ் சூதில்வெ
ல்பொருளுமறநிலைப்பொருள்,-பரு
வமுங்குலமுமொழுக்கமுங்குணமு
மொத்த கன்னிகையைத் தீவேட்
டில்லத் திருத்தலறநிலை யின்பம்,-ஏ
றுதழுவியும் வில்லிற்றொடுத்த வம்
பிருக்கமெய்யா மிவ்வாறு மாறு
படைநெறியின் மணத்தல் மறநிலை
யின்பம்.

அரண்-௪, மலை, காடு, மதில், கடல்.

அலங்காரம்-௩௫, தன்மை, உவமை,
உருவகம், தீவகம், பின்வருநிலை, மு
ன்னவிலக்கு, வேற்றுப்பொருள்
வைப்பு, வேற்றுமை, விபாவனை,
ஒட்டு, அதிசயம், தற்குறிப்பேற்ற
ம், ஏது, நுட்பம், இலேசம், நிர
னிறை, ஆர்வமொழி, சுவை, தன்
மேம்பாட்டுரை, பரியாயம், சமா
யிதம், உதாத்தம், அவநுதி, சிலே
டை, விசேடம், ஒப்புமைக்கூட்ட
ம், விரோதம், புகழ்நிலை, புகழாப்
புகழ்ச்சி, நிதரிசனம், புணர்நிலை,
பரிவருத்தனை, வாழ்த்து, சங்கீர
ணம், பாவிகம்.

அலங்காரம்-௱, உவமை, இயையின்
மை, புகழ்பொருளுவமை, எதிர்நி
லை, உருவகம், திரிபு, பலபடப்புனை
வு, நினைப்பு, மயக்கம், ஐயம், ஒழி
ப்பு, தற்குறிப்பு, உயர்வு நவிற்சி,
ஒப்புமைக்கூட்டம், விளக்கு, பின்
வருவிளக்கு, தொடர்முழுதுவமை
எடுத்துக்காட்டுவமை, காட்சி, வே
ற்றுமை, உடனிகழ்ச்சி, இன்மைந
விற்சி, சுருங்கச்சொல்லல், கருத்
துடையடை, கருத்துடையடை
கொளி, பலபொருட்சொற்றொட
ர், புனைவிலிபுகழ்ச்சி, புனைவுளிவி
ளைவு, பிறிதினவிற்சி, வஞ்சப்புக
ழ்ச்சி, வஞ்சப்பழிப்பு, எதிர்மறை,
முரண்விளைந்தழிவு, பிறிதாராய்ச்
சி, காரணவாராய்ச்சி, கூடாமை,
தொடர்பின்மை, தகுதியின்மை, த
குதி, வியப்பு, பெருமை, சிறுமை,
ஒன்றற்கொன்றுதவி, சிறப்புநிலை,
மற்றதற்காக்கல், காரணமாலை, ஒ
ற்றைமணிமாலை, மாலைவிளக்கு, மே
ன்மேலுயர்ச்சி, நிரனிறை, முறை
யிற்படர்ச்சி, மாற்றுநிலை, ஒழித்து
க்காட்டு, உறழ்ச்சி, கூட்டம், வினை

முதல்விளக்கு, எளிதின்முடிபு, வி
றல்கோள், தொடர்நிலைச்செய்யுட்
பொருட்பேறு, தொடர்நிலைச்செய்
யுட்குறி, வேற்றுப்பொருள் வைப்
பு, மலர்ச்சி, கற்றோர்நவிற்சி, உய்
த்துணர்வு, பொய்த்தற்குறிப்பு, வ
ளப்புநிலை, இன்பம், துன்பம், அக
மலர்ச்சி, இகழ்ச்சி, வேண்டல், இ
லேசம், குறிநிலை, அரதனமாலை, பி
றிதின்குணம்பெறல், தொல்லுருப்
பெறல், பிறிதின் குணம்பெறாமை,
தன்குணமிகை, மறைவு, பொது
மை, மறையாமை, சிறப்பு, இறை,
நுட்பம், காவுவெளிப்படுப்பு, வஞ்
சநவிற்சி, குறிப்புநவிற்சி, வெளிப்
படைநவிற்சி, யுத்தி, உலகவழக்கு
நவிற்சி, வல்லோர்நவிற்சி, மடங்
குதனவிற்சி, தன்மைநவிற்சி, நிகழ்
வினவிற்சி, விறுகோள், மிகுதிநவி
ற்சி, பிரிநிலைநவிற்சி, விலக்கு, வி
தி, ஏது.

அவத்தை-௫, சாக்கிரம், சொப்பன
ம், சுழுத்தி, துரியம், துரியாதீதம்.

அளவு-௪, எண்ணல், எடுத்தல், முக
த்தல், நீட்டல்-தெறித்தலோடைந்
தெனவுங் கூறுப.

அளவை-௮, காட்சி, அனுமானம், உ
வமானம், ஆகமம், அருத்தாபத்தி,
அபாவம், ஐதிகம், சம்பவம்; அவை
யாவன, காணல், காட்சி, - புகை
யைக்கண்டுநெருப்புண்டென லனு
மானம், -மரை, பசுப்போலெனவு
வமானம், -பெரியோர் வாய்ச்சொ
லாகமம், -பகலுண்ணான் பருத்திரு
ப்பானென்புழி யிரவிலொளித்து
ண்பானெனவுணர்தலருத்தாபத்தி,
முன்னுமில்லை, பின்னுமில்லை ஒன்
றிலொன்றில்லை யொருகாலத்துமி
ல்லை யெனல்பாவம், -இம்மரத்திற்
பேயுளதென்ப தைதிகம், -ஆயிரத்
தினூறுண்டெனல் சம்பவம்.

அறத்துறப்பு-௮, ஐயப்படாமை, வி
ருப்பின்மை, வெறுப்பின்மை, மய
க்கமின்மை, பழிவைநிக்கல், அழிந்
தோரைநிறுத்தல், அறம்விளக்கல்,
பேரன்புடைமை.

அறம்-௨, இல்லறம், துறவறம்.

அறம்-௩௨, ஆதுலர்க்குச்சாலை, ஓது
வார்க்குணவு, அறுசமயத்தார்க்கு
ண்டி, பசுவுக்கு வாயுறை, சிறைச்
சோறு, ஐயம், தின்பண்டநல்கல்,
அறவைச்சோறு, மகப்பெறுவித்த
ல், மகவுவளர்த்தல், மகப்பால்வா
ர்த்தல், அறவைப் பிணஞ்சுடுதல்,
அறவைத்தூரியம், சுண்ணம், நோ
ய்மருந்து, வண்ணார், நாவிதர், க
ண்ணாடி, காதோலை, கண்மருந்து,
தலைக்கெண்ணெய், பெண்போகம்,
பிறர்துயர்காத்தல், தண்ணீர்ப்பந்
தல், மடம், தடம், சோலை, ஆவுரி
ஞ்சுதறி, விலங்கிற்குணவு, ஏறுவி
டுத்தல், விலைகொடுத் துயிர்காத்த
ல், கன்னிகாதானம்.

அநுபந்தம்-௪, விடயம், சம்பந்தம்,
பிரயோசனம், அதிகாரி.

அன்னுவயவிலக்கணம் - ௫, விசேட
ணம், விசேடியம், கருத்தா, கரும
ம், கிரியை.

ஆ

ஆச்சிரமம்-௪, பிரமசாரி, இல்வாழ்
வோன், வானப்பிரத்தன், சந்நியா
சி; இவருட்பிரமசாரி-ஆசிரியனிட
த்தோதி விரதங்காத்து விவாகமி
ன்றியிருப்போன், - இல்வாழ்வோ
ன் - இல்லறத்தின் வழா தில்லா
ளோடுங்கூடி வாழ்வோன், -வான
ப்பிரத்தன் - இல்லந் துறந்தில்லா
ளோடாயினுந் தனித்தாயினும் வ
னத்திற்றவஞ் செய்வோன், -சந்நி
யாசி, முற்றத்துறந்தோன்.

ஆதாரம் - ௬, மூலாதாரம், சுவாதிட்
டானம், மணிபூரகம், அநாகதம், வி
சுத்தி, ஆஞ்ஞை, இவற்றிற்குமுறை
யேயிடம், குதம், குய்யம், நாபி, இத
யம், அடிநா, நெற்றி.

ஆயுதவகை-௨, அத்திரம், சத்திரம்,
இவற்றுட் கைவிடுமாயுதமத்திரம்,
கைவிடாவாயுதஞ்சத்திரம்.

ஆன்மா-௨, சீவான்மா, பரமான்மா,
அவையாவன, சரீரவச்சின்னவா
ன்மா-சீவான்மா; இதரபதார்த்தா
னவச்சின்னவான்மா-பரமான்மா

இ

இசை-௩, மந்தரம், மத்திமம், தாரம்.
இசை-௭, குரல், துத்தம், கைக்கிளை,
உழை, இளி, விளரி, தாரம், இவற்று
ண்மிடற்றிற் குரல், நாவிற்றுத்த
ம், அண்ணத்தாற் கைக்கிளை, சி
ரத்தாலுழை, நெற்றியாலிளி, நெஞ்
சால்விளரி, மூக்காற்றாரம், இவ்வ
னந் தனித்தனிப்பிறக்கும்; இவை
யே யேழ்சுரமெனவும், வீணையி
லேழ் நரம்பெனவும் படும்; இவற்
றிற்கோசையுவமை, மயில், இடப
ம், ஆடு, கொக்கு, குயில், குதிரை,
யானை, - சுவையுவமை, பால், தே
ன், கிழான், நெய், ஏலம், வாழை,
மாதுளங்கனி,-வாசனையுவமை,
மௌவல், முல்லை, கடம்பு, வஞ்சி,
நெய்தல், பொன்றுவிரை, புன்னை,-
அக்கரம், ஆ அ, ஈ இ, ஊ உ, ஏ எ,
ஐ இ, ஓ ஒ, ஔ உ,-மாத்திரை, நான்
குரல், நான்குதுத்தம், இரண்டு
கைக்கிளை, மூன்றுழை, நான்கிளி, மூ
ன்றுவிளரி, இரண்டுதாரம்,-இவற்
றுளேழுபாலைபிறக்கும், அவையாவ
ன, குரலேகுரலாயிற்செம்பாலை,-து
த்தமேகுரலாயிற் படுமலைப்பாலை,-
கைக்கிளையே குரலாயிற் செவ்வழி
ப்பாலை,-உழையே குரலாயினரும்
பாலை,-இளியேகுரலாயிற் கோடி
ப்பாலை,-விளரியே குரலாயின் வி
ளரிப்பாலை,-தாரமேகுரலாயின்மே
ற்செம்பாலை, - இவற்றுட் செம்பா
லைக்குக் கோடிப்பாலைவலிது, கோ
டிப்பாலைக்கு விளரிப் பாலையுமேற்
செம்பாலையும் வலிய, அன்றியுந்
தாரத்துழையு முழையுட் குர
லுங் குரலுளிளியு மிளியுட்டுத்தமுந்
துத்தத்துள் விளரியும விளரியுட்
கைக்கிளையும் பிறப்பதகுதி, — இ
வற்றிற்கிறைவர், விசுவாமித்திரன்,
சமதக்கினி, சந்திரன், சூரியன்,
கௌதமன், காசிபன், ஈசன்,-இவ
ற்றிற்குயிர், ஈசன்.
இடம் - ௩, தன்மை, முன்னிலை, பட
ர்க்கை.
இதிகாசம்-௨, பாரதம், இராமாயணம்
இரதம்-௯, சிங்காரம், வீரியம், பெரு
நகை, கருணை, இரௌத்திரம், குற்
சை, சாந்தம், அற்புதம், பயம்.
இராகத்தகுதி - ௪, இடம், செய்யுள்,
குணம், காலம்; இவற்றுளிடம்பற்றி
யவிராகமைந்திணையிராகம்,-செய்
யுட்பற்றிய விராகத்துள், வெண்
பாவிராகஞ் சங்கராபரணம்,-அக
வலிராகந்தோடி,-கலியிராகம், பந்
துவராளி,-கலித்துறை யிராகம்,-
பைரவி,-தாழிசையிராகந்தோடி,-வி
ருத்தவிராகங் கலியாணி, காம்போ
தி, மத்தியமாவதி பலவும்,-உலாவி
ராகஞ் சௌராட்டிரம்,-தோடை
ய விராகஞ் சௌராட்டிரம், நாட்
டை, மங்களராகம், மங்களகௌ
சிகம்,-தேவாரத்திராகம், பூபாளம்,-
பிள்ளைக்கவிராகங் கேதாரகௌள
ம்,-பரணிராகங் கண்டாரவம்,-கு
ணம்பற்றியவிராகத்துள், இரக்கரா
கம், ஆகரி, கண்டாரவம், நிலாம்பு
ரி, பியாகடை, புன்னாகவராளி,-து
க்கவிராகம், இரக்கராகங்களன்றி
வராளியின் மேலாம்,-மகிழ்ச்சியி
ராகம், காம்போதி, சாவேரி, தன்
னியாசி,-யுத்தவிராகம், நாட்டை,-
காலம்பற்றிய விராகத்துள், வசந்
தகாலவிராகம், காம்போதி, அசா
வேரி, தன்னியாசி,-அன்றியு மா
லைவிராகங் கலியாணி, காபி, கன்
னடம், காம்போதி,-யாமராகம், ஆ
கரி,-விடியலிராகம், இந்தோளம்,
இராமகலி, தேசாட்சரி, நாட்டை,
பூபாளம்,-உச்சியிராகம், சாரங்க
ம், தேசாட்சரி; அன்றியும் ஆகரி,
இந்தோளம், இராமகலி, சாரங்க
ம், பூபாளநீக்கிநின்ற மற்றவை யெ
க்காலத்தும் பொதுமைய.
இராகம்-௧௨, பைரவி, தேவகிரியை,
மேகவிரஞ்சி, குறிஞ்சி, பூபாளம்,
வேளாவளி, மலகரி, பௌளி, சீரா
கம், இந்தோளம், பல்லதி, சாவேரி,
படமஞ்சரி, தேசி, இலலிதை, தோடி,
வசந்தம், இராமகிரியை, வராளி,
கௌசிகம், மாளவி, நாராயணி, குண்
டக்கிரியை, கூர்ச்சரி, பங்காளம்,
தன்னியாசி, காம்போதி, கௌளி,

நாட்டை, தேசாட்சரி, காந்தாரி, சாரங்கம், இவற்றுள், பைரவி, புருடவிராகம், பிராமணசாதி, இதின் மனைவிகள், தேவகிரியை, மேகவிரஞ்சி, குறிஞ்சி, அதிதேவதையீசன்,-பூபாளம், புருடவிராகம், பிராமணசாதி, இதின் மனைவிகள், வேளாவளி, மலகரி, பௌளி, அதிதேவதை, திருமால், -சிராகம், புருடவிராகம், அரசசாதி, இதின் மனைவிகள், இந்தோளம், பல்லதி, சாவேரி, அதிதேவதை சரச்சுவதி,-படமஞ்சரி, புருடவிராகம், அரசசாதி, இதின்மனைவிகள், தேசி, இலலிதை, தோடி, அதிதேவதை, இலக்குமி,-வசந்தம், புருடவிராகம், வைசியசாதி, இதின்மனைவிகள், இராமக்கிரியை, வராளி, கைசிகம், அதிதேவதைசூரியன், - மாளவி, புருடவிராகம், வைசியசாதி, இதின்மனைவிகள், நாராயணி, குண்டக்கிரியை, கூர்ச்சரி, அதிதேவதை, நாரதன்,-பங்காளம், புருடவிராகம், சூத்திரசாதி, இதின்மனைவிகள், தன்னியாசி, காம்போதி, கௌளி, அதிதேவதைவிநாயகன், -நாட்டை, புருடவிராகம், சூத்திரசாதி, இதின்மனைவிகள், தேசாட்சரி, காந்தாரி, சாரங்கம், அதிதேவதைதும்புருவன், - இவையன்றிப் பலவகைப்பட வழங்குமிராகம் பலவுளவவை கூறிற்பெருகும்.

இராசி-௧௨, மேடம், இடபம், மிதுனம், கர்க்கடகம், சிங்கம், கன்னி, துலாம், விருச்சிகம், தனுசு, மகரம், கும்பம், மீனம், இவற்றுள் முன்னான்முத்தராயணராசி; அன்றியுமுதன்மூன்றுங் கடைமூன்று மேறுமிராசி, இடையாறு மிறங்குமிராசி.

இருமை-௨, இம்மை, மறுமை.

இலக்கணம்-௫, எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி.

இலிங்கம்-௫, பிருதுவியிலிங்கங் காஞ்சியில், அப்புவிலிங்கம், திருவானைக்காவில், தேயுவிலிங்கந் திருவண்ணாமலையில், வாயுவிலிங்கஞ் சீகாளத்தியில், ஆகாயவிலிங்கஞ் சிதம்பரத்தில், இவையே பஞ்சபூதவடிவங்களான பிரதான பஞ்சவிலிங்கம்.

இழிச்சொல்-௪, குறளை, பொய், கடுஞ்சொல், பயனில்சொல்.

ஈ

ஈச்சுரன்குணம்-௮, தன்வயத்தனாதல், தூயவுடம்பினனாதல், இயற்கையுணர்வினனாதல், முற்றுமுணர்தல், இயல்பாகவே பாசங்களினீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பிலின்பமுடைமை, இவை சைவாகமத்துட் கூறப்பட்டன, அன்றியும், வரம்பின்ஞானம், வரம்பில் காட்சி, வரம்பிலின்பம், வரம்பிலாற்றல், நாமமின்மை, கோத்திரமின்மை, ஆயுவின்மை, இடையூறின்மை, என்பன ஆருகதராற் கூறப்பட்டன.

ஈச்சுரன் பிரபுத்துவ சாமர்த்தியகுணம்-௩, கர்த்தத்துவம், அகர்த்தத்துவம், அன்னியதாகர்த்தத்துவம்.

ஈச்சுரன்முகம்-௫, ஈசானம், தற்புருடம், அகோரம், வாமம், சத்தியோசாதம்; இவற்றுள், ஈசானம், அனைத்துமாளுதல், தற்புருடங் காத்தல், அகோரமழித்தல், வாமம் விளக்கல், சத்தியோசாதந் தோற்றுவித்தல்.

ஈச்சுரன்முக்கியகுணம் - ௬, சருவஞ்ஞத்துவம், சருவேச்சுரத்துவம், சருவநியந்திருத்துவம், சருவாந்தரியாமித்துவம், சருவகற்பிதத்துவம், சருவசத்தித்துவம், அன்றியும், தன்வயத்தனாதல், முதலிலனாதல், உடம்பிலனாதல், எல்லாநலமுளனாதல், எங்கும் வியாபகனாதல், எவற்றிற்குங் காரணனாதல்.

உ

உட்பகை - ௬, காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாற்சரியம்.

உண்டி-௪, உண்டல், தின்றல், நக்கல், பருகல், அவையாவன, சோறுமுதலியவுண்டல், கறிமுதலியதின்றல், தேன்முதலிய நக்கல், நீர் முதலிய பருகல்.

உபசாரம்-கசு, தவிசளித்தல், கைக்கழுநீர்தரல், கால்கழுநீர்தரல், முக்குடிநீர்தரல், நீராட்டல், ஆடைசாத்தல், முப்புரிநூல்தரல், தேய்வைபூசல், மலர்சாத்தல், மஞ்சளரிசிதூவல், நறும்புகைகாட்டல், விளக்கிடல், கருப்பூரமேற்றல், அமுதமேந்தல், அடைகாய்தரல், மந்திரமலரளித்தல்.

உபநிடதம்-ஙஉ, பிரத்திரம், விரகதாரண்ணியம், சுவேதாசுவதரம், கைவல்லியம், சலாக்கினி, கடம், வல்லி, காத்தியாயனம், பிரமம், நாராயணம், அங்கிசம், பரமாங்கிசம், பாற்கரம், பிரமபிந்து, ஆருணி, அமிர்தபிந்து, பசுபாசம், பிரமசாபாலம், தேசோபிந்து, வார்சியாயனியம், போதாயனியம், ஆசுவலாயனியம், சாங்கியாயனியம், வாசிரோயனியம், சௌனியம், வெசங்கற்பம், சிரவணம், பாரகம், கிம்புரோடியம், மாண்டுகம், முண்டிரம், மௌண்டிரம்.

உபாயம்-ச, சாமம், தானம், பேதம், தண்டம், அவையாவன, சமாதானத்தோடாயினும் பொருள்கொடுத்தாயினும் பிறரைப் பிரித்தாயினும், படைகொண்டாயினுங் காரியங்கொள்ளல்; இந்நான்கு மரசர்க்குரியனவாம்.

உயிர்வேதனை-கஉ, அனல், சீதம், அசனி, புனல், வாதம், ஆயுதம், விடம், மருந்து, பசி, தாகம், பிணி, முனிவுமை.

உருத்திரர்-கக, மாதேவன், அரன், உருத்திரன், சங்கரன், நீலலோகிதன், ஈசானன், விசயன், வீமதேவன், பவோற்பவன், கபாலி, சௌமியன்

உரை-ச, கருத்துரை, பதவுரை, பொழிப்புரை, அகலவுரை, அவையாவன, செய்யுட் கருத்துரைத்தலே கருத்துரை, சொற்றொறும் பதப்பயனுரைத்தலே பதவுரை, பொருடொகுத்துரைத்தலே பொழிப்புரை, இலக்கணமுமிலக்கியமு மெடுத்துக்காட்டிப் பொருள்விரித் துரைத்தலே யகலவுரை.

உரையிலக்கணம்-ரு, பதம், பதப்பொருள், உதாரணம், வினா, விடை.

உலகம்-ங, பூமி, அந்தரம், சுவர்க்கம். அன்றியும், பூலோகம், பரலோகம், பாதாளலோகமென்பாருமுளர்

உலகம்-கச, மேலுலகேழுங் கீழுலகேழும்; மேலுலகாவன, - பூலோகம், புவலோகம், சுவலோகம், சனலோகம், தபோலோகம், மகாலோகம், சத்தியலோகம்; கீழுலகாவன. அதலம், விதலம், சுதலம், தராதலம், இரசாதலம், மகாதலம், பாதாளம்.

உலோகம்-ரு, பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, ஈயம், இவையேபஞ்சலோகம்.

உலோகம்-எ, செம்பொன், வெண்பொன், கரும்பொன், செம்பு, ஈயம், வெண்கலம், தரா.

உவர்ப்பு-சு, ஆசியம், இரதி, அரதி, சோகம், பயம், குற்சை, இவைமுறையே, சிரிப்பு, ஆசை, வெறுப்பு, சோர்வு, அச்சம், அருவருப்பு.

ஊ

ஊறு-அ, வெம்மை, தண்மை, மென்மை, வன்மை, திண்மை, நொய்மை, சீர்மை, சருச்சரை, இவையே தொடப்படும், பொருட்கென்குணம்.

ஊறுபாடு-ச, எறிதல், குத்தல், வெட்டல், எய்தல்.

எ

எச்சம்-உ, பெயரெச்சம், வினையெச்சம்.

எச்சம்-அ, குறள், கூன், ஊமை, செவிடு, குருடு, முடம், உறுப்புமயக்கம், உறுப்பில்பிண்டம், இவையெண்வகையுடற்குறை.

எழுத்துத்தானம்-ரு, பாலன், குமரன், அரசன், விருத்தன், மரணம், இவற்றிற்குமுறையே யெழுத்துக்களாவன, அஆ, இஈஐ, உஊஔ, எஏ, ஒஓ, பாட்டுடைத்தலைவன், பேரெழுத்தைப் பாலதானமாகக்கொண்டெண்ணப்படும், இவற்றுண் முன்னையமூன்று நன்மை பயக்கும், பின்னையவிரண்டுந் தீமைபயக்கும்.

ஐ

ஐச்சுவரியம்-அ, இராசாங்கம், மக்கள், அற்றம், பொன், மணி, நெல், வாகனம், அடிமை.

ஐம்புலநுகர்ச்சியி னிறப்பன-ரு, சுவையாலிறப்பதுமீன், நாற்றத்தால் வண்டு, பரிசத்தால் யானை, ஓசையாலசுணம், ஒளியால்விட்டில்.

ஒ

ஒருமை-க, இறையுணர்வு.

க

கடல்-எ, உவர்நீர், நன்னீர், பால், தயிர், நெய், கருப்பஞ்சாறு, தேன்.

கடுகம்-ங, சுக்கு, திப்பிலி, மிளகு, இவையே திரிகடுகெனப்படும்.

கடைப்படுதானம்-எ, ஆர்வம், புகழ், அச்சம், கைம்மாறு, காரணம், கண்ணோட்டம், கடப்பாடு.

கணக்குவகை-ச, தொகை, பிரிவு, பெருக்கு, கழிவு.

கணம்-அ, நிலம், நீர், மதி, இயமானன், சூரியன், தீ, வாயு, ஆகாயம், இவற்றுண்முன்னர் நான்குநன்று, பின்னர் நான்குங்கலகம், நிரைநிரைநிரை நிலக்கணம், நேர் நிரைநிரை நீர்க்கணம், நிரைநேர் நேர்மதிக்கணம், நேர்நேர்நேர் உயிர்க்கணம், நேர்நிரைநேர் சூரியகணம், நிரைநேர் நிரைதீக்கணம், நேர்நேர் நிரைவாயுக்கணம், நிரைநிரைநேர் ஆகாயக்கணம்.

கணம்-கஅ, அமரர், சித்தர், அசுரர், தைத்தியர், கருடர், கின்னரர், நிருதர், கிம்புருடர், காந்தருவர், இயக்கர் விஞ்சையர், பூதர், பைசாசர், அந்தரர், முனிவர், உரகர், ஆகாயவாசிகள், போகபூமியர்.

கணிதம்-அ, சங்கலிதம், விபகலிதம், குணனம், பாகாரம், வர்க்கம், வர்க்கமூலம், கனம், கனமூலம், இவற்றுள் சங்கலிதம்கூட்டல், -விபகலிதம் கழித்தல், -குணனம் பெருக்கல், -பாகாரம் பங்கிடல், -வர்க்கம், சமமாகிய விரெண்ணின்பெருக்கம், அஃதாவது நிலத்தைச் சமமாக, நாற்கோணஞ்செய்தல், -வர்க்கமூலம் அவ்வர்க்கத் தொகையினின்றுதன் மூலமாகிய வரம்பறிதல், -கனம் சமமாகிய மூவெண்ணின்பெருக்கம் அஃதாவது, குழியைச் சமமாகப் பன்னிருகோணப்படுத்தல், -கனமூலம், அக்கனத்தொகையி னின்றதன் மூலமாகிய வொருமூலையறிதல்

கண்டம்-கூ, கீழ்விதேகம், மேல்விதேகம், வடவிதேகம், தென்விதேகம், வடவிரோபதம், தென்விரோபதம், வடபரதம், தென்பரதம், மத்திமகண்டம், இவையேநவகண்டம்.

கதி-ச, தேவகதி, மக்கட்கதி, விலங்கின்கதி, நரககதி.

கந்தம்-உ, நற்கந்தம், துர்க்கந்தம்.

கரணம்-ச, மனம், புத்தி, அகங்காரம், சித்தம்.

கரணம்-யக, பவ, பாலவ, கவுலவ, தைதுலை, கரசை, வனசை, பத்திரவா, சகுனி, சதுர்ப்பாத, நாகவா, கிமித்துக்கின.

கருமபூமிக்குரிமை-சு, வரைவு, தொழில், வித்தை, வாணிகம், உழவு, சிற்பம்.

கருமேந்திரியம்-ரு, வாக்கு, பாதம், பாணி, பாயுரு, உபத்தம்.

கருவுளமைப்பு-சு, பேறு, இழவு, இன்பம், பிணி, மூப்பு, சாக்காடு.

கலைஞானம் - சுயச, அக்கரவிலக்கணம், இலிகிதம், கணிதம், வேதம், புராணம், வியாகரணம், நீதிசாத்திரம், சோதிடசாத்திரம், தருமசாத்திரம், யோகசாத்திரம், மந்திரசாத்திரம், சகுனசாத்திரம், சிற்பசாத்திரம், வைத்தியசாத்திரம், உருவசாத்திரம், இதிகாசம், காவியம், அலங்காரம், மதுரபாடனம், நாடகம், நிருத்தம், சத்தப்பிரமம், வீணை, வேணு, மிருதங்கம், தாளம், அத்திரபரீட்சை, கனகபரீட்சை, இரதபரீட்சை, கசபரீட்சை, அசுவபரீட்சை, இரத்தினபரீட்சை, பூமிபரீட்சை, சங்கிராம விலக்கணம், மல்லயுத்தம், ஆகருடணம், உச்சாடனம், வித்துவேடணம், மதனசாத்திரம், மோகனம், வசிகரணம், இரசவாதம், காந்தருவவாதம், பை

பிலவாதம், கவுத்துகவாதம், தாதுவாதம், காருடம், நட்டம், முட்டி, ஆகாயப்பிரவேசம், ஆகாயகமனம், பரகாயப்பிரவேசம், அதிரிசயம், இந்திரசாலம், மகேந்திரசாலம், அக்கினித் தம்பம், சலத்தம்பம், வாயுத்தம்பம், திட்டித்தம்பம், வாக்குத்தம்பம், சுக்கிலத்தம்பம், கனவத்தம்பம், கட்கத்தம்பம், அவத்தைப்பிரயோகம்.

கவி-ச, ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம், இவற்றுள், பொருளடிபாவணிமுதலிய கொடுத்து மற்றொருவன் பாடுக வென்றவுடனே பாடுவோனாசுகவி, - பொருட்செல்வம், சொற்செல்வம், தொடை, தொடைவிகற்பஞ்செறிய வுருவகமுதலிய வலங்காரத்தோடின்றோசைத்தா யமுதமுறப் பாடுவோன் மதுரகவி,-மாலைமாற்று, சுழிகுளம், ஏகபாதம், சக்கரம், எழுகூற்றிருக்கை, காதைகரப்பு, கரந்துறை, துசங்கொளல், வாவனஞாற்று, பாதமயக்கு, பாவின்புணர்ப்பு, கூடசதுக்கம், கோமூத்திரி, ஒரெழுத்தினம், ஒற்றெழுத்துச்சேர்ந்த வொருபொருட்பாட்டு, சித்திரப்பா, விசித்திரப்பா, விருவுத்தரம், சருப்பதோபத்திரம், எழுத்து வருத்தனமிவைமுதலிய மிறைக்கவிதெரிந்து பாடுவோன், சித்திரக்கவி,-மும்மணிக்கோவை, பன்மணிமாலை, மறம், கலிவெண்பா, தசாங்கம், மடலூர்தல், கிரிடை, இயல், இசை, கூத்து, பாசண்டத்துறை, இவை முதலிய விரித்துப்பாடுவோன் வித்தாரக்கவி.

கன்னிகை - ரு, அகலிகை, திரௌபதை, சீதை, தாரை, மண்டோதரி.

கா

காதலர்-ங, புருடன், தோழன், மகன்

காலம்-ங, இறந்தகாலம், நிகழ்காலம். எதிர்காலம்.

காலம்-சு, பருவத்தைக்காண்க.

கி

கிரகம்-கூ, ஆதித்தன், சோமன், அங்காரகன், புதன், பிரகற்பதி, சுக்கிரன், சனி, இராகு, கேது, இவையே நவக்கிரகங்களெனப்படும்.

கு

குணம்-ங, சத்துவம், இரசசு, தமசு, அவையாவன, ஞானம், அருள், தவம், பொறை, வாய்மை, மேன்மை, மோனம், ஐம்பொறியடக்கலென வெட்டுஞ் சத்துவம்,-மனவூக்கம், ஞானம், வீரம், தவம், தருமம், தானம், கல்வி, கேள்வியென வெட்டுமிரசசு,-பேருண்டி, நெடுந்துயில், சோம்பு, நீதிவழு, ஒழுக்கவழு, வஞ்சம், மறதி, பொய், கோபம், காமம், கொலை, இவை தமசு.

குணம்-ச, ஆடூஉக்குணம், அறிவு, நிறை, ஓர்ப்பு, கடைப்பிடி,-மகடூஉக்குணம், நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு.

குரவர்-ரு, அரசன், உபாத்தியாயன், தந்தை, தேசிகன், மூத்தோன்.

குற்றம்-ங, காமம், வெகுளி, மயக்கம்.

குற்றம்-ரு, கொட்டாவி, நெட்டை, குறுகுறுப்பு, கூன்கிடை, நட்டுவிழல்.

குற்றம் - அ, ஞானவரணியம், தரிசனாவரணியம், வேதநீயம், மோகநீயம், ஆயு, நாமம், கோத்திரம், அந்தராயம்.

கூ

கூத்துவகை-உ, தேசிகம், மார்க்கம்.

கே

கேள்வி-ச, அறம், பொருள், இன்பம், வீடு, இந்நான்கும் கேட்டல்.

கேள்வி - ரு, அறம், பொருள், இன்பம், வீடு, இந்நாற்கேள்வியோடிவற்றின வழிநிற்றல்.

கை

கைத்தொழில் - ரு; எண்ணல், எழுதல், இலைகிள்ளல், பூத்தொடுத்தல், யாழ்வாசித்தல்.

கோ

கோசம்-ரு, அன்னமயம், பிராணமயம், மனோமயம், விஞ்ஞானமயம், ஆனந்தமயம், அவையாவன, உடல், அன்னமயகோசம், கருமேந்திரியமும், பிராணனும் பிராணமய கோசம், கருமேந்திரியமு மனமு மனோ மயகோசம், ஞானேந்திரியமும் புத்தியும் விஞ்ஞானமய கோசம், அவித்தையானந்த மய கோசம்.

கௌ

கௌடம்-ரு, சுத்தகௌடம், கானகுப்சம், சாரசுவதம், உற்கலம், மைதிலை.

கௌவியம்-ரு,-கோசலம், கோமயம், பால், தயிர், நெய்.

ச

சக்கரவர்த்திகள்-சு, அரிச்சந்திரன், நளன், முசுகுந்தன், புருகுற்சன், புரூரவன், கார்த்தவீரியன், இவர்கள் மற்றொருவனைப்பணியாது தரணியாண்டோர்.

சதுரங்கம்-அங்கங்காண்க.

சத்தம், ரு-தோற்கருவி, துளைக்கருவி, நரம்புக்கருவி, கஞ்சக்கருவி, மிடற்றுக்கருவி, இவையே சத்தத்துக்கைந்துகாரணம்.

சத்தி, ங - இச்சாசத்தி, ஞானசத்தி, கிரியாசத்தி, இவற்றுளிச்சாசத்தியுயிர்க்கருணைசம், ஞானசத்தி, கருமங்களையறிந்தூட்டல், கிரியாசத்தி, உலகங்களாக்கல்.

சத்தி, ரு-சிற்சத்தி, பராசத்தி, இச்சாசத்தி, ஞானசத்தி, கிரியாசத்தி, அவையாவன-உயிர்க்கொளியாக நிற்பது சிற்சத்தி, பிராணன் முதலிய வாயுவாகநிற்பது பராசத்தி, பஞ்சபூதமாக நிற்பதிச்சாசத்தி, ஐம்பொறியுணர்ச்சியாக நிற்பது ஞானசத்தி, மற்றை வினைத்துணையாக நிற்பது கிரியாசத்தி.

சமயம், சு-வைஷ்ணவம், சைவம், சாக்தம், சௌரம், காணபதம், கௌமாரம். இவை வைதிகமதமென்னப்படும்.

சமயம், சு - கபிலமதம், கணாதமதம், பதஞ்சலிமதம், அக்ஷபாதமதம், வியாசமதம், ஜைமினிமதம், இவை வேதாந்தமத மென்னப்படும்.

சமயம், சு-பௌத்தம், ஜைனம், பைரவம், காளாமுகம், லோகாயிதம், சூனியவாதம், இவை புறச்சமய மென்பர் வைதிகர்.

சமயம், சு-வைரவம், வாமம், காளாமுகம், மாவிரதம், பாசுபதம், சைவம்; அன்றியும் புறச்சமயமாவன, சு-உலகாயிதம், புத்தம், சமணம், மீமாஞ்சை, பாஞ்சராத்திரம், பாட்டாசாரியம், இது சைவர் கொள்கை.

சயனம், ரு-இலவம்பஞ்சி, செம்பஞ்சி, வெண்பஞ்சி, மயிர், அன்னத்தூவி, இவற்றாற் செய்யப்பட்டவை வகைமெத்தை, இவையே பஞ்சசயனம்.

சா

சாதி, ச-ஆந்திரம், கன்னடம், திராவிடம், மகாராட்டிரம்.

சாத்திரம், ங-சாங்கியம், பாதஞ்சலியம், வேதாந்தம், இவை முறையே கபிலர், பதஞ்சலி, வியாசரிம்மூவரால் கூறப்பட்டன. இவற்றையத்தியான்மீகநூலென்ப.

சாத்திரம், சு-வேதாந்தம், வைசேடிகம், பாட்டம், பிரபாகரம், பூருவமீமாஞ்சை, உத்தரமீமாஞ்சை.

சாந்துவகை, ச-பீதம், கலவை, வட்டிகை, புலி.

சி

சித்தர், கூ-சத்தியநாதர், சதோகநாதர், ஆதிநாதர், அநாதிநாதர், வகுளிநாதர், மதங்கநாதர், மச்சேந்திரநாதர், கடேந்திரநாதர், கோரக்கநாதர்.

சித்தி, அ-அணிமா, மகிமா, கரிமா, இலகிமா, பிராத்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம், அவையாவன - ஆன்மாப்போலாதலணிமா, மகத்துவமாதலேமகிமா, தன்றுட

ற்கண்டிடப்பின்னாய்க் கண்டிப்புள்ள வற்றை யுருவவல்லவனாதல் கரிமா, இலகுத்துவமாதலே யிலகிமா, வேண்டியவையடைதலே பிராத்தி, நிறையுளனாதலே பிராகாமியம், ஆட்சியுளனாதலே யீசத்துவம், எல்லாந் தன்வசமாக்க வல்லனாதலே வசித்துவம்.

சிரஞ்சீவியர், ௭-அசுவத்தாமன், மாபலி, வியாசன், அநுமான், விபீடணன், கிருபாசாரியன், பரசுராமன்.

சிவதத்துவம், ௫ - சுத்தவித்தை, ஈச்சுரம், சாதாக்கியம், சத்தி, சிவம், அவையாவன - ஞானமேறிக் கிரியைகுறைந்தது சுத்தவித்தை, ஞானங்குன்றிக் கிரியையுயர்ந்த தீச்சுரம், ஞானங்கிரியையொத்தது சாதாக்கியம், கிரியைநாடல் சத்தி, ஞானமொன்றல் சிவம்.

சிவபூசையியல்பு, ௪-சரியை, கிரியை, யோகம், ஞானம்.

சிவாகமம், ௨௮ - காமிகம், யோகசம், சிந்தியம், காரணம், அசிதம், தீப்தம், சூக்குமம், சகத்திரம், அஞ்சுமான், சுப்பிரபேதம், விசயம், நிசுவாசம், சுவாயம்புவம், அனலம், வீரம், இரௌரவம், மகுடம், விமலம், சந்திரஞானம், விம்பம், புரோற்கீதம், இலலிதம், சித்தம், சந்தானம், சருவோத்தமம், பாரமேச்சுரம், கிரணம், பேதம், வாதுளம்.

சிற்பத்தொழிற்குறுப்பு, ௧௦ - கல், உலோகம், செங்கல், மரம், மண், சுதை, தந்தம், வண்ணம், கண்டசருக்கரை, மெழுகு.

சிற்பநூல், ௩௨-விச்சுவதருமம், விச்சுவேசம், விச்சுவசாரம், விருத்தம், தாவட்டம், நளம், மயம், அநுமான், பானு, கற்பாரியம், சிருட்டம், மானசாரம், வத்துவித்தியாபதி, பாராசரியம், அரிடகம், சயித்தகர், வாத்துபோதம், வித்தாரம், இந்திரம், வச்சிரம், சவுமம், விச்சுவகாசிபம், மகேந்திரம், விசாலம், சித்திரம், காபிலகலைரூபம், நாமசங்கிதை, சாத்திகம், விச்சுவபோதம், ஆதிசாரம், வெகுச்சுருதம், மானபேதம்.

சீ

சீவதோரம், ௩-நூலம், குங்குமம், கரணம்.

சீவாவத்தை, ௩-சாக்கிரம், சொப்பனம், சுழுப்தி.

சு

சுடர், ௨-சூரியன், சந்திரன்.

சுடர், ௩ - சந்திரன், சூரியன், அக்கினி.

சுபம், ௪-மங்கலங்காண்க.

சுப்பிரமணியர் பிரதானத்தலம், ௬ - திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருவாவினன்குடி, திருவேரகம், குன்றுதோறாடல், சோலைமலை.

சுரம், ௭-ச, ரி, க, ம, ப, த, நி, அன்றியு மேழிசைகாண்க.

சுவை, ௬-கைப்பு, தித்திப்பு, புளிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, கார்ப்பு.

சூ

சூதகம், ௫-சனனாசௌசம், மரணாசௌசம், சண்டாளநீரிற்றோய்தல், சுராபானம்பண்ணல், பொய்கூறல்.

சூரியர், ௧௨-தாத்துரு, சக்கரன், அரியமன், மித்திரன், வருணன், அஞ்சுமான், இரணியன், பகவான், திவச்சுவான், பூடன், சவித்திரு, துவட்டன், இப்பெயர் சித்திரைமாதமேடவிராசி முதலொவ்வொருமாதத் தொவ்வோரிராசியிற்புகுந்து சூரியனுக்கு முறையே செல்லுமென்பர், இவரே துவாதசாதித்தர்.

சூரியர் சந்திரர்முதலியவீதி, ௩-மேடவீதி, இடபவீதி, மிதுனவீதி, அவைதாம், இடபம், சிங்கம், மிதுனம், கடகம், நான்கு மேடவீதி, மீனம், மேடம், கன்னி, துலாம், நான்கு மிடபவீதி, தனுசு, மகரம், கும்பம், விருச்சிகம், நான்கு மிதுனவீதி.

சே

சேனைத்தொகை, ௧௦-பதாதி, சேனாமுகம், குமுதம், கணகம், வாகினி, பிரளயம், சமுத்திரம், சங்கம், அநீகம், அக்குரோணி, அவையாவன-

யானை-க, தேர்-க, குதிரை-ங, காலாள்-ரு, இவை கூடியது பதாதி, பதாதி மும்மடிகொண்டது சேனாமுகம், சேனாமுகமும்மடி குமுதம், குமுதமும்மடி கணகம், கணகமும்மடி வாகினி, வாகினி மும்மடி பிரளயம், பிரளயமும்மடி சமுத்திரம், சமுத்திரமும்மடி சங்கம், சங்கமும்மடி யங்கம், அங்கமும்மடி அக்குரோணி.

சை

சைவம், கசு-ஊர்த்தசைவம், அநாதிசைவம், ஆதிசைவம், மகாசைவம், பேதசைவம், அபேதசைவம், அந்தரசைவம், குணசைவம், நிர்க்குணசைவம், அத்துவாசைவம், யோகசைவம், ஞானசைவம், அணுச்சைவம், கிரியாசைவம், நாலுபாதச்சைவம், சுத்தசைவம்.

சொ

சொல், ச-பெயர், வினை, இடை, உரி.

த

தத்துவம், கூசு-ஆன்மதத்துவம்-உச, நாடி-க0, அவத்தை-ரு, மலம்-ங, குணம்-ங, மண்டலம்-ங, பிணி-ங, விகாரம்-அ, ஆதாரம்-சு, தாது-எ, வாயு-க0, கோசம்-ரு, வாயில்-கூ, இவற்றுளான்மதத்துவமாவன-பூதம்-ரு, புலன்-ரு, ஞானேந்திரியம்-ரு, கருமேந்திரியம்-ரு, கரணம்-ச, இவை தத்தம் வரியிற்காண்க.

தந்தையர், ரு-பிறப்பித்தோன், கற்பித்தோன், மணமுடிப்பித்தோன், அன்னந்தந்தோன், ஆபத்துக்குதவினோன்.

தமிழ், ங-இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ்.

தமிழ்நாடு, கங-செந்தமிழ் நாடொன்று, இதற்கெல்லை, கருவூரின் கிழக்கு, மருவூரின்மேற்கு, வைகையாற்றின்றெற்கு, மருதயாற்றின்வடக்கு; இதனைச்சூழ்ந்த கொடுந்தமிழ் நாடு-கஉ, தென்பாண்டி, குட்டம், குடம், கற்கா, வேண், பூழி, பன்றி, அருவா, அருவாவடதலை, சீதம், மலாடு, புனனாடு.

தயாவிருத்தி, கச-களாபடனம், வியாதாகாரம், நிர்க்கநதண்டனம், சந்தேகவாரணம்-அன்னியகுலசகனம், பாதிருநானயோகம், பார்த்ததேவப் பிரார்த்திதம், அவையாவன முறையே கல்வியயிற்றல், நோயர்தீர்த்தல், தண்டத்தினிக்கல், ஐயந்தேற்றல், பிறர்குணந் தழுக்காறின்றிப் பொறுத்தல், பிறராற்செய்யப்படுநன்மைமறந்து நன்றிகிளைத்தல், பிறர்க்குவேண்டித் தெய்வம் வழிபடல், இவை யுயிர்க்கேழுபகாரம், அன்றியுஞ் சத்தாங்கோபகாரம், அன்னம், பானம், அம்பரம், மந்திரம், தாசபாலனம், காராமயத் திரிதயமோசனம், சவச்சேமம், அவையே உணவு, பானம், உடை, இடம், அடிமைகாத்தல், சிறைநோய் மூன்றுந்தீர்த்தல், பிணமடக்கல், இவை யுடற்கேழுபகாரம்.

தயாவிருத்தி, அ-பிறர்க்குப்பொருள் வரவை யுவத்தல், பிறர் செல்வம் பொறுத்தல், பிறர் கருமத்திற்குடன்படல், திமைக்கஞ்சல், பிறர்கருமமுடிக்க விரைதல், பிறலாயந்தீர்த்தல், நன்மைகடைப்பிடித்தல், பிறர் துயர்க்கிரங்கல்.

தரு, ரு-அரிசந்தனம், கற்பகம், சந்தானம், பாரிசாதம், மந்தாரம்.

தருமநூல், கஅ-மநு, அத்திரி, ஔரிதம், விட்டுணு, யாஞ்ஞவற்கியம், உசனம், ஆங்கிரேசம், யமம், ஆபத்தம்பம், சமவர்த்தம், காத்தியாயனம், பிரகற்பதி, பாராசரம், வியாசம், சங்கலிதம, தக்கம், கௌதமம், சாதான்மம், வசிட்டம், இவற்றட் சங்கலிதம் பொது, இவற்றுள் கிருதயுகத்தில் மநுமிருதியும், திரேதாயுகத்திற் கௌதமமிருதியும், துவாபரயுகத்திற் சங்கலிதமிருதியும், கலியுகத்திற் பராசரமிருதியுமுக்கியமாயிருக்கும்.

தா

தாது, எ-இரதம், இரத்தம் சுக்கிலம், மூளை, தசை, எலும்பு, தோல்.

தாயர், ௫-பாராட்டுந்தாய், ஊட்டுந்தாய், முலைத்தாய், கைத்தாய், செவிலித்தாய், அன்றியுமரசன்றேவி, குருவின்றேவி, அண்ணன்றேவி, தன்றேவியையீன்றாள், தன்னையீன்றாள்.

தாரணை, ௯-காமதாரணை, வச்சிரதாரணை, மாயாதாரணை, சித்திரதாரணை, செய்யுட்டாரணை, நிறைவு குறைவாகிய வெண் பொருட்டாரணை, சத்ததாரணை, வத்துத்தாரணை, சதுரங்கதாரணை.

தாளம், ௫ சச்சற்புடம், சாசற்புடம், சட்பிதாபுத்திரிகம், சம்பத்துவேட்டம், உற்கடிதம், இவற்றுட் சச்சற்புடமாவது குரு-உ, இலகு-க, புலுதம்-க, ऽऽ।ऽ, ஆகமாத்திரை-அ, இஃதீசன், சத்தியோசாத முகத்திற்பிறந்தது பிரமசாதி, சாசற்புடமாவது - குரு-க, இலகு-உ, குரு-க, ऽ।।ऽ, ஆகமாத்திரை-௬, இஃதீசன் வாமமுகத்திற்பிறந்தது அரசசாதி, சட்பிதாபுத்திரிகமாவது புலுதம்-க, இலகு-க, குரு-உ, இலகு-க, புலுதம்-க ऽ।ऽऽ।ऽ, ஆகமாத்திரை-கஉ, இஃதீசனகோரமுகத்திற்பிறந்தது வைசியசாதி, சம்பத்துவேட்டமாவது, புலுதம்-க, குரு-௩, புலுதம்-க, ऽ, ऽऽऽ, ऽ, ஆகமாத்திரை-கஉ, இஃதீசன்றற்புருடமுகத்திற்பிறந்தது சூத்திரசாதி, உற்கடிதமாவது, குரு-௩, ऽऽऽ, ஆகமாத்திரை-௬, இஃதீசானமுகத்திற்பிறந்தது சங்கிரமசாதி.

தாளம், எ-துருவம், மட்டியம், உருபகம், சம்பை, திரிபுடை, அட்டதாளம், ஏகதாளம்; இவற்றுள் துருவத்திற்கு இலகு-க, குரு-க, துரிதம்-க, ।ऽ○, இதற்குச்சுரம் சரிகம, கரிசரி, கரிசரிகம, மட்டியத்திற்கு இலகு-க, துரிதம்-க, இலகு-க, ।○।, இதற்குச்சுரம் சரிகரி, சரி, சரிகம, உருபகத்திற்குஇலகு-க, துரிதம்-க, ।○, இதற்குச்சுரம் சரி, சரிகம, சம்பைக்கு இலகு-க, அநுதுரிதம்-க, துரிதம்-க, ।◡○, இதற்குச்சுரம் ச, ரிக, சரிசரி, கமா, திரிபுடைக்கு துரிதம்-௩, அநுதுரிதம்-க, ○○○◡, இதற்குச்சுரம் சரிகசரிகம, அட்டதாளத்திற்கு இலகு-க, துரிதம்-உ, இலகு-க, ।○○।, இதற்குச்சுரம் சரிகா, சாரிகா, மா, மா, ஏகதாளத்திற்கு இலகு-க, ।, இதற்குச்சுரம் சரிகம, சம்பைக்குப் பிரமசாதிதவிர நான்குசாதியுமுள, திரிபுடைக்கு மூன்று விராமமுமோரநுதுரிதமுமாறுலொரேசாதி, இலகுவிருந்தாலைந்து சாதியுமுள, மற்றையைந்து தாளங்கட்கு மைந்து சாதியுமுள, அவற்றை யவ்வச்சாதி யேகதாளலகு, அக்கரங்களாலறியுமாறு, பிரமசாதியிலகுவிற்கு நான்கக்கர காலம், அரசசாதியிலகுவிற்கு மூன்றக்கரகாலம், ஆறக்கரகாலமுமென்ப, வைசியசாதியிலகுவிற் கேழக்கரகாலம், சூத்திரசாதியிலகுவிற் கைந்தக்கரகாலம், சங்கிரமசாதியிலகுவிற் கொன்பதக்கரகாலம், எச்சாதியிலு மநுதுரிதமோரக்கரகாலமுந் துரிதமிரண்டக்கரகாலமுமாம்.

தாளம், ௯-அரிதாளம், அருமதாளம், சமதாளம், சயதாளம், சித்திரதாளம், துருவதாளம், நிவிர்த்ததாளம், படிமதாளம், விடதாளம், இவையே நவசந்திதாளம்.

தாளப்பிராணம், க0-காலம், மார்க்கம், கிரியை, அங்கம், கிரகம், சாதி, கலை, இலயை, யதி, பிரத்தாரம், இவையே தாளதசப்பிராணமென்ப, இவற்றுட் காலப்பிரமாணம்-க0, அவையாவன - கணம், இலவம், காட்டை, நிமிடம், துடி, துரிதம், இலகு, குரு, புலுதம், காகபதம், இவற்றுட் கணம், தாமரையிதழ் நூறடுக்கி யதிலோரிதழி லூசிசெலுத்துங்காலம், கணமெட்டுக்கொண்டதிலவம், இலவமெட்டுக்கொண்டது காட்டை, காட்டையெட்டுக்கொண்டது நிமிடம், நிமிடமெட்டுக்கொண்டது துடி, துடியிரண்டுகொண்டது துரிதம், துரிதமிரண்டுகொண்டதிலகு, இலகிரண்டுகொண்டது குரு, இலகு மூன்றுகொண்டது புலுதம், குருவிரண்டு

கொண்டது காகபதம், மார்க்கம்-௬, தக்கணம், வார்த்திகம், சித்திரம், சித்திரதரம், அர்த்தசித்திரம், அதிசித்திரம், இவற்றுள் எட்டுமாத்திரையோர்கலையாகக் கொண்டது தக்கணம், நான்குமாத்திரையோர்கலையாகக் கொண்டது வார்த்திகம், இரண்டுமாத்திரையோர்கலையாகக்கொண்டது சித்திரம், ஒருமாத்திரையோர்கலையாகக் கொண்டது சித்திரதரம், அரைமாத்திரையோர்கலையாகக்கொண்டது அர்த்தசித்திரம், கான்மாத்திரையோர்கலையாகக்கொண்டததிசித்திரம், நொடியளவுமாத்திரை, கிரியை-௨, மார்க்கம், தேசிகம், இவற்றுண்மார்க்கம்-௮, இவற்றுனிசத்தம்-௪, சசத்தம்-௪, நிசத்தமாவது-ஆவாபம், நிட்கிராமம், விட்சேபம், பிரவேசம்,-சசத்தமாவது-துருவம், சம்மியம், தாளம், சன்னிபாதம்,-தேசிகம்-௮, துருவகம், சர்ப்பிணி, கிருடியை, பதுமினி, விசர்ச்சிதை, விட்சிப்தம், பதாகை, பதிதம், இவற்றினிலக்கியங்களை நூலானுணர்க,-அங்கம்-௬, அவையாவன, ◡ ○ । ᘔ ∫ +, இவைமுறையே பிறை, மதி, கணை, வில், பாம்பு, புள்ளடி, முறையே யிவற்றின்பெயர், அநுதுரிதம், துரிதம், இலகு, குரு, புலுதம், காகபதம், இவற்றினுற்பத்திகளும், பரியாயநாமங்களும், வண்ணங்களும், அதிதேவதைகளும், மாத்திரைகளும், அத்தாங்குலப்பிரமாணங்களும், காதைப் பிரமாணங்களும், நூலானுணர்க,—கிரகம்-௪, அதீதம், அநாகதம், சமம், விடமம், இவற்றுட் குரன்முன்னுந் தாளம்பின்னும்வருவததீதம்,—தாளமுன்னுங்குரல்பின்னும்வருவதநாகதம்,-குரலுந் தாளமுமொத்துவரிற் சமம்,-குரலுந் தாளமுமுன்னும் பின்னுங்கலந்து வருவதுவிடமம், சாதி-௫, சதுரசிரம், திரிசிரம், மிசிரம், கண்டம், சங்கிரணம், இவைமுறையே, பிரமவரச வைசிய சூத்திரசங்கிரமம், இவற்றை முற்கூறிய விலகு, அக்கர காலங்களாலறிவது,-கலை ௩, ஏககலை, துவிகலை, சதுர்க்கலை, இவற்றுளக்கரகாலமாயுங் கிரியையோடும் வருவது ஏககலை,-இதனையிரட்டித்துக் கிரியையோடுவருவது துவிகலை,-இதனை யிரட்டித்துக் கிரியையோடுவருவது சதுர்க்கலை,-இலயம்-௩, விளம்பம், மத்திமம், துரிதம், இவற்றுளக்கரகாலமாய்க் கிரியையோடு வருவது விளம்பம்,-இதனை யிரட்டித்துக் கிரியையோடு வருவது மத்திமம்,-இதனை யிரட்டித்துக் கிரியையோடுவருவது துரிதம்,-யதி-௬, சமம், விடமம், மிருதங்கம், வேதமத்தியம், கோபுச்சம், சுரோதோவகம், இவற்றுள், நெட்டங்கமாயினுங் குற்றங்கமாயினு மொரேவிதமாய் வருவது சமயதி, ◡◡, । ।,-எல்லாவங்கமுங் கிரமமின்றிக் கலந்துவருவது விடமயதி, ᘔ◡⌒,-முதலினுங் கடையினுங் குற்றங்கமுமிடையி னெட்டங்கமும் வருவது மிருதங்கயதி, ◡○ᘔ○◡,-முதலினுங்கடையினு நெட்டங்கமு மிடையிற் குற்றங்கமும்வருவது வேதமத்தியயதி, ।◡।,-முதலிலே நெட்டங்கமுமீற்றிலே குற்றங்கமுமாய் நேர்ந்துவருவதுகோபுச்சயதி, ∫ᘔ।○◡, முதலிலே குற்றங்கமு மீற்றிலே நெட்டங்கமுமாய்வருவது, சுரோதோவகம், ◡○।ᘔᘔ,-மற்றைய விவ்விலக்கணத்தாற் கண்டுணர்க.

தானம், ௩-தலைப்படுதானம், இடைப்படுதானம், கடைப்படுதானம், அவையாவன-அறத்தானீட்டியபொருளை முக்குற்றமற்ற நற்றவத்தோரைக் கொள்கெனப்பணிந்து, குறையிரந்து தம்முள்ளமுவந்தீதல், தலைப்படுதானம்,-ஆதுலர், குருடர், மாதர் முதற்பிறர் சிறுமையைப்பற்றி மனமிரங்கி யீவதிடைப்படுதானம்,- புகழார்வங்கைமாறச் சங்கைஞ்ஞெட்டல் காரணங் கடைப்பாடிவற்றைப்பற்றி யீவது கடைப்படுதானம்.

தானை, ௬-தேர், கரி, பரி, வாள், வில், வேல்.

தி

திக்கு, அ-கிழக்கு, தென்கிழக்கு, தெற்கு, தென்மேற்கு, மேற்கு, வடமேற்கு, வடக்கு, வடகிழக்கு, இவையே யட்டதிக்கு.

திக்கு, ௧௦-மேற்சொன்னவையன்றி மேலுங் கீழுங்கூட்டித் தசதிசை யென்ப, கிழக்குக்கொடித்திசை, தென்கிழக்குப் புகைத்திசை, தெற்குச் சிங்கத்திசை, தென்மேற்குச் சுனகதிசை, மேற்குநாகத்திசை, வடமேற்குக்கலித்திசை, வடக்கு யானைத்திசை, வடகிழக்கு முயற்றிசை, மேல் விசும்புத்திசை, கீழ் பாதாளதிசை.

திக்குப்பாலகர், அ-கிழக்காதி முறையே, இந்திரன், அக்கினி, யமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன், இவர்க்குமுறையே குறிகளாவன, கொடி, புகை, சியம், நாய், இடபம், கழுதை, யானை, காகம்.

திக்குயானைகள், அ-கிழக்காதி முறையே, ஐராவதம், புண்டரீகம், வாமனம், குமுதம், அஞ்சனம், புட்பதந்தம், சாருவபூமம், சுப்பிரதீபம், இவையே யட்டதிக்கயம், இவற்றிற்குமுறையே பிடியானைகளாவன - அப்பிரமை, கபிலை, பிங்கலை, அநுபமை, தாமிரபருணி, சுதந்தி, அஞ்சனை, அஞ்சனாவதி.

திணை, உ-உயர்திணை, அஃறிணை, இவற்றுள் உயர்திணை, மக்களுந்தேவரும், நரகருமாம்; அஃறிணை, மற்றவுயிருள்ளனவு மில்லனவுமாகிய யாவுமாம்.

திணை, ரு-குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல், இவற்றுள் மலைச்சார்பு குறிஞ்சி, நீரில்லாக்கடுநிலம் பாலை, காட்டுச்சார்புமுல்லை, வயற்சார்புமருதம், கடற்சார்புநெய்தல்.

திதி, கரு-பிரதமை - க, விதிகை-உ, திரிதிகை-௩, சதுர்த்தி - ௪, பஞ்சமி-ரு, சட்டி-௬, சத்தமி-௭, அட்டமி-அ, நவமி-௯, தசமி-௧௦, ஏகாதசி-௧௧, துவாதசி - ௧௨, திரயோதசி-௧௩, சதுர்த்தசி-௧௪, இவற்றிற் சுக்கிலபக்கத்திற் சுத்த மென்றுங் கிருட்டினபக்கத்திற் பகுளமென்றுங்கூட்டுக, பதினைந்தாந் திதியாவது, சுக்கிலபக்கத்திற்குப் பௌர்ணமி, கிருட்டினபக்கத்திற்கு அமாவாசியை.

திராவிடம், ரு-திராவிடம், ஆந்திரம், கன்னடம், மகாராட்டிரம், கூர்ச்சரம்.

திரவியம், ரு-மலைபடுதிரவியம், காடுபடுதிரவியம், நாடுபடு திரவியம், நகர்படு திரவியம், கடல்படுதிரவியம், இவற்றுள் மலைபடுதிரவியம், மிளகு, கோட்டம், அகில், தக்கோலம், குங்குமம். காடுபடுதிரவியம், இறால், தேன், அரக்கு, மயிற்பீலி, நாவி. நாடுபடு திரவியம், செந்நெல், சிறுபயறு, கரும்பு, வாழை, செவ்விளநீர். நகர்படு திரவியம், அரசன், பித்தன், மந்தி, யானை, கண்ணாடி. (கடல்படுதிரவியம் - உப்பு, முத்து, பவளம், சங்கு, ஒக்கோலை.

திருமாலவதாரம், ௧௦-மச்சம், கூர்மம், வராகம், நாரசிங்கம், வாமனன், பரசுராமன், இராமன், பலபத்திரன், கண்ணன், கற்கி. இவற்றிற்குக் காரணம். (வேதத்தைத்திருடிக் கடலிலொளித்தசோமுகாசுரனென்னுமிராக்கதனைக்கொல்ல மச்சாவதாரம்.) (கடலைக் கடையும்போது மந்தர மலையைத் தாங்கக் கூர்மாவதாரம்.)(பூமியைப்பாயாக விரணியாக்கன்சுருட்டினதைவிரிக்கவு மவனைக்கொல்லவும் வராகாவதாரம்.)(இப்பழிவாங்கச்சருவதேவலைக்கம் விலக்கினவவன் றம்பி இரணியகசிபனைக்கொல்ல நரசிங்காவதாரம்.) இந்நான்கவதாரத்துக்குந் தந்தை தாயரில்லை. (மாவலியையடக்கக் காசிபனுந் திதியுந் தந்தைதாயாகவாமனாவதாரம்.) (அரசராற் றுழ்த்தப்பட்ட பார்ப்பார் நிமித்த மவ்வரசரைக்கொல்லச் சமதக்கினியு மிரேணுகையுந் தந்தை தாயாகப் பரசுராமாவதாரம்.) (இராவணன் முதலிய விராக்கதரைக் கொல்லத் தசரதனுங் கௌசலையுந் தந்தைதாயாக விராமாவதாரம்)

(பிரலம்பன்முதற் பல விராக்கதரைக்கொல்ல வசுதேவனுந் தேவகியு முரோகணியுந் தந்தைதாயாகப் பலபத்திர ராமாவதாரம்.) (பாரதநடத்த வசுதேவனுந் தேவகியுந் தந்தை தாயாகக் கண்ணனவதாரம்.) (அறத்தை நிலைபெறச்செய்யக் கற்கியவதாரம்.)

திருமாலவதாரம், ௧௫-சனகன், சனந்தனன், சனாதன், சனற்குமாரன், நரநாராயணன், கபிலன், இடபன், நாரதன், அயக்கிரீவன், தத்தாத்திரேயன், மோகினி, யாகபதி, வியாதன், தன்வந்திரி, பௌத்தன்.

திருமாலாயுதம், ௫ - சக்கரம், தனுசு, வாள், தண்டு, சங்கம்.

தீ

தீ, ௩-உரியிலுள்ளதீ, உதரத்துள்ள தீ, சினத்திலெழுந்தீ; அன்றியும் வேறாக்கினி-௩, காருகபத்தியம், தக்கணாக்கினியம், ஆகவனியம்.

தீக்குணம், ௧௦-பொய்சொல்லல், கோட்சொல்லல், கோபித்துச்சொல்லல், பயனிலசொலல். இந்நான்கும் வாக்கின் றீக்குணம்; களவாடப்போதல், வறிதே தொழில்செயல், கொலைசெயல், இம்மூன்றுங் காயத்தீக்குணம்; கொலைநினைக்கை, காமப்பற்று, ஆசை, இம்மூன்று மனத்தீக்குணம்.

தீவு, ௭-நாவல், இறலி, குசை, கிரவுஞ்சம், புட்கரம், தெங்கு, கமுகு, இவ்வெழுவகைப்பொருளு மவ்வத்தீவின் மிக்கனவாகையா லிவற்றாற் பெயர்பெற்றன.

து

துரககதி, ௫-மல்லகதி, மயூரகதி, வியாக்கிரகதி, வானரகதி, விடபகதி.

துவர், ௧௦-நாவல், கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், ஆல், அரசு, அத்தி, இத்தி, முத்தக்காசு, மாந்தளிர்.

தே

தேயம், ௫௬-அங்கம், அருணம், அவந்தி, ஆந்திரம், இலாடம், யவனம், ஒட்டியம், கருசம், கலிங்கம், கன்னடம், கன்றுடம், காசம், காம்பீரம், காந்தாரம், காம்போசம், கிராடம், குருகு, குடகம், குந்தளம், குரு, குலிந்தம், கூர்ச்சரம், கேகயம், கேரளம், கொங்கணம், கொல்லம், கோசலம், சகம், சவ்வீரம், சாலவம், சிங்களம், சிந்து, சீனம், சூரசேனம், சோழம், சோனகம், திராவிடம், துளுவம், தெங்கணம், நிடதம், நேபாளம், பாஞ்சாலம், பப்பரம், பல்லவம், பாண்டியம், புலிந்தம், போடம், மகதம், மச்சம், மராடம், மலையாளம், மாளவம், யுகந்தரம், வங்கம், வங்காளம், விதர்ப்பம்.

தேவர், ௫-பிரமா, விட்டுணு, உருத்திரன், மயேச்சுரன், சதாசிவன், இவர் பஞ்சதேவதையும், பஞ்சகருத்தாக்களுமென்ப.

தேவர்வகை, ௩௩-ஆதித்தர்-௧௨, அச்சுவினிகள் - ௨, உருத்திரர் - ௧௧, வசுக்கள்-௮.

தொ

தொழில், ௩-ஆக்கல், காத்தல், அழித்தல்.

தொழில், ௬-உழவு, தொழில், வரைவு, வாணிபம், விச்சை, சிற்பம்.

தொழில், ௬ - அந்தணரறுதொழில், ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல்; அரசரறுதொழில் - ஓதல், வேட்டல், ஈதல், உலகோம்பல், படைபயிற்றல், பொருதல்; வைசியரறுதொழில் - ஓதல், வேட்டல், பொருளீட்டல், ஈதல், பசுக்காத்தல், ஏருழல்; சூத்திரரறுதொழில் - முதன்மூவர்க்கேவல்செயல், பொருளீட்டல், உழுதல், பசுக்காத்தல், குயிலுவத்தொழில்செய்தல், காருகவினைகளாக்கல்; இவற்றுட்குயிலுவத்தொழில்களாவன - தோற்கருவிகளைக்கொட்டலுந் தொளைக்கருவிகளை யூதலுமாம்; காருகவினைகளாவன - பட்டுநூலையும் பருத்திநூலையுங் கொண்டாடையாக்கலுஞ் சுமத்தலுமுழத்தலுமாம்.

தோ

தோற்றம், ௨-சரம், அசரம்; இவற்றுட்சரம் நடையுள்ளன - அசரம், நடையில்லன.

தோற்றம், ௪-வை, முட்டை, நிலம், வியர்வை.

ந

நட்சத்திரம், ௨௭-அச்சுவினி, பரணி, கார்த்திகை, உரோகிணி, மிருகசீரிடம், திருவாதிரை, புனர்பூசம், பூசம், ஆயிலியம், மகம், பூரம், உத்திரம், அத்தம், சித்திரை, சுவாதி, விசாகம், அனுடம், கேட்டை, மூலம், பூராடம், உத்திராடம், திருவோணம், அவிட்டம், சதயம், பூரட்டாதி, உத்திரட்டாதி, இரேவதி, இவற்றுள் ஒவ்வொன்று முறையே மேடமுதற் பன்னிரண்டிராசிகளிற் பதின்மூன்றுபாகமு மிருபதுகலையுங்கொண்டவிடம்.

நதி, ௭-கங்கை, யமுனை, சரச்சுவதி, நருமதை, காவேரி, குமரி, கோதாவரி, இவையே சத்ததீர்த்தமெனப்படும்.

நதி, ௧௧-மேற்சொல்லிய வேழின்மேல், சிந்து, தாமிரபருணி, துங்கபத்திரி, கிட்டிணியென்று கூட்டுக.

நரகம், ௭-அள்ளல், இரௌரவம், கும்பிபாகம், கூடசாலம், செந்துத்தானம், பூதி, மாபூதி.

நரகவட்டம், ௭-தமப்பிரபை, இமப்பிரபை, தூமப்பிரபை, வாலுகப்பிரபை, சாகரப்பிரபை, இரத்தப்பிரபை, அழற்பிரபை; அவையாவன - இருள், குளிர், புகை, மணல், துயிலாமை, இரத்தம், தீ.

நரம்பு, ௭-இசைகரணம்.

நற்குணம், ௧௦-மெய்யுரை, நல்வார்த்தை, இனியவைகூறல், பயன்படுசொல், இந்நான்கும் வாக்கினற்குணம்; கோயில்வலம்வரல் - தவம்புரிதல், தானஞ்செயல், இம்மூன்றுங் காயநற்குணம்; அருணினைவு, ஆசையறுத்தல், தவப்பற்று, இம்மூன்றும் மனநற்குணம்.

நா

நாகம், ௮-வாசுகி, அனந்தன், தக்கன், சங்கபாலன், குளிகன், பதுமன், மகாபதுமன், கார்க்கோடகன், இவற்றைக் கடவுட் பாம்பென்ப, இவை முறையே கிழக்குமுதலெண்டிக்கிற்பூமியைத் தாங்குவதன்றியே நடுவே சேடனென்றுநாகம் பூமியைத்தாங்காநிற்கும், இந்நவநாகமுங் காசிபப்பிரமாவுக்கு மவன் மனைவிகள் பதின்மூவருட்கத்துருவைக்கும் பிறந்தன.

நாடி, ௧௦-சுழிமுனை, இடை, பிங்கலை, காந்தாரி, அத்தி, சிகுவை, அலம்புடை, புருடன், குகு, சங்கினி; அவையாவன - சுழிமுனையாதாரமாதிரா மூடுருவிநிற்பது; இடை, பிங்கலையிரண்டுங் கத்திரிகைக்கால்போற் பின்னிநிற்பன, - காந்தாரி நாபியிற்றோன்றிச் சத்தமெழுக்குமெழுநாடியாய்க் கண்டத்துறுவது, - அத்தி, சிகுவையிரண்டும் பத்துநாடியுற்றுக் கண்ணினிற்பன, - அலம்புடை, புருடனிரண்டுஞ் செவியினூற்றிருபது நரம்புற்றிருப்பன, - குகு, நாவியுறைந்து குய்யம்பற்றிநிற்பது, - சங்கினி, உபத்தத்தைப்பற்றியிருப்பது.

நாட்டமைதி, ௬-செல்வம், விளைநிலம், செங்கோல், நோயின்மை, வளம், குறும்பின்மை.

நாட்டுக்குற்றம், ௭-தொட்டியர், கள்வர், யானை, பன்றி, விட்டில், கிள்ளி, பெருமழை.

நாட்டுக்குற்றம், ௮-விட்டில், தன்னரசு, வேற்றரசு, யானை, மிகுமழை, மிகுகாற்று, கிள்ளி, நட்டம்.

நி

நிலம், ௪-குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல்.

நிலை; ௪-பைசாசம், மண்டலம், ஆலீடம், பிரத்தியாலீடம், இவை நான்கும் விற்றொடுத்தம்பினையெய்வார்க்குரியநிலை, இவற்றுளொருகாலினின்றொருகால்முடக்கல் பைசாசநிலை, - இருகாலும் பக்கல்வளைய

மண்டலித்தலே மண்டலமில்லை,-வலக்கால் மண்டலித்திடக்கால் முக்குறலேயாலிடமில்லை, - வலக்கால் முந்நுற்றிடக்கால்மண்டலித்தலே பிரத்தியாலிடமில்லை.

நூ

நூல், ௩-முதனூல், வழிநூல், சார்புநூல், இவற்றுளொருவன் முன்கண்டுரைத்ததே முதனூல்,-முதனூல்வழியே விசற்பித்துரைத்தநூலே வழிநூல்,-அவ்விருநூற்பொருட்கூட்டித் திரிபுவேறுடைய நூலே சார்புநூல்.

நூற்பயன், ௪-அறம், பொருள், இன்பம், விடு.

ப

பக்குவர், ௩-கருமகாண்டி, ஞானகாண்டி, பத்திகாண்டி.

பஞ்சமூலம், ரு-செவ்வியம், சித்திரமூலம்,கண்டுபாரங்கி,பேராத்தை, சுக்கு.

படைவகுப்பு, ௪-அணி, உண்டை, ஒட்டு, யூகம்.

பட்சி, ரு-வல்லூறு, ஆந்தை, காகம், கோழி, மயில், இவற்றிற்கு முறையே யெழுத்து, அ, இ, உ, எ, ஒ, உண்டி, நடை, அரசு, தூக்கம்,சாவு, பிற்பக்கமாகில், உண்டி, சாவு, தூக்கம், அரசு, - சாவுதூக்கமில்லாத பொழுததிர்து செய்யுண்முதலிய செய்தனன்மை.

பண், ௪-பாலை, குறிஞ்சி, மருதம்,செவ்வழி.

பதவி, ௪-சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுச்சியம், இவற்றுட்கடவுளுலகத்தில் வாழ்தலே சாலோகம்,-கடவுள் சமீபத்துவாழ்தலே சாமீபம்,-கடவுளுருப்போன்று வாழ்தலே சாரூபம்,-கடவுளோ டொன்றிவாழ்தலே சாயுச்சியம்.

பரிச்சேதம், ௩-காலபரிச்சேதம், தேயபரிச்சேதம், வத்துபரிச்சேதம், அவையாவன-ஒருகாலத்துன்டொருகாலத்தின்றென்பது காலபரிச்சேதம், ஒருதேயத்துண்டொருதேயத்தின்றென்பது தேயபரிச்சேதம், - ஒருபொருளிலவாகு மொருபொருளில்தன்றென்பது வத்துபரிச்சேதம.

பருவகாலம், ௬-கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதிர்வேனில், இவையே யாவணிமுதலாக விரண்டிரண்டுமாத மொவ்வொன்றும்.

பருவம், ௪-வாலை, தருணி,பிரவிடை, விருத்தை, இவை பெண்கட்குரிய பருவமாம்.

பருவம், எ-பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண்,இவர்க்குமுறையே வயதெல்லை,ஐந்துமுத லேழளவும் பேதை,-எட்டுமுதற்பதினொன்றளவும் பெதும்பை,-பன்னிரண்டுமுதற் பதின்மூன்றளவு மங்கை,-பதினான்குமுதற் பத்தொன்பதளவு மடந்தை,-இருபது முதலிருபத்தைந்தளவுமரிவை,-இருபத்தாறுமுதன் முப்பத்தொன்றளவுந் தெரிவை, - முப்பத்திரண்டு முதனாற்பதளவும் பேரிளம்பெண்,-ஆகையா லொவ்வொரு பருவங்கொண்ட வருடம், ௩, ௪, ௨, ௬, ௬, ௬, ௯, இவை பெண்கட்குரிய பருவமாம்.

பலை, ௩-கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், இவையே திரிபலையென்ப.

பா

பா, ௪-வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, மருட்பாவொன்று கூட்டியைந்தென்பாருமுளர்.

பாடை, ௧௮-அங்கம், அருணம், கலிங்கம், கௌசிகம், காம்போசம், கொங்கணம், கோசலம், சாவகம், சிங்களம், சிந்து, சீனம், சோனகம், திரவிடம், துளுவம், பப்பரம், மகதம், மராடம், வங்கம்.

பாதகம், ரு-கொலை, பொய், களவு, கள்ளருந்தல், குருநிந்தை, இவையே பஞ்சமாபாதகம்.

பாதகம், எ-சித்தசமுன்னதி, அருத்தலோபம், காமம், வைடம்மியம், அசனப்பிரியம், கோபம், அநட்டணம், இவையே சத்தவிசனம், இ

வைமுறையே அகங்காரம், உலோ
பம், காமம், பகை, போசனப்பிரி
யம், காய்தல், சோம்பல், இவை
யெழுத்தலைமையான பாதகமென
ப்படும்.

பாலை, எ-இசையைக்காண்க.

பால், ரு-ஒருவன், ஒருத்தி, பலர், ஒ
ன்று, பல.

பால், ரு-முடி, கொண்டை, சுருள்,
குழல், பனிச்சை, இவற்றுண்மயி
ரை யுச்சியின்முடித்தலே முடி,-ப
க்கன்முடித்தலே கொண்டை,-பி
ன்னே செருகல் சுருள்,-சுருட்டி
முடித்தலே குழல்,-பின்னிவிடுத
லே பனிச்சை.

பாவபுண்ணியவழக்கம்,ஙா-செய்தல்,
செய்வித்தல், உடன்படல்.

பாவினம், ஙா-தாழிசை, துறை, விரு
த்தம்.

பி

பிணி, ஙா-வாதம், பித்தம், சிலேட்டு
மம்.

பிரபந்தம், கூசு-அவையாவன, சாத
கம், இதிநிலை, வாரநிலை, நான்மி
ளிநிலை, யோகநிலை,காணநிலை,ஒனா
நிலை, இரகநிலை, இவ்வேழ்வகையு
றுப்புக்கணிலையையுஞ் சோதிடநூ
லா லன்குணர்ந்தவற்றை யமைத்
தவற்றுற் றலைவற்குறுவன கூறுவ
து, மற்றும் யகாதி யாப்புமுதலி
யவுங்கொள்க.

பிள்ளைக்கவி, — காப்பு, செங்கீரை,
தால், சப்பாணி, முத்தம், வாரானை,
அம்புலி, சிறுபறை,சிற்றில்,சிறுதேர்,
இவற்றை முறையே யகவல் விருத்த
த்தாற்பப்பத்தாகக்கூறுவ தாண்பாற்
பிள்ளைக்கவி, இவ்வுறுப்பிறுட் கடை
மூன்றொழித்து, கழங்கு, அம்மனை,
ஊசல், என்பவற்றைக்கூட்டி மேற்
சொல்லியவாறுகூறுவது பெண்பாற்
பிள்ளைக்கவியாம்.

பரணி,—போர்முகத்தாயிரங் களி
ற்றியானையைக்கொன்ற வீரனைத்தலை
மகனாகக்கொண்டு கடவுள்வாழ்த்தாங்
கடைதிறப்பும்பாலைநிலமுங்காளிகோ
யிலும் பேய்களோடு காளியுங் காளி
யோடு பேய்களுஞ் சொல்லத் தான்
சொல்லக்கருதிய தலைவன் சீர்த்திவி
ளங்கவுமவன் வழியாகப் புறப்பொரு
டோன்ற வெம்போர்வழங்க விரும்ப
வுமென் றிவையெல்லா மிருசீரடிமு
ச்சீரடியொழித்தொழிந்த மற்றையவ
டியாக வீரடிப் பலிரூழிசையாற்பாடு
வது.

கலம்பகம்,—ஒருபோகும், வெண்
பாவும், கலித்துறையுமுதற் கலியுறுப்
பாகமுற்கூறிப் புயவகுப்பு,மதங்கம்,
அம்மானை, காலம், சம்பிரதம், கார்,
தவம், குறம், மறம், பாண், களி, சித்
து,இரங்கல்,கைக்கிளை,தூது, வண்டு,
தழை, ஊசல், என்றுமிப்பதினெட்டு
றுப்புக்களுமியைய, மடக்கு, மருட்
பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்
பா, ஆசிரியவிருத்தம், கலிவிருத்தம்,
கலித்தாழிசை, வஞ்சிவிருத்தம், வஞ்
சித்துறை, வெண்டுறையென்னுமிவற்
றுளிடையேவெண்பா,கலித்துறை வி
ரவியந்தாதித்தொடையான் முற்றுற
க்கூறுங்காற் றேவர்க்குநூறும், அந்த
ணர்க்குத் தொண்ணூற்றைந்தும், அ
ரசர்க்குத் தொண்ணூறும்,வைசியர்க்
கைம்பதும், சூத்திரர்க்கு முப்பதுமா
கப் பாடுவது.

அகப்பொருட்கோவை, — இருவ
கைப்பட்ட முதற் பொருளும் பதினா
ன்குவகைப்பட்ட கருப்பொருளும் ப
த்து வகைப்பட்ட வுரிப்பொருளும்
பொருந்திக் கைக்கிளைமுதலுற்றவன்
புடைக்காமப்பகுதியவாங்களவொழு
க்கத்திணையுங்கற்பொழுக்கத்திணையுங்
கூறுதலே யெல்லையாகக் கட்டளைக்க
லித்துறை, நானூற்றுற்றிணைமுதலாக
த்துறையிருகக் கூறப்பட்ட பன்னிர
ண்டகப்பாட் டுறுப்பும் வழுவின்றித்
தோன்றப்பாடுவது,இது,வெண்பா,அ
கவல்,கலி,வஞ்சி, வண்ணம், இவற்று
ளும் வழங்கப்படும்.

ஐந்திணைச்செய்யுள், — புணர்தன்
முதலிய வைந்துரிப்பொருளும் விள
ங்கக் குறிஞ்சிமுதலிய வைந்திணையி
லையுங்கூறுவது.

வருக்கக்கோவை,— அகரமுதலா
கியவெழுத்து வருக்க மொழிக்குமுத
லாமெழுத்து முறையே காரிகைத்து
றைப்பாட்டாகப்பாடுவது.

மும்மணிக்கோவை,—ஆசிரியப்பாவும், வெண்பாவும், நேரசையுநிரையசையுங்கொண் டெழுத்தெண்ணிப்பாடுங் கலித்துறையு முறையே தொகை முப்பதுபெற வடுக்கி யந்தாதித் தொடையாற்பாடுவது.

அங்கமாலை,—ஆண்மகனுக்கும்பெண்மகளுக்கு மிக்கனவெடுத்துக் கூறுமவயவங்களை வெண்பாவாலாயினும் வெளிவிருத்தத்தா லாயினும் பாதாதிகேசங் கேசாதிபாத முறை பிறழாது தொடர்வுறப்பாடுவது.

அட்டமங்கலம்,— கடவுளைப்பாடி யக்கடவுள்காக்கவென வாசிரியவிருத்தமெட்டி லந்தாதித்துக்கூறுவது.

அநுராகமாலை,—தலைவன்கனவின் கணொருத்தியைக்கண்டு கேட்டுண்டுயிர்த்தினிமையுறப் புணர்ந்ததைத் தன்னுயிர்ப்பாங்கற் குரைத்ததாக நேரிசைக் கலிவெண்பாவாற் கூறுவது.

இரட்டைமணிமாலை,— முறையானே வெண்பாவுங்கலித்துறையு மிருபஃ தந்தாதித் தொடையான் வருவது, நேரிசைவெண்பாப் பத்தும், ஆசிரியவிருத்தம் பத்து மந்தாதித் தொடையாற்பாடுவது.

இணைமணிமாலை,—வெண்பாவுமகவலும், வெண்பாவுங்கலித்துறையுமாகவிரண்டிரண்டாக விணைத்து வெண்பா வகவலிணைமணிமாலை, வெண்பா கலித்துறை யிணைமணிமாலை, என நூறுநூறு, அந்தாதித்தொடை நான்காலும்பாடுவது.

நவமணிமாலை,—வெண்பா முதலாக வேறுபட்ட பாவும் பாவினமுமாக வொன்பதுசெய்யு ளந்தாதித்துப் பாடுவது.

நான்மணிமாலை,—வெண்பாவுங்கலித்துறையும் விருத்தமுமகவலு மந்தாதித்தொடையாகநாற்பதுபாடுவது

நாமமாலை,—அகவலடியுங்கலியடியும் வந்துமயங்கிய வஞ்சிப்பாவாலாண்மகனைப் புகழ்ந்துபாடுவது.

பலசந்தமாலை,—பப்பத்துச்செய்யுளோவ்வோர்சந்தமாகநூறுசெய்யுட் கூறுவது.

பன்மணிமாலை,— மேற்சொல்லிய கலம்பகத்துள் வருமொருபோகு மம்மானையுமூசலுமின்றியேனையுறுப்புக்களெல்லாமமையவவ்வாறுகூறுவது இதையே கலம்பகமாலையென்ப.

மணிமாலை,—எப்பொருண்மேலும் வெண்பாவிருபதுங் கலித்துறை நாற்பதும் விரவிவருவது.

புகழ்ச்சிமாலை,—அகவலடியுங்கலியடியும் வந்துமயங்கிய வஞ்சிப்பாவான் மாதர்களினது சீர்மையைக் கூறுவது.

பெருமகிழ்ச்சி மாலை,—தலைவியினழகு குணமாக்கஞ் சிறப்பினைக் கூறுவது.

வருக்கமாலை,- மொழிக்குமுதலாம் வருக்கவெழுத்தினுக் கோவ்வோர்செய்யுட்கூறுவது.

மெய்க்கீர்த்திமாலை,—சொற்சீரடியென்னுங் கட்டுரைச்செய்யுளாற் குலமுறையிற்செய்த கீர்த்தியைக் கூறுவது.

காப்புமாலை,—தெய்வங் காத்தலாக மூன்றுசெய்யுளானும், ஐந்துசெய்யுளானும், ஏழுசெய்யுளானும் பாடுவது.

வேனின்மாலை,—வேனிலையுமுதிர்வேனிலையுஞ் சிறப்பித்துப் பாடுவது.

வசந்தமாலை,—தென்றலைவருணித்துப்பாடுவது.

தாரகைமாலை, — அருந்ததிக்கற்பின்மகளிர்க்குள்ள வியற்கைக் குணங்களை வகுப்பாற்கூறுவது, தூசிப்படையினணியைப் புகழ்ந்த வகுப்பென்பாருமுளர்.

உற்பவமாலை,—திருமால் பிறப்புப் பத்தனையு மாசிரியவிருத்தத்தாற் கூறுவது.

தானைமாலை,—அகவலோசையிற்பிறழா தாசிரியப்பாவான் முன்னொடுத்துச் செல்லுங் கொடிப்படையைக் கூறுவது.

மும்மணிமாலை,— வெண்பாவுங் கலித்துறையு மகவலு மந்தாதித்தொடையான் முப்பதுபாடுவது.

தண்டகமாலை,—வெண்பாவான்முந்நூறுசெய்யுட்கூறுவது. இதுவெண்புணர்ச்சிமாலை யெனவும்படும்.

வீரவெட்சிமாலை,—சுத்தவீரன் மாற்றூரிற்சென்று பசுநிரை கோடற்கு

வெட்சிப்பூமாலைசூடி யவ்வண்ணம் போய் நிரை கவர்ந்தவரி னவருக்குற்றன்பு தாளங்கம்மையைத்துப் பேய்வந்த வெற்றிபாடுவது.

வெற்றிக்கரந்தைமஞ்சரி.— பகைவர்கொண்ட நிரைமீட்போர் கரந்தைப்பூமாலைசூடிப்போய் மீட்பதைக் கூறுவது.

போர்க்கெழுவஞ்சி,— மாற்றார்மேற் போர்குறித்துப்போகின்ற வயவேந்தர் வஞ்சிப் பூமாலைசூடிப் புறப்படும்படையெழுச்சிச் சிறப்பை யாசிரியப்பாவாற்கூறுவது.

வரலாற்றுவஞ்சி,— குலமுறைபிறப்புமுதலிய மேம்பாட்டின் பலசிறப்பையுங் கீர்த்தியையும் வஞ்சிப்பாவாற்கூறுவது.

செருக்களவஞ்சி,— போர்க்களத்திலே யட்டமனிதருடலையும்யானைகுதிரையுடலையு நாயும் பேயும் பிசாசமுங் கழுகும் பருந்துங் காகமுந் தின்றுகளித் தாரவாரமாயிருக்கப் பூதமும் பேயும் பாடியாட விங்ஙனமிருந்த சிறப்புப்பாடுவது, இதையேபறந்தலைச் சிறப்புப்பாட்டுமென்ப.

காஞ்சிமாலை,— மாற்றாரூர்ப்புறத்துக் காஞ்சிப் பூமாலைசூடி யூன்றலைக் கூறுவது.

நொச்சிமாலை,— புறத்தூன்றியமாற்றார்க்கோடலன்றி நொச்சிப்பூமாலைசூடித் தன்மதில்காக்குந் திறங் கூறுவது.

உழிஞைமாலை,— மாற்றாரூர்ப்புறஞ்சூழ வுழிஞைப் பூமாலைசூடிப் படைவளைப்பதைக்கூறுவது.

தும்பைமாலை,— மாற்றாரோடு தும்பைப்பூமாலை சூடிப் பொருதவதைக் கூறுவது.

வாகைமாலை,— மாற்றாரைவென்று புகழ்படைத்து வாகைமாலை சூடியவதை யாசிரியப்பாவாற் கூறுவது.

வாதோரணமஞ்சரி,— கொலைபுரிமதயானையைவயப்படுத்தியடக்கினவர்கட்கு மெதிர்பொரு களிற்றை வெட்டியடக்கினவர்கட்கும் பற்றிப் பிடித்துச் சேர்த்தவர்கட்கும் வீரப்பாட்டினசிறப்பை வஞ்சிப்பாவாற் றொடுத்துப் பாடுவது.

எண்செய்யுள்,— பாட்டுடைத் தலைவனதூரினையும் பெயரினையும் பத்து முதலாயிரமளவும்பாடி யெண்ணாற் பெயர்பெறுவது.

தொகைநிலைச்செய்யுள்,— நெடிலடிச்செய்யுளாற் றொகுத்தது நெடுந்தொகையும், குறளடிச் செய்யுளாற் றொகுத்தது குறுந்தொகையும், கலிப்பாவாற்றொகுத்தது கலித்தொகையும் போல்வன.

ஒலியலந்தாதி,— பதினாறுகலையோரடியாகவைத் திங்ஙனநாலடிக்கறுபத்து நாலுகலைவகுத்துப் பலசந்தமாக வண்ணமுங் கலைவைப்புந் தவறுமலந்தாதித்து முப்பதுசெய்யுள்பாடுவது, சிறுபான்மை யெட்டுக்கலையானு மவரப்பெறும், அன்றியும் வெண்பாவகவல் கலித்துறையாகிய விம்மூன்றையும் பப்பத்தாகவந்தாதித்துப்பாடுவதுமாம்.

பதிற்றந்தாதி,- பத்துவெண்பா பத்துக் கலித்துறைப் பொருட்டன்மை தோன்ற வந்தாதித்துப்பாடுவது.

நூற்றந்தாதி,- நூறு வெண்பாவினாலேனு நூறு கலித்துறையினாலேனு மந்தாதித் தொடையாற் கூறுவது.

உலா,- இளமைப்பருவமுற்ற தலைமகனைக் குலங்குடிப்பிறப்பு மங்கலம் பரம்பரை யிவற்றாலின்னா னென்பது தோன்றத்தலைமையாய் மாதர்நெருங்கிய வீதியிடத்தவன் பவனிவரப்பேதைமுதலிய வெழுபருவப்பெண்களுங் கண்டு தொழுவதாக நேரிசைக்கலி வெண்பாவாற்கூறுவது.

உலாமடல், - கனவிலொருபெண்ணைக்கண்டு கலவியின்ப நுகர்ந்தோன் விழித்தபின் னவள்பொருட்டுமடலூர்வே னென்பதைக் கலிவெண்பாவான் முற்றுவிப்பது.

வளமடல்,-அறம்பொரு ளின்பமாகிய வம்மூன் கூறுபாட்டின்பயனையெள்ளி, மங்கையர்திறத்துறுங் காமவின்பத்தினையே பயனெனக் கொண்டு பாட்டுடைத்தலை மகனியற்பெயர்க்குத்தக்கதை யெதுகையாக நாட்டியுளாத் தவ்வெதுகைபடத் தனிச்சொலின்றி யின்னிசைக் கலிவெண்பாவாற் றலைமகனிரந்து குறைபெறாது மட

லேறுவதாயீரடி யெதுகைவரப்பாடுவது.

ஒருபாவொருபஃது,— அகவலும் வெண்பாவுங் கலித்துறையுமாய விவற்றிலொன்றனு லந்தாதித் தொடையாற் பத்துப்பாடுவது.

இருபாவிருபஃது,— பத்துவெண்பாவும் பத்தகவலு மந்தாதித்தொடையானிருபதிணைந்து வருவது.

ஆற்றுப்படை,— அகவற்பாவால், விறலி, பாணர், கூத்தர், பொருநரிந்நால்வருளொருவர் பரிசிற்குப் போவாரைப்பரிசுபெற்று வருவாராற் றிடைக்கண்டு தலைவன்கீர்த்தியுங் கொடையுங் கொற்றமுஞ்சொல்வது.

கண்படைநிலை,—அரசருமரசரைப் போல்வாருமவைக்கணெடிதுவைகிய வழி மருத்துவரு மமைச்சருமுதலியோரவர்க்குக் கண்டுயில் கோடலைக் கருதிக்கூறுவது.

துயிலெடைநிலை,—தன் வலியாற் பாசறைக்கண்ணொரு மனக்கவற்சியின்றித் துயின்றவரசர்க்கு நல்ல புகழைக்கொடுத்தலைக் கருதிய சூதர்துயிலெழுப்புதலாகப் பாடுவது.

பெயரின்னிசை,-பாட்டுடைத்தலைவன் பெயரினைச்சார,இன்னிசைவெண்பாவாற்றொண்ணூறேனும், எழுபதேனும் ஐம்பதேனும் பாடுவது.

ஊரின்னிசை,—பாட்டுடைத்தலைவனூரினைச்சார வின்னிசை வெண்பாவாற்றொண்ணூறேனு மெழுபதேனுமைம்பதேனும் பாடுவது.

பெயர் நேரிசை,-பாட்டுடைத்தலைவன் பெயரினைச்சார நேரிசைவெண்பாவாற் றொண்ணூறேனு மெழுபதேனுமைம்பதேனும் பாடுவது.

ஊர் நேரிசை,— பாட்டுடைத்தலைவனூரினைச்சார நேரிசைவெண்பாவாற்றொண்ணூறேனு மெழுபதேனுமைம்பதேனும் பாடுவது.

ஊர் வெண்பா,—வெண்பாவினூரைச் சிறப்பித்துப் பத்துச்செய்யுள் கூறுவது.

விளக்குநிலை,—வேலும் [வேற்றலையும் விலங்காதோங்கிய வாறுபோலக் கோலொடு விளக்குமொன்றுபட்டோங்குமாறோங்குவதாகக்கூறுவது.

புறநிலை,—நீ வணங்குந்தெய்வநின்னைப் பாதுகாப்ப நின்வழிவழி மிகுவதாகவெனக் கூறுவது.

கடைநிலை,—சான்றோர் சேணிடை வருதலாற் பிறந்தவருத்தந்தீரவாயில் காக்கின்றவனுக்கென் வரவினைத்தலைவற் கிசையெனக் கடைக்கணின்று கூறுவது.

கையறுநிலை,—கணவனொடுமனைவி கழிந்துழியவர்கட்பட்டவழிவுப்பொருளெல்லாம்பிறர்க்கறிவுறுத்தித்தாமிறந்துபடாதொழிந்தவாயத்தாரும் பரிசில்பெறும் விறலியருந் தனிப்பட்டுழந்த செயலறுநிலையைக்கூறுவது.

தசாங்கப்பத்து,—நேரிசை வெண்பாவா லரசன்படைத்த தசாங்கத்தினைப் பத்துச்செய்யுளாற் கூறுவது.

தசாங்கத்தயல்,—அரசன் றசாங்கத்தினை யாசிரியவிருத்தம் பத்தினாற் பாடுவது.

அரசன் விருத்தம்,—பத்துக் கலித்துறையுமப்பது விருத்தமுங் கலித்தாழிசையுமாகியவிவற்றால், மலை, கடல், நாட்டு வருணனையு நிலவருணனையும் வாண்மங்கலமுந் தோண்மங்கலமும் பாடிமுடிப்பது, இது முடிபுனைந்தவேந்தற்காம்.

நயனப்பத்து,—கண்ணினைப் பத்துச்செய்யுளாற் கூறுவது.

பயோதரப்பத்து,— முலையினைப்பத்துச் செய்யுளாற் கூறுவது.

பாதாதிகேசம்,—கலிவெண்பாவாலடிமுதன் முடியளவுங் கூறுவது.

கோவிபாதம்,—கலிவெண்பாவா ன் முடிமுதலடியளவுங்கூறுவது.

அலங்காரபஞ்சகம்,—வெண்பா, கலித்துறை, அகவல், ஆசிரியவிருத்தம், சந்தவிருத்தமிவற்றையே மாறி மாறி நூறு செய்யுளாகவந்தாதித்துப்பாடுவது.

கைக்கிளை,—ஒருதலைக் காமத்தினை யைந்துவிருத்தத்தாற் கூறுவது, அன்றி, வெண்பா முப்பத்திரண்டுசெய்யுளாற்கூறுவதுமாம்.

மங்கலவள்ளை,—உயர்குலத்துதித்த மடவாரை வெண்பா வொன்பதாலும் வருப்பொன்பதாலும் பாடுவது.

தூது,—ஆண்பாலும் பெண்பாலும மலரவர்காதல் பாணன்முதலிய வுயர்திணையோடுங் கிள்ளைமுதலிய வஃறிணையோடுஞ் சொல்லித் தூதுபோய் வாவெனக்கலிவெண்பாவாற் கூறுவது.

நாற்பது,—காலமுமிடமும் பொருளுமாகிய விவற்றுளொன்றனை நாற்பது வெண்பாவாற் கூறுவது.

குழமகன்,-கலிவெண்பாவான் மாதர்கடங்கையிற்கண்ட விளமைத்தன்மையுடைய குழமகனைப் புகழ்ந்து கூறுவது.

தாண்டகம், — இருபத்தேழெழுத்து முதலாக வுயர்ந்தவெழுத்தடியின வாயெழுத்துங் குருவு மிலகுவுமொத்து வந்தன அளவியற்றாண்டகமெனவும், எழுத்தொவ்வாது மெழுத்தலகொவ்வாதும் வந்தன அளவழித்தாண்டகமெனவும் படும்.

பதிகம், - ஒருபொருளைக்குறித்துப் பத்துச்செய்யுளாற் கூறுவது.

சதகம்,—அகப்பொருளொன்றன் மேலாதல்புறப்பொருளொன்றன்மேலாதல் கற்பித்து நூறுசெய்யுள் கூறுவது.

செவியறிவுறூஉ,—பொங்குதலின்றிப்புரையோர்நாப்பணவிறல்கடனெனவவையடக்கியற்பொருளுறவெண்பாமுதலுமாசிரிய மிறுதியுமான மருட்பாவாற் கூறுவது.

வாயுறைவாழ்த்து,—வேம்புங் கடுவும் போல்வனவாகிய வெஞ்சொற்களன்முன்னர்த் தாங்கக் கூடாவாயினும் பின்னர்ப் பெரிதும் பயன்றருமெனமெய்ப்பொருளுற வெண்பா முதலுமாசிரிய மிறுதியுமான மருட்பாவாற் கூறுவது.

புறநிலைவாழ்த்து, - வழிபடுதெய்வ நிற்புறங்காப்பப்பழிதீர் செல்வமொடொருகாலைக்கொருகாற் சிறந்தபொலிவாயென வெண்பாமுதலுமாசிரிய மிறுதியுமானமருட்பாவாற்பாடுவது.

பவனிக்காதல்,—உலாக் காட்சியாலெய்திய காமமிகுதியாலவை பிறரொடுமுரைத்து வருந்துவது.

குறத்திப்பாட்டு,—தலைவன்பவனி வரவு, மகளிர்காமுறுதல், மோகினி வரவு, உலாப்போந்த தலைவனைக்கண்டு மயங்கல், திங்கள் தென்றன் முதலியவுபாலம்பனம், பாங்கியுற்ற தென்னெனவினவல், தலைவி பாங்கியோடுற்றதுகூறல், பாங்கி தலைவனைப்பழித்துக்கூறல், தலைவி தலைவனைப் புகழ்ந்துகூறல், தலைவி பாங்கியைத் தூதுவேண்டல், தலைவி பாங்கியோடு தலைவனடையாளங்கூறல், குறத்திவரவு, தலைவி குறத்தியை மலைவளமுதலிய வினவல், குறத்தி மலைவள நாட்டுவளமுதலியகூறல், தலைவன் றலவளந்திலைவளமுதலியகூறல், குறிசொல்லிவந்தமைகூறல், தலைவி குறிவினவல், குறத்திதெய்வம்பரவல், குறிதேர்ந்து நல்வரவுகூறல், தலைவி பரிசிலுதவிவிடுத்தல், குறவன் வரவு, புள்வரவுகூறல், கண்ணிகுத்தல், புட்படுத்

தல், குறத்தியைக்காமுற்றுத்தேடல், குறவன்பாங்கனொடுகுறத்தியடையாளங்கூறல், குறவன் குறத்தியைக்கண்ணுறல், குறவனணிமுதலிய கண்டையுற்று வினவலு மாண்டாண்டு குறத்திவிடைகூறலுமாகக்கூறல், பெரும்பான்மையு மிவ்வகையுறுப்புக்களால், அகவல், வெண்பா, தரவுகொச்சகம், கலித்துறை, கழிநெடில்விருத்தம், கலிவிருத்தம், இச்செய்யுளிடைக்கிடைகூறிச் சிந்துமுதலிய நாடகத்தமிழாற் பாடுவது.

உழத்திப்பாட்டு,—கடவுள் வணக்கமுறையே மூத்தபள்ளி யிளையபள்ளி குடும்பன் வரவோடவன் பெருமைகூறல் முறையே யவர்வரலாறு, நாட்டுவளம் குயிற்கூக்கேட்டல், மழைவேண்டிக் கடவுட்பரவல், மழைக்குறியோர்தல், ஆற்றின்வரவு, அதன் சிறப்புக் காண்டலிவற்றிற் கிடையிடை யகப்பொருட்டுறையுங் கூறிப் பண்ணைத்தலைவன் வரவு, பள்ளிகளிருவர்முறையீடு, இளையாளை யவனுரப்பல், பள்ளன்வெளிப்படல், பண்ணைச்செயல்வினவல், அவனதுகூறல், ஆயனை வருவித்தல், அவர்வரல், அவர் பெருமைகூறல், மூத்தபள்ளி முறையீடு, குடும்பன் கிடையிலிருந்தான் போல்வரல், அவனைத்தொழுவின்மாட்டல், அவன் புலம்பல், மூத்தபள்ளி யடிசில்கொடுவரல், அவனவளோடு கூறல், அவ்னவளை மன்னித்தல்கேட்கவேண்டல், அவண் மறுத்தல், அவன் சூளுறல், அவளவனை மீட்கவேண்டிப் பண்ணைத்தலைவனைப் பரவல், விதைமுதலியவளங்கூறல், உழவருழல், காளைவெருளல், அதுபள்ளனைப் பாய்தல், பள்ளிகள் புலம்பல், அவனெழுந்துவித்தல், அதைப் பண்ணைத்தலைவர்க்கறிவித்தல், நாறுநடல், விளைந்தபிற் செப்பஞ்செயல், நெல்லளத்தல், மூத்தபள்ளிமுறையீடு, பள்ளிகளு ளொருவர்க்கொருவரேசலென விவ்வுறுப்புக்களுறப் பாட்டுடைத்தலைவன் பெருமை யாங்காங்குத் தோன்றச் சிந்தும் விருத்தமும் விரவிவர விவற்றாற்பாடுவது.

ஊசல்,—ஆசிரிய விருத்தத்தானுதல் கலித்தாழிசையானுதல் சுற்றந்தோடும் பொலிவதாக, ஆடிருசல், ஆடாமோ வூசலென்றிறக்கூறுவது.

எழுகூற்றிருக்கை,— ஏழறையாக் கிக்குறுமக்கண் முன்னின்றும் புக்கும் போந்தும் விளையாடும் பெற்றியால் வழுவாமையாலொன்று முதலாக வேழிறுதியாக முறையானே பாடுவது.

கடிகைவெண்பா,-தேவரிடத்துமரசரிடத்து நிகழுங்காரியங்கடிகையளவிற்றேன்றி நடப்பதாக முப்பத்திரண்டுநேரிசைவெண்பாவாற்கூறுவது.

சின்னப்பூ,—நேரிசைவெண்பாவாலரசனதுசின்னமாகிய தசாங்கத்தினைச்சிறப்பித்துவிரித்து, நூறு, தொண்ணூறு, எழுபது, ஐம்பது, முப்பது என்றுமெண்படக்கூறுவது.

விருத்தவிலக்கணம்,—வில், வாள், வேல், செங்கோல், யானை, குதிரை, நாடு, ஊர், கொடை, இவ்வொன்பதினையும் பப்பத்துவிருத்தத்தா லொன்பதுவகையுறப்பாடுவது.

முதுகாஞ்சி,—இளமைகழிந்தறிவு மிக்கோரிளமைகழியாத வறிவின்மாக்கட்குக்கூறுவதாம்.

இயன்மொழிவாழ்த்து,—இக்குடிப்பிறந்தோர்க்கெல்லா மிக்குணமியல்பென்று மவற்றை நீயு மியல்பாகவுடையையென்று மின்னோர்போல் நீயுமியல்பாகவீயென்று முயர்ந்தோரவனை வாழ்த்துவதாகக்கூறுவது.

பெருமங்கலம்,— ஈடேறுந்தான் மேற்கொள்ளென்றசிறைசெய்தன்முத லிய செற்றங்களைக் கைவிட்டுச் சிறைவிடுதல் முதலிய சிறந்ததொழில்கள் பிறந்தநாட்குக்காரணமான நாளிடத்துநிகழும் வெள்ளணியைக் கூறுவது.

பெருங்காப்பியம்,—தெய்வவணக்கமுஞ் செயப்படுபொருளு மிவற்றிற்கியைய வாழ்த்துமுன்னுளதாய்அறம் பொருளின்பம் வீடென்னு நாற்பொருளும் பயக்குநெறியுடைத்தாய், நிகரில்லாத்தலைவனை யுடைத்தாய், மலையுங் கடலுநாடுநகரும் பருவமுமிருசுடர்த் தோற்றமு மென்றிவற்றின் வளங்கூறுதலும்மணமும்முடிகவித்தலும்பொழில்விளையாட்டும்நீர்விளையாட்டும் உண்டாட்டும் மகப்பேறும் புலவியுங் கலவியுமென் றிவற்றைப் புகழ்தலும், மந்திரமுந்தூதுஞ் செலவும்போரும் வென்றியுமென் றிவற்றைத்தொடர்ந்து கூறலுமாகிய விவை முறையே தொடர்வுறச் சருக்கமிலம்பகம் பரிச்சேதமென்னும் பகுதியையுடைத்தாய் வீரமுதலிய சுவையுமவற்றை விளக்குங்கருத்து விளங்கக்கற்றோராலியற்றப்படுவதாம்.

காப்பியம்,—அறம்பொருளின்பம் வீடென்ற நான்கனுளொன்றும் பலவுங்குறைந்தேனைய வுறுப்புக்கண்மேற்கூறியவாறியல்வது.

பிறப்பு-எ, தேவர், மக்கள், விலங்கு, புள், ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம், இவற்றின் யோனிபேதமெண்பத்துநான்கு நூறுயிரம், அவையாவன, தேவர் பதினான்கு நூறுயிரம்,-மக்களொன்பது நூறுயிரம்,—விலங்கு பத்துநூறுயிரம்,—புள்பத்துநூறுயிரம்,-ஊர்வன பதினொருநூறுயிரம்,—நீர்வாழ்வன பத்துநூறுயிரம்,—தாவர மிருபது நூறுயிரம்,—அன்றி, தேவர் பதினறு நூறுயிரமெனவுந் தாவரம் பதினெட்டு நூறுயிரமெனவுங் கூறுப.

பு

புண்ணியத்தோற்றம்-ச, தவம், ஒழுக்கம், கொடை, கல்வி.

புண்ணியம்-எ, நகங்கிருதி, தானம், விரதம், சிநேகம், நயபோசனம்,கமை, உற்சாகம்.

புண்ணியம்-கூ, எதிர்கொளல், பணிதல், ஆசனத்திருத்துதல்,தாள்கழுவல், அருச்சித்தல், தூபங்கொடுத்தல், தீபங்காட்டல், புகழ்தல், அமுதமேந்தல், இவை, துறந்தோர்க்குச் செய்வனவாம்.

புரம்-ங, இருப்புமதில், வெள்ளிமதில், பொன்மதில், இவையே முப்புரம்.

புராணம்-௰அ, மச்சியம், கூர்மம், வராகம், வாமனம், பிரமம், வைணவம், பாகவதம்,சைவம்,இலிங்கம், பௌடிகம், நாரதியம், காருடம், பிரமகைவர்த்தம், காந்தம், மார்க்கண்டேயம், ஆக்கினேயம், பிரமாண்டம், பதுமம், இவற்றுள், சைவம், காந்தம், இலிங்கம், கூர்மம், வாமனம், வராகம், பௌடிகம், மச்சியம், மார்க்கண்டேயம், பிரமாண்டம், இவைபத்துஞ்சிவபுராணம்,-நாரதியம்,பாகவதம்,காருடம், வைணவம், இவை நான்கும் விட்டுணு புராணம்,—பிரமம், பதுமம், இவையிரண்டும், பிரமபுராணம்,-பிரமகைவர்த்தம், சூரிய புராணம், ஆக்கிநேயம், அக்கினிபுராணம் எனவும், காந்தம்,ஆக்கினேயம், சைவம், கூர்மம், மச்சியம், இலிங்கம், இவைதாமதபுராணம், பிரமாண்டம், பிரமகைவர்த்தம், மார்க்கண்

டேயம், வாமனம், பிரமம், பௌடிகம், இராசதபுராணம், பாகவதம், பதுமம், வராகம், வைணவம், காருடம், நாரதியம், சாத்துவிகபுராணம் எனவுங் கூறுவர்,-அன்றியும்,உபபுராணம்-௰அ,ஆதித்தியம், காந்தம், சோமம், கபிலம், கௌசிகம்,சாம்பம், சிவதன்மம், தௌர்வாசம், நாரசிங்கம், நாரதீயம், பராசரியம், பார்க்கவம், பிரமாண்டம், மாரீசம், மானவம், வாசிட்டம், வாயவியம்,வாருணம், இவையவ்வவர் பெயரால் விளங்கும்.

புரி-எ, அயோத்தி, மதுரை, மாயை, காசி, காஞ்சி, அவந்திகை, துவாரகை.

புலமையோர்-ச, கவி,கமகன்,வாதி, வாக்கி, இவருள், ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரமென்று நாற்கவிகளைப் பாடுவோன்கவி, — அரும்பொருளைச் செம்பொருணடையாகக் காட்டிவிவகரிப்போன் கமகன்,—காரணமுமேற்கோளுமெடுத்துக் காட்டிப் பிறன்கோண் மறுத்துத் தன்மதநிறுத்துபவன் வாதி,- அறம், பொருள், இன்பம், வீடெனு நாற்றிறங்களைக் கேட்கவேட்கவிரித்துக் கூறுவோன் வாக்கி.

புலன்-ரு, சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்.

பூ

பூ-ச, கொடிப்பூ, கோட்டுப்பூ, நீர்ப்பூ, புதற்பூ நிலப்பூ என ஒன்று கூட்டி ஐந்தென்பாருமுளர்.

பூதம்-ரு, நிலம், நீர், தீ, காற்று, விசும்பு.

பெ

பெண்வகை-ச, பதுமினி, சித்தினி, சங்கினி, அத்தினி.

பெரியோரியல்பு-எ, அறம், பொருள், இன்பம், அன்பு, புகழ், மதிப்பு, பொறுமை.

பே

பேதம்-௩, சுகதபேதம், சுசாதிபேதம், விசாதிபேதம், அவையாவன, மரத்துக்கிலையரும்புபூகாய்கனிமுதலிய சுகதபேதம்,-மரத்துக்கு மரமாஞ் சுசாதிபேதம், - மரத்துக்குக்கல் விசாதிபேதம்.

பேறு-௰௬, புகழ், கல்வி, வலி, வெற்றி, நன்மக்கள், பொன், நெல், நல்லூழ், நுகர்ச்சி, அறிவு, அழகு, பெருமை, இளமை, துணிவு, நோயின்மை, வாழ்நாள்.

பொ

பொருள்-உ, கல்விப்பொருள், செல்வப்பொருள்.

பொருள்-ச, அறம், பொருள், இன்பம், வீடு.

பொழுது-சு, மாலை, யாமம், வைகறை, விடியல், நண்பகல், எற்பாடு, இவையே யத்தமனகாலமுதலொவ்வொன்று பப்பத்துநாழிகையாக முறையேகொள்க, இவற்றைச் சிறுபொழுதென்பர்.

பொறி, ௩-மனம், வாக்கு, காயம்.

பொறி, ரு-மெய், வாய், கண்,மூக்கு, செவி.

பொன்வகை, ச-ஆடகம், கிளிச்சிறை, சாதரூபம், சாம்பூநதம்.

போ

போகபூமி, ௬-ஆதியரிவஞ்சம், நல்லரிவஞ்சம், ஏமதவஞ்சம், ஏமவஞ்சம், தேவகுருவம், உத்தரகுருவம்.

போகம், அ-பெண், ஆடை, அணிகலன், போசனம், தாம்பூலம், பரிமளம், பாட்டு, பூவமளி.

போதப்பிரகாரம், ௩-உத்தேசம், இலக்கணம், பரீக்ஷை, அவையாவன-தான் விவகரிக்கும்பொருளைப் பெயர்மாத்திரங் கூறலுத்தேசம்,-அப்பொருளின் சிறப்புத்தன்மைகூறல் இலக்கணம்,-அப்பொருளி லிவ்விலக்கணமுண்டோ வின்றோவெனப்பார்த்தல் பரீக்ஷை.

ம

மகவிராண்மலர்மரம், ௧௦ - மகிழமரஞ்சுவைக்க, எழிலம்பாலைமரம்நட்புற, பாதிரிமரம் நிந்திக்க, முல்லைக்கொடி நகைக்க, புன்னையாட, குராவணைக்க, அசோகுதைக்க, குருக்கத்திபாட, மாபார்க்க, சண்பகநிழல்படத் தளிர்த்துப் பூப்பனவாம்.

மங்கலச்சொல், ௨௨-திரு, யானை, தேர், பரி, கடல், மலை, மணி, பூ, புகழ், சீர், மதி, நீர், எழுத்து, பொன், ஆரணம், சொல், புயல், நிலம், கங்கை, உலகம், பரிதி, அமிழ்தம், இவற்றின்பரியாயப்பெயரும்பிறவுமாம்.

மங்கலம், ௮-சாமரம், நிறைகுடம், கண்ணாடி, தோட்டி, முரசு, விளக்கு, கொடி, இணைக்கயல், இவையே யட்ட சுபமெனவும்படும்.

மங்களாசரணை, ௩-வாழ்த்து, வணக்கம், செயப்படுபொருள்.

மணம், ௮-பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம், காந்தருவம், ஆசுரம், இராக்கதம், பைசாசம், இவற்றுட்பிரமசாரிக்குக் கன்னியைத் தீமுன்னர்க்கொடுப்பது பிரமமணம்,-தலைமகனினத்தார் வேண்டத் தலைமகளினத் தாருட்பட்டவனைத் தீமுன்னர்க்கொடுப்பது பிரசாபத்தியமணம்,-ஒன்றிரண்டு பசுவெருதும் வாங்கிக்கொண்டு கன்னியைத் தீமுன்னர்க்கொடுப்ப தாரிடமணம்,-வேள்வியால்வந்த கன்னியைத் தீமுன்னர்க் கொடுப்பது தெய்வமணம்,-கொடுப்பாருங் கேட்பாருமின்றி யிருவருந்தனியிடத்தெதிர்ப்பட்டுத் தாமேகூடுவது காந்தருவமணம்,-பெண்ணுக்குப்பொன்பூட்டிச் சுற்றத்தார்க்குப் பொன் வேண்டுவன கொடுத்துக்கொள்வ தசுரமணம்,-பெண்ணும் பெண்ணினத்தாருமுடன்படாமல் வலிதிற்கொள்வ திராக்கத மணம்,-துயின்றுழிச்சென்று கூடுவது பைசாசமணம்.

மணி, ௯-கோமேதகம், நீலம், பவளம், புட்பராகம், மரகதம், மாணிக்கம், முத்து, வைடூரியம், வைரம்.

மண்டலம், ௩-அக்கினிமண்டலம், ஆதித்தமண்டலம், சந்திரமண்டலம்.

மண்டலம், ௭-வாயுமண்டலம், வருணமண்டலம், சந்திரமண்டலம், சூரியமண்டலம், நட்சத்திரமண்டலம், அக்கினி மண்டலம், திரிசங்கு மண்டலம்.

மரபு, ௨-தந்தைவழி, தாய்வழி.

மருத்துகள், ௭-கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு, கீழ், மேல், பலயோனியுயிர்.

மலம், ௩-ஆணவம், மாயை, காமியம்.

மலை, ௭-கைலை, இமயம், மந்தரம், விந்தம், நிடதம், ஏமகூடம், நீலகிரி, அன்றிக் கந்தமாதனங்கூட்டி யெட்டெனவும்படும்.

மன்மதன்கணை, ௫ - வனசம், சூதம், அசோகு, முல்லை, நீலம், இவற்றின்பெயர் முறையே உன்மத்தம், மதனம், சம்மோகம், சந்தாபம், வசிகரணம், இவை செய்யுமவத்தை, சுப்பிரயோகம், விப்பிர யோகம், சோகம், மோகம், மரணம், அவையாவன-சுப்பிரயோகம், சொல்லு

கினைவும், - விப்பிரயோகம், வெய்துயிர்த்திரங்கல்,-சோகம், வெறுப்புந் துய்ப்பனவெவிட்டலும்,-மோகம், அழுங்கலுமொழிபல பிதற்றலும்,-மரணம், அயர்ப்புமயக்கமும்.

மா

மாதம், கஉ-சைத்திரம், வைசாகம், சேட்டம், ஆசாடம், சிராவணம், பாத்திரபதம், ஆசுவீசம், கார்த்திகம், மார்க்கசிரம், புசியம், மாகம், பாற்குனம்; இவைமுறையே சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி, ஆவணி, புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி, தை, மாசி, பங்குனி; இவற்றிற்கு முறையே யுரியநட்சத்திரம், சித்திரை, விசாகம், மூலம், உத்திராடம், அவிட்டம், பூரட்டாதி, அச்சுவினி, கார்த்திகை, மிருகசிரிடம், பூசம், மகம், உத்திரம்.

மாதர்கள், எ-அபிராமி, மாயேச்சுவரி, கௌமாரி, நாராயணி, வராகி, இந்திராணி, காளி; இவர்க்குமுறையே வாகனம் - அன்னம், இடபம், மயில், கருடன், சீயம், யானை, பேய்; முறையேயாயுதம்-மறை, பிறைகம், வேல், ஆழி, கலப்பை, வச்சிரம், சூலம்.

மாயை, ரு-தமம், மாயை, மோகம், அவித்தை, அநிர்தம், அவையாவன-சிவசைதன்னியத்தை மறைக்கையாற்றமம்,-சகத்துருபமான வன்னிதாத்தோற்றத்துக்குக் காரணமாகையான் மாயை,-விபரீத ஞானமுண்டாக்குகையான் மோகம்,-உணர்வழிக்கையா லவித்தை,-சத்துருபத்துக்கன்னியமாகையா லநிர்தம்.

மு

முகம், கச-அஞ்சிதம், அதோமுகம், ஆகம்பிதம், பிரகம்பிதம், ஆலோலிதம், உலோலிதம், உத்துவாகிதம், சமம், சௌந்தரம், துதம், விதுதம், பராவிருத்தம், பரிவாகிதம், திரச்சினம், இவற்றுள் வருத்தமாற்றுதிரு தோண்மேற் றலைசாய்த்தலஞ்சிதமுகம், - தலைகுனிந்துபார்த்தலதோமுகம்,-சம்மதித்தற்கு மேல்கீழ்தலையாட்டலாகம்பிதமுகம்,-அதிசயத்தாற் பிறிது தலையாட்டல் பிரகம்பிதமுகம்,-ஆசையான் மலர்ந்த முகமா யொருவனை யழைத்தலா லோலிதமுகம், - சிந்தையாலொருதோண்மேற் றலைசாய்த்தலுலோலிதமுகம், தலையண்ணாந்து பார்த்த லுத்துவாகிதமுகம்,-தியானிப்பதுபோலத் தலையசையாதிருத்தலே சமமுகம்,-பூரித்த மகிழ்ச்சியான் மலர்ந்த முகங்காட்டல் சௌந்தரமுகம்,- வேண்டாததற்கிடம் வலந்தலையாட்டலே துதமுகம்,-உணவுணிமுதலிய வேண்டாமைக்குத் தலைநடுக்கலே விதுதமுகம்,-வேண்டாததற்கு முகந்திருப்பலே பராவிருத்தமுகம்,-மதத்தாலொருபுறஞ்சாய்ந்த தலையைச் சிறிதாகச் சுற்றியாட்டல் பரிவாகிதமுகம்,-நாணத்தாற் றலையாட்டலே திரச்சினமுகம். [ம், திரிபு.

முத்திவிக்கினம், ந-அறியாமை, ஐய

முத்துச்சனிக்குமிடம், உ0-மதி, மேகம், சங்கு, சிப்பி, மீன், நந்து, முதலை, உடும்பு, தாமரை, வாழை, கமுகு, கரும்பு, செந்நெல், மூங்கில், யானைக்கொம்பு; பன்றிக்கொம்பு, பசுவின்பல், நாகம், கொக்கு, நங்கையர் கழுத்து.

மும்மை, ந-உம்மை, இம்மை, மறுமை.

முனிவர், எ - அத்திரி, ஆங்கிரசன், கௌதமன், சமதக்கினி, பரத்துவாசன், வசிட்டன், விசுவாமித்தி

ரன், அன்றியும் அகத்தியன், ஆங்கிரசன், கௌதமன், காசிபன், புலத்தியன், மார்க்கண்டன், வசிட்டன் என்பர்.

முனிவர், கூ௮-அகத்தியன், அத்திரி, ஆங்கிரசன், இரணியவன்மாமுனி, உரோமமாமுனி, லாண்டமாமுனி, கலைக்கோட்டுமுனி, காசிபன், கௌதமன், சத்தகூன்முனி, சச்சிதானந்தன், சமதக்கினி, சனகன், சனற்குமாரன், சுகன், தம்மகாமுனி, துருவாசன், நாரதன், பதஞ்சலி, பரத்துவாசன், பராசரன், பற்பமாமுனி, பிருகுமாமுனி, பிரமமாமுனி, புலத்தியன், மார்க்கண்டன், வசிட்டன், வான்மீகன், விசுவாமித்திரன், வியாக்கிரபாதன், வியாசன்.

மூ

மூர்த்தம், அ-பூமி, நீர், தேயு, வாயு, ஆகாயம், சூரியன், சந்திரன், ஆன்மா.

மூலம், க௦-கண்டங்கத்திரிவேர், சிறுவழுதலைவேர், சிறுமல்லிவேர், பெருமல்லிவேர், நெருஞ்சிவேர், இவ்வைந்துஞ் சிறுபஞ்சமூலமென்ப. வில்வவேர், பெருங்குமிழம்வேர், தழுதாழைவேர், பாதிரிவேர், வாகைவேர், இவ்வைந்தும் பெரும்பஞ்சமூலமென்ப.

மெ

மெய்ப்பரிசம், அ-ஊன்றல், கட்டல், குத்தல், தடவல், தட்டல், தீண்டல், பற்றல், வெட்டல், இவைமெய்ப்பொறியாற் செயப்படுந்தொழில்.

மே

மேகம், எ-சம்வர்த்தம், ஆவர்த்தம், புட்கலாவர்த்தம், சங்காரித்தம், துரோணம், காளமுகி, நீலவருணம், இவை பொழிவனமுறையே, மணி, நீர், பொன், பூ, மண், கல், தீ.

மொ

மொழி, கூ-மெய்கூறல், புகழ்கூறல், பழிகூறல்.

யா

யாகம், ரு-பிரமம், தெய்வம், பூதம், பிதிர், மானுடம், இவற்றுள் வேதமோதல் பிரமயாகம், ஓமம்வளர்த்தலே தெய்வயாகம், பலியீதல் பூதயாகம், தர்ப்பணமுடித்தல் பிதிர்யாகம், இரப்போர்க் குணவுமுதலிய வீதலே மானுடயாகம்.

யாகம், உ௧-அக்கினிட்டோமம், அத்தியக்கினிட்டோமம், உக்தியம், சோடசி, வாசபேயம், அதிராத்திரம், அப்தோரியாமம், அக்கினியாதேயம், அக்கினிகோத்திரம், தரிசபூரணமாசம், சாதுர்மாசியம், நிருடபசுபந்தம், ஆக்கிரயணம், சௌத்திராமணி, அட்டகை, பார்வணம், சிராத்தம், சிராவணி, ஆக்கிரகாயணி, சைத்திரி, ஆசுவயுசி.

யாக்கைக்குறுகுற்றம், க௮-பசி, நீர்வேட்டல், பயம், வெகுளி, உவகை, வேண்டல், நினைப்பு, உறக்கம், நரை, நோய், மரணம், பிறப்பு, மதம், இன்பம், அதிசயம், வியர்த்தல், கேதம், கையறவு.

யாழ்வகை, ச-பேரியாழ், சகோடயாழ், மகரயாழ், செங்கோட்டியாழ்.

யு

யுகம், ச-கிரோதாயுகம், திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம்.

யோ

யோகம், உ௭-விஷ்கம்பம், பிரீதி, ஆயுஷ்மான், சௌபாக்கியம், சோபனம், அதிகண்டம், சுகர்மம், திருதி, சூலம், கண்டம், விருத்தி, துருவம், வியாகாதம், அரிஷணம், வச்சிரம், சித்தி, விதிபாதம், வரியான், பரீக

ம், சிவம், சித்தம், சாத்தியம், சுபம், சுப்பிரம், பிரமம்,ஐந்திரம்,வைதிருதி, இவை முறையே கம்பம், பிரியம், வாழ்நாள், புண்ணியம், நலம், மாகண்டம், அறம், துணை, சூலம், கண்டம், ஆக்கம், நிலை, அரவு, எக்களிப்பு, வேல்,வல்லமை, கொலை, காயம், தாழ்வு, காட்சி, திறம், புகழ், காவல், தெளிவு, பிரமமா, இந்திரன், பேய், இவற்றுள் கம்பம், கண்டம், அதிகண்டம், சூலம், வியாகாதம், வச்சிரம், விதிபாதம், பரிகம், வைதிருதியென வொன்பதன்றி மற்றவை நல்லன, இவற்றுள்ளுங் கம்பத்தின் மூன்றும், சூலத்திலைந்தும், கண்டத்திலு மதிகண்டத்திலுமாறும், வியாகாதத்திலொன்பதுங் கழித்துநின்ற நாழிகையுமாம்.

வ

வசுக்கள், அ-அனலன், அனிலன், ஆபச்சைவன், சோமன், தரன்,துருவன், பிரத்தியூசன், பிரபாசன்.

வணிகர்குணம், அ-தனிமையாற்றல், முனிவிலனுதல், இடனறிந்தொழுகல், பொழுதொடுபுணர்தல், உறுவதுதெரிதல், இறுவதஞ்சாமை, ஈட்டல், பகுத்தல்.

வண்ணம், ரு-வெண்மை, கருமை,செம்மை, பொன்மை, பசுமை.

வருடம், சுo-பிரபவ, விபவ, சுக்கில, பிரமோதூத, பிரசோற்பத்தி,ஆங்கிரச, சிமுக, பவ, யுவ, தாது,ஈச்சுர, வெகுதானிய, பிரமாதி,விக்கிரம, விசு, சித்திரபானு, சுபானு, தாரண, பார்த்திப, விய, இவ்விருபது முத்தமவருடம்; சருவசித்து, சருவதாரி, விரோதி, விகிர்தி, கர, நந்தன, விசய, சய, மன்மத, துன்முகி, ஏவிளம்பி, விளம்பி, விகாரி,சார்வரி, பிலவ, சுபகிருது, சோபகிருது, குரோதி, விசுவாவசு, பராபவ, இவ்விருபதும் மத்திமவருடம்; பிலவங்க, கீலக, சௌமிய, சாதாரண, விரோதிகிருது, பரிதாபி, பிரமாதீச, ஆனந்த, இராட்சஸ, நள, பிங்கள, காலயுத்தி, சித்தார்த்தி, இரௌத்திரி,துன்மதி,துந்துபி,உருத்திரோற்காரி,இரத்தாட்சி, குரோதன, அட்சய இவ்விருபது மதமவருடம்.

வருணம், ச-பிரம, க்ஷத்திரிய,வைசிய, சூத்திர, இவற்றைச்சாதியென் றுங்கூறுப.

வள்ளல்,உக-வரையாதுகொடுப்போன் வள்ளலென்ப, இவர் முதலிடைகடையென மூவகைப்படுவர், அவருள், முதலெழுவள்ளல்-குமுணன், சகரன், சகாரன், செம்பியன், துந்துமாரி, நளன், நிருதி,—இடையெழுவள்ளல்-அக்குரன்,அந்திமான்,அரிச்சந்திரன், கன்னன், சந்திமான், சிசுபாலன், தந்தவக்கிரன், - கடையெழுவள்ளல்-எழிலி, ஓரி, காரி, நள்ளி, பாரி, பேகன், மலையன்.

வா

வாசம், ரு-இலவங்கம், ஏலம், கருப்பூரம், சாதிக்காய், தக்கோலம்.

வாயில், ரு-கண், காது, மூக்கு,வாய், குதம், குய்யம்.

வாயு, கo-பிராணன், அபானன்,சமானன்,உதானன்,வியானன்,நாகன், கூர்மன், கிருகரன், தேவதத்தன், தனஞ்சயன், இவையுடலினிற்பன, அவையாவன,இதயத்தியங்குவது பிராணன்,-உச்சர்க்கத் தலத்திடை நிற்ப தபானன்,—கந்தரசக் குழியி

திசந்திடையிருப்பது சமானன்,—நாபியிலிருப்பது நாகன்,—சரீரமுழுதும்வியாபித்திருப்பது வியானன்,-நீட்டலு முடக்கலும் விளக்கலு நாகன்,—உரோமம் புளகித்திமைப்பது கூர்மன்,—முகத்திடை நின்று தும்மலுந் தெறும் வெம்மையும் விளைப்பது கிருகரன்,—ஓட்டமுமிளைப்பும் வியர்த்தலும் விளைப்பது தேவதத்தன்,—உயிர் போயினும் போகா துடலினை வீங்கித் தலைவெடித்தகல்வது தனஞ்சயன்.

வாரம், ௭-ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழம், வெள்ளி, சனி.

வாரோர்கணம், ௯-அக்கணத்தோராவார், பத்திச்சுவாலகர், ஞானாதிக்கர், பத்திராசனர், நாதகிருத்தியர், சத்துவகர், பலவத்தர், பிராதமிகர், அதிநாதர், தூதர், இவையேநவவிலாசசபையாம்; அவை யாவன-பத்திச்சுவாலகர் கடவுளைக்குறித்த பத்தியினாலே சுவாலிக்கிறவர்,—ஞானாதிக்கர், கடவுளைக்குறித்தஞானத்திலாதிக்கம்பெற்றவர்,—பத்திராசனர், கடவுளெழுந்தருளியிருக்குந் தேவசிங்காதனத்தைப்புகழ்ந்திருப்பவர்,—இவர்முதலாம் அர்ச்சியப்பிரபுத்துவமுடையோராம்,-நாதகிருத்தியர் நாதனுடைய கிருத்தியத்தையவனருளாற்புரிபவர்,—சத்துவகர், கடவுளருளாற் பற்பல வற்புதங்களைச்செய்யுஞ் சத்துவம் பெற்றவர், சத்திக ளென்றுமாம்,—பலவத்தர், கடவுட் டிருவுளப்படியெய்துங் கருமங்கட்குவருமிடையூற்றை யவனருளாற் றடுக்கும் பலாத்காரம்பெற்றவர்,— இவரிரண்டாமர்ச்சியப் பிரபுத்துவ முடையோராம்,—பிராதமிகர், கடவுட்டிருவுளப்படியே பிரச்சியசம்பந்தமான சாதாரணங்களைக்கவே நடத்துந் தலைமைபெற்றவர்,—அதிநாதர், அதிகப் பிரதான விசேடங்களையுலகத்திலறிவிக்குந் தூதுபதியாக வருபவர்கள்,—தூதர், மனிதர் பிறந்தகண முதலாகத் தனித்தனியே யவரவரைப் பாதுகாத்து நன்னெறியினடத்தி மற்றும் பிரதான விசேடங்கட்கனுப்பப்படுபவர்,--இவர் மூன்றும் அர்ச்சியப் பிரபுத்துவமுடையோர்,—அர்ச்சியப் பிரபுத்துவத்திற்கு அதீச்சுரபதவி யென்பாருமுளர், இவைபோப்புமார்க்க கிறிஸ்தவர்களாற்கூறப்படுவன.

வாரோர்வரம், ௪-இலகு, சூக்குமம், அட்சயம், பிரகாசம், இவைகனமின்மை, கண்டிப்பின்மை, கேடின்மை, விளக்கம்.

வி

விகாரம், ௯-காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாற்சரியம், அன்றி, இடும்பை, அசூயையோடெட்டெனவுமாம்.

வித்தியா தத்துவம், ௭—காலம், நியதி, கலை, வித்தை, இராகம், புருடன், மாயை.

வித்தைகள், ௧௮-வேதம் ௪, வேதாங்கம் ௬, மீமாஞ்சை, தருக்கம், புராணம், தருமநூலாகியவுபாங்கம் ௪.

விரை, ௫-கோட்டம், அருக்கம், தகரம், அகில், சந்தனம்.

வினா, ௫-அறியான் வினாவல், அறிவொப்புக்காண்டல், ஐயமறுத்தல், அவனறிவுதான்கோடல், மெய்யவற்குக்காட்டல்.

வினை, ௨-நல்வினை, தீவினை.

வீ

வீடுபேறு, ௧-முத்திப்பேறு.

வெ

வெற்றி, ௮-பகைநிரைகவர்தல், பகைவர்கவர்ந்த தன்னிரைமீட்டல், பகைமேற்செல்லல், வரும்பகை முன்னெதிரூன்றல், தன்னரண்காத்தல், பகையரண்வளைத்தல், பொருதல், போர்வெல்லல், இவற்றிற்குமுறையே வெற்றிமாலையாவன; வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, நொச்சி, உழிஞை, தும்பை, வாகை.

வே

வேதம், ௪ - இருக்கு, தைத்திரியம், சாமம், அதர்வணம், அன்றியுமுபவேதம் ௪, ஆயுள்வேதம், அருத்தவேதம், தனுர்வேதம், காந்தருவவேதம்.

வேதாங்கம், ௬ - மந்திரம், வியாகரணம், நிகண்டு, சந்தோபிசிதம், நிருத்தம், சோதிடம்.

வேளாண்மை மாந்தரியல்பு, ௧௦ - ஆணைவழிநிற்றல், அழிந்தோரைநிறுத்தல், கைக்கடனாற்றல், கசிவகத்துண்மை, ஒக்கல்போற்றல், ஓவாமுயற்சி, மன்னிறைதருதல், ஒற்றுமைகோடல், விருந்துபுறந்தருதல், திருந்தியவொழுக்கம்.

வை

வைசியர், ௩-தனவைசியர், பூவைசியர், கோவைசியர், இவர்க்குமுறையே தொழில் பொருளீட்டல், பயிர்செய்தல், ஆன்காத்தல் இவர் வருணத்தாலொன்றாயினுந் தொழிலான்மூவராயினர்.

வைணவாகமம், ௨-பாஞ்சராத்திரம், வைகானசம்.

வைதிகமதம், ௩-மிசிரவைதிகமதம், வைதிகமதம், பரமவைதிகமதம்.

இலக்கத்தொகைமுறை.

௧—ஒருமை, வீடுபேறு.

௨—அச்சுவினிதேவர், அறம், ஆயுதவகை, ஆன்மா, இதிகாசம், இருமை, எச்சம், கந்தம், கூத்துவகை, சுடர், திணை, தோற்றம், பொருள், மரபு, வினை, வைணவாகமம்.

